# அயல்நாட்டுத் தமிழ் இலக்கியங்கள்

## (தொகுதி - I)



பதிப்பாசிரியர்கள்
முனைவர் கோ. விசயராகவன்
முனைவர் மு. வளர்மதி
முனைவர் கு. சிதம்பரம்
முனைவர் து. ஜானகி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

# அயல்நாட்டுத் தமிழ் இலக்கியங்கள்

## (தொகுதி – 1)


பதிப்பாசிரியர்கள்

முனைவர் கோ. விசயராகவன்

முனைவர் மு. வளர்மதி

முனைவர் த. சிதம்பரம்

முனைவர் து. ஜானகி



உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

International Institute of Tamil Studies

இரண்டாம் முதன்மைச் சாலை

மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்

தரமணி, சென்னை - 600 113

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title of the Book | : | Ayalnāṭṭut tamiḻ ilakkiyaṅkaḷ |
| Editors | : | Dr. G. Vijayaraghavan, Director<br>Dr. M. Valarmathi, Associate Professor<br>Dr. K. Chidambaram, Assistant Professor<br>Dr. T. Janaki, Assistant Professor<br>International Institute of Tamil Studies<br>II Main Road, C.I.T. Campus,<br>Tharamani, Chennai - 600 113 |
| Publisher & © | : | International Institute of Tamil Studies<br>II Main Road, C.I.T. Campus,<br>Tharamani, Chennai - 600 113 |
| Publication No. | : | 743 |
| Language | : | Tamil |
| Paper Used | : | 18.6 kg TNPL Super Printing |
| Size of the Book | : | 1/8 Demy |
| Printing type Used | : | 10 points |
| No. of Pages | : | xiv+386 |
| No. of Copies | : | 1200 |
| Price | : | Rs. 175/- |
| Printed by | : | Lakshmi Agencises, No. 23/11, Perumal Mudali Street,<br>Royapettai, Chennai - 14 |
| Subject | : | Overseas Tamil Literature |


# நூல்விவரக் குறிப்பு


| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | : | அயல்நாட்டுத் தமிழ் இலக்கியங்கள் |
| பதிப்பாசிரியர் | : | முனைவர் கோ. விசயராகவன்<br>முனைவர் மு. வளர்மதி<br>முனைவர் கு. சிதம்பரம்<br>முனைவர் து. ஜானகி |
| வெளியீட்டாளரும்<br>பதிப்பு உரிமையும் | : | உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்<br>இரண்டாம் முதன்மை சாலை<br>மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்<br>தரமணி, சென்னை 600 113 |
| வெளியீட்டு எண் | : | 743 |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு | : | முதற்பதிப்பு |
| பதிப்பு ஆண்டு | : | 2012 |
| பயன்படுத்திய தாள் | : | 18.6 கிகி டி.என்.பி.எல். வெள்ளை மேப்லித்தோ |
| நூலின் அளவு | : | 1/8 |
| எழுத்தின் அளவு | : | 10 புள்ளிகள் |
| பக்க எண்ணிக்கை | : | 14+386 |
| அச்சுப்படிகளின் எண்ணிக்கை | : | 1200 |
| விலை | : | 175/- (ரூபாய் நூற்று எழுபத்தைந்து மட்டும்) |
| அச்சகம் | : | இலட்சுமி ஏஜென்ஸிஸ்<br>23/11, பெருமாள் முதலி தெரு<br>இராயப்பேட்டை, சென்னை 600 014 |
| பாடம் | : | அயல்நாட்டுத் தமிழ் இலக்கியங்கள் |

**முனைவர் கோ. விசயராகவன்**
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை - 600 113

# அணிந்துரை

"தமிழுண்டு தமிழ் மக்களுண்டு - இன்பத்
தமிழுக்கு நாளும் செய்வோம் நல்ல தொண்டு
தமிழ் என்று தோள்தட்டி ஆடு! - நல்ல
தமிழ் வெல்க வெல்க என்றே தினம் பாடு!"

எனப் பாவேந்தர் 'எங்கள் தமிழ்' எனும் பெருமித உணர்வுடன் கவி புனைந்தார்.

இத்தமிழின் மாண்பினைப் பெற்ற பண்டைத் தமிழர் பரந்த ஓர் உலக நோக்குடன் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' எனும் மானுட நேயத் தத்துவத்தைப் பறைசாற்றினர். அப்பண்டைத் தமிழர் தாய் மண்ணை விட்டு அயல் மண்ணில் கால் பதிக்கும் பயணத்தில் அவர்களுடன், பிரிக்க முடியாத உடைமையாக இருந்தது தமிழ் மொழி. சமூக, அரசியல், பொருளாதாரக் காரணங்களை அடிப்படையாகக் கொண்டு, உலகின் பல நாடுகளில் பரவிய தமிழர் எத்துணையோ சொல்லவொண்ணாத் துயரங்கள், வேதனைகள், சோதனைகளுடன் வாழ்ந்து வருகின்றனர். இந்நிலையிலும் நம் தமிழரை அயலகத் தமிழர் என அழைக்க மனம் அஞ்சுகிறது. இது நிலப்பரப்பைக் குறித்ததேயன்றி உள்ளப் பரப்பைக் குறிப்பதாகாது. எங்குப் பிறந்தாலும், இருந்தாலும் தமிழர் தமிழரே என்பது அனைவரும் உணருகின்ற ஓர் உண்மையாகும்.

தாங்கள் வாழுகின்ற நாடுகளில் தமிழ்ச் சங்கங்கள், தமிழ் மன்றங்கள், தமிழ்மொழி, கலை, பண்பாட்டு மையங்கள், தமிழறிஞர்கள் சார்ந்த அறக்கட்டளைகள், தமிழ் எழுத்தாளர் சங்கங்கள் எனப் பல்வேறு நடவடிக்கைகளின் மூலமாக ஆங்காங்கே தமிழ் மொழியின் தொன்மையை, சிறப்பை உணர்த்தி வருகின்றனர்.

தாய் மண்ணில் வாழும் தமிழறிஞர்களுடன் பிற நாடுகளில் வாழும் தமிழறிஞர்கள் கலந்துகொண்டு தமிழ் மொழி குறித்த ஆய்வுகளை மேற்கொள்ள ஒரு தளமாகத் தவத்திரு தனிநாயகம் அடிகளார், பேரறிஞர் அண்ணா ஆகியோரின் அரிய முயற்சிகளால் உலகத் தமிழ் மாநாடுகள் நடைபெறுகின்ற ஒரு வழமை உருவாக்கப்பட்டது. இம்முயற்சிகளின் தொடர்ச்சியாக உருவாகியது 'உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்' என்பது சிறப்புக்குரிய ஒன்றாகும்.

உலகத் தமிழறிஞர்களை ஒன்றிணைக்கும் ஒரு மையமாகச் செயல்படுவது உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் நோக்கமாகும். இந்நிறுவனத்தில் உள்ள 'அயல்நாட்டுத் தமிழர் புலத்தின்' வழியாகக் கருத்தரங்குகள் நடத்தி அவற்றின் மூலமாகப் பல்வேறு கருத்துகளைப் பரிமாறிக் கொள்வதும், தொடர்பான நூல்களை வெளியிடுவதும் இதன் இன்றிமையாத பணிகளுள் ஒன்றாகும்.

தவத்திரு தனிநாயக அடிகளாரின் நூற்றாண்டாக அமைகின்ற இவ்வாண்டில் (தி.ஆ. 2044, மாசி 2-3) பிப்பிரவரித் திங்கள் 14, 15-2013 ஆகிய இரு நாள்கள் இதன் தொடக்க நிகழ்வாக **'அயல்நாட்டுத் தமிழ் இலக்கியங்கள்'** எனும் தலைப்பில் நிகழுகின்ற தேசியக் கருத்தரங்கக் கட்டுரைகள் நூலாக்கம் செய்யப்பட்டு இரு தொகுதிகளாக வெளியிடப்பட்டுள்ளன. அயல்நாட்டுத் தமிழ்ப் படைப்பாளிகள், அவர்களின் இலக்கியங்கள் குறித்துப் பேசுகின்ற இந்நூல் தொகுதிகள் தமிழ் ஆய்வுலகிற்கு மிகவும் பயனுள்ளதாக அமையும் என்பதில் ஐயமில்லை.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு** 2013 பிப்பிரவரித் திங்கள் முழுவதும் நிகழுகின்ற நிகழ்வுகளுள் ஒன்றான இத்தேசியக் கருத்தரங்கைச் சிறப்புற நடத்தி இந்நூல் வெளிவரப் பேருழைப்பை நல்கிய அயல்நாட்டுத் தமிழர் புலத்தைச் சார்ந்த இணைப் பேராசிரியர் முனைவர் மு. வளர்மதி, உதவிப் பேராசிரியர்களான முனைவர் கு. சிதம்பரம், முனைவர் து. ஜானகி ஆகியோருக்கு எனது இதயங்கனிந்த நன்றி.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருவதொடு தம் தனிப்பட்ட அக்கறையைக் காட்டிவரும் மாண்புமிகு பள்ளிக் கல்வி, தொல்லியல், விளையாட்டு மற்றும் இளைஞர் நலம், சட்டம் - நீதிமன்றங்கள் - சிறைச்சாலைகள், தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் திரு. என்.ஆர். சிவபதி அவர்களுக்குத் தமிழுலகம் என்றும் நன்றிக் கடன்பட்டுள்ளது.

இந்நிறுவனச் செயல்பாட்டுக்கு உறுதுணையாக இருந்துவரும் தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறைச் செயலாளர் முனைவர் மூ. இராசாராம் இ.ஆ.ப. அவர்களுக்கும் நன்றி.

இந்நூலாக்கத்தில் செப்பம் செய்யும் பணியை மேற்கொண்ட முனைவர் ஆ. தசரதன் அவர்களுக்கும், புலவர் வெற்றியழகன் அய்யா அவர்களுக்கும் என்னுடைய உ.ளமார்ந்த நன்றி.

மிகக் குறுகிய காலத்தில் இந்நூலை ஒளியச்சு செய்து வழங்கிய திருமதி கா. இந்திரா காந்தி அவர்களுக்கும், முனைவர் பட்ட ஆய்வு மாணவர்கள் திரு. பொ. வேல்முருகன், திரு. கோ. கணேஷ், திரு. க. பகலவன், திருமதி ச. பிரியா, திருமதி க. புஷ்பாவதி, திருமதி ச. யோகேஸ்வரி, திருமதி வே. விஜி, செல்வி சீ. கோகிலா ஆகியோருக்கு எனது மனமார்ந்த பாராட்டுகள்.

**இயக்குநர்**

உணர்ச்சியை உவந்தோம் உலகோடு
உலக வளர்ச்சியை வகுத்தோம் தமிழோடு.

- மறவன்புலவு க. சச்சிதானந்தன்

# பதிப்புரை

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற புறநானூற்றுப் பாடலின் வரிகளுக்கேற்பத் தமிழர்கள் உலகம் முழுவதிலும் பரந்துபட்டு வாழ்ந்து வருகின்றனர். தாங்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளிலிருந்து தங்களின் படைப்பிலக்கியங்களை வெளியிட்டு வருகின்றனர். அப்படைப்பாளிகள் அவர்களின் தாய் மண் சார்ந்தும், புலம்பெயர்ந்த மண் வாசத்தோடும் பதிவு செய்து வருகின்றனர். தற்காலத் தமிழிலக்கியம் - இந்தியத் தமிழிலக்கியம், இலங்கைத் தமிழிலக்கியம், மலேசியத் தமிழிலக்கியம், சிங்கப்பூர்த் தமிழிலக்கியம், மொரிசியசு தமிழிலக்கியம், அமெரிக்கத் தமிழிலக்கியம், கனடா தமிழிலக்கியம் எனத் தமிழிலக்கியங்கள் வகைமைப்படுத்தப்படு கின்றன. இந்தியத் தமிழிலக்கியம், இலங்கைத் தமிழிலக்கியம் தவிர, பிற நாடுகளிலிருந்து வெளியாகும் தமிழிலக்கியங்கள் 'புலம்பெயர்ந்த தமிழிலக்கியங்கள் அல்லது அயல்நாட்டுத் தமிழ் இலக்கியங்கள்' என்ற சொல்லாட்சிக்கு உட்படுத்தப்படுகின்றன.

'அயலகத் தமிழிலக்கியங்கள்' என்ற சொல்லாட்சி 'உலகத் தமிழிலக்கியம்' என்ற புதிய சொல்லாக்கத்திற்கு வழிகோலுகின்றது. சீன இலக்கியம், கிரேக்க இலக்கியம், இலத்தீன் இலக்கியம் என்று நாட்டு எல்லையின் அடிப்படையில் அமையாமல் வானமே எல்லையாகக் கொண்டு 'உலகத் தமிழிலக்கியம்' என்று உயர்வு பெற்று வான்புகழ் சிறப்புடன் திகழ்ந்து வருகின்றது - தமிழிலக்கியம்.

உலகத் தமிழர்களை ஒன்றிணைக்கும் நோக்குடனும், உலகத் தமிழிலக்கியங்களைப் பற்றியும், தமிழர்களைப் பற்றியும் பன்முக ஆய்வுகளை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் சிறப்பாக மேற்கொண்டு வருகின்றது.

அயலகத் தமிழர்கள் குறித்து நிறுவனப் பதிப்பாகப் பல நூல்கள் வெளிவந்துள்ளன.

1. உலகில் தமிழும் தமிழரும் (1976)
2. தென்கிழக்கு ஆசிய நாடுகளில் தமிழ்ப் பண்பாடு (1987)
3. பாரெலாம் பரந்த தமிழர் (1994)

4. அயலகத் தமிழ்க்கலை, இலக்கியம், சமகாலச் செல்நெறிகள் (2001)

5. உலக அரங்கில் தமிழ் (2003)

6. உலகத் தமிழிலக்கிய வரலாறு (6 தொகுதிகள்)

தொகுதி 1 - தொடக்கம் முதல் கி.பி. 500 வரை (2004)

தொகுதி 2 - கி.பி. 501 முதல் கி.பி. 900 வரை (2004)

தொகுதி 3 - கி.பி. 901 முதல் கி.பி. 1300 வரை (2006)

தொகுதி 4 - கி.பி. 1301 முதல் கி.பி. 1600 வரை (திட்டப்பணி நடைபெற்று வருகின்றது)

தொகுதி 5 - கி.பி. 1601 முதல் கி.பி. 1850 வரை (திட்டப்பணி நடைபெற்று வருகின்றது)

தொகுதி 6 - கி.பி. 1851 முதல் கி.பி. 2000 வரை (2005)

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் 1999ஆம் ஆண்டு "அயலகத் தமிழ்க் கலை, இலக்கியம், சமகாலச் செல்நெறிகள்" எனும் தலைப்பில் கருத்தரங்கத்தினை நடத்தி ஆய்வுக் கோவையாக வெளியிட்டுள்ளது. அதன் தொடர்ச்சியாக உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் அயல்நாட்டுத் தமிழர் புலம் "அயல்நாட்டுத் தமிழ் இலக்கியங்கள்" என்ற பொருண்மையில் தேசியக் கருத்தரங்கம் (திருவள்ளுவராண்டு 2044, மாசி 2-3) பிப்பிரவரித் திங்கள் 14, 15 - 2013 ஆகிய இரு நாள்கள் நடத்தத் திட்டமிடப்பட்டு, தமிழக அரசின் நிதி நல்கைப் பெற்று, இக்கருத்தரங்கம் நடத்தப்பட்டது. இக்கருத்தரங்கிற்கு இலங்கை, சிங்கப்பூர், மலேசியா, மொரிசியசு, சீனா, அமெரிக்கா, பிரான்சு, கனடா, நெதர்லாந்து ஆகிய நாடுகளில் வாழும் தமிழ்ப் படைப்பாளர்களின் படைப்புகள் குறித்தும், படைப்பாளிகள் குறித்தும் ஆய்வுக் கட்டுரைகள் கருத்தரங்கத்திற்கு அளிக்கப்பட்டுள்ளன. இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், ஐக்கிய இராச்சியம் (இலண்டன்) ஆகிய நாடுகளிலிருந்தும் பேராளர்கள் தங்களின் ஆய்வுக் கட்டுரைகளை வழங்கினார்கள். இலங்கையின் பேராதனைப் பல்கலைக் கழகம், கிழக்குப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், தென்கிழக்குப் பல்கலைக்கழகம், ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம், சபர கமுவ பல்கலைக்கழகம் ஆகிய பல்கலைக் கழகங்களிலிருந்தும், மலேசியாவின் மலாயாப் பல்கலைக்கழகம், மலேசியா சபாப் பல்கலைக்கழகம் ஆகிய பல்கலைக்கழகங்களிலிருந்தும் பேராளர்கள் கருத்தரங்கில் பங்கு பெற்றமை கூடுதல் சிறப்பாக அமைகின்றது.

இக்கருத்தரங்கில் இடம்பெற்ற கட்டுரைகள் அயல்நாட்டுத் தமிழ் இலக்கியங்களின் தோற்றம், வளர்ச்சி, வரலாறு, வாழ்க்கைப் போராட்டம், இலங்கைத் தமிழ் அகதிகளின் வாழ்வியல், சமூகச் சிக்கல்கள், பெண்ணியம், மொழி - பண்பாட்டுத் தாக்கம், மொழிநடை, கவிதை, சிறுகதை, புதினம், நாடகம், சிறுவர் இலக்கியம், நாட்டுப்புற இலக்கியம், இணையத் தளத்தில் இலக்கியங்களின் வளர்ச்சி, அயலகத் தமிழ் வானொலிகளில் இலக்கிய ஒலிபரப்புப் பணிகள் ஆகிய பொருண்மைகள் குறித்துப் பேசுவதாக அமைந்துள்ளன.

இக்கட்டுரைகள் அயல்நாடுகளில் தமிழின் நிலை, தமிழர்களின் நிலை, தமிழிலக்கிய வளர்ச்சி பற்றி உலகத் தமிழர்கள் அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில் அமைந்துள்ளன. கருத்தரங்கம் நடத்துவதற்கு நிதி நல்கிய தமிழக அரசிற்கும், பள்ளிக் கல்வி, தொல்லியல், விளையாட்டு மற்றும் இளைஞர் நலன், தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் மாண்புமிகு என்.ஆர். சிவபதி அவர்களுக்கும், இந்நிறுவனச் செயல்பாட்டுக்கு உறுதுணையாக இருக்கும் தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் (ம) செய்தித் துறை அரசுச் செயலாளர் முனைவர் மூ. இராசாராம் இ.ஆ.ப. அவர்களுக்கும், ஒளியச்சு செய்து தந்த கா. இந்திரா காந்தி அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

முனைவர் **கோ. விசயராகவன்**
முனைவர் **மு. வளர்மதி**
முனைவர் **கு. சிதம்பரம்**
முனைவர் **து. ஜானகி**

# பொருளடக்கம்

★ அயலகத் தமிழ் இலக்கியம் : சமூக உறவில் ஒரு மரத்தின் இருகிளைகள்
திருமதி றீற்றாபற்றிமாகரன் 15

## கவிதை

1. ஈழத்துக் கவிதைகளில் தேசமும் தேசியமும்
திரு. க. இரகுபரன் 30

2. இலங்கைத் தமிழ் நாட்டார் பாடல்களில் கவிகள் அறிமுகமும் தனித்துவமும்
திரு. எம்.ஐ.எம். ஹனிபா 47

3. இலங்கையில் கி.பி. 18ஆம் நூற்றாண்டுவரை எழுந்த பள்ளு இலக்கியங்கள் குறித்த சிறப்பு ஆய்வு
திருமதி றூபி வலன்ரீனா பிரான்சிஸ் 61

4. ஈழத்துக் கவிதைகளில் மக்களின் சமூக நிலை
திரு. ஆர். ஆனந்தஜோதி 79

5. ஆறாம் திணை : ஈழத்துப் போர் இலக்கியங்கள்
முனைவர் இராமசாமி வெங்கடேசன் 93

6. போருக்குப் பின்னான ஈழத்துத் தமிழ்க் கவிதைகள்: விட்டு விலகும் பெருங்கதையாடல்
திரு. ந. மயூரரூபன் 102

8. காசி ஆனந்தன் கவிதைகளில் வாழ்வியல் கூறுகள்
முனைவர் க. சேக்மீரான் 113

9. தீபச்செல்வனின் "பதுங்கு குழியில் பிறந்த குழந்தை" காட்டும் சமூகம்
திரு. சு. இலட்சுமணன் 119

10. ஈழத்து நவீன பெண் (கவிஞர்களின்) கவிதைகள் பற்றிய விமர்சன நோக்கு
கலாநிதி செல்வரஞ்சிதம் சிவசுப்பிரமணியம் 127

11. எதிர்ப்பிலே பிறந்த கவிதைகள்: ஈழத்துப் பெண் கவிஞர்கள்
முனைவர் ந. அறிவுராஜ் 137

12. புலவர் சிவநாதனின் படைப்புகளில் புலம்பெயர் இலக்கியப் பண்புகள்
'செந்நெறிச் செல்வர்' சூ.யோ. பற்றிமாகரன் 148

13. வலிகளில் விழிகள் கண்ட மலேசியத் தமிழ் இலக்கியம்
திரு. ம. சித்ரகலா 159

14. மலேசியத் தமிழ்க் கவிதை வளர்ச்சி
திருமதி வே. விஜி 169

15. மலேசியத் தமிழ்க் கவிதைகளில் சமூகம்!
கவிஞர் சுரா 175

16. மலேசியத் தமிழ்ப் புதுக்கவிதைகளில் பெண் படைப்பாளர்களின் ஆளுமை
திரு. வே. சுமதி 183

17. புலம்பெயர் இலக்கியங்கள் பார்வையில் மலேசியக் கவிஞர் கே.எஸ். செண்பகவள்ளி
முனைவர் பா.த. கிங்ஸ்டன் 194

18. மலேசியத் தமிழ்க் கவிதைகளில் பெண் நிலை
முனைவர் ச. சிவகாமி 200

19. மலேசியத் தமிழ்ச் சமுதாயச் சீர்திருத்த நோக்கில் ந. பச்சைபாலன் கவிதைகள்
திரு. மு. சுகந்தி 210

20. மலாயாவின் மூத்த கவிஞர் சிங்கப்பூர்ச் சித்திரக்கவி நாவலர் சி.வெ. நாராயணசாமி நாயகர்
முனைவர் கோட்டி திருமுருகானந்தம் 222

21. மலேசியத் தமிழ்க் கவிதையுலகில் ஒரு விண்மீன்
முனைவர் முரசு நெடுமாறன் 243

22. பெருவெளியைச் சுமந்தவாறே பறத்தல் (மலேசிய, சிங்கப்பூர்த் தமிழ்க் கவிதைகள் – சமகாலச் செல்நெறிகள்)
முனைவர் தெ. வெற்றிச்செல்வன் 250

23. சிங்கப்பூர்த் தமிழ்க் கவிதைகளில் ஆளுமை மேம்பாடு
திரு. து. வெங்கடேஸ்வரி 262

24. கனடா நாட்டுக் கவிஞர் புகாரியின் கவிதைகளில் மொழிநடை
திருமதி கு. நாகம்மாள் 274

## சிறுகதை

25. இலங்கை : மலையகச் சிறுகதைகளின் தோற்றமும் வளர்ச்சியும்
திரு. பெருமாள் சரவணகுமார் 284

26. புலம்பெயர்ந்தோர் தமிழ்ச் சிறுகதைகளில் மொழி, இன, பண்பாட்டு அடையாள இழப்பு
முனைவர் இரா. சந்திரசேகரன் 296

27. அயல் சிறுகதைகளின் செல்நெறி
முனைவர் ப. சரவணன் 308

28. இலங்கை டோமினிக் ஜீவா அவர்களின் "தண்ணீரும் கண்ணீரும்" சிறுகதைத் தொகுதி – ஓர் அனுபவ ஆய்வு
முனைவர் நயம்பு அறிவுடைநம்பி 314

29. இலங்கைத் தமிழ்ப் புதினங்களும் சிறுகதைகளும்
முனைவர் இரத்தின புகழேந்தி 328

30. மலேசியச் சிறுகதையின் மனமும் மணமும்
திரு. சே. கண்மணி 335

31. மலேசியத் தமிழ்ச் சிறுகதைகளும் கருப்பொருளும்
முனைவர் அருள்செல்வன் இராஜு 344

32. சிங்கப்பூர்த் தமிழ் இலக்கியம் – மரபும் தனித்துவமும்
முனைவர் கா. செல்லப்பன் 354

33. சிங்கப்பூர் ஜே.எம். சாலி, கமலாதேவி அரவிந்தன் சிறுகதைப் படைப்புகள் – ஓர் அறிமுகம்
முனைவர் எச். முஹம்மது சலீம் 359

34. சிங்கப்பூர்த் தமிழ் இலக்கியமும் சமூகமும்
முனைவர் சே. மோகனசுந்தரி 364

35. இளங்கண்ணனின் தமிழ்ச் சிறுகதைகளில் மொழிநடை
முனைவர் ம. சரளாதேவி 374

36. தமிழ்ச் சூழலில் அயலகச் சிறுகதைகளின் நோக்கும் போக்கும்
முனைவர் த. பூவை சுப்பிரமணியன் 384

# அயலகத் தமிழ் இலக்கியம் : சமூக உறவில் ஒரு மரத்தின் இருகிளைகள் ★

திருமதி றீற்றாபற்றிமாகரன்
*தமிழ்க்கல்வி ஆய்வாளர்*
*ஒக்ஸ்வேர்ட்டு.ஐக்கிய இராச்சியம்*

## ஆய்வின் நோக்கு

முன்னொரு நிலத்தில் ஒரு சமூகத்தன்மையில் வாழ்ந்த தமிழர், பின்னொரு நிலத்தில் இன்னொரு சமூகத்தன்மையில் வாழ்கின்ற நிலையில் தோற்றம் பெற்ற அனுபவங்களின் வெளிப்பாட்டில் விளைந்த இலக்கியங்களையே அயலகத் தமிழிலக்கியம் என்னும் சொல்லாட்சி குறிக்கின்றது என்பது முக்கியமான விடயம். இதனால் அயலகத் தமிழிலக்கியம் 'சமூகம்' என்னும் கருப்பொருளுடன் பிரிக்கமுடியாத இணைவைக் கொண்டுள்ளது. இந்த அயலகத்தமிழ் இலக்கியத்திற்கும் சமூகத்திற்கும் இடையில் காணப்படும் வரலாற்றுத் தொடர்பை இலங்கைத் தமிழிலக்கியத்தை மையமாக வைத்துக் கோடிட்டுக் காட்டுவதே இவ்வாய்வின் நோக்கு. நாட்டெல்லையால் அயலகத் தமிழிலக்கியம் என்னும் வகைப்பாட்டில் அடங்கும் ஈழத்தமிழ் இலக்கியம் சமூக உறவில் பழந்தமிழ்மண்ணில் நிலைகொண்டுள்ள தமிழிலக்கியம் என்னும் பாரம்பரிய மரத்தின் மற்றொரு கிளையே. இதனை முதலில் வரலாற்று உறவாகவும், காலனித்துவ விடுதலையின் பின்னர் "சிவில் சமூகத்தின் தோற்றம்" ஏற்பட்டதன் விளைவாக இந்தியத் தமிழர்-இலங்கைத் தமிழர் என்ற பரிணாமத்துடனும் இலங்கை-இந்திய தமிழ்ச் சமூகம் விளங்குகிற அடிப்படையிலும், இவ்வாய்வு விளக்கமுற்படுகிறது. இந்த வரலாற்று மாற்றத்தை ஏற்ற நிலையில், இலங்கை-இந்தியத் தமிழர்களுக்கிடையிலான பிரிக்கப்பட முடியாத கலாச்சார உறவை வளர்க்கும் வகையில், அயலகத் தமிழிலக்கிய ஆய்வுகள் வளர்க்கப்பட வேண்டும் என்னும் எண்ணத்தை வளர்ப்பதே இந்த ஆய்வின் பயனாக நான் கருதுகிறேன். அதுவும் உலகத் தமிழராய்ச்சி நிறுவனத்தை நிறுவிய தனிநாயக அடிகளின் பிறப்பின் நூற்றாண்டின் முதல் காலாண்டுள் நிகழும் உலகத் தமிழராய்ச்சி நிறுவனத்தின் இவ் அயலகத் தமிழ் இலக்கிய மாநாடு இதற்கான தளத்தை அமைத்தமைக்கு இதய நன்றிகளை இன்றைய உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநருக்கும் பேராசிரியர்களுக்கும் தமிழகத்தின் முதலமைச்சர் மாண்புமிகு ஜெயலலிதா அவர்களுக்கும் பணிவன்புடன் தெரிவித்து ஆய்வினைத் தொடங்குகிறேன்.

---

★ கருத்தரங்கப் பொருண்மைக் கட்டுரை

## இங்குச் சமூகம் என்னும் வார்த்தை குடிமைச் சமூகத்தையே குறிக்கும்

இன்றைய உலகில் சமூகம் என்பது பொதுவாகக் 'குடிமைச் சமூகத்தையே' குறிக்கும் என்பது ' அன்ரோனியோ கிராம்சி' (Antonio Gramsci) வழி வந்த கருத்தாக உள்ளது. கருத்துநிலை பொருளியல் அடித்தளத்தின் நேரான பிரதிபலிப்பு (Simple reflection) என்பதற்கு மாறாக, பொருண்மைத்தன்மையுடைய சக்தி (Material Force) என்பதே கிராம்சியின் கருத்தாக அமைந்தது. இந்தப் பொருண்மைத் தன்மையுடைய சக்தியை உருவாக்குவதிலே நான்கு கருத்தாக்கங்கள் பங்கேற்கின்றன என்பது கிராம்சியின் விளக்கம். எனவே பொருளியலே தீர்மான சக்தி (Economic determinism) என்கிற மார்க்சியத்தை இலெனின் மறுத்து அரசியல்தான் தீர்மானசக்தி (Political) என்று கூற கிராம்சி அதனையும் மறுத்து நான்கு கருத்தாக்கங்களின் வழி பிறக்கும் பொருண்மைத்தன்மையுடைய சக்தியே தீர்மானக் காரணி என்றார். 'கிராம்சி' உருவாக்கிய நாலு புதிய கருத்தாக்கங்கள்:- (Concepts), 1. 'குடிமைச் சமூகம்' (Civil Society), 2. மேலாண்மை (Hegemoney). 3. வரலாற்றுக் கூட்டு (Historic Bloc), 4.உயிர்நிலை அறிவு (Organic intellecltual) என்பன ஆகும். இந்தக் 'குடிமைச் சமூகம்' என்பது சமூக உறவுகள் என்னும் மேற்கட்டுமானத்தின் பகுதிதான் என்பது கிராம்சி தரும் விளக்கம். சமூக உறவுகளை மூவகையாகப் பிரிக்கலாம். 1. உற்பத்தியோடு இணைந்த உறவுகள், 2. ஒடுக்குமுறை உறவுகள், 3. தனியார் வகை உறவுகள் என்னும் இம்மூவகை உறவுகளிலும் முதற் கூறிய இரண்டையும் தவிர்த்த மதம், தொழிற்சங்கம், அரசியல் கட்சிகள், கலாச்சார நிறுவனங்கள் போன்றன தனியார்வகை உறவின் தளங்களாகின்றன. இந்தச் சிவில் சமூகம்தான் வர்க்கங்களின் அரசியல் கருத்து நிலைப்போராட்டத்தின் களம். இது வர்க்கப்போராட்டத்தின் களம் மட்டுமன்றி வெகுசன சனநாயக (Popular Democratic) போராட்டத்தின் களமும் ஆகும். இந்த வகையில்தான் 'அயலகத் தமிழிலக்கியமும் சமூகமும்' என்னும் ஆய்வுப்பொருள் அயலகத் தமிழர்கள் வெகுசனப் போராட்டத்தின் வெளிப்பாட்டை எடுத்து நோக்கும் தன்மை கொண்டதாக அமைகிறது.

இன்று தமிழகத்தில் இலங்கைத் தமிழர்களின் வெகுசனப் போராட்ட இலக்கியங்களே மக்களால் பெரிதும் விரும்பப்படுகின்றன. இலங்கையிலும் திராவிட இயக்கங்கள் நடத்திய வெகுசனப் போராட்டங்களின் பின்னணியிலேயே தமிழகப் படைப்புகள் விரும்பப்பட்டன. தமிழகத்தில் இலக்கியத்தில் என்ன மாறுதல்கள் ஏற்படுகிறது, அந்த மாறுதல்கள் ஈழத்திலும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. ஈழத்தில் என்ன இலக்கிய

மாறுதல்கள் ஏற்படுகின்றனவோ அது தமிழகத்திலும் தாக்கம் ஏற்படுத்துகின்றன. இது தமிழறிஞர் ஆறுமுகநாவலர் காலம் முதல் பேராசிரியர்கள் கைலாசபதி - சிவத்தம்பி காலம் வரை தொடரும் போக்காகவே உள்ளது. தமிழக இலக்கியப் போக்கை விமரிசித்த இலங்கையரும் தமிழகத்தில் தளம் கொண்டே தங்கள் வெளிப்பாட்டை உறுதி செய்தமை வரலாறு. அவ்வாறே தமிழகத்தின் உயர்படைப்பாளர்களும் ஈழத்தைப் பற்றிப் பேசாது தங்கள் இலக்கியப் பணியை நிறைவு செய்ததில்லை. அதே வேளை குடும்பம் என்பதும் சமூகத்தின் தனியலகாகத் திகழ்வதனால் குடும்ப உருவாக்கலுக்குரிய உணர்ச்சிகளான காதல், பிரிவு, பாசம், சோகம், இன்பம், துன்பம் என்பனவும் தனிமனிதநிலையிலும் பலமாக அயலகத் தமிழிலக்கியங்களில் வெளிப்படுவதனையும் நாம் காண்கின்றோம். இதில்தான் பொருளாதார சமூக அரசியல் ஆன்மீக வேறுபாடுகளைத் தமிழக - ஈழ இலக்கியங்களில் காணலாம். இந்தத் தனிமனிதநிலை வெளிப்பாடுகளும்கூட சமூகம் என்னும் அமைப்பின் சிதறல்கள் பரவல்கள் என்னும் பின்னணியிலேயே இலக்கிய வடிவம் பெறுவது அயலகத் தமிழிலக்கியத்தின் சிறப்பம்சமாக அமைகிறது.

## இனம்காணக் கூடிய அச்சத்தால் தோன்றிய புலப்பெயர்வின் இலக்கியம்

ஒருவர்தாம் வாழும் நாட்டில் உயிர்வாழ்வதற்கான பாதுகாப்பினைத் தனது நாட்டின் அரசாங்கத்திடமிருந்து பெற இயலாமல், இனங்காணக்கூடிய அச்சத்திற்கு உள்ளாகும்பொழுது அவர் தாம் வாழும் நாட்டை விட்டு இன்னொரு நாட்டுக்குச் சென்று அரசியல் தஞ்சம் கோரி வாழ்கின்ற உரிமையை ஐக்கிய நாடுகள் சபையின் 1950ஆம் ஆண்டு அகதிகள் சாசனம் ஒவ்வோர் உலகக் குடிமகனுக்கும் உறுதிப்படுத்துகிறது. இந்த ஐ. நா. அகதிகள் சாசனம் அளித்த உறுதியின் பின்னர் உலகில் இடம்பெயர்ந்த அகதிகள் வழி பிறந்த இலக்கியங்களையே இன்று 'புலம்பெயர்ந்தோர் இலக்கியங்கள்' எனப் பொதுவில் அழைப்பர்.

## இலங்கைத் தமிழர்களின் புலப்பெயர்வின் வழி புலம்பெயர்ந்தோர் தமிழிலக்கியத் தோற்றம்

இந்த அகதிகள் சாசனத்தைப் பயன்படுத்தி உயிர் வாழவேண்டிய நிலையை, 1983ஆம் ஆண்டு ஜூலையில் இடம்பெற்ற இனஅழிப்புகள், இலங்கைத் தமிழர்களுக்குத் தோற்றுவித்ததனை அடுத்து, அங்கிருந்து உலகின் பலநாடுகளுக்கும் புலப்பெயர்வு அடைந்த இலங்கைத் தமிழர்களே புலம்பெயர் தமிழர்கள் என்னும் பத்து இலட்சத்திற்கும் அதிகமான அயலகத்

தமிழர்கள். இவர்களின் இலக்கியங்கள்தாம் 'அயலகத் தமிழிலக்கியம்' என்னும் எண்ணக் கருவினைத் தமிழிலக்கியப் பரப்பில் தோற்றுவித்தது. இதன் பின்னணியில் காலனித்துவ காலத்திலிருந்து தொழில்சார் புலப்பெயர்வு அடைந்த தமிழர்களின் இலக்கியங்களும் அயலகத் தமிழிலக்கியம் என்பதனுள் உள்ளடங்கப் பெறுகிறது. கூடவே உயர்கல்வி உயர்தொழில் என்னும் நிலைகளில் உலகின் பல்வேறு நாடுகளிலும் வாழும் தமிழர்களின் இலக்கியங்களும் இந்தப் பொதுவான சொல்லாட்சியான 'அயலகத் தமிழிலக்கியம்' என்பதனுள் சேர்ந்து கொண்டன.

## இவ்வாய்வு எதனை மையப்படுத்துகிறது எந்தவிதமான போக்கை வெளிப்படுத்துகிறது

ஆயினும் ஆய்வின் எல்லைகள் கருதி இந்தக் கட்டுரை மேலெழுந்தவாரியாக இலங்கைத் தமிழிலக்கியத்தினையும் சிறப்பாகப் புலம்பெயர் தமிழர்களின் தமிழிலக்கியத்தினையும் மையப்படுத்தி 'அயலகத் தமிழிலக்கியமும் சமூகமும்' என்னும் ஆய்வைச் செய்வதனைத் தனது போக்காகக் கொண்டமைகிறது. இந்தத் தலைப்பில் 'அயலகத் தமிழிலக்கியம்', 'சமூகம்' என்னும் இரண்டு சொற்களின் பிணைப்பைக் காண்கின்றோம்.

## ஆய்வின் தெளிவுக்குச் சொல்லாட்சிகள் குறித்த விளக்கம்

தமிழ் இலக்கியப்பரப்பில் 'புலம்பெயர்ந்தோர் தமிழிலக்கியம்', 'அலைவு உலைவு இலக்கியம்' என்னும் வரிசையில் 'அயலகத் தமிழிலக்கியம்' என்னும் சொல்லாட்சியும் தமிழிலக்கியத்தின் செல்நெறிகளை விளக்கும் சொல்லாட்சியாக வழக்கில் உள்ளது. எனவே அயலகத் தமிழ் இலக்கியமும் சமூகமும்' என்னும் பொருளில் ஆய்வு ஒன்றனை மேற்கொள்வதற்கு முன்பு இந்தப் 'புலம்பெயர்ந்தோர் தமிழிலக்கியம்', 'அலைவு உலைவு இலக்கியம்', 'அயலகத் தமிழ் இலக்கியம்' என்னும் சொல்லாட்சிகள் என்ற பொருளில் கையாளப்படுகிறது என்பதனைச் சுருக்கமாகத் தெரிந்துகொள்வது ஆய்வின் நோக்கையும் போக்கையும் தேவையையும் புரிந்துகொள்ளப் பெரிதும் உதவும்.

## புலம்பெயர்ந்தோர் தமிழ் இலக்கியம்

'புலம்பெயர்ந்தோர் தமிழ்இலக்கியம்' என்னும் சொல் 'Diaspora Tamil Literature' என்ற ஆங்கிலச் சொல்லுக்கான தமிழ்ப்படுத்தலாக உருவானது. எனவே ஆங்கிலச் சொல் உருவான தன்மையைத் தெளிதல் மூலமே இந்தச் சொல்லுக்கான பொருளைப் புரிந்துகொள்ள முடியும். 'Diaspora'

என்னும் ஆங்கிலச் சொல்லின் வேர்ச்சொல் கிரேக்கத்தில் 'சிதறுதல் அல்லது பரத்தல்' என்கிற பொருளைக் கொண்டுள்ளது. கி.மு. 6ஆம் நூற்றாண்டுக்கும் 8ஆம் நூற்றாண்டுக்கும் இடையில் யூதர்கள் தங்கள் நாட்டை இழந்து அடிமைகளாக அகதிகளாக மற்றைய நாடுகளில் வாழ்ந்தபொழுது அவர்கள் தங்கள் நிலத்திலிருந்து 'வெடித்துச் சிதறியவர்களாக' (இலத்தீன் கருத்து) வாழ்ந்தார்கள் எனப்பட்டனர். அதுவும் இந்த 'Diaspora' என்னும் ஆங்கிலச் சொல் கடவுளுக்குக் கீழ்ப்படியாமைக்கான தண்டனை வாழ்வு என்ற ஆன்மிகக் கருத்தின் அடிப்படையில் பழைய ஏற்பாட்டில் (Old Testament) உபஆகமம் என்று அன்றும் இணைச்சட்டங்கள் (Deuteronomy) என்று இன்றும் அழைக்கப்படும் நூற்பகுதியில் தான் முதன்முதலில் கையாளப்பட்டுள்ளதென்பர். கீழ்ப்படியாமையின் பின் விளைவுகள் என்ற உபதலைப்பில் இணைச்சட்டங்கள் 28:25இல் "உன் பகைவர்களுக்கு முன்னால் நீ முறியடிக்கப்படுமாறு ஆண்டவர் உன்னை விட்டுவிடுவார். ஒரு வழியாக அவர்களுக்கு எதிராக எழுந்து வந்த நீ, ஏழு வழிகளாய் அவர்கள் கண்களுக்கு முன்பு ஓடிப்போவாய்" என்று கூறப்பட்டமை நாடிழந்து வாழ்விழந்து பிறநாடுகளில் தஞ்சம் புகுந்த இஸ்ரேலியர் தங்களை 'Diaspora' எனக் குறிக்கும் மரபைத் தொடக்கி வைத்தனர். இதனால் ஆங்கிலத்தில் 'Diaspora' என முதன்மை 'D' (Capital 'D') குறிப்பது யூதர்களின் புலப்பெயர்வையும் 'Diaspora' எனச் சிறிய 'd' உடன் தொடங்குவது புலம் பெயர்ந்த மற்றைய இனங்களைச் சேர்ந்தவர்களையும் குறிக்கும் வழக்கம் அண்மைக்காலம் வரை தொடர்ந்தது. புலம்பெயர் வாழ்வு அரசியல் சார்ந்ததாக அரசியல் காரணிகளால் தோற்றம் பெறுகின்ற பொழுதே அத்தகைய மக்களின் ஆக்க இலக்கியமும் அறிவிலக்கியமும் புலம்பெயர் இலக்கியம் என்று சிறப்பாக வகைப்படுத்தப்படுகிறது. தமிழர்களைப் பொறுத்தவரை ஈழத்தமிழர்கள் வழியாகவே இந்த வகைமை தோன்றியது எனலாம். உலகநாடுகளில் அரசியல் அடைக்கலம் பெற்று வாழ்கின்ற பத்து இலட்சத்திற்கு மேற்பட்ட ஈழத் தமிழர்களின் படைப்புகளே புலம்பெயர் தமிழிலக்கியம் என்பதில் முதன்மை பெறுகின்றன.

## 'அலைவு உலைவு' தமிழ் இலக்கியம்

புலம்பெயர்ந்தோர் என்னும் சொல்லாட்சி தமிழர்கள் என்ற நிலையில் உலகநாடுகளில் தொழில், கல்வி, வேலைஉயர்வு, தொழில்நுட்பத்திறமை, வியாபாரம் போன்ற காரணங்களால் தாயகத்தை விட்டு நிரந்தரமாகவோ அல்லது நீண்ட காலமாகவோ வாழ்கின்றவர்களை உள்ளடக்கும் சொல்லாக இல்லை. இதனால் "அலைவு உலைவு தமிழ் இலக்கியம்" என்னும் சொல்லை

அனைவருக்குமான பொதுச்சொல்லாகச் சிலர் கையாள்கின்றனர். திரு சு. குணேஸ்வரனின் "அலைவு உலைவு : படைப்பிலக்கியம் குறித்த பார்வை" (2009) என்னும் நூல் இந்தச் சொல்லாட்சிக்கான பலத்தை அளிக்கிறது. இந்த 'அலைவு உலைவு தமிழிலக்கியம்' என்னும் சொல் பக்தி இலக்கியக்காலத் தமிழிலக்கியத்தின் பண்பாகவும் காணப்படுகிறது. காரைக்காலம்மையார் முதல் அப்பர் ஞானசம்பந்தர் சுந்தரர் மாணிக்கவாசகர் வரையுள்ள அருளாளர்களை எடுத்தால் அவர்கள் தாம் வாழ்ந்த சமூகத்துடன் கொண்ட முரண்பட்ட கருத்துநிலைகள் காரணமாக அவர்கள் அடைந்த துன்பியல் அனுபவங்கள் உலைவுகளாகவும் அவர்கள் தங்கள் கருத்துநிலைகளைப் பரப்பச் செய்த பயணங்கள் வாழ்ந்த கடினமான வாழ்க்கைகள் அசாதாரணமானதாக அலைவுகளாகவே உள்ளன. எனவே இன்றைய 'அலைவு உலைவு தமிழிலக்கியம்' என்பதற்கும், பக்தி இலக்கியத்திற்கும் இடையில் சில பொதுமைகள் காணப்படுகின்றன. பரப்புரைப் போக்கு அலைவு உலைவு இலக்கியம். அதேவேளை 'அலைவு உலைவு தமிழிலக்கியம்' என்கின்ற சொல்லாட்சியை எடுத்தாலும் அதுவும் உள்ளத்தின் துன்பியல் நிலைக்கே முக்கியத்துவம் கொடுக்கின்றது. எனவே வாழ்வின் சாதாரண நிலையினைக் கருப்பொருளாகக் கொண்டு இலக்கியம் படைக்கும் தாயகத்திற்கு வெளியே வாழ்பவர்களையும் உள்ளடக்கும் சொல்லாட்சி ஒன்றன் தேவை இந்நிலையிலும் வேண்டப்படுகிறது.

## புலம்பெயர்ந்தோர் இலக்கியத்தின் நான்கு பண்புகள்

மேலும் 'புலம்பெயர்ந்தோர் இலக்கியம் - யதார்த்தத்தின் ஆவணப் படுத்தல்' என்ற தனது கட்டுரையில் ஷாலின் சிங்கு (Shaleen Singh) "புலம்பெயர்ந்தோர் எழுத்துகள், (1) முழுஅளவில் அந்நியமயப்படுத்தப் பட்டமையை, (2) தாங்கள் புறப்பட்டு வந்த தாயகத்தைத் தொடர்ந்தும் அன்பு செய்வதை, (3) தங்கள் சொந்தத் தாயகத்தையும் வாழும் தேசத்தையும் இரட்டை அடையாளங்களாகக் கருதுவதனை (4) தங்களுக்கு புலப்பெயர்வுக்குக் காரணமான மற்றும் புலப்பெயர்வின் பொழுது நிகழ்ந்த வலிகளை வேதனைகளைத் தொடர்ந்தும் மனத்தில் கொண்டிருப்பதனை, வெளிப்படுத்துவதாகக் காணப்படும்" என்பர். வில்லியம் சப்ரன் (William Safren)[iv] 'புலம்பெயர்ந்தோர் தாயகத்திற்கு என்றோ ஒருநாள் தாங்களோ தங்கள் சந்ததியினரோ திரும்பிச் செல்வர் என்று நம்பிக்கையுடன் வாழ்பவர்கள் எனவும் இதனால் இவர்கள் தாயகத்து உயர்வுகளை உறவுகளைத் துன்பங்களைத் துயரங்களைத் தொடர்ந்தும் தம் சந்ததிக்கு அறிவுறுத்தும் நினைவுறுத்தும் இயல்பினர் எனவும் கூறுவார். இந்தப் பண்புகள் இல்லாது தாம் வாழும் நாளாந்த வாழ்வில் மகிழ்வுக்காகவோ

கலைக்காகவோ பதவிக்காகவோ பணத்திற்காகவோ ஆற்றலுக்காகவோ அறிவுக்காகவோ தாயகத்திற்கு வெளியே வாழும் தமிழர்கள் படைக்கும் இலக்கியங்களைப் புலம்பெயர்ந்தோர் இலக்கியம் என அழைக்க முடியாது. எனவே தமிழகத்திற்கு வெளியே வாழும் தமிழர்கள் அனைவரது படைப்புகளையும் குறிக்கும் பொதுச்சொல்லாட்சி ஒன்று காலத்தின் தேவையாகியது.

## *அயலக இலக்கியம்*
## *சமூகநோக்கில் தோன்றியது*

அகம் புறம் என்று உள்ளத்தையும் உடலையும் இலக்கியப்படுத்தலுக்கு இலக்காக்கியவர் தமிழர். புறம் தாய்மண்ணாக இருக்கையில் அகம் அதனுடன் இயல்பாகவே இணைகிறது. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என உலகுக்கு மானிடத்தின் மாண்பு சொன்ன தமிழன் எத்தேசத்தில் எவ்வளவு தூரத்தில் வாழ்ந்தாலும் அதனைத் தாயகத்திற்கு அயலாகவே கருதும் மரபுடையவன் வள்ளுவர் நாட்டுக்கு எல்லை கூறாத பேரறிஞன்.

*தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்*
*செல்வருஞ் சேர்வது நாடு*

என்பது வள்ளுவர் நாடு என்பதற்குத் தந்த வரைவிலக்கணம். மண்வளமும் (தள்ளா விளையுளும்) அறிவுடை மனிதரும் (தக்காரும்) இடைவிடா உழைப்பால் செல்வத்தைப் பெருக்குதலும் (தாழ்விலாச் செல்வரும்) சேர்கையில் அவ்விடம் நாடு எனப்படும். எல்லைகளை வகுத்து மண்ணின் பேரால் மானிடத்தை அழிக்கும் அதிகார உலகில் மானிடத்தின் பேரால் மனித உழைப்பும் அறிவும் மண்ணின் வளத்துடன் சேர்கையில் பிறப்பது நாடு என்று வள்ளுவன் சொல்லி அமைதிக்கு மானிடத்தின் எழுச்சிக்கு மண்ணைப் பயன்படுத்த உலகுக்கு வழிகாட்டினான். யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற சிந்தனையில் பிறந்ததே இந்த நாடு என்பதற்கான அற்புதமான வரைவிலக்கணம். இதனால் தமிழர் வாழும் எத்தேசத்தையும் தமிழ்நாட்டவர் அயலவர் எனக் கருதுதல் இன்றைய சிந்தனையன்று. மரபுவழித் தமிழ்ச் சிந்தனையின் தொடர்ச்சியே. இந்தத் தமிழ் விழுமியம் போற்றும் வழியில்தான் "அயலகத் தமிழ் இலக்கியம்" என்ற சொல்லாட்சி பிறந்துள்ளமை ஏற்புடையது என்பது என் கருத்து. தமிழர்கள் அயல் தேசங்களில் வாழ்ந்தாலும், வாழ்பவரின் அகம் - மனம், என்றும் தாய்நாட்டுடனேயே இருக்கும் பண்பு கொண்டவர்கள் தமிழர். எப்படிக் குடிவரவு பெற்றவராயினும் புறத்தில் உடல்சார் வாழ்வும் அகத்தில் தாயகம் சார் உறவும் கொண்டவர்களாகவே பெரும்பாலும் வாழ்கின்றனர். இதனால்

தூரத்தைப் பாராது தமிழகத்திற்கு வெளியே உள்ள நாடுகளில் பிறக்கும் தமிழிலக்கியங்கள் எல்லாவற்றையுமே 'அயலகத் தமிழிலக்கியம்' என அழைக்கும் மரபு இன்றைய தமிழிலக்கிய மரபாகத் தோற்றம் பெற்றுள்ளது எனலாம்.

## அயலகத் தமிழிலக்கியத்தில் சமூகம் வகிக்கும் பங்கு

இனி 'அயலகத் தமிழிலக்கியம்' என்பது தமிழகத்தைப் பொறுத்தவரை ஈழத்தமிழர்களுடனேயே வரலாற்றுத் தொடக்கம் பெற்றது. அயலகத் தமிழ் இலக்கியம் என்னும் சொல்லாட்சி "தமிழர்கள் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதல் வாழ்ந்து வரும் தென்னிந்திய நிலப்பரப்பையும் இலங்கையின் வடக்குகிழக்கு நிலப்பரப்பையும் தவிர உலகின் மற்றைய நிலப்பரப்புகளில் வாழ்ந்து வரும் தமிழர்களால் படைக்கப்பட்ட தமிழ் இலக்கியங்கள்"; எனலாம். இவ்வாறு இலங்கைத் தமிழ் இலக்கியம் தவிர்த்த என்ற நிபந்தனையின் முக்கியத்துவத்தை எடுத்து நோக்குவது அவசியம். இது சிறிலங்கா என்னும் அரசில் உள்ள தமிழ்பேசும் மக்கள், இந்தியா என்னும் அரசில் உள்ள 'தமிழக மாநிலத் தமிழர்கள்' என்னும் தமிழினத்தின் பரந்த தொகுதி, இத்தமிழ் இனம் இந்திய உபகண்டத்தின் மக்களாக விளங்கும் சமூகப் பொருளாதார அரசியல் நிலை, என்பவற்றைத் தமிழ் இலக்கியம் சிறந்த முறையில் உள்வாங்குவதற்கான அடித்தளத்தை அமைத்தல் என்பதனை நோக்கமாக் கொண்டுள்ளது. அதாவது இந்தியத் தமிழர்கள், இலங்கைத் தமிழர்கள் என்ற பிரிகோடு நாட்டெல்லை சார்ந்த புறக்காரணியே தவிர நிலப்பிரிப்போ அல்லது கலாச்சாரப் பகுப்போ அல்ல. இந்திய உபகண்டம் என்னும் பெருநிலப்பரப்பில் நிகழ்ந்த புவியியல் மாற்றங்கள் ஒரே நிலப்பரப்பு 'இலங்கை' என்னும் தனித்தீவாகத் தென்னிந்தியாவிலிருந்து பிரிவுபட்டது. மண்தான் புறக்காரணியால் பிரிவுற்றதே அன்றி மக்கள் அகக் காரணிகளால் பிரிவுறவில்லை என்பதனாலேயே பழந்தமிழ் இலக்கியங்கள் தமிழின் தொன்மை மொழியான தமிழ் ஈழம் அல்லது எலு மொழி தொடரும் நிலப்பரப்பாக இலங்கைத்தீவைக் குறித்தன. தமிழர்களின் சோழ பாண்டியப் பேரரசுகளின் வீழ்ச்சி வரை அதாவது 13ஆம் நூற்றாண்டு வரை இலங்கைத் தீவில் வாழ்ந்த தமிழர்களுக்குத் தனியான அரசோ அல்லது அரசமுறைமையோ தோற்றுவிக்கப்படவில்லை. இதனால் அயலகம் அல்ல தமிழகமே கடலால் இருநிலங்களாகத் திகழ்கின்றன என்பதே நாம் கவனத்தில் கொள்ள வேண்டிய விடயமாக உள்ளது. இதனால் தமிழகத்தின் இலக்கியத் தாக்கத்தை இலங்கைத் தமிழர்களின் இலக்கியங்களிலும் இலங்கைத் தமிழர்களின் இலக்கியத் தாக்கத்தைத் தமிழகத்தின் இலக்கியங்களிலும் நவீன இலக்கியக் காலத்திலும்கூட ஆறுமுகநாவலர்

காலம் முதல் இன்று வரை மிகத் தெளிவாகக் காணலாம். தமிழகத்தின் இலக்கியத் தாக்கத்தை ஈழத்தில் குறைக்க முற்பட்ட முயற்சிகள் அங்கு வெற்றி பெறவில்லை. ஈழத்து இலக்கியத்தைத் தமிழகத்தில் அந்நியப்படுத்த முற்பட்ட முயற்சிகளும் தமிழகத்தில் வெற்றிபெறவில்லை என்பது வரலாறு.

## இலங்கைத் தமிழ் இலக்கியம் அயலகத் தமிழ் இலக்கியமா?

ஆயினும் இலங்கைத் தமிழர்களின் இலக்கியமும் அயலக இலக்கியம்தானே என்கிற எண்ணம் மேலெழுந்த வாரியாக உள்ளது. ஆழமாகப் பார்ப்பின் :-

- இலங்கை இந்திய நிலப்பரப்புகள் ஒரே நிலப்பரப்பாக இருந்து, கடற்கோள்களால் இலங்கை தனித்தீவாகியது என்கிற அடிப்படையிலும்
- தமிழகத்திலும் இலங்கையிலும் வாழும் தமிழர்களின் அரசியல் தவிர்த்த மற்றைய சமூகக் காரணிகள் பெரும்பாலும் ஒரே தன்மை யினைக் கொண்டிருக்கிற நடைமுறை யதார்த்தத்தின் அடிப்படை யிலும்
- தமிழக இலங்கை இலக்கியங்களில் உள்ள வேறுபாடுகளை ஒருவகையான பிரதேச வேறுபாடாகவே கருதக் கூடியதாக உள்ளதே தவிர இவை இரண்டுமே இந்தியப் பண்பாட்டின் வழி வந்த இலக்கியங்களாகவே இன்றுவரை தொடர்கின்றன.

இதனால் அயலகத் தமிழ் இலக்கியம் என்பதில் இலங்கைத் தமிழ் இலக்கியம் அடக்கப்படலாமா? என்கிற கேள்வி இயல்பாகவே எழுகிறது.

## அயலகத் தமிழிலக்கியம் என்கையில் ஈழத் தமிழிலக்கியத்திற்குச் சிறப்பு நிலை தேவை

உலகப் பொதுவழக்காக அமைந்துவிட்ட நாட்டெல்லைகளின் அடிப்படையிலும், புவியியல் பிரிப்பின் பின் கலாச்சார உறவே தமிழக - ஈழ இனங் காணக்கூடிய உறவாக இருப்பதனாலும் அயலகத் தமிழிலக்கியமாகவே ஈழத்து இலக்கியம் வகைப்படுத்தப்பட வேண்டியுள்ளது. இதனை ஏற்கின்ற அதே வேளையில் சமூகம் என்னும் நிலையில் தமிழகத்திலிருந்து மாறுபடாத வாழ்வியல் தன்மைகளையே ஈழத்தமிழ் மக்களும் கொண்டுள்ளார்கள் என்ற அடிப்படையில் அயலகத் தமிழர் அல்ல தமிழக - ஈழத் தமிழர்கள். ஒரு தாய் வயிற்று இருசகோதரர்கள். புகுந்த

வீட்டில் வாழும் பெண்ணின் நிலையில்கூட இலங்கைத் தமிழரைப் பார்க்க முடியாது. ஒரே வீட்டில் வாழும் இரு சகோதரர் நிலையே தமிழக - ஈழத்தமிழர் உறவின் யதார்த்த நிலை. இந்த யதார்த்தத்தை இலங்கைத் தமிழர் கவனத்தில் எடுக்க அரசியலில் மறந்தபொழுது அவர்களின் வாழ்வு சிதைவுற்றது என்பது வரலாறு. இந்த நிலை இலக்கியத்திலும் வரக்கூடாது என்பதற்காகவே அயலகத் தமிழிலக்கியம் என்னும் வகைப்பாட்டில் ஈழத்திலக்கியத்திற்குச் சிறப்பு நிலை ஒன்று அவசியம் என்பதனை வலியுறுத்த வேண்டியுள்ளது.

## புவியியல் சமூக ஆன்மிகப் பொருளாதார உறவில் ஒப்புமை

இலங்கை, அந்தமான்தீவு போன்று இந்திய உபகண்டத்தின் தொடர்ச்சியாகவும் பிரித்தானியக் காலனித்துவ காலத்தின் பின்னர்த் தனியான நாடாக அரசியல்தன்மை பெற்ற நாடாகவும் திகழ்கிறது என்பதே நடைமுறை யதார்த்தம். இலங்கைக்குப் பிரித்தானியக் காலனித்துவ அரசாங்கம் சுதந்திரம் வழங்குவதற்கு ஆணைக்குழு அமைத்த காலத்தில் 1944 செப்டெம்பர் 1ஆம் நாள் இலங்கையில் வைத்தியராகக் கடமையாற்றிக் கொண்டிருந்த தென்னார்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த மருத்துவர் எஸ். பொன்னையா அவர்களே பிரித்தானியக் காலனித்துவ அலுவலர் திரு. ஸ்ரான்லி அவர்களுக்கு அனுப்பிய CO54/986/7,no 35 இலக்க மனுவில் "இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதி (அந்நேரத்து) இஸ்பெயினுக்கும் போர்த்துக்கல்லுக்கும், நோர்வேக்கும் சுவிடனுக்கும், ஹோலந்திற்கும் பெல்ஜியத்திற்கும், ஈகுவேட்டருக்கும் பிரேசிலுக்கும், உல்ஸ்டருக்கும் அயர்லாந்தின் மற்றைய பகுதிகளுக்கும் இடையில் உள்ள வேறுபாடுகளைக் காட்டிலும் அதிக வேறுபாடுகளைக் கொண்டுள்ளன என்று குறிப்பிட்டு, இலங்கையின் வடக்கு கிழக்கைத் 'தமிழ் இலங்கை' எனப் பிரகடனப்படுத்தித் தாய் இந்தியாவுக்கும் மகள் லங்காவுக்கும் இடையிலான இந்திய இலங்கை உறவுப் பாலமாக இப்பகுதியை உருவாக்குமாறு கேட்டிருந்தார். இந்த ஆவணம் தமிழக இலங்கைத் தமிழ் இதனால் அயலகத் தமிழ் இலக்கியம் என்னும் சொல்லாட்சி இந்திய இலங்கைத் தமிழ் மக்களின் அரசியல் வாழ்வும் கூட ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்த ஒன்று என்பதனை எடுத்துக்காட்டியது. இதன் அடிப்படையில்தான் திராவிட முன்னேற்றக் கழகத்தினை அண்ணா தோற்றுவித்ததன் பின்னர் இலங்கையின் மலையகப் பகுதிகளில் திராவிட முன்னேற்றக் கழகத்தை இலங்கைப் பாராளுமன்றம் இருதடவைகள் தடை செய்தமையும் புரட்சித்தலைவர் எம்.ஜி. இராமச்சந்திரன் இலங்கைத்

தமிழர்களின் பெருமதிப்புக்குரிய தலைவராகச் செல்வாக்குச் செலுத்தினமையையும் வரலாற்றில் காண்கின்றோம். அதனுடன் 70களில் இலங்கையின் வடக்குகிழக்கை இந்தியாவுடன் இணைக்க வேண்டும் என்று ஓர் அரசியல் கட்சியே திரு. அம்பலவாணர் என்பவர் தலைமையில் தோன்றிக் கப்பல் சின்னத்தில் தேர்தலில் நின்றமையும் வரலாறு. இதன் பின்னரும் இலங்கைத் தமிழ் மக்களின் சமூக பொருளாதார ஆன்மிக அரசியல் வளர்ச்சிகள் தமிழகத் தமிழர்களுடனும் இந்திய உபகண்டத்துடனும் தவிர்க்க முடியாத பிணைப்புகளுடனேயே திகழ்ந்தன- திகழ்கின்றன. இதனால் இலங்கையில் உள்ள தமிழ் பேசும் மக்களின் இலக்கியத்தை அயலகத்தமிழ் இலக்கியம் என்று கூறுவது ஒரு நாட்டெல்லை சார்ந்த புகுப்பாகவே அமைகிறது. இலங்கைத் தமிழ் இலக்கியத்தைத் தவிர்ந்த மற்றைய நாடுகளில் வாழும் தமிழர்களின் இலக்கியங்களுக்கே அயலகத் தமிழ் என்னும் சொல்லாட்சி பொருந்தக் கூடியதாக அமைகிறது. அதே வேளை இலங்கைத் தமிழ் இலக்கியத்தினைத் தமிழக அல்லது இந்திய இலக்கியமாகவும் கொள்ள முடியாத வேற்றுமைகளும் உண்டு என்பதனை மறுப்பதற்கு இல்லை. இதனால் தான் "ஈழத்தமிழ் இலக்கியம்" என்ற தமிழ் இலக்கியத்தில் இலங்கைக்கு வழங்கிய சொல்லாட்சியின் வழியிலேயே எடுத்து நோக்குதல் அவசியமாகிறது. தமிழக- இலங்கைத் தமிழ்பேசும் மக்கள் தனித்துவங்களும் தங்கிவாழ்தல்களும் உள்ள ஒரு சிறப்புநிலை இனத்துவத்தன்மையைக் கொண்டவர்களாகவே அன்றும் இன்றும் என்றும் உளர். இந்த சிறப்புநிலைத்தன்மையை நெஞ்சிருத்தித் தமிழ் இலக்கிய வகைப்படுத்தல் அமைதல் அவசியம்.

### *அயலகத் தமிழ் இலக்கியம் என்பதில் சிங்கப்பூர் மலேசிய இலக்கியங்கள்*

மேலும் சிங்கப்பூர் மலேசியா போன்ற நாடுகள் இந்திய நிலப்பரப்புக்கு அண்மையில் இருப்பதனால் இந்நாடுகளே இந்தியாவுக்கு அயல்நாடுகள். இதனால் அயலகத் தமிழ் இலக்கியம் என்கிற சொல்லாட்சிக்கான பூரண தகுதியை இந்நாடுகளின் தமிழ் இலக்கியங்களே பெறுகின்றன. உண்மையில் இந்தியப் பண்பாட்டுக்குத் தூர நாடுகளில் வாழ்கின்ற தமிழர்களின் இலக்கியங்களைக் குறித்த தனித்துவமான அக்கறை 1983இல் இலங்கைத் தமிழர்களின் பெருமளவிலான உலகப் பரவல் தொடங்கும் வரை பெரிதாக அமையவில்லை. பர்மா முதல் தென்னாப்பிரிக்கா வரை, பிஜி, மொரிசியஸ், சீசல்ஸ் அடங்கலாக ஏற்பட்ட தமிழ்த் தொழிலாளர்களின் தொழில்சார் குடிப்பரவல்கள் அவர்களுக்கு ஏற்படுத்திய இன்னல்கள் இடர்ப்பாடுகள் குறித்த அக்கறைதாம்

காலத்திற்குக் காலம் தமிழ் இலக்கிய உலகில் மேலெழுந்தவாரியாகப் பேசப்பட்டனவே தவிர அவர்களின் இலக்கியப் படைப்புகளைத் தனியானதாக எடுத்து நோக்கும் பண்பு தமிழ் இலக்கியப் பரப்பில் வளரவில்லை.

இச்சூழலில் பர்மாவில் வாழ்ந்த தமிழர்களுக்குப் பாரதி காலத்தில் ஏற்பட்ட இன்னல்களின் வழி பாரதி பெற்ற இனஉணர்வை அவரின் "கரும்புத் தோட்டத்திலே" பாடலில் தெளிவாகக் காணலாம். ஆயினும் இதே காலகடத்தில் இலங்கையில் 1827இல் 10,000 பேராக இருந்த இந்தியத் தமிழ்த் தொழிலாளர்களின் எண்ணிக்கை 1921இல் பாரதி காலமான ஆண்டில் 4,93,944 ஆகக் காணப்பட்டது. 1841க்கும் 1849க்கும் இடைப்பட்ட காலத்தில் மொத்தக் குடியேற்றங்களில் 70,000 பேர் அல்லது 25 வீதத்தினர் பல்வேறு காரணங்களால் தோட்டங்களில் மரணமடைந்தனர். துண்டுமுறை என்னும் பெயரில் இக்காலத்தில் கங்காணிக்குத் தொழிலாளி அடிமையாக இருந்தான். தொழிலாளியின் வாழ்க்கைக்குக் கடன் கொடுக்கும் கங்காணி அக்கடனைத் துண்டில் குறித்து அக்கடன் செலுத்தப்படும் வரை தொழிலாளி தன் அடிமை என வைத்திருந்தான். தோட்ட முதலாளிமார் கங்காணியிடம் தொழிலாளி அவனுக்குச் செலுத்த வேண்டிய கடனைச் செலுத்தி அவனைத் தனது அடிமையாக வாங்கினர். இந்த அடிமை வியாபாரத்திற்குக் காரணமாகத் துண்டுமுறை 1921இலேயே சட்டவிரோதமாக்கப்பட்டது. இருந்தபோதிலும் பாரதியோ அல்லது வேறு படைப்பாளிகளோ இக்காலகட்டத்தில் இந்த இலங்கைப் பெருந்தோட்டத் தமிழ் மக்களின் வாழ்வியலை இலக்கியமாகப் பதிவாக்கவில்லை. இந்தத் தமிழ் மக்கள் திருநெல்வேலி மதுரை தஞ்சாவூர் பகுதிகளைச் சேர்ந்த ஒடுக்கப்பட்ட காணியற்றவர்கள் என்பதனால் இவர்களின் குரல் இலக்கியத்தில் இடம்பெறவில்லை. "தனிமனிதனுக்கு உணவில்லை யெனில் இந்த ஜகத்தினை அழித்திடுவோம்" என்று சூளுரைத்த பாரதிக்குக் கூட இந்த இலங்கைப் பெருந்தோட்ட மக்கள் குறித்த தகவல்கள் போய்ச் சேரவில்லை என்னும்பொழுதே இலங்கை இந்திய நாடுகளில் வாழும் தமிழர்களின் நிலை குறித்த அக்கறை இருநாடுகளிலும் வேகப்படுத்தப்பட வேண்டியதன் அவசியம் வரலாறாக உணர்த்தப்படுகிறது.

### *அரசியல் யதார்த்தத்தை ஏற்றுச் சமூக யதார்த்த்தைப் பாதுகாத்தல்*

இலங்கையும் இந்தியாவும் வேறு வேறு நாடுகள் என்கிற அரசியல் காரணியின் அடிப்படையில் இலங்கைத் தமிழ் .இலக்கியம் அயலகத் தமிழ் இலக்கியம் என்று வகுக்கப்படுவது ஏற்புடையதே. ஆயினும் இந்தப் பிரிகோடு

தமிழர்கள் என்னும் பாரம்பரிய இனத்துவத்தினைக் கூறுபடுத்தும் ஊறுபடுத்தும் என்பது வெளிப்படை. எனவே தமிழர்கள் தாங்கள் வாழ்கின்ற நாடுகளின் சட்ட ஒழுங்குகளுக்கு அமைவாகத் தாங்கள் வேறு வேறு நாட்டவர்கள் என்கிற அரசியல் யதார்த்தத்தை ஏற்றுச் சமூகநிலையில் தமிழினம் என்கிற உலகப் பொதுத்தன்மையைப் பாதுகாத்துக் கட்டி எழுப்புவதன் வழியாகவே உலகில் தமிழினம் சிறப்புற இயலும் என்பது நடைமுறை உண்மையாகிறது.

## தமிழக - ஈழ இலக்கிய இணைவு பலம்பெற ஆய்வுகள் வளர வேண்டும்

இந்தத் தன்மையில் உறுதி பெறுவதற்கு இலங்கை இந்தியத் தமிழர்களின் இலக்கிய வரலாறு குறித்த ஒப்புமைகள் வேறுபாடுகள் குறித்த தெளிவான அறிவு பலப்படுத்தப்படல் காலத்தின் தேவையாகிறது. இரண்டல்ல ஒன்றுமன்று என்கிற சைவசித்தாந்தத்தின் சுத்தாத்துவித தத்துவம் இந்நேரத்தில் நினைவுக்கு வருகிறது. இந்திய உபகண்டத்தின் முக்கியத் தத்துவங்களில் ஒன்றாகவும் தமிழர்களின் ஆன்மிக இறையியல் மெய்யியல் தத்துவமாகவும் உள்ள சைவசித்தாந்தம் "இரண்டல்ல என்ற நிலையில் முரண்படாமல் வாழவும் - ஒன்று என்று முரண்டுபிடிக்காமலும்" வாழப் பழக்கும் சமூகத்தன்மையானது. இதனை இந்திய இலங்கைத் தமிழர்களும் உலகத் தமிழர்களும் மனத்திருத்தல் அவசியம். தமிழினம் இரண்டன்று. ஆனால், வரலாற்று நிகழ்வுகள் வழி அரசியல் நிலையில் தமிழர்கள் உலகின் பலநாடுகளிலும் அந்த அந்த நாட்டுக் குடிகளாகவும் பரந்து விரிந்து வாழ்கின்றனர் என்பது நடைமுறை யதார்த்தம். இவர்கள் அரசியல் நிலையில் ஒன்றுபட இயலாது என்பதும் அனைவரும் அறிந்த உண்மை. இதனால் இலங்கை தவிர ஏனைய நாடுகளில் வாழும் தமிழர்களின் இலக்கியங்கள் அயலக இலக்கியம் என்ற சொல்லாட்சிக்குள் அடக்கப்பட்டு ஆராயப்படும்பொழுது இலங்கையின் தமிழ் இலக்கியம் அதன் வரலாற்றுப் பெயரான ஈழத்தமிழ் இலக்கியம் என்னும் பெயரால் அயலக இலக்கியத்தின் ஒரு சிறப்புநிலை இலக்கியமாக ஆய்வு பெறுவது சிறப்புடையதாக அமையும்.

அதுவும் பேராசிரியப் பெருந்தகை தனிநாயக அடிகள் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தை நிறுவிட முன்நின்று உழைத்ததன் நோக்கமே தமிழரின் இலக்கிய இணைப்பு - கலாச்சார உறவு உலகெங்கும் தமிழினத்தின் வாழ்வாதார சக்தியாக மாறவேண்டும் என்பதாகும். அவரின் பிறப்பின் நூற்றாண்டு இடம்பெறும் வேளையில் நடைபெறும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் இந்த அயலகத் தமிழிலக்கிய மாநாடு தமிழிலக்கியத்தின்

வழி தமிழர்கள் தரணியில் சிறந்திட வழிவகுக்கட்டும். அயலகத் தமிழிலக்கியங்கள் குறித்த அறிவை ஆய்வை வளர்க்கத் தமிழர்கள் வாழும் இலங்கை இந்தியாவுக்கு வெளியில் நாம் வாழும் ஒக்ஸ்போர்ட்டு போன்ற பல்கலைகழக நகரங்களிலும் உலகத் தமிழராய்ச்சி நிறுவனத்தின் மையங்களைத் திறக்கத் தமிழக முதலமைச்சர் மாண்பு மிகு ஜெயலலிதா அவர்கள் தமது ஆளுமையையும் உலகத் தமிழினத்தின் மேல் கொண்ட அன்பினையும் கருத்தில் கொண்டு நிறுவ வேண்டுமென இலண்டனில் இருபது ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழ்படிப்பிக்கும் அனுபவத்தின் அடிப்படையிலும், ஐரோப்பிய தமிழ் ஊடகத்துறையின் மூத்த அறிவிப்பாளர்-நிகழ்ச்சித் தயாரிப்பாளர்களில் ஒருவர் என்ற வகையிலும் புலம்பெயர் மக்களின் கோரிக்கையாகவும், பணிவன்பாக வேண்டுகிறேன்.

# கவிதை

# ஈழத்துக் கவிதைகளில் தேசமும் தேசியமும்

திரு. க. இரகுபரன்
*முதுநிலை விரிவுரையாளர்*
*மொழித்துறை*
*தென்கிழக்குப் பல்கலைக்கழகம்*
*ஒலுவில், இலங்கை*

ஈழத்துத் தமிழ்க் கவிதைகளில் தேசம், தேசியம் என நோக்குவதற்கு முன் தேசம் தேசியம் என்பன பற்றிய தெளிவை நாம் பெறுதல் வேண்டும். தேசம் என்பது எளிமையான முறையிலே ஒரு நாட்டைக்குறிக்கும். ஆனால், தேசியம் சிக்கலானதும் பலவேளைகளில் குழப்பத்தை ஏற்படுத்துவதுமான ஓர் எண்ணக்கருவாகும்.

> தேசியவாதம், பிரதானமாக மக்களின் சுதந்திரம், அவர்களின் அரசாட்சி, பற்றியதொரு கோட்பாடாகும். மக்கள் விடுவிக்கப் படல் வேண்டும். அதாவது எவ்விதமான வெளியார் அடக்குமுறையிலிருந்தும் விடுவிக்கப்படல். அவர்கள் தமது தலைவிதியைத் தாமே தீர்மானித்துத் தமது இல்லங்களில் தாமே எசமானர்களாக இருத்தல் வேண்டும். தங்கள் வளங்களைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருத்தல் வேண்டும். அவர்கள் தமது சொந்த உட்குரலுக்கு மட்டுமே அடிபணிய வேண்டும். ஆனால் இதற்குச் சகோதரத்துவம் அவசியமானது. மக்கள் ஒற்றுமைப்படுத்தப் படல் வேண்டும். அவர்களுக்கு சட்டப்பூர்வமான சம உரிமையும் பொதுவான தனிக் கலாசாரமும் இருத்தல் வேண்டும். ஆனால் எந்தக் கலாசாரம்? எந்த ஆட்சியுரிமைப் பிரதேசம்? வரலாற்று உரிமை ரீதியாக அவர்களுடையதாக இருந்தவோர் தாய்நிலம் மட்டும் அதாவது அவர்களின் முன்னோர்களின் நிலம் மட்டும்; பரம்பரைச் சொத்தான அவர்கள் கலாசாரம் மட்டும் இவையே சந்ததி சந்ததியாக வழிவந்து, அதன் விளைவாக அவர் களுடையதான அசலான அடையாளத்தின் வெளிப் பாடாகின்றன. (ஜே. ஹச்சின்சன்)[1]

முன்பு தேசம் என்பது நாட்டை ஆளும் மன்னனோடு இணைக்கப் பட்டதாய் அவனது அதிகார ஆசையிலும் சாதனைகளிலும் மட்டுமே பெரிதும் வெளிப்பட்டு நின்றது. பதினெட்டாம் நூற்றாண்டிலேதான் தேசியவாதம் ஒரு தேசிய இன நாட்டினுள் (Nation State) விரிவான

அடிப்படையுடையதாக அமைவுற்றது. அப்பொழுதுதான் ஒரு தேசிய இனத்தைச் சேர்ந்த பல்வேறு மக்கட் பிரிவினரும் தாம் ஒரு கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்னும் உணர்ச்சியைப் பெற்றனர். மக்கள் போற்றிநின்ற இத்தேசியவாதம் மேலும் வலுப்பெறுவதற்குப் பிரான்ஸிலே நடைபெற்ற அரசியற்புரட்சி மிகுந்த வலுச் சேர்ப்பதாக அமைந்தது. அது தாராண்மைவாதத்தோடு (Liberalism) இணைந்தபோது பத்தொன்பதாம் நூற்றாண்டின் உலக வரலாற்றைத் தீர்மானிக்கும் சக்தியாக அமைந்தது.

ஐரோப்பாவில் தோற்றம் பெற்ற தேசியவாதம் ஆசியாவுக்கு வந்தபோது ஆசிய தேசியவாதம் தனக்கேயுரிய சில தனிப்பண்புகளோடு எழுச்சியுற்றது என்பர். அதில் முக்கியமான ஒரு பண்பு ஆசிய தேசியவாதம் பல கிளைத் தேசிய வாதங்களைத் தன்னகத்தே கொண்டதாகக் காணப்படுகின்றமை யாகும். அந்நியர் ஆதிக்கத்துக்கு எதிராக எழுந்த கிளர்ச்சியே ஆசிய நாடுகளில் தேசியவாதம் முனைப்புப் பெறுவதற்குக் காரணமாக அமைந்தது. அந்நியருக்கு எதிரான கிளர்ச்சி காரணமாக ஒரே நோக்குள்ள பல அம்சங்கள் தொழிற்படத் தொடங்கின. இதன் விளைவாக ஒவ்வொரு நாட்டின் தேசிய வாதமும் அதன் அடிப்படையாகக் கொள்ளக் கூடிய சில உறுதியான அம்சங்களை உருவாக்கின.

அந்நியராட்சியை எதிர்ப்பதற்கு ஒன்றுபட வேண்டிய அவசியம் அடிமைப்பட்ட பல்வேறு மக்கட் கூட்டத்திடையே சில ஒற்றுமைப் பிணைப்புகளை ஏற்படுத்திற்று. இந்தப் பிணைப்பு அந்நியருக்கு எதிரான கிளர்ச்சி என்ற எதிர்மறை அம்சத்தினால் ஏற்பட்டதாயினும் விரைவில் அது திட்டவட்டமான பிணைப்பினை ஏற்படுத்தியது.

துணைக் கண்டம் பிரித்தானியர் கைப்பற்றுவதற்கு முன்னர் பல நாடுகளாக - அரசுகளாக இருந்தமை பிரித்தானியரின் அடக்குமுறை ஆட்சிக்குள் ஒன்றுபட்ட இந்தியத் தேசமாக உருப்பெற்றமை வரலாறு. இலங்கையிலும் நிகழ்ந்தது அதுவே. ஆசிய தேசியவாதத்தில் சமயத்தின் செல்வாக்கு அதிகமாகவிருந்தது. தூங்கிக் கிடந்த மக்கள் சமயத்தின் குரலாலேயே பெரும்பாலும் தட்டியெழுப்பப்பட்டார்கள். ஒரே நேரத்தில் மத பேதங் கடந்த நிலையிலும் மதத்தின் அடிப்படையிலும் தேசியவாதம் பேசப்பட்டது. அதன் விளைவுகளை இந்தியா கண்ணாரக்கண்டது.

தேசியவாதத்துக்குப் பல்வேறு அடிப்படைகள் காரணியாக இருப்பினும் பொருளாதாரம் மிக முக்கியமான காரணியாகும். நிலமானிய சமுதாயத்திலே தேசியவாதத்துக்கு அதிக இடமில்லை. குடியேற்றவாத ஆட்சியின் பொருளாதாரக் கொள்கைகள் தேசிய வாதத்தின் எழுச்சிக்கு வழிவகுத்தன. மத்தியதர வர்க்கத்தின் உருவாக்கம் - அதன் எழுச்சி தேசியவாதத்தின்

எழுச்சியாக அமைந்தது. பல மொழிகளும் பல சமயங்களும் காணப்பட்ட ஒரு நாட்டிலுள்ள பல வகுப்புவாத இனங்களை இம் மத்தியதர வகுப்பு இணைத்தது. அவர்கள் அனைவரையும் உள்ளடக்கிய முழுத் தேசத்தின் சார்பாகப் பேசக் கூடிய உரிமையை அம் மத்தியதர வகுப்பு பெற்றுக்கொண்டது.

ஒரு நாட்டில் அந்நியரை அகற்றும் வேலை மிக அவசியமானது என்று உணர்ந்துகொண்டது இம்மத்தியதர வகுப்பே. அந்நியரை அகற்றுவதன் மூலம் தேசத்தின் அதிகாரம் இந்த உயர்குழாத்தின் கைகளுக்கே செல்லக்கூடியதாக இருந்ததும் இங்கு மனங்கொள்ள வேண்டியது.

பிரித்தானியர் ஆட்சியினதும் பொருளாதார அமைப்பில் ஏற்பட்ட மாற்றங்களினதும் விளைவாகவே இந்த உயர்குழாம் தோற்றம் பெற்றது. நிலமானிய அமைப்பில் கமத்தொழிலை மாத்திரம் பிரதானமாகக் கொண்டியங்கிய பொருளாதார அமைப்பில் ஏற்பட்ட மாற்றங்கள் புதிய புதிய முறைகளில் பொருள் ஈட்டும் வாய்ப்பினை அளித்தன. அந்த வாய்ப்பினைப் பெற்றவர்கள் தாம் ஈட்டிய செல்வத்தைக் கொண்டு தமது பிள்ளைகளுக்குக் கல்வியைப் பெற்றுக்கொடுத்தனர். மேற்படிப்புக்கு இங்கிலாந்துக்கு அனுப்பவும் செய்தனர். நவீனக் கல்வியும் ஆங்கில அறிவும் பெற்றவர்கள் உயர் உத்தியோகங்களைப் பெற்றனர். இவ்வாறு உருவான உயர்குழாத்தினரே தேசிய உணர்ச்சியை ஏற்படுத்துவதில் முன்னின்றவர்கள். இந்த உயர் குழாத்தினர் தேசிய அடிப்படையிலும் பிராந்திய அடிப்படையிலும் இயங்கினார்கள்.

இந்தியத் தேசியவாதம் எழுச்சியுற்றதன் ஒரு பக்கவிளைவாகவே இலங்கைத் தேசியவாதம் தோன்றியது என்ற அடிப்படையையும் இங்கு மனங்கொள்ள வேண்டும். இந்தியத் தேசியவாதம் எழுச்சியுற்ற நிலையிலே - அதன் தன்மையிலே இலங்கைத் தேசியவாதம் எழுச்சியுற்றதாகக் கொள்ள முடியாது. இலங்கையில் தோன்றிய தேசியத் தலைவர்கள் பெரும்பாலும் ஆங்கிலேய அரசாங்கத்தோடு இணைந்து நின்று சலுகைகளைப் பெற முயன்றனரேயன்றிப் பிணங்கிப் போராடி உரிமைகளைப் பெற முயன்றனர் என்று கொள்ள முடியாது. அதேவேளை இலங்கை முழுவதையும் ஒருங்கே காணும் தேசியத் தலைவர்களாகவும் அவர்களுள் பெரும்பாலானவர்கள் அமையவில்லை. சமய, மொழி அடிப்படைகளில் சிந்தித்தவர்களாகவே விளங்கினர். இவற்றின் விளைவினை நாம் இலக்கியங்களிலும் காணலாம். இந்தியாவில் அதன் பிராந்திய மொழிகள் யாவிலும் பிரித்தானிய அரசுக்கு எதிரானதும் இந்திய விடுதலையை வலியுறுத்துவதுமான தேசியக் கவிஞர்கள் தோன்றியதுபோல் இலங்கையில் தோன்றவில்லை. தமிழ்நாட்டிலே பாரதி பாடியதைப்போல் தேச விடுதலைக்காக உரத்துக் குரல் கொடுத்த ஒரு

கவிஞனை இலங்கைத் தீவிலே காணமுடியவில்லை. தமிழிலாயினும் சிங்களத் திலாயினும் காண முடியவில்லை என்ற உண்மையை மனங்கொள்ள வேண்டி யவர்களாக உள்ளோம். இந்த அடிப்படைச் செய்திகளின் பின்னணியில் இலங்கைத் தமிழ்ச் சூழலில் எளிமையான பொருளில் தேசம், தேசியம் பற்றிய குரல்கள் ஈழத்துத் தமிழ்க் கவிதைகளில் எப்படி அமைந்துள்ளன என்பதை இனி நோக்குவோம்.

அதற்கு முன்பாக, தேசம் என்ற சொல் ஈழத்தின் ஆரம்பக் காலத் தமிழ் இலக்கியங்களில் வழங்கிய முறைமையையும் அவதானித்தல் நன்று. தமிழக இலக்கியங்களோடு ஒப்பிடும் நிலையில் தேசம் என்ற சொல் மிக முக்கியமான வகையில் இலங்கையில் கையாளப்பட்டிருப்பதைக் காணலாம். குறிப்பாக மட்டக்களப்பிலே மட்டக்களப்பு தேசம், முக்குவதேசம் என்ற பிரயோகங்கள் அப்பிராந்தியத்திற் கண்டெடுக்கப்பட்ட சாசனங்களிலும் மட்டக்களப்பு பூர்வ சரித்திரத்திலும் காணப்படுகின்றன. யாழ்ப்பாண தேசம் என்ற சொல்லாட்சியும் இருந்தது. சொத்துரிமை முதலானவை பற்றி யாழ்ப்பாணப் பிரதேசத்தில் பாரம்பரியமாக நிலவிவந்த சட்டமுறைமைகள் ஒல்லாந்தரால் தொகுப்பித்து எழுதப்பட்ட நூலுக்குத் 'தேசவளமைச் சட்டம்' என்றே பெயரிடப்பட்டது.

திருகோணமலை சார்ந்து எழுந்த 'வெருகல் ஸ்ரீ சித்திரவேலாயுதர் காதல்' என்ற நூலில் வன்னிமை தேசத்தார் மாநாடு பற்றிய குறிப்பு வருவது அவதானிக்கத்தக்கது. தமிழகத்துச் சாசனங்களிலும் நூல்களிலும் காணப்படும் நாடு என்ற சொல்லுக்குச் சமமாக இங்கே தேசம் என்ற சொல் கையாளப்பட்டது எனலாம். அவ்வகையில் அச்சொல் புவியியற் பரிமாணம் கொண்டதாக எல்லைகள் அடையாளம் காணப்படக்கூடிய ஒரு நிலப்பகுதியைக் குறிப்பதாக அமைந்தது. அது சில தனித்துவமான வரலாற்று அனுபவங்களால் ஏற்பட்ட சமுதாய உணர்ச்சிகளைப் பிரதிபலிப்பது. மேலும் அது மொழி வழியாகவும் சமூக வழமைகள், பண்பாட்டு அம்சங்கள் என்பவற்றின் வழியாகவும் உருவாகிய பொதுமையினை உணர்ச்சிப் பூர்வமாகப் பிரதிபலிப்பது. எனவே, ஈழத்து இலங்கியங்களிலும் சாசானங்களிலும் பயின்ற தேசம் என்ற சொல்லாட்சி இலங்கைத் தமிழரின் அரசியல் நோக்கில் அமைந்த சிந்தனை வளர்ச்சியின் ஒரு பிரதான கட்டத்தைக் குறிப்பதாகக் கொள்ளலாம்.

ஈழத்தில் யாழ்ப்பாண இராச்சிய காலத்திலிருந்தே தொடர்ச்சியான நிலையில் தமிழிலக்கியங்கள் தோற்றம் பெற்றன. அவ்வாறு தோன்றியவற்றுள் பெரும்பாலானவை வரலாற்று நூல்கள் என்ற எண்ணத்தோடு எழுதப்பட்டவை. அவற்றுள் முக்கியமானவை திருகோணமலைப்

பிராந்தியத்தை மையப்படுத்தியவை. தட்சிணகைலாச புராணம், கோணேசர் கல்வெட்டு, திரிகோணாசல புராணம், திருக்கரைசைப் புராணம் என்பன அவ்வாறானவை. தட்சிணகைலாச புராணம் ஈழத்தை ஆண்ட தமிழ் அரச பரம்பரைக்கு முக்கியத்துவம் அளிப்பதாக அமைகின்றது. வழமையான மரபின்படி அந்நூல் கடவுள் வாழ்த்துடன் தொடங்குகின்றது. அடுத்து - சிவனடியார்கள் வாழ்த்தப்படுகிறார்கள். அதனையடுத்து, குளக்கோட்டன் போற்றப்படுகிறான். குளக்கோட்டன் சமகாலத்தில் அரசனாக விளங்கியவனல்ல. அவ்வாறிருக்கையில் அவனைப் பாடிய முறைமை அவனை வெகுஜன அபிமானத்துக்கு உரிய அரசனாக விளங்கினான் என்பதை இனங் காட்டுகின்றது.

முற்குறிப்பிட்ட நூல்களிலெல்லாம் நாட்டுவளம், நகரவளம், ஆற்றுவளம் என்பன பாடப்படுகின்றன. அவை மரபு வழிப்பட்ட அம்சங்களே. எனினும் அவற்றுள் தேசம்பற்றிய ஈடுபாட்டுணர்வு நன்கு வெளிப்படுகின்றது. உதாரணமாக, திருக்கரைசைப் புராணத்தை எடுத்துக் கொள்ளலாம். அதில் இலங்கை நாட்டையும் திருக்கரைசையின் தீர்த்தமான மாவலி கங்கையையும் நூலாசிரியர் உற்சாகத்தோடு வருணிக்கிறார். அவ்வருணனைகள் அவரின் கவித்துவத்தை மாத்திரமன்றி நாட்டுப்பற்றையும் உணர்த்துவனவாயுள்ளன. ஆங்காங்கே ஆசிரியரின் தமிழ்ப் பற்றும் புலனாகின்றது. நகர வருணனை யின்போது நகர வீதிகளை வருணிக்கிறார். அவ்வேளை அங்கு இடம்பெறும் தமிழின் ஆரவாரத்தையும் வலியுறுத்துகிறார்.

*கொஞ்சிய கிள்ளை மென்சொற் கோதையர் சிலம்பின் ஆர்ப்பும்*
*வஞ்சியின் காஞ்சி ஆர்ப்பும் வாயறாத் தமிழின் ஆர்ப்பும்*
*விஞ்சிய மள்ளர் ஆர்ப்பும் விழாவெழு குழுவின் ஆர்ப்பும்*
*அஞ்சிறை வண்டின் ஆர்ப்பும் அன்றி ஓர் ஆர்ப்பும் இன்றால்.*[2]

இலங்கைத் தீவு நெடுங்காலமாகவே சிங்களம் தமிழ் ஆகிய மொழிகளைப் பேசிய மக்கட் கூட்டங்களைத் தன்னகத்தே கொண்டமைந்த தாகவே விளங்கியது. ஆயினும் ஈழத்தில் தோன்றிய தமிழ் இலக்கியம் எதுவும் (வரலாற்று நூல்கள் அல்ல) சிங்களம் என்ற ஒரு மொழிபற்றியோ அம்மொழி பேசிய மக்கட்கூட்டம் பற்றியோ பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை.

நாட்டை வளப்படுத்துவது என்ற வகையில் ஒரு தேசத்தின் வளங்களுள் முக்கியத்துவம் பெறுவது ஆறாகும். அவ்வகையில் ஈழத்துத் தமிழ் இலக்கியங்களில் மகாவலிகங்கை உணர்ச்சிப்பூர்வமான மதிப்பினைப் பெற்றுள்ளது. அத்தகைய ஈடுபாட்டு உணர்ச்சி காரணமாக மகாவலிகங்கை

பற்றிய பல தொன்மங்களும் ஈழத்தில் வளர்ந்துள்ளன. ஆனால் இலங்கைத் தீவில் உள்ள ஏனைய ஆறுகள் பற்றிய ஈடுபாடோ அல்லது குறைந்த பட்ச அறிவோ ஈழத்துத் தமிழ்க் கவிஞர்களிடம் இருந்ததாகத் தெரியவில்லை. இதற்கு விதிவிலக்காகக் கொள்ளத்தக்கது மாணிக்ககங்கை ஒன்றே. தமிழ்ச் சமூகத்தின் பாரம்பரிய வழிபாட்டிடமான கதிர்காமத் தலத்தின் புனித ஆறு என்ற வகையிலேயே மாணிகக்கங்கை அறியப்பட்டது. அல்லாமல் மாவலிகங்கை தேசத்து ஆறாகக் கொள்ளப்பட்டது போல் அது கொள்ளப்படவில்லை என்பதையும் இங்கு வலியுறுத்துதல் வேண்டும். அதற்கான தெளிவான சான்றினை நாம் கதிரைமலைப் பள்ளுவிலே கண்டுகொள்ளலாம். பள்ளு என்பது மழை வளம், ஆற்றுவளம் முதலான வற்றைத் தன் அடிப்படை அங்கங்களாகக் கொண்ட ஓர் இலக்கிய வடிவமாகும். அந்தவகையில் ஈழத்துப் பள்ளு இலக்கியங்கள் மாவலி கங்கையையே உணர்வுப் பூர்வமாகப் பாடியுள்ளன. கதிர்காமத் தலம் பற்றியதான கதிரை மலைப் பள்ளிக்கூட அத்தலத்தின் புனிதத் தீர்த்தமாகக் கொள்ளப்படுகின்ற மாணிக் கங்கையை விடுத்து மகாவலி கங்கையையே ஆற்றுவளம் கூறுவதற்கான அடிப்படையாக அமைத்துக் கொண்டமை இங்குக் கருதத்தக்கது. மாவலி கங்கை தமிழ் மக்கள் வாழும் நிலத்தினூடாக ஓடுகின்ற பேராறு என்ற வகையிலேயே தமிழ்ப் புலவர்களின் அபிமானத்தைப் பெற்றது என்றே கொள்ள வேண்டும்.

16ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் யாழ்ப்பாண இராச்சியம் உட்பட இலங்கையின் கரையோரம் யாவும் போர்த்துக்கேயர் வசமாயின. அதற்கு முன்பாக ஆரியச் சக்கரவர்த்திகளின் ஆட்சிக் காலத்தில் தோன்றிய இலக்கியங்கள் தமிழரசு பற்றிய விதந்துரைகளைக் கொண்டனவாக அமைந்தன. போர்த்துக்கேயர் ஆட்சிக்காலத்தில் தோன்றிய நூல் எதுவும் குறிப்பிடக் கூடியதாக இல்லை. போர்த்துக்கேயருக்குப் பின்னர் ஆட்சி செய்த ஒல்லாந்தர் காலத்தில் தோன்றிய நூல்களுள் 'யாழ்ப்பாண வைபவமாலை' நீங்கலாக வேறு எந்த நூலும் ஒல்லாந்த அரசு பற்றியோ அரசுத் தலைவன் பற்றியோ அக்கறை காட்டியதாகத் தெரியவில்லை. 'யாழ்ப்பாண வைபவமாலை' யாழ்ப்பாண இராச்சியத்தைக் கைப்பற்றியாண்ட ஒல்லாந்த தளபதி ஒருவனது விருப்புக்கிணங்க எழுதப்பட்டது. புதிதாய் வந்த ஒல்லாந்தர்கள் தாம் கைப்பற்றிய நாட்டின் வரலாற்றையும் சட்டதிட்டங்கள், வழமைகளையும் அறிய விரும்பினார்கள். இத்தகைய விருப்பினாலேயே 'தேசவளமைச் சட்ட'மும் தொகுக்கப்பட்டது. ஒல்லாந்த ஆள்பதியின் விருப்பின் பேரில் பாடப்பட்டது என்ற விடயத்தை 'யாழ்ப்பாண வைபவமாலை'யின் சிறப்புப் பாயிரமும் தெரிவிக்கின்றது.

*ஒண்ணலங்கொள் மேக்கறூனென் றோதுபெயர்*
*பெற்றவிற லூலாந்தே சண்ணல்*
*பண்ணலங்கொள் யாழ்ப்பாணப் பதிவரலா*
*றுரைத்தமிழாற் பரிந்து கேட்கத்*
*திண்ணிலங்கு வேற்படையான் செகராச*
*சேகரன்றொல் லவையிற் சேர்ந்தோன்*
*மண்ணிலங்கு சீர்த்திவையா மரபின்மயில்*
*வாகனவேள் வகுத்திட் டானே.*[3]

ஒல்லாந்த தளபதியான மேக்கறூனின் விருப்பிற்கிணங்க யாழ்ப்பாண வரலாறை, வையா என்னும் புலவரின் மரபில் வந்த மயில்வாகனவேள் உரைநடையில் வகுத்துரைத்தான் என்பது இச்செய்யுளின் திரண்ட பொருள். இச்செய்யுளில் மேக்கறூன் பற்றிய விவரணத்தை விட மயில் வாகனப் புலவரின் முன்னோரான வையா வீற்றிருந்த அவைக்கு உரியவனான செகராச சேகரன் பற்றிய விதந்துரை உயிர்ப்புடையதாய் அமைவது அவதானிக்கத் தக்கது.

உரைநடை நூலாக அமைந்த 'யாழ்ப்பாண வைபவமாலை'யின் இறுதியிலும் சில செய்யுள்கள் இடம்பெற்றுள்ளன. அவற்றுள்ளும் ஒல்லாந்த ஆட்சியாளர் பற்றிய குறிப்புக்கள் வருகின்றன. அவற்றில் ஒல்லாந்த ஆட்சியாளன் புகழ்ந்துரைக்கப்படுகின்றானாயினும் அப்புகழுரை ஒல்லாந்தருக்கு முன்பு ஆட்சி செய்த போர்த்துக்கேயரின் கொடுங் கோன்மையிலிருந்து மீண்டமை குறித்த மகிழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டதே என்பது அவதானிக்கத்தக்கது. போர்த்துக்கேயரால் அழிவுக்குள்ளான தமிழ் இராச்சியம் பற்றிய கழிவிரக்கமும் இங்குப் புலனாகின்றது.

*திருமருவு யாழ்ப்பாண நாட்டையாண்ட*
*சிங்கையாரியன் குலத்தைத் தீங்கு செய்து*
*பெருமையொடு காலயுத்தி யானிமாதம்*
*பிலிப்பென்னும் பறங்கிகிளை யரசையாண்டு*
*குருநெறியும் மனுநெறியும் இல்லாதாக்கிக்*
*கொடுமைசெய்து நாற்பஃதாண் டளவும்போக்க*
*உருமருவு முதயகிரி இரவிபோல*
*உலாந்தேசு மன்னவன்வந் துதிப்பான்தானே.*

*உதிக்கின்ற விளம்பிதனி லானிமாதம்*
*ஒன்பதினில் உலகுபுகழ் உலாந்தேசண்ணல்*
*மதிக்கின்ற மனப்பறங்கி கிளையையெல்லாம்*
*வாள்வலியால் உயிர்தொலைத்து வாரியள்ளிக்*

*கொதிக்கின்ற தென்கடலில் அடையவீசிக்*
*கோட்டையொப்புக் கொண்டேற்றுக் கொடியுந்தூக்கித்*
*துதிக்கின்ற யாழ்ப்பாண நகரிதன்னிற்*
*சோதிதிகழ் மணிமகுடம் சூட்டினானே.*

*சூட்டியபின் நூற்றின்மேல் ஐயெட்டாண்டு*
*தொல்வினைபோல் வல்வினைகள் எல்லாஞ்செய்தே*
*ஈட்டுபொருள் உள்ளதெல்லாங் கவர்ந்துதேடி*
*இடர்விளைத்தி யாவரையும் இழிகோலாக்கிக்*
*கூட்டுறுமின் மினிவீழ்ந்தக் கினியின்மாய்ந்த*
*கொள்கையென அவன்குலமும் நாசமாக*
*நாட்டுபுகழ் யாழ்ப்பாண நாடெங்கெங்கும்*
*நன்மைபெறச் சைவநெறி நடக்குந்தானே.*[4]

இறுதிச் செய்யுளில் போர்த்துக்கேயரின் கொடுங்கோன்மைக்கு ஏற்பட்ட அழிவில் உண்டான மகிழ்ச்சியோடு புதிய ஆட்சியில் சுதேச சமயமான சைவத்துக்கு மறுவாழ்வு கிட்டும் என்ற நம்பிக்கையும் நன்கு புலனாகின்றதேயல்லாமல் ஒல்லாந்தர் மேலதான விசுவாசம் புலனாகின்றது என்று கொள்வதற்கில்லை.

எவ்வாறாயினும் இந்த அளவிலேனும் அந்நிய ஆட்சியாளர் பற்றிய குறிப்பு, அவர்கள் (ஒல்லாந்தர்) கேட்டுக் கொண்டதற்கமைய எழுதப்பட்ட 'யாழ்ப்பாண வைபவமாலை' ஒன்றிலேயே காணப்படுகின்றது. ஒல்லாந்த ஆட்சிக்காலத்தில் எழுந்த பிற நூல்கள் அந்த அந்நிய அரசு பற்றியோ அரசுத் தலைவன் பற்றியோ அக்கறை காட்டியதாகத் தெரியவில்லை. மாறாக, புலவர்கள் தம் பிராந்தியத்துக்கு அருகில் இருந்த சுதேச அரசுபற்றிய பெருமித உணர்வினைக் கொண்டவர்களாக இருந்திருக்கிறார்கள். அதாவது கண்டியரசன் மேலதான ஈடுபாடு அக்காலப் புலவர்களிடம் காணப்பட்டதை அவதானிக்க முடிகின்றது. அது அக்கால மக்கள் மத்தியில் நிலவிய சுதேச உணர்வுக்கான நல்லதொரு அடையாளமாகும். சின்னத்தம்பிப் புலவர், 'பறாளை விநாயகர் பள்ளு' என்ற தமது நூலொன்றிலே,

*கயல் வரைந்த துவசன் பணி நவ*
*கண்டி மன்னன் வரராச சிங்கன்*
*இயல்புடன் திருச் செங்கோல் நடாத்திய*
*ஈழமண்டல நாடெங்கள் நாடே*[5]

என்று தம் நாடு பற்றிய பெருமிதத்தை வெளிப்படுத்துகிறார். சின்னத்தம்பிப் புலவரின் காலத்திலே இலங்கைத் தீவில் தமிழறிந்தவர்களாய்ச் சுயாதிபத்தியம் செலுத்தியவர்கள் கண்டியரசர்கள் மாத்திரமே. ஆனால்

இப்பாடலிற் போற்றப்பெறும் கண்டியரசன் சின்னத்தம்பிப் புலவரின் சமகாலத்தவனல்லன். சிறிது முற்பட்ட காலத்தைச் சேர்ந்தவனான இராஜசிங்கனே இங்குப் போற்றப் பெறுகிறான். அவனது படைகள் இரு தடவை யாழ்ப்பாணத்தின்மீது படையெடுத்துச் சென்றதாகத் தெரிய வருகிறது. அவன் சைவாபிமானியாகவும் விளங்கியவன்; போர்த்துக்கேயர் நாட்டைவிட்டு அகல்வதற்குக் காரணமாய் அமைந்தவன். அவன் மேலதான நல்லபிப்பிராயம் சின்னத்தம்பிப் புலவர் காலம் வரையில் நீடித்ததுபோலும்.

கண்டியரசன் மேலதான ஈடுபாடு தீவின் வடக்கில் மாத்திரமன்றி கிழக்கிலும் காணப்பட்டது. திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களைப் புவியியல் அடிப்படையிலே எல்லைப்படுத்தும் வெருகலாற்றங்கரையிலே அமைந்த வெருகல் ஸ்ரீ சித்திரவேலாயுதர் மீது வீரக்கோன் முதலியார் என்பவராற் பாடப்பெற்ற 'வெருகல் ஸ்ரீ சித்திரவேலாயுதர் காதல்' என்னும் பிரபந்தத்திலும் அக்கண்டியரசன் மேலதான, சுதேச அடிப்படையிலான ஈடுபாட்டைக் காணலாம். புலவர், தம் நூலில் பல இடங்களில் இராஜசிங்கனைக் குறித்துள்ளார். அவற்றுள் ஓரிடத்தில் உவமை வகையால் இராஜசிங்கன் குறிப்பிடப்படுகின்றான். அந்த உவமைக்குள் இருக்கும் அரசியல் அவன் மேலதான அபிப்பிராயத்தின் தன்மையை உணர்த்தவல்லது. மகாவலிகங்கை, கொல்லும் புலிமுதலாம் விலங்கினத்தைத் தள்ளி உருட்டிச் செல்வதற்கு உவமையாக,

*எண்திசையும் ஏத்தும் இரவி குலத்துதித்தோன்*
*கண்டி நகராளும் கவின் உலவு ராசசிங்கன்*
*கூரிய கைவாளால் குவலயத்தில் ஒன்னலரைச்*
*சீருடனே தானரிந்து செங்குருதி ஆற்றினிடைச்*
*செல்ல விடுப்பது...*[6]

கையாளப்பட்டுள்ளது. ஒன்னலர் எனப்படுவோர் போர்த்துக்கேயராக இருத்தல் கூடும்.

> இலங்கை வரலாற்றிலே அதிக முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சிகள் அக்காலப் பகுதியில் நடைபெற்றன. போர்த்துக் கேயரின் ஆதிக்கம் அவன் (இராஜசிங்கன்) மேற்கொண்ட இராஜதந்திர நடவடிக்கைகளின் பயனாக இலங்கையில் ஒழிந்தது. இராஜசிங்கன் அவர்களை நாட்டினின்று அகற்றுவதற்கென்று உலாந்தாக்காரரின் உதவியை நாடிப் பெற்றான். போர்த்துக்கேயருக்கு எதிரான போர்களில் மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய பிராந்தியங்களிலுள்ள வன்னியர்கள் கணிசமான அளவிலே பங்குகொண்டமையுங்

குறிப்பிடற்குரியதாகும். இரண்டாம் இராஜசிங்கனின் ஆட்சியில் அப்பிராந்தியங்களிலுள்ள வன்னிபங்கள் கண்டி இராசதானியோடு மிக நெருங்கிய தொடர்பினைக் கொண்டிருந்தனர்.[7]

மட்டக்களப்பு தேசத்தின் தென்பகுதியிலும், கண்டியரசு மேலதான இத்தகையதொரு ஈடுபாடு மக்கள் மத்தியில் இருந்துள்ளது. திருக்கோவில் என்னும் ஊரைச் சார்ந்த பிராமணன் ஒருவன் கண்டியரசனிடம் பரிசுபெறும் நோக்கில் அங்குச் சென்று அவன்மேற் பாடிய 'வசந்தன் சிந்து' ஒன்று எமக்குக் கிடைக்கின்றது. அச்சிந்து கண்டியரசனைச் சோழ மன்னர் பரம்பரையில் - சிபிச்சக்கரவர்த்தி பரம்பரையில் - வந்தவனாகப் புகழ்ந்துரைக்கின்றது.[8] தமிழ்ச் சமூகத்தவரால் அக்கண்டியரசன் தமிழனாகவே கொள்ளப்பட்டிருக்கிறான் என்பது இங்கு உணரத்தக்கது.

அந்நிய அரசர் ஆதிக்கத்துக்கு உட்பட்டிருந்தவர்கள் தம் பிராந்தியத்தின்மேல் ஆதிக்கம் செலுத்தாத மன்னன் ஒருவனைப் புகழ்ந்துரைப்பதென்பது தமிழறியாதவரும் வேற்றுப்பண்பாட்டினருமான அந்நியர் ஆட்சியின் மேலான வெறுப்பை - அதை ஒத்துக் கொள்ள முடியாத மனப்பான்மையை உணர்த்துவதாகவே கொள்ளத்தக்கது. பாடிப் பரிசு பெறும் எண்ணமே இதற்கா.ன காரணம் என்று கீழ்த்தரமாக நினைப்பதற்கு இங்கு இடமில்லை. காரணம் யாழ்ப்பாணம் அளவெட்டியைச் சார்ந்தவரான கனகசபைப் புலவருக்கும் கண்டியரசர் பரம்பரைக்கும் இடையிலான உணர்வுப் பூர்வமான தொடர்பு எமக்குத் தெரிய வருவதேயாகும். ஆங்கிலேயர், கண்டியரசைக் கைப்பற்றியபின் வாழ்ந்தவர் கனகசபைப் புலவர். இவர் வைத்தியநாதத் தம்பிரான் மரபில் வந்த வேலுப்பிள்ளை என்பாரின் புதல்வர். இவர்கள் பரம்பரை வைத்திய பரம்பரை. அவ்வகையில் அப்பரம்பரை கண்டியரசர்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டது. உறைப்பான சைவப் பரம்பரையிலே வந்தவராயினும் கனகசபைப் புலவர் புரொட்டஸ்தாந்த கிறித்தவராகி விட்டார். அமெரிக்க மிஷனரிமாரின் அகராதிப் பணியில் (உவின்ஸ்லோ ஆங்கில - தமிழ் அகராதி) ஈடுபடு வதற்காகச் சென்னை சென்று சிறிது காலம் வாழ்ந்தவர். அக்காலத்தில் ஆங்கிலேயரிடம் பிடிபட்டு வேலூரில் சிறை வைக்கப்பட்ட கண்டியரசரின் சந்ததியைச் சார்ந்த அழகர் சாமியைச் சென்று கண்டு அவர் மேல் சிறியதொரு ஆற்றுப்படையும் பாடி மீண்டார் கனகசபைப் புலவர்.[9] கண்டியரசர் பரம்பரையைச் சார்ந்த ஒருவரை அவர் அரசபோகம் இழந்தவராய் உள்ள நிலையிலும் சென்று சந்திக்கும்படி செய்கின்ற தொடர்பு ஆச்சரியத்துக்குரியது. அந்த உளப்பூர்வமான தொடர்பினைச் சுதேசாபி மானத்தின் வெளிப்பாடு என்று கொள்வதில் தவறிருக்க முடியாது.

தமிழ்ப் புலவர்களிடம், கண்டியரசர்கள் மேலதான இவ்வாறான ஈடுபாட்டுணர்வைக் காணும் அதேவேளை, கண்டியையோ பிற பிரதேசங்களையோ சார்ந்த சிங்கள மக்கள் பற்றிய எந்தப் பேச்சையும் அவர்களின் ஆக்கங்களில் எம்மால் அவதானிக்கமுடியவில்லை. இலங்கைத் தீவில் சிங்கள தேசமும் தமிழ்த் தேசமும் வேறுவேறாகவே விளங்கின. இந்த உண்மையை உணர்த்தி நிற்கும் தெளிவான சான்றினை வரலாற்று மூலங்களிலிருந்து கண்டுகொள்ளலாம்.

19ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் யாழ்ப்பாணத்துக்குப் புகையிரதப் போக்குவரத்தைக் கொண்டுவரச் செய்வதற்குத் தமிழ் மக்கள் பலமுறை வேண்டுகோள் விடுத்த போதிலும் அது அரசாங்கத்தால் நிராகரிக்கப் பட்டே வந்தது. தமிழர்கள் விரக்தியடைந்தவர்களாய்,

> இலங்கை அரசாங்கம் இந்த அளவுக்குத் தமிழரை வெறுத்தால், ஏன் எம்மை இந்திய அரசின் நிர்வாகத்தின்கீழ் கொண்டுவருதற்கு ஒழுங்கு மேற்கொள்ளக் கூடாது.[10]

எனக் கேட்கத் துணிந்தார்கள். புகையிரத சேவையை அநுராதபுரம் வரையில் மட்டுப்படுத்தும் அராசங்கத்தின் முடிவினால் அச்சமுற்றார்கள்.

> யாழ்ப்பாணத்துக்குப் புகையிரதப் பாதை திறக்கப்படுமானால் சனநெரிசலினால் வசிப்பதற்கு இடமின்றி மிகவும் கஷ்டப்படும் இங்குள்ள மக்கள், பெரும் பரம்பளவிலுள்ள வன்னிப் பிரதேசங்களுக்குச் சென்று, புதிய பிரதேசங்களைப் பயிர்ச் செய்கைக்கு உட்படுத்தி, அவற்றை வளமுள்ள நிலங்களாக மாற்றி அவற்றினால் பெரும் நலனடைவர். இந்த நோக்கத் திற்காக நாம் யாழ்ப்பாணத்துக்கு ஒரு புகையிரத சேவையைக் கேட்கையில், அரசாங்கமோ அதனை மறுத்து, அதற்குப் பதிலாக அதை அனுராதபுரத்துக்கு வழங்குகின்றது. இது குருநாகல், அனுராதபுரம் ஆகிய இடங்களில் சிங்களவர் குடியேறி, வன்னியிலும், அங்குள்ள ஏனைய பிரதேசங் களிலுமுள்ள, எமக்குச் சொந்தமானதும் எமது தேசத்துக்கு உரியதுமாகிய வளத்தை அபகரிக்கும் நிலையை ஏற்படுத்துகின்றது. எமது நிலத்தைச் சிங்களவர் அபகரித்த பின்னர் எமக்குப் புகையிரதப் பாதையைத் தருவதில் என்ன பயன்?[11]

தமிழர்கள் தங்கள் பொருளாதார அபிவிருத்தி குறித்துச் சிந்திக்கத் தலைப்பட்ட வேளைகளிலும் தம் பிராந்தியங்களைச் சிங்கள தேசத்துக்கு வேறான தனித்தேசமாகவே கருதினார்கள்.

வன்னி பயிர்ச் செய்கைக்காகத் திறக்கப்படும்போது, ஏற்கெனவே நெற்பயிர்ச் செய்கைக்கு உட்பட்டிருந்த நிலங்கள் மாத்திரமன்றி, அயல் நிலங்களிலும் நெல் செய்கை பண்ணப் படும். அப்போது, அத்தியாவசியமான உணவுப் பொருட் களாகிய அரிசி, நெல் போன்றவற்றிற்கு அயல் நாடாகிய இந்தியாவின் கையை எதிர்பார்க்க வேண்டியதில்லை. நெற்பயிர்ச் செய்கைக்கு மாத்திரமன்றி, தெங்குப் பயிர்ச் செய்கைக்கும் நிலம் இருக்கும். அப்போது, மலைநாட்டில் தேயிலை, கோப்பிப் பயிர்ச் செய்கையினால் எவ்வாறு சிங்களவர்கள் செழிப்படைந்தனரோ, எமது நாடும் நெல், தென்னைப் பயிர்ச் செய்கையினால் செழிப்புறும்.[12]

இலங்கைத் தமிழர்கள் சிங்களத் தேசத்துக்கும் இந்தியத் தேசத்துக்கும் வேறான தனியொரு தேசமாகவே தங்கள் தேசத்தைக் கருதினார்கள் என்பதும் தேவையேற்படின் சிங்களத் தேசத்தைவிட இந்தியத் தேசத்தோடேயே தம்மை இணைத்துக் கொள்ள விரும்பினார்கள் என்பதும் மேற்படி மேற்கோள்களால் விளக்கமுறுகின்றன. இம்மனப்பான்மையின் இலக்கிய ரீதியான வெளிப்பாட்டுக்கு நல்ல அடையாளமாக விளங்குவன பாவலர் துரையப்பாபிள்ளையின்(1872-1929) யாழ்ப்பாண சுவதேசக் கும்மி(1907), எங்கள் தேசநிலை என்பன. சுதேச அடிப்படையிலான விவசாயம், கைத்தொழில், கூட்டுறவு, மொழி, கல்வி என்பனபற்றிப் பாவலர் அந்நூல்களில் பேசுகிறார். அவர் தேசியக் கவியான சுப்பிரமணிய பாரதிக்குப் பத்து ஆண்டுகளுக்கு முன்னர்த் தோன்றி அவர் இறந்த பின்பும் எட்டு ஆண்டுகள் வாழ்ந்தவர். இலக்கியத்துக்கான மொழி எளிமை பற்றிப் பாவலர் சிந்தித்துள்ளார் என்பதும் இவ்விடத்தில் மனங்கொள்ளத்தக்கது. அவர் சிந்தனை வருமாறு:

*தேசோப காரங் கருதியக் கும்மியைச்*
*செப்புகின் றேனாத லாலெவரும்*
*லேசாய் விளங்க இலகு தமிழில்*
*இயம்புவ தேநலம் சங்கமின்னே*

*மிக்க அரும்பதத் தோடு புணர்ச்சி*
*மிகுந்திடிற் கும்மி பொது சனங்கட்கு*
*எக்கால மும்விளங் காதத னால்நலம்*
*ஏது வருமடி சங்கமின்னே.*[13]

பாவலரின் கவித்துவம் சிலாகிக்கத்தக்கது அல்ல; எனினும் சாதாரணப் பொதுமக்கள் பற்றிய அவரது மொழி நோக்கு முன்னோடி

யானதென்பது கணிப்புக்குரியது. ஆங்கிலேயராட்சியில் உண்டான நவீனமயவாக்கத்தின் விளைவுகளாக இத்தேசிய நோக்கு முதலானவற்றைக் கொள்ளலாம். எது எவ்வாறாயினும் இங்கு நாம் வலியுறுத்த வேண்டியது நவீனக் காலத்துக்கு முந்திய ஈழத்துக் கவிதைகளிலெல்லாம் தமிழ்த் தேசம் என்ற எண்ணக்கருவேயன்றி இலங்கைத் தேசம் பற்றிய எண்ணம் சிறிதும் இருக்கவில்லை என்பதேயாம்.

'இலங்கைத் தேசியம்' என்று நோக்குகின்றபோது அக்கோட்பாட்டுக்கு பெரிதும் ஒத்துப் போகக் கூடிய சிந்தனைகளைக் கொண்டனவாக அமைபவை. முதுதமிழ்ப் புலவர் நல்லதம்பி, நவாலியூர் சோமசுந்தரப்புலவர், புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை, வித்துவான் வேந்தனார் முதலானோர் கவிதைகளே. இலங்கை என்பது சிங்களவர், தமிழர், சோனகர், பறங்கியர் என்னும் சாகியத்தாரைக் கொண்ட தேசம் என்பதையும் மத அடிப்படையில் பௌத்தர், இந்துக்கள், இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள் இங்கு வாழ்கின்றார்கள் என்பதையும் கூறி அவர்களுக்கிடையில் ஒற்றுமையையும் தேச அபிவிருத்தியையும் வலியுறுத்துவனவாக அவர்கள் கவிதைகள் அமைகின்றன. அவர்களின் இவ்வாறான கவிதைகளிலேயே வடக்குக் கிழக்குக்கு அப்பபற்பட்ட கொழும்பு, காலி, மாத்தறை, மத்திய மலைநாடு முதலாம் இடங்கள் பற்றிய பேச்சு முதன்முதலில் எழுகின்றது. இலங்கை நாட்டின் பல்வேறுபட்ட வளங்கள் பேசப்படுகின்றன. எனினும் அவர்களிடத்தே தமிழ்மொழி, தமிழினம், அதன் பண்பாடு என்பவற்றைச் சிலாகித்துப் பேசுகின்ற - தமிழ்த் தேசியத்துக்கு அடிப்படையான - ஒரு பண்பும் காணப்படுகின்றது. இலங்கைத் தேசம்பற்றிய இவர்களது நோக்குக்கு அக்காலச் சூழ்நிலையே வழிசமைத்தது. இலங்கை சுதந்திரம் பெற்ற காலத்தில் வாழ்ந்தவர்களாதலால் சுதந்திரம் கிடைத்தமை குறித்து நாட்டில் இடம்பெற்ற விழாக்களும் போட்டிகளும் இத்தகைய கவிதைகள் தோன்றுவதற்கு வழிசமைத்தன. 'மரதன் அஞ்சலோட்ட'க் கவிதைகள் இத்தகையனவே. இலங்கை சுதந்திரம் அடைந்தமை தொடர்பில் இவர்கள் கருத்துச் செலுத்தியிருந்தாலும் இவர்களிற் கணிசமானவர்களிடம் ஆங்கில அரசின் மேலதான ஓர் நல்லபிப்பிராயமும் இருந்தே வந்துள்ளது. அதனால் அவர்கள்,

*சீருறு சிங்களர் வீரத் தமிழரைச்*
*சீறி எதிர்த்த பறங்கியரும்*
*போருறும் ஒல்லாந்த மன்னரும் போய்விட*
*புண்ணிய ஆங்கிலர் ஆள்நாடு*[14]

என்றே இலங்கையைப் போற்றுகிறார்கள்.

இவ்வாறே இந்தியத் தேசியத்துக்கு ஆட்பட்ட ஒரு மனப்பான்மையும் புலனாகின்றது.

*பாரதம் என்றொரு சீர்பெறு நாடு இந்தப்*
*பார்க்கு மெய்ஞ்ஞானம் படைத்தது காண் – அந்தப்*
*பேரொளி நாட்டினை ஈழத்து மக்கள்*
*பிரித்து மொழிவது நன்றாமோ?*[15]

மொழி, இலக்கியம், மதம், பண்பாடு அனைத்தாலும் தம்மோடு ஒன்றுபட்ட இந்தியாவையே அவர்கள் மனப்பூர்வமாகத் தம் தாய் நாடாகக் கருதினார்கள். இந்தியச் சுதந்திரப் போராட்டத் தலைவர்களே இவர்களது ஆதர்ச புருஷர்களாகத் திகழ்ந்தார்கள்.

இலங்கைக்குப் பூரண விடுதலை வேண்டும் என்ற குரல் சிங்களவர் மத்தியில் இருந்து எழவில்லை தமிழர் மத்தியிலிருந்தே எழுந்தது. யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸே அக்கோரிக்கையை முதன்முதல் முன்வைத்தது.

> இந்தியாவின் காந்தியத் தேசியவாத இயக்கத்தின் பிரதிபலிப்பாகவே பிரதானமாக யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் தோற்றம் பெற்றது. இலங்கையில் யாழ்ப்பாணத் திலேயே இந்தியத் தேசிய எழுச்சியின் செல்வாக்கு மிகக் கூடுதலாகத் தாக்கம் செலுத்தியது. ........... இந்தியத் தேசிய இயக்கம் தொடர்பான ஆக்கங்களை, குறிப்பாக அதன் தலைவர்களின் உரைகளை வாசிப்பது ஒரு நாகரிகமாக இருந்தது. காந்தியச் சிந்தனையிலும் விழுமியங்களிலும் மூழ்கியிருந்த இளைஞர் காங்கிரஸ் உறுப்பினர்களின் சொல்லும் செயலும் அவர்களைப் பரந்த இயக்கத்தின் ஒரு பகுதியினராக எண்ணச் செய்தன. .................. இலங்கையில் தெளிந்த ஏகாதிபத்திய விரோத இயக்கம் எதுவும் இல்லாத நிலையில், நாட்டு மக்கள் மத்தியில் ஏகாதிபத்திய விரோத உணர்வலைகளை ஏற்படுத்தும் பணியினை இளைஞர் காங்கிரஸ் தனது கையில் எடுத்துக் கொண்டது. .................. ஓர் அகில இலங்கைத் தேசிய வாதத்தையே காங்கிரஸ் தனது தாரக மந்திரமாகக் கொண்டிருந்தது.[16]

பிரிவினையற்ற இலங்கையின் பூரண சுதந்திரத்தை அவாவி நின்ற யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸின் செல்வாக்குக்கு உட்பட்ட கவிஞர்களாகவும் மேற்படி கவிஞர்களைக் கொள்ளலாம். எனினும் நாடு சுதந்திரம் பெறுவதற்கு முன்பிருந்தே முளைவிட்டு வளரத்தொடங்கிய

இனமுரண்பாடானது சுதந்திரம் பெற்று ஒரு தசாப்தம் முடிவதற்கிடையில் 1956இல் தனிச் சிங்களச் சட்டம் நிறைவேற்றப்பட்டு 1958இல் தமிழருக்கெதிரான இனக்கலவரம் வெடித்தபின் பேரினவாதத்துக்கு எதிராக எழுந்த சமவுரிமை கோரும் தமிழர் போராட்டத்தை அரசாங்கம் அடக்க முற்பட்ட முறையால் அப்போராட்டம் மேலும் தீவிரம் அடைந்தது. இதையடுத்தே ஈழத்தில் தமிழ்த் தேசியத்தை வலியுறுத்துகின்ற இன எழுச்சிக் கவிதைகள் பெருமளவில் தோற்றம் பெற்றன. அவற்றில் சிங்கள இனத்துக்கெதிரான காழ்ப்புணர்வும் தமிழினம் பற்றிய பெருமித உணர்வும் தீவிரமாக வெளிப்பட்டன. இக்கவிதைகளுக்குப் பாரதிதாசன் பெரிதும் ஆதர்சமாக அமைந்தார்.

*கரையிலாத தமிழ் தெருக் கணிகை மாதென வெறிக்*
*கயவரின் தயவிலாக் காலிடைப் படுவதா?*
*முறையிலா வழிகளில் முரடர் எம்முடிவையே முயலநாம்*
*முடியோர் மூலையில் துயில்வதா?*
*பறையெலாம் அதிர்க, நம் பலமெலாம் திரள்கவே*
*பாதிநா டெங்களுக்காக என்றெழுகவே*[17]

என்றும்,

*புறப்படு புறப்படு புறப்படு*
*அறப்போர் செய்யப் புறப்படு*
*அணிவகுத்து நின்றிடு*
*இறக்க வேண்டி நேரினும்*
*ஈட்டிபோலப் புறப்படு! (புறப்படு)*
*வடக்கும் கிழக்கும் சேர்ந்தது*
*வலிவு பெற்று நிற்குது*
*அடக்கு முறையை அடக்கிட*
*ஆணும் பெண்ணும் சேர்ந்திடு*[18]

என்றும் அமைந்த இவைபோன்ற ஏராளமான கவிதைகள் தமிழர் பகுதியெங்கும் தமிழ்த் தேசியத்தை வலியுறுத்துவனவாய்த் தோன்றின. இப்படியான கவிதைகள் தோற்றம் பெறத் தொடங்கிய காலத்தில் முன்னர், செல்வாக்குப் பெற்றிருந்த இலங்கைத் தேசியத்துக்கும், கட்சி அரசியலுக்கும் ஆட்பட்டவர்களான சிலர்,

*இலங்கை எங்கள் நாடடா இனப்புரட்சி ஏனடா,*
*துலங்குகின்ற சுதந்திரம் சொல்லிப் பள்ளுப் பாடடா*

*ஆளும்சாதி நாமடா அன்புக் குரலிற் கூவடா*
*பாழும் வகுப்பு வாதிகள் படபடப்பைப் பாரடா*

*செல்வன் என்றும் ஏழை என்றும் செப்புகின்ற வகுப்பினி*
*இல்லைஈழ நாட்டில் என்றே எங்கும் சங்கம் ஊதடா*

*பிறப்புரிமை யாகஈழம் போற்றி வந்த தமிழரின்*
*சிறப்புரிமைத் தோழர் என்றும் சிங்களவர் தானடா*[19]

என்றவாறு தமிழர் போராட்டத்துக்கு எதிராகவும் இன ஐக்கியத்தை வற்புறுத்தியும் பாடவே செய்தனர். ஆனால் அவையெல்லாம் தமிழ்த் தேசியம் பற்றிய உணர்ச்சிக்கு முன்பாக உணர்சியற்ற சொற்கூட்டமாக மக்கள் மனதைக் கவராதவையாய்ப் போய்விட்டன. அரசியல் அமைப்பில் இலங்கை ஒரே நாடாக வரையப்பட்டிருந்தாலும், முற்போக்குவாதிகள் என்போர் என்னதான் இன ஐக்கியம் பேசினாலும், மக்கள் மனங்களில் அது இரண்டாகப் பிளவுண்டுபோனது. தமிழ்த் தரப்பின் அஹிம்சைப் போராட்டத்துக்கு எதிராக அரசாங்கங்கள் மேற்கொண்ட ஆயுத அடக்குமுறைகளும் தூண்டிவிட்ட கலவரங்களும் அரசியற் சூழ்ச்சிகளும் அப்போராட்டத்தை ஆயுதப்போராட்டமாக மாற்றியமைத்தன. அந்நிலையில் தமிழ்த் தேசியக் கவிதைகள் மேலும் தீவிரமுற்றன. ஆயுதப் போராட்டம் தீவிரமுற்ற நிலையில் அதன் பக்கவிளைவாக முஸ்லிம் தேசியமும் தலைதூக்கியது. தமிழ்ச் சூழலில் உள்ள முற்போக்கு வாதிகளே எப்போதும் இலங்கைத் தேசியத்தை - இன ஐக்கியத்தை வலியுறுத்தி வந்தார்கள். அதுவும் பெரும்பாலும் தம் பேச்சிலேதான். இலங்கைத் தேசியத்தை வற்புறுத்துவனவான குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய கவிதைகளை அவர்கள் படைத்ததாகத் தெரியவில்லை. தொடக்கக் காலத்தில் படைத்தவர்களும் பின்னாளில் தமிழ்த் தேசிய நீரோட்டத்தில் அடியுண்டு போனார்கள்.

## அடிக்குறிப்புகள்

1. முருகர் குணசிங்கம், இலங்கை தமிழ் தேசியவாதம் - அதன் ஆரம்ப தோற்றம் பற்றியதோர் ஆய்வு, எம்.வி.வெளியீடு, தென் அசியவியல் மையம், சிட்னி, 2003, ப. 49. (மேற்கோள்)
2. க. இரகுபரன்(ப.ஆ.), திருக்கரைசைப் புராணம், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு, 2009, ப. 37.
3. க.குணராசா (ப.ஆ.), யாழ்ப்பாண வைபமாலை, கமலம் பதிப்பகம், யாழ்ப்பாணம், 2001, ப. 1.
4. மேற்படி, ப. 73
5. க.இரகுபரன் (ப.ஆ.), நல்லூர் சின்னத்தம்பிப் புலவர் பிரபந்தங்கள், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு, 2005, ப. 254.
6. இ.வடிவேல் (உ.ஆ.), வெருகல் ஸ்ரீ சித்திரவேலாயுதர் காதல், இந்து சமய பண்பாட்டினலுவல்கள் திணைக்களம், கொழும்பு, 2000, பக். 38. 39.
7. சி.பத்மநாதன், ஈழத்து இலக்கியமும் வரலாறும், குமரன் புத்தக இல்லம், கொழும்பு, சென்னை, 2004, ப.158, 159.

8. சித்தி அமரசிங்கம் (ப.ஆ.), திருகோணமலை புலவர் வே.அகிலேசபிள்ளை நூற்றிரட்டு, சிந்தனை வட்டம் அச்சீட்டுப் பிரிவு, உடத்தலவின்னை, 2007, ப.94.

9. பொ.பூலோகசிங்கம் (ப.ஆ.), பாவலர் சரித்திர தீபகம் பகுதி - 2, கொழும்புத் தமிழ்ச்சங்கம், கொழும்பு, 2001, ப.77-83.

10. முருகர் குணசிங்கம், முற்குறித்தது, ப.238.

11. மேற்படி, ப.235, 239.

12. மேற்படி, ப.248, 249.

13. பாவலர் தெ.அ.துரையப்பாபிள்ளை, சிந்தனைச் சோலை, தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி நூற்றாண்டு விழா (2010, உலகப் பழையமாணவர் சங்கக் குழு வெளியீடு, யாழ்ப்பாணம், 2005, ப.19.

14. நவாலியூர் சோமசுந்தரப்புலவர்.

15. முதுதமிழ்ப் புலவர் மு.நல்லதம்பி.

16. சாந்தசீலன் கதிர்காமர், யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ், குமரன் புத்தக இல்லம், கொழும்பு, சென்னை, 2012, ப.140, 141.

17. தமிழ் எங்கள் ஆயுதம், முத்தமிழ் வெளியீடு, யாழ்ப்பாணம், 1962.

18. செ.யோகராசா, ஈழத்து நவீன கவிதை, குமரன் புத்தக இல்லம், கொழும்பு, சென்னை, 2007, ப.120.

19. வித்துவான் க.வேந்தனார், கவிதைப் பூம்மொழில், மித்திர வெளியீடு, (இரண்டாம் பதிப்பு), சென்னை, 2010, ப.124.

# இலங்கைத் தமிழ் நாட்டார் பாடல்களில் கவிகள் அறிமுகமும் தனித்துவமும்

திரு. எம்.ஐ.எம். ஹனிபா
*கலாநிதிப்பட்ட ஆய்வாளர்*
*கிழக்குப் பல்கலைக்கழகம்*
*செங்கல்லடி, இலங்கை*

## அறிமுகம்

இலங்கையின் வட கிழக்குப் பெருநிலத்திலும் மலையகம், புத்தளம் ஆகிய பிரதேசங்களிலும் தமிழ் பேசும் மக்கள் செறிந்து வாழ்கின்றனர். இப்பிரதேசங்களில் தமிழில் நாட்டார் பாடல்கள், நாட்டார் கதைகள், கதைப் பாடல்கள், நாட்டார் விடுகதைகள், பழமொழிகள் எனும் நாட்டாரிலக்கியக் கூறுகள் தோன்றியிருக்கின்றன. எனினும் நாட்டார் பாடல்களே அவற்றில் அதிகமானவையாகும். இலங்கையில் தோன்றியுள்ள நாட்டார் பாடல்களில் 'கவிகள்' எனப்படும் சிறப்பிலக்கிய வகையும் உண்டு. அக்கவிகள் பற்றிய அறிமுகத்தையும் தனித்துவத்தையும் விவரிப்பதாக இக்கட்டுரை அமைகிறது.

நாட்டார் பாடல்களில் 'கவி' எனும் சொல்லாட்சி உள்ளமை பற்றி டாக்டர் சண்முகசுந்தரம் தம் தமிழில் நாட்டுப்புறப் பாடல்கள் (2003) எனும் நூலில் குறிப்பிட்டிருப்பதானது நாட்டார் பாடல்களில் கவிகளும் ஒரு வகையாகக் கொள்ளப்பட வேண்டியவை என்பதற்குச் சிறந்த சான்றாகும்.

> நாட்டுப்புறப் பாடல்களில் இலக்கியம் என்ற சொல்லாட்சியினை யாங்கணும் தற்போது கண்டுகொள்ள இயலவில்லை. அதன் தொடர்பான பாடல் பாட்டு... கவி, வண்ணக் கவி, கீர்த்தனை, விருத்தம், தெம்மாங்கு, தமிழ் பாமாலை ஆகிய சொற்களை நாட்டுப்புறப் பாடல்களில் காணலாம் (ப. 14)

என்று கூறுவதை எடுத்துக் காட்டலாம். எனினும் தமிழக நாட்டுப்புறப் பாடல்ளில் 'கவிகள்' எனும் வகைப்பாடு உள்ளமைக்கானச் சான்றிதழ் தரப்படாமை அவதானிக்ககத் தக்கதாகும். ஈழத்தில் இத்தகைய கவிகள் 1500க்கும் மேலாக சேரிக்கப்பட்டிருப்பதும் ஆய்வு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதும், மேற்கொள்ளப்பட்டு வருவதும் நாட்டார் பாடல்களின் வகைப்பாட்டில் 'கவிகள்' ஈழத்துக்குரிய சிறப்பிலக்கியம் என்பதை சான்றுப் படுத்துகின்றன எனலாம்.

## கவிகளின் தொகுப்பு, ஆய்வு முயற்சிகள்

ஈழத்தில் நாட்டார் பாடல்களைத் தொகுத்தவர்களுள் பலர் கவிகளுக்கே முக்கியத்துவம் கொடுத்திருக்கின்றனர். தி. சதாசிவ ஐயரின்

"மட்டக்களப்பு வசந்தன் கவித்திரட்டு (1940)" எனும் நூலே அவ்வகையில் எழுந்த முதல் நூலாகும். சு.வித்தியானந்தனின் "மட்டக்களப்பு நாட்டுப் பாடல்கள் (1962)", "மன்னார் நாட்டுப் பாடல்கள் (1964)" எனும் இரு நூல்களிலும் 400 கவிகளுள் தொகுக்கப்பட்டிருப்பதோடு ஈழத்துப் பூராடனார் "கிழக்கிலங்கை மக்களின் எழுதா இலக்கியம் 2000" என்னும் நூலில் ஈழத்துப் பத்திரிகைகளில் வெளிவந்த கவிகளோடு அச்சில் வெளிவந்த 220 கவிகளையும் தொகுத்திருக்கின்றார். எம்.வை. உதுமான் சாஹிபு 600 கவிகளையும் (கிழக்கிலங்கை முஸ்லிம்களின் கிராமியக் கவிகள் 2006) ஏ.ஆர்.எம். சலீம் 200 கவிகளையும் (கிராமியக் கலை வடிவங்கள் 1995) தொகுத்திருக்கின்றனர்.

இத்தகைய தொகுப்புகளோடு எப்.எக்ஸ்.சி. நடராசா (ஈழத்து நாடோடிப் பாடல்கள் 1962), ஆ.மு. சரிபுத்தீன் (கனிந்த காதல் 1962), எஸ்.எச்.எம். ஜெமீல் (கிராமத்து இதயம்1995), எஸ்.முத்து மீரான் (கிழக்கிலங்கை கிராமிய கவியமுதம் 1991, கிழக்கிலங்கை முஸ்லிம்களின் நாட்டார் பாடல்கள் 1997) ஆகியோர் இலங்கை நாட்டார் கவிதைளைத் தொகுத்து அகப்பொருள் சார்ந்த விளக்கங்களை வழங்கியுள்ளனர். மு.இராமலிங்கத்தின் வட இலங்கையர் போற்றும் நாட்டுப் பாடல்கள், சி.வி. வேலுப்பிள்ளையின் மலை நாட்டு மக்கள் பாடல்கள் (1983) ஆகிய நூல்களிலும் கவிதைகள் தொகுக்கப்பட்டுள்ளனவாயினும் அவர்கள் கவி என்னும் சொல்லைக் கையாண்டிருக்கவில்லை.

ஈழத்து நாட்டார் பாடல்கள் பற்றிக் கலாநிதிப் பட்ட ஆய்வினை மேற்கொண்ட இ.பாலசுந்தரம் தம் நூலில் (ஈழத்து நாட்டார் பாடல்கள் (மட்டக்களப்பு மாவட்டம்) ஆய்வும் மதிப்பீடும் 1979) 400 கவிகள் வரை பின்னிணைப்பில் தொகுத்துள்ளார். ரமீஸ் அப்துல்லாவின் (கிழக்கிலங்கை கிராமியம் 2000)மருதூர் ஏ. மஜீதின் (தென்கிழக்குப் பிரதேசத்தாரின் நாட்டாரியல் 2007) எனும் நூல்களிலும் கவிகள் பற்றிய அவதானிப்புக்கள் உள்ளமைப் பற்றியும் குறிப்பிடலாம்.

### கவிகளின் வடிவம்

### வரியமைப்பு

நாட்டார் பாடல்களில் ஒரு வகையாக அமையும் கவிகள் நான்கு சீர்களால் அமைந்த இரண்டு அடிகளைக் கொண்டவை. அடி பிரித்து நான்கு வரிகளிலும் எழுதலாம். இரண்டாம் அல்லது ஆறாம் சீரின் பின்னால் தனிச் சொல் அமைந்திருக்கலாம். தனிச்சொல் பெறாமலும் சில கவிதைகள் பாடப்பட்டுள்ளன. தனிச் சொல்லுக்கு முன் இசையை நிறுத்தி அத் தனிச் சொல்லை உச்சரித்தப் பின் மீண்டும் இசையோடு பாடப்படும்.

"வடிவ அடிப்படையில் கவி ஈரடிகளையுடையது. உயர்தொனியில் (Hight Pitch) பாடப்படுவது" (இலங்கைத் தமிழ் நாட்டார் வழக்கியல் 1980:131) என எம்.ஏ. நுஃமான் குறிப்பிடுவதும் "இளம் பூரணார் பண்ணத்திப் பாடல்களுக்குக் காட்டிய உதாரணச் சொற்களாகிய,

*கொன்றை வேய்ந்த செல்வன் அடியை*
*என்று மேத்தித் தொழுவோம் நாமே*

என்னும் பாடல் கவியின் உருவத்தை ஒத்துள்ளது. இரண்டும் நான்கு சீர்களைக் கொண்ட ஈரடிகளைக் கொண்டவை" (மட்டக்களப்பு நாட்டாரியல் 2004:140) எனச் சிவசுப்பிரமணியம் கூறுவதும் "கவி என்று பார்க்கும் போது நான்கு அடிகளைக் கொண்டதாகவும் இந்நான்கு அடிகளில் மூன்றாவது அடியின் கடைசியில் ஒரு சொல் தனித்துநின்று உறவுமுறை கூறுவதோடு இசைநிரப்பும் சொல்லாகவும் பணிபுரியும் தன்மையை காணமுடிகின்றது" (தென்கிழக்கு முஸ்லிம் தேச்த்தாரின் நாட்டாரியல் 2007:23) என மருதூர் ஏ. மஜீத் கூறுவதும் கவி பற்றிய வரியமைப்பில் அவதானிக்கத்தக்க கூற்றுகளாகும்.

**ஈரடியில் அமைந்த கவிகள்**

*தாலிக்கொடியே – எண்டதாய்மாமன் ஈண்ட கண்டே*
*மாமிக்கொரு மகனே – மச்சான் மறுகுதல பண்ணாதகா*

*வந்து வந்து போகிறது வயிற்றெறிச்சலாயிருக்கு – என்ன*
*சந்திக்க வேணுமெண்டா சரிமதியம் வா ராசா*

**அடிபிரித்து நான்கடியில் அமைந்தவை**

*ஊரான ஊரிழந்து*
*உசந்தகறி சோறிழந்து*
*இறைச்செலும்புமில்லாமல் – மீரான்*
*ஏன் கிடக்கான் தீவினிலே*

*காக்கொத்தரிசாம்*
*கண்ணுமுந்த செத்தமீனாம்*
*போக்கத்த மீரானுக்கு – இந்தப்*
*பொண்ணுமாகா வேணுமாம்*

**இரண்டாம் சீரின்பின்னால் தனிச்சொல்**

*மணடேருக்கந்தா – என்ற*
*மனக்கவலை தீர்ப்பாயென்றால்*

*சாகுமளவுமுன்ன*
*சாமியென்று கையெடுப்பன்*

*உனக்கும் கூவவில்லை – உன்ர*
*கள்ளனுக்கும் கூவவில்லை*
*குமருப் பெண்களுக்குக்*
*குடமெடுக்கக் கூவுறண்டி*

நான்காம் சீரின் பின்னால் தனிச்சொல்

*கோடி – உடுத்துக்*
*குளத்தோரம் போறபெண்ணே – உன்ர*
*கோடிப் புடவையிலே*
*கொக்கு ரத்தம் பட்டதென்ன*

*வந்துவழி பண்ணிடுங்கோ*
*வம்புக்கிடம் வையாதீங்கோ – இந்தப்*
*பூத்தமரம் காய்க்குமென்றால்*
*பூவலொன்றே கைதருகும்.*

ஆறாம் சீரின் பின்னால் தனிச்சொல்

*மாலை விளக்கெரிய*
*மணவாளன் சோறுதின்னப்*
*பாலன் விளையாட – ஒரு*
*பாக்கியம்தா ஆண்டவனே*

*அல்லாஹ் இருக்கான்*
*ஆகிறத்து பாம்பிருக்கு*
*கடிக்குங்கா மாமி – என்ன*
*கண்குறையக் கண்டாயென்றால்*

தனிச்சொல் பெறாதும் கவிகள் அமையும்

*கடலால் பொழுதெழும்பி*
*காலைவரும் வேளையிலே*
*மடையால் உருப்பண்ணி*
*வரவைப்பேன் காலடிக்கு*

*அக்கரைப்பற்றோ*
*அவருங் கரவாகூரோ*
*சாய்ந்த மருதூரில்*
*சாதிசனம் இல்லையாமோ*

நான்கு வரிகளைக் கொண்ட கவியின் இரண்டாம் வரியில் நிபந்தனைப் பெயரெச்சம் அமைய, பின்னைய வரிகள் அதனோடு இயைந்த செயற்பாட்டை வெளிப்படுத்துவதும் உண்டு.

*தெத்துக் கொறட்ட*
*சொன்னனென்றால் இரண்டுகதை*
*பொண்ணுணர்வு இல்லாம – நீ*
*போய்ப்படுப்பாய் மூலையில*

இங்குச் சொன்னனென்றால் எனும் நிபந்தனையெச்சப் பயன் பாட்டைக் காணலாம்.

சில கவிகளில் நான்காம் வரியில் அமையும் வினைமுற்று 'கா' பெறுவதும் பெயர்ச்சொல் 'ஏ' பெறுவதும் அவதானிக்கப்படுகிறது.

*மாமி வளர்த்த மாம்புள்ளிச் சாவலொண்டு*
*தேத்தாக்கு கீழிருந்து சிறகுதட்டிக் கூவுதுகா*

*நெஞ்சிலே பாரம் நினைச்சால் பெருந்துயரம் – என்ற*
*கண்ணால்ஓடினத ஆரும் கண்டதுண்டோ கிளியே*

### கவிகளின் ஓசைப்பாங்கு

கவிகள் தனித்தன்மை வாய்ந்த ஓசைப்பாங்கினை உடையவை. உயர் தொனியில் பாடப்படுபவை. வெளிப்படுத்தப்படுகின்ற உணர்வு நிலைக்கேற்ப இத்தகைய ஓசை விவரணமாகும். இதனையே சண்முகம் சிவலிங்கமும்,

> 'கவி இரண்டு அடிகளைக் கொண்ட பாவடிவம் (அடிபிரித்து, வரிஒடித்து எழுதுவது வேறு விஷயம்) ஒவ்வொரு அடியும் ஈரசை அல்லது மூவசைகளால் நான்கு சீர்களைக் கொண்டிருக்கும். சிலவேளை தனிச்சொல்லும் கூடிவரும். இவை கவிக்குரிய மரபார்ந்த உரையாடல் பாணிக்கு உகந்த இராகத்தோடு இசைக்கப்படும். அந்த இராகம் கவியின் அடிதோறும் முதல் இரு சீர்களில் ஆரோகணமாகிக் கடைசி இரண்டு சீர்களில் அவரோகணமாகும். ஆரோகணத்தின் ஏற்றமும் அவரோகணத்தின் இறக்கமும் கவிவடிவத்திற்குப் பொலிவையும் மெருகையும் கொடுக்கின்றன
>
> (நயவுரை, பூன் நிமிர்கிறது 2008:24)

எனக் கூறுகிறார்.

## கவிகளின் அழகியல் கூறுகள்

### எதுகை,மோனைப் பயன்பாடு

பாடல்களின் ஓசையை முறைப்படுத்துவதில் எதுகை, மோனை ஆகியவை முக்கியம் பெறுகின்ற வகையில் நாட்டார் கவிகளிலும் ஓசையை வளப்படுத்துவதில் எதுகை, மோனையின் பயன்பாடு முக்கியமாகின்றது. எதுகை, மோனை பற்றிய விதி பற்றிக் கிராமியக் கவிஞர்கள் அறியாத போதும் இயல்பாகவே அவர்களது கவிகளில் இவை அமைவு பெற்றிருக் கின்றமை குறிப்பிடத்தக்கது. மோனைப் பயன்பாடே அதிகப் பாடல்களில் காணப்படுகின்றன.

மோனை : வாழைப்பழமே வலது கையிற் சர்க்கரையே
ஏலம் கிராம்பே- உன்ன என்ன சொல்லிக்
கூப்பிடுவேன்

எதுகை மோனை : நடையழகி நளினச் சித்திர வாயழகி
இடையழகி கதிஜா- ஒரு இன்பமுத்தந் தாகிளியே

எதுகை : ஆசைக் கிளியே என்ற ஆசியத்தும்மாவே
ஓசைக் குரலால - உங்க உம்மாவ கூப்பிடுகா

### அணிப்பயன்பாடு

கவிகளில் உவமை, உருவக அணிகளின் பயன்பாட்டினைக் காணமுடியும்; எனினும் பெரும்பான்மையாக உவமை அணியின் பயன்பாட்டையே அவதானிக்க முடிகின்றது. கிராமத்து மண்ணோடு கலந்து மணம் வீசும் உவமானங்களின் பயன்பாட்டினை இக் கவிகளில் காணலாம்.

*கொச்சிப்பழத்த குறுக்கால அரிஞ்சதுபோல*
*பச்சவடச்சேல உன்ர பால்முலைக்கு ஏற்றதுகா*

*போட்டாவரம்பால் புறாநடந்து போறதுபோல்*
*நாட்டாருக்கெல்லாம் நடவரம்போ என்வரம்பு*

*நாணற்பூப்போல நரச்ச கிழவனுக்கு*
*கும்மாளம் பூப்போல குமர்தானோ வாழுறது*

### கற்பனை வளம்

கவிகளில் புதுமையான கற்பனைகளின் பயன்பாட்டை அவதானிக்க முடியும்.

**கவிகளின் பாடுபொருள்**

**காதல்**

வானத்து வெள்ளியோ மலைநாட்டுச் சாம்பிறாணியோ
சீனத்துக்கண்ணாடியோ என் சீமாட்டி உன்னழகு

பூசினசெம்பே புழுதி படா வெண்கலமே
ஆசைக்கிளி விளக்கே உன்ன ஆருவச்சி ஆழுவாரோ

1. பெண்கள் பாடுவன
2. ஆண்கள் பாடுவன
3. ஆணும் பெண்ணும் காதலன் காதலியாகப் பாடுவன

எனும் அமைப்பிற்குள் அடக்கத்தக்கனவாகின்றன. வகைமாதிரிக்குச் சில கவிதைகள் தரப்படுகின்றன.

1. நினைப்பேன் விழிப்பேன்
நித்திரையை நானலைப்பேன்
படுப்பேன் எழுந்திருப்பேன் – எனக்குப்
பாயுமிடம் தாறதில்ல – பெண்

2. கண்டுக்கிளியாருக்கு கண்வருத்தம் எண்டு சொல்லி
குண்டு மணிதேடி நான் குந்தாத பத்தயில்ல – ஆண்

3. ஓடுகிற தண்ணீரில உலாவிவரும் மீனதுபோல்
நாடி வந்தேன் பெண்ணே நாலாறு மாதமாய்

நாடினால் குத்தமில்ல நானுனக்குப்
பொண்ணுமில்ல பாவிமகனே பழிகள் வரப்போகுதடா
– ஆண் + பெண்

காதல் சார்ந்த இத்தகைய கவிதைகள் உண்மையான காதலர்களால் பாடப்பட்டவையும், புனைவுகளாக அமைந்தமையுமாகக் காணப்படுகின்றன. இக்கவிகளின் இலங்கை நாட்டாரியல் முயற்சிகளில் ஈடுபாடு கொண்ட M.A., நுஃமான்,

> கிழக்கிலங்கை முஸ்லிம்களின் மத்தியில் வழங்கும் நாட்டார் இலக்கியத்தில் காதல் பாடல்கள் என்று வழங்கப்படுபவை உண்மை காதலர்களால் பாடப்படுபவை அல்ல என்பதும் அவை வேளாண்மைத் தொழிலுடன் தொடர்புடையவை என்பதும் ஆண்களால் பாவனை முறையில் பாடப்படுபவை

> என்பதும் ஆண்களால் பாடப்பட்ட புனைவியற்பாங்கான இலக்கியங்கள் என்பதும் தெளிவாகின்றன
>
> (தமிழ் நாட்டார் வழக்காற்றில் 1995:27)

எனக் கூறுவதும் இ.பாலசுந்தரம்,

> 'இன்று வழக்கிலுள்ள காதற் பாடல்கள் யாவும் பாவனையடிப்படையில் பாடப்படுகின்றன என்பது தேற்றமாகும்'
>
> (ஈழத்து நாட்டார் பாடல்கள் 1979:352)

எனக் கூறும் நாட்டார் கவிகளிலுள்ள புனைவியற் பாங்கினைத் தெளிவுபடுத்துகின்றன.

*கச்சான் அடிக்க கயல்மீன் குதிபாய*
*மச்சானுக்கெண்டு வளத்தன் குரும்பமுல*

*கிட்டப்படுப்பன் கிண்ணிமுல நான் தருவன்*
*தாகம் தெளியவைப்பன் – நீ தம்பியல்லோ ஒரு முறைக்கு*

*படுக்கப் பாய்தருவன் படுத்துளத்த மெத்த தருவன்*
*கொஞ்ச முகந்தருவன் – ஒரு குழந்தை வந்தால் என்ன செய்வன்*

எனப் பெண் கூற்றாக வரும் கவிகள் பெண்கள் பாடியவையல்ல. அவை பாலுணர்வு கொண்ட ஆண்களால் பாடப்பட்ட புனைவுகளே எனக் கூறிவிடலாம்.

பொதுவாகப் பாலுணர்வு சார்ந்த பாடல்கள் கற்பனைத் தன்மையான புனைவுகள் என்ற முடிவுக்கு வரலாம். எனினும் காதல் கவிகள் எனப்படும் எல்லாக் கவிகளையும் அவ்விதிக்குள் அடக்கி ஒதுக்கிவிட முடியாது. ஆணோ பெண்ணோ விரும்பியவரை மனதில் எண்ணி அவரது அழகைப் புனைந்து பாடும் சந்தர்ப்பங்களிலும் காதல் வாழ்வில் ஏற்பட்ட தடங்கல்கள், இடர்ப்பாடுகள் குறித்துப் பாடும் சந்தர்ப்பங்களிலும் பிரிவு நேர்ந்த போது ஏற்பட்ட துன்பியல் அனுபவங்களை வெளிப்படுத்துவதுமாக வரும் சந்தர்ப்பங்களிலும் பாடப்பட்டிருக்கின்ற கவிகள் புனைவுகளாகவன்றி உண்மையான வெளிப்பாடுகளே எனக்கூறுவது பொருந்தும். அவற்றுள் உண்மைக் காதலர்களால் பாடப்பட்ட காதற் கவிகள் ஏராளம் உள்ளன. அவை ஆண் கூற்றாகவும் பெண் கூற்றாகவும் அமைந்திருக்கின்றன.

நினைந்துரைத்துப் பாடுதல்

*கட்டக் கழுத்தழகும்*
*கமுகம் பூப்பல்லழகும்*

*மையிட்ட கண்ணழகும் – மச்சி*
*மாறுதில்ல என் மனசைஉட்டு*

*நித்திரைக் கண்ணிலயும்*
*நினைவிலயும் தோணுறது*
*கலிமா விரலும் மச்சான் – ஒங்க*
*கல்பதிச்ச மோதிரமும்*

*நடவாக் கிடாவும்*
*நானுமிந்தப் பாடுபட்டால்*
*காயாப் புழுங்கலும் – என்ர*
*கண்மணியும் என்ன பாடோ*

காதலில் இடர்ப்பாடுகள்

*சில்லூரழுகும் செய்த்தான்*
*குடியிருக்கும் அந்தக்*
*காடுவனராச்சியத்தில் – கண்மணியார்*
*காசுழைக்கப் போனதுமா*

*வாவென்றழைப்பேன் வாசலிலே பாய்தருவேன்*
*வாப்பா அறிஞ்சாரெண்டா வாளெடுத்து வீசிடுவார்*

பிரிவுத் துயர்

*மருக்காலம் சோலையில மறுக்கிவிட்ட மானது போல் – மனம்*
*தரிக்குதில்ல ராசா ஒங்குட தங்க முகம் காணாமல்*

*அஞ்சிவெள்ளி அஞ்சிதிங்கள் ஐயாறு முப்பது நாள் நான்*
*மறுபிறயும் கண்டேன் அவர்ர மறுமொழியக் காணஇல்ல*

தொழில்

மலையும் கடலும் வயலும் இலங்கைக் கிராமத்து மக்களின் பிரதான தொழிற்களங்களாகின. தத்தம் பிரதேச இயல்புகளுக்கேற்பத் தொழில்களில் ஈடுபட்ட இம்மக்கள் தம் தொழிலுக்கு இயைந்த வகையிலான கவிகளையும் பாடல்களையும் பாடியுள்ளனர். இவ்வகையில் "கவிகள்" பெருமளவில் விவசாய சமூகத்தவரால் பாடப்பட்டிருக்கின்றமை முக்கியமான விடயமாகும். வயல்மிதித்தல், காவலிருத்தல், ஏற்றம் இறைத்தல், அருவி வெட்டுதல், கதிர் பொறுக்குதல் எனவரும் பல சந்தர்ப்பங்களிலும் கவிகள் பாடப் பட்டுள்ளன.

**வயல் மிதிப்பு**

*நடவாக்கிடாவும் நானும் இந்தப் பாடுபட்டால்*
*காயாப்புழுங்கலும் என் கண்மணியும் என்னபாடோ*

**காவற் பரணில்**

*காவற் பரணில் கண்ணுறங்கும் வேளையிலே கண்ணானமச்சி வந்து*

*காலூரண்டக் கனவு கண்டேன்*

**ஏற்றம் இறைத்தல்**

*தண்ணி இறைச்சி தலைவலியு மாகுதடா*
*கண்ணச் சுழத்திக் கடும்பசி வருகுதண்ணே*

**அருவி வெட்டுதல்**

*நாலுமுழக்கம்பால நாயளந்த வெள்ளாம*
*பகலெல்லாம் வெட்டி என்ற பழுவெலும்பு நோகுதுகா*

**பெண்கள் கதிர்பொறுக்குதல்**

*கதிரு பொறக்கி காலமெல்லாம் வாழ்ந்தாலும்*
*மானமங்கிடுதென்டா நான் மறுகணமே மாஞ்சிடுவன்*

இவ்வாறே மலையகப் பெருந்தோட்டங்களில் வேலை செய்யும் மக்களிடையேயும் கவிகள் பல உருவாகியுள்ளன. இக்கவிகள் அம்மக்களின் தொழிற் களம் சார்ந்த சமூக, உள நிலை பற்றிய வெளிப்பாடுகளாக அமைவதைக் காணலாம்.

*கட்டத் தொரே பட்டியிலே இடுப்பிலேயும் சாயச் சீலை*
*கட்டகுட்டி ரெண்டு பேரு இருபுறமும் கோப்பி மரம்*
*கிட்ட கிட்ட நெரே புடிச்சி அவசரமா புடுங்கிறாளே*
*சிட்டா பறக்குறாளே அடுத்த வீட்டு ராமாயி*

**சமூகம்**

சமூக அமைப்பில் ஏழ்மைப்பட்ட மக்களின் வெவ்வேறு வகைப் பிரச்சினைகள் பற்றியதாகவும் பலகவிகள் உள்ளன. இவை பெரும்பாலும் பெண்களினால் பாடப்பட்டவை. வறுமை முதலிய காரணங்களால் அவர்கள் எதிர்கொள்ளும் துயரங்கள், குடும்ப நெரிசல்கள், அன்றாட வாழ்வியற் பிரச்சினைகள் பற்றிய வெளிப்பாடுகளாக அமைகின்றன.

**கணவனால் வஞ்சிக்கப்படுதல்**

*நன்றி மறந்தார்*
*நகமிருக்கச் சதையெடுத்தார்*
*கழுத்திலேயும் கத்திவைத்தார் – இனி ஓர்*
*காலமுந்தான் பேச்சிருக்கோ*

*மலடி எண்டு சொல்லி*
*வசைபேசிப் போட்டாரு*
*படைத்த றகுமான்மாமி – என்னப்*
*பதராக்கிப் போட்டானாக்கும்*

**சீதனம்**

*தோட்டம் துரவுமில்ல தொகையான காசுமில்ல*
*சீதனமாய்க் கொடுத்து மகளே சீராக மணமுடிக்க*

*கல்லூரடும் இல்ல கல்கிணறும் இல்ல*
*வாப்பாவும் இல்ல நான் வாழ்றதும் திட்டமில்ல*

பொருந்தாமணம்

நையாண்டி / கேலியாக வெவ்வேறு சந்தர்ப்பங்களிலும் பாடிய கவிகள் இவ்வகைக்குள் அடங்கும்.

*காக்கொத்தரிசாம் நாவற்பழத்திலயும்*
*கண்ணுமுந்த செத்தமீனாம் நற்காசாம் பூவிலையும்*
*போக்கத்த மீரானுக்கு காக இறகுலயும் – மச்சி*
*பொண்ணாகா வேணுமாம் கடுங்கறுப்பு மாமிமகன்*

வறுமை

*சம்புக் களப்பில் தளச்ச வள்ளல் பிச்சிவந்து*
*கறியாக்கித்திண்டு நாங்க களதீர்ந்தம் வன்னிமையே*

பிரார்த்தனை

கிராமத்து மக்கள் தங்கள் வெவ்வேறு தேவைகளையும் கடவுளிடம் முறையிட்டு / பிரார்த்தித்துப் பாடுவதுண்டு. இத்தகைய கவிகளை இவ்வகையில் சேர்க்கலாம்.

*குத்துவிளக்கெரிய குமரன் குரான்ஓத*
*பாலன் விளையாட ஒருபாக்கியம்தா ஆண்டவனே*

*மண்டூருக் கந்தா மனக்கவலை தீர்ப்பாயென்றால்*
*சாகுமளவுமுன்னை சாமியென்று கையெடுப்பேன்*

**சமயம்**

இலங்கையில் தமிழ் பேசும் மக்கள் எனும் போது முஸ்லிம்களும் தமிழர்களும்அடங்குவர். முஸ்லிம்கள் இஸ்லாம் சமயத்தையும் அதன் வழி அல்லாஹ்வையும் வழிபடுவர் தமிழர்கள் சிவன், திருமால், முருகன், பிள்ளையார் முதலிய கடவுளர்களை வணங்குவர். இவை பற்றிய பாடல்கள் இவ்வகையில் அடங்கும்.

*ஓதிப்படிச்சி ஊர்புகழ வாழ்ந்தாலும்*
*ஏழைக்குச் செய்ததீங்க அல்லாஹ் எள்ளளவும் ஏற்கமாட்டான்*

*ஓதக்குரான் இருக்க ஒழுஎடுக்க செம்பிருக்க*
*வேதமிருக்க நாங்க வேறு ஹறாம் தின்னலாமோ*

திட்டு

ஏதோ ஒரு செயற்பாட்டால் மனம் நொந்து போனவர் இத்தகைய கவிகளைப் பாடியிருக்கக் காணலாம்.

*வண்டில் குடையடிக்க மாடு ரெண்டும் போர்பிடிக்க*
*அவனக் கரடிசப்ப – நீ கிருபை செய்வாய் ஆண்டவனே*

*வெள்ளிஎரிஞ்சி விளக்கடியில் வீழ்ந்தது போல்*
*உன்ர தலதெறிச்சி என்ர தலவாசல் வந்து விழும்*

முடிவுரை

இலங்கையில் எழுந்துள்ள தமிழ் நாட்டார்பாடல் வகைகளுள் கவிகள் தனித்தன்மை வாய்ந்தன. அடிவரையறை, தனித்துவமான ஓசைப்பாங்கு என்பவற்றோடு நாட்டார் பாடல்களின் அழகியல் கூறுகளைத் தம்மகத்தே கொண்டவை. மக்கள் வாழ்வில் வெவ்வேறு நிலைகளையும் வெளிப் படுத்துவன. காதல் பற்றிய கவிகள் கற்பனைப் புனைவுகளாக அமைவதும் (உண்மைக் காதலர்களால் பாடப்பட்டவையும் உள்ளன). தொழில், சமூகநிலை சார்ந்த கவிகள் உண்மையான வாழ்வியலை வெளிப்படுத்து வதும் கவிகளின் தனித்தன்மைக்குச் சான்றுகளாகும். இலங்கைக்கே உரிய சிறப்பு இலக்கியமாக அமையும் கவிகளை ஈழத்தறிஞர் வ. சிவ சுப்பிரமணியம்,

> தமிழ்நாட்டார் இடை வழங்கும் தெம்மாங்குப்பாடல்கள் மட்டக்களப்புக் கவிகளை ஒத்தவை கவிகள் மட்டக்களப்பு நாட்டாருக்கே உரித்தான தனித்துவம் வாய்ந்த பாடல்களாகும்
> (மட்டக்களப்பு நாட்டாரியல் 2004 : 140)

எனக் கூறித் தமிழகத்துத் தெம்மாங்குப்பாடல்களோடு இணைத்துக் காட்ட முயற்றுள்ளார் எனினும் தமிழகத்துத் தெம்மாங்குப் பாடல்களுக்கும் இலங்கைத் தமிழ் நாட்டார் கவிகளுக்குமிடையே உள்ள வேறுபட்ட தன்மைகளைக் கருத்திற்கொள்ளல் அவசியமாகும்.

## துணை நூல்கள்

01. வித்தியானந்தன் சு., மட்டக்களப்பு நாட்டுப் பாடல், 1962.

02. நடராசா எப்எக்சி, ஈழத்து நாடோடிப் பாடல்கள், 1962.

03. பாலசுந்தரம் இ, ஈழத்து நாட்டார் பாடல்கள் (மட்டக்களப்பு மாவட்டம்) ஆய்வும் மதிப்பீடும், 1979.

04. ஜெமீல் எஸ். எச்.எம்., கிராமத்து இதயம், 1995.

05. முத்துமீரான், எஸ்., கிழக்கிலங்கை முஸ்லிம்களின் கிராமியக் கவியமுதம், 1991.

06. முத்துமீர;ான், எஸ்., கிழக்கிலங்கை முஸ்லிம்களின் நாட்டார் பாடல்கள் 1997.

07. சரிபுத்தீன், ஆ.மு., கனிந்த காதல் 1985.

08. றமீஸ் அப்துல்லா, கிழக்கிலங்கை கிராமியம், 2001.

09. உதுமான் சாஹிபு, எம்.வை., கிழக்கிலங்கை முஸ்லிம் கிராமியக் கவிகள், 2006.

10. ஈழத்துப்பூராடனார், கிழக்கிலங்கை மக்களின் எழுதா இலக்கியங்கள், 2000.

11. சிவசுப்பிரமணியம், வ., மட்டக்களப்பு நாட்டாரியல், 2004.

12. மருதூர் ஏ. மஜீத், தென்கிழக்குத் தேசத்தாரின் நாட்டாரியல், 2007.

13. அனஸ், எஸ். எல்.எம்., முஸ்லிம் நாட்டாரியல், 2008.

14. கந்தையா, வீ.சி., மட்டக்களப்புத் தமிழகம், 1964,

15. இராமலிங்கம், மு., வட இலங்கையர் போற்றும் நாட்டார் பாடல்கள், 1961.

16. வேலுப்பிள்ளை, சி.வி., மலைநாட்டு மக்கள் பாடல்கள், 1983.

17. வானமாமலை, ந., தமிழர் நாட்டுப் பாடல்கள், 1976.

18. கனகசபை, த., நாட்டுப்புறப்பாடல்களில் அழகியல் கட்டமைவு, 2004.

19. லூர்து, தே., நாட்டார் வழக்காற்றியல் சில அடிப்படைகள், 1997.

20. சண்முக சுந்தரம், தமிழில் நாட்டுப்புறப் பாடல்கள்.

21. மனோகரன், இரா., கம்பம் பள்ளத்தாக்கு தெம்மாங்குப் பாடல்கள் 100, 2003.

22. இளங்கோவன், மு., நாட்டுப்புறவியல், 2010.

## கட்டுரைத் தொகுப்புகள்

1. தமிழ் நாட்டார் வழக்காற்றியல் கட்டுரைத் தொகுப்பு, 1995.
2. கிழக்கிலங்கை தமிழ்பேசும் மக்களின் நாட்டார் வழக்காறுகள், 2009.
3. வாய்மொழி இலக்கிய மரபுகள் வரலாற்று மூலங்களாக, 2004.
4. இலங்கைத் தமிழ் நாட்டார் வழக்காற்றியல், 1980.

# இலங்கையில் கி.பி. 18ஆம் நூற்றாண்டுவரை எழுந்த பள்ளு இலக்கியங்கள் குறித்த சிறப்பு ஆய்வு

திருமதி றூபி வலன்ரீனா பிரான்சிஸ்
*முதுநிலை விரிவுரையாளர்*
மொழித்துறை
*கிழக்குப் பல்கலைக்கழகம்*
இலங்கை

## *அறிமுகம்*

தமிழ் இலக்கிய வரலாற்றில் பொதுமக்களையும் உள்ளடக்கிய வகையில் இலக்கியங்கள் படைக்கப்பட்டமைக்குப் பள்ளு, குறவஞ்சி, நொண்டிநாடகம் முதலான இலக்கிய வகைகளை உதாரணமாகக் கூறலாம். பள்ளுப்பிரபந்தம் பாட்டுடைத் தலைவரான கடவுளரையோ, சமய அல்லது சமூகத் தலைவர்களையோ புகழ்ந்து பாடுவதை நோக்கமாகக் கொண்டிருந்தாலும் வேளாண்மைத் தொழிலில் ஈடுபடும் 'பள்ளர்' என்னும் சமூகத்தினரைச் சிறப்பாகச் சித்திரித்துள்ள வகையில் முக்கியத்துவம் பெறுகின்றது. 'பள்' என்பது பள்ளர் என்னும் மக்கள் பிரிவினரை மட்டுமன்றி இம்மக்களைப் பாத்திரங்களாகக் கொண்ட நாடகத் தன்மை வாய்ந்த சிற்றிலக்கியத்தையும், காளி முதலானதெய்வங்களுக்குப் பலி கொடுக்கும் காலத்துப் பாடப்படும் பண் வகையையும் குறிக்குமென்பதைத் தமிழ்ப்பேரகராதி மூலம் அறியலாம்.

பள்ளு இலக்கியத்தின் தோற்றம் பற்றிக் கூறும் இலக்கிய ஆய்வாளர்கள் தொல்காப்பியத்திற் குறிப்பிடப்படும் வாகைத் திணைத் துறைகளுள் அடங்கும் ஏரோர் களவழி, தேரோர் களவழி ஆகிய துறைகள் குறித்துக் கவனத்திற்குட்படுத்துவர். ஏர்க்களத்தில்உழவுத்தொழில் செய்வோர் செயல்களைக் கிணைப்பொருநர் பாராட்டிப் பாடுவது ஏரோர் களவழியாகவும், போர்க்களத்தில் மன்னனின் செயல்களை ஏர்க்களத்து உழவர் செயலோடு உவமித்து மன்னனைப் புகழ்ந்து புலவர்கள் பாடுவது தேரோர் களவழியாகவும் அமையும்.

பள்ளு இலக்கியத்தில் இடம்பெறும் ஆற்றுவெள்ளம் நானிலங்களுக்கு ஊடாகப் பாயும் வருணனைகளை நோக்குமிடத்துச் சங்க இலக்கியங்களில் இடம்பெறும் நானில வருணனைகளை அவை பின்பற்றியுள்ளமையை அவதானிக்கலாம். அவ்வாறே சிலப்பதிகாரத்தில் இடம்பெறும் ஆற்றுவரிப்

பாடல்களைப் பள்ளு இலக்கியத்தில் இடம்பெறும் ஆற்றில் வெள்ளம் வருதல் என்னும் பகுதியோடு ஒப்பு நோக்கலாம். மேலும் பரிபாடலில் இடம்பெற்றுள்ள வள்ளி - தேவசேனை ஆகியோரின் போராட்ட உறவு குறித்த செய்தியும் பள்ளு இலக்கியத்தில் மூத்த பள்ளி - இளைய பள்ளி போராட்ட உறவிற்கு முன்னோடியாக அமைந்திருக்க வாய்ப்புள்ளது.

கி.பி. 10ஆம் நூற்றாண்டின் இறுதியில் தோன்றிய பன்னிருபாட்டியல் என்னும் நூல் 'உழத்திப்பாட்டு' என்னும் இலக்கிய வகை பற்றிக் குறிப்பிடு கின்றது. அது வருமாறு:

*புரவலற் கூறி அவன் வாழிய என்று*
*அகல்வயல் தொழிலை ஒருமை உணர்ந்தனள்*
*என வரும் ஈரைந்து உழத்திப் பாட்டே*

இந்த உழத்திபாட்டு என்னும் வடிவம் பள்ளு இலக்கியத்தின் தோற்றத்திற்குப் பங்களிப்புச் செய்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

கி.பி. 17ஆம், 18ஆம் நூற்றாண்டுக் காலப் பகுதியில் பள்ளு இலக்கியம் வளர்ச்சியுற்றுக் காணப்பட்டது. தமிழில் முதலில் தோன்றிய பள்ளு எது என்பதில் ஆய்வாளரிடையே கருத்துப் பேதங்கள் உள்ளன. சிலர் முக்கூடற் பள்ளினையும், வேறு சிலர் திருவாரூர்ப் பள்ளினையும் இன்னும் சிலர் ஈழத்தில் எழுந்த கதிரைமலைப் பள்ளினையும் முதலாவதாகக் கூறுவர்.

## பள்ளு இலக்கியத்தின் உள்ளடக்கம்

பள்ளு இலக்கியம் தனக்கெனப் பொதுவானதோர் கதையமைப்பைக் கொண்டது. பாட்டுடைத் தலைவன் எழுந்தருளியுள்ள கோயில் அமைந்துள்ள பண்ணையில் வேளாண்மைத் தொழிலில் பள்ளன் ஈடுபடுவான். அவனுக்கு இரு மனைவியர். அவர்கள் மூத்தபள்ளி, இளைய பள்ளி என அழைக்கப்படுவர். பொதுவாகப் பள்ளனும் மூத்த பள்ளியும் ஒரே ஊரவராகவும் ஒரே தெய்வத்தை வழிபடுபவராகவும் காணப்பட இளைய பள்ளி வேற்று ஊரவளாகவும், பிறிதோர் தெய்வத்தை வணங்குபவளாகவும் இருப்பர். பள்ளன் இளைய மனைவி மீது விருப்புக் கொண்டவனாகி அவளது வீட்டிலேயே பெரும்பாலும் தங்கி விடுவதுண்டு. மூத்த மனைவி அவனது செயலால் வெறுப்புற்றுப் பண்ணைக்காரனிடம் அவனைப் பற்றி முறையிடுவாள். பண்ணைக்காரன் இளைய பள்ளியின் வீட்டிற்குச் சென்று

விசாரிக்கும்போது அவனை வீட்டினுள் மறைத்து வைத்துக்கொண்டு இளையபள்ளி பொய் கூறுவாள். அப்போது பண்ணைக்காரன் அவளைக் கோபித்துப் பேச, ஒளிந்திருந்த பள்ளன் வெளிப்பட்டு வயலில் தான் செய்த வேலைகளைப் பொய்யாகப் பண்ணைக்காரனிடம் ஒப்புவிப்பான். பண்ணைக்காரன் சென்ற பின்னர் இளையபள்ளியின் வீட்டிலேயே பள்ளன் தங்கிவிடுவான். மீண்டும் மூத்தபள்ளி பண்ணைக்காரனிடம் முறையிட்டு அவனைத் தண்டிக்குமாறு வேண்டுவாள். பண்ணைக்காரனும் பள்ளனைத் தொழுவில் மாட்டித் தண்டனை வழங்குவான்.

பின்னர்ப் பள்ளனின் வேண்டுகோளின்படி அவனுக்காக மனமிரங்கும் மூத்த மனைவி, அவனை விடுவிக்குமாறு பண்ணைக்காரனை வேண்டுவாள். அவனும் அவனை விடுவித்துவிட மீண்டும் வயல்வேலைகளில் ஒழுங்காகப் பள்ளன் ஈடுபடத் தொடங்குவான். அவன் உழுதுகொண்டிருக்கும்போது அவனை மாடு முட்ட அவன் மயங்கி விழுவான். அவனது இரு மனைவியரும் இதனால் வருந்துவர். எனினும் மூத்த மனைவிக்கு அவன் சரியாக நெல் அளந்து கொடுக்காமையால் அவள் பிற பள்ளியர் முன் அவனைப் பற்றிக் குறை கூறுவாள். இதனால் இளைய பள்ளிக்கும் அவளுக்கும் இடையில் வாக்குவாதம் உருவாகும். இறுதியில் இருவரும் சமாதானமாகிப் பாட்டுடைத் தலைவரை வாழ்த்தித் தம் கணவருடன் ஒற்றுமையாக வாழ்வதாக உறுதி செய்து கொள்வர். இதுவே பள்ளு இலக்கியத்தின் கதையம்சமாகும்.

பள்ளின் அமைப்பு மூன்று பிரிவுகளாகப் பகுத்து நோக்கப்படும்.

முதற் பிரிவில் காப்பு, கடவுள் வணக்கம், அவையடக்கம், பள்ளன் - பள்ளியர் அறிமுகம், பள்ளியர் தத்தம் நாட்டு, நகர் வளம் கூறுதல், குயில் கூவுதல் முதலானவை அடங்கும்.

இரண்டாவது பிரிவில் மழை வேண்டித் தெய்வத்தைப் போற்றுதல், மழை பொழிதல், மழை வெள்ளம் வருதல், பண்ணைக்காரன் அறிமுகம், மூத்த பள்ளி முறையீடு, பள்ளன் தண்டனை பெறுதல், விடுதலை பெறல், பண்ணையில் வேளாண்மை தொடங்குதல் முதலானவை அடங்கும்.

மூன்றாவது பிரிவில் பள்ளனை மாடு முட்டுதல், அவன் மயக்கம் தீர்ந்து புத்துணர்வுடன் செயலாற்றுதல், வேளாண்மை நிகழ்ச்சிகள், பள்ளன் நெல் அளத்தல், மூத்தபள்ளியின் கோபம், மூத்தபள்ளி - இளைய பள்ளி ஏசல் (வாக்குவாதம்), சமாதானமாகுதல் முதலானவை அடங்கும்.

### நோக்கம்

மேற்குறிப்பிடப்பட்டவற்றின் பின்னணியில் இலங்கையில் எழுந்த பள்ளு இலக்கியங்கள் குறித்து ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். ஆய்வு எல்லை கருதி இலங்கையில் கி.பி. 18ஆம் நூற்றாண்டு வரை எழுந்த கதிரைமலைப் பள்ளு, ஞானப் பள்ளு, பறாளை விநாயகர் பள்ளு, தண்டிகைக் கனகராயன் பள்ளு ஆகிய நான்கு பள்ளு இலக்கியங்களே இங்கு ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இவை தனித்துவமாகவும் அதேவேளை பொதுவான அமைப்பிலும் நோக்கப்படும்.

### இலங்கையில் பள்ளு இலக்கியங்கள்

ஈழத்துப் பள்ளுப் பிரபந்தங்களுள் காலத்தால் முந்தியது கதிரைமலைப் பள்ளு ஆகும். கி.பி.16ஆம் நூற்றாண்டில் இது இயற்றப்பட்டதாகக் குறிப்பிடப்படுகின்றது. ஆயினும் இதன் ஆசிரியர் குறித்து எதுவும் அறியப்படவில்லை. இதனையடுத்த போர்த்துக்கேயர் காலத்தில் (கி.பி 16-17ஆம் நூற்றாண்டுகள்) ஞானப்பள்ளு எழுந்தது. அதன் பின்னர் ஒல்லாந்தர் காலத்தில் (கி.பி 17 - 18ஆம் நூற்றாண்டுகள்) சின்னத்தம்பிப் புலவரால் பறாளை விநாயகர் பள்ளும், மாவை சின்னக்குட்டிப் புலவரால் தண்டிகைக்கனகராயன் பள்ளும் இயற்றப்பட்டன. இவற்றைவிட நவாலியூர் வன்னியசேகரன்பள்ளு போன்ற பள்ளுப்பிரபந்தங்களும் ஈழத்தில் இயற்றப்பட்டதாகக் குறிப்பிடப்படுகின்றது.

இந்நான்கு பள்ளு நூல்களின் சிறப்புகள் சுருக்கமாக நோக்கப்படும்.

#### கதிரைமலைப் பள்ளு

கதிர்காமத்தில் எழுந்தருளியுள்ள முருகப் பெருமானைத் தலைவராகக் கொண்டு இயற்றப்பட்டதாகும். இப்பள்ளு 'கதிரையப்பர் பள்ளு' எனவும் அழைக்கப்படும். இப் பள்ளில் மூத்தபள்ளி மகாவலிகங்கைவயற்பள்ளி எனவும், இளையபள்ளி பகீரதா கங்கைவயற்பள்ளி எனவும் பெயர் பெற்றுள்ளனர்.இப் பள்ளில் பள்ளர் சமூகத்தினரின் வாழ்வியல் அம்சங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன் எளிமையும் இலக்கியச் சுவையும் மிகுந்ததாகவும் இப்பள்ளு அமைந்துள்ளது. இப் பள்ளில் சில செய்யுள்கள் இடையிடையே சிதைந்திருப்பினும் 129 செய்யுள்களைக் கொண்டு விளங்குவதாக அமைந்துள்ளது. இந்நூல் முதலில் 1915ஆம் ஆண்டளவில் முல்லைத்தீவுப் பகுதியில் அச்சில் வந்ததாகத் தெரிகின்றது. வ.குமாரசுவாமி 1935இல் பதிப்பித்துள்ளார். இதன் மறுபதிப்பினை இந்துசமயக் கலாச்சார அலுவல்கள் திணைக்களம் 1996இல் வெளியிட்டுள்ளது.

இப்பள்ளு சிந்து, விருத்தம், தரு ஆகிய பா வகைகளால் அமைந்துள்ள துடன் நாடகப் பாங்குடையதாகவும் விளங்குகிறது.

### ஞானப் பள்ளு

கத்தோலிக்கச் சமயத்தைப் பரப்பும் நோக்கில் இயேசு கிறிஸ்துவைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு அவரது புகழைக் கூறுவதற்காக இயற்றப்பட்டது. பாட்டுடைத்தலைவரான இயேசு கிறிஸ்து ஞானமே உருவானவராகச் சித்திரிக்கப்பட்டுள்ளார். நூலாசிரியர் பெயர் அறியப்படவில்லையாயினும் அவர் ஒரு கத்தோலிக்கர் என்பதையும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர் என்பதையும் நூலின் அகச் சான்றுகளைக் கொண்டு அறிய முடிகின்றது.

*சத்திய வேதமது*
*எத்திசைகள் தோறும் முத்தி*
*தழைத்தோங்கி வாழவே கூவாய் குயிலே* (82)

*தழைவு பற்ற யாழ்ப்பாண*
*சத்திய கிறிஸ்துவர்கள்*
*சந்ததமும் வாழவே கூவாய் குயிலே* (85)

என வரும் பகுதிகளை இதற்கு ஆதாரங்களாகக் கூறலாம்.

*பேரான பாபராளும்*
*பிடுத்துக்கால் மனுவென்றன்*
*பிறதானம் வீசவே – கூவாய் குயிலே* (84)

என்பதன் மூலம் போர்த்துக்கேயர் இலங்கையை ஆண்ட காலப் பகுதியில் குறிப்பாக யாழ்ப்பாணத்தை அவர்கள் கைப்பற்றி ஆண்ட காலத்தில் (கி.பி. 1621 - 1658) இந் நூல் இயற்றப்பட்டிருக்க வேண்டும் என ஆய்வாளர் கருதுவர். இந்நூலில் 257 செய்யுள்கள் உள்ளன. பெரும்பாலான செய்யுள்கள் சிந்து யாப்பில் அமைந்தவை.

இதில் இடம்பெறும் மூத்த பள்ளி எருசலைப் பள்ளி எனவும் இளைய பள்ளி றோமைப்பள்ளி எனவும் குறிப்பிடப்படுவர்.

### தண்டிகைக் கனகராயன் பள்ளு

மாவிட்டபுரம் சின்னக்குட்டிப் புலவரால் இயற்றப்பட்டது. கதிரைமலைப் பள்ளு, ஞானப்பள்ளு, பறாளைவிநாயகர் பள்ளு ஆகியன கடவுளரைப் பாட்டுடைத்தலைவர்களாகக் கொண்டவை. தண்டிகைக் கனகராயன் பள்ளு யாழ்ப்பாணச் சமூகத்தில் செல்வாக்குடன் வாழ்ந்த தண்டிகைக் கனகநாய

முதலியைப் பாட்டுடைத்தலைவனாகக் கொண்டது.இவர் தண்டிகைக் கனகராயனின் வழித்தோன்றலாவார். அவரது சுற்றத்தவர்களது பெருமையும் இதிற் கூறப்படுகின்றது. பாட்டுடைத்தலைவனின் முன்னோரான தண்டிகைக் கனகராயன் பெயரே இப்பள்ளுக்கு இடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. தண்டிகைக் கனகராயன் காரைக்காட்டிலிருந்து கி.பி 13 - 15ஆம் நூற்றாண்டிற்கு இடைப்பட்ட காலத்தில் யாழ்ப்பாணம் தெல்லிப்பழையில் வந்து குடியேறியவர். இவரது வழிவந்த தண்டிகைக் கனநாயகமுதலியார் இவர் கி.பி. 18ஆம் நூற்றாண்டில் வலிகாமப் பகுதி அதிகாரமுதலியாகத் தெல்லிப்பழையில் வாழ்ந்தார் என்பதையும் வித்துவான்களை ஆதரித்தவர்; கண்ணியம் மிக்கவர் என்னும் விபரங்களை இந்நூலில் காணலாம். மாவிட்டபுரம் சின்னக்குட்டிப் புலவர் இவரது இல்லத்தில் புலவராக இருந்தவர். எனவே அவர்களது சிறப்பைப் போற்றும் நோக்கத்துடன் இந்நூல் இயற்றப்பட்டிருக்க வேண்டும். இதனை இந்நூலிலுள் நாட்டுவளம் கூறல், கிளை வளம் கூறல், குயில் கூவல் முதலான பகுதிகளிற் சிறப்பாகக் காணலாம். இப் பள்ளில் முக்கூடற்பள்ளின் செல்வாக்கை மிகுதியாகக் காணலாம்.

இதில் இடம்பெறும் மூத்த பள்ளி வடகாரைப் பள்ளி எனவும் இளைய பள்ளி தென்காரைப்பள்ளி எனவும் குறிப்பிடப்படுகின்றனர். தெல்லிப் பழையில் குடியேறிய மரபினர் காரைக்காட்டு வேளாளர் வகுப்பினராதலால் பள்ளியரும் வடகாரைப்பள்ளி தென்காரைப்பள்ளி எனப் பெயர் பெறுகின்றனர்.

பள்ளு மரபிற்கு மாறாக பாட்டுடைத் தலைவனது உற்றார் மற்றும் உறவினர்களும் புகழ்ந்துரைக்கப்படுகின்றனர்.

### பறாளைவிநாயகர் பள்ளு

நல்லுலீர் சின்னத்தம்பிப் புலவரால் பாடப்பட்ட இப் பள்ளு, சுழிபுரத்திலுள்ள பறாளை என்னுமிடத்தில் எழுந்தருளியிருக்கும் விநாயகப் பெருமானைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டது. மூத்த பள்ளி ஈழமண்டலப் பள்ளி எனவும் இளைய பள்ளி சோழ மண்டலப்பள்ளி எனவும் அழைக்கப்படுவர். நூலில் 130 செய்யுள்கள் உள்ளன. சிந்து, விருத்தம், கலிப்பா வகைகள் இந் நூலில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இந்நூலில் காப்புச் செய்யுள் வழக்கத்திற்கு மாறாகக் கண்ணபிரானை வேண்டுவதாக அமைக்கப்பட்டுள்ளது.

**சிறப்புகள்**

பாட்டுடைத் தலைவன் புகழ், நாட்டு வளம், பாத்திரச் சித்திரிப்பு குறிப்பாகப் பள்ளன், பள்ளியர், பண்ணைக்காரன் அறிமுகம் முதலான விடயங்களினூடாக இந்நான்கு பள்ளு நூல்களின் சிறப்புகள் நோக்கப் படுகின்றன.

**அ) பாட்டுடைத் தலைவன் புகழ் கதிரைமலைப்பள்ளு**

இப்பிரபந்தத்தின் பாட்டுடைத் தலைவராகக் கதிர்காமத்தில் எழுந்தருளியிருக்கும் முருகப் பெருமான் விளங்குவதால் முருகனது புகழ் நூலில் விதந்துரைக்கப்பட்டுள்ளமையைக் காணலாம். குறிப்பாகப் பாத்திரக் கூற்றாகவும் நிகழ்வுகளின் ஊடாகவும் அனைத்துப் பகுதிகளிலும் ஆங்காங்கே இதனை அவதானிக்கலாம். உதாரணம்:

*பொன்னு லோகம்பொருவுநன் னாட்டின்*
*பொழிலில் தோகை மயில் நின்றுலாவும்*
*வன்ன வேலன் கதிரைக் குமரேசன்* (22)

*சிந்தை நினைந்தர்க்கு அன்பன் – உற்றுத்*
*தேடாதவர்க்கு ஒரு வம்பன் – செங்கை*
*வேலன் உமை பாலன் அசுரர்ச்*
*செற்றிடு காலன்*

ஞானப்பள்ளு

*ஏகமாகித் திரித்துவமானவன்*
*எவ்வுயிர்க்கும் இரக்கமுமானவன்*
*மாக மாமண்ணும் விண்ணும் படைத்தவன்*
*வண்மை ஞானப் பெலசொரு பத்தினான்* (52)

இதில் கிறிஸ்தவத்தின் அடிப்படைத் தத்துவமான திரித்துவ - ஏகத்துவக் கொள்கைகள் குறிப்பிடப்பட்டுள்ளன. அதாவது ஒரே இறைவன் (ஏகத்துவம்): இவர் மூன்று ஆட்களாய் (பிதா, சுதன், தூய ஆவி) செயற்படுகின்றார் என்பதே அதுவாகும்.

**தண்டிகைக் கனகராயன் பள்ளு**

*தளவ வாள்நகை யார்மத வேளெனும்*
*சங்கரப் பிள்ளை மைத்துன னாயவெண்*
*களப சந்தன மார்பினன் தண்டிகைக்*
*கனகநாயகன்...* (15)

பறாளை வி.பள்ளு

*சுத்தர்பணிந் தேத்தும் சுழிபுரத்து வீற்றிருக்கும்*
*அத்தபரஞ் சோதி அண்ணலே – கைத்தலத்துச்*
*சூலந் திரித்துமுனந் தோன்றால காலமெனக்*
*காலன் வரும்பொழுது கா.* (113)

இதில் சுழிபுரத்து விநாயகப் பெருமானின் புகழும் இறப்பு வேளையில் காக்க வேண்டும் வேண்டுதலும் இடம்பெற்றுள்ளன.

ஆ) நாட்டுவளம் கதிரைமலைப் பள்ளு

நாட்டுவளம் கூறும் பகுதிகளில் மிகச் சிறப்பாக வருணனைச் சிறப்புக்களைக் காணலாம். ஈழநாட்டினதும், இந்திய நாட்டினதும் வளம் இப்பள்ளில் வருணிக்கப்பட்டுள்ளன.

ஈழநாடு

*காசில் பொற்சிலம் பின்சிக ரத்தைக்*
*கால்ப றித்தே யெறிந்திட வந்த*
*மாசில் தென்கோண மாமலையைச் சூழும்*
*மாவலி கங்கை நாடெங்கள் நாடே* (8)

இந்தியா

*அதிக பாவிக ளாயினு மெவ்வுயிர்*
*ஆயினும் அத்த லத்தில் இறந்தால்*
*கதிதரும் திருக் காசியைச் சூழும்*
*பகீர தாகங்கை நாடெங்கள் நாடே* (15)

ஞானப்பள்ளு

இதில் ஜெருசலேம் மற்றும் ரோமாபுரி ஆகியவற்றின் சிறப்புகள் குறிப்பிடப்படுகின்றன.

*ஏகநாதன் பிறந்தே வளர்ந்து*
*எமக்கு வேண்டி இறந்தே உயிர்த்துத்*
*தேகமானதுங் கண்ணாரக் கண்ட*
*செருசலைத் திரு நாடெங்கள் நாடே* (49)

*நற்கருணையழல் எங்கோன் இருப்பதும்*
*காடொறும் பூசை ஏற்றிப் புகழ்வதும்*
*உற்பவித்து உயிர்த்ததும் கண்ட*
*றோமானுபுரி நாடெங்கள் நாடே* (50)

**தண்டிகைக் கனகராயன் பள்ளு**

வடகாரை, தென் காரை நாட்டுச்சிறப்புகள் இதில் கூறப்பட்டுள்ளன.

*ஏற்றைப்பூட்டியே மள்ளர் உரப்பிட*
*எழுந்த வாளை வளைந்து கொழுந்தண்*
*சேற்றில் தாவியே நாற்றிற் குதித்திடும்*
*தென்காரை வளநாடெங்கள் நாடே* (23)

*பொன்தவழ்ந்திடு வீதிகள் தோறும்*
*புதிய சந்தும் துதிசெய்து மீளும்*
*மன்றலும் இளந் தென்றலும் வீசும்*
*வடகாரைவளநாடெங்கள் நாடே* (20)

**பறாளை விநாயகர் பள்ளு**

இதில் ஈழநாட்டினதும் சோழ நாட்டினதும் சிறப்புகள் கூறப்படுகின்றன.

**ஈழமண்டலம்**

*ஈழமண்டலம் மஞ்சளாவிய மாடங்கள் தோறும்*
*மயில்கள் போன் மடவார்கண.... சூழ*
*மஞ்சரோகப் பள்ளியில் வான்சிறை*
*அன்ன அன்னக் குழாம் விளையாடும்*
*துஞ்சு மேதி சுறாக்களைச் சீறச்*
*சுறாக்க ளோடிப் பலாக்கனி கீறி*
*இஞ்சி வேலியின் மஞ்சலிற் போய்விழும்*
*ஈழமண்டல நாடெங்கள் நாடே.* (13)

**சோழமண்டலம்**

*வாவியின் கரைக் கெண்டை குதிக்க*
*மண்டூகம் பாய்ந்து செந்தாமரை பாயத்*
*தாவி அன்னத்தின் நித்திரை மாற்றிடு*
*சோழமண்டல நாடெங்கள் நாடே (36)*

**இ) பாத்திரச் சித்திரிப்பு**

இப் பள்ளு நூல்களில் வருகின்ற பாத்திரங்கள் சிலவற்றின் சித்திரிப்பு முறைமை பொதுவான பள்ளு இலக்கியங்களில் பேணப்படும் முறையை ஒத்ததாகும். பண்ணைக்காரன் கேலிக்குரிய முறையிலும், மூத்தபள்ளி

அனுதாபத்திற்குரிய வகையிலும், இளைய பள்ளி உல்லாசப் பிரியையாகவும் வாசகர்களின் வெறுப்பினைப் பெறும் வகையிலும் சித்திரிக்கப்படுவதே வழமையாகும். ஞானப் பள்ளு விதிவிலக்காக அமைவதாகும்.

## கதிரைமலைப்பள்ளு

பண்ணைக்காரன் பற்றிய சித்திரிப்பு இதில் எளிமையும் சுவைபயப்பதாகவும் அமைந்துள்ளது.

*சுற்றித் திரித்த பழுதைப்புரிபோல் வாகும் —மிக்க*
*தொந்தி வயிறும்வளையற் காலின் அழகும்*
*வற்றிப்போன வாரணம்போல் மார்பின் அழகும் – சுட்ட*
*வட்டப்பானைபோல்உள்ளமொட்டந் தலையழகும்*
*உற்றுப்பார்க்க அச்சமான சூகைமுகமும் – தெத்தல்*
*ஓலைச்செவிஊசற்பாசிப் பல்லினழகும்*
*சற்றப்பாலே விட்டுப்போன ஒட்டற்காதும் – பெற்ற*
*தனிப் பண்ணைக் காரனாரும் தோற்றினாரே* (51)

என அது அமையும்.

## ஞானப்பள்ளு

இதில் பண்ணைக்காரன் வருமாறு சித்திரிக்கப்பட்டுள்ளான்.

*இடையதனிற் கயிறு கட்டி இந்திரயங்க ளொடுக்கி*
*எரிகின்ற தீபமதை இருகரத்தி லேந்தி*
*உடையுற்று லோக பண்பு முன்னறிவதாகவேதான்*
*உற்ற கனல்மீதோடுதேறலுமில்லாமல்*
*அடையுங்கைக் கோலும் இன்றி அடப்பமும் தானில்லாமல்*
*அம்பரத்தில் அன்னை இல்லான் என்றுரைப்படியே*
*படைவிட்டுடனுலகை பகை தொட்டலகைதன்னைப்*
*பண்ணைக்காரன் வந்து தோற்றினானே (114)*

## தண்டிகைக்கனகராயன் பள்ளு

இதில் பண்ணைக்காரன் வருமாறு சித்திரிக்கப்பட்டுள்ளான்:

*சீறுமுக்கும் பருத்திப் பைபோற் கூடை வயிறும்— மிகச்*
*சிறுத்த கருங்குரங்கு போலக் கறுத்த முகமும்*
*நாறுவாயும் தாடியிலஞ்சாறு மீசையும் – பெருத்த*
*நத்தைக் கண்ணும் நீள்சுரையின் வித்துப் போற் பல்லும்*
*நீறுபோல வெளுத்த துலீறுதலையும் வாத நெட்டைக்காலும்*

*குட்டைக் கையும் ஒட்டற்காதும் – ஆக*
*ஏறுமாறாக வலுவாய்க் கூறு மொழியும் – மிக ஏழைப்*
*பண்ணைக்காரனாரும் தோற்றினாரே (107)*

## பறாளை விநாயகப்பள்ளு

இதில் பண்ணைக்காரன் தோற்றம் வருமாறு அமைகின்றது:

*மாறுகண்ணும் சோகிப் பாகிற் பல்லினழகும் – சுத்த*
*மாவளந்த நாழிபோலே வாயினழகும்*
*சீறுசளியால் பெருத்த துள்ளு நாசியும் – கொட்டை*
*திரித்த பருத்தியின்பைக் சுறை வயிறும்*
*கீறி வேறு தசையொட்டி வைத்திடு காதும் – சற்றே*
*கிடுகுகட்டிப் பற்றமுட்டிக் காலுமாகவே*
*ஆறுமுக வேலர் துணை ஆர்வடிவமோர் – பதி*
*னாறனார் பண் சேரும் பண்ணைக்காரனார் வந்தார் (80)*

இந்நான்கு பள்ளுகளிலும் ஞானப்பள்ளில் வரும் பண்ணைக்காரன் மரியாதைக்குரிய பாதிரியார் தோற்றத்தில் சித்திரிக்கப்படுவதைக் காணலாம்.

## பள்ளன் தோற்றம்

கதிரைமலைப்பள்ளில்

*வெண்டரள வர்ணத்துலீசாற் கச்சையுங் கட்டி – மயில்*
*வில்லுலீர்திப் பட்டினால்தோட்பாரஞ் சேர்த்துக்*
*கண்டகள்ளைப் பிரியமுற்றுக் கொண்டு குடித்துக் – களித்துக்*
*கண்சிவந்து மீசைகோதிக் கந்தனருளால்*
*தொண்டரணி நீறுநெற்றி மீதிலங்கப் பொட்டும் – இட்டுத்*
*தோகைபோல் மண்வெட்டி தோளிற் போட்டு*
*மண்டலமெண் டிசைபோற்றும் கதிரைவள நாட்டு*
*வயற்பண்ணை செய்யும் பள்ளன் தோற்றினானே(5)*

எனக் குறிப்பிடப்படுகின்றான்.

ஞானப்பள்ளில் பள்ளன் தன்மகுணப் பள்ளன் என விளிக்கப்படுகின்றான். அவனது அறிமுகம் வருமாறு அமைந்துள்ளது.

*இடையினிலே கயிறுகட்டி இந்திரயமொடுக்கி*
*இதமாக எரிசுடரை இருகரத்திலேந்தி*
*உடையவன்தன் வயலான உலகத்தாரகத்தை*
*ஒப்பாக மண்வெட்டி ஒரு தோளிற் சுமந்து*
*. . . . . . . . . . . .*

*றோமை நகராளும் பாப்பு சொல்லுக்கிணங்கும்*
*பழுதில்லாத் தன்மக் குணப் பள்ளனும் தோற்றினானே (17)*

இதில் தன்மகுணத்தினனாகப் பள்ளன் உருவகிக்கப்பட்டுள்ள மையைக் காணலாம்.

தண்டிகைக் கனகராயன் பள்ளில் பள்ளன் தோற்றம்:

*கட்டழகாக முறுக்கி விட்ட மீசையும் – விளங்கக்*
*கச்சுறுகாற்பச்சைவர்ணக் கச்சையும் கட்டி*
*இட்டமாகவே கரத்திற் தட்டிச் சிரித்த – நன்றாய்*
*ஏப்பமிட்டுக் கோப்புடனே எட்டிமிதித்த*
*விட்டிலங்கவே நுதலில் வெண்ணீறணிந்து – கொண்டை*
*வீறாகவே கோலவுறு மாலையணிந்து*
*மட்டுக் கொள்ளும் கள்ளும் கண்டமுட்டுங்குடித்துத் – துய்ய*
*வடகாரைப் பள்ளன் தோற்றினானே (4)*

பறாளைவிநாயகர் பள்ளில் பள்ளன் தோற்றம்

*கற்றுகருங் கச்சைக்கட்டி மாதுளம்பூ உறுமால்*
*சோரவிட்டக் கட்டித்துள்ளுமீசை முறுக்கி*
*வெற்றியரக் குங்குடித்து நீற்றையும்பெ ருக்கப்பூசி*
*மேல்வளைய லுந்தரித்து விழிகள் சிவந்து*
*பற்றியமண் வெட்டிவைத்துச் சருக்கி நடந்து – தங்கப்*
*பாளத்தாற் சமைத்த கொட்டுத் தோளிற்சுமந்தே*
*யெற்ற மொற்றைமணிக் கொற்றக் கொம்பன் பண்ணைபார்க்கும்*
*ஈழமண்டலப் பள்ளன் தோற்றினானே (5)*

பள்ளியர் அறிமுகம்

மூத்த பள்ளி, இளைய பள்ளி ஆகிய இருவரும் இந் நான்கு பள்ளு நூல்களிலும் வருமாறு அறிமுகப்படுத்தப்படுகின்றனர். கதிரைமலைப் பள்ளில்:

மூத்தபள்ளி அறிமுகம்

*கொண்டலைப் பொருவுமலர்க் குழலும் கனதனக்*
*கூடம்சுமந்த இடைக்கொடி அசையவே*
*விண்டலத்தின் மாமதியை வென்றமுகம் வேர்வரும்ப*
*வெண்டரள மணிமாலை மெய்யிலங்கவே*
*தொண்டர்களுக்கு அன்பருளும் தென்கதிரை வேலன்*
*சூரனைத் தடிந்து மிக வீரமுற்ற எம்மான்*

*கண்டவர்க்கு நன்மைதரும் கந்தவேள் மாவலி*
*கங்கைவயற் பள்ளி தோற்றினாளே* (3)

இளையபள்ளி பற்றிய சித்திரிப்பு மூத்தபள்ளி பற்றிய சித்திரிப்பிலும் சற்று வேறுபட்டு அமைவதனையும் காணலாம். குறிப்பாக மூத்தபள்ளி விரும்பத்தக்க வகையிலும், மற்றையவள் வெறுக்கத்தக்கவகையிலும் சித்திரிக்கப்பட்டுள்ளனர். இளையபள்ளி பற்றிய அறிமுகச் செய்யுள் வருமாறு:

*நஞ்செனக் கரியவிழி அஞ்சனக் குறியெழுதி*
*நத்து முத்தணிந்து பொன்னின் அணிதாங்கி*
*விஞ்சுகருங் குழல்வீழ வேயைவென்ற தோள் இலங்க*
*வில்லுவீர்திப் பட்டினாவ்உல்காசம்சேர்த்து*
*குஞ்சரமுகன் கரமோர் ஐந்துடையோன் ஒற்றைக்*
*கொம்பன் கொண்டல் வண்ணன் தனில் அன்புகொண்ட மருகோன்*
*கஞ்சமலர்ப் பதம் போற்றிக் கணபதி பகீரதா*
*கங்கை வயற்பள்ளி தோற்றினாளே* (4)

ஞானப்பள்ளு

இதில் வரும் மூத்த பள்ளி எருசலைப் (ஜெருசலேம்) பள்ளி எனவும் இளைய பள்ளி ரோமைப் (உரோம்) பள்ளி எனவும் குறிக்கப்பெறுவர் . ஜெருசலேம் கிறிஸ்துவின் பிறப்பிடம் என்பதும் உரோமாபுரி கத்தோலிக்கத் திருச்சபைகளின் தலைமைப்பீடமும் பாப்பரசரின் வசிப்பிடமும் என்பன குறிப்பிடத்தக்கன. மூத்த பள்ளியும் பள்ளனும் ஜெருசலேம் நாட்டவராகவும், இளைய பள்ளியும் பண்ணைக்காரனும் உரேமையைச் சேர்ந்தவர்களாகவும் சித்திரித்திருப்பதது இதன் சிறப்புக்களுள் ஒன்றாகும்.

இரு பள்ளியரும் கிறிஸ்தவ சமயத்தின் பெருமை, தலங்களின் பெருமை, பாட்டுடைத் தலைவனின் புகழ் ஆகியனவற்றையே அதிகமாகப் பேசியுள்ளனர்.

மூத்தபள்ளி

*அழகாய் முடிதிருத்தி அதனில் மலரிருத்தி*
*யாலோ நிகரெனவே திலகம் பொருத்தி*
*இருபத்தாறு சங்கீதத் தொனியோடு*
*உளமுருகும்படிக்கு நடமுற்றுநடத்தி*
*பவனங் கதித்த வேதம் பரிசுத்த நீதி*
*பழகும் செருசலைநாட்டுப் பள்ளி* (13)

தமிழ்ச் சூழலுக்கு அப்பாலான நாடுகளையும் பாத்திரங்களையும் கதையமைப்பில் ஆசிரியர் சேர்த்திருப்பினும் தமிழ்நாட்டுச் சூழலையே பெரிதும் பின்பற்றியுள்ளார் என்பதனை நூலில் காணலாம். மூத்த பள்ளி அறிமுகத்தில்,

*அழகாய் முடி திருத்தி அதனில் மலரிருத்தீ*
*யாலோ னிகரெனவே திலகம் பொருத்தி (13)*

என நெற்றியில் திலகமிடும் வழக்கத்தைச்சுட்டுவதைக் காணலாம்.

இளைய பள்ளி

*பதமிரண்டு நடமுயன்று பரிபுரங்கள் புலம்பப்*
*பகைவிளங்கும் உடலுலக மலகையங்கேமலங்க*
*அதமுமவன் பிதிர்வழியுள் ளவர்கள்கெதி யடைய*
*அர்ச்சியசிட்டசபையின்மிக அயந்தினமும் விளங்க*
*மதமுடைய வெழுதலையின் பாவமெல்லாம் மழுங்க*
*மகிமையுள்ள வரமேழும் வானவரு மிலங்க*
*உதவுநன்மை நமக்கெல்லாம் உகந்த புவியான*
*றோமானுகநர்ப் பள்ளத்தி உகந்து தோற்றினாளே (16)*

தண்டிகைக் கனகராயன் பள்ளில்

*வஞ்சியவள் கொங்கைகள் பணைக்க*
*மஞ்சளும் பூம்பச்சையும் மணக்க*
*வளரும் இளம்பிறை நுதலில் நீற்றுக் கிளரொளி தோற்ற*
*நஞ்சினை யூட்டியவே லென்னவே*
*அஞ்சனந் தீட்டிய வாள்விழி களிக்கத்*
*துய்ய பசும் பொற்பணி தாழ்குழை துலீங்கத்*
*தஞ்சமில்லாது அலம்வருமிடையில்*
*பஞ்சவர்ணச் சேலையும் தயங்கத்*
*தளைத்த பசும் கழுத்தினில் செம்பொற்றாலியும்*
*மஞ்செனவே தாழ்குழன்மீதில்*
*சஞ்சரிக நறைவிளா மலர் சூட்டி நல்ல*
*வடகாரைக் காவற் பள்ளி தோற்றினாளே (1)*

இளையபள்ளி அறிமுகம்

*பொன்தாவு தாமரைச் செல்விநின்றாடு துய்ய*
*பொங்கார நூபுரப் பணிகள் புலம்பி ஆர்ப்பப்*
*பின்தாவு கொண்டை மிகத் துள்ளிப்*

*பிஞ்சான வாணுதற் பிள்ளை பிறையுமிலங்கக்*
*குன்றாத மாமணிக் கொள்ளையின்றாவு வார்குழைக்குள்*
*கொன்தாவு பானுவிற் கோதிக் கொண்டே விளங்கத்*
*தென்தாவும் ஓதிமப் பிள்ளையென் றாரு மேமுறத்துய்யத்*
*தென்காரைக் காவற் பள்ளி தோற்றினாளே (2)*

பறாளை விநாயகர் பள்ளு

மூத்தபள்ளி

*குத்துமுலைக் குவடு குலுங்கத் தரளவடம் புரளக்*
*குமுதச் செவ்வாயின் வெள்ளிநகையரும்பத்*
*தத்துவரிக் கயலை வெருட்டிப் பத்ஜீதமணிக் குழையொடுமுட்டித்*
*தாரைமணிக் கண்களிரண்டுந் தாவடி செல்லச்*
*சித்தியளித்திடு சுழிபுரநகருறை யத்திமுகக் கணபதி பணபதிச்*
*சேடனுநாவா லசைக்கரிய சீரிசை பாடி*
*எத்திசையும் புகழநிதிக்கோனள காபுரியென் றெவருமதிக்கும்*
*ஈழமண்டலப்பள்ளி தோற்றினாளே (10)*

இளைய பள்ளி

*சின்னவிடை நூலிறுமிறுமெனச் சீறடியில் சிலம்பு புலம்பச்*
*சிறியநுதல் பிறையணி வட்டச் சுட்டியிலங்கப்*
*பொன்னசலக் குசமதிநவமணி மின்னுதனக் கச்சு நெகிழப்*
*புனைந்த கருங்கொண்டையில் வண்டு புரண்டுநெருங்கச்*
*செந்நெல்வயற் சுழிபுர நகருறை கன்னமதத் திறையவர் பரிபுரச்*
*சேவடியைத் திக்கு நோக்கித் தெண்டம் பண்ணிச்*
*சொன்னநிலத் துறுவசி யிலனென வன்னமெனப் பிடியென நிதிவளர்*
*சோழமண்டலப் பள்ளி தோற்றினாளே (2)*

ஈ) மதிப்பீடு

பொதுவாகப் பள்ளுப் பிரபந்தங்களின் உள்ளடக்கம் மற்றும் சித்திரிப்பு முறைகளைஇப்பள்ளு நூல்கள் பின்பற்றியிருப்பினும் சில இடங்களில் ஒன்று மற்றையதிலிருந்து வேறுபட்டு விளங்குவதனையும் காணலாம்.

உதாரணமாக மூத்தபள்ளி பள்ளனைப் பற்றிப் பண்ணைக்காரனிடம் முறையிடும்போதே இளையபள்ளியும் மூத்தபள்ளியை எதிர்த்துப் பேசுவதாகக் கதிரைமலைப் பள்ளில் அமைந்துள்ளமை ஈழத்தின் ஏனைய பள்ளுகளில் காணப்படாத அம்சமாகும். பொதுவாக இளையபள்ளி தன் கணவனை வசிய மருந்து போட்டு மயக்கி விட்டாளென மூத்தபள்ளி

குறிப்பிடுவதே வழக்கமாகும். இதற்கு மாறாக இளைய பள்ளியும் பள்ளனை மூத்தபள்ளி வசிய மருந்து கொடுத்து மயக்கி விட்டாளெனக் கூறுவாள்.

ஈழத்துப் பள்ளு நூல்களுள் இலக்கியத்திற்குரிய எளிமையும் இலக்கியச் சுவையும் பொருந்தியதாக விளங்குகின்றமை, கற்பனைச் சிறப்பு மிகுதியாக அமைந்திருப்பது, கவித்துவ ஆற்றலும் புலப்பாட்டுத் திறனும் பெற்றிருத்தல் ஆகியனவற்றோடு ஈழநாடும் இந்திய நாடும் வணங்கும் தெய்வமாகக் கதிர்காமக் கந்தன் இருப்பதால் இரு நாட்டுப் பள்ளியரின் ஊடாக இரு நாட்டின் சிறப்புகள் விபரிக்கப்படுதலும் இந் நூலின் உன்னதச் சிறப்பிற்கு மேலும் வலுச் சேர்ப்பதாக அமைந்துள்ளது.

ஞானப்பள்ளு முன்னர்க் குறிப்பிட்டதைப் போலப் பாத்திரச் சித்திரிப்பு முதலானவற்றில் ஏனையவற்றிலிருந்து பெரிதும் வேறுபடுகின்றது இதில் அறிவுறுத்தற் செய்யுள்கள் அதிகம் காணப்படுகின்றன. ஜெருசலேம் நாட்டின் கிறிஸ்து காலப் பண்பும், ஏராமின் கத்தோலிக்கப் பண்பும் முறையே மூத்த பள்ளியாகவும் இளைய பள்ளியாகவும் உருவகிக்கப்பட்டுள்ளமையினால் இப் பள்ளினை உருவகப்பள்ளு எனவும் ஆய்வாளர் சுட்டுவர்.

தண்டிகைக் கனகராயன் பள்ளு இரு பள்ளியரையும் இந்திய நாட்டின் காரைக்காட்டைச் (காயல்) சேர்ந்தவர்களாகச் சித்திரிப்பதுடன் தெய்வம் அல்லாத மானிடர் ஒருவரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டது. ஏனைய மூன்றும் தெய்வங்களைப் பாட்டுடைத் தலைவர்களாகக் கொண்டவை.

அத்துடன் பள்ளு மரபிற்கு மாறாகப் பிரபஞ்சவுற்பத்தி, வருண உற்பத்தி, கனகராயன் கிளை ஆகிய விடயங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

இந்நான்கு பள்ளு நூல்களிலும் மழை பொழிதல், ஆற்று வளம், நானிலங்களின் ஊடாக வெள்ளம் பாய்தல், நெல் வகை, மாட்டின் வகை, மீன் வகை முதலான விடயங்கள் கவித்துவம் மிக்கனவாக அமைந்திருப்பதைக் காணலாம். பள்ளன் பள்ளியர்க்கு இடையிலான உரையாடல், பள்ளியர்' ஏசல் முதலானவை எளிமையான நடையில் அமைந்துள்ளன.

எளிமையும் சுவைப் பண்பும் உடைய தன்மைக்கு கதிரைமலைப் பள்ளில் இடம்பெறும் மூத்த பள்ளியின் முறையீட்டினை உதாரணமாகக் கூறலாம்.

*இல்லத்திலும் சற்றும் இரான் என்னையும் தேடான் – சொன்ன*
*ஏவல்சொன்னால் நாலை அரிவேனடி என்பான்*

*ஒல்லைபொழுது என்றும் அவள் இல்லம் பிரியான் –செந்நெல்*
*உள்ளதெல்லாம் அவளுக்கே உண்ணக் கொடுப்பான்*

*அல்லும் பகல் என்றுமில்லை அங்கே இருப்பான் –அவட்கு*
*ஆசை கொண்ட நாள்முதல் என்; நேசம் மறந்தான்*

*சொல்லிப் பயனில்லைப் பின்னை என்னதான் சொல்லான்*
*– தன்மேற்*
*சூழ்ந்த பிழை எல்லாம் என்மேற் சூட்டினான் ஆண்டே"(109)*

கவித்துவச் சிறப்பிற்கு ஞானப்பள்ளில் குறிப்பிடப்படும் மழை பொழிதல் நிகழ்வினைக் கூறலாம். அது வருமாறு:

*திடுதிடு திடெனச் செருமிடி குமிறத்*
*திரண்மலை அலை கொண்டுலையவே*
*கிடுகிடு கிடென வுடலுயிர் வெருவக்*
*குழாமுட னெழிலிகள் பொழியவே (93)*

பள்ளன் பண்ணைக்காரனுக்குக் கணக்கினை ஒப்புவிக்கும்போது நெல் வகை, மாட்டின் வகை முதலானவற்றைக் கூறுவான். பின்வரும் செய்யுள் பறாளை விநாயகர் பள்ளில் இடம்பெறுவதாகும்.

மாட்டின் வகை

*குட்டைநாம்பன் வெள்ளிக் கண்ணன் குறுங்கழுத்தன்*
*கூழைவாலன் வெடிவாலன் வட்டச்செவியன்*
*மொட்டைத்தலை மோழைக்காளை புள்ளிக்கறுப்பன்*
*முறிகொம்பன் தறிகொம்பன் சுத்தக்கறுப்பன்*
*பட்டிக்காளை குன்றுமணிக் கண்ணன் மயிலை*
*பால்வெள்ளை நரைக்காளை காற்சிலம்பன்*
*துட்டக்கள்ளன் வளைகொம்பன் ஒற்றைக் கொம்பனார் பண்ணை*
*சூழ்ந்தபல மாட்டின் வகை சொல்லினேனாண்டே (103)*

இவ்வாறு பல்வேறு சிறப்புகளையுடையனவாக இலங்கையில் எழுந்த பள்ளு நூல்கள் விளங்குகின்றன. இவை படிப்பதற்குச் சுவை பொருந்தியன வாகவும் சமூகச் சமரசத்தையும்; நாடுகளிடையேயான தொடர்புகளை வலியுறுத்துவனவாகவும் அமைந்துள்ளன.

துணை நூல்கள்


- கதிரைமலைப்பள்ளு - வெளியீடு இந்து சமயக் கலாச்சார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு, இலங்கை, 1996.

- ஞானப்பள்ளு - பதிப்பாசிரியர் அ. சதாசிவம், அரசு வெளியீடு, கொழும்பு, இலங்கை, 1968.
- தண்டிகைக் கனகராயன்பள்ளு - சின்னக்குட்டிப்புலவர் வெளியீடு, தமிழ் மன்றம், காங்கேசன்துறை, யாழ்ப்பாணம், இலங்கை.
- பறாளைவிநாகயர் பள்ளு: நல்லூர் சின்னத்தம்பிப்புலவர்; பிரபந்தங்கள்: பதிப்பாசிரியர் - க.இரகுபரன், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு, இலங்கை.
- நடராசா. க.செ. 1982 - ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சி (கி.பி. 14 -18ஆம் நூற்றாண்டுகள் வரை), கொழும்புத் தமிழ்ச் சங்கம், கொழும்பு, இலங்கை.

# ஈழத்துக் கவிதைகளில் மக்களின் சமூக நிலை

திரு. ஆர். ஆனந்தஜோதி
*முனைவர் பட்ட ஆய்வாளர்*
*பாரதியார் பல்கலைக்கழக கலை*
*மற்றும் அறிவியல் கல்லூரி*
*வால்பாறை*

யாப்புக் கட்டமைப்பிலிருந்து விடுபட்டு இருபதாம் நூற்றாண்டில் தோற்றம் பெற்ற புத்திலக்கிய வகை புதுக்கவிதை. இவை சமூகம் சார்ந்த மனிதனின் வாழ்வை உணர்வுப்பூர்வமாக வெளிப்படுத்துபவை. மேலும் நுட்பமான கருத்துக்களைச் சுருக்கமாகவும், செறிவாகவும் வெளிப்படுத்தும் தன்மையில் புதுக்கவிதை சிறப்புப்பெறுகிறது எனலாம். இங்கு 'ஈழத்தின் புதிய தமிழ்க் கவிதைகள்' என்னும் தொகுப்பில் இடம் பெற்றுள்ள கவிதைகள் வழி, போர்க்காலச் சூழலில் ஈழத்தமிழ் மக்களின் சமூக நிலை குறித்துக் காண்போம். இந்நூலில் ஈழத்து நவீனத் தமிழ்க் கவிதையின் சில முக்கியப் போக்குகளைப் பிரதிபலிக்கும் இருபத்து மூன்று கவிஞர்களின் படைப்புகளில் சிலவற்றை மட்டும் இத்தொகுப்பில் தந்துள்ளார் தொகுப்பாசிரியர் திரு. தமிழவன் அவர்கள்.

> இலக்கியம் என்பது சமூகப் பிரக்ஞையில் தென்படும் விடயங்களை, உறவு என்ற களத்தில் அந்த உறவுகளின் ஊடாட்டத்தின் அசைவியக்கத்தில் சொற்கள் மூலம் எடுத்துக்காட்டும் முயற்சியாகும். அந்த எடுத்துக்காட்டுகை அதனைச் செய்யும் இலக்கியப் படைப்பாளியின் உலக நோக்குக்கும், அந்த நோக்குப் பற்றிய தெளிவுக்கு மேற்ப அமைந்திருக்கும் என்கிறார் கா.சிவத்தம்பி.
>
> (புதிய சவால், புதிய பிரக்ஞைகள், புதிய எழுத்துகள்)

இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ள கவிஞர்கள் ஆழ்ந்த உலகநோக்குடனும், சமூக அக்கறையுடனும், தெளிவுடனும் தம் மக்களின் நிலையை எழுத்துகள் வழி உலகிற்குப் பறைசாற்றியுள்ளனர். ஈழ விடுதலைப் போருக்கான காரணங்கள், தொடர்ந்த போரினால் மக்கள் அனுபவித்த துன்பங்கள், இழப்புகள், இராணுவத்தினரின் வரம்பு மீறிய கொடுமைகள், அகதி வாழ்வு போன்ற பல்வேறு நிகழ்வுகளையும் பாடுபொருளாக்கியுள்ளனர் கவிஞர்கள்.

**ஈழப்போருக்கான காரணங்கள்**

வழிவழியாக வாழும் தமிழ் மக்கள் எழுபதுகளில் தங்களின் இருப்பு மறுக்கப்பட்ட நிலையில் சிங்களப் பேரினவாத அடக்குமுறைக்கு உள்ளாயினர். தமிழர்களின் வீடுகள் கொள்ளை அடிக்கப்பட்டன. நிலங்கள் சூறையாடப்பட்டன. இதனை எதிர்த்தவர்கள் கொடூரமாக நடுத்தெருவில் அனைவரின் கண்முன்னே கொல்லப்பட்டனர். 'ஐம்பதுக்கும் மேற்பட்டவர்கள் தம் வீட்டில் கொள்ளையடிக்க வந்ததைத் தடுக்க எண்ணிய வனத்திணைக்கள அதிகாரியின் நிலையை,

*அவர்கள் அவனைச்*
*சுட்டுக் கொன்றபோது*
*எல்லோருமே பார்த்துக் கொண்டு*
*நின்றார்...*
*தமிழர்கள் வீட்டைக் கொள்ளையிடுவதை*
*யார் தான் தடுக்க முடிகிறது* (ப. 125)

எனப் பதிவு செய்கிறார் கவிஞர் சேரன்.

இவ்வாறு உரிமைகள் மறுக்கப்பட்டு ஒடுக்குமுறைக்கும் சுரண்டலுக்கும் உள்ளான தமிழ் மக்கள், இனவாதத்தால் இரண்டாந்தரக் குடிமக்களாக இழிவுபடுத்தப்பட்டனர். இந்நிலையை எதிர்த்துச் சில விடுதலை இயக்கங்களும் தோன்றின. இத்தகைய இயக்கங்களில் இளைஞர்களும், பள்ளிச்சிறார்களும், ஏன் பெண்களும் கூட இணைந்தனர். துப்பாக்கி ஏந்திப் போரிட்டனர். யுத்தமும் தொடர்ந்தது. இதற்கிடையில் மக்களின் அன்றாடப் பணிகளும் நடந்ததை,

*போன ஆண்டிலும் முன்பனிக்காலத்தில்*
*யுத்தம் வந்து போனது*
*கடந்த காலத்திற்காக*
*பத்தாம் வகுப்பு பள்ளிக் கூடத்திற்காக*
*அறுவடை செய்த / வயல் வெளிகளுக்காக*
*அது ஏங்க வைக்கவில்லை* (ப. 201)

என்ற நட்சத்திரன் செவ்விந்தியன் வரிகள் உணர்த்துகின்றன.

**உத்தரவாதமற்ற இருப்பு**

சிங்கள இராணுவத்தினரின் ஆக்கிரமிப்புகளும் அட்டூழியங்களும் அதிகரித்தன. திருவிழாக் காணச் செல்கையில், படம் பார்க்கச் செல்லும் பாதி வழியில், பஸ் நிலையத்தின் வரிசையில், சந்தையில் இருந்து வீடு

திரும்புகையில் யார் வேண்டுமானாலும் சுடப்பட்டு இறக்கலாம். அல்லது அடிபட்டு விழலாம், என உயிருக்கு உத்திரவாதமற்ற நிலையில் வாழ்ந்தனர் தமிழர். அடக்கு முறைக்கு அடிபணிந்து நடக்க வேண்டும் என்பதே சிங்கள அரசின் அரசியல் அறமாகக் கருதப்பட்டது. இந்நிலை கண்டு

*வாழ்க்கையின் முடிவே மரணம் என்போம்*
*ஆயின் எமக்கோ*
*மரணமே எமது வாழ்வாய் உள்ளது* (ப. 212)

என உள்ளம் குமுறுகிறார் கவிஞர் நுஃமான்.

போர்க்காலத்தில் இராணுவ விமானங்களும், ஹெலிகாப்டர்களும் குடியிருப்புப் பகுதிகளில் குண்டுமழை பொழிந்தன. பள்ளிக் கூடங்களையும், மருத்துவமனைகளையும் கூட அவர்கள் தரைமட்டமாக்கினர். போரில் பூவும் பிஞ்சுமாக உதிர்ந்தன உயிர்கள். எஞ்சியிருந்தவர்கள் துப்பாக்கிக்குண்டுக்கு இரையாகிப் பிணமாய்த் தெருக்களில் கிடந்தனர். அத்தெருக்களின் நிலையை

*இது நாய் நக்கிய தெரு*
*நட*
*இன்னும் பிணநாற்றம் எழுகிறது..*
*இன்னும் கால்துண்டு விலா*
*முதுகெலும்பு எல்லாம் தெரிகிறது, போ தள்ளி...*
*அவன் தப்பியிருப்பானோ தெரியவில்லை?*
*நமக்குத் தெரிந்த அந்தப் பெட்டை*
*செத்தாள்!*
*உன் காதலி என்னானாள்,*
*எனக்கும் விளங்கவில்லை?*
*அட! நீ*
*பிணத்தில் இடறி விழாதே*
*போ”* (பக். 172, 173)

என்னும் கவிஞர் சோலைக்கிளியின் வரிகள் நமக்குக் காட்சிப்படுத்து கின்றன.

### சமூக முரண்பாடுகள்

சிங்களப் பேரினவாத ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராட வேண்டிய தமிழ் மக்கள் தங்களுக்குள்ளே சாதியின் பெயரால் சண்டையிட்டுக் கொள்வதைச் சுட்டிக் காட்டவும் கண்டிக்கவும் தவறவில்லை கவிஞர்கள். யாழ்ப்பாணத்து மேல்சாதியினரின் அடக்கு முறைகளை, நியாயமற்ற

செயல்களை மிகுந்த உக்கிரத்தோடு சாடுகிறார் கவிஞர் சேரன். நம் முன்னோர் கங்கை, கடாரம் வென்று இமயத்தில் விற்கொடி பொறித்தனர். ஆனால், இன்றைய சாதி முரண்பாடுகளால் தமிழரின் ஆளுமை தலை குனிந்து நிற்கிறது என்றும்,

*ஆலயக் கதவுகள்*
*எவருக்காவது மூடுமேயானால்*
*கோபுரக்கலசங்கள்*
*சிதறிநொறுங்குக...!"* *(பக். 131, 132)*

எனச் சாதிக்கு எதிரான தன் நிலையைப் புலப்படுத்துகிறார்.

## போராளிக்குழுக்களுக்கிடையேயான சண்டை

தம் வாழ்விடங்களில் தொடர்ந்து நெருக்கடிக்குள்ளான மக்கள், தங்கள் இருப்பைத் தக்கவைத்துக் கொள்ளப் போராளிகளாக உருவெடுத்தனர். ஆனால் சில கொள்கை மாறுபாடு காரணமாகப் பலவாக உருவாகிய போராளிக்குழுக்கள் தங்களுக்குள்ளேயே மோதிக் கொண்டு, கருணையின்றி மற்றவரை அழிக்கத்துணிந்த அவலத்தைக் கவிஞர்கள் வேதனைமிகுந்த உள்ளத்தோடு வெளிப்படுத்துகின்றனர்.

*உனது வீட்டை இரவில் கொளுத்தினர்*
*உனது நிலத்தை அவர்கள் பறித்தனர். இன்று*
*உன்னைக் கொன்றனர்...*
*நீ துயில்க*
*அந்நியர்கள் வந்து விட்டார்கள் என்பதையாவது*
*நான்*
*அவர்களுக்கு நினைவூட்ட வேண்டும்* *(ப. 152)*

என்கிறார் சேரன். மேலும் இத்தகுபோக்கைத் தம் எழுத்துகள் மூலம் எதிர்த்த வர்களும் கூடத் துன்புறுத்தபட்டனர். இந்நிகழ்வுக்குக் கவிஞர் செல்வி கடத்தப்பட்டு, சிறைவைக்கப்படும் முன்பு எழுதிய இவ்வரிகள் ஆதாரமாய் அமைகின்றன.

*இராமனே இராவணனாய்*
*தனது அரசிருக்கையின் முதுகுப்புறமாய்*
*முகமூடிகளை மாற்றிக் கொண்டதை*
*பார்க்க நேர்ந்த கணங்கள்*
*இதயம் ஒருமுறை அதிர்ந்து நின்றது* *(ப. 119)*

## குழந்தைகள் நிலை

ஈழப்போரினால் குழந்தைகள் மிகவும் பாதிக்கப்படுகின்றனர். அழகிய காலையில் சாலையின் குறுக்கே வீசப்படும் சிதைக்கப்பட்ட, குருதி தோய்ந்த மனித உடலும், குண்டுவீச்சுகளால் சரிந்து விழும் சுவர்களும், நடு இரவிலும் கேட்கும் துப்பாக்கிகளின் ஓசையும், குழந்தைகளினது விளையாட்டைத் தொலைத்தன. ஊமங் கொட்டையில் தேர் செய்வதையோ, கிளித்தட்டு மறிப்பதையோ மறந்து போயினர். போலிஸ், இராணுவத்தினரின் செயல் கண்டு,

*யுத்தகால இரவுகளின் நெருக்குதலில்*
*எங்கள் குழந்தைகள்*
*'வளர்ந்தவர்கள்' ஆயினர்* (ப. 104)

என்கிறார் கவிஞர் சிவரமணி.

## துயரம் மிகுந்த போர்க்காலங்கள்

ஈழத்தின் அழகை வருணிக்காத கவிஞர்கள் இல்லை. ஆனால் அதன் அழகில் மயங்கி அதனை இரசிக்கும் மனநிலையில் மக்கள் இல்லை. ஏனெனில் இரவில் உருமி வந்த இராணுவ, போலீஸ் வண்டிகளில் சந்தேகத்தின் பெயரில் இளைஞர்கள் மூச்சுத் திணரத் திணிக்கப்பட்டு இழுத்துச்செல்லப்பட்டனர் . தாயின் அழுகையும், தங்கையின் விம்மலும் பொழுது புலர்தலின் அவலமாய்க் கேட்டன.

*காகம், கரைவதும் நெருடலாய் ஒலித்தது*
*மெல்லிய ஒலிகளும் பயத்தையே தூண்டின*
*எங்கும் அச்சம்; எதிலும் அமைதி*
*தென்றல் சிலிர்ப்பில் உணர்வே இல்லை*
*காலைச் செம்மையை ரசிப்பதை மறந்தோம்* (ப. 114)

என மக்களின் நிலையை உணர்த்துகிறார் கவிஞர் செல்வி. விசாரணை என்ற பெயரில் நடு இரவில் வீடு புகுந்து ஆண்களை அழைத்துச் சென்று சித்தரவதைக்கு உள்ளாக்குவதும், அவர்களைப் பயங்கரவாதி என முத்திரைகுத்தி, விலங்கிட்டுச் சிறையில், தடுப்புக்காவலில் வைப்பதும், பின்பு முகங்கள் சிதைக்கப்பட்டும், உடல்கள் வெட்டப்பட்டும் தூக்கியெறியப் படுவதும் வழக்கமாயின. இவர்களின் இறப்பு "காரணமற்றது / நியாயம் அற்றது " (ப. 123) என்கிறார் கவிஞர் சேரன்.

"நுண்பொருளைப் புலப்படுத்துவதே கவிதைக் குறியீட்டின் தலையாய நோக்கமாகும். இவ்வாறு உணர்த்தப்படுவது கருத்தாகவோ, உணர்வாகவோ

இருக்கும்" என்கிறார் அப்துல் இரகுமான் (புதுக்கவிதையில் குறியீடு, பக்.58). இங்குச் சிங்கள இராணுவத்தினரின் அத்துமீறிய செயல்களால் தமிழர்களின் வாழ்வு வேதனையும் விம்மலும் நிறைந்ததாக மாறியது. தமிழர் வாழும் பகுதிகளைச் சிறிது சிறிதாக இராணுவம் ஆக்கிரமித்து, அங்குச் சிங்களவர்களைக் குடியேற்றியது. சிங்கள அரசு தனது அசுரத்தனத்திற்கு தமிழ் மக்களை இரையாக்கியது. இதனை,

*தனது வாழ்க்கையை*
*எச்சிலாற் பின்னிக் கொண்டிருக்கிறது சிலந்தி*
*அது, கரைந்தழியும் ஒவ்வொரு பொழுதிலும்*
*தனது இரைகளுக்காகக் காத்திருக்கிறது*
*சிலந்தியின் எச்சில் கனவுகளில்*
*பூச்சிகளின் வண்ண வண்ணக் கனவுகள்*
*படபடக்கின்றன* (ப. 219)

எனக் கவிதை வழிக் குறியீடாக்கிக்காட்டுகிறார் கவிஞர் எஸ்.போ. மேலும்,

*புகை*
*அச்சம்; கொடுமை*
*துயரம் ; பீதி*
*அனைத்தும் கறுப்பு* (ப. 160)

என சேரன் கவிதையில் துக்கத்தின் குறியீடாகக் கறுப்பு நிறம் ஆளப்பட்டுள்ளது.

போர் எனில் இருபக்கமும் உயிர் இழப்புகள் தவிர்க்க இயலாததுதான். ஆனால், சிலர் மனித நேயமற்ற முறையில் பிறரை அழிப்பதை, அது சிங்களவர்களாயினும் ஏற்க மறுக்கிறது தமிழ்க் கவிஞர்களின் மனம். இக்கவிதைத் தொகுப்பின் ஆசிரியர் திரு.தமிழவன் அவர்கள் தமது முன்னுரையில், "இங்குப் போராட்டம் சார்ந்த தவறுகள் சுட்டிக் காட்டப்படுகின்றனவே ஒழிய, பிறமொழிகள் மீதோ, நேர் எதிரியாய் அரசால் படம் பிடிக்கப்படும் சிங்கள மக்கள் மீதோ வெறுப்பைக் கக்குவதை எல்லாக் கவிதைகளும் தவிர்த்திருக்கின்றன" (முன்னுரை, ப. IX) என்ற கூற்று வலுப்பெறும் வகையில்,

*உங்களது பச்சையரிசிச் சோற்றை*
*ஈரப்பலாக்கறியை,*
*அன்பான உபசரிப்பை,*
*அதனினும் மேலான நட்பை*
*அனுபவிக்க நான் ஆசைப்படுகிறேன்!...*

*என்போல் ஆசையுள்ள*
*உங்களது நிலையும்*
*இதுபோல்தான்*
*கொழும்புத் தெருக்களில்*
*வெட்டியும் எரித்தும்*
*கொடுஞ்செயல் புரிந்த உம்மவர் போலவே*
*அனுராதபுரத்து வீதிகளெங்கும்*
*எம்மவர் தீர்த்த வேட்டுகள் கேட்டு !*
*பெருந்துயர் கொண்டோம்!* (ப. 81)

என்ற கவிஞர் சபேசனின் வரிகள் அமைகின்றன. மேலும் நாளை என்பது நிச்சயமற்றுப்போன தமிழரின் நிலையை, மனித மரத்துப் போன தன்மையை,

*'மனிதர் பற்றிய மனிதத்தின் அடிப்படையில்*
*வாழ்வதை மறந்தோம்* (ப. 105)

என வேதனையுடன் கூறுகிறார் கவிஞர் சிவரமணி.

## பெண்கள் நிலை

மக்களினத்தில் சரிபாதியாக விளங்குபவர்கள் பெண்கள். சமூகத்தில் ஆண்களுக்கு இணையாகப் பொறுப்பும் கடமையும் உடையவர்கள். இருப்பினும் பெண்கள் பலவகையில் அடிமைப்படுத்தப்படுகின்றனர். ஆனால்

> உயிரியல் உளவியல் உடற்கூற்றுக் காரணங்கள் எதனைக் கூறினும் இரத்தமும், சதையும் உடலும் உயிரும் உணர்வும் கொண்டு ஒரு மானுட உயிரி என்ற வகையில் பெண் சுதந்திரமானள். ஒடுக்கப்படும் பெண்களுக்கு ஒடுக்குதலுக்கு எதிராகப் போராடும் உரிமை உண்டு
>
> (சமகாலச் சமூகப் பார்வைகள். ப.94)

என்கிறார் க. தணிகாசலம். அவ்வகையில் தங்களுக்கு எதிரான அடக்கு முறை, தாய்மையின் உள்ளத்துணர்வுகள், மனிதமேயம், நட்பு, உறவுகளின் இழப்பு, விடுதலைப் போராட்டம், நாட்டுப்பற்று, சுதந்திரதாகம், காதல் மறுப்பு, அகதி வாழ்வின் துயரம் போன்ற அனைத்துத் தளங்களின் ஊடாகப் பெண் கவிஞர்களின் கவிதைகள் பயணிக்கின்றன.

## பெண்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள்

ஆண்கள் எனில் உடல் சித்ரவதை, பெண்கள் எனில் பாலியல் வன்கொடுமை என்பது சிங்களக் காக்கி உடைகளின், இராணுவத்தினரின்

எழுதப்படாத சட்டமாக இருந்தது. பெண்கள் தங்கள் சமூகம் சார்ந்த ஆண்களின் அடக்குமுறைக்கும் எதிரிகளின் வன்கொடுமைக்கும் ஆளாயினர். பெண்களின் கண்ணீர் கண்டு பேரின்பம் கண்டனர். இரவுக் காலங்கள் பயங்கரம் நிறைந்ததாக இருந்தன. குரோதம், வஞ்சகம் நிரம்பிய பார்வைகள் பெண்களைச் சுட்டெரித்தன.

*பேய்களால் சிதைக்கப்படும்*
*பிரதேசத்தைப் போன்று*
*சிதைக்கப்பட்டேன்*
*ஆத்மாவின் உணர்ச்சிகள் எல்லாம்*
*இரத்தம் தீண்டிய கரங்களால்*
*அசுத்தப்படுத்தப்பட்டன* *(ப. 100)*

எனப் பெண் அனுபவித்த துயத்தை, கொடுமைகளை வெளிப்படுத்துகிறார் கவிஞர் சிவரமணி.

அப்பாவிப் பெண்களின் நிலை இவ்வாறெனில், இராணுவத்திடம் சிக்கிய பெண் போராளிகளுக்கு நேர்ந்த அவலங்கள் சொல்லவொணாதது. சிங்கள இராணுவ வெறியர்கள் பெண்களைச் சின்னாபின்னப்படுத்தி, சிதறடித்துக் கொன்றனர்.

*அழகி மன்னம் பேரிக்கும்*
*அவன் கோணேஸ்வரிக்கும்*
*புரிந்த வன்மொழியாகத் தான்*
*இது இருக்கும் என*
*அவதியாய், எட்டிக் கடந்து போனேன்*
*அன்றைய அலைச்சலும்*
*மனக்குலைச்சலும் கூடிய*
*தூக்கத்தின் இடையில் – நானும்*
*அவர்களுக்குப் புரிந்த*
*அதே அதே ஆழத்திணிக்கப்பட்ட*
*பாஷையைப் புரிந்து கொண்டேன்*
*அருகே கணவன்*
*மூச்சு ஆறிக் கிடக்கிறான்"* *(பக். 36, 37)*

எனப் பெண்கள் மேல் நிகழ்த்தப்படும் வன்கொடுமையை முன்வைக்கிறார் கவிஞர் ஆழியாள். நடு இரவில் வீட்டில் நுழைந்து, ஆண்கள் இழுத்துச் செல்லப்படுவதும், கொல்லப்படுவதும், பெண்கள் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்படுவதும் அன்றாட நிகழ்வுகளாகி விட்டன.

இதில் போராளியை மணந்த பெண்ணின் நிலைமை மிகவும் வேதனைக்குரியது. என்றாவது ஒரு நாள் மாலையில் மதகுரு, முக்காடு அணிந்த பெண், ஒரு தாடி மீசைக்காரன் என ஏதாவது ஒரு வேடம் கொண்டு வீட்டிற்கு வரும் போராளியைத் தேடி, விடியலில்,

*ராணுவக் கும்பல் அல்லது*
*போலிஸ் படை*
*பிறகு*
*கூந்தல் அவிழ்ந்து விழுகிற வரையில்*
*விசாரணை*
*என்னருகே அம்மாவும்*
*கூட்டிலிருந்து தவறி விழுந்துவிட்ட*
*ஒரு அணில் குஞ்சைப் போல*
*நீ போய் விட்டாய்;*
*நாள் தொடர்கிறது* (பக்.61, 62)

எனக் காக்கி உடைகளிடம் சிக்கிய அப்பெண்களுக்கு நேரும் அவலங்களைச் சுட்டுகிறார் ஊர்வசி அவர்கள்.

முதுமையில் பெற்றோரைப் பேணவும், பெண் பிறப்பு பெருமைமிக்கது என்ற கனவுடன், தனக்குப் பெண்பிள்ளை வேண்டுமென அவாவுற்ற தாயொருத்தி, தான் பெற்ற மகவுக்கு இளஞ்சிவப்பு நிறத்தில் சட்டை தைத்துப் போட்டு, காது குற்றி, பொட்டு வைத்து அழகுபார்த்தாள். அக்குழந்தையும் விளையாடித்திரிந்து மகிழ்ந்து வளர்ந்தது. இந்நிலையில் ஈழத்தில் சூழல் மாறியது. பெண்கள் எதிரிகளால் சீரழிக்கப்பட்டனர். அத்தாயின் மனமோ வேதனையுற்றது. நிலாக் காட்டச் சிரிக்கும் மூன்று வயதுப் பச்சிளங் குழந்தையும் ஆண் குறிகளால் துளைக்கப்படும் அவலம் நிறைந்த நிலையைக் கண்டு துடித்தெழுகிறாள் அத்தாய்.

*வெந்து புண்ணாய்*
*வலியெடுக்கும் இதயத்துடன்*
*வாழ்தலும் முடியாது*
*எழு!*
*உள்ளே அனலாய்*
*எரிந்து கொண்டிருக்கும்*
*பூமியின் வடிவாய்*
*விரித்தெழு*
*பொட்டும் பிறவும்*
*அலங்கரிக்கும்*

*மேனியழகு உன் அழகல்ல*
*வெறியும் திமிரும்*
*அதிகாரமும்*
*உடைந்து சிதற எழுந்து நில்* (பக். 77, 78)

எனக்கூறி, ஒப்பனை செய்து கொள்வது அழகல்ல, தனக்கு நிகழும் கொடுமையை எதிர்த்து நிற்பதே பெண்மையின் வடிவம் என அத்தாயின் கூக்குரலாகப் பெண்களுக்கு விழிப்புணர்வூட்டுகிறார் ஔவை.

தாய்மை

தாய் மண்ணில் தம் மக்களுக்கு நேரும் கொடுமைகள் கண்டு இளைஞர் பலர் போராளிகளாக உருவெடுத்தனர். தாய்மார் சிலர் தாமாக முன்வந்து மகனை நாட்டின் விடுதலைப் போராட்டத்தில் பங்குபெறச் செய்தனர். சிங்கள இராணுவத்தினரின் வன்கொடுமைகள், அட்டூழியங்கள் கண்டு. பள்ளி சென்ற பிள்ளைகளும் கூட, போராளிகளுடன் இணைந்துப் போரிட்டனர். இந்நிலையில் அப்பாவின் இறப்பும், அக்காவின் முதுமையும், இரவில் விமானக் குண்டு வீச்சும், நெஞ்சைப் பிளக்கும் அவலங்களும் கண்டு போராளியாய் மாறிய, மகனின் வரவை எதிர்பார்த்துச் சோர்ந்து போன தாய், மனதளவிலேயே மகனுக்குக் கூறும் அறிவுரையை ஔவையின் வரிகள் உணர்த்துகின்றன.

*இராணுவ வெறியரிடம் அகப்படாதே...*
*மக்களை நேசித்த*
*சின்னப் பயல்களெல்லாம்*
*இன்று மண்ணுள்*
*மனித நேயத்தை இழந்துவிடாதே*
*மக்களை அதிகம் நேசிக்கப் பழகு* (ப. 78)

இத்தகைய வரிகள் போராளிகளின் மனதை நல்வழிப்படுத்துவதுடன் தாய்மையின் பெருமையையும் பறைசாற்றுகின்றது.

இவ்வாறு விடுதலை வேண்டிப் போரிட்ட போராளிகள் துப்பாக்கித் தோட்டாக்களினால் இதயம் வெடித்தும், சுவரில் அறையப்பட்டும், வெடிகளில் சிக்கி இரத்த வெள்ளத்தில் துடிதுடித்தும் செத்தனர். முச்சந்தியின் ஓரமும், வாவிக் கரையும், ஆற்றின் கரையும், புதை குழியும், மணல்மேடும், இராணுவத்தால் கொன்று குவிக்கப்பட்ட போராளிகளின் பிணங்கள் நிறைந்தன. (ப. 75).

## இராணுவ அட்டூழியங்கள்

மக்களின் குடியிருப்புப் பகுதியில் நடத்தப்பட்ட குண்டுவீச்சினால், துப்பாக்கிச் சூட்டினால்,

*வைத்திய சாலையில் எல்லா வகையான*
*அலறல்களும் மேலெழுகின்றன*
*குழந்தைகளும் சிறுவரும்*
*கால்கள், கைகள், விழிகள் இழந்து*
*பிரக்ஞை கெட்ட ஒரு உலகத்தில்*
*புழுதித் துகளாய்ச் சிதறிப்*
*போய்க் கொண்டிருக்கிறார்கள்* (ப. 166)

என ஆதங்கப்படுகிறார் சேரன். மேலும் வைத்திய சாலையில் செஞ்சிலுவைக் குறி பொறித்தவரும் ஹெலிகாப்டர் குண்டுபட்டு விழுகிறார். இயந்திரத் துப்பாக்கிச் சத்தம் எப்பொழுதும் போல இப்போதும் கேட்டுக் கொண்டு இருப்பதாக இராணுவத்தின் கொடுஞ்செயல்களை விளக்குகிறார் (ப.142).

வீடு புகுந்து ஆண்களை இழுத்துவந்து வரிசைப்படுத்திச் சுட்டு வீழத்தினர். மக்கள் பயணம் செய்யும் வாகனத்தை மறித்து, மக்களை இனம் இனமாகப் பிரித்து, ஓர் இனத்தைப் பெண், குழந்தைகள் என்று கருணையின்றி வெட்டினர், குத்தினர், சுட்டனர். பிள்ளைத்தாய்ச்சியை வெட்டி, சிசுவை வெளியில் எடுத்து, தெருவில் போட்டு ரசித்தனர். (ப. 81) இத்தகு வன்மம் புரிபவர்கள் புத்தரை வழிபடுபவர். ஆனால் இத்தகைய நிலையைக் கண்டு வெறுபுற்றார் புத்தர்.

*தார்மீக உலகில்*
*கால்கள் பதிக்க*
*விரும்பாத மனதுடன்*
*உலகை வெறுத்துப்*
*போதி மரத்தில்*
*தூக்குப் போட்டுச்*
*செத்தான் புத்தன்*

எனக் கூறுகிறார் கவிஞர் ஷம்சத்வனி.

### அகதிகளின் நிலை

தேசிய ஆளுமையை உறுதிப்படுத்தியும் தேச விடுதலையைக் குறிக்கோள் ஆக்கியும் தொடங்கிய போராட்டங்கள், தேசத்தையே காயப்படுத்தும் போராட்டமாக மாறியுள்ள

கொடுமையை ஈழத்தில் மட்டுமல்ல, வேறு சில மூன்றாம் உலக நாடுகளிலும் காணலாம். காலம் செல்லச் செல்லப் போர்வாடை சித்தத்தையே மயக்கி நிலைகுலையச் செய்கிறது. எனவே, அவர்கள் தாயகத்தை விட்டு வேறு புகலிடங்களை நாடிச் செல்லத் தலைப்படுகின்றனர்

(முடிவுறாப் பாடல்கள் ; முகம் கொள்.ப.13)

என்பர் வ.கீதா, எஸ்.வி.ராஜதுரை. போரின் கொடுமைமிகு சூழலிலிருந்து வெளியேறியவர்கள் அகதிகளாகப் பல நாடுகளில் தஞ்சமடைந்தனர். அகதியாக வெளியேறும் ஒருவனின் மனநிலையை,

*சிறையுண்ட ஆத்மாவை*
*சுமந்திருக்கும் உடலோடு*
*ஆதரவு தேடி*
*ஒற்றைப் பறவையாய்*
*என் பயணம் தொடங்கிற்று* (ப. 71)

என விவரிக்கிறார் ஔவை.

போர் உக்கிரமடைந்த காலக்கட்டத்தில் பலர் காடுகள் வழியாகவும், படகுகள், கப்பல்கள் மூலமும், தப்பித்துச் சென்றனர். இதில் பலர் பாதி வழியில் தவித்துத் துன்புற்றனர். எல்லையைத் தாண்டவும் முடியாமல், நாட்டிற்குள் நுழையவும் முடியாமல் அவர்கள் அனுபவித்த துன்பம் கொடுமையானது. தப்பிக்கும் வழியில் இராணுவத்திடம் சிக்கியவர்கள் அனைவரும் விசாரணையின்றிக் கொன்று குவிக்கப்பட்டனர்.

இதனையெல்லாம் தாண்டி அகதிகளாகப் பிற நாடுகளில் தஞ்சமடைந்த மக்கள் அனுபவிக்கும் துன்பங்களை,

*தேசம் கடந்தும் இங்கே*
*எதிரியும், நண்பனும் தெரியா*
*வாழ்க்கை* (ப. 11)

*நான் விரும்பும் யாரையும் பாராமல்*
*வெறுப்புமிழும் முகங்களையே*
*பார்க்கும் விதி எனக்கு*
*வேற்றுக் கிரகத்து மனிதனாய்*
*இந்தப் பூமிப்பந்தில்*
*வாழும் எனக்கு*
*"அகதி" என்ற சொல்லின்*
*அர்த்தம் தேவை* (ப. 52)

போன்ற வரிகளால் கவிஞர்கள் எடுத்துரைக்கின்றனர். பேரினவாதத்தால் எல்லை கடந்த மக்கள் நிறவெறியினால் அல்லலுறுகின்றனர்.

*அகழி வாழ்வாம் கூடார கந்தலை*
*வீசி எறிவோம்*
*ஆயுதம் தாங்கிய இளைஞர் சிலரின்*
*தோள்கள் மீது*
*புவியையும் வானையும் சுமத்தி*
*எத்தனை நாட்கள் விலகி இருப்பது?* (பக். 261, 262)

எனவும், கிழவனும், கிழவியும் கூட இளைஞர் போல் துடித்தெழ வேண்டிய தருணமிது. ஊர் கூடித் தேர் இழுப்போம். சிங்கள இராணுவம் குண்டுமழை பொழியினும் கடலில் மீன் பிடித்து வருவோம். வயல்களில் விவசாயம் செய்து அறுவடையும் செய்வோம். நமக்கென்று ஓர் ஆட்சியை நாமே அமைப்போம். போர் முரசிடையே திருமண முரசும் முழங்கட்டும். காலையில் குண்டுவீச்சால் தகர்ந்த பாடசாலையில் மதியமே கீதம் இசைப்போம். மீண்டும் நம் தேசம் பழைய நிலைமைக்குத் திரும்ப, அகதி என்னும் கல்லறையை விட்டு வெளியில் வருக என அகதிகளுக்கு அழைப்பு விடுக்கிறார் கவிஞர் வ.ஐ.ச. ஜெயபாலன்.

அகதிகளாக நாட்டைவிட்டு வெளியேறுபவரை விடவும், நாட்டிற்காகக் குண்டடிபட்டு உயிர்துறந்தவர்களை எண்ணி,

*நாட்டை விட்டோடிய*
*லட்சம் பேரைவிடவும்*
*அவர்களிடமோ*
*நம்பிக்கை இருந்தது*
*எனது தேசத்தின் மனிதர்கள்*
*என்று நான் அவர்களை*
*ஒவ்வோர் போதும்*
*நினைவு கூர்வேன்.* (ப. 48)

என அவர்களின் தியாகத்தைப் போற்றுகின்றனர் இளவாலை விஜயேந்திரன் அவர்கள்:

இடைவிடாத துயரங்களினால் நம்பிக்கையிழந்தனர் மக்கள். இந்நிலையில் கவிஞர்களின் சிந்தனைகள் மக்களின் இருப்பை உறுதிப்படுத்தும் விடுதலையை நோக்கி அவர்களை வழிநடத்துவதாய் உள்ளன. எழுத்துகள் வழி மக்களை எழுச்சி கொள்ளச் செய்கின்றனர்.

*தானியங்கித் துப்பாக்கி தொடர் வேட்டு;*
*கண நேரக் கொலைத்*
*தீர்ப்பு;*
*எரிப்பு*
*தெருவுக்குச் சாம்பல்*
*குழந்தைகளின் கனவுகளுக்கு*
*இரத்தம்* (ப. 143)

எனக் கொடுமைகள் தொடர்ந்தாலும், புதை குழிக்கிடையிலும் பிணங்களுக்கிடையிலும் புத்திர சோகத்தில் முழ்கிய அன்னையின் கண்ணீர்த்துளிகளுக்குமிடையில் துளிர்த்துக் கொண்டிருப்பது விடுதலை பெறுவோம் எனும் நம்பிக்கை மட்டுமே எனத் துவண்டுபோன உள்ளங்களுக்கு ஊக்கமளிக்கிறார்.

எவ்வளவு துன்பங்கள், அவலங்கள், உயிர், உடைமை இழப்புகளைச் சந்தித்தாலும் இவர்கள் வேண்டுவது சுதந்திரம். காக்கி உடையில் துப்பாக்கி ஏந்திய சிங்களவர் ஆடும் தாண்டவத்தில் போராடுவதே ஈழத்தமிழர்கள் விதியெனில் போராடி மடிவதும் மகத்துவம் என்று எண்ணும் இவர்களின் வேண்டுகோள், தனிநாடு அல்ல,

*மனிதனுக்குரிய வாழ்க்கை உரிமைகள்*
*மனிதனுக்குரிய கௌரவம்*
*வாழ்க்கைக்கான உத்திரவாதம்* (பக். 212, 213)

இவையே எங்கள் மக்களின் தேவை என வலியுறுத்துகிறார் கவிஞர் றுஃமான்.

நிறைவாக

ஈழ மக்களின் விடுதலைப்போராட்டப் போக்கு, உயிர்த்தியாகம், வேதனைகள், இழப்புகள், அகதி வாழ்வின் அவலங்கள் போன்றவற்றைப் பதிவு செய்யும் ஆவணமாக இக்கவிதைத் தொகுப்பு உள்ளது. மேலும் போராளிக் குழுக்களின் உள்முரண்கள், சாதி சமயப்பாகுபாடு, பெண்ணின் நிலைப்பாடு, மானுட அழிவு போன்ற அனைத்துக் கூறுகளின் உண்மைத் தன்மையை இக்கவிதைகள் பிரதிபலிக்கின்றன. ஈழமக்களின் நிலையை உள்ளது உள்ளவாறே தெளிவுபடுத்துகின்றன. இத்துன்பங்கள் அனைத்திற்கும தீர்வாக விடுதலை ஒன்றையே முன்மொழிகின்றன.

# ஆறாம் திணை : ஈழத்துப் போர் இலக்கியங்கள்

முனைவர் இராமசாமி வெங்கடேசன்
*உதவிப்பேராசிரியர்*
*செல்வம் கல்லூரி*
*நாமக்கல் - 2*

*இன்று மட்டும் பேசாதே! மௌனம்கொள்*
*உன் வாயிலிருந்து வரும் ஒவ்வொரு*
*வார்த்தைக்கும் ஒவ்வொரு துப்பாக்கிக்குண்டு*
*பரிசாகலாம்.*

*சேரன்*

தமிழில் போரிலக்கிய மரபின் ஆரம்பமாகச் சங்கப் புறத்திணை நூல்களைக் கூறலாம். புறநானூற்றிலிருந்து பதிற்றுப்பத்து வரையான புறத்திணை நூல்கள் போரை மட்டுமின்றி அரசர்களின் வீரம், கொடை போன்றவற்றையும் முன்னிறுத்திப் பேசின. பின்னால் எழுந்த காப்பியங்களில் யுத்த காண்டம் என்று ஒன்றை முழுக் காப்பியப் பிரதியில் ஒரு பகுதியாக இணைத்துப்பாடினர். சிற்றிலக்கியங்களில் பரணி இலக்கியம் போர் மற்றும் வெற்றியின் அரசியலைப் பதிவு செய்தது. பின்னால் எழுந்த நவீன இலக்கியங்கள் போர் என்பதனை விடுதலைப் போராட்ட அரசியலாகப் பார்த்தனர். இவையெல்லாம் தமிழ்ச் சூழலின் பின்னணி. ஆனால் ஈழத்துச் சூழல் என்பது வெற்றிலிருந்து மாறுபட்டது. ஈழத்தில் நடைபெற்ற தனி ஈழப்போரின் விளைவாகச் செறிவுமிக்க உலக இலக்கியங்களோடு ஒப்பிடத்தக்க போர் இலக்கியங்கள் தோன்ற ஆரம்பித்தன. இவை ஏற்கெனவே தோன்றியுள்ள இலக்கியங்களிலிருந்து முற்றிலும் மாறுபட்ட இலக்கிய வகையாக அமைந்தன. வாசகனின் இரத்தத்தைச் சூடேற்றும் இவ்விலக்கியங்கள் மாற்று அரசியலை முன்னிறுத்துவதை வெளிப்படையாக அறியமுடிகிறது.

> ஈழத்தில் போர் இலக்கியம் எனும் தொடர் தமிழ்த் தேசியத்தை முதன்மைப்படுத்திய ஆயுதப் போராட்டம் சார்ந்தது. எல்லை வரையறுக்கப்பட்ட ஒரு நாட்டை அரசியல், பொருளாதார நலன் கருதி காலனிய அரசுகள் கைப்பற்றியபோது இடம்பெற்ற விடுதலைப் போராட்டத்திற்கும் நாட்டுக்குள்ளேயே பாரம்பரிய தார்மீக உரிமைகள் நசுக்கப்பட்டபோது இடம்பெற்ற போராட்டத்திற்கும் உணர்வுசார் வேறுபாடுகள் நிறையவேயுள்ளன. பொதுவாக ஒரு நாட்டிற்கும் இன்னொரு நாட்டிற்கும்

> இடையிலான போரில் சுதேசிகள் மொழி, இன, மத பேதமற்று நாட்டுணர்வினைக் காணமுடியும். ஆனால் ஒரு நாட்டிற்குள் பெரும்பான்மைச் சமூகமொன்று சிறுபான்மைச் சமூகமொன்றை அடக்கும்போது அதற்கெதிராக வெடிக்கும் போராட்டத்தின் உணர்வுநிலை இனம், மொழி, மதம் மற்றும் பண்பாட்டு வேறுபாடுகள் காரணமாகக் கொதிநிலை உடையதாய் அமையும். அடக்குமுறைக்கு உட்பட்ட சிறுபான்மைச் சமூகத்தின் எதிர்ப்பு உணர்வில் அச்சமூகம் இறுகப் பற்றிய இன உணர்வு, மொழியுணர்வு, மதவுணர்வு மற்றும் பண்பாட்டு உணர்வுகள் மிகக் கூர்மையாகக் காணப்படும். இந்த உணர்வுக் கொதிநிலையைத் தமிழ்த்தேசியத்தை முதன்மைப்படுத்திய ஈழத்துப் போர்க்காலப் பிரதிகளில் அதிகமாகக் காணமுடிகிறது.[1]

இந்தப் பிரதிகள் தெரிவிப்பதெல்லாம் போரின் வலியைத் தவிர வேறொன்றுமில்லை.

1948இல் இலங்கை சுதந்திரம் பெற்றது. எனினும் பெரிய மாற்றங்கள் நிகழவில்லை. 1955இன் பின்னரே சின்ன சின்ன மாற்றங்கள் நிகழத் தொடங்கின. 1956 வரையும் இலங்கையின் பாரம்பரிய அரசியல் வரலாற்று மூலங்களிலிருந்து காலனிய காலத்திலும் அதற்கு முன்னரான காலத்திலும் தமிழ் - சிங்கள இனமுரண்பாடு மன்னர்களின் ஆட்சி பிடிப்பதற்கான போரில் வெளிப்படத் தொடங்கியதை அறிய முடிகிறது. ஆனால் 1956இல் இனமுரண்பாடு உக்கிரமடைந்தமைக்கான ஆரம்பப் புள்ளியாகத் தனிச் சிங்களச் சட்ட அமுலாக்கத்தைக் குறிப்பிடலாம். இதைத் தொடர்ந்து எதிர்ப்புப் போராட்டங்கள் பல நிகழத் தொடங்கின. 1956, 57, 58, 77, 83 களில் நடைபெற்ற சிறுபான்மையினருக்கெதிரான கலவரங்களும் தமிழ் மக்களின் வாழ்வியல் உரிமைகளை வெகுவாகப் பாதித்தன. சமூக ரீதியாக மட்டுமல்லாது பல்கலைக்கழக அனுமதியில் தரப்படுத்தலை அறிமுகப்படுத்துதலால் கல்வி பெறுவதிலும் தமிழர்கள் பெருமளவு பாதிக்கப்பட்டனர். இது மட்டுமன்றி அரசியல் மதமான பௌத்தம் பரவலாக்கப்பட்டதால் மதரீதியான சமத்துவநிலையும் பாதிப்புக்குள்ளானது. இன, மொழி, மத பண்பாட்டுசார் உரிமைகள் புறக்கணிக்கப்பட்ட நிலையில் ஈழத்தமிழர் தமக்குரிய அரசியலை நிலைநிறுத்துவதற்காகவும் உரிமைக்காகப் போராடுவது என்பதும் தவிர்க்க முடியாத வரலாற்றுத் தேவையாக அமைந்தது. இதனால் போராட்டம் என்பது இன, மொழி, மத பண்பாட்டுசார் அடையாளங்களை மீட்டு, தனி ஈழம் அமைத்துத் தமிழர்களின் உரிமைகளைப் பெற வேண்டும் என்பதனை மையமாகக் கொண்டது.

இதனால் தொடர்ச்சியான இனக் கலவரங்கள் அதன் விளைவாக ஏற்பட்ட இனப்படுகொலைகள் அகிம்சை வழியிலிருந்து ஆயுத வழிக்குத் தமிழர்களைத் திருப்பியது. விடுதலை இயக்க அமைப்புகள் பிறநாட்டுப் போராட்ட நெறிகளைக் கொண்ட போராட்டங்களில் ஈடுபட்டன. இதனால் அறிவுஜீவிகள் படுகொலை, அரசியல் தலைமைகளின் படுகொலைகள், ஒரே இரவில் இருப்பிடங்களைவிட்டு வெளியேற்றப்படல் போன்றவை விடுதலைக்கு எதிராக அமைந்தன. தமிழர்களின் விடுதலைப் போராட்டத்திற்கு எதிராக இன்றைக்குப் பண்பாட்டுத் தாக்கத்திற்கு உள்ளாகியுள்ளனர். இதன் விளைவாக யாழ் நூலக எரிப்புப் பண்பாட்டு அழிப்பின் கொடூரமானது. இறுதியாக, முள்ளி வாய்க்கால் அழிப்புகள் வரலாற்றின் கொடூரப் பக்கங்களாக நினைவுறுத்துபவை. இப்படியாகப் பல நிகழ்வுகள் தமிழர்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்டதால் தமிழர்கள் போர் இலக்கியங்களைப் படைக்க ஆரம்பித்தனர்.

முள்ளி வாய்க்கால் அழிப்புக்குப் பிறகு போர் நின்றுவிட்டாலும், இன்றைக்கும் பயத்துடனே தமிழர்கள் வாழ்ந்து வருகின்றனர். முள்ளி வாய்க்கால் உட்பட

> நான்கு மாதங்களே நடந்த இறுதிக்கட்டப் போரில் குறைந்தது 40,000 தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர். நல்லிணக் கத்திற்குமான ஆணைக் குழுவின் (LLRC) முன்னால் சான்று வழங்கிய மன்னார் ஆயர், 1,46,679 தமிழர்கள் பற்றிய எந்தத் தகவல்களும் இன்னும் கிடைக்கப் பெறவில்லை எனத் தெரிவித்துள்ளார்.[2]

பல இலட்சம் தமிழர்கள் போரில் கொல்லப்பட்டும் பலர் காணாமல் போயுள்ள தகவல்களும் போரிலக்கியங்கள் உக்கிரத்தோடு தோன்றுவதற்குக் காரணங்களாக அமைகின்றன. தமிழர்களின் வலியை வேதனையைப் போரிலங்கியங்கள் மிகையில்லாமல் கூறுகின்றன.

## II

போர்க்கால இலக்கியங்கள் உலகம் முழுக்கத் தோன்றியிருக் கின்றன. முதல் உலகப் போரில் ஏற்பட்ட அழிவுகளை மையப்படுத்தி ஏர்னஸ்ட் எமிங்வே 'போரே நீ போ' (Farewel to arms) என்ற நாவலை எழுதினார். மீண்டும் ஸ்பானிஸ் சர்வாதிகாரி பிராங்கோவை எதிர்த்து நிகழ்ந்த உள்நாட்டுப்போரில் உலகத்தின் அநேகமான புத்த ஜீவிகள் கலந்து கொண்டு உரையாற்றினார். அந்நிகழ்வில் கலந்து கொண்டது மட்டுமல்லாது, 'யாருக்காக மணி அடிக்கிறது' (For Whom the Bell Tolls) என்ற நாவலை எழுதினார்.

எறிக் மறியா மார்க்யு (Eric maris remercue) என்பவர் போர் பற்றிய மிகச் சிறந்த நாவலான All Quiet on the western front (மேற்கு பகுதியில் எல்லாம் அமைதியாக உள்ளது) என்ற புதினத்தைத் தந்தார். 18 வயதில் களம் கண்ட நேரடிக் காட்சியாக இப்புதினம் உள்ளது. இரண்டாம் மகாயுத்தத்தைப் பிரதிபலிப்பதாகப் பல எழுத்துக்கள் உள்ளன. இன்றைய அமெரிக்க உலகின் மாபெரும் எழுத்தாளரான Norman Mailor எழுதிய The naked and the dead என்ற நாவல் புகழ் பெற்றதாகும். 1961இல் சீனப்போர் பற்றி மு.த. வினால் எழுதிய 'சுஸ்ல்' எனும் குறுநாவல் வித்தியாசமான கதை சொல்லலைக் கொண்டது. உலகின் பல படைப்புகள் போர் பற்றிய சித்திரிப்புகளை உருவாக்கியிருக்கின்றன. போர் இலக்கியங்கள் மகிழ்ச்சிக்கு உரியதல்ல. இலக்கியத்தின் தலையாய நோக்கம் மகிழ்வு பெறல் (Enjoyable) என்ற கருத்தைப் போர்க்கால இலக்கியங்கள் மறுபரிசீலனைப்படுத்தும். வாசகர் கொடுப்பவற்றை உள்வாங்குவோராய் இல்லாமல் நேர் அனுபவங்களில் இருந்து கூர்மைப்படுத்தும். போர் என்பது விளைவின் முகிழ்ப்பு (Product) என்று குறிப்பிடப்படும். சமூகப் பொருளாதார அரசியற் செயல்முறையின் தொடர்ச்சியிலிருந்து அது தோற்றம் பெறும். போர்க்கால இலக்கியங்கள் பொதுவாக ஆழ்மன உளவியலோடு தோய்ந்து எழுந்தவையாக இருக்கும்.

உலகில் போர் பற்றிய கதையாடல்கள் இருந்தாலும், ஈழத்தின் பின்னணியில் தோன்றிய போர் இலக்கியங்கள் தனித்துவம் கொண்டவை. விடுதலை அமைப்புகளின் கொள்கை பற்றிய ஆரம்பக்கால வெளியீடுகள், பிரசுரங்கள், சுவரொட்டிகள், மொழி, உணர்ச்சி சார்ந்த படைப்புகள் முதலியனவும் பன்னூற்றாண்டு மரபுத் தமிழ் இலக்கியச் செழுமையும் ஒன்றிணைந்து உருவ உள்ளடக்கப் புதுமை கொண்ட உயிர்ப்பும் வீச்சும் மிக்க ஈழத்துப் போர் இலக்கியம் தோன்றியது. 1985இல் வெளிவந்த 'மரணத்துள் வாழ்வோம்' என்ற கவிதைத் தொகுப்பு போரைப் பதிவு செய்த முதலாவது இலக்கியத் தொகுப்பாகும். இதனைத் தொடர்ந்து போரையும் போரின் வலிகளையும் பிரதிபலிக்கும் பல கவிதைத் தொகுதிகளும் சிறுகதைத் தொகுதிகளும் நாவல்களும் நாடகங்களும் வெளிவந்துள்ளன.

ஈழத்துப் போரைப் பற்றி நாவல்கள், சிறுகதைகள், நாடகங்கள், கவிதைகள் பேசியுள்ளன என்றாலும் கவிதைகள் வெளிப்படுத்திய உணர்ச்சி மோதல்கள் அதிகம். வலிமிகுந்த சொற்கள் வாசகனை எளிதாக நட்புக் கொள்கின்றன. அதனால் போர்க் கவிதைகள் எளிதாகப் போர் பற்றிய வேதனையை உருவாக்கிவிடுகின்றன. ஈழத்துத் தமிழர் அழிப்பு களைக் கவிதைகள் பேசிய அளவிற்கு மற்றொன்று பேசிவிடவில்லை. போர் பற்றிய கருத்தியலை, வலியைச் சொல்வதற்கு இந்தவொரு கவிதை போதுமானதாகும்.

*தெருப்புழுதியில் உன் உடம்பு*
*முதுகெல்லாம் இரத்த வெள்ளம்*
*நீதானா எனக் குனிந்து பார்த்தேன்.*
*ஓம் ராசா நீயேதான்*
*ஏன் ஆச்சி அழுகிறாய்?*
*கூடி நிற்கும் சனம் கேட்க*
*பொடியனைத் தெரியுமா உனக்கு?*
*மிரட்டுகிறான் காக்கிச்சட்டை*
*அவன் கையில் துவக்கு வெயிலில் மின்னுகிறது*
*தெரியாது என்று தலையசைத்தேன்*
*நான் பெற்ற முதல் முத்தை*

*குருஷேத்திரத்தில் கர்ணன் வீழ*
*ஐயோ மகனே என்று குந்தி*
*ஓடிச்சென்று அணைத்தாளே*
*ஐயோ ராசா நான் பாவி*
*என் பிள்ளை என்று சொல்ல*
*முடியாத பாவியானேன்*

எனும் சன்மார்க்காவின் 'ஒரு தாயின் புலம்பல்' என்ற கவிதை ஒரு தாயின் வேதனை விரக்தியை முன்வைக்கிறது. போரைப் புரிந்துகொள்ள சிவரமணியின் யுத்தகாலக் 'கரவொன்றின் புலம்பல் நெருக்குதல்' கடந்தகால அரசியல் சமூக வட்டத்தையும் சம்பவங்களையும் யதார்த்தத்தின் குரூரத்தையும் அழுத்தமாகவும் ஆழமாகவும் வெளிப்படுத்துகிறது.

*தெருவில்*
*அவலமும் பதற்றமுமாய்*
*நாய்கள் குரைக்கும்போது*
*பூட்டப்பட்ட கதவுகளை*
*மீண்டும் ஒருமுறை சரிபார்த்துவிட்டு*
*எல்லோரும் தூங்கப் போகும் நேரத்தில்*
*நான்*
*நாளைக்கு*
*தோன்றுகின்ற சூரியனைப் பற்றி*
*எண்ண முடியாது*
*இரவு எனக்கு முக்கியமானது*
*நேற்றைப்போல்*
*மீண்டும் ஒரு*
*நண்பர் தொலைந்து*
*போகக் கூடிய*
*இந்த இருட்டு*
*எனக்கு மிகவும் பெறுமதியானது.*

போர், பெண்களுக்கு வரையறுக்கப்பட்ட கலாச்சாரத் தடைகளைத் தகர்க்கின்றது. போர்க்களம் சென்ற பெண்கள் இரவுக் காவல் பணி மேற்கொள்வது இயல்பாகிறது. சிங்களவர்களுக்கு எதிரான போரில் பங்கேற்ற பெண்களைப் பாலியல் கொடுமை செய்வது இயல்பாகிறது. ஈழத்தில் இதுவொரு சாதாரண நிகழ்வு. போர்க்காலத்தில் பலாத்காரம், சித்திரவதை, காணாமல் போதல், கொல்லப்படல், பாலியல் வன்கொடுமை போன்றவை பெண்ணின் இருப்பைச் சிதைத்தன. கோணேஸ்வரி, கிருஷாந்தி, ஜீடா மாலிட்ட, ராகினி போன்ற பல பெண்கள் குதறிச் சிதறடிக்கப்பட்டனர். கிழக்கு மாகாணத்தில் மனிதாபிமானத்திற்கு அப்பாற்பட்ட அரச படையினரால் பாலியல் வன்கொடுமைக்குள்ளாகி யோனிக்குள் வெடிகுண்டைச் செலுத்திப் பாலியல் குதறிச் சிதைக்கப்பட்ட கோணேஸ்வரியைக் குறியீடாக்கி எழும் கலாவின் 'கோணேஸ்வரிகள்' எனும் கவிதை முக்கியமானதாகும்.

*அன்பான என் தமிழச்சிகளே*
*இத்தீவின் சமாதானத்திற்காய்*
*நீங்கள் என்ன செய்தீர்கள்?*
*ஆகவே வாருங்கள்*
*உடைகளைக் கழற்றி*
*உங்களை நிர்வாணப்படுத்திக் கொள்ளுங்கள்*
*என் அம்மாவே உன்னையும்தான்*
*சமாதானத்திற்காகப் போரிடும்*
*புத்தரின் வழிவந்தவர்களாய்*
*உங்களின் யோனிகளைத் திறவுங்கள்*
*அவர்களின் உக்கிரங்களை*
*எங்கு கொட்டுதல் இயலும்?*
*வீரர்களே வாருங்கள்*
*உங்கள் உக்கிரங்களைத் தீர்த்துக் கொள்ளுங்கள்*
*என் பின்னால்*
*என் பள்ளித் தங்கையும் உள்ளாள்*
*தீர்ந்ததா எல்லாம்?*
*அவ்வளவோடு நின்று விடாதீர்*
*எங்கள் யோனிகள் ஊடே*
*நாளைய சந்ததி தளிர்விடக்கூடும்*
*ஆகவே,*
*வெடிவைத்தே சிதறடியுங்கள்*
*ஒவ்வொரு துண்டுகளையும் கட்டிப்*
*புதையுங்கள்*

*இனிமேல் எம்மினம் தளிர்விட முடியாதபடி*
*சிங்களச் சகோதரிகளே*
*உங்கள் யோனிகளுக்கு*
*இப்போது வேலையில்லை.*

புத்த மத நெறிமுறைகளின்படி அமைதி காக்க வேண்டிய சிங்களவர்கள் தமிழர்களைக் கொன்று குவித்து விட்டனர். அவர்கள் கொன்றது தமிழன் அல்ல. புத்தரை என்று எம். ஏ. நுஃமான் 'புத்தரின் படுகொலை' என்ற கவிதையில் கூறுகிறார்.

*நேற்று என் கனவில்*
*புத்தர் பெருமான் சுடப்பட்டிறந்தார்*
*சிவில் உடை அணிந்த*
*அரச காவலர் அவரைக் கொன்றனர்*
*யாழ் நூலகத்தின் பழக்கட்டருகே*
*அவரது சடலம் குருதியில் கிடந்தது*
*இரவின் இருளில்*
*அமைச்சர்கள் வந்தனர்*
*'எங்கள் பட்டியலில் இவர் பெயர், இல்லை*
*பின் ஏன் கொன்றீர்?'*
*என்று சினந்தனர்*
*இல்லை ஐயா*
*தவறுகள் எதுவும் நிகழவே இல்லை*
*இவரைச் சுடாமல்*
*ஒரு ஈயினைக்கூடச்*
*சுடமுடியாது போயிற்று எம்மால்*
*ஆகையினால் தான்*
*என்றனர் அவர்கள்*
*சரிசரி*
*உடனே மறையுங்கள் பிணத்தை*
*என்று கூறி அமைச்சர்கள் மறைந்தனர்*
*சிவில் உடையாளர்*
*பிணத்தை உள்ளே இழுத்துச் சென்றனர்*
*தொண்ணூறாயிரம் புத்தகங்களால்*
*புத்தரின் மேனியை மூடி மறைத்தனர்*
*சிகாலோகவாத சூத்திரத்தை*
*கொளுத்தி எரித்தனர்*
*புத்தரின் சடலம் அஸ்தியானது*
*தம்ம பதமும்தான் சாம்பலானது*

புத்தரைக் கொண்டாட வேண்டியவர்கள் புத்தரோடு சேர்த்துப் பௌத்தமதச் சிகாலோகபாத சாத்திரத்தையும் தம்மபதத்தையும் கொளுத்தி விட்டனர் என்கிறார் எம்.ஏ.நுஃமான். உண்மைதான். இன்றைக்கு பௌத்தத்தைக் ஒழித்துப் பின் சிங்களத்தை எழுப்பிக்கொண்டிருக் கின்றனர்.

தமிழர்களுக்கு எதிரான போரில் ஒட்டுமொத்த சிங்களர்களும் செயல்பட்டனர் என்று சொல்வதற்கில்லை. சிங்களச் சிந்தனையாளர்கள் பலரும் தமிழர் அழிப்புக்கு எதிரான குரல்களை பதிவு செய்துள்ளனர். அப்படி பதிவு செய்த பலர் ஏதோவொரு வகையில் கொல்லப்பட்டுள்ளனர். சிங்களர்களாக இருந்தும் தமிழர்களாய்த் தமிழர் வலிகளை, வேதனைகளை உணர்ந்து கவிதை எழுதியதில் அஜீத் ஹேரத்[3] மங்சுள வெடிவர்த்தன[4] மாலதி கல்பனா அம்புரோஸ்[5] அர்விந்த் பெரேரா[6] போன்றோர் முக்கியமானவர்கள்.

நியாயத்தின்படி, நீதியின்படி தர்மத்தின்படி, தம்மை ஒழுங்குபடுத்திய நடவடிக்கைக்குள்ளாக்க யுத்தப் பிரபுக்கள் விரும்புவதில்லை. ஆகவே, வெல்லும் முனைப்பால் சாத்தியமான எல்லாத் தளங்களிலும் அவர்கள் முயற்சிக்கின்றனர். அதற்காக மேல் கீழ் வழிமுறைகள் அனைத்தும் பிரயோகிக்கப்படுகின்றன. இந்த நிலையில் உண்மை பல சந்தர்ப்பங்களிலும் இவர்களுக்கும் கடினமான நிலைகளை ஏற்படுத்துகிறது. மேல், கீழ் வழிமுறைகள் உண்மை. ஒரு போதும் அங்கீகரிப்பதில்லை. அது எப்போதும் மேல் நிலையைத்தான் ஏற்கும். அப்போதெல்லாம் இவர்கள் தயக்கமின்றி உண்மையைக் கொல்கின்றனர். சில வேளை இந்தக் கொலை இரகசியக் கொலையாக நடக்கிறது. ஆகவே, எந்த நிலையிலும் இவர்கள் உண்மையைக் கொல்லத் தயங்குவதில்லை. சில சந்தர்ப்பங்களில் பகிரங்கக் கொலையாக நடக்கிறது. போரின் இறுதிக் கட்டத்தில் தமிழ் மக்கள் மீது ஒருங்கிணைக்கப்பட்ட தாக்குதல்கள் நடத்திய வேளையில் இலங்கை அரசின் இராணுவ அரசியல் தலைவர்களின் கூற்றுக்கள் அரசின் திட்டவட்டமான நோக்கத்தை எடுத்துக்காட்டுகின்றன.

> இந்த நாடு சிங்களவர்களுக்கு மட்டுமே சொந்தமானது என நான் உறுதியாக நம்புகிறேன். ஜனத்தொகையில் 75 விழுக்காட்டினராகிய நாங்கள் ஒரு போதும் அடி பணியமாட்டோம். இந்த நாட்டைத் தற்காக்கும் உரிமை எமக்கே உண்டு. சிறுபான்மையினர் இங்கே வாழலாம். ஆனால் அவர்கள் சிறுபான்மையினர் என்ற போர்வையில் நியாயமற்ற கோரிக்கைகளை முன்வைக்க முடியாது.
>
> (லெப்டினன் ஜெனரல் சரத் பொன்சேகா, 23 செப்டம்பர் 2008).

வரையறுக்கப்பட்ட பாதுகாப்பு வளையத்திற்கு வெளியே உள்ள எதுவும் தாக்குதலுக்காகக் குறிவைக்கப்படும். வைத்திய சாலையாக இருந்தாலும் சரி, பொதுமக்களாக இருந்தாலும் சரி அது பாதுகாப்பு வளையத்திற்கு ஏற்புடைய இலக்காகவே இருக்கும்.

(பாதுகாப்புச் செயலர், கோத்தபாய ராஜபக்சே, 2 பிப்ரவரி 2009)

பொன்சேகா, கோத்தபாய ராஜபக்சே இருவரின் கருத்தியலும் சிங்களவர்களின் கருத்தியலும் இலங்கையைத் தங்களுடையதாகப் பிரகடனப்படுத்திக் கொண்டு செயல்படுகின்றன. போர் ஏற்படுத்திய வலிகள் எளிதில் மறந்துவிடக்கூடியவை அல்ல. அது அவமானச் சின்னங்களாகத் தலைமுறை கடந்து நிற்கக்கூடியவை. போர் நினைவுகள் உள்ளவரை போர் இலக்கியங்கள் அவற்றை உக்கிரமாய்ப் பேசிக்கொண்டே இருக்கும். தமிழில் தனிவகை இலக்கியமாக அது வளம்பெறும்.

## குறிப்புகள்

1. ஞானம் கலை இலக்கிய சஞ்சிகை, 150 ஆவது இதழ், ஈழத்துப்போர் இலக்கியச் சிறப்பிதழ், ப. 4
2. காலச்சுவடு, மே 2012, இதழ் 149, ப. 16
3. சுஜித் ஹேரத்

   1967இல் மத்திய இலங்கையில் பிறந்த சுவித் சி. ஹேரத் மாணவர் அரசியல் இயக்கங்களில் தீவிரப் பங்காற்றி 1989இல் இராணுவத்தால் கைது செய்யப்பட்டார். இவருடைய கவிதைகள் மாற்று ஊடகங்களில் அதிகம் வெளியாகியுள்ளன. தற்போதைய இலங்கை அரசின் இனவாத இராணுவ அடக்குமுறையை எதிர்த்துக் கவிதைகளும் கேலிச் சித்திரங்களும் படைத்து வருகிறார்.
4. மஞ்சுள வெடிவர்த்தன, ராவய சிங்கள வார இதழில் பணியாற்றியவர். இவரது முதலாவது சிறுகதைத் தொகுதி 'மரியாவும் மேரியும்' தெய்வ நிந்தனை என்னும் குற்றச்சாட்டில் இலங்கையின் கத்தோலிக்கத் திருச்சபையின் கண்டனத்துக்கு ஆளாகியது. இந்தக் குற்றச்சாட்டில் இலங்கை புலனாய்வுத் துறையால் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டார். நூலும் தடை செய்யப்பட்டது. இரண்டு கவிதை நூல்களும் ஒரு நாவலும் வெளியாகியுள்ளன. தமிழ் மக்களின் போராட்டத்துக்கு ஆதரவாகச் செயல்பட்டமையால் இலங்கை அரசின் துன்புறுத்தலுக்கு ஆளானார். இப்போது பிரான்சில் அரசியல் தஞ்சம் பெற்று வாழ்ந்து வருகிறார்.
5. மாலதி கல்பனா அம்புரோஸ் கொழும்பில் வசித்து வரும் சிங்களக் கவிஞர். சிங்களத்தில் கவிதைத் தொகுப்பு ஒன்று வெளியாகியுள்ளது. கவிதைகளையும் கவிதை குறித்த கட்டுரைகளையும் மொழிபெயர்த்து வருகிறார்.
6. அர்விந்த் பெரேரா, இலங்கையில் தொலைக்காட்சியில் நிகழ்ச்சித் தொகுப்பாளராகப் பணியாற்றுகிறார். சிறுகதைகளும் கவிதைகளும் எழுதி வரும் இவர் கலாச்சாரம் தொடர்பான சமூகச் செயல்பாட்டாளராகக் கொழும்பில் இயங்கி வருகிறார்.

# போருக்குப் பின்னான ஈழத்துத் தமிழ்க் கவிதைகள்: விட்டு விலகும் பெருங்கதையாடல்

திரு. ந. மயூரரூபன்
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*
*இலங்கை*

ஈழத்தில் நடைபெற்ற போர், ஈழத்துத் தமிழர்களது வாழ்வில் பெரும் வடுவாக அமைந்துவிட்டுள்ளது. தமிழர்களின் சமூக இருப்பென்பது இருவகையான அரசியல் அதிகாரங்களினால் கட்டுண்டது. முரணான இரு கட்டுக்குள் வாழ்ந்தவர்கள் தமிழர்கள். இரு வகை அரசியலைப் பேசினார்கள்.

ஒவ்வொரு வகையான நம்பிக்கைகளைத் தங்களுக்குள் கட்டி அமைத்தார்கள். தமிழ்த் தேசியம் தொடர்பானதும், தங்களதும் தொடர்பான பாரிய எதிர்பார்ப்பும் அவர்களுக்கு இருந்தது.

ஆனால் போர் அனைத்தையும் புரட்டிப்போட்டது. மக்களை - படைப்பாளிகளை - அவர்களின் கருத்தியல்களை மாற்றிப்போட்டுள்ளது.

போருக்குப் பின்னான படைப்புகள் பல, அவர்களின் மன நிகழ்வுகளாக வெளிப்பட்டுள்ளன. அவை பேசும் அரசியல், அவை பேசும் வலி, அவை தரும் கண்ணீர், அவை தரும் பாரம் எப்படி உணரப்படுகின்றன என்பது கவனத்திற்குரியது.

இங்குப் போருக்குப் பின்னான கவிதைகள் தெரிந்தெடுக்கப் பட்டுள்ளன. படைப்பாளிகளால், தமிழ்த் தேசியம் இனவாதத்திற்கெதிரான மனநிலை, புலிகளின் ஏதேச்சதிகாரத்திற்கெதிரான குரல், விடுதலை, சுதந்திரம், என முன்னர்ப் பேசப்பட்டுவந்த பெருங்கதையாடல் பண்புகள் நிறைந்த படைப்புகள் இன்று வேறொரு தளத்திற்கு நகர்ந்திருக்கின்றன என்பதை அடிக்கோடிடுவதாகவே இக்கட்டுரை அமையும். இதுவரையும் பெருங்கதையாடல் பண்புகள் ஆங்காங்கே கவிதைகளில் வெளிப்பட்டுக் கொண்டிருந்தாலும் ஒரு பருநிலைப் பார்வையில் பெருங்கதையாடலை விட்டு விலகும் பண்பினை அடையாளங்காணும் முயற்சியாக இதனைக் கொள்ள முடியும்.

ஈழத்துத் தமிழ் இலக்கியம் தொடர்பாகப் பல்வேறுபட்ட மொழிதல்களை நாம் சந்தித்திருக்கின்றோம். பொதுவாகத் தமிழ்நாட்டுப் பதிவுகள் ஈழத்துப் படைப்பாளிகளுக்கு ஏமாற்றத்தைத் தருபவையாகவே அமைந்திருந்தன. ஈழத்துத் தமிழ்ப்படைப்புக்கள் சரியான கவனிப்பைப் பெறவில்லையோ என

ஆதங்கம் பலருக்கு உண்டு. குறிப்பாக ஈழத்து இலக்கியம் குறித்து எனக்கு எப்போதுமே எதிர்பார்ப்பும் ஏமாற்றமும் இருந்துள்ளன என ஜெயமோகன் பதிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஈழத்துத் தமிழ் இலக்கிய வெளிப்பாடுகள் உரிய வாசிப்பினை - அவற்றின் நுண் தளத்தில் பெறவில்லை என்கின்ற விடயம் உண்மையானது. ஆயினும், மிக அண்மைக்காலத்தில் குறிப்பாக ஈழத்தில் நடைபெற்ற போர் - போருக்குப் பின்னைய காலத்தில் ஈழப்படைப்புக்கள் ஒருவித அதீத கவனிப்பைப் பெற்றுள்ளன. ஜனரஞ்சக பாத்திரத்தைப் பெற்றுவிடும் சந்திப்பில் அவை உள்ளன.

போர் - போருக்குப்பின்னான அசாதாரண, பெருங்காய அனுபவங்களும், அவை தரும் மொழியுலகும் நுகர்பண்டமாகும் அபாயமும் நிகழ்ந்துள்ளது. இந்தச் சூழலில், போருக்குப் பின்னான ஈழத்துத் தமிழ் கவிதைகள் தம் உணர்வுத் தளத்தில் எந்த அடுக்கில் நகர்ந்து கொண்டுள்ளன என்பதைச் சில கவிஞர்களின் தெரிந்தெ டுக்கப்பட்ட கவிதைகளின் ஊடாகப் பார்ப்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

படைப்பு என்பது முற்றுமுழுதாக ஒரு தூய உருவாக்கம் அன்று. ஏனெனில் அது இல்லாத ஒன்றில் இருந்து உருவாவது அன்று. எங்கோ ஒரு வெளியில் இருந்து பிரம்மமாய்த் தோன்றுவதும் அன்று. அது ஒரு தேவையில் இருந்து உருவாவது. எமக்குள்ள தேவை ஒன்று உருவாக்கித் தருகின்ற வெளிப்பாட்டு அடையாளமே படைப்பு.

ஒரு படைப்பை முழுமையாக்கும் சட்டகங்கள் எவை?

எழுத்தாளனின் பிரக்ஞையா?

அவனது நனவிலி மனமா?

புறவய உத்திகளா?

மாதிரிச் சட்டகமா?

உண்மையில் எத்தனிச்சட்டகங்களும் தமக்குரியதாகப் படைப்பை அடையாளப்படுத்த முடியாது. மேற்குறித்தவற்றுடன் வாசகனின் மன - மொழி இயங்கியல் இணையும்போதுதான் படைப்பின் முழுமையை உணர முடியும்.

இதனால் ஒரு படைப்பு ஒருமைப்பட்ட புள்ளியை நோக்கி நகர்வது சாத்தியமற்றதாகின்றது. இந்த எழுத்தின் மையம் உடைக்கப்படுவதை நாம் கண்டுகொள்ள முடியும்.

**பெருங்கதையாடல்**

சமூகம், இனம், நாடு, உலகம் என்பன கட்டமைத்த புனைவுக்குள் அமிழ்ந்துள்ள மனிதன் தன் சுயத்தை அவற்றின் இயல்பிலேயே கட்டமைத்து உள்ளான்.

பொதுவாக அறிவும், ஆன்மிகமும் இணைந்து வரலாற்று அடுக்குகளின் ஊடாகக் கட்டமைத்துள்ள இந்தப் பெருங்கதையாடல்கள் (Meta Narrations) மனிதனின் கலாசார, சமூக இயங்கியலின் மீது அதிகாரத்தைச் செலுத்துவதாகவே இருந்து வருகின்றது. இன்றைய சூழலில் உயர்தனிக் கதையாடல்கள் (Master Narrations) பிரச்சினைக்கு உட்பட்டு மறைந்து போகும் யுகத்தில் வாழ்கின்றோம் என ஃபிரான்சுவர் குறிப்பிடுகின்றார். இரண்டாம் போருக்குப்பின்னர் முற்போக்கு, விடுதலை, மீட்சி தொடர்பான கோட்பாடுகள் தங்களது நம்பகத்தன்மையை இழந்து விட்டன.

இதனை இன்றைய பின்நவீனத்துவக் கோட்பாட்டின் அடிப்படையில் இணைத்துப் பார்க்க முடியும். இங்குப் பின்நவீனத்துவ சாரமாகப் படைப்புகளில் அவநம்பிக்கைப் பார்வை தொடர்ந்து பேணப்படுவதனை அவதானிக்க முடியும்.

ஏற்கெனவே ஈழத்துத் தமிழ்ச் சூழலில் நிலவி வந்த தேசியவாதம் சார்ந்த நம்பிக்கைகள், விசுவாசங்கள் இயல்பிழந்து அவநம்பிக்கையைப் போர்வையாக்கியுள்ளன. ஆனால் ஆண், பெண் என்கின்ற பெருங்கதையாடல் ஏற்படுத்தியுள்ள இடைவெளிகளில் வக்கிரங்களை நிறைக்கும் சூழலும் உருவாகியிருக்கின்றது.

*உண்மையின் புலன்கடந்த உறுதிப்பாடுகள்*
*இறந்துவிட்டன, மொழி விளையாட்டுக்களின்*
*துயரமான போராட்டத்தில் பொதுப்பகுப்பு முறைகள்*
*மறைந்துவிட்டன, வட்டாரச் சொல்லாடல்களைக்*
*கடந்த உண்மைக்கான விதிமுறைகள் என்று*
*ஏதுமில்லை, இருப்பதெல்லாம் தம்மை நியாயப்*
*படுத்திக்கொள்ளப் போராடும் வட்டாரக் கதைகூறல்களின்*
*முடிவுற்ற போர் மட்டுமே*

*– செய்லா பென்ஹபிப், சிட்சுவேட்டிங் த செல்ப் (1952)*

பொதுவாக, பேராதிக்கம் கொண்ட எமது தத்துவார்த்த அரசியல் கோட்பாடுகளை வெறுக்கும் அதன் அதிகாரக் கருத்தியல்களை விமர்சிக்கும் பார்வையைப் பின்நவீனத்துவம் தருகின்றது.

*கடவுளர் அலையும் காலத்தில்*
*இரவில் புணர்ச்சிக்கலையும் நாய்களினது*
*காலடி ஓசைகளும் கடவுளர்களுடையவைதான்*
*ஒப்பாரிகளும், விசும்பல்களும்*
*ஓலங்களினாலுமான நகரத்தில்*
*சனங்களின் பிரார்த்தனை*
*தெருவில் சுடப்பட்டு இறந்தவனின்*
*இறுதி மன்றாடலாயும் கதறலாயும்*
*நிர்க்கதியாய் அலைகின்றது*

*(கடவுள்களின் நகரங்களில் வாழுதல் , சித்தாந்தன்)*

போருக்குப் பின்னான இருப்பைக் கேள்விக்குள்ளாக்கும் சித்தாந்தங் களின் வரிகள் இவை, அதிகாரத்தின் அனைத்து முனைகளிலும் கடவுளர்களே சாவைப் பரிசளிக்க அலைந்து கொண்டு இருக்கின்றார்கள். சர்வாதிகார இராணுவ அடக்குமுறைக்குள் வாழும் ஓர் மனிதனின் விமர்சனமாக இது அமைகின்றது.

*களங்கமற்ற மனத்துடன்*
*அவனுக்காக தன்னுடைய உயிரைத்தருகிற*
*ஒவ்வொருவருக்கும்*
*அவன் ஒரு சவப்பெட்டியைப் பரிசாகத் தருகிறான்*

*(கொலைக்கலைஞன், சேரன்)*

பெரும்பான்மையான ஈழத்தமிழர்கள் நம்பிக்கை கொண்டிருந்த போரின் தலைமை கொண்டிருந்த கொள்கையைக் கேள்விக்குள்ளாக்கும் கவிதை சேரனுடையது.

இங்குச் சித்தாந்தன், சேரன் இருவரும் இரு வேறுபட்ட அதிகாரங்களை விமர்சிக்கின்றார்கள். குறித்த பெருங்கதையாடல்கள் மீது போர் தொடுக்கும் பின்நவீனத்துவ வாசிப்பினை நாம் கண்டு கொள்ள முடியும்.

### உடனடித்தன்மை

இங்கு, பிரடரிக் ஜேம்சனின் ஒப்பீடு ஒன்றைப் பார்ப்பது பொருத்த முடையது. இது ஓவியம் தொடர்பானது. காலணிகளைப் (Shoes) பல ஓவியர்கள் ஓவியமாக்கியுள்ளார்கள். முக்கியமாக வின்சன்ட் வான்கோவின் ஒரு சோடி பூட்ஸ்கள் என்ற ஓவியத்தையும், அன்டிவரோல் எனும் ஓவியரின் டைமண்ட் தூள் ஷூஸையும் ஒப்பிடுகின்றார்.

அன்டிவரோலின் ஷூ பற்றிய ஓவியம் சிறப்பானது. ஆனால் அதில் பார்ப்போனோடு பேசக்கூடிய பண்பு இல்லை. பார்ப்போன் தனக்கு ஓரிடம். ஓவியத்தில் உள்ளது என்பதை நினைக்க முடியாது. ஆனால் வான்கோவின் ஓவியம் அவ்வாறானது அல்ல. அது நவீனக் காலக்கட்டத்தைச் சேர்ந்த காலணி ஓவியத்தோடு பார்ப்போனுக்கு ஓர் உறவை ஏற்படுத்த வல்லது. இதிலொரு உடனடித்தன்மை (Immediacy) இருக்கின்றது என்கின்றார் ஜேம்சன். அது ஹிட்லரின் அவுஸ்விட்ஸ் (போலந்து நாட்டில் உள்ளது) சித்திரைவதை முகாம் குவிக்கப்பட்ட காலணிகளைப் போலத் தொங்குவதை நினைவூட்டுகின்றது.

இதே தன்மையை ஈழத்துத் தமிழ்க் கவிதைகளில் நாம் கண்டு கொள்ளமுடியும்.

1. *திசைகளைப் பிடுங்கி நொடியில் வீசும்*
*பீரங்கிக் குண்டொன்றை விடவும்*
*இருப்பவனையும்*
*பல்லாயிரமாண்டுகள் முன்னால் மாண்டவனையும்*
*ஒரு சேரக் கொத்தியெறிந்துவிடும்*
*விமானக் குண்டொன்றை விடவும்*
*கபாலத்தினை உடைத்துத் திறக்குமொரு*
*தோட்டாவினை விடவும் விடவும்*
*அச்சுறுத்தியது என்னை அந்தக் குரல்கள்....*

*(பாயிரம், பா.அகிலன்)*

2. *மாண்டவர் இனி வரார்,*
*எந்தப் பிள்ளையும் உயிர் திரும்பா,*
*தகிக்கும் பிணக்குவியலுக்குள்*
*இரத்தம் உறைந்த தங்கவாள்*
*கண்டெடுத்ததென்ன பிரயோசனம்..*

*(கனத்த நாள், தானாவிஷ்ணு)*

பா. அகிலன் மற்றும் தானா விஷ்ணு ஆகியோரின் இக் கவிதை வரிகள் தருகின்ற உடனடித்தன்மை என்பது எமக்குள் காட்சியாய் விரிகின்றது.

போர் நடக்கும் இடத்தில் அலறும் குரல்களின் அவலமும் மாண்டபின் கிடைக்கும் நிலம் அல்லது சுதந்திரத்தினால் என்ன பலன் என்கின்ற ஓலமும் ஈழப்போரின் புலத்தினை இரத்தமும் சதையுமாக அறுத்துத்தருகின்றன.

ஈழத்துப் போருக்குப் பின்னான கவிதைப்படைப்புக்களில் அடையாளம் காட்ட முனையும் விடயம் இதுதான். பெருங்கதையாடல்களுக்குள் சுற்றுச்

சுழன்றோடி வந்த படைப்புகள் அவற்றினின்றும் விலகி உடனடித்தன்மை எனும் ஓர் உணர் தளத்துக்குள் வந்து நிற்கின்றன. அவ்வுணர்தளத்தினை நம்பிக்கையின்மை என்பதாக அடையாளம் காட்ட முடியும். இதுவரை கொண்டிருந்த நம்பிக்கைகள், எதிர்பார்ப்புகள் பொய்த்துப்போய் இழப்பு - அழுகை - தீர்க்கமுடியாத பெரும் துக்கத்தால் மனங்கள் அலைக் கழிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இயற்கை - இருப்பு - வாழ்க்கை புரண்டுபோய் இன்னொரு தோற்றத் தைத் தருகின்றது. கடந்த காலத்தின் மீது கோபமும் கழிவிரக்கமும் தோற்றுவிடுகின்றன.

நீட்சேயின் படைப்புகளில் காணப்படும் சிதறுண்ட தன்மையும் திடீரென அபத்தத்துக்குத் தாவிவிடும் அகவயமும் ஈழத்துப் போருக்குப் பின்னான கவிதைகளில் காணமுடிகின்றது.

இங்குப் பேசப்படுகின்ற நம்பிக்கையின்மை என்பது:

அ) இரண்டு அரசியல் அதிகாரங்களுக்கு எதிரானது அல்லது அதன் மீதானது.

1. *பாலூரற்ற ஊற்றுப் பெருகும்*
*எம் கண்ணீரைக் கேளிக்கையாக்கி*
*களிக்கூத்து ஆடும்*
*மாற்றவர்களுக்கு*
*நம்*
*மாற்று வழி என்ன*

*(காடாற்று, சேரன்)*

2. *அவர்களின் பகலில் இருளில்*
*பாதாளச் சிறையுள்*
*நிழலாய்ப் படிகிறான் காலபைரவன்*
*குழந்தைகள் பாதளச் சிறையுள்*
*விறைத்துக் கிடக்க*
*குழந்தைகளின் பறவைகள்*
*தீ மணலில் வீழ்ந்து புரண்டன*
*அவர்களின் மூளையைத் தின்றபடி*
*உட்கார்ந்திருக்கிறது நொண்டி நாய்*

*(காலபைரவன், தானா விஷ்ணு)*

ஈழத்தமிழர்கள் மீது தமது ஆயுத - அரசியல் அதிகாரங்களைச் செலுத்திய தரப்பினர் மீதான நம்பிக்கையின்மையைச் சுட்டும் வகை மாதிரிகள் இவை.

ஆ) பெரும்பான்மைத் தமிழர்களினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தலைமை முடிந்துபோனதன் பின் எழும் நம்பிக்கை இழப்பாக இது அமைகின்றது.

*யாரும் சென்றடைய முடியாத ஏரியொன்றில்*
*கடைசியாக அது*
*மறைந்து கொண்டிருந்தது*
*நீர்ப் பரப்பில் உதிரத்தைக் கரைத்தபடி*
*சூரியன் செத்துப் போனநிலத்தை*
*ஊழியின் பெருமழை நனைத்தது*
*அது உருவாக்கிய பட்டினங்களில்*
*நிரந்தர இருள் படியலாயிற்று*

*(சூரியன் மூழ்கிய ஆகாயம், பஹீமா ஜகான்)*

விடுதலைப்புலிகளின் தலைமை போரில் இறந்தபின் அவர் உருவாக்கிய நகரங்கள் இருண்டு போயின என்பது, அவரால் உருவாக்கப்பட்ட நம்பிக்கைகள் மனிதர்கள், மற்றும் எதிர்பார்ப்புகள் பொய்த்துப் போயின எனும் அவநம்பிக்கையின் சாரத்தைத் தருகின்றது.

இ) சாவின் மீதானது.

1) *முண்டத்திற்கு மேலும் கீழும் ஒன்றுமில்லை*

*இரத்த வெடில்*
*சிதம்பியழுகிய உடலை தொடமுதல்*
*முறிந்தன என்புகள்*

*“குழந்தைகள் போலும்”*

*மூடையாய்க் கட்டிய பின்*
*ஓரமாய்க் குவிக்கத் தொடங்கினோம்*

*(பொதி இலக்கம் 106 உம் பிறவும் , பா. அகிலன்)*

2) *நீயோ நானோ*
*இருந்த சுவடு பற்றி*
*யாரும் கவலையுறப் போவதில்லை*

*(வாழ்வின் குறிப்புக்கள், கை.சரவணன்)*

3) *ஒருவர் பின் ஒருவராய்*
*சாகக் காத்திருக்கின்றோம்*
*பிணங்கள் விழ விழ*
*பிணங்களாயே விழ*

*(இருள், கருணாகரன்)*

ஈ) வன்புணர்வு தரும் அவ நம்பிக்கை.

1) *முன்னர் வெற்றியடைந்த களமொன்றிலேயே*
*நீ சரணடைந்திருக்கின்றாய்*
*துப்பாக்கிகளும் ஆண்குறிகளும்*
*ஒரே மாதிரியாய்*
*வாயைப் பிழந்து உன்னைத் தின்று போட்டிருக்கின்றன*
*(உன்னைத் தின்று போட்டிருக்கிறார்கள், தீபச்செல்வன்)*

2) *ஒட்டிக்கிடந்தது உயிரின் கடைசிச் சவ்வு*
*அருகு வர*
*யாந்திரிகமாய் நீக்கினாள் கீழாடை*
*இரத்தக் கிடங்கில்*
*மொய்த்துக் கிடந்தன ஆயிரமாண் குறிகள்*
*நீரள்ளிப் பெய்த பின்*
*அவள் முளையிலிருந்து*
*ஒவ்வொரு ஆண்குறியாய்ப் பிடுங்கத் தொடங்கினேன்*
*காலம் கலங்கியபடி மடிந்தது*
*(மாந்தோவின் பெண்கள், பா.அகிலன்)*

போர்க்காலத்தில் ஆயுதம் பேசும் அதிகாரத்தில் ஒன்று வன்புணர்வு. பெண்களின் மீது பெய்யப்படும் வக்கிரம் இது.

உ) குழந்தைகள் மீதானது.

போரில் அதிகமாக, மிகப் பேரவலமாகப் பாதிக்கப்படுபவர்கள் குழந்தைகள் ஆவார்கள். அவர்கள் பெறுகின்ற இழப்பின் அதிர்வு அவர்களின் உலகம் முழுவதும் மொய்த்துக் கொண்டேயிருக்கும்.

1. *ஊஞ்சல்களில் குந்தியிருக்கிறது*
*சிறகுகள் கத்தரிக்கப்பட்ட வெறுமை*
*குழந்தைகளின் சுவடுகள் தொலைந்த தெருக்களில்*
*இராணுவத் தடங்கள் பெருகிக்கிடக்கின்றன*
*(தெருக்களை இழந்த குழந்தைகளின் துயர் – சித்தாந்தன்)*

2. *குழந்தையைப் பின்தொடர்ந்த*
*அப்புதைகுழியின் நிழலில்*
*மறைந்திருந்தன*
*...சிறை, விலங்கு,*
*புலனாய்வு மற்றும் அரசியல்,*
*படை, மறுமலர்ச்சி,*
*சுதந்திரம், ஜனநாயகம், விடுதலை, தேசியம்,*

*அன்பு, கருணை, பகை, கோபம், பரஸ்பரம் என*
*ஏராளம் எதிரர்த்தச் சொற்கள்*
*(சொற்களின் அகராதியும் புதைகுழியும் – கருணாகரன்)*

ஊ) இருப்பின் மீதான பயம்.

1. *மாயக் கவர்ச்சியில் சிரிக்கும் நகரத்தில்*
*அச்சத்தோடு சனங்கள் வாழ்கிறார்கள்*
*உயிரைச் செருகி வைத்திருக்கிற அட்டைகளுக்குள்*
*வாழ்வைப் பத்திரப்படுத்திக்கொண்டு*
*பிடாரனின் புதல்வர்களின் பார்வைகளில்*
*மிரண்டபடி வாழ்கின்றார்கள்*
*(பிடாரனின் திகைப்பூட்டும் கனவுகளிலிருந்து நான் தப்பிச் செல்கின்றேன், சித்தாந்தன்)*

2. *சருகுகள் தேங்கிய தெருவெல்லாம்*
*சாவின் வாடகையைக் கிளர்த்தி*
*சுடுகாட்டைப் படமாக்கி இதயத்தில் ஆணி அறைந்தது*
*(துமுக்கியின் திசைமுள், கை. சரவணன்)*

பொதுவான ஓர் இழையாக இந்த இருப்பின் பயம் ஈழத்துத் தமிழ்க் கவிதைகளில் போருக்குப் பின்னால் காலங்களில் அதிகம் தனித்துத் தெரிவதைக் காணமுடிகிறது.

எமது சமூகம், சமயமும், நம்பிக்கைகளும் வெறும் வல்லமையற்ற கோதுகளாகிவிட்டதை இக்கவிதைகள் காட்டுகின்றன.

எ) இதன் தொடர்ச்சியாகக் கொல்லப்படுதல் என்பதையும் குறிப்பிடலாம். பெருங்கதைப்பாடல்கள் கொண்டுள்ள நம்பிக்கைகள் பொய்த்துப் பயங்கரத்தைப் பரிசளிக்கும் வலி இங்குக் கொட்டுண்டுள்ளது.

1. *இவை தவிர*
*ஒருவன் கொல்லப்படும் போது*
*பெரிதாக என்ன நடக்கப்போகின்றது*
*இன்னுமொருவன் கொல்லப்படுவான் என்பதைத் தவிர*
*(ஒருவன் கொல்லப்படும் போது, அலறி)*

2. *பகலில் மருத்துவமனையிலிருந்து திரும்பியவனை*
*இரவு விழுங்குகிறது*
*இரவில் படுத்துறங்கியவனை*
*பகல் பலி கொண்டது*

*கொலை நகரத்தில் வாழ்வொரு*
*சல்லடையாக்கப்பட்ட பழைய கந்தற்துணி*
*(வளாகத்தின் சுவர்களில் படிந்திருக்கும் பயங்கரம், கருணாகரன்)*

ஏ) தொன்மம், சடங்குகள் மீதானது.

வாழ்வு இறப்பு இரண்டும் வாழ்தல் மீதான பற்றையும் நம்பிக்கையையும் தரவல்லன. அவை கொண்டுள்ள தொன்மங்கள் சடங்குகள், மதம் சார் நிகழ்வுகள் என்பன கூட்டொருமையைத் தந்து பிடிப்பை ஏற்படுத்துவன. ஆனால் இக்குறித்த காலத்தில் அவை கொள்ளிப் பானையாய் உடைந்து போகின்றன.

1. *பிடி சாம்பலாவது கொடு*
*என் பிதிரர்களின் மடியில்*
*கொட்டி விடுகிறேன் அவனை*
*நாளை என்னைத் தீயிடவும்*
*பிண்டமிட்டு பாதையிடவும்*
*இல்லையாரும் ஆயினும்*
*அவன் போய் உறங்கட்டும் நிம்மதியின் பேராற்றில்*
*(தாயுரை 03 , பா. அகிலன்)*

2. *முற்றிற்று என்று சொல்லி*
*காற்றிலும் கடலிலும் கரைத்துவிட்டுக்*
*கண்மூட*
*காற்றும் கிடையாது*
*கடலும் கிடையாது*
*காடாற்று எப்போதோ* *(காடாற்று , சேரன்)*

இங்கு (அ) - (ஏ) வரையான பகுதிகளில் எடுத்துக்காட்டுகளூடாக 'நம்பிக்கையின்மை' ஓர் உணர்வுத் தள அடுக்காகக் கட்டமைத்துக் கொண்டுள்ளதைக் காணமுடிகின்றது.

பொதுவான கருத்தியல் அல்லது இயல்பான கருத்தியல் சாத்தியத்தை வாய்ப்புப் பார்க்கும் ஒரு முயற்சியாகவும் இது அமைந்துவிடுகின்றது. குறிப்பாக, போருக்குப் பின்னான சமூக மனங்கள் அதாவது, கடந்த காலத்தின் ஞாபகங்கள் ஒரு பெரும் முள்ளாடையாக வலிக்கின்ற போது நனவிலி மனம் கட்டமைத்துக் கொள்ளுகின்ற உளவியல் இதுதான்.

அந்தவகையில் இதுவரையிலும் பேசப்பட்டு வந்த அல்லது கொண்டாடப்பட்டுவந்த பெருங்கதையாடல்கள் எனும் தளத்திலிருந்து நகர்ந்து உடனடித்தன்மை எனும் காலப்பார்வையை அனைவருக்கும்

அளிக்கத்தக்க அடுக்கில் கவிதை வெளிப்பாடுகள் அதிகம் குவிந்திருப்பதை அடையாளப்படுத்திவிட முடிகிறது. அந்தத் தளத்தின் ஒரு பகுதியாகவே ஈழக்கவிதைகளைப் போருக்குப் பின்னான காலம் நம்பிக்கையின்மையை நோக்கி நகர்த்தியிருக்கிறது.

## துணை நூல்கள்


1. அகிலன். பா, சரமகவிகள் (கவிதைகள்), பேறு வெளியீடு, கச்சேரி நல்லூர் வீதி யாழ்ப்பாணம், 2011.
2. சேரன், காடாற்று (கவிதைகள்), 2011.
3. சேரன், மீண்டும் கடலுக்கு (கவிதைகள்), காலச்சுவடு வெளியீடு, 2005.
4. கருணாகரன், பலி ஆடு (கவிதைகள்), வடலி வெளியீடு, சென்னை, 2009.
5. கருணாகரன், எதுவுமல்ல எதுவும் (கவிதைகள்), மகிழ் வெளியீடு கிளிநொச்சி, 2010.
6. சித்தாந்தன், துரத்தும் நிழல்களின் யுகம், காலச்சுவடு வெளியீடு, 2010.
7. தானா விஷ்ணு, கறுப்புருவம் சுமக்கும் ஆந்தைகள், தூண்டி வெளியீடு யாழ்ப்பாணம், 2012.
8. சரவணன் கை., வானம் விழுந்த நெல்வயல், கைசன் வெளியீடு, யாழ்ப்பாணம், 2012.
9. தீபச்செல்வன், குடார நிழல், உயிர்மை பதிப்பகம், சென்னை, 2012.
10. தீபச்செல்வன், பெருநிலம், காலச்சுவடு பதிப்பகம், 2011.
11. தீபச்செல்வன் (தொகுப்பாளர்), மரணத்தில் துளிர்க்கும் கனவு, ஆழி வெளியீடு சென்னை, 2011.
12. தமிழவன், பின் நவீனத்துவ அரசியல், கங்கு வெளியீடு சென்னை, 2007.

# காசி ஆனந்தன் கவிதைகளில் வாழ்வியல் கூறுகள்

முனைவர் க. சேக்மீரான்
*இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை*
*மாநிலக்கல்லூரி*
*சென்னை-600 005*

ஓர் இனத்தின் பண்பாட்டு வாழ்க்கை என்பது மனிதனுக்கும் அவன் வாழும் சூழலுக்கும் இடையே இடையறாது நடக்கும் போராட்டமே எனலாம். ஒரு நாட்டின் அரசியல் பொருளாதாரச் சூழலுக்கும் அக்காலத்தில் தோன்றும் இலக்கியத்திற்கும் நெருக்கமான உறவுண்டு. தமிழிலக்கிய வரலாற்றில் இதன் பதிவுகளைச் சங்ககாலம் தொட்டு இக்காலம் வரை காணலாம். இதற்குக் காட்டாக விடுதலைப் போராட்டக் கவிஞரான பாரதியின் பாடல்களில் சாதி எதிர்ப்பு உணர்வும் மொழிப் போராட்டக் கவிஞரான பாரதிதாசன் பாடல்களில் பொதுஉடைமைச் சிந்தனைகளும் உள்ளமையைக் காட்டலாம். இவற்றைப் போலவே ஈழ விடுதலைப் போராட்டப் போராளியான கவிஞர் காசிஆனந்தனின் கவிதைகளிலும் சமுதாயஉணர்வு புதைப் பொருளாக இழையோடுகிறது எனலாம். பொதுநிலையில் ஒரு இலக்கியப் படைப்புக்கும் அது தோன்றிய காலத்தில் நிலவிய சமூகத்திற்கும் உள்ள உறவைப் படைப்பாளி தனது படைப்புவழி வெளிப்படுத்துவான் என்பதே உலக இலக்கிய வரலாறு உணர்த்தும் உண்மையாக உள்ளது. இதற்குக் காசி ஆனந்தனின் கவிதைகளும் விதிவிலக்கல்ல. எனவே காசி ஆனந்தனின் கவிதைகளில் வாழ்வியல் கூறுகள் அமைந்துள்ளமையை நோக்குவோம்.

இருண்மைவாதிகளைச் சாடவரும் காசிஆனந்தன்,

*என்ன கவி எழுதுகிறீர்*
*பாவலரே! போலிகளாய்*
*இருக்கின்றீர்கள்!*
*கன்னி அருந்தமிழணங்கு*
*கையிரண்டில் விலங்குடையாள்*
*கண்ணீர் கண்டும்*
*செந்நெருப்பு விழிகொண்டு*
*சீறியெழ மாட்டீரோ?*
*சீச்சீ! வானில்*
*புண்ணிருந்தாற் போலிருக்கும்*
*நிலாவினையும் காதலையும்*
*புனைகின்றீரே!*

*ஊர் பற்றி மொழி பற்றி*
*ஒரு பொழுதேனும் நீவிர்*
*உணர்கின்றீரா?*
*தீ பற்றி எரிகின்ற*
*வீட்டினிலே இசைபாடிச்*
*சிரிக்கின்றீர்கள்?*
*வாய்பற்றி எரியாதா?*
*தமிழன்னை மனம் நொந்து*
*வயிறெரிந்தால்*
*நீர்பற்றும் எழுத்தாணி*
*நொறுங்காதா? விளையாடல்*
*நிறுத்துமின்கள்!*

என்று பாடுகிறார். இதிலிருந்து கவிஞன் சமுதாய உணர்வோடு கவி பாட வேண்டும் என்னும் விழைவு காசிஆனந்தனிடம் இருந்தது என்பது புலனாம்.

## இந்தி எதிர்ப்புப் போராட்டம்

ஒரு மொழி அழிக்கப்பட்டால் அந்த மொழி பேசும் இனமும் அழிந்துபோகும் என்பது உலக வரலாறு உணர்த்தும் உண்மை ஆகும். இக்காரணம் கருதியே ஆங்கில வழிக் கல்வியை ஆங்கிலேயர் தமிழில் புகுத்தினர். இன்றுவரை அதன் ஆதிக்கம் ஒழிந்த பாடில்லை. இந்தியா விடுதலை பெற்ற பின்பு வடவர் செல்வாக்குப் பெற்றனர். அவரது மொழியான இந்தியைத் தமிழ்நாட்டில் கட்டாயப் பாடமாகக் கொண்டு வந்தனர். அது தமிழ் மாணவர்களுக்குப் பெருஞ்சுமையாக அமைந்தது. இச்சூழலில் மொழி உணர்வாளர்கள் இந்தி திணிப்பை எதிர்த்துத் தமிழைக் காப்பதே சமுதாயப் பணியாக எண்ணினர். இக்காரணத்தாலேயே பாவேந்தர் பாரதிதாசன்,

*எது செய்ய நாட்டுக்கே எனத்துடித்தச் சிங்கமே!*
*இன்றே, இன்னே*
*புதுநாளை உண்டாக்கித் தமிழ்க்காப்பாய்*
*இதுதான் நீ*
*செயத்தக்க எப்பணிக்கு முதற்பணியாம்*

என்று இளைஞர்களை எழுப்பப் பாடினார். இக்காலகட்டத்தில் தமிழ்நாட்டில் பயின்று கொண்டிருந்த இளைஞரான காசி ஆனந்தன் பாரதிதாசனிடம் நெருங்கிப் பழகும் வாய்ப்புப் பெற்றிருந்தார். இதனால் பாரதிதாசன் பாடல்களின் தாக்கங்கள் காசிஆனந்தன் கவிதைகளும் இடம் பெறத் தொடங்கின. எனவே காசிஆனந்தனும் இந்தியை எதிர்ப்பது தமிழ் சமூகத்திற்குச் செய்யும் பெரும்பணியாகவே கருதினார். இந்தி எதிர்ப்பில் தனது பங்களிப்பை நல்கினார் என்பதை,

*மானம் எனுமொரு பானையில் வாழ்வெனும்*
*தீனி சமைத்தவனே – தமிழ்*
*போனதடா சிறைபோனதடா – அட*
*பொங்கி எழுந்திடடா*
*முந்து தமிழ்மொழி நொந்துவதைபட*
*இந்தி வலம் வரவோ? – இது*
*நிந்தை! உடனுயிர் தந்து புகழ்பெறு*
*வந்து களம் புகுவாய்*

என்ற கவிதையும்,

*எங்கள் மானம் பழித்தொடா இந்தியைக்*
*கங்கை நாடர் திணிக்கக் கருதினார்?*
*சிங்கமே... தமிழா! களம் வந்தது!*
*சங்கம் ஆர்த்துப் படைசரி செய்யடா!*

என்னும் கவிதையும் காட்டி நிற்கின்றன. மேலும் ஒரு புத்தகத்திற்குக் காசி ஆனந்தன் தந்த நேர்காணலில், தமிழன் எங்கிருந்தாலும் தமிழன், சிங்களன் எனத் தமிழைத் தமிழீழத்தில் அழித்தால் என்ன? இந்தி என் தமிழைத் தமிழ்நாட்டில் அழித்தால் என்ன? எல்லாம் ஒன்றுதான் அதுமட்டுமல்ல. உலகில் எந்த மொழியை எவன் அழித்தாலும் நான் அவனை எதிர்த்தே குரல் கொடுப்பேன். மொழிவெறியன் அல்ல. ஆனால் மொழி வெறியர்களுக்கு நான் 'முழுவெறியனாகவே இருக்க விரும்புகிறேன்' என்று காசிஆனந்தன் கூறும் கூற்றும் 'இந்தி எதிர்ப்பு' குறித்து அவர் கொண்டிருந்த நிலைப்பாட்டைக் காட்டுவதாக அமைகிறது.

### சாதி, சமய எதிர்ப்பு

தமிழரின் இடையே உள்ள ஒற்றுமையைத் தொன்றுதொட்டுப் பிளவு படுத்துவது சமயமும் சாதிகளுமே. இவற்றைக் களைந்து ஒன்றுபட்டு நின்று போராடினால்தான் உரிமைகளைப் பெற முடியும் என்கின்ற காரணத்தினாலே விடுதலைப் போராட்டத்தின்போது பாரதியும் இனஉணர்வுப் போராட்டங்களின் போது பாரதிதாசனும் சாதி, சமயங்களை ஒழிப்பதே தமிழரின் தலையாயப்பணி என்று கவிதைகளில் முழங்கினர். இவர்களின் அடியொற்றி வந்த கவிஞர் காசி ஆனந்தனும்,

*சாதி மதமெனும் பேதங்கள் சாயவே*
*தமிழா ஒன்றுபடு!*
*ஆதி மகளெனும் தமிழை அரசியாய்*
*ஆக்கி வாழவிடு*

*கந்தன் பறையனென் றுரைக்கும் கயவனை*
*கண்ணீர் வர வதைப்பாய்*
*இந்தும் இஸ்லாமியனும் பொருதினால்*
*இருவரையும் உதைப்பாய்*
*ஊருக்கு ஊர்சண்டை தெருத்தெரு சண்டை*
*உருப்படு வோமோடா*
*பாருக்குள் அடிமைத்தமிழர் நமக்குள்ளே*
*பத்துப் பிரிவோடா*
*தேசம் பலவினும் வாழும் காக்கைக்குலம்*
*சிதைந்து பிரிவதில்லை*
*பேசும் மொழியால் அவை என்றுகூடும்*
*பெருமை நமக்கில்லை*

என்கிறார். இதில் சாதிச்சண்டை போடுவோரையும் சமயச்சண்டை போடுவோரையும் அடித்துத் திருத்த வேண்டும் என்கிறார். நம்மிடையே உள்ள வேற்றுமைகளைத் தீர்க்க மொழிவழிச் சமுதாயத்தை அமைப்பதே சாதி, சமயச் சண்டைக்குத் தீர்வு என்கிறார்.

## பொதுஉடைமைக் கருத்துக்கள்

பெரியார் பிரெஞ்சுக்குச் சென்று திரும்பி வந்த பின்பு பொதுவுடைமைக் கருத்துக்கள் திராவிட இயக்கவாதிகளால் பரப்பப்பட்டதால் திராவிட இயக்கக் கவிஞர்களும் தம்மின் கவிதை வழியே பொதுவுடைமைக் கருத்துக்களைப் பரப்பத் தொடங்கினர். பாரதிதாசன் அவர்கள் 'எல்லார்க்கும் எல்லாமென்று இருப்பதான இடம் நோக்கி நகர்கின்ற இந்த வையம்' என்றும்,

*ஓடப்பராய் இருக்கும் ஏழையப்பர்*
*உதையப்பராகி விட்டால் ஓர் நொடிக்குள்*
*ஓடப்பர் உதையப்பர் எல்லாம் மாறி*
*ஒப்பப்பராகி விடுவர் உணரப்பாநீ*

என்றும் பாடினார். பாரதிதாசனின் இறுதி காலங்களில் அவரோடு நெருங்கி பழகிய காசி ஆனந்தனின் கவிதையிலும் பொதுவுடைமைக் கருத்துக்கள் பரவிக் கிடக்கின்றன.

*காட்டு மலைதனிலே... தமிழச்சி!*
*காலம் முழுவதும் நீ உழைத்தென்னடி?*
*ஒட்டைக் குடிசையொன்றும் வாழ்விலே*
*ஓயா வறுமையும் நோயும் இவையன்றி*

*தேட்டம் எதுபடைத்தாய்? அடி ஒரு*
*செம்புப் பணமேனும் தேறியதுண்டோடி*
*நாட்டின் முதுகெலும்பே தமிழச்சி!*
*நானிலம் வாழநீ மாள்வதோ அம்மா?*

என்று உழைக்கும் மக்கள் உண்ண உணவின்றி ஏங்குவதும் உழைக்காமல் ஒரு கூட்டம் உண்டுகொழுப்பதும் கண்டு மனம் துடிக்கின்றார். மேலும்,

*ஆணை செலுத்தவும் ஆளவும் இங்கே*
*ஆவி அவனெடுத்தானா? – பிச்சைப்*
*பானை ஏந்திய கையனாய் இந்தப்*
*பாவி பிறந்து வந்தேனா?*
*அஞ்சி நடுங்கியும் நெஞ்சம் பதைத்தும்*
*ஆயுள் கழிந்தது தோழா! – உயிர்*
*கொஞ்சம் இருந்தது... கூறடா இந்தக்*
*கொடுமைக்குப் பேரென்ன ஊழா?*

என்றும் பாடுவதன்மூலம் ஆண்டான், அடிமை, மேலோர், கீழோர் என்கிற நிலைமாறிச் சமதர்ம சமுதாயம் அமையவேண்டும். எல்லார்க்கும் எல்லாமும் பொதுவாக இருத்தல் வேண்டும் என்கிற பொதுவுடைமைச் சமுதாயத்தை உருவாக்கக் கவிதை வழி முயல்கிறார்.

### பகுத்தறிவுச் சிந்தனைகள்

பெரியாரின் கருத்துக்களை உள்வாங்கிக் கவிதைகளின் வழியே வெளிப்படுத்தும் பாங்கைக் காசிஆனந்தனின் கவிதைகளில் காணமுடிகிறது. தமிழன் பகுத்தறிவு இல்லாமல் கெட்டான் என்பதை,

*அருவண்ணத் தமிழ் மண்ணில்*
*ஆரியனை முன்போர் நாள்*
*வருக என அழைத்திங்கே*
*வாழ்வித்த முதுதமிழன்*
*சுருள்குடுமி ஆரியனின்*
*சூழ்ச்சிக்கே பலியானான்...*
*பெருமனத்தால் கெட்ட*
*பேயனுக்குப் பேர்தமிழன்*

என்று பாடுகிறார். இதில் தமிழன் வீழ்ச்சிக்குக் காரணம் ஆரியரின் சூழ்ச்சியே என்பதைப் பகுத்தறிந்து பார்த்துத் தற்காத்துக் கொள்ளும் ஆற்றல் இல்லாததால்தான் வீழ்ந்தான் என்கிறார்.

## பெண்வீரம்

பாரதி, பாரதிதாசன் போன்றோர் பெண்களை, ஆண்களுக்கு நிகராக அறிவாற்றல் பெறவேண்டும் என்றனர். காசிஆனந்தனோ ஆண்களுக்கு நிகராகப் பெண்களும் களங்காணும் வீராங்கனைகளாகத் திகழவேண்டும் என்கிறார். இதனை,

*இழிநிலை ஒழிஎன மறமகள்*
*வளர்இள மழலையை விளியாளோ?*
*வழிவழி புகழ்நிலை தழுவென*
*உயிர்நிகர் கொழுநனை அழையாளோ?*
*ஒளிமிகு விழியோடு குலமெனு*
*முணர்வொடு செருவிடை நுழையாளோ?*
*அழகிய தமிழின மொழிமகள்*
*களியினில் முழுநகை பொழியாளோ?*

என்று பாடுவதோடு களத்திலே போராடும் துணைவர்க்குத் துணையாக இருக்க வேண்டுமென்பதை,

*நானோர் கனாக்கண்டேன் தோழி! – தமிழ்*
*நாட்டின் விடுதலை கேட்கப் பிறந்தவர்*
*தானை நடத்தினார் தோழி! – அங்கு*
*சட்டம் உடைந்தது! பகைவர் தலைகள்*
*வானில் பறந்தன தோழி! – இந்த*
*வையம் குருதியில் தோய்ந்து கிடந்தது!*
*மானத்தின் வேகமோ தோழி! – தமிழ்*
*மாந்தரின் வீரத்தை என்னென்று சொல்வேன்!*
*காதலர் வரவில்லை தோழி! – அவர்*
*களத்திலே இருக்கட்டும்! இங்கென்ன வேலை?*
*மோதட்டும் பகைவர்கள் முன்னால் – தோழி*
*முத்தமும் சத்தமும் வெற்றிக்குப் பின்னால்!*
*மாதர்கள் வீரமே பெரிதாம்! – அவர்*
*மாண்டாலும் போரிலே மாளட்டும் என்பேன்!*
*ஆதலால் இசைபாடு தோழி – தமிழ்*
*அன்னையின் புகழ்பாடு! வாழட்டும் நாடு!*

என்றும் பாடுவதன் மூலம் மகளிரின் வீரத்தைப் பேசுகிறார்.

கவிதை காலத்தைக் காட்டும் கண்ணாடி என்பர். களம் நின்று கவிபாடி விடுதலை உணர்வை ஈழத்தமிழர் நெஞ்சங்களில் பதியம் போட வேண்டும் என்ற முனைப்போடு காசிஆனந்தன் கவிதைகளைப் பாடினாலும் அவர் கவிதைகளிலும் காலத்தின் தாக்கம், சமுதாயப்பற்று நிறைந்தே காணப்படுகிறது என்பது பெற்றாம்.

# தீபச்செல்வனின்
# "பதுங்கு குழியில் பிறந்த குழந்தை"
# காட்டும் சமூகம்

திரு. சு. இலட்சுமணன்
*ஆய்வியல் நிறைஞர்*
*உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்*
*தரமணி, சென்னை-600 113*

## முன்னுரை

தமிழர்கள் உலகம் முழுவதும் வாழ்ந்து வருகின்றார்கள். இவர்கள் "திரைகடலோடியும் திரவியம் தேடி" என்ற முதுமொழிக்கேற்ப பலரும் பல நாடுகளில் பொருள் தேடிச்சென்று அங்கே வாழ்கின்றார்கள். இலங்கையில் வாழ்ந்து வரும் தீபச்செல்வன். இவரது இயற்பெயர் பாலேந்திரம் பிரதீபன். இவர் அக்டோபர் 24, 1983-இல் பிறந்தார். ஈழத்தின் கிளிநொச்சி நகரத்தின் இரத்தினபுரம் கிராமத்தைச் சேர்ந்தவர். 'யாழ் நகரம்', 'கிளிநொச்சி', 'முற்றுகையிட்ட நகரத்தின் பதுங்கு குழி', கிணற்றுக்குள் இறங்கிய கிராமம்', 'குழந்தைகளை இழுத்துச் செல்லும் பாம்புகள்', 'பதுங்கு குழியில் பிறந்த குழந்தை' போன்ற கவிதை நூல்களை இயற்றியுள்ளார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் படித்து வருபவர். மாணவர் ஒன்றியச் செயலாளராக 2008-2009 ஆம் ஆண்டில் இருந்தார். பல்கலைக்கழகத்தில் ஊடகப் பிரிவில் வருகைப் பதிவாளராகப் பணிபுரிந்தார். கவிதை, ஓவியம், புகைப்படம், விமர்சனம், வீடியோ விவரணத் துறைகளிலும் ஈடுபட்டு வருபவர். இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் 2010 ஆம் ஆண்டு இரண்டு விருதுகள் வழங்கியது. இவரது முதல் கவிதை 2005-இல் 'சுடர் ஒளியில்' வெளிவந்தது.

## பிற படைப்புகள்

ஆட்களற்ற நகரத்தைத் தின்ற மிருகம், பாழ்நகரத்தின் பொழுது, ஈழமக்களின் கனவு பெருநிலம், ஈழம் போர் நிலம், மரணத்தில் துளிர்க்கும் வாழ்வு, கூடார நிழல் போன்ற இதரப் படைப்புகளும் படைத்துள்ளார். தீபச்செல்வன் எழுதிய "பதுங்கு குழியில் பிறந்த குழந்தை" எனும் கவிதை நூல் இலங்கைத் தமிழர்களின் வாழ்வியல் சூழலைப் படம் பிடித்துக் காட்டுகிறது. இந்நூலைப் பற்றி ஆய்வுக் கட்டுரையின் மூலம் காண்போம்.

## ஒவ்வொரு நாளும்

ஒவ்வொரு நாளும் இரவு, நாளைய விடியலாக இருக்குமா? என்ற அச்சத்துடனே மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இன்றைய இரவு ஏதோவொரு

துப்பாக்கிகளுக்கும், பீரங்கிகளுக்கும் எங்களை மரணம் தழுவப் போகிறது என்ற பயத்தோடு ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு நொடியும் நாங்கள் மரணத்தை முத்தமிட்டே செல்வதையும், உயிர்க் கொலைக்கூடாது என்பது பொதுவுடைமை. அவைகள் நாடுகளுக்கேற்ப மாறுபடும். ஆனால், இங்கே நமது ஆடுகள் பலிபீடங் களுக்கு அழைத்துச் செல்லப்படுகின்றது. இங்கு அடிகளார் (யேசுவோடு) பல ஆயிரம் சனங்களோடு சிலுவையில் அறையப்படுகின்றார்கள் என ஆசிரியர் குறிப்பிடுகின்றார்.

இதனை,

*"அழிந்து போன தேவாலயத்தில்*
*தொங்கிய சிலுவையுடனிருந்தார்*
*சனங்கள் திருப்பலிகள்"* *(ப. 18)*

நர(க)ரக வாழ்க்கை

நகரத்தைச் சுற்றிலும் பிணங்களின் வாசம் வீசிக் கொண்டிருக்கும். இனம் தெரியாத பிணம் வீதியில் கிடக்கும். அப்பிணத்திற்கு யாரும் உரிமைக் கோரப்படாமல் குருதியால் போர்த்தப்பட்டிருக்கும். வீதியில் செல்பவர்கள் கூட ஏன் இவன் சுடப்பட்டான் என்று சிந்திக்காமல் செல்வார்கள், அமைதியாய் சாப்பிடுவார்கள். நாளை வெடிக்கப் போகிற வன்முறைக்கு அறிகுறியாய் வரப் போவதையுணர்ந்து கடைகளில் இருக்கும் சில பொருட்களை வாங்கிக் கொண்டு வீட்டுக் கதவையும், ஜன்னல்களையும் பூட்டிக்கொண்டு உறைந்துக் கிடப்பார்கள் என்பதை,

*"ஒரு பக்கத்துடன் வெளிவரும்*
*நாளைய தின இதழ்*
*அதில் அவன் சாவு*
*இனங்காணப்பட்டிருக்கும் என்று கூட*
*எதிர்பார்க்கமாட்டார்கள்"* *(பக்-22)*

என்றும் தினம் தினம் பார்த்துப் பழகி போனவர்களாக தனது ஏழுமணித் தூக்கத்திற்கு கண்களை மூடிக்கொள்வார்கள். கனவில் கூட இந்நிகழ்வு வராது என்று தீபச்செல்வன் பதிவு செய்கின்றார்.

**இயற்கையை சுவைத்ததில்லை**

இயற்கைக் காற்றையும், இயற்கையையும் சுவைத்துப் பார்க்க முடியாமல், எங்களைச் சுற்றிலும் மரணம் என்பது இரவு நட்சத்திரங்களால் பூட்டப்பட்டிருப்பது போல உணருகிறோம். மதுக்கோப்பைகளைத் தூக்கி

அருந்த முடியவில்லை வானத்தைப் பார்த்தபடி செயற்கை மகிழ்ச்சியோடு செல்கிறோம். போர் மேகங்கள் சூழ்ந்திருப்பது பற்றியும், களத்தில் மரணிக்கும் நண்பர்களையும், மக்களுக்காக துப்பாக்கிகளோடு எந்நேரமும் எல்லையில் விழித்திருக்கும் போராளிகளில் தான் இன்றைய நாள் செயற்கை மகிழ்ச்சியோடு செல்கிறது. நாளைய மகிழ்ச்சியை சீர்குலைக்கும் விதமாக வேவு விமானங்கள் பறந்து கொண்டிருக்கின்றன. இந்தச் சூழலில் மக்களின் மனநிலை எப்படி இருக்கும் என்று ஆசிரியர் விவரிக்கிறார். அதனை,

*நாம் நிறையவற்றை அறியாதிருக்கிறோம்*
*மலர வேண்டிய இடத்தில்*
*மௌனமாயிருந்து உதிருகிறோம்*
*மதுக்கோப்பைகளின் இருட்டில்*
*நெருங்கியிருக்கும் நமதன்புகளை*
*எந்தக் காலையில் உலர்த்தப் போகிறோம்* (ப. 27)

## இடப்பெயர்வு

தாம் தங்கியிருந்தப் பகுதிகளை விட்டு வெளியேறும்படி உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது. எல்லோரும் கிராமங்களை விட்டு வெளியேறு கின்றார்கள். எங்களது குறைகளை கடவுளிடம் சொல்லி முறையிடலாம் என்றால் யாருமே இந்நிலத்தில் இருக்கக்கூடாது என்பதால், எங்களுடன் கடவுளும் இருப்பிடத்தை விட்டு வெளியேற்றப்படுகிறார். பின்னர், எண்ணிக்கையற்ற ஏவுகணைகள் அப்பகுதிக்குள் நுழைந்து ஆரவாரத்துடன் குண்டு மழை பொழிந்ததாக ஆசிரியர் விளக்குகின்றார். மேலும்,

*"சிலுவை பொரிக்கப்பட்ட எறிகணைகளையும்*
*பிறை பொரிக்கப்பட்ட எறிகணைகளையும்*
*சூலம் பொரிக்கப்பட்ட எறிகணைகளையும்*
*புத்தரின் மூடிய கண்களில்*
*சுழலும் தர்மச்சக்கரத்திலிருக்கும்*
*படையினரிடமிருந்து*
*வந்து விழுந்து கொண்டிருந்தன."* (ப. 29)

## புரியாத பயணம்

இது நாள் வரையில் வாழ்ந்த கிராமத்தில் தானியங்களையும், வீடுகளையும் விட்டு விட்டு புதிதாய் பூமியில் பிறந்தது போல் ஒரு நிழலைத் தேடி தலையில் பொதிகளை சுமந்தபடி பயணம் தொடங்குகிறது.

எதனை நோக்கி பயணிக்கின்றோம் என்று தெரியாமல் துயரத்தின் பாதைகள் பிடித்து நடந்து செல்கின்றோம். எங்களின் துணையாக துண்டு

நிலவினை கைபிடித்துக் கொண்டு அடர்ந்த மரங்களுக்கிடையில் காடுகள் வரைந்த வீதிகளில் எங்கள் பயணம் நீள்கிறது. இதனை,

*இனி நாங்கள்*
*ஒரு துண்டு தரப்பாலுக்கு*
*திரியப் போகிறோம்*
*ஒரு மரத்தைத் தேடி*
*அலையப் போகிறோம்* (ப. 33)

என்பதாக, இவர்கள் பின்னர் படும் துன்பங்களை நம் கண் முன்னே படம் பிடித்துக் காட்டியுள்ளார் கவிஞர்.

## பதுங்கு குழியும் வாழ்வும்

ஆதிமனிதனின் வாழ்க்கையைப் போல, கிராமத்தையும் நகரத்தையும் இழந்துவிட்டு, வீடுகள் கூட இல்லாமல் புன்னகைகளை பூமியின் அடியில் புதைத்து விட்டு பதுங்கு குழியில் பிறக்கும் குழந்தைகள்.

பதுங்கு குழியில் பள்ளிக்கூடங்களைத் தொலைத்து விட்டு, பதுங்கு குழியில் வாழ முடியாமல் குழந்தைகள் செத்து சாம்பலாகப் பறக்கின்றன. சில குழந்தைகள் இராணுவத்திடம் வாழ்வைத் தொலைத்துவிட்ட இனத்தில் பிறந்துவிட்டோம் என்பதை அறியாது வளர்கிறார்கள்.

குழந்தைகளுக்கு மட்டுமே கிடைக்கக்கூடிய தாய்ப்பால் கூடத் தரமுடியாமல், தாய்மார்களின் வற்றிய மடிகளினால் குழந்தைகளின் உதடுகள் உலர்ந்து கிடக்கின்றது. இவர்களது விழிகளில் மரணம் நிரந்தரமாக குடிக்கொண்டிருக்கிறது. சுதந்திரத்தை இழந்துவிட்டு பதுங்கு குழியில் பிறக்கும் குழந்தை, தாலாட்டுப் பாடல்களும், தொட்டில்களும் இல்லாமலும் எதையுமே அறியாமலே கிடக்கும் எனது குழந்தை, ஈழத்தில் பிறக்கும் குழந்தையின் நிலையினை ஆசிரியர் கூறியுள்ளார். அதனையே,

*பதுங்கு குழிக்குள்*
*எனது குழந்தையின் அழுகை*
*உறைந்து விடுகிறது* (ப. 40)

## இரவால் நாடு செய்தோம்

எங்களைக் காத்துக் கொள்ள பகலை விட இரவே சிறந்ததாகத் திகழ்கின்றது. துப்பாக்கிகளும், இராணுவமும் எங்களைத் தேடி இரவிலும் சுற்றித் திரிவதால், இரவால் நாடு செய்து விட்டில் பூச்சிகளாக அடைந்துக் கிடந்தோம். இருட்டுக்குள்ளே புதைந்து போகின்றது முகங்களும், புன்னகைகளும் என்று தீபச்செல்வன் எடுத்துரைக்கின்றார். இதனை,

*இரவுக்காக ஒருவன்*
*அழுது கொண்டிருந்தான்*
*இரவும் அழுது கொண்டிருந்தது* (ப. 59)

## எங்கும் கல்லறைகள்

இந்த நகரத்திலே எங்குத் தோண்டினாலும் தண்ணீரும், கனிம வளங்களும், தாதுப்பொருட்களும் கண்டிப்பாக கிடைக்குமென்று சொல்லமுடியாது. ஆனால், மனித உடல்கள் நிச்சயம் கிடைக்கும். எங்கும் கல்லறைகள் எழுப்பப்படாமல் புதைக்கப்பட்டும். எறிக்கப்பட்டும் இருக்கின்றது. மக்கள் வாழ்ந்ததற்கான அடையாளங்களை அழித்து விட்டதால், தனிமையில் நகரம் சுடலையைத் காத்து நிற்கின்றது என ஆசிரியர் குறிப்பிடுகின்றார். மேலும்,

*தனிமையில்*
*நகரம் துடித்துக் கொண்டிருந்தது*
*கணக்கெடுக்கப்படாத*
*அழிவின் சீருடைகளை*
*அணிந்து எண்ணற்றவர்கள்*
*எரிந்து முடிந்த நகரத்தை*
*படையெடுத்து வந்து*
*சேர்ந்தனர்* (ப. 51)

## எல்லோரும் போராளிகள்

இனப்படுகொலையினை செய்துவிட்டு இறந்தவர்களின் முகங்களைக் காயப்படுத்தியும், குருதியால் மூடியும், எல்லோரையும் போராளிகளாக மாற்றுவார்கள். சுவரொட்டிகள் ஒட்டி போராளிகளாக அடையாளப் படுத்துவார்கள். இவைகள் நாளையும் தொடரும் என்பதாக சுவரொட்டிகளில் வெற்றிடங்களும் காணப்படும் என்பதை கவிஞர் எடுத்துக் காட்டுகின்றார். அதனை,

*நாளை அதிகாலையில்*
*இதே சந்தியில்*
*எனது குருதியாலும்*
*சுவரொட்டிகள் எழுதப்பட்டு*
*ஒட்டப்படும்*
*ஊருக்கான புதிய பாதுகாப்பு விதிகளில்*
*எனது முகமும் கீறியபடியிருக்கும்* (ப. 63)

**கோடரிக் காம்புகள்**

எங்களது வாழ்வாதாரங்களை இழந்து நின்றோம், நிலங்களை இழந்து விட்டோம், கிராமங்கள் அழிக்கப்பட்டது. எங்களின் இந்த நிலைக்கு காரணம் அரசாங்கமென்றாலும், பின்னால் நின்று முக்கிய காரணியாக இருந்து செயல்பட்டது எங்களின் ஒருவனே. தனது உயிரைக் காப்பாற்றிக் கொள்ள பலரையும் காட்டிக் கொடுத்தான் என்று ஆசிரியர் விளக்கும் பொழுது அவர்களது மனநிலையினை நம்மால் உணர முடிகிறது. மேலும்,

*கோழிகள் கூடக் குஞ்சுகளுக்கு*
*பருந்தாயின*
*குஞ்சுகளும் பருந்தாயின*
*சிறகுகளை மணந்து*
*உணர்ந்து கொள்ள முடியவில்லை*
*சிறகுகள் பயங்கரம் கலந்து புயலாகின* (ப. 69)

**தூக்கிலிட்டனர்**

சரணடைந்து விடலாம் என்று தானேச் சென்று சரணடைந்தவர்களை தூக்கிலேற்றி சித்ரவதைச் செய்து கொன்று இருக்கின்றார்கள். விவரிக்கமுடியாத இன்னல்களையும், சித்ரவதைகளையும் பெண்கள் அடைந்துள்ளதாகவும், பாலியல் இச்சைகளுக்கும் உள்ளாக்கப்பட்டுள்ள தாகவும், இங்கு காட்டப்பட்டுள்ளது. இதனை,

*நீ கட்டி வைத்திருந்த*
*பிடியும் முடிச்சும்*
*அறுந்துவிட*
*நான் வெளியில் விழுகிறேன்* (ப. 75)

**வற்றிய ஜீவநதி கண்கள்**

எங்களின் கண்கள் அழுவதற்காக மட்டும்தான் படைக்கப்பட்டுள்ள தாகவும் எங்கள் வாழ்வில் தொடரும் சோகம், துக்கங்களை நினைத்து அழுது, அழுது அதன் இயல்பான தன்மையாக கண்ணீரைக் கூட இழந்து விட்டது.

எங்களை சுதந்திரமாக வாழவிடாமல் கூண்டுக்குள்ளே அடைத்து வைத்து எங்களது வாழ்க்கைச் சக்கரத்தை உருள விடாமல் முடக்கினார்கள்.

எங்களின் சுதந்திர வாழ்வை மீட்க அக்கறையோடு போராடும் பாடலை (தலைவரை) மட்டுமே ஆறுதலாக நினைத்துக் கொண்டிருந்தோம்.

எங்களின் முன்னேற்றத்திற்காக பாடுபடுபவர் அவர் மட்டுமே. ஆனால், அவர்களது ஒரே எண்ணம் பாடலை (தலைவரை) கொல்வதற்கு பல தீர்மானங்கள் நிறைவேற்றி தீவிரமாகத் தேடினார்கள். எங்களின் கனவுகளையும் விடுதலையையும், முன்னேற்றத்தையும் சிதைப்பதில் அவர்களுக்கு அளவற்ற ஒரு பெருமிதம். அதனை வெளிப்படுத்தும் விதமாக அவர்களின் செயல்பாடுகள் அமைந்தது.

நாங்கள் அழுதுகொண்டேயிருக்க வேண்டுமென்று அவர்களது எண்ணமும், எங்களது மனநிலையினையும் ஆசிரியர் விவரிக்கிறார். அதனையே,

*நீங்கள் அழவேண்டும்*
*உங்கள் பாடல்*
*கைகளுக்குள் சிக்கும் வரை*
*அழுது கொண்டே இருங்கள்* (ப.77)

## போர் (அ)தர்மம்

போர் நிறுத்தம் செய்து விட்டோம் என்று கூறியதை நம்பியவர்கள், இரவு நிம்மதியாக தூங்கிக் கொண்டிருந்த மக்களின் மீது போர் தர்மங்களை மீறி இரவோடு இரவாக ஏவுகணைகளைச் செலுத்தி குடியிருப்புகளைத் தாக்கி அழித்தனர் என்று ஆசிரியர் கூறுகின்றார். இதனை,

*வீட்டு வாசலில்*
*வந்து நின்றது போர்*
*கதவைச் சத்தமாகத் தட்டுகிறது*
*குழந்தை ஒலி அடங்கி விடுகிறது* (ப. 49)

## நகரங்கள் புனரமைப்பு

எத்தனை நாட்களாக கோரத்தாண்டவங்களை நிகழ்த்திவிட்டு துப்பாக்கிகளும், பீரங்கி வண்டிகளும் சல்லடைப் போட்டு துளைத்து விட்ட கம்பீரத்தில் நகரத்தைச் சூழ்ந்திருந்த அனைத்து வண்டிகளும் நகரத் தொடங்குகின்றது. நகரத்தின் புனரமைப்புப் பணி நடைபெறுகிறது. இது நாள் வரையில் எதிரிகளால் நாங்கள் இறந்துக் கொண்டிருந்தோம். வாழ்வதற்கான அடிப்படை வசதிகள் செய்துத் தரப்படாததால் பசியின் கொடுமையாலும், நோயின் அறிகுறிகளாலும் மரணங்கள் நிகழந்தன.

வழிநடத்திச் செல்லக் கூடியவர்கள் இல்லாததாலும், யாரிடம் முறையிடுவது என்ற விதியினை அமல்படுத்தாததால் எங்களை வேறுவிதமான போர் சூழ்ந்துள்ளது என தீபச்செல்வன் குறிப்பிடுகின்றார். அதனை,

*எங்கள் வண்டிகள் எதுவும்*
*எரிபொருள் இன்றி நகருவதில்லை*
*வெள்ளைப்போர் நம்மைச் சூழ்கிறது* (ப. 37)

## முடிவுரை

போர் நடைபெற்று கொண்டிருக்கிறது. எங்கும் பயங்கர சப்தம் கேட்டுக்கொண்டே இருக்கின்றது. நகரத்தில் மக்கள் வாழும் சூழலையும், சுதந்திரக் காற்றை கூட சுவாசிக்க முடியாமல் வீட்டுக்குள்ளே அடைந்து கிடப்பதையும், கிராமங்கள், நகரங்களை இழந்து விட்டு நாடோடிகள் போல சுற்றித்திரிவதையும், உயிரைப் பாதுகாத்துக் கொள்ள பதுங்கு குழிகளிலே மறைந்து வாழ்வதையும் இங்கு காண முடிகிறது. இரவுக்குள்ளே முடங்கிக்கிடப்பதும், பொதுமக்களும் போராளிகள் என்ற பெயரில் அழிக்கப்படுவதும், நண்பர்கள் கூட எதிரிகளாக மாறிப்போவதும் சரணடைந்தவர்கள் கூட தூக்குக் கயிற்றால் இறப்பதை அறிய முடிகிறது. பெண்களும், குழந்தைகளும் கூட போர் தர்மபடி காப்பாற்றப்படாமல் கொல்லப்படுவதையும், எங்கும் அழுகை ஓலங்கள் கேட்டுக்கொண்டே இருப்பதையும், போரினால் ஏற்படும் விளைவுகளையும், மக்களுக்கு ஏற்படும் இன்னல்களையும், வேதனைகளையும், மனநிலையையும் சொந்த நாட்டிலே தனிமனித சுதந்திரம் பறிக்கப்பட்டு, அடிமைகளாய் வாழ்வதையும், ஆசிரியர் நேரடிக் காட்சிகளாகப் பதிவு செய்து காட்டுவது நம் நெஞ்சை உலுக்குகிறது.

## துணை நூல்கள்


1. தீபச்செல்வன், காலச்சுவடு பதிப்பகம், நெ.669, கே.பி.சாலை, நாகர்கோவில்-629001.
2. http:\\wikipedia.ta.org.

# ஈழத்து நவீன பெண் (கவிஞர்களின்) கவிதைகள் பற்றிய விமர்சன நோக்கு

கலாநிதி செல்வரஞ்சிதம் சிவசுப்பிரமணியம்
*தமிழ்த்துறை*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*
*யாழ்ப்பாணம்*

ஈழத்துக் கவிதை வரலாறு ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒரு பகுதியாக இடம்பெற வேண்டும். ஈழத்துக் கவிதை வரலாற்றில் பொதுவாக ஆண் கவிதைகளை வகைப்படுத்தி விமர்சனங்களும் மதிப்பீடுகளும் செய்யப்பட்டுள்ளன. பெண் கவிஞர்கள் சிலரை மட்டும் சுட்டிக்காட்டி ஆய்வு செய்கின்றனர். அண்மைய நிலையில் பெண்கவிஞர்கள் பற்றிச் சிந்திக்கும் நிலை உருவாகியிருக்கிறது. தமிழ்நாட்டோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது ஈழத்துப் பெண்கவிதை பற்றிய ஆய்வுகள் மிகமிகக் குறைவாகவே வெளிவந்தன. (பேராசிரியர் சித்திரலேகா மௌனகுரு ஈழத்துப் பெண் கவிதாயினிகள் பேராசிரியர் மா.இரகுநாதன்) ஈழத்துப் பெண் கவிதைகள் பற்றிய ஆய்வு முழுமையாக ஆய்வு செய்யப்பட வேண்டிய தேவை இருக்கின்றது. தமிழ், முஸ்லிம் பெண் கவிஞர்கள் பலரின் எழுத்துகள், ஆளுமைகள் வெளிவரவில்லை, எல்லாப் படைப்பாளிகளின் ஆளுமைகளும் வெளிவருகின்ற போதுதான் இலக்கிய வரலாறு முழுமை பெறும்.

ஈழத்துக் கவிதை வரலாற்றில் ஆண் கவிஞர்களின் பட்டியலும் விமர்சனங்களும் இடம்பெறுகின்றன. பெண் கவிஞர்களின் பட்டியலும் விமர்சனங்களும் பேணப்படுவதில்லை. அதனால், பெண் கவிஞர்களின் கவிதைகள் பற்றிய ஆய்வு செய்யப்பட வேண்டிய தேவை இருக்கின்றன. அதனால், இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

ஈழத்துக் கவிதை வரலாறு பேசுகின்றபொழுது ஆண் கவிஞர்களை மட்டும் வகைப்படுத்தி விமர்சனம் செய்கின்றனர். ஔவை, ஊர்வசி, சிவரமணி எனச் சிலரின் பெயர்களையே வகைமாதிரிக்குக் காட்டிப் பெண்கவிதை வரலாறு முடிகின்றது. பெண்கவிஞர்கள் வகைப்படுத்தப்படுவதில்லை. ஆண்களுக்கு நிகராகப் பெண்களால் கவிதை படைக்க முடிகிறதா என்பது வினாவாக நிற்கிறது. அவ் வினா இங்கே விவாதிக்கப்படுகின்றது. இவ்வினாவே இக்கட்டுரை எழுதுவதற்கு அடிப்படையாக அமைகின்றது.

**காலச் சூழல்**

1980களுக்குப் பின் பெண் கவிஞர் பலர் தோற்றம் பெறுகின்றனர். ஆட்சிமாற்றம், விடுதலைப் போராட்டம் முனைப்புப் பெறுதல் போன்ற காலச்சூழலும் பெண் கவிகள் தோற்றம் பெறக் காரணங்கள் ஆயின. பெண் அடக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் காலம் காலமாக வந்துள்ளாள். பெண்களின் அடக்கு முறைக்கு எதிராக விடுதலை பெண்ணினவாதக் கருத்துகள் முன்வைக்கப்பட்டன. பெண்களின் உரிமை. சம அந்தஸ்து என்பவற்றை அடியொற்றிப் பல மாநாடுகள் கருத்தரங்குகள் சர்வதேச மட்டத்தில் நடைபெற்றன. அதனால் சமூகத்தில் பெண்கள் கல்வி பெறும் வாய்ப்பு உயர்கல்வி பெறும் வாய்ப்பு என்பன உருவாகின. பல்கலைக்கழகக் கல்வியைப் பெண்கள் பெற்றனர். தொழில் ரீதியான வாய்ப்புகளைப் பெண்கள் பெற்றனர். இப்பின்னணியில் ஆளுமைமிக்க கவிப்புலம் மிக்க பல பெண் கவிஞர் தோற்றம் பெற்றனர். 1980களில் அரசியலில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. 1983 - 1987 காலகட்டத்தில் தமிழர் போராட்டத்தில் தமிழ்க் குழுக்கள் பல செயற்பட்டன. 1987 - 90 இந்தியப் படையினரின் இருப்பும்; கவிதை தோற்றம் பெறக் காரணமாயின.

90களுக்குப் பின்பு அரசியலில் பெருமாற்றங்கள் ஏற்பட்டன. இடப்பெயர்வு முக்கியக் காரணமாக அமைகின்றது. 90களில் முஸ்லிம் இடப்பெயர்வு, தீவுமக்கள் இடப்பெயர்வு, வடமராட்சி, தென்மராட்சி மக்கள் இடம்பெயர்வு, மட்டக்களப்பு, அம்பாறை மக்கள் இடப்பெயர்வு 95 யாழ்ப்பாண மக்கள் இடப்பெயர்வு, இடப்பெயர்வு புலம் பெயர்வாக மாற்றம் பெற்றதும் கவிதைகள் தோற்றம் பெறக் காரணங்களாயின. 90களில் விடுதலைப் போராட்டம் முனைப்புப் பெற்றது. பெண்கள் பலர் போராட்டத்தில் இணைந்தனர். போராட்டத்தில் இணைந்த பெண்கள் கவிதை படைக்க ஆரம்பித்தனர். இதனால் பெண்ணிலைவாதம் பெண் எழுச்சி பெற்றது. முன்னொரு காலத்திலும் இல்லாதவாறு இக்காலத்தில் பெண்கவிதை எழுச்சி பெற்றது எனலாம்.

**சஞ்சிகைகள் பத்திரிகைகள்**

பெண்கவிதைகள் தோற்றம் பெற வளர்ச்சி காண பல சஞ்சிகைகள், இதழ்கள், பத்திரிகைகள் களம் அமைத்துக் கொடுத்தன. தோழி, தூண்டில், புதுசு, சக்தி, திசை, களம், சரிநிகர், காலச்சுவடு, மூன்றாவது மனிதன், உயிர்நிழல், கணையாழி, யுகம்மாறுது காலடி, கண்ணில் தெரியுது வானம், உயிர்நிழல் காலம், அற்றம், வெளிச்சம், சுதந்திரப் பறவை, கலைமுகம், ஞானம், கவிதை, ஜீவநதி போன்ற சிறு சஞ்சிகைகளில் ஈழத்துப்

பெண்களின் கவிதைகள் வெளிவந்தன. தினக்குரல், வீரகேசரி, சுடர்ஒளி, ஈழநாடு, ஈழநாதம், உதயன் என்ற பத்திரிகைகளும் பெண் கவிதைகள் தோற்றம் பெறக் காரணங்களாயின. இணையத்தளமும் பெண் கவிதைகள் வளரக் களமாக அமைகின்றது.

*பெண்கவிஞர்களும் - கவிதைகளும்*

1986இல் பத்துப் பெண் கவிஞர்களின் இருபத்து நான்கு கவிதைக் கொண்ட சொல்லாத சேதி என்ற கவிதைத் தொகுப்பு வெளிவந்தது. இதுவரை சொல்லப்படாத செய்திகள் இதில் குறிப்பிடப்படுகின்றன. இதனால்தான் இது சொல்லாத சேதிகள் என்ற பெயரில் வெளிவந்தது. பெண்கள் மொழிக் கூடாக பெண்ணிய உணர்வுகள் உணர்வுபூர்வமாக வெளியிடப்படுகின்றது. பெண்கள் ஆய்வு வட்டத்தால் இத்தொகுதி வெளியிடப்பட்டது.

பதினெட்டுப் பெண்கவிஞர்களின் கவிதைத் தொகுப்பாக 'மறையாத மறுபாதி' என்ற கவிதைத் தொகுதி வெளிவந்தது. இருபத்தாறு பெண் கவிஞர்களின் கவிதைத் தொகுப்பாக 'எழுதாத உன் கவிதை' (2001) என்ற தொகுப்பு வெளிவந்தது. போராட்டத்துள் சேர்ந்த போராளிகளும் எழுதிய கவிதைகள் பலவும் போருக்குள் வாழ்பவர்கள் எழுதிய சில கவிதைகளும் இதில் இடம் பெறுகின்றன. இத் தொகுதியில் நாதினி, ஞானமதி, தமிழவள், அலையிசை, செந்தணல், கலைமகள், கனிமொழி, அம்புலி, உமா செல்வி, சூரியநிலா தூயவள், ஆதிலட்சுமி, தமிழ்க்கவி, வான்நிலா, சுதாமதி, ஜனார்த்தனி, நகுலா, கிருபா, காந்தா, மனோ போன்றோர் இத்தொகுப்பில் உள்ள கவிஞர்கள். இக்கவிதைகள் நேரடியாகச் செய்தியைச் சொல்பவை எந்தவித சிக்கலுமில்லாமல் வாசகரைச் சென்றடையக் கூடியவை. தம் உணர்வுகளைக் கவிதையில் பெண் மொழியில் பேசுகின்றார்கள். இனக் கலவரங்கள், மோதல்கள் நடைபெறும் பொழுது இலக்காக்கப்படுபவள் பெண்ணே. பெண்ணையொருக்கும் அச்சமூக அமைப்பிலிருந்து பெண் எழுச்சி பெற பெண்மொழி பேசுகின்றது.

*ஒடுக்கு முறைகள் என்*
*குரல்வளையை நெரிக்கின்றன*
*செந்தணல்*
*நம்பிக்கை ஒளி*
*எழுதாத உன் கவிதை* (ப. 12)

அலையிசை என்ற பெண் கவிஞர் 'என் அகத்தின் பாடலிது' என்ற கவிதையில்,

*உயிரின் செயல்கள்*
*அவர்கள் மனங்களிடை*
*பத்திரப்படுத்தப்பட்டுள்ளன.*
*மௌனமாக என் மன இடுக்குகளில்*
*பதியப்பட்டுள்ளன உயிரின் உணர்வுக*
*ளோடு ஒன்றிப்போக வாழ்வு நகர்கிறது*
*என் அகத்தின் பாடலது*
*எழுதாத உன் கவிதை* *(ப. 7)*

என் அகத்தின் பாடலிது என்ற கவிதையில் அழகியல் உணர்வுடன் வெளிப்படுத்துகின்றாள்.

> வையகமே காத்திரு, புரிதல், எப்போது விடியும் என் இரவு உயிர்க் கூடு ஒன்றில் உறுதியாய் ஒரு வீடு, மாற்றம் தேடி அடைவாய், மெழுகுவர்த்தி, அவள் ஒன்றுக்கும் அசையாள், நேசராச்சியம், காலங்களற்ற கடல், மழைக்காலங்கள், காலக்கணக்கு, விடை பெறுதல் இல்லாத பிரிவுகள், ஊழியின் முடிவு, இருள் விலகும், போரின் நாட்கள் சினேகிதம் முடியும், உயிர்ப்பு, பெயரிடாத நட்சத்திரங்கள் பயணம் தொடர்கிறது உனது பெயர் புதுமைப்பெண் என்ற பொருள்களில் கவிதைகள் அமைகின்றன.
>
> (எழுதாத உன்கவிதை)

வானதியின் கவிதை (1990), கஸ்தூரி ஆக்கங்கள் (1993), சிவரமணி கதைகள் (1993), செல்வி சிவரமணி கவிதைகள் (1997) , ஆதிலட்சுமி என் கவிதை (2000), ஔவையின் எல்லை கடத்தல் (2000), ஆழியாளின் உரத்துப்பேச (2000), நாகபூசணி நெற்றிக்கள் (2001), தர்மினியின் உதயத்தைத்தேடி (2002), மைதிலியின் இரவில் சலமைற்றுக்கரையும் மனிதர்கள் (2003), மைத்திரேயின கல்லறை நெருஞ்சிகள் (2004), அம்புலியின் மீண்டும் துடிக்கும் வசந்தம் (2004), அனாரின் ஓவியம் வரையாத தூரிகை (2004), றஞ்சினி கவிதைகள் (2005), மலரா புதிய இலைகளால் ஆதல் (2009), சுபாஹினி பகிர்வு (2006), பஹீமா ஜ ஹானின் ஒருகடல் நீரூன்றி (2007) என பெண்கவிஞர்களின் தொகுப்புகளாக இவை பல்வேறு காலகட்டங்களில் வெளி வந்தவை.

கல்முனை பாண்டிருப்பைச் சேர்ந்த டொக்ரர் புஸ்பலதா லோகநாதன் என்பவர் 'மலரா' என்ற புனை பெயரில் கவிதை எழுதுபவர். 'புதிய இலைகளால் ஆதல்' என்ற கவிதைத் தொகுப்பு 2009இல் கல்முனையில் வெளியிடப்

பட்டது. மூன்றாவது மனிதன் சரிநிகர், வீரகேசரி, இணைய இதழ் என்பவற்றிலும் இவரது படைப்புகள் வெளிவந்தன. நவீன கவிஞர்கள் பலர் பேசும் போர்க்களம் பற்றி மலராவும் பேசுகின்றார். கனாக் கண்டேன், கெடு, காலம், துர் யுகம் அகாலத்தின் கதை ஊடக மனிதப் பிரிவுகள் இடப் பெயர்வு யுத்தத்தினால் ஏற்பட்ட மரணங்கள் யுத்தக் குறிகள் என்பவற்றைக் கோடுகாட்டிச் செல்கின்றார். அடையாளங்களாகக் குறிப்புகளாக - சில செய்திகளைக் குறிப்பிடுகின்றார். அகம் சார்ந்த விடயங்களுக்கே மலரா முக்கியத்துவம் கொடுக்கிறார். பெண்மை சார்ந்த அகம் உலகத்தைத் தனது கவிகளின் மூலம் வெளிக் கொணருகின்றார். பெண்கள் அகமனதை அக உலகத்தைப் பெண் மொழி மூலம் வெளிப்படுத்தும்போது பெண்மை வெளிப்படுகின்றது. எல்லாப் பெண் படைப்பாளிகளாலும் இதனைச் சொல்லமுடிகிறதா என்ற கேள்வி எழுகின்றது. சில படைப்பாளிகளால் தான் பேச முடிகின்றது. 'ஆழ்கடல் தேடல்', 'கணங்கணமாய்' என்னும் கவிதையில் பெண் மொழி மூலம் பெண் தன்னை வெளிப்படுத்துகிறான். தாம்பத்திய வாழ்வில் ஏற்பட்ட உணர்வுகள், நிகழ்வுகளைத் தமது கவிதையில் பெண் மொழியால் பதிவு செய்கின்றார்.

*"நீ அருகிருக்க*
*உன் வாசனை முகர்வதும்*
*நீ அற்ற வெளியில்*
*அவ் வாசனை உணர்வதும்"*

உடல் வாசம் பற்றி மலரா பேசுகின்றார். இப்படிப் பெண்மொழி பேசுகின்றபொழுது பலர் விமர்சனம் எழுப்புவர். பெண்மை தன்னை வெளிப்படுத்துகிறதோ என்பார்கள். மலராவின் கவிதையில் நீ அருகிருக்க என்பதும் நீ அற்ற வெளியில் என்ற வரிகளும் ஓர் உண்மையை வெளிப்படுத்துகின்றன. தலைவன் இல்லாத நிலையை எண்ணி ஆதங்கப்படுகிறாள் மலரா. அந்தமன அக நிலையைக் கவிதையில் சொல்ல வேண்டி ஏற்படுகிறது. இந்த நிலையில் மலரா பேச வேண்டியுள்ளது. மற்றது அவர் ஒரு வைத்தியர். அதனால் அவரால் எதனையும் சொல்ல முடியும். அவர் வைத்தியரும், அதேநேரம் கவிஞரும், அதனால் அகமன உணர்வுகளைப் பெண் மொழி மூலம், வெளிப்படுத்த முடிகிறது. அறிவியல் சார்ந்த பௌதீக உண்மைகளையும் சேர்த்துக் கவிதை அமைக்கின்றார். ஊடல் நிலை பௌதிகத் தன்மை தாம்பத்திய நிலை என்பவற்றை எல்லாம் வெளிப்படையாக அகமன உணர்வை விளித்துப் பார்க்கின்றார்.

சுகந்தி சுப்பிரமணியம் 'மீன் கடழிதலின் ரகசியம்', 'புதையுண்ட வாழ்க்கை' என்ற கவிதைத் தொகுதிகளை வெளியிட்டவர். கவிதையில்

பேசப்படாத செய்திகளை இவர் பதிவு செய்துள்ளார். பெண்ணின் உடல் முதல் தொலைந்துபோன அடையாளங்கள் வரை என அனைத்தையும் தனது கவிதையில் பதிவாக்கியுள்ளார். சுகந்தி பெண்களின் வாழ்வை முழுமையாகச் சித்திரிக்கின்றார்.

சல்மாவின் ஒரு மாலையும் இன்னொரு மாலையும் என்ற கவிதைத் தொகுதி வெளியானது, வாழ்வு முறைகளை அனுபவங்களைத் தனது ஆளுமையூடாக வெளிப்படுத்துகின்றார். திலகபாமா பல கவிதைத் தொகுதிகளை வெளியிட்டுள்ளார். சிறகுகளோடு அக்கினிப் பூக்களாய், எட்டாவது பிறவி, சூரியாள், சூரியனுக்கும்.

பெண்கள் பற்றியும் பெண்விடுதலை பற்றியும் ஆண்களே பேசி வந்தனர். காலப்போக்கில் மரபு மாற்றங்களாலும் பண்பாட்டு மாற்றங்களாலும் பின் நவீனத்துவம் ஒரு கோட்பாடாகப் பயிலப்படுவதனாலும் பெண்கள் தமது வாழ்வியல் பற்றிப் பேசத் தொடங்கினர். பெண்களின் ஒழுங்கு முறைகள், பெண்களின் விருப்பங்கள், உடல் உள ரீதியான விருப்பங்கள் என்பனவற்றைத் தமது கவிகள் வாயிலாக வெளிக்கொணர்ந்தனர்.

குட்டிரேவதி, சுகிர்தராணி, மாலதி மைத்திரேயி போன்றோர் பெண் உடல் சார்ந்து கவிகள் இயற்றினர். இவர்களின் கவிதைகளை ஆபாசம் எனப் பலர் விமர்சனம் செய்தனர். பண்பாட்டுக்குப் புறம்பானது எனச் சொல்லி கேலி செய்தும் மிரட்டியும் வந்தனர்.

கிழக்கே என்ற கவிதைத் தொகுதிகள் திலகபாமாவின் எண்ணப் பதிவுகளைப் பதிவு செய்கின்றன. இவர் தனது கவிதைகளைப் பெண்ணியம் என்ற வார்த்தைக்குள் அடக்க வேண்டாம் எனக் கூறுபவர். மனித பேதங்களை மொழியில் கூறுவது தேவையற்றது என்கிறார். தமிழ்மொழியை வளர்க்க வேண்டும் என்பதே அவரது நோக்காக இருந்தது. மரபில் இருந்து பண்பாட்டிலிருந்து விடுபட முடியாமல் இவ்வாறு கூறுகிறார் என்றே கொள்ளலாம். ஆனால், இவரது கவிதைகள் பல புதிய அணுகுமுறைகளை கற்பிக்கின்றன. பெண்ணியல் நோக்கில் ஆய்வு செய்வதற்கு இடம் தருகின்றது.

### *சுபாசினி கவிதைகள்*

சுபாசினியின் பகிர்வு என்ற கவிதைத் தொகுதி 2006இல் வெளிவந்தது. இதற்கு முன்னர் உதிரிக் கவிதைகளாக உதயன், சுடர் ஒளி, ஈழநாதம், சங்குநாதம் பத்திரிகைகளில் (2003 - 2005) காலப்பகுதியில் அவ்வப்போது வெளிவந்தவை அமைக்கப்படுகின்றன.

*பாதிக்காதல் பல பேரிடையே சாதியால்ஒழியக் கண்டேன்*
*பேசிடும் திருமணத்தில் தரகர் முறையாய்க் கூறிடும்*
*சாதிகண்டேன் ஏசிடும் வாய்ச் சண்டையிலே*
*அதிர ஏசி வரும் சாதி கண்டேன்*

சுபாசினி சமூகத்தை உற்றுநோக்கி சீதனம், சாதி, கொலைகள், திருட்டு, ஊழல் என்ற சமூகத்தின் கொடூரங்களைத் தனது கவிதையின் வரிகளால் காட்டுகின்றார். சுனாமி, கடல், சமாதானம், இயற்கைத் தேசவழமை, காதல், சந்தேகங்கள் என்பவற்றை எல்லாம் கருப்பொருளாகக் கொண்டு கதை அமைக்கிறார்.

சமகாலப் பிரச்சினைகளை யதார்த்தத்தைச் சொல்ல விழைகிறார். சில கவிதைகள் தன்னுணர்ச்சிக் கவிதைகளாக வருகின்றன. சமூகத்தை நோக்கிச் சிலவற்றைச் சொல்கின்றார். சமூகத்தில் கண்ட அனுபவங்களின் வெளிப்பாடாகக் கவிதைகள் அமைகின்றன. கவிதைக்கு இயைபாக அழகான சொற்கள், சொற்றொடர்கள் அமைகின்றன. ஈழத்துப் புதுக்கவிதை வரலாற்றில் சுபாசினியின் கவித்துவ ஆற்றல் குறிப்பிடப்பட வேண்டியது கவிதை படைக்கும் ஆற்றல் இயல்பாக அவருக்கு வந்துள்ளது புதுக் கவிதையில் ஓசை நயத்தைப் பேணுகின்றமை குறிப்பிடத்தக்கது. இசைத் துறையில் பயின்ற காரணத்தினால் அவருக்கு ஓசை நயம் தானாகவே வருகின்றது. சுபாசினியின் கவிதைகள் வாசகரிடையே தாக்கத்தை நிச்சயம் உண்டுபண்ணும்.

அம்புலியின் கவிதைகள் அரசியல், போரியல், சமூகவியல் பெண்ணியம் சார்ந்து அமைகின்றன. அரச ஆதரவு, அரச எதிர்ப்பு அரசுக்கெதிரான போராட்டங்களை மையப்படுத்தி எழுதுகின்ற கவிதைகள் அரசியற் கவிதைகளாக அமைகின்றன. அம்புலி நேரடிக் கள அனுபவம் பெற்றவர். இவரது கவிதைகளில் உண்மையும் அனுபவமும் வெளிப்படுகின்றன. மரபுக் கவிதையின் ஓசையும் வசன கவிதை போன்ற வடிவமும் இலகுத்தன்மையும் புதுக்கவிதையின் தாக்கமும் சேர்ந்த வேறுபட்ட வெளிப்பாடாக அம்புலியின் கவிதை வடிவம் அமைகின்றது. கற்பனையின்றிப் பிறக்கின்ற கவிதைகளைச் சொற்களால் சுவரிடுதல் முடியாது என்கின்றார். குறியீடுகள், படிமங்கள் தேவையில்லை என்பது அவரது கருத்தாகின்றது.

'அழகிய மனங்களே வேண்டும் எங்களுக்கு' என்ற கவிதை அழகியல் உணர்வை வெளிப்படுத்துகின்றது. பெண்ணியம் சார்ந்த கவிதைகளின் ஊடாகச் சமூக ஒடுக்குமுறைகள் களையப்பட வேண்டும் என்கின்றார்.

போரியல் சார்ந்த அவரது கவிதைகளில் இனவிடுதலை அவசியம் என்பதனை உணர்த்துகின்றன.

பெண்ணியம் சார்ந்த படைப்புகளிலே அம்புலியின் கவிதை ஆளுமை நிறைவு பெற்றிருக்கின்றதை உணர முடிகின்றது. பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் (காதல் வாழ்வு, குடும்ப வாழ்வு) பற்றி அம்புலி தனது கவிதையில் பேசுகின்றார். பெண்ணை அடக்கும் முறையைத் தெளிவாகப் பேசுகின்றார். அம்புலி சமதருமப் பெண்ணியவாதியாக நிற்கிறார்.

மைத்திரேயின் உறங்கும் காலம் முடிவுறும் வேளை, பிரகடனம் என்ற இருகவிதைகளும் மரபு என்பதிலிருந்து விலகிப் பெண்கள் சிந்திக்க செயற்பட வேண்டும் என்பதனை வலியுறுத்துகின்றது. பெண்கள் அடக்கு முறையிலிருந்து விலகிப் புதுமை படைக்க வேண்டும் என வலியுறுத்துகிறார். மைத்திரேயி தனது கவிதையில் உத்தி முறைகளைக் கையாளுகின்றார். கல்லறை நெருஞ்சிகள்; என்ற கவிதைத் தலைப்பு குறியீடாக அமைகின்றது. மைத்திரேயி கவிதையில் மக்கள் வாழ்க்கை அவலங்கள், போராட்டங்கள், சமூகப் பிரச்சினைகள், பெண்ணியம், அரசியல் விடயங்களை யதார்த்தமாகப் பேசுகின்றார்.

மைத்திரேயின் 'நாமும் மனிதர்கள்' என்ற கவிதையில் பெண்களின் வளர்ச்சிக்கு முதல் எதிரி பெண்களேதாம் என்பதனை வெளிப்படுத்து கின்றார். ஆணாதிக்க உணர்வு ஆண்களிடம் மட்டுமல்ல சில பெண்களின் அடிமனத்தில் இருக்கின்றது. மரபு என்ற நிலையைத் தாண்டி பெண்கள் புதுமை படைக்க அடக்கு முறைகளை மீறி வெளியே வரவேண்டும் என மைத்திரேயி குறிப்பிடுகின்றார். உறங்கும் காலம், முடிவுறும் வேளை, பிரகடனம் மரபிலிருந்து விடுபட்டுப் பெண்கள் செயற்பட வேண்டும் என்ற கருத்தை முன்வைப்பன. பெண்ணினமே என்ற கவிதைத் தலைப்பு பெண்கள் விழிப்படையச் செய்யும் தலைப்பாக விளங்குகின்றது. கல்லறை நெருஞ்சிகள் என்ற கவிதை குறியீடாக அமைகின்றது. மேலும் பிரகடனம், உயிர்ப்பு என்பனவும் குறியீட்டு முறையில் அமைகின்றன. குறியீடு என்பது ஒரு சூக்குமப் பொருளைத் தூலப் பொருளின் தன்மை கொண்டு ஒப்பிட்டு விளக்கும் ஒரு முயற்சி. சொல் மூலமாகச் சொல்லுக்கு அப்பாற்பட்டு விளக்குவதற்கு இக்குறியீடு அவசியமாகின்றது. மேலும் படிமத்தையும் கவிதையில் கையாளுகின்றார். வாசகர் மனத்தில் மின்னலென ஓர் ஒளிச் சித்திரத்தை வரைந்து போகின்ற மாய ஓவியத் தூரிகையே படிமம் என்பதாகும். ஓர் ஓவியம் அல்லது சிற்பமோ தன்னைச் சொற்களின் மூலமாக வெளிப்படுத்திக் கொள்ளும் முறையே படிமம் என்பதாகும்.

*கதைத்த பூட்ஸ்களாய் நெஞ்சில் கண்ணி வெடி விதைக்கும்*
*என்பதில் கண்ணிவெடி*

*(கல்லறை நெருஞ்சிகள், ப. 8)*

மைத்திரேயின் கவிதைகள் சமூக நோக்குடையன. நிறைவுத்தன்மை கொண்டன. உருவம் உள்ளடக்கம் உத்திமுறைகளைக் கொண்டு இலகுவான மொழிநடையைக் கொண்டும் அமைகின்றமை குறிப்பிடத் தக்கது.

சிவரமணியின் கவிதைகள் பேசப்பட வேண்டியன, கவிதை சொல்லும்பொழுது இலகுவாகச் சொற்களைப் பயன்படுத்திக் கூறுவார். படிமங்களூடாக சில செய்திகளைப் பதிய வைக்கிறார். பெண்களின் ஒடுக்கு முறைகளை வெளிப்படுத்துகிறார். ஔவையின் கவிதையும் போர் பற்றியும் சமூகம் பற்றியும் பேசுகின்றது. இரு மனங்களின் காதல் பற்றிய உணர்வுகளை ஆழியான், ஹக்கின் போன்ற கவிதைகள் குறிப்பிடுகின்றன.

இஸ்லாமியப் பெண்கள் கவிதை வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியுள்ளனர். அனார், சுல்பிகா, லரீனா, பெண்ணயா, பஹீமா ஜஹான் ஏ, ஹக், ஷர்மிள றஹிம், மசூறா, ஏ.மஜிப போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள் பெண்களது ஒடுக்கு முறைகள் பொதுவாக இவர்களின் கவிதைகளில் பேசப்படுகின்றன. போர், காதல் பெண் விடுதலை பற்றிப் பேசுகின்றன.

கிழக்கிலங்கைப் பெண் கவிஞர்களின் கவிதைத் தொகுப்பாக (1999)இல் உயிர்வெளி வெளிவந்தது. பெண்களின் காதல் கவிதையின் பொருளாக வருகின்றது. காதலால் உண்டாகும் பல மாற்றங்களையும் சமூகத்தில் வரும் இடர்ப்பாடுகளை எல்லாம் அறிவியல் முறையில் பேசுகின்றனர். மலையகப் பெண்களின் கவிதைத் தொகுப்பாக இசை பிழியப்பட்ட வீணை 2007 இல் வெளி வந்தது. பெண்கள் அடக்கு முறையின் கீழ் இருப்பவர்கள் கல்வி தொழில் வீடு என்பவற்றை எல்லாம் அவள் இலகுவாகப் பெற முடியாது. கடுமையான உழைப்பின் பின்னர்த் தான் போராடிப் பெறவேண்டும் என்பதனை இக்கவிதை வெளிப்படுத்துகின்றது.

## முடிவுரை

ஈழத்துப் பெண் கவிஞர்கள் எல்லோரும் பெண்ணியம் பற்றிய ஒரே பார்வை உடையவர்கள் என்று கூற முடியாது. இந்தியாவோடு ஒப்பிட்டு நோக்கும்போது ஈழத்தில் பெண்ணியச் சிந்தனை முனைப்புப் பெற்றுள்ளது என்றே கூறலாம். பெண்கள் வெறும் சடப்பொருள்கள் அல்லர். உணர்வுகள் அற்றவர்கள் அல்லர். ஆண்களுக்குச் சமமாகப் பெண்களுக்கும் சம உரிமை அளிக்கப்பட வேண்டும் என்பதனை முன்வைத்தனர்.

ஆண் கவிஞர்கள் மட்டும் ஈழத்துக் கவிதை வரலாற்றில் இடம் பிடித்துள்ளனர். பெண் கவிஞர்களும் ஈழத்து இலக்கிய வரலாற்றில் பேசப்பட வேண்டியவர்கள். ஆண்கள் போலப் பெண்களும் உருவம், உள்ளடக்கம் என்பவற்றைக் கையாண்டு புதுக்கவிதை, நவீன கவிதை படைக்கும் ஆற்றல் பெற்றுள்ளனர். பெண்களால் அரசியல், போர், சமூகம், பெண்ணியம் பற்றிப் பேச முடிகின்றது. ஆண்களைவிட பெண்கள் தமது விருப்புகள் வெறுப்புகளை பெண்மொழி மூலம் விசேடமாகக் கூறமுடிகின்றது. சமூகத்தில் இன்றைய பிரச்சினைகளுள் ஒன்று பெண் ஒடுக்கு முறை. யதார்த்தத்தில் உள்ள சமூகப் பிரச்சினைகளை எடுத்துக் காட்டி அதற்குரிய தீர்வுகளைப் பெண் படைப்பாளிகள் முன்வைக்கின்றனர். படைப்பாளி பிரச்சினையைக் கூறி அதற்கான தீர்வினைக் கூறவேண்டும். அறிவியல் பார்வை, அழகியல் பார்வைகொண்ட படைப்புகளாகப் பெண்களது கவிதைகள் அமைகின்றன. ஆண்களது படைப்புக்கு நிகராகப் பெண்களது படைப்புகள் திகழ்கின்றன.

### துணை நூல்கள்


1. காவலூர் இலக்கிய வட்டம், கல்லறை நெருஞ்சிகள், கவிதைத் தொகுப்ப 2004.
2. மாலதி மைத்திரி, க்ருஹாங்கினி, பறத்தல் அதன் சுதந்திரம், இருபதாம் நூற்றாண்டு தமிழ்ப் பெண் கவிதைகள், 2001, காவியா முதற் பதிப்பு.
3. மலரா, புதிய இலைகளால் ஆதல், 2009, தேசிய நூலக ஆவணமாக்கல் சேவைகள் சபை, கல்முனை, இலங்கை.
4. சுபாசினி, பகிர்வு 2006.
5. எழுதாத உன் கவிதைத் தொகுப்பு 2001, வானதி வெளியீடு, புதுக்குடியிருப்பு, இலங்கை.

# எதிர்ப்பிலே பிறந்த கவிதைகள்: ஈழத்துப் பெண் கவிஞர்கள்

முனைவர் ந. அறிவுராஜ்
*முனைவர்பட்ட மேலாய்வாளர்*
*அயலகத் தமிழ்த் துறை*
***செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்***
***சென்னை-113***

ஈழத்துச் சமகால இலக்கியங்கள் ஒருபுறம் நவீனம், நவீனத்துவம், பின்னை நவீனத்துவம் என மேலைக் கருத்தாக்கங்களால் மூழ்கிக் கிடந்தாலும், மறுபுறம் புலம், புலம் சார்ந்த பண்பாடு, சிங்களவரின் கொடூர இராணுவ அடக்குமுறை, புலம்பெயர்ந்தத் தமிழர்களின் மனநிலை முதலியவற்றைப் பிரதிபலிக்கின்றன. ஈழத்துத் தமிழ்த் தேசியப் போராட்டங்கள் பல்வேறு முரண்களைத் தம்மகத்தே கொண்டிருந்தாலும், தமக்குள் பல்வேறு பரிமாணங்களையும் உள்வாங்கிக்கொண்டுதான் இருக்கின்றன. இதனால், சமகாலப் பெண் கவிஞர்கள் அனைவரும் ஒரே வார்ப்பில் ஒற்றைக் குரலில் மட்டும் ஒலிப்பவர்கள் அல்லர். பல்வேறு குரல்களில் சிங்கள அரசின் இனவெறித் தாக்குதலையும், அத்தாக்குதலால் புலம்பெயர்ந்த ஈழத்தமிழரின் சமூக நிலையையும், பெண்கள்மீதான ஆண்களின் வக்கிரப்புத்தியினையும் எதிர்ப்பாளர்களாகக் கவிதைகளினூடே தங்களை உருமாற்றிக் கொண்டனர். அதனால் எதிர்ப்பிலே பிறந்த கவிதைகள் தமிழீழப் போராட்டக் கவிதைகள், புலம்பெயர்வுக் கவிதைகள், பெண் உடல் மொழிக் கவிதைகளெனப் பற்பல தளங்களில் நீட்சி கொண்டிருக்கின்றன.

ஈழத்துப் பெண்படைப்பாளர்களின் தனித்தன்மையை வெளிப்படுத்து வதற்கும், பெண்மொழிசார்ந்த படைப்புகளை வெளிக்கொணர்வதற்கும் 'சொல்லாத சேதிகள்' களம் அமைத்துக் கொடுத்தது. ஈழத்துப் பெண்களின் எதிர்ப்பிலே பிறந்த கவிதையைத் தமிழீழப் போராட்டக் கவிதைகள், புலம் பெயர்ந்த கவிதைகள், பெண் உடல்மொழிக் கவிதைகள் என வகைப் படுத்தலாம்.

தமிழீழப் போராட்டக் கவிதைகள் அனைத்துப் பெண் படைப்பாளர்களின் கவிதைகளில் பரவலாகக் காணப்படுகின்றன. ஆனால், பெண் உடல் மொழிக் கவிதைகள் ஆழியாள், அனார் முதலியோரின் படைப்புகளில் மிகுதியாகக் காணப்படுகின்றன. தமிழீழப் பிரச்சினையின் காரணமாக மலேசியா, சிங்கப்பூர், அமெரிக்கா, ஐரோப்பா, ஆஸ்திரேலியா,

ஜப்பான் முதலிய நாடுகளில் அகதிகளாக வாழும் ஈழத்தமிழரின் இலக்கியப்படைப்புகளைப் புலம்பெயர்வுக் கவிதைகள் எனலாம். இக்கவிதைகளில் தன் தாய் நாட்டில் வாழ்ந்த முந்தைய வாழ்க்கைநிலையினையும், புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும்போது எதிர்கொள்ளும் இடர்ப்பாடுகளையும் அறியமுடிகிறது.

சிங்களச் சிப்பாய்கள் ஈழத்துப் பெண்களை உடல்ரீதியிலும் மனரீதியிலும் துன்புறுத்தியமை, தமிழீழப் போராட்டத்திற்கு முக்கியப் பங்கு வகிக்கும் பெண்களைப் பாலியல் வல்லுறவு செய்தமை, நாட்டில் புனிதமாகக் கருதப்படும் இடங்களான கல்விநிலையத்தையும் மருத்துவமனையையும் பீரங்கியால் தகர்த்தமை, குழந்தைகளுக்குப் பாதுகாப்பின்மை முதலிய பிரச்சினைகளைத் தங்களின் படைப்புகளின் வாயிலாகப் பெண்கள் எதிர்க்கின்றனர். ஆகவே, இத்தகைய கவிதைகளை எதிர்ப்பிலே பிறந்த கவிதைகள் எனலாம்.

ஈழத்தில் முதன்முதலாக 1986இல் 'பெண்கள் ஆய்வுவட்டம்' என்னும் பெயரில் பெண்கள் ஒன்றுகூடி 'சொல்லாத சேதிகள்' எனும் தலைப்பில் எதிர்ப்பின் கவிதைகளைப் பதிவுசெய்தனர். இக்கவிதைத் தொகுப்பின் வெளியீட்டாளர்கள்,

> இந்நிலையில் தமது உணர்வுகளையும், எண்ணங்களையும், கருத்துகளையும், ஆற்றல்களையும் இயல்பாக வெளியிடுவதற்கும், தமது திறன்களை வளர்த்தெடுப்பதற்கும், தமது ஆக்கங்களைப் பிரித்து நோக்குவது அவசியம் என்றும் 'பெண்களிடையே பெண்' என்ற இந்த நிலைப்பாடு தோன்றியுள்ள இக்காலக்கட்டத்தில் நாம் பெண்களுக்கான ஒரு கலை இலக்கிய நெறியை உருவாக்குவது முக்கியத் தேவையாகும்
>
> (சொல்லாத சேதிகள்: 1986)

எனவும் சூளுரைத்தனர். இத்தகைய தேவையை உணர்ந்து சோலைக்கிளி, ஔவை, மைத்ரேயி, சிவரமணி முதலியோர் எழுதத் தொடங்கினர்.

> ஈழத்துத் தமிழ்க் கவிதைகளைப் பொறுத்தவரை அதன் மொழி, அதன் ஆழம், வீச்சு என்பன இன்று எட்டியுள்ள வீச்சினின்றும் மேலே செல்ல வேண்டுமாயின், சமூகவியலின் இன்றைய புதிய பரிமாணமான பெண்ணியல் சிந்தனைகளையும் உள்வாங்குவது மிக அவசியமாகும் என்றாா் ஔவை.
>
> (ஔவை, **நவீனத் தமிழ்க் கவிதைகள்**: ஒரு பெண்ணிய நோக்கு, பக். 50-51)

இத்தகையக் கருத்தாக்கங்களை உள்வாங்கிக் கொண்டு ஆழியாள், நளாயினி, சுகந்தினி, மோனிகா, சாரங்கா, றஞ்சி, பஹீமாஜகான், தர்மினி, மதனி, அனார் முதலிய பெண் படைப்பாளர்கள் தங்கள் படைப்புகளில் சமூகம், அரசியல், பாலினவேறுபாடு, பெண் உடல் மொழி முதலியவற்றைப் பதிவு செய்தனர். இவர்களுள் ஆழியாளும் அனாரும் சமகால ஈழத்து இனப்போராட்டத்தையும் பெண்களின் உடல்மீதான நுண்அரசியலையும் (Fragmentation) பெரிதும் அடையாளப்படுத்தினர்.

பரந்துபட்ட இந்த நிலவுலகத்தைத் தன் சுயநலத்திற்காக வேலி அமைப்பதும் மீறும் ஆண்களைச் சிங்கள அரசு இயந்திரங்களைக் கொண்டு ஒடுக்குவதும் இயல்பாகிவிட்டது. இதனை,

*நான் இந்தச் சேலையை*
*அலுமாரித் தட்டில் அடுக்கப்போவதில்லை*
*அதை உடுப்புக் கொக்கியில் தான் போடுவேன்*
*ஏனென்றால்*
*எப்போது அது மீண்டும் தேவைப்படும் என்பது*
*எனக்கே தெரியாது* *(ஆழியாள், உரத்துப் பேச, ப. 62)*

'வெள்ளைச் சேலை' என்னும் கவிதையில் கவிஞர், மனிதர்கள் வயது முதிர்ந்தோ, நோய்வாய்ப்பட்டோ, எதிர்பாராத விபத்தினாலோ இறப்பது இயல்பு. ஆனால், அவ்வாறின்றிக் குறைந்த வயதில் அரசு இயந்திரங்கள் நவீனக் கருவிகளைக் கொண்டு போராளிகள் கொலைசெய்யப்படுவதால், ஈழத்துத் தமிழ்ப் பெண்கள் மிகுதியாக வெள்ளைப் புடவை அணிந்திருக் கின்றனர்.

*அழகி மன்னம்பேரிக்கும்*
*அவள் கோணேஸ்வரிக்கும்*
*புரிந்த வன்மொழியாகத்தான்*
*இது இருக்கும் என*
*அவதியாய் எட்டிக்கடந்து போனேன்*
*(ஆழியாள், உரத்துப் பேச, பக். 19–21)*

'மன்னம்பேரிகள்' என்னும் கவிதை சிங்கள இராணுவத்தினர் ஈழத்துத் தமிழ்ப் பெண்கள் இருவரைப் பாலியல் வல்லுறவுசெய்து கொலை செய்யப்பட்டதைக் குறிப்பிடுகிறது. 1971 இல் மன்னம்பேரி என்னும் 22 வயதுடைய இளம்பெண் ஜே.வி.பியின் கிளர்ச்சியில் பெண்கள் அணிக்குத் தலைமைதாங்கியதால் அதே, ஆண்டு ஏப்ரல் 16இல் சிங்கள இராணுவச் சிப்பாய்களால் கைதுசெய்யப்பட்டு, பின் அப்பெண்ணைப் பாலியல் வல்லுறவு செய்தனர். 'கோணேஸ்வரி' என்ற 33 வயது பெண்ணை 1997 மே 17ஆம்

தேதி இரவு, இவரது வீட்டுக்குச் சென்ற படையினர் பாலியல் வல்லுறவு செய்து பின் அவளின் யோனியில் கிரனெட் வைத்து வெடிக்கச் செய்தனர். இத்தகைய நிகழ்வினைக் கவிஞர் மீட்டுருவாக்கம் செய்கின்றார்.

*அஞ்சு வயது மகளை*
*நெஞ்சோடு அணைத்துக் கொள்கிறேன்*
*அது தென்றல் தேடித் தீண்டிய*
*பஞ்சு மெத்தையிலல்ல*
*வேரின் மணம் வீசிக்கிடந்த*
*பதுங்குகுழியில்தான்* (மதனி, மை, ப. 29)

*படுத்த பாயில் சுடப்படும்போது*
*கழுத்தில் சுருக்கிட்டுக் கொல்லப்படும் நேரம்*
*பயணிக்கும் வாகனம்*
*திடீரென அதிர்ந்து சிதற*
*ஏனென்று அறியாத குழந்தைகள்*
*அச்சமும் வேதனையும் அவர்களை*
*இட்டு நிரப்ப வார்த்தையில்லை* (தர்மினி, மை, ப. 83)

'குழந்தையும் தெய்வமும் ஒன்று' என்பார்கள். ஆனால், ஈழத்துக் குழந்தைகள் தினந்தோறும் இரத்தத்தைப் பார்த்தும், பீரங்கியின் ஓசையையும், அழுகுரலையும் கேட்டும் அவர்களின் மனம் மரத்து போனது. குழந்தைகள் ஒரு நாட்டின் சொத்து. அச்சொத்தைப் பாதுகாப்பது பெற்றோரின் கடமைமற்றுமல்ல. அது நாட்டின் தலையாய கடமையாகும். ஆனால், ஈழத்தில் எதிர்மறையாகவே நிகழ்கிறது என்கிறார் தர்மினி.

*மைதானத்தின் குட்டையான வேலிக்கம்பிகளுக்குள்*
*ஆட்டு மந்தைகள்* (அனார், எனக்குக் கவிதை முகம், ப.20)

சமகாலங்களில் ஈழத்துத் தமிழர்கள் கம்பிவேலிக்குள் ஆட்டு மந்தைகளாக அடைக்கப்பட்டு, போதிய உணவு, உடை, உறைவிடம், மருந்து, கழிப்பிடமின்றி அல்லல்பட்டதை, இன்னும் அல்லலுறுவதைக் குறிப்பிடு கின்றார் அனார்.

*கொல்லப்பட்ட குழந்தையின்*
*உடலிலிருந்து கொட்டுகின்றது இரத்தம்*
*மிக நிசப்தமாக*
*மிக குழந்தைத்தனமாக*
*களத்தில்*
*இரத்தம் அதிகம் சிந்தியவர்கள்*

*அதிக இரத்தத்தைச் சிந்தவைத்தவர்கள்*
*தலைவர்களால் கௌரவிக்கப்பட்டும்*
*பதவி உயர்த்தப்பட்டும் உள்ளார்கள்*

*(அனார், எனக்குக் கவிதை முகம், ப. 22)*

'மேலும் சில இரத்தக் குறிப்புகள்' என்னும் கவிதை இரத்தம் என்பது கருணையும் பரிதவிப்பினையும் ஏற்படுத்தக்கூடியது. மருத்துவர்கள் கொடைகளிலே சிறந்த கொடையாக இரத்தக் கொடையைக் குறிப்பிடு கின்றனர். ஆனால் ஒவ்வொரு நாளும் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என வேறுபாடின்றி, சிங்களப்படைகள் ஈழத்தமிழரின் இரத்தத்தைப் பார்த்துப் பார்த்துப் போதையேற்றிக் கொள்கின்றனர். இவர்களின் செயலினைப் பாராட்டி அரசு சம்பள உயர்வும், பதவி உயர்வும் கொடுக்கின்றது என்கிறார்.

ஆழியாள் 'விடுதலையின் பெயரால்' என்னும் கவிதை மனிதனையும், நாயையயும் ஒப்பிட்டு, ஆறறிவுபடைத்த மனிதர்கள் ஐந்தறிவுபடைத்தவர் களாகவும், ஐந்தறிவுபடைத்த நாய்கள் ஆறறிவுபடைத்தவையாகவும் வாழ்வதைக் காட்சிப்படுத்துகிறார்.

*நாய் கடிக்கும்*
*புதைத்த பிணங்களை வெளிக்கொணரும்*
*போதைப் பொதிகளை மோப்பம் பிடிக்கும்*
*ஐம்பெரியாய்த் தொழிற்பட்டு*
*ஆத்மநட்பாய் உயிர்தரும்*
*மனிதன்ஸ்ரீ போராளி; அனைத்துக் குழுவும் அடக்கம்*
*மனிதன்ஸ்ரீ இராணுவம்; அரச இயந்திரம் அனைத்தும் அடக்கம்*
*மனிதன் கடிக்கும்*
*கன்னத்தில் அறையும்*
*தொங்கவிட்டு கம்பங்களில் கடைசித் தீர்ப்பெழுதும்*
*தொழுகைகளில் தோட்டாக்களைச் சீறிப்பாயவிடும்*
*காட்டிக் கொடுக்கும்*
*காசு பிடுங்கும்* *(ஆழியாள், உரத்துப்பேச, பக். 19–21)*

இக்கவிதை நாய் பகுத்தறிவோடும் நட்போடும் வாழ்கிறது. ஆனால், மனிதன் விலங்கைவிட இழிநிலையில் வெறியும் வன்மமும் நிறைந்தவனாக வாழ்கிறான். ஆகவே, மனிதனை இழிவுபடுத்துவதற்காகச் 'சீஞ் நாயே' என்கிறோம். ஆனால், நாயோடு மனிதனை ஒப்பிடக்கூடாது. ஏனெனில் மனிதனைவிட நாய் உயர்வானது.

சோலைக்கிளியின் 'வானம் பூட்டி' என்னும் கவிதை ஈழத்துக் கடற் கரைகளில் தூய்மையான காற்றைச் சுவாசிக்க முடிவதில்லை. எங்கும் வெடிப் பொருட்களின் நெடியே விரவிக்கிடக்கின்றது. சிங்களத்தின் இத்தகைய அத்துமீறல் மனிதனை மட்டுமின்றிப் பறவையினத்தையும் அழித்துவிடும். ஆகவே ஈழத்தில் நிகழ்வதைப்போன்று அயல்நாடுகளில் நிகழாமலிருக்க ஈழத்தைச் சுற்றி இரும்புவேலி போட்டுக்கொள் என்கிறார். இதனை,

*போடு*
*உன் கண்டத்தைச் சுற்றியொரு இரும்புவேலி;*
*உன்முகத்தைச் சுழித்தே*
*இனி என்கால் படாமல்*
*உன் பசிய நிலத்தில் என் பறவைகள் வராமல்*
*கறுப்புப் பல் காட்டி நகை,*
*பாவி!* *(அயலகத்தமிழ் இலக்கியம், ப. 293)*

'கறுப்புப் பல்காட்டி நகை' என்ற சொற்றொடர் அரசு, மக்களாட்சி தத்துவத்தில் மக்கள் அனைவரையும் பாதுகாக்க வேண்டும். ஆனால், அரசே மக்களின் உயிரையெடுக்கும் பாவியாக இருப்பதால் தம் மண்ணை மறந்துவிட்டுப் பிற நாடுகளில் புலம்பெயர்கின்றனர்.

அர்ச்சனாவின் 'ஒரு அகதி விண்ணப்பம்' என்னும் கவிதையும், தமயந்தியின் 'நீ, நான், நமது கனவு' என்னும் கவிதையும், ஈழத்தில் நடை பெறும் இனப்போராட்டத்தால் தமது அடையாளத்தைத் தொலைத்துவிட்டுப் பிறநாடுகளில் அகதிகளாக வாழும் ஈழத்துத் தமிழர்களின் அவலநிலையை வெளிப்படுத்துகின்றது.

*துளிர்ப்பு காலத்தை*
*எதிர்நோக்கித் தவமிருக்கும்*
*பனிப்புலத்து*
*இலையுதிர் மரங்களைப் போல்*
*மௌனமாய்*
*எங்கள் இருத்தல்*
*ஓர் துளிர்ப்பு காலத்தின் வருகைக்காக*
*(புலம்பெயர்ந்தோர் கவிதைகள், ப.53)*

மனிதன் தான் பிறந்தவுடன் பார்க்கும் முதல் மண் தாய்மண். ஒவ்வொருவருக்கும் அம்மண்ணே வாழ்வின் சொர்க்கம். குழந்தைப் பருவத்தில் அம்மண் அவர்களுக்கு உணவாகவும் மருந்தாகவும் இருந்தது.

சிறுவர் பருவத்தில் மணல் வீடு கட்டியும் கூட்டாஞ்சோறு அமைத்தும் தம் மகிழ்ச்சிக்கான இடமாகத் திகழ்ந்தது. இளைமைப் பருவத்தில் வீரத்தின் விளைநிலமாக இருந்தது. ஆனால் அத்தகைய மண் இன்று நம்மிடமிருந்து பறிக்கப்பட்டு நாம் அயல்நாடுகளில் அந்நியப்பட்டு நிற்கிறோம். இலையுதிர் காலத்தில் மரம் தன் இலைகளை இழந்து மீண்டும் துளிர்ப்புக் காலத்தை எதிர்நோக்கியிருப்பதைப் போன்று நாமும் இழந்த மண்ணையும் உறவையும் எப்போது பார்ப்போம் என ஏங்குவதாகக் குறிப்பிடுகிறார் தமயந்தி.

இருபத்தோராம் நூற்றாண்டில் கவிஞர் ஆழியாள், இதுவரை ஆண்களால் கற்பித்த கற்பிதங்களை உடைத்து, பெண்கள் கற்பிக்கும் கற்பிதங்களாக உருவாக்கப்பட்டதே 'உரத்துப் பேச' என்னும் கவிதைத் தொகுப்பு.

*உங்களது அண்டப் புரட்டல்கள் மூலம்*
*சிட்டிகை சிட்டிகையாய்ப்*
*போதையூட்டப்படுகிறேன்.*
*பலநூறு ஆண்டுகளாய்*
*எனக்குத் தரப்பட்டதும், கிடைத்ததும்*
*இந்த ஹெரோயின் உணர்வுதான்.*
*முதலில் ஒரு சிட்டிகை*
*நீங்கள் அனைவரும் ஒட்டு மொத்தமாய்*
*ஆமோதித்தீர்கள் – நான்*
*பதுமை, பேரழகுப் பதுமை என*
*என் சர்வ முயல்தல்களையும்*
*குறுக்கினீர்கள்!*
*அடுத்தடுத்த சிட்டிகைகளில்*
*'தெய்வம்' என நிலையுயர்த்தப்பட்டதால்*
*மௌனமாய் ஊமையானேன்*

*(ஆழியாள், உரத்துப்பேச, பக்.25–26)*

'நிஜம்', 'போதையூட்டப்பட்ட மொட்டு' என்னும் இரு கவிதைகளில் காலங்காலமாக ஆண்கள் பெண்களைச் சுயசிந்தனையற்ற அடிமைகளாக, அவர்களின் அறிவுக்கூர்மை மழுங்கடிக்கப்பட்டு, தங்களின் தேவைகளைப் பூர்த்திசெய்துகொள்ளும் அழகுப் பதுமைகளாகவே வார்க்கப்பட்டனர். இவர்களைக் 'குத்துவிளக்கு, குலவிளக்கு, பதுமை, பேரழகுப் பதுமை' என்றெல்லாம் புகழ்ந்து, அவர்களின் முன்னேற்றத்தினைத் தடுத்தனர். இதில் ஒரு சில பெண்கள் ஆண்கள் கற்பித்த கற்பிதங்களுக்குள் சிக்காமல் தம் சுய சிந்தனையோடு, தம் ஆளுமையை வளர்த்துகொண்டால் அவர்களை 'ஆட்டக்காவடி', 'அடங்காப்பிடாரி' எனத் தூற்றுகின்றனர்.

*நீயும் நானும்*
*வரையறைகளைக் கடக்க வேண்டும்— நான்,*
*உன் விவேகத்தோடும்*
*நீ என் வீரியத்தோடும்*
*கடக்க வேண்டும்.*
*எனினும்*
*என் கருவறையை*
*நிறைப்பது உன் குறியல்ல*
*என்ற புரிதலோடு*
*வா!*
*ஒன்றாய்க் கடப்போம்.*
*நீ என் விவேகத்தோடும்*
*நான் உன் வீரியத்தோடும்* *(ஆழியாள், உரத்துப்பேச, ப. 10)*

'தடைதாண்டி' என்னும் கவிதை ஒரு பொதுவெளியில் ஒரு பெண் ஓர் ஆணுடன் நெருங்கிப் பேசிவிட்டால், ஆணின் சிந்தனை கற்பனைக் குதிரையாய் வேறுதளத்திற்குப் பறக்கின்றது. அவ்வாறின்றிப் பெண்ணின் உணர்வினைப் புரிந்துகொள்ள வேண்டும் என்கிறார் கவிஞர்.

*அங்கு*
*எனக்கென*
*ஓர் பிரபஞ்சம் உருவாகும்*
*அப்போது உயிர்பெறும்*
*எனக்கான வரிவடிவங்களுடன் கூடிய*
*என்மொழி.*
*அதன்பின்*
*தேமல் படர்ந்த எவனாயினும்*
*என்னோடு உரையாடட்டும்*
*அப்போது கூறுகிறேன்*
*பதிலை,*
*என்மொழியில்;*
*என் ஆதித்தாயின்*
*பெண்மொழியில்.*
*அதுவரை நீ காத்திரு.* *(ஆழியாள், உரத்துப்பேச, ப. 22)*

பெண்ணியம், பெண்ணுரிமை என்னும் கருத்தாக்கங்கள் பேசப்பட்டாலும் இன்னும் முழுமையாகப் பெண்களுக்குச் சமஉரிமை கிடைக்கவில்லை. நவீனப் பெண்கள் தங்களின் உடலை, உடலின் அவஸ்தைகளை, உடலின் துயரத்தை, உடலின் இருப்பின் வலியைப் படைப்பு

களினூடாக கொண்டுவரும்பொழுது அவர்களுக்கான மொழி அடையாளப் படுத்தப்படும். இவ்வடையாளம் தங்களின் பெண் மொழியில் எழுதப்படும் பொழுது ஆண்களால் விமர்சனத்திற்குள்ளாகும். அவ்விமர்சனத்திற்கான பதிலை என் ஆதித்தாயின் பெண்மொழியிலிருந்து கூறுவேன். அதுவரை ஆண்கள் காத்திருக்க வேண்டும் என்கிறார் ஆழியாள்.

ஆழியாளின் ஆதித்தாயின் பெண்மொழியில் பேசும் 'புரவி பூட்டிய தேராக' அனார் திகழ்கிறார். இவரின் 'ஓவியம் வரையாத தூரிகை'(2005), 'எனக்குக் கவிதைமுகம்' (2007), 'உடல் பச்சை வானம்' (2009) ஆகிய மூன்றும் சமகாலப் படைப்புகளாகும். இவற்றில் 'உடல் பச்சை வானம்' என்ற கவிதைத் தொகுப்பு முந்தைய கவிதைகளைவிடத் தலைப்பும், கவிதைகளுக்கான பாடுபொருளும் பெண் உடல்மொழியைப் பெரிதும் பேசுகிறது. முந்தைய கவிதைகளில் 'என்முன் தொங்குகின்றது, தணல் நதியாய் இரவு' (ப. 27) என்றவர் மூன்றாம் கவிதைத் தொகுப்பில் 'பெண் உடல் பூண்ட முழு இயற்கை நான்' என்றும்; 'கூர்மையான வாள் என் உறையிலிருக்கிறது அச்சங்கள் எதுவுமற்று' (ப. 17) என்றும் பிரகடனப் படுத்துகிறார். மேலும், காமம் (ப.15), நிர்வாணம் (15), நீலமுத்தம் (ப. 16), உடலுறவு (ப.17), அந்தரங்கத் தவிப்பு (ப.25), முலைகள் (ப. 26), புணர்ச்சி (ப.27) எனப் பாலியல் சொல்லாடல்களை உலவவிடுகிறார்.

*அது போர்க்களம்*
*வசதியான பரிசோதனைக் கூடம்*
*வற்றாத களஞ்சியம்*
*நிரந்தரச் சிறைச்சாலை*
*அது பலிபீடம்*
*அது பெண்உடல்*
*உள்ளக் குமுறல்*
*உயிர்த் துடிப்பு*
*இருபாலாருக்கும் ஒரே விதமானது*
*எனினும்*
*பெண்ணுடையது என்பதனாலேயே*
*எந்த மரியாதையும் இருப்பதில்லை அதற்கு*
*என்முன்தான் நிகழ்கின்றது*
*என் மீதான கொலை (அனார், எனக்குக் கவிதை முகம், ப. 27)*

'பெண்பலி' என்னும் கவிதை பெண்ணுடல் புணர்ச்சியின் களம், இப்புணர்ச்சியால் குழந்தையைப் பெற்றுக் கொடுக்கும் பரிசோதனைக் கூடம், கர்ப்பப்பை ஆணின் விந்தைச் சுமக்கும் களஞ்சியம். சிற்றின்ப வாழ்க்கை நிரந்தரச் சிறைச்சாலை. இத்தகைய நிலை பெண் என்பவள் பலிபீடமாகவே

காட்சியளிக்கிறாள். மேலும், ஆண், பெண் இருபாலருக்கும் உடலும் உள்ளமும் ஒன்றுதான். ஆனால் சமூகம் இருவரையும் ஒரே வரையறைக்குட்படுத்து வதில்லை. ஆணின் சார்பாளராகவே இருக்கின்றது என்கிறார்.

*முத்தம் கனவின் உண்மை*
*உண்மையின் கனவு*
*காயாத கசிவுடன் கண்ணாடியில் படிந்திருக்கிறது*
*மெல்லிய நீலத்துடன்*
*எரியத் தொடங்குகிறது நெருப்பு*
*சதைகளாலான பெருகும் விருட்சத்தில்*
*பெயரிடமுடியாத கனி பழுத்திருக்கிறது*
*அதன் மென்மைகளோடும்*
*ஈரப்பதமோடும்*
*மென் நீலமெனத் தீராமல் படர்கிறது*
*கம்பீரமாக*
*பளபளப்பாக*
*கூர்மையான வாள்*
*என் உறையிலிருக்கிறது*
*அச்சங்கள் எதுவுமற்று (அனார், உடல் பச்சை வானம், பக்.16-17)*

'எனக்குக் கவிதைமுகம்' என்னும் கவிதைத் தொகுப்பில் 'அவன் வாள் உறைக்குள் கனவை நிரப்புவது எப்படியென்று எனக்குத் தெரியும்' (ப.42) எனக் குறிப்பிட்டவர் இத்தொகுப்பில் 'முத்தம்' ஆணை அடக்கக் கூடிய பெண்ணின் ஆயுதம். இம்முத்தத்தால் இரு உடல்களும் புணர்தலில் ஈடுபடுகின்றன. அப்பொழுது தான் விரும்புகின்ற, தான் நினைக்கின்ற அனைத்தையும் ஆணிடமிருந்து பறித்துக் கொள்ள வேண்டும். அப்படி அவளின் எண்ணங்கள் நிறைவேறினால் அவனது ஆணுறுப்பை எனது யோனி பாதுகாக்கும் என்கிறார்.

*துணிகளை மடித்து*
*அலுமாரியில் அடுக்கினேன்*
*அறை விளக்குகளைக் குறைத்து வைத்தேன்*
*விரிப்பை நேர்த்தியாக்கி*
*இரண்டு தலையணைகளை*
*அருகருகே இணைத்தேன்*
*தளர்வான இரவு ஆடையை*
*அணிந்து கொண்டேன்*
*விசமேறிய இரவின் பானம்*

*என் தாகத்தின் முன் உள்ளது*
*ருசிகள் ஊறிய கனவுகளுடன்*
*என் உறக்கம்*
*அறைக்கு வெளியே அலைகிறது*

*(அனார், எனக்குக் கவிதைமுகம், ப.46)*

பெரியவர்கள் ஆண் - பெண் இருவரையும் திருமணப் பந்தத்தால் இணைக்கிறார்கள். ஆனால், ஒருசில ஆண்கள் பெண்ணைத் திருப்திப் படுத்தமுடியாதவர்களாக இருக்கின்றனர். அதனால் பெண்கள் முழுமையடைய மனம் வெளியே அலைகிறது என்கிறார் கவிஞர்.

# புலவர் சிவநாதனின் படைப்புகளில் புலம்பெயர் இலக்கியப் பண்புகள்

'செந்நெறிச் செல்வர்' சூ.யோ. பற்றிமாகரன்
*ஆசிரியர் - ஊடகவியலாளர் - ஆய்வாளர்*
*(ஒக்ஸ்வேர்ட், ஐக்கிய இராச்சியம்)*

*'அந்தமிலாத நிசத்தின் பதியப்பட்ட பக்கங்களே'*

*'அயலகத் தமிழிலக்கியம்'*

தன்னிகரில்லாத தனித்துவக் கவிஞன் நோபெல் பரிசு வென்ற இந்தியக் கவிஞன் தாகூர் கூறிய, 'விடியல்' எமக்குத் தன்னை அறிமுகப்படுத்துவதற்காக, எந்தவொரு விஞ்ஞானிக்காகவும் எதிர்பார்த்து நிற்பதில்லை. அது போல... எந்தவித ஆன்மீகப் போதகனுமில்லாமலே, எவ்வித நியாயவாதக் கோட்பாடுகளின் புலமைத்துவ அலசல் களுமில்லாமலே, நாம் உண்மையின் பின், அல்லது உயரிய பண்பினை உணர நேர்கின்றபொழுது, உடனடியாகவே அந்தமில்லாத நிசத்தினை நாம் தொட்டு விடுகின்றோம்" என்கிற வார்த்தைகளைப் புலவர் நல்லதம்பி சிவநாதன் 2004 ஆழிப்பேரலை என்கிற நீரலைகள் எழுப்பிய நெருப்பலைகளில் வெந்து உருகி எழுதிய தம் "ஆழ்கடலுக்குள் என் ஆருயிர் முன்னோர்" என்ற இங்கிலாந்திலிருந்து எழுதப்பட்ட தம் நூலில் குறிப்பிட்டுள்ளார். இதைப் படித்த பொழுது இந்தப் பெருங்கவி தாகூரின் வார்த்தைகள் 'அயலகத்தமிழ் இலக்கியப் படைப்பாளி' ஒருவனின் வெளிப்பாட்டுக்கான விளக்கமாகவும் அமைகிறது என்று எண்ணத் தோன்றியது. பல இலட்சம் தமிழர்களின் புலப்பெயர்வு அனுபவங்கள் பதியப்பட்ட பக்கங்களே அயலகத் தமிழிலக்கியம். அந்த அனுபவங்கள் உண்மையின் பின் நின்று அல்லது உயரிய பண்பினை நோக்கிப் பிறந்த அந்தமிலாத நிசத்தின் எழுத்துப்பரவல்கள். ஒவ்வொரு அயலகத் தமிழிலக்கியமும் பிரபல திரைப்பட இயக்குநர் பாலச்சந்தரின் மொழியில் கூறுவதானால் "மௌனராகங்கள்".

*அயலகத்தமிழ் இலக்கியம்' சத்தியம் சாகாது என்ற நம்பிக்கையின் எதிரொலி*

தங்கள் உள்ளத்து உள்ளதை, உண்மையனுபவங்களைச் சாதாரண மக்களுக்குக் கூறுவது மட்டுமல்லாது தங்கள் இந்த வெளிபாட்டைச் சத்தியத்தின் பிரகடனமாகவும் புலத்துப் படைப்பாளிகள் கருதுகின்றனர். இதனால்தான் புலவர் நல்லதம்பி சிவநாதன்கூட "சத்தியம் சாகாது" எனத் தம் கவிதைத் தொகுதிக்குப் பெயரிட்டாரோ என எண்ணத் தோன்றுகிறது.

உண்மையில் தாயகத்தை விட்டுப் புலம்பெயர்ந்து வாழ்கின்ற பொழுது உண்மையின் பின் நிற்க வேண்டும் என்னும் துடிப்பு பிறக்கும். உயரிய பண்பினை உணர்ந்து உடனடியாகவே முடிவில்லாத அமைதியினை உள்ளம் தொடுகின்ற அளவுக்கு அனுபவங்கள் கிடைக்கும். இதனால் அயலக இலக்கியம் ஒவ்வொன்றும் தனக்கான வடிவத்தைத் தானே உருவாக்கும். பாரம்பரிய இலக்கிய மரபுகளைக் கூடக் கடந்து மனித உள்ளத்தின் உணர்ச்சிக் குமுறலை மகிழ்ச்சியின் எல்லையைத் துன்பத்தின் தவிப்பை எழுத்தாக்கும்.

### தமிழ்ப்படைப்பாளி என்பதற்கு உதாரணமாக இலண்டன் புலவர் நல்லதம்பி சிவநாதன்

இந்த உணர்ச்சிக் குமுறலுக்கு மத்தியிலும் தன்மொழியின் இனத்தின் உயர்வுகளை உறுதியுடன் கூறுவதன் வழியாகவே தன் சந்ததி தாம் வாழும் நாட்டில் தமிழராக வாழ வேண்டும் என்று நினைப்பவன் தமிழ்ப்படைப்பாளி. அத்தகைய ஓர் உன்னதமான அயலகத் தமிழ்ப் படைப்பாளிதான், பெரும் புலவர் என்று ஐரோப்பாவே கொண்டாடும் புலவர் நல்லதம்பி சிவநாதன். இவர் இலங்கையும் இந்தியாவும் முதுதமிழ்ப் புலவர் எனப் போற்றிய புலவர் நல்லதம்பி அவர்களின் இளைய மகன். திருநெல்வேலித் தமிழ்ச்சங்கமே 'முது தமிழ்ப்புலவர்' என்ற பட்டத்தை இவரின் தந்தைக்கு வழங்கியது. இவரின் தந்தையே இலங்கையின் தேசிய கீதத்தைத் தமிழில் மொழிபெயர்த்தவர். கவித்துவம் குருதிக்கலங்களில் உறைவது என்பதற்கு மகன் நல்லதம்பி சிவநாதனின் கவிதைகளும் நாடகங்களும் இயல்தமிழ்ப் பேருரைகளும் காவியச் சலங்கை என்னும் நாட்டிய நாடகத் தொகுப்பும் புலவரின் காணொளி, கேட்பொலி ஊடகங்களின் எண்ணற்ற படைப்புகளும் உதாரணங்களாகத் திகழ்கின்றன. பொறியியலாளரான புலவரின் கடல்களின் விசை குறித்த ஆய்வுகள் தந்த அறிவும் எம் ஆருயிர் முன்னோர்களின் மேல் அவருக்கு உள்ள மதிப்பின் தன்மையும் இணைந்த அறிவியல் இலக்கியச் சங்கமாகத் தமிழிலக்கிய உலகத்தில் ஊற்றெடுத்த நூல் தான் 'ஆழ்கடலுக்குள் என் ஆருயிர் முன்னோர்' என்கிற தமிழர்களின் தொன்மையை அறிவியல் பார்வையில் வெளிப்படுத்தும் நூல். இதனை ஒரு தத்துவத் தொகுப்பாகவும் பார்க்கலாம். இந்நூல் புலத்துப்படைப்புகள் பன்முக அறிவியல் தொடர்புகள் வழி பிறப்பன என்கிற உண்மைக்கு உதாரணமாகத் திகழ்கிறது.

### புலத்திலக்கியத்தின் முக்கியப் பண்பு புலமையல்ல சத்திய வெறி

இவர் தம் படைப்புகளை புலத்தில் புலமை அல்ல வழமையும் அல்ல பழமையும் அல்ல சத்தியமே எழுதவைத்தது என நம்புபவர் என்பதனை

இவரின் 'எழுத வைத்த சத்தியத்தை என்ன சொல்வேன்' கவிதையில் இடம்பெற்றுள்ள பின்வரும் பாடல் வரிகள் தெளிவாக்குகின்றன.

*...... பெட்டியுடன் புறப்பட்டேன் பிற மண்நோக்கி!*
*பெரிய படிப்பது நோக்கிப் பயணம் செய்தேன்!*
*கற்றுணர்ந்த இலக்கியங்கள் ஏதுமில்லை!*
*கண்டறிந்த புலவர்களும் ஏதுமில்லை!*
*சிற்றறிவுதனைக் கூடத் தமிழிற் கொள்ளும்*
*சிறப்பான சூழ்நிலையும் அமைந்ததில்லை!*
*பட்டறைகள் பலசென்று பயின்றதில்லை!*
*பணம்கொடுத்து வித்துவங்கள் அடைந்ததில்லை!*
*பொட்டு மலர்ப் பெண்ணுலவும் அழகுக்கோலம்*
*பார்க்கும் நிலை இருந்ததில்லை! முன்னோர் செய்த*
*சிற்பங்களைச் சிலைகளினைக் கண்டு எந்தன்*
*சிந்தைவெறி கொண்டதில்லை உரிமைப்போரின்*
*கொட்டு முரசார்த்ததையும் கேட்டதில்லை!*
*கொந்தளிக்கும் குருதியிலும் தோய்ந்ததில்லை!*
*இத்தனைக்கும் மத்தியிலும் என்னையின்று*
*எழுதவைத்த சத்தியத்தை என்ன சொல்வேன்*

இப்பாடல் 1970களிலும் 1980களிலும் இருந்த இங்கிலாந்து வாழ் தமிழ் மாணவர்களின் தமிழ் நிலையைப் படம்பிடித்தும் காட்டுகிறது. இந்தச் சூழலிலும் தலைசிறந்த புலவனாகத் தன்னிகரில்லாத படைப்பாளியாகத் தாம் எழுந்தமைக்குச் சத்தியம் தம் எழுத்தாளுமையே காரணம் என்கிறார் புலவர்.

புலவருக்கு மட்டுமல்ல புலத்துப் படைப்பாளிகள் பலரினதும் படைப்புலகப் பிரவேசத்திற்கு இந்தச் சத்தியத்தைச் சாகாது காத்தல் வேண்டுமென்கிற துடிப்பே காரணமாகியது. இதனாலே அயலகத் தமிழிலக்கியம் நடிப்பற்ற நற்றமிழில் இலக்கியமாக இலங்குகிறது. இவ்விடத்தில் தான் யுகபாரதியின் "இந்த நூற்றாண்டை முன்நடத்திச் செல்லக்கூடிய இலக்கியவாதி ஈழத்திலிருந்துதான் தோன்றுவான்" என்கிற எதிர்வு கூறலும் "புலம்பெயர்ந்த தமிழர்கள் தமிழை உலகத்தரத்திற்கு எடுத்துச் செல்கிறார்கள்" என்ற 'இந்தியா டுடே' மாலனின் கருத்தும் அர்த்தம் பெறுகின்றன.

### அயலகத் தமிழிலக்கியத்தைக் கவிமணியின் வரைவுக்குள் அடக்கியவர்

நான் 1973இன் கடைசிப் பகுதியில், ஓர் உயர் கல்வி மாணவப் பிரமுகனாகப் பிரித்தானியாவிற்குள் காலடியெடுத்து

> வைத்தபோது, இந்த 'வெள்ளைத் தேசம்' பற்றி நான் கொண்டிருந்த எதிர்பார்ப்புகள், நம்பிக்கைகள் எங்கே? நான் வந்த காலங்களில் நான் நேரிற் கண்டு அனுபவித்த 'வெள்ளைத் தேசம்' எங்கே? கால ஓட்டத்தில்.... எத்தனை மாற்றங்கள், சட்டம்...., சமூகம்..., **கல்வி** ....., சமயம் ....., ஆன்மிகம்...., ஊடகம்..., உலகம்!.. **எல்லாவற்றிலும்** எத்தனை மாற்றங்கள்!. இந்த வெள்ளை "மண்' எனக்குத் தந்த நல்லவைகள் எத்தனை? நான் இங்குச் சந்தித்த நல்ல உள்ளங்கள் எத்தனை? நான் கற்றுக் கொண்டவை, பெற்றுக் கொண்டவை எத்தனை? இத்தனைக்கு மத்தியிலும் நான் பெற்ற உயிரனுபவங்கள், உணர்ச்சிப் பக்குவங்கள் எத்தனை?

என்று புலவர் ந. சிவநாதன் எழுதுவதைப் படிக்கையில்தான் அயலக இலக்கியம் வெறுமனே புலப்பெயர்வின் புலம்பலாக மட்டும் அமையாது புலத்து வாழ்வின் தன்மைகளை, போக்குகளைப் பதிந்து படிப்பவர்க்கு இன்பம் உருவெடுக்க வைக்கவும் செய்கிறது என்கிற உண்மையை உணர்த்துகிறது. இந்நேரத்தில் தான் கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை அவர்களின் "உள்ளத்துள்ளது கவிதை - இன்பம் உருவெடுப்பது கவிதை- தெள்ளத் தெளிந்த தமிழில்- உண்மை தெளிந்துரைப்பது கவிதை" என்கிற கவிதை குறித்த வரைவிலக்கணத்துள் 'அயலகத் தமிழிலக்கியமும்' அமைகிறது என்பது உறுதியாகிறது. ஆகவே அயலகத் தமிழிலக்கியம் சோகங்களின் தொகுப்பாக, மோகங்களின் வெளிப்பாடாக, மட்டுமல்லாது தரமான திறமான தமிழிலக்கியமாகவும் திகழலாம் என்பதற்கு இலண்டன் புலவர் நல்லதம்பி சிவநாதனின் முத்தமிழ்ப்படைப்புகளும் சான்றாதாரங் களாகத் திகழ்கின்றன.

## 'விருட்சம்' ஒன்றின் பெயர்வு புலம்பெயர் வாழ்வு

தாயகத்தில் வேர்கொண்டு வாழ்விடத்தில் கிளை பரப்பி நிற்கும் விருட்சம் புலம்பெயர் வாழ்வு. புலம்பெயர் வாழ்வு விருட்சம் போன்று பரந்து விரிந்து உயர்ந்த ஒன்றாக இருப்பினும் இந்த வாழ்வில் சந்ததியின் எதிர்காலம் அடையாள இழப்பாகவே பெரும்பாலும் அமையும் என்பது புலம்பெயர்ந்தவரின் மன எண்ணம். இதனை 'விருட்சம்' என்ற தலைப்பில் புலவர் சிவநாதன் பின்வருமாறு கவிதையாக்குகின்றார்.

*பாட்டோடும் ஏட்டோடும் என் பூட்டன் மறைந்தான்*
*நாட்டோடும் அரசோடும் என் பாட்டன் தொலைந்தான்*
*வீட்டோடும் வளவோடும் எந்தந்தை இறந்தான்!*
*வீதியிலே அலைவதற்கோ என் பிள்ளை பிறந்தான்?*

இப்பாடல் புலப்பெயர்வில் சோகத்தை, ஏக்கத்தைத் தரும் 'இழப்பு' என்ற எண்ணக்கரு தமிழர் வரலாற்றுடன் இழையோடிப்போன ஒன்றாக இருப்பதை எடுத்து விளக்கி விட்டு நாம் வீதியிலே அலைந்த நிலை நாளை என் பிள்ளைக்கும் தொடர்ந்திடுமோ என்கிற ஏக்கத்தையும் வெளிப்படுத்து கிறது. ஆம்! தமிழர்களின் பாடல்களும் ஏடுகளும் அனல்வாதம் புனல்வாதம் எனத் தொலைக்கப்பட்ட வரலாற்று நினைவு 'இழப்பின்' முதல் வடிவாக முதலில் மீட்கப்படுகின்றன. நம்முன்னோர் அனுபவத்தைத் - தொன்மைத் தொடர் அறிவைத் - தமிழர்கள் இழந்ததின் ஏக்கம் புலத்துத் தமிழரிடைத் தொடர்வது இங்கு உணர்த்தப்படுகிறது. அதற்கு அடுத்த வரியில் நாடாண்ட தமிழர் அரசாண்ட நினைவிழந்து இந்த இழப்பை வரலாற்றின் பரிணாமாகக் கருதிப் பாட்டன் காலம் முதல் தமிழர்கள் தமக்கென நாடின்றிப் பரிதவித்து நிற்கின்ற தன்மை உரைக்கப்படுகிறது. தமிழர் தொன்மைக் குடிகள் என்ற தன்மையிழந்து ஆண்டஇனம் என்ற பண்பும் இழந்து எனக்கு ஒரு வீடும் வளவும் என்கிற நிலைக்குத் தனிமையடைந்து கூட்டுக்குடும்பம் ஊரவர் உறவினர் என்ற உறவுத்தளங்கள் சிதைந்து தனிப்பட்ட வாழ்வு வாழத் தொடங்கியமை எந்தையர் காலத்திலேயே தொடங்கப்பட்டு விட்டது என்ற மாற்றம் பேசப்படுகிறது. இதன்வழி தாயகப்பற்றும் தன்னினப்பற்றும் இல்லாத இனமாகத் தமிழர் மாறியதன் விளைவே நாடிழந்து வாழ்விழந்து அனைத்துலக நாடுகளில் அகதி என்ற பொதுமொழிக்குள் தமிழன் வாழத் தொடங்கித் தன் அடையாளத்தையும் தொலைத்து, நாளை புலம்பெயர் இளந்தமிழ்ச் சமுதாயம் தொன்மையும் தான்மையுமற்ற மக்கள் இனம் என்கிற ஐ.நா.வின் சொல்லாட்சிக்குள் அடக்கப்பட முடியாத அலைவும் உலைவும் உள்ள சமுதாயமாக உலகில் உலாவப்போகின்றது என்கிற அச்சத்தையும் பாடல் உணர்த்துகிறது. இதனையே நாலாவது வரியாக "வீதியிலே அலைவதற்கோ என் பிள்ளை பிறந்தான்?" எனக் கவிஞர், தன் இதய ஏக்கத்தின் ஏக்கத்தைக் கவிதை மொழியாக்குகிறார். இப்பாடல் 'புலம்பெயர்ந்தவர்கள்' என்ற சொல்லாட்சிக்குரிய மிக முக்கியப் பண்புகளான 'தாயக ஏக்கம்' "மரபுவழி பேணல் உணர்வு" " எதிர்காலம் குறித்த அச்சம்" என்னும் பண்புகளைப் படம் பிடித்துக்காட்டுகிறது.

## கடல் மீன் தரையில் துடிப்பதே புலவாழ்வு

புலம்பெயர் வாழ்வென்பது கடல் மீன் தரையில் துடிக்கும் வாழ்வென்பது புலவரின் கருத்து "ஆழ்கடலிற் பிறந்த மீனை - அலையது இழுத்து வந்து - பால்மணற்பரப்பிற்போடப் - பலமுறையுயிர் துடித்து - வால்தலையடித்துச் சாகும் - வண்ணம் போல் நானுமிங்கு - வாழ்வினை நகர்த்துகின்றேன் - வல்வினை வசத்தாற்றானே" என்கிற புலவரின் 'நிலத்து மீன்' நெடுங்கவிதையின் இறுதிப்பாடல் வரிகள் தாயகத்தை விட்டுப் பிரிந்த தமிழ்ப்படைப்பாளி ஒருவனின் உள்ள உணர்வின் வகைமாதிரியான

உதாரணமாகிறது. அகதியாக அரசியல் தஞ்சம் கோரியவர்க்கு மட்டுமல்ல உயர்படிப்புக்கு, உயர் தொழிலுக்கு என்று குடிவரவு பெற்றவர்களினதும் மனநிலை இதுதான் என்பதற்குப் புலவரின் இவ்வரிகள் சான்றாகின்றன.

## மரபின் மேல் பற்றுறுதியே இனத்துவம் அழியாமலிருக்க ஒரே வழி

மரபு வழி பேணல் என்பது, புலவர் ந. சிவநாதனின் குருதிக் கலப்புத் தன்மையாகப் புலத்தில் தொடர்வதை அவரின் படைப்புக்களில் எல்லாம் காணலாம். ஒருவகையில் இந்த மரபினைப் பேணுதல் என்பது புலவர் சிவநாதனின் இலட்சியமாகவும் இலங்குகிறது என்பதை 'வேண்டேன் வேண்டேன்' என்னும் தலைப்பில் அமைந்த பின்வரும் பாடல் வெளிப்படுத்துகிறது.

*முன்னோரை இகழ்வாரின் முகமும் வேண்டேன்*
*மூத்தோரைப் பழிப்போரின் உறவும் வேண்டேன்*
*தன்னாட்டை மறப்பவரின் தயவும் வேண்டேன்*
*தாய்மொழியைத் துறப்பவரின் நிழலும் வேண்டேன்*
*பொன்னோடும் பொருளோடும் புரண்டு சாகும்*
*பொல்லாத சமுதாயப் புகழும் வேண்டேன்*
*என்னோடு பிறந்த தமிழ் உள்ளபோது*
*எனக்கேது இப்புவியிற் துயரமம்மா!*

தமிழை வெறுமனே தொடர்புச் சாதனமாகக் கருதாது தமிழரின் வாழ்வாதாரமாகக் கருதும் புலவர் தம்மோடு பிறந்த தமிழ் உள்ளபோது தமக்கேது இப்புவியிற் துயரம் என்று உரக்கக் கூறுவது மண்ணை இழந்த நிலையில் தமிழர்களின் அடையாளமாக நிற்பது மொழி. அதற்கும் சவால்கள் வருகிற பொழுது தமிழர்களின் அடையாளமாக நிற்பது மதம் என்று சங்கம் மருவிய மற்றும் பக்திக் காலங்களைக் குறித்துப் பேராசிரியர் கா. சிவத்தம்பி சொன்ன மொழி புலத்திலும் மீளவும் உயிர்பெறுவதைப் புலவரின் இப்பாடலில் காணலாம்.

## சக்தியளித்தலில் தெய்வம் காணப் பொருள் தமிழே காணும் பொருள்

முன்னோர்க்கும் மூத்தோர்க்கும் தாய்நாட்டுக்கும் தாய்மொழிக்கும் தமிழ் கூறு அறத்திற்கும் புலம்பெயர் வாழ்விலும் பெருமதிப்புக் கொடுத்திட வேண்டும் என்னும் இப்பாடல் கருத்து புலம்பெயர் அல்லது அயல் இலக்கியப் பண்பான பண்பாட்டைப் பேணல் வேண்டும் என்னும் வேட்கையை நன்கு தெளிவாகப் படம்பிடித்துக்காட்டுகின்றது. இங்குப் புலப்பெயர்வின் அல்லது அயலக வாழ்வின் துயரத்தினைத் துடைக்கும் சக்தியாகத் தமிழ் துணை நிற்கின்றது என்பது மிகமுக்கியமான ஒன்று. ஊரையும் உறவையும் பிரிந்து வாழும் நிலையில் தெய்வமும் தமிழுமே அந்தப் பிரிவின் கொடுமை குறைப்பன. இதில் தெய்வம் காணாப்பொருள் என்பதினால் தமிழே

நடைமுறை உதவியாகிறது. இதுவே அயலக வாழ்வில் அல்லது புலம்பெயர் வாழ்வில் ஆக்கங்கள் ஏக்கங்கள் தீர்க்கும் சாதனமாக மாறுவதற்கான காரணம். கலையால் வாழ்வின் நிலை உணர்த்துவதும் கலையால் வாழ்க்கையின் நிலை மாற்றுவதும் தாயகத்தை விடப் புலம்பெயர் வாழ்வில் மக்களுக்குச் சக்தி (empowerment) ஊட்டுகிறது.

### மண்ணை எண்ணி மகிழ்வது புலத்து வாழ்வின் தனிப்பண்பு

மேலும் புலத்திலக்கியத்தில் தம் மண்ணை அந்த மண்ணின் வாழ்வை எண்ணி எண்ணி மகிழ்தல் என்பதும் முக்கியமான ஒரு போக்கு. இதற்கமைய அமைகிறது "என்பாட்டில் என்பாட்டு" என்னும் தன்பாட்டில் புலவர் சிவநாதன் தம் தாயக வாழ்வு சொன்ன பாடல்.

*பூவைக் கொந்தித் தேனெடுக்கும்அந்த*
*வண்டுகள் எனக்கு இசையமைக்கும்*
*மேளங்கொட்டும் மண்டூகம் ஒரு*
*தாளந் தட்டும் பூங்காற்று.*
*ஓலைக்குடிசை மேல்முகட்டிற் பல்லி*
*காலக்குறிகள் தான் படிக்கும்*
*ஏணைக்கட்டின் இடுக்குவழி என்*
*செல்வம் என்னைப் பார்த்திருக்கும்*
*ஓட்டுத் திண்ணைக் குந்தினிலே*
*குப்பி விளக்கு எரிந்திருக்க*
*முற்றமண்ணை முழுநிலவு*
*மூடிக்கிடக்கும் கிணற்றடியைச்*
*சுற்றி வாழை ஒன்றிரண்டு*
*குட்டி போட்டுப் பொலிந்திருக்கும்*
*சுற்றிப்படரும் மலர்க்கொடிகள்*
*சுகந்தம் நிரப்பும் பூந்தோட்டம்*
*சுமையற்கட்டில் மீன்குழம்பு என்*
*பசியைத் தட்டி இழுத்திருக்கும்*
*துவையல் பிட்டு கடிமிளகாய் எனைச்*
*சொர்க்கம் வரையிற் பிடித்திழுக்கும்*
*சேலைக்கட்டின் அணைப்பினிலே என்*
*சிந்தனை வானிற் சிறகடிக்கும்*
*பாவைக் கட்டி நான் தொடுக்க இறை*
*கைகள் கொட்டித் தான் சிரிக்கும்*

இப்பாடலில் நனவோடை உத்தியாகத் தம் தாயகத்து வட்டுக் கோட்டை வாழ்வினைப் புலவர் புலம்பெயர் நிலத்து இருந்து பதிவு செய்கின்றார். இது

புலம்பெயர் படைப்பாளனுக்குத் தம் மண்ணின் வாழ்வு நிகழ்வுகள் மகிழ்வூட்டும் என்பதற்கான சான்றாக அமைகிறது.

**புலக்கோலம் வாழ்வை மட்டுமல்ல உறவுகளையும் வாழும் வழியையும் மறுக்கும்**

அதே வேளை புகுந்த மண்ணின் வாழ்வு ஒட்டாத வாழ்வாகவும் அமையும் என்பதற்குப் "புலக்கோலம்" என்கிற புலவர் சிவநாதனின் பின்வரும் பாடல் உதாரணமாகிறது.

*கொலை கண்டேன் கொள்ளையதன் கொடுமை கண்டேன்!*
*கொற்றங்கள் கொடுவழியிற் செலவும் கண்டேன்!*
*கலையென்றாற் காசென்போர் கையிலின்று*
*கலைத்தாயின் கழுத்து நெரிபடவும் கண்டேன்!*
*தலையெங்கும் தடிப்பேறி நிற்போர் தங்கள்*
*தடியாட்கள் தாங்கிவரப் பல்லக்கேறி*
*வலம்வந்து ஆலயங்கள் வைக்கக் கண்டேன்!*
*வாழ்வை மட்டும் காணுநிலை காணேனம்மா!*
*நிலையங்கள் நிதி கொண்டோர் நீதியன்பின்*
*நிழல்கூட அறியாதோர் நெஞ்சஜோதி*
*வலயங்கள் இல்லாதோர் ஆதிக்கத்தில்*
*வளர்கின்ற நிலை கண்டேன் தமிழின் பேரிற்*
*பலரிங்கு அரங்கேறி முழங்கக் கண்டேன்!*
*பகட்டிற்குப் பணிந்தாடும் கூட்டம் கண்டேன்!*
*உளங்கொண்ட உணர்வோடு உண்மையன்பின்*
*உறவுகளை மட்டுமிங்கு காணேனம்மா!*
*பலமில்லை பண்பில்லை பாரின்முன்னே*
*பளிச்சென்று ஒளிர்கின்ற ஞானமில்லை!*
*அழகில்லை! அறிவில்லை! ஆற்றலில்லை*
*ஆன்மீக நெஞ்சில்லை! அன்புமில்லை!*
*நலமில்லை! நாகாக்கும் வலிமையில்லை!*
*நவமானயுகம் ஒன்று வந்த பின்பும்*
*மலமுண்ணும் மனிதரென மாய்தல் நன்றே!*
*மார்க்கத்தை யறியாது மயங்கலாமோ?*

இப்பாடல் புலம்பெயர் வாழ்வில் தமிழர்களின் வாழ்வின் யதார்த்தநிலைப் பதிவுகளில் ஒன்றாகிறது. பணமும் பதவியும் பலவசதிகளும் பெருகுகின்ற நேரத்தில் துன்புற்ற மனிதனும் அந்நிலை மறந்து துன்புறுத்தும் மனிதனாய் மாறிடும் இயல்பினுக்கு எழுத்துப் பதிவு இந்தப் பாடல்.

### மேற்குலகத்தினதும் கீழைத்தேயத்தினதும் கலாச்சார வேறுபாட்டை விளக்கும் ' நீதியன்பு'

நீதியன்பு என்கிற சொல்லாட்சி மேன்மைகொள் சைவநீதி என்று நீதியுடன் சமயத்தை இணைத்த மரபில் விரியும் அன்பு வாழ்வுடன் நீதியை இணைக்கும் புதிய சொல்லாட்சியாகப் பிறந்துள்ளதைக் காண்கிறோம். நீதியும் வேண்டும். அன்பும் வேண்டும். நீதிக்கு அறிவுப்பலம் சிறக்க வேண்டும். அன்புக்கு உணர்ச்சித் தளம் பலப்படல் வேண்டும். மேலைத்தேயத்துப் பண்பாட்டிற்கும் கீழைத்தேயத்துப் பண்பாட்டிற்கும் இடையில் உள்ள மறுபாடும் பிரதான வேறுபாடும் கூட இதுதான். அதாவது மேலைத்தேயம் அறிவுக்கு முதன்மை கொடுத்து எதனையும் அறிவுசார் நிலையில் தேடும் ஆராயும் முடிவெடுக்கும் போக்குடையது. ஆனால் கீழைத்தேயம் உணர்ச்சிக்கு முதன்மை கொடுத்து எதனையும் அன்பால் தேடத்தொடங்கி அதனைத் தன்னலமற்ற அன்பு என்னும் உயர்நிலையாக உயர்த்திப் பழக்குவதன்வழி தொண்டால் மனிதக் குலத்தை இணைத்து உயிர்களையும் உலகையும் பேணி "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்கிற மானிடம் போற்றும் உறவாளர்களாக, 'தீதும் நன்றும் பிறர் தர வாரா' என்ற தத்துவத்தினால் உளஉயர்வு உடையவர்களாக அமைதிவாழ்வு வாழ்தலே கீழைத்தேயத்தின் பண்பாடு, கலாச்சாரம் எனலாம்.

### கீழைத்தேயப் பண்பாட்டை நிலைநிறுத்தப் புலவர் ந. சிவநாதனின் முத்தமிழ்ப் பணிகள்

- **நாடகங்கள்:** (எழுத்தாக்கம், நெறியாள்கையுடன்) : நிஜத்தின் நிழல், விடுதலை விமானங்கள், போலித் துவக்குகள், இறைதரிசனம், சந்ததிகள், என்னை ஊருக்குக் கொண்டுபோ!( காற்கட்டு), அன்புச் சகோதரர்கள் ( யாதும் ஊரே!), விழிப்பு, தமிழ்மணம் டொற்கொம், திரிசங்கு சொர்க்கம், அம்மா.
- **கவிதா நிகழ்வுகள்:** (எழுத்தாக்கம், நெறியாள்கையுடன்) : பாலை வனப்படகு, யாருக்குப் புனர்வாழ்வு, இதுதான் எங்கள் நாடு, ஏற்றிச்செல்லும் ஓடமே!
- **தாள லய நாடகங்கள்:** (எழுத்தாக்கம், நெறியாள்கையுடன்): என்ன நடக்கிறது? நவீன யமன் தர்பார்.
- **வில்லுப்பாடல்கள்:** (எழுத்தாக்கம், அவைக்காற்றல்): துர்க்கா புத்திரர்கள்.
- **நாட்டிய நாடகங்கள்:** ( படைப்பாக்கம் பாடல்கள்) : நவீன தீர்ப்புகள், குடிமறந்த குறள், மலையடிவாரத்துப் புயல், சுட்டது அன்று! புதைத்தது

இன்று!, பூங்காற்றுப் புயலானது!,களங்கண்ட காதலி, சாயி பாபா,குருமகளும் கோமகனும் (சாகுந்தலம்), கவிமகனும் கோமகளும் (அம்பிகாபதி- அமராவதி), சிலம்புத்தீ!, சத்தியாரம் (மயான காண்டம்), எங்கிருந்தோ வந்தான், கொடியேற்றம், தர்மகீதங்கள், பாஞ்சாலி சபதம், பிரபஞ்சலீலை, நதிமகன் (பீஸ்மர் பிறப்பு), தில்லைத் தரிசனம் (நந்தன் சரிதம்).

- **புலவர் பின்வரும் பாடசாலைகளின் பள்ளிக்கீதங்களையும் இயற்றியுள்ளார்** : வால்தம்ஸ்ரே தமிழ்ப்பாடசாலை, அருணோதயம் தமிழ்ப் பாடசாலை பிளம்ஸ்டட், எசெக்ஸ் தமிழ்ப்பாடசாலை, டாட்ஃபோட் தமிழ்ப் பாடசாலை.

- புலவரின் ஒலியிழைப்பாடல்கள்; மற்றும் இறுவெட்டு நாட்டிய நாடகம்: ஆலய கீதங்கள், தாயக கீதங்கள், தார்மீக கீதங்கள்,: போரிலா உலகம் வேண்டும்; பூமித்தாயின் குழந்தைகளே, தெய்வாஞ்சலி (இறுவெட்டு) நாட்டிய கீதங்கள்.

- **புலவர் எழுதிப் பிரசுரிக்கப்பட்ட நூல்கள்**

  சத்தியம் சாகாது, ஆழ்கடலுக்குள் என் ஆருயிர் முன்னோர், காவியச் சலங்கைகள்.

- **வானொலித் தொடர் நாடகங்கள்**

  சந்ததிகள், என்னை ஊருக்குக் கொண்டுபோ! வீட்டுக்கு வீடு.

- **வானொலி நிகழ்வு**

  அனலும் புனலும் (சமுதாயச் சங்கமம்)

- **தொலைக்காட்சித் தொடர் நிகழ்வு**

  பாவும் நாவும்

- **மழலையர்க்கான படைப்புக்கள்**

  நாடகங்கள்( எழுத்து நெறியாள்கையுடன்) : சிக்கனம், பேரப்பிள்ளை வந்தாச்சு, இசைநாடகம்: எழுத்து, கலியுகக் கலம்பகம், வில்லுப்பாடல்கள்: எழுத்து, அக்காவுக்குக் கல்யாணம், கலையோ கலை.

- **தாள லய நாடகம்: எழுத்து**

  மாயன் கலண்டர்.

முடிவுரை

பாவின் வெள்ளம் - நாடகக் குவியல்கள் - நாட்டிய நாடகப் படைப்புகள் - மற்றும் பல்வகைப்படைப்புகள் என்று 1973முதல் இன்று வரை 40 ஆண்டுகள் இங்கிலாந்தில் இருந்து அயலகத்தமிழ் இலக்கியத்திற்கு அளப்பரிய பணிகள் செய்யும் ஐரோப்பா போற்றும் தமிழ்ப் புலவன் நல்லதம்பி சிவநாதன் எல்லாவகைகளிலும் அயலகத் தமிழ்ப் படைப்பாளிகளுக்கு வகைமாதிரியான உதாரணமாகத் திகழ்கின்றார்.

# வலிகளில் விழிகள் கண்ட மலேசியத் தமிழ் இலக்கியம்

திரு. ம. சித்ரகலா
*உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை*
*என்.ஜி.எம். கல்லூரி*
*பொள்ளாச்சி*

'தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா' என்ற வாக்கினைத் தாரக மந்திரமாகக் கொண்டவர்கள் தமிழர்கள். 18ஆம் நூற்றாண்டுகளில் மலேசிய மண்ணில் தன் பாதங்களைப் பதித்த நம் இனம் 21ஆம் நூற்றாண்டில்தான் வளர்ச்சி நிலைக்கு எட்டியது. இவ்வளர்ச்சி நிலைக்கு அடிப்படைக் காரணம் நாம் இந்தியர் என்ற உணர்வு மலேசியத் தமிழர்களின் நாடி நரம்புகளிலும் உதிரத்திலும் ஓடியதே ஆகும். ஆங்கிலேயர்களால் ஆதிகாலத்தில் ஆடு, மாடுகளைப்போல் கப்பல்களில் அடைக்கப்பட்டு மலேசியாவில் தள்ளப்பட்டத் தமிழ் இனம் மலேசியாவில் தள்ளப்பட்டு விட்டோமே என்று அந்நாட்டை வெறுக்கவில்லை. அந்நாட்டிற்காக, அதன் வளர்ச்சிக்காகத் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டது. வந்தவர்களை வாரி அணைத்துக் கொண்ட தமிழ் இனம், கேட்பவர்களுக்கு அள்ளிக் கொடுத்த தமிழ் இனம், நம்பியவர்களைக் கைவிடாத தமிழ் இனம், வழியின்றி வாழப் போன இடத்தை வாழ வைக்க தன் உயிரையே கொடுத்தது. ஆனால் நம் தமிழ் இனத்தின் வாழ்க்கை நிலைமட்டும் உயிரற்றதாக, உரிமையற்றதாக, உணவற்றதாக, இருக்க இடம் அற்றதாக, மானமற்றதாக, உழைப்பிற்கேற்ற ஊதியம் அற்றதாக, வாழ வழியற்றதாக, விலக விதியற்றதாக இருந்தது. இக்கொடுமைகளைத் தாங்கிக் கொண்ட இனம் உழைப்பை மட்டுமே கொட்டியவர்களாக வாழ்ந்தனர். நாட்டின் முன்னேற்றத்திற்காக மிகக் கடுமையாக உழைத்த இந்தியர்களின் உண்மையையும், உழைப்பையும் உணர்ந்து கொள்ளவோ, ஆதரவு அளிக்கவோ அங்கு யாரும் இல்லை. அனாதைகள் போல் இருந்தனர்.

தங்கள் வேதனைகளுக்குக் காரணம் பிரிவு என்பதை உணர்ந்தனர். ஒன்றுபடத் தொடங்கினர். நம்மை ஒன்றுபடுத்த உதவுவது நம் தாய்மொழி தமிழே என்பதை உணர்ந்தனர். வலிகளைத் தங்களது தாய்மொழிகளில் சொன்னால் விழிகளில் வழியும் நீருக்கு ஆறுதல் என்பதை உணர்ந்தனர். மேலும் நம் தமிழ் மொழியில் தங்களது உணர்வுகளைச் சொன்னால் நம் அடையாளத்திற்கும், நாம் உயிரோடு வாழ்கிறோம் என்பதற்கும், நம்

உணர்வுகளுக்கும் ஆறுதல் என்பதை உணர்ந்து தமிழில் இலக்கியம் படைக்கத் தொடங்கினர். மலேசியத் தமிழ் இலக்கியம் வளர்ந்தது.

## மலேசியத் தமிழ் இலக்கியத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

மலேசியத் தமிழ் இன மக்களுக்கு தமிழ் இலக்கியம் படைக்க வேண்டும் என்ற உணர்வும் திடீரெனத் தோன்றவில்லை. இந்திய மண்ணின் ஆலமரத்திலிருந்து தோன்றிய விழுதுகள் அவர்கள். ஆகவே தமிழ் உணர்வு அவர்களின் இரத்தத்தோடு கலந்துள்ளதால் தமிழ் பற்றோடு இலக்கியம் படைக்கத் தொடங்கினர்.

> மலேசியாவில் தமிழ் இலக்கியம் கிட்டத்தட்ட நூற்றுப் பத்து ஆண்டுகளை எட்டிப் பிடித்திருக்கிறது. இந்த நாட்டில் குடியேறிகளாகக் கொண்டுவரப்பட்ட காலத்திலேயே தங்களுடைய மூட்டை முடிச்சுகளுடன் கப்பலேறிய சிலர் தங்கள் இலக்கிய உணர்ச்சிகளையும் சேர்த்துக் கட்டிக் கொண்டு வந்தார்கள் எனத் தெரிகிறது
>
> (மலேசியத் தமிழ் இலக்கிய வரலாற்றுக் களஞ்சியம் ப.3)

என ரெ. கார்த்திகேசு கூறுவது குறிப்பிடத்தக்கது.

மலேசியாவில் தமிழ் மொழிக் கல்விக்கும் தமிழ் இலக்கியத்திற்கும் வித்தாக அமைந்த இடம் பாக்குத்தீவு என்றழைக்கப்படும் பினாங்கு. 1816ஆம் ஆண்டில் தொடங்கிய இத்தமிழ் வளர்ச்சி பல இன்னல்களையும் போராட்டங்களையும் சந்தித்தது. மலேசியாவிற்குக் கஞ்சிக் கூலிகளாகத் தமிழர்கள் வந்த காலத்திலிருந்தே இலக்கியங்கள் படைப்பதும், தெரிந்தவர்கள் கல்வி கற்றுத்தருவதும், நாளிதழ்களும் இலக்கிய நூல்களும் வெளியிடுவதுமாக தமிழ் வளர்ச்சிப் பணி நடந்து கொண்டேதான் இருந்தது. 1876இல் 'தங்கை நேசன்' என்ற பத்திரிகை வெளிவந்தது. இதனைத் தொடர்ந்து பத்திரிகைகளும் இதழ்களும் வெளிவரத் தொடங்கின. 'தமிழ் நேசன்' 'தமிழ் முரசு' ஆகிய இதழ்கள் மலேசியத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியதோடு இதழ்களின் நீண்ட பயணத்திற்கும் பேருதவியாக இருந்தன. தமிழ்மொழிக்கு அழகு சேர்ப்பது கவிதை. தன்னுடைய வாழ்க்கையின் ஆதங்கத்தைக் கவிதையில் எழுதுவது மரபாக அமைந்தது. அதன் பின்பாக உரைநடை இலக்கியமும் நாவலும் வளர்ச்சி பெற்றன.

1941 முதல் 1945 வரை உள்ள காலத்தை இந்நாட்டின் இருண்ட காலமாக கொள்ளலாம். 1941இல் தொடங்கிய இரண்டாம் உலகப் போரினால் மக்களின் அனைத்து நிலைகளும் தடைபட்டு முடங்கிக் கிடந்தன. 1946இல் சீ.வி. குப்புசாமி எழுதிய ஜப்பானியர் லாக்கப்பில் ஏழு

நாட்கள்' 'யுத்தத்தால் வந்த யுத்தம்' என்ற இரண்டு கட்டுரை நூல்களும் சா. சுப்பிரமணியன் எழுதிய 'வெற்றிச்சங்கு' என்ற நூலும் வெளிவந்தன. இதனைத் தொடர்ந்து கவிதை, கட்டுரை, சிறுகதை, நாவல் ஆகியவை வளர்ச்சி பெறத் தொடங்கின. தமிழ் இலக்கிய வளர்ச்சியை முன்னிட்டு போட்டிகளும் பரிசுகளும் வழங்கப்பட்டு தமிழ் ஆர்வத்தை ஊக்கப்படுத்தி மலேசியத் தமிழ் இலக்கியத்தை வளர்த்தனர்.

## மலேசியத் தமிழர்களின் உலகளாவிய பார்வை

தாய் தமிழகத்தில் உள்ளவர்கள் கூட சிந்திக்க முடியாத அளவிற்கு மலேசியத் தமிழர்களின் தமிழ்ப்பற்றும் உலகளாவிய பார்வையும் உள்ளவர்களாகத் திகழ்ந்தனர்.

> தமிழைத் தமிழ் நாட்டுத் தமிழர்களே மறந்துவிட்டாலும்
> வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் காப்பாற்றி விடுவார்கள்

என்று மலேசியாவிற்குக் குறுகிய கால வருகையை மேற்கொண்ட பேராசிரியர் ஒரு நேர்காணலில் (மலேசிய நண்பன் 22.11.94) (மேலது ப.41) குறிப்பிட்டார். இன உணர்வும் தமிழ்ப்பற்றும் உள்ள மலேசியத் தமிழர் வாழும் நாட்டில்தான் முதல் உலகத் தமிழாராய்ச்சி மாநாடு, உலகத் தமிழாசிரியர் மாநாடு, உலகத் தமிழ் எழுத்தாளர் தினம் என உலகளாவியப் பார்வையில் தங்களது உறவை வளர்த்துக் கொண்டனர். இந்த மாநாடுகளில் மொழி, இனம், கலை, பண்பாடு, பொருளாதாரம் என உலகளாவிய சிந்தனையில் கட்டுரைகள் வரவேற்கப்பட்டு ஊக்கப்படுத்தப்பட்டன. இவ்வாறு தமிழ் இலக்கியத்தை வளர்த்தனர்.

## மலேசியத் தமிழ்க் கவிதைகள்

மலேசியத் தமிழ் கவிதைகளின் வளர்ச்சிக்கு இதழ்களின் பங்கு இன்றியமையாததாகும். அவ்வகையில்,

> சோலை (1951), திருமுகம் (1955), மலைமகள் (1956), நவரசம் (1957), மாதவி (1959). தமிழ்மலர் (நாளிதழ்-1963), பொன்னி (1966) மலைநாடு (நாளிதழ்-1967), முத்தமிழ் (1967), திருமகள் (1967), உதயம் (அரசு வெளியீடு - 1972), தமிழ்க்குயில் (1972), சமநீதி (1975), இயக்கம் (1976) என்பன போன்ற இதழ்கள் கவிதை வளர்ச்சிக்குப் பேருக்கம் தந்தன. இப்போது கொண்டிருக்கும் மலேசிய நண்பன் (நாளிதழ்) மக்கள் ஓசை, வானம்பாடி, இதயம், உங்கள் குரல், செம்பருத்தி, நயனம் போன்ற இதழ்களும்

அண்மையில் தோற்றம் கண்ட இதழ்களும் கவிதை வளர்ச்சிக்கு ஊக்கம் தந்து வருகின்றன

(மலேசியத் தமிழ் இலக்கியம் ஓர் அறிமுகம் ப. 14)

என மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கம் குறிப்பிடுகின்றது. மலேசியத் தமிழ் வளர்ச்சிக்கு இயக்கங்களும் ஊக்கமளித்தன.

மலேசியத் தமிழர்கள் தங்கள் கவிதைகளை வகைப்படுத்தினர். தனிப்பாடல், சிறுகாப்பியம், சிற்றிலக்கியங்கள், கவிதை நாடகங்கள், சிறுவர் பாடல்கள் என ஆறு வகையில் தமது கவிதை இலக்கியத்தை வளர்த்தனர். மலேசியத் தமிழ் மக்கள் தங்கள் கவிதைகளில் மரபு மாறாமலும், சமுதாயச் சூழல்கள் வெளிப்படையாகத் தெரியும் வண்ணமும் கவிதை எழுதினர். அவர்களுடைய எழுத்துகளின் ஆதங்கம் தமிழ்மொழியைக் காப்பதாகவும் தன் நாட்டு மக்களின் உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுப்பதாகவும், தங்களின் இன்னல்களை வெளிப்படுத்துவதாகவும் இருந்தது. இதை மெய்ப்பிக்கும் வகையில்,

*கனல்பட்ட முதுகோடு*
*கைபட்ட வடுவோடு*
*புனல்பட்ட விழியொடு*
*புண்பட்டு பண்பட்டதாலெ – ஒரு*
*கறைபட்ட துகிலாகிச்*
*சிறைபட்ட குயிலாகி*
*திரையிட்ட முகிலாகிச்*
*சீர் கெட்டுப் பேர்கெட்டான் ஏழை ! – இவன்*
......

*அவன் சொல்லைக் கேட்பானாய்*
*இவன் சொல்லைக் காப்பானாய்*
*எவன் முன்னும் ஏவல் போய்*
*ஏற்பானாய் இருக்கின்றதாலே.....*

*(கரு. வேலுச்சாமி, அயலகத்தமிழ் இலக்கியம், ப. 305)*

என்ற 'பால் கண்டாய் நாள் கண்டாயா? என்னும் தலைப்பில் அமைந்த இக்கவிதையில் எதுகை, மோனை என்ற இலக்கணநயம் ததும்புகிறது. அதோடு, மலேசியச் சமுதாயத்தில் தமிழ் மக்கள் படும் இன்னல்களையும், சிறைபட்டு பட்ட வேதனைகளையும் மனித நேயம் அற்று ஏவல் புரிந்த முதலாளிகளின் கொடுமைகளையும் பாடுபொருளாகக் கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது. தோட்டத் தொழிலாளர்களின் நிலையை,

*எல்லா முதலாளிகளும் இந்தப் பாலிலிருந்துதான்*
*பல பொருள்கள் செய்திருக்கிறார்கள்*
*கண்களுக்குத் தெரியாத*
*கை விலங்குகளைச் செய்வார்கள்*
*காலங்காலமாய் எங்களுக்குப்*
*பூட்டியும் மகிழ்வார்கள் – டாக்டர் மா. சண்முகசிவா*
*(மலேசியத் தமிழ் இலக்கியம் ஓர் அறிமுகம் ப. 97)*

இக்கவிதை குறியீட்டுக் கவிதையாக அமைவதோடு முதலாளி இனம் தோட்டத் தொழிலாளர்களைச் சுரண்டுவதையும் சுட்டிக்காட்டுகின்றது. நாட்டுப்புற இலக்கிய வடிவத்திலும் கவிதை புனைந்தனர்.

*பாலுமரம் வெட்டலான்னு*
*பழைய கப்பல் ஏறிவந்தேன்*
*நாப்பத்தஞ்சி காசப் போட்டு*
*நட்டெலும்ப முறிக்கிறானே*
*முப்பத்தஞ்சி காசப்போட்டு*
*மூட்டெலும்ப முறிக்கிறானே*
*(மலேசியத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம், ப. 366)*

என்றும்,

*ஒரு தட்டு அப்பத்துக்கு ஒரு தட்டு வெள்ளின்னு சொன்ன*
*கருப்புச் சட்டக் கதிர்வேலு கங்காணி*
*லாலான் முள்ளு டிங்குன்னுதே – இங்கு*
*லப்பர் கொட்ட டப்புன்னுதே (மேலது ப.355)*

இவ்வாறு தமிழ் மக்கள் உழைப்பிற்கு ஏற்ற ஊதியம் கிடைக்காமலும் உண்ண உணவின்றியும் கொடுமைப்பட்டு தங்கள் வலிகளைத் தமிழ்மொழியில் இலக்கியமாகப் படைத்தனர்.

## ஹைக்கூ கவிதைகள்

கடுகு சிறுத்தாலும் காரம் போகாது என்பது போலவும், மூன்றடியில் உலகளந்த வாமனன் போலவும் மூன்று வரிகளிலுள்ள ஹைக்கூ கவிதைகள்; சமூகத்தில் நடக்கும் அனைத்து நிகழ்ச்சிகளையும் பட்டவர்த்தனமாகக் கூறியது. இவ்வகையில் மொழிப்பற்றை விளக்கும் கவிதை,

*கோவில்களில்*
*எதிர்பார்த்து ஏமாந்தேன்*
*தமிழில் அர்ச்சனை*
*(சுவாசிப்பவன், மலேசியத் தமிழ் இலக்கியம் ஓர் அறிமுகம், ப. 111)*

என்றும், அரசியல் நிலை கூறும்போது,

*நாங்கள் பெருக்கல் குறியிட்டோம்*
*அவர்கள் பெருக்கிக் கொண்டார்கள்*
*என்றும் சமுதாயத்தில் பெண்ணியச் சிந்தனையை*
*கல்யாண வீடு*
*பிற்புறத்தில்*
*விதவைப் பெண்* (ஏ.எஸ். குணா, மேலது)

என்றும், இன்னல் வந்தாலும் தமிழன் இரசனை மாறாதவன் என்பதனை

*வாடகை வீடு மாறும் நாளில்*
*நான் நட்ட செடியில்*
*சில பூக்கள்* (ந. பச்சைபாலன், மேலது ப. 108)

*பெய்யத் தொடங்கியது மழை*
*நல்ல வேளை*
*குடையில்லை* (ஏ. தேவராஜன், மேலது)

என்றும் மலேசியத் தமிழரின் உள்ளம் குறுகிய மனப்பான்மையோடு இலக்கியம் படைக்கவில்லை என்பதையும். வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடும் வள்ளலாரைப் போல உயிர்களிடத்தில் அன்பு கொண்டவர்கள் என்பதை விளக்கும் வகையில்,

*சாக்கடையில் போடாதீர்*
*பழைய உணவுகளை*
*பசியோடு பூனை* (ஏ.எஸ்.குணா)

*பூக்களைப் பறிக்காதீர்கள்*
*செடியிலே இருக்கட்டும்*
*பசியோடு தும்பி* (ந. பச்சைபாலன், மேலது ப. 109)

இவ்வாறு மலேசியத் தமிழர்கள் மலேசிய நாட்டில் அடிமைகள் போல் இருந்தாலும் நம்முடைய பண்பைக், கருணையை, இரசனையை, தமிழ்ப் பற்றை மறவாதவர்கள் என்பதைத் தங்கள் படைப்புகளில் வெளிப்படுத்தினர்.

**கட்டுரைகள்**

அன்றாட வாழ்க்கையில் சிரமங்களில் உழன்று இருந்தாலும் புலம் பெயர்ந்த தமிழர்களின் உயர்வான சிந்தனைகளைக் காட்டுவது கட்டுரைகளாகும். மலேசியத் தமிழ் இலக்கிய வரலாற்றை ஆராய்ந்தால் எண்ணற்ற கட்டுரைகள் படைக்கப்பட்டும் இதழ்களில் அச்சிடப்பட்டும் நூல்களில் வெளிவந்தும்; வெளிவராமலும் போன கட்டுரைகள் ஏராளம்.

முதலில் அதிகாரப்பூர்வமாகக் கட்டுரை 1876இல் 'தங்கை நேசன்' என்ற பத்திரிகையில் வெளிவந்தது. பெரும்பாலும் கட்டுரை நூல்கள் இந்திய சார்புடையதாக அமைந்து வந்தன.

> 1946க்குப் பின்னர், மண்மணம் கமழும் இலக்கியம் படைக்கப்பட்டது. இந்நாட்டில் பிறந்து வளர்ந்தவர்களால் தான் இந்த மண்ணின் உருவையும் திருவையும் இலக்கியமாக்க முடிந்தது
>
> (இலக்கியக் குரிசில் 1978)

இவ்வாறு மலேசிய இலக்கியம் வளர கட்டுரைகள் ஊக்கம் அளித்தன.

மலேசியத் தமிழர்களின் நிலையை 'தடி எடுத்தவன் எல்லாம் தண்டல்காரன்' என்ற நிலையில் ஆளுக்கொரு பக்கம் கூறு போட்டு, ஒரு விழுக்காடு பொருளாதாரத்தையும் சிதறடித்து, நம்பிய மக்களையும் நட்டாற்றில் கைவிட்ட இந்தச் சமுதாயத் தலைவர்களின் மகா புத்திசாலித்தனத்தை என்னவென்பது? பொருளாதார முன்னேற்றத்திற்கு வழிகாட்டாவிட்டாலும் பரவாயில்லை, இருப்பதைக் காப்பாற்றிக் கொள்வதற்காகவாவது இனி வரும் காலங்களில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதை 'இந்தியர்களின் இக்கட்டான நிலை' என்ற கட்டுரை உணர்த்துகின்றது. இவ்வாறு கட்டுரைகளிலும் தமிழனின் நிலை பறைசாற்றப்பட்டது.

கட்டுரை வளர்ச்சிக்குப் போட்டிகள் நடத்தப்பட்டன.

> 1952இல் தமிழ்வேள் கோ. சாரங்கபாணியால் தமிழர்களின் ஒருமைப்பாட்டை முன்னிறுத்தி சிங்கப்பூரில் ஆரம்பிக்கப்பட்ட தமிழர் திருநாள் விழா, மலாயாவின் பல ஊர்களிலும், பட்டித்தொட்டிகளிலும் நடத்தப்பெற்று இலக்கிய வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியது. தமிழர் திருநாள் போட்டிகளில் வெவ்வேறு வயதுக்கான கட்டுரைப் போட்டிகளும் இடம்பெற்று பலதரப்பினரையும் ஊக்குவித்தது
>
> (மலேசியத் தமிழ் இலக்கியம் ஓர் அறிமுகம், ப. 67)

இன்றைய நிலையில் 200 கட்டுரை நூல்களை மலேசியத் தமிழ் மக்கள் வெளியிட்டுள்ளனர். தமிழ் இனம் என்பதில் தன்னை அடையாளப் படுத்திக் கொண்ட மலேசிய மக்கள், சமயம் சார்ந்த வகையிலும் தங்களை அடையாளப் படுத்திக் கொள்ள விரும்பி சமயம் சார்ந்த கட்டுரைகளை அதிகமாக எழுதத் தொடங்கினர். இயந்திர வாழ்க்கையில் ஓடிக் கொண்டிருக்கும் மக்களுக்கு ஆன்மிகக் கட்டுரைகள் மனஅமைதியைத்

தருவதோடு மன நோய் போக்கும் மருந்தாகவும் இருந்தன. தாய்மொழி, இனம், சமுதாயச் சிந்தனைகள், சமுதாயச் சிக்கல்கள், தன் வரலாறு, வாழ்க்கை வரலாறு, அரசியல், தொழில், பொருளாதாரம் பயணக் கட்டுரைகள் போன்ற அமைப்புகளில் கட்டுரைகள் எழுதப்பட்டு வந்தன. இவை மலேசியத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குச் சிறப்பாக அமைந்தது.

*சிறுகதைகள்*

தமிழகத்தில் சிறுகதைத் தோற்றம் பெற்ற அதே கால கட்டங்களில் தான் மலேசியத் தமிழ் இலக்கியத்தில் சிறுகதைகளின் தோற்றமும் இருந்தது எனலாம்.

> 1930இல் சிங்கப்பூரில் பதிப்பிக்கப்பட்ட 'நவரச கதாமஞ்சரி' என்னும் நூல்தான் மலேசியச் சிறுகதை வரலாற்றின் தொடக்கமாகக் கொள்ளப்பட வேண்டும்
>
> (மலேசியத் தமிழ்ச் சிறுகதைகள் ப. 24)

என பாஸ்கரன் குறிப்பிட்டுள்ளார். மலேசியச் சிறுகதைகளை ஊக்கு விப்பதற்குப் போட்டிகளும் கருத்தரங்குகளும் நடத்தப்பட்டன. மலேசியாவில் காலரீதியில் சிறுகதைகள் பேசிய - பேசும் பொருள்களை இப்படிப் பிரிக்கலாம்.

அ. 1930 - 50 இந்தியத் தேசிய விடுதலை, தமிழ்நாடு - இலங்கை சமுதாயக் கதைகள்

ஆ. 1950 - 60 தமிழர் சமுதாயச் சீர்திருத்தம், திராவிடர் இயக்கப் பிரச்சாரம்

இ. 1960 - 70 சுதந்திர மலேசியாவில் தமிழருக்கும் தமிழுக்கும் உரிய இடம் தேடல்

ஈ. 1970 - இன்று வரை புதிய தமிழர் தலைமுறையின் பொருளாதார சமுதாய, பண்பாட்டுச் சிக்கல்கள்" (மலேசியத் தமிழ் இலக்கியம் ஓர் அறிமுகம், பக் 28-29)

இவ்வாறு மலேசியச் சிறுகதைகள் நாட்டு மக்களின் வாழ்க்கையினை மையமாகக் கொண்ட சிறுகதைகளை எழுதி தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றினர்.

**நாவல்கள்**

மலேசியத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குப் புதிய பரிணாம வளர்ச்சியாக நாவல்கள் அமைந்தன. நாவல் இலக்கியம் வளர 1972இல் மலேசியத்

தமிழ் எழுத்தாளர்களும் தேசியத் தோட்டத் தொழிலாளர் சங்கமும் இணைந்து போட்டிகள் நடத்தியது. இதில் 'இலட்சியப் பயணம்' என்ற நாவல் முதற்பரிசு பெற்றது. இந்த நாவலின் ஆசிரியர் ஐ. இளவழகு,

> தோட்டப்புறத்தின் இருட்டுத் திட்டுகளையே தடயங்களாகக் கொண்டு நடை பழகியவன் நான். அந்தப் பெருந்தகுதியும் நெஞ்சார வஞ்சமற்ற என் தோட்டப்புற மக்களின் நல்வாழ்வில் நான் கொண்ட ஆர்வமும், என் எழுத்துகளை நட பாத்திரங் களாயின என்றார்.
>
> (மலேசியத் தமிழ் இலக்கிய வரலாற்றுக் களஞ்சியம் ப.74)

இவ்வாறு படைப்பாளிகள் தங்கள் உணர்வுகளையும் மனவேதனை களையும் சொல்லும் நிலைக் களமாக நாவல் விளங்கின. மனிதனிடம் காணப்படும் சிக்கல்களைத் தேவைகளைப் பரிவை, அன்பை, இணைப்பை, பிணைப்பை, உள் புற வாழ்க்கையை, சமூகப் போராட்டங்களைக் கற்பனை கலந்த நெகிழ்வுகளில் சொல்லி நாவல் இலக்கியத்தை வளரச் செய்தனர். 'இதய ரோஜா' என்னும் நாவல் ந. சந்திரன் என்பவரால் எழுதப்பட்டது.

> இந்நாவலை எழுதும்போது இதன் ஆசிரியருக்கு வயது பதினேழு இவரிடம் இளமைத் துடிப்பு. உணர்ச்சிப் பிரளயம், இலட்சிய வேட்கை அப்படியே இக்கதையின் தலைவனிடம் பிரதிபலிக்கிறது. 'எழுத்தாளரின் வயது - இந்த மண்ணின் இளமை - தமிழரின் நிலைமை அனைத்தையும் எண்ணிப்பார்த்து எடைபோட வேண்டுமாயின் அது அற்புத நாவல்தான்' என்றார் பாவலர் ஐ. இளவழகு.
>
> (மலேசியத் தமிழ் இலக்கிய வரலாற்றுக் களஞ்சியம் ப.81)

இச்சிறப்பை இந்நாவல் பெற்றுள்ளது. பெரும்பாலும் அன்றைய நாவல்களின் கதைக் களங்கள் தோட்டப்புறமக்களின் நிலையைச் சித்தரிப்பதாக அமைந்துள்ளன. 'புதியதோர் உலகம்' என்னும் அ. ரெங்க சாமியின் நாவல் மலேசிய வரலாற்றில் கறை படிந்த காலத்தைச் சித்தரிப்பதாக அமைந்துள்ளது. 1958ஆம் ஆண்டு படைக்கப்பட்ட 'துயரப்பாதை' என்னும் கா. பெருமாளின் நாவல் தோட்டப்புற தமிழர்களின் துன்பத்தையும், துயரத்தையும், வறுமையையும், வெறுமையையும், அடிமையையும், மிடிமையையும் ஆணித்தரமாகச் சித்தரிப்பவையாக அமைந்துள்ளது. இவ்வாறு மலேசிய மக்கள் தாங்கள் மலேசியப் பகுதிக்குக் குடியேறி பட்ட துயரங்களை இலக்கியத்தின் வாயிலாக பதித்தனர்.

மலேசியத் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் குறுநாவல்களும் தோன்றி வளர்ச்சிபெற்றன. தமிழ் நேசன் நாளிதழ் 1979 ஆம் ஆண்டு குறுநாவல்

போட்டியை நடத்தியது. சீ. முத்துசாமியின் 'சிறகுகள் முறியும் மானுடக் கனவுகள்' என்னும் நாவல் முதற்பரிசையும் மா. இராமையாவின் 'மன ஊனங்கள்' இரண்டாம் பரிசையும் பெற்றன. இதனைத் தொடர்ந்து குறுநாவல்களும் வளர்ச்சி பெற்றன.

## தொகுப்புரை

தாய் தமிழகத்திலிருந்து குடியேறிய தமிழ் இனம் மலேசிய நாட்டில் தோட்டத் தொழிலாளர்களாகவும், தினக்கூலிகளாகவும், மனிதர்களை மிருகங்களாகவும் தோட்டங்களில் வாழும் தமிழ்க் குழந்தைகளை இரக்கமின்றி நடத்தியதையும், புத்ரா ஜெயா மேம்பாட்டுத் திட்டத்தினால் பாதிக்கப்பட்ட தோட்டத் தொழிலாளர்களின் நிலையையும், ஈய சுரங்கத் தொழிலாளர்களுக்கான நிலையையும் படம் பிடித்துக் காட்டுவது போல இவர்கள் தமிழ் இலக்கியத்தைப் படைத்துள்ளனர். புலம்பெயர்ந்த மக்கள் தங்கள் வலிகளுக்கு மருந்தாக தமிழ் மொழியை வளர்த்தனர் தங்கள் விழிகளுக்கு விருந்தாக அழியாப்புகழுடைய தமிழ் இலக்கியத்தைப் படைத்தனர். மலேசியத் தமிழர்களின் வரலாற்றுச் சுவடுகளும் தமிழ் இலக்கியமே என்று சொன்னால் அது மிகையாகாது.

வாழ்க தமிழ்! வளர்க தமிழர் இனம்

# மலேசியத் தமிழ்க் கவிதை வளர்ச்சி

திருமதி வே. விஜி
*முனைவர் பட்ட ஆய்வாளர்*
*உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்*
*சென்னை - 600 113*

1957இல் விடுதலை பெற்ற மலேசியா இன்று உலகில் வளரும் நாடுகளுள் ஒரு தனிச் சிறப்புப் பெற்றுத் திகழ்கிறது. 'மலாயா' எனும் பெயரில் பதினோரு மாநிலங்களைக் கொண்ட நாடாக இருந்து, 1963 செப்டம்பர் மாதம் சிங்கப்பூர், சாவா, சபா ஆகிய மாநிலங்களை உள்ளடக்கிய மலேசியாவாக மலர்ந்தது. 1965இல் சிங்கப்பூர் தனிக் குடியரசான பின்னர்த் தலைநகர் கோலாலம்பூர், புத்ரா ஜெயா, லாபுவான் ஆகிய மூன்று பகுதிகளையும் கொண்ட கூட்டரசு வளாகத்தை அமைத்துக்கொண்டது.

## *மலேசியத் தமிழர்*

1786இல் வெள்ளையர் பினாங்கைக் கைப்பற்றியதும் அவர்களது வேலை தேவைக்காக இந்தியர்கள் மலேசிய நாட்டிற்கு அழைத்துச் செல்லப் பட்டனர். 1790களில் மிளகு தோட்டங்கள் போடவும் , 1870களில் காப்பி, இரப்பர் தோட்டங்கள் ஏற்படுத்தவும், தொழிலாளர் தேவை பன்மடங்கு மிகுந்தது. 1786இல் தொடங்கிய இந்தியர் குடியேற்றம் 1938 வரை தொடர்ந்தது. மலேசியாவிற்கு குடிபெயர்ந்து வந்தவருள் மிகப் பெரும் பான்மையினர் தமிழராக இருந்தனர் என்பதற்குச் சான்றுகள் பகர்கிறது மலேசியாவில் பதிப்பிக்கப்பட்ட 'மலேசியத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம்'.

பொருளீட்டுவதற்கென ஒரு சாராரும், நாட்டைச் செப்பனிடுவதற் கென ஒரு சாராருமாக வந்தவர்களே மலேசியத் தமிழை வளர்த்தனர். தமிழேடுகளைத் தொடங்கினர். மலேசியா நாட்டில் தமிழேடுகள் வெளியிட்டதில் இஸ்லாமியத் தமிழர்களுள், தமிழறிஞர்களும் புலவர்களும் முக்கியப் பங்கினை வகித்தனர்.

## *தமிழ்க் கவிதை வளர்ச்சியில் மலேசிய இதழ்களின் பங்கு*

முதன் முதலில் சிங்கப்பூரில் தான் 'சிங்கை வர்த்தமானி' (1875) ஏடு வெளிவந்தது. மலேசியா விடுதலைப் பெற்ற காலகட்டத்தில் தமிழரது 'தங்க ஏடு' எனத் திகழ்ந்த தமிழ் முரசு, 1935இல் வார இதழாகத் தொடங்கப்பட்டு வாரம் மும்முறையாக வளர்ந்து நாளிதழுக்கு மாறியது. கவிதைக்கு முதன்மை தந்தது.

மூத்த ஏடான 'தமிழ் நேசன்' 1924ஆம் ஆண்டு வார இதழாகத் தொடங்கி 1937ஆம் ஆண்டில் நாளிதழாக மாறியது. கவிதை வளர்ச்சிக்கு ஊக்கம் நல்கியது. 'சங்கமணி' 1952 இல் தேசியதோட்ட தொழிற்சங்கத்தின் சொந்த வெளியீடாக வார இதழாகத் தொடங்கப்பட்டது. இலக்கியத்திற்கு முதலிடம் கொடுத்து வந்தது. பின்னர் தோட்ட தொழிலாளர் குரலாய் அவ்விதழ் இன்றும் ஒலித்துக்கொண்டுள்ளது. 'தமிழ் ஒளி', 'மன ஓசை', 'நவரசம்', 'தமிழ்த் தொண்டர்' ஆகிய இதழ்கள் 1958இல் தம் இலக்கியச் சுற்றை மேற்கொண்டன. 1959இல் மாதவி திங்களிதழும், 1966இல் 'பொன்னி' இலக்கியத் திங்கள் இதழும் கவிதை வளர்ச்சியில் சிறப்பிடம் பெறுகின்றன.

கூட்டுறவு (1967), முத்தமிழ் (1967), தமிழ்க் குயில் (1967), கலாசாரம் (1971-1979), உதயம் (1972) ஆகிய குறிப்பிடத்தக்க இதழ்கள் கவிதை வளர்ச்சிக்கு உதவின. 1977-86 ஆம் ஆண்டில் கவிதை வளர்ச்சியில் வளமான இதழ்களும். பயனுடைய நூல்களும் தோன்றின. தினமணி (1980), தமிழ் ஓசை (1981) ஆகிய நாளிதழும், வானம்பாடி (1977), மயில் (1986) முதலிய கிழமை இதழ்களும், திங்கள் இருமுறை இதழான புதிய சமுதாயம் (1980), திங்கள் இதழ்களாக நம்குரல் (1980), தூதன் (1984) முதலிய இதழ்கள் கவிதை வளர்ச்சிக்கும், தமிழர் பட்ட துயரத்தின் வடிகாலாகவும் திகழ்ந்தன.

மலேசிய மறுமலர்ச்சிக் கவிதைகளின் வளர்ச்சிக்கு முதல் படியாக விளங்கும் தொகுப்பு நூல் 'மலாயாவில் தமிழ்க் கவிதைகள்' பரிதாமணாளன் எனும் சு.அப்துல் முத்தலிப் தொகுத்து வெளியிட்டது. மூத்த கவிஞர்கள் அ. முத்தையனார், கவியரசு சோமசன்மா முதற்கொண்டு இளைய கவிஞர் சூளுவாங் ஹாஜா மொய்தீன் வரை இந்தத் தொகுப்பில் இடம் பெற்றுள்ளனர்.

முருகு சுப்பிரமணியம் அவர்கள் 'தமிழ் நேசன்' தாளிகையில் நடத்திய வெண்பாப் போட்டி கவிதை வளர்ச்சிக்கு ஒரு மைல்கல்லாக அமைந்தது. ஐம்பதுகளில் யாப்பிலக்கணப் பயிற்சி இல்லாமலே மரபுக் கவிதைகள் எழுதிவந்த கவிஞர்கள். எழுபதுகளில் யாப்பிலக்கணத்தைப் புரிந்துக் கொண்டு எழுதினார்கள். செந்தமிழ்க் கலாநிலையம், தமிழ்ப் பண்ணை, கவிதைக் களம் மலேசியத் தமிழ்ப் பாவலர் மன்றம் கவிதை வளர்ச்சிக்கு பெரும் துணை ஆற்றி வருகின்றன.

***உரைவீச்சு***

மலேசியாவில், புதுக்கவிதை என்றழைக்கப்படும் உரைவீச்சு, முதன் முதலில் தாளிகையில்1965 ஆம் ஆண்டு இடம் பிடித்தது. எழுபதுகளின்

இறுதியில் 'வானம்பாடி' வார இதழின் உதயத்திற்கும் பின்னரே புதுக்கவிதை வளர்ச்சி காணத் தொடங்கியதாக மலேசியத் தமிழ் இலக்கிய வரலாற்றுக் களஞ்சியத்தில், இலக்கியக் குரிசில் டாக்டர் மா. இராமையா சுட்டிக் காட்டுகிறார்.

புதுக்கவிதையை ஆதரித்த எழுத்தாளர்களாக சி.கமலநாதன், எம்.துரைராஜ், பைரோ ஜி.நாராயணன், எம்.ஏ.இளஞ்செல்வன், அக்கினி, இராஜகுமாரன், சீ.முத்துசாமி, கு.கிருஷ்ணன் போன்றவர்களுடன் பல புதிய எழுத்தாளர்கள் புதுக்கவிதை எழுதுவதில் பெரும் பங்காற்றியுள்ளனர்.

'மலேசியத் தமிழ்க்கவிதை கருத்தரங்கு' (1988) மலாயாப் பல்கலைக்கழக இந்திய ஆய்வியல் துறையால் நடத்தப்பட்டது. வாசிக்கப் பெற்ற கட்டுரைகள் மலராக மலர்ந்தது.

கவிஞர் முரசு. நெடுமாறன் அவர்களைத் தலைமைத் தொகுப்பாசிரியராகக் கொண்டு 1997ஆம் ஆண்டு 'மலேசியத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம்' வெளிவந்துள்ளது. கவிதை வரலாற்று நூலாகவும், சிறந்த கவிதைத் தொகுப்பாகவும் திகழ்கிறது. 2008ஆம் ஆண்டு 'மலேசியத் தமிழ் இலக்கிய வரலாற்றுக் களஞ்சியம்', இலக்கியக் குரிசில் டாக்டர் மா. இராமையா அவர்களால் தனிப்படைப்பாக உருப்பெற்றுள்ளது.

'வாழ்த்துக் கவிதைகள்' மலேசியக் கவிதைகளில் சிறப்பிடத்தினை பெற்றுள்ளன. தங்கள் அன்பை, மரியாதையை வெளிப்படுத்த எழுதும் கவிதைகளாக இவ்வகை திகழ்கின்றன. உதாரணமாக,

*எழுபதிலும் தளராமல் எழுந்து நிற்கும்*
*எம்மினத்தின் மிகமூத்த இதழாம் நேசன்!*
*புழுதியையும் தூற்றலையும் புறம் ஒதுக்கி*
*புகழோடு ஞாலம்வரை வெல்க உய்க!*

என்று தமிழ் நேசன் இதழின் எழுபது ஆண்டு கால உழைப்பினை வாழ்த்தி கவிஞர் மைதீ. சுல்தான் கவிதை யாத்துள்ளார்.

'இரங்கற் கவிதைகள்' கையறு நிலையை உணர்த்துவனவாக இக் கவிதைகள் படைக்கப்பட்டுள்ளன. உதாரணமாக,

*தட்டுத்தடு மாறிச்செல்லும் ஓடம் போலே*
*தத்தளித்துக் கொண்டிருக்கும் தமிழர் நாமும்*
*தட்டு கெட்டுத் திரிகின்றோம் 'கிட்டு' என்னும்*
*தளபதியை இழந்ததினால் துயர முற்றோம்!*

என்ற பொன். நாவலன் அவர்களுடைய கவிதை பிரிவாற்றாமையை நம் கண்முன் நிறுத்துகிறது

இயற்கை, இறை, நாட்டுப்பற்று, தமிழ்ப்பற்று, தோட்டப்புறம், சமுதாயம் காதல், இசை, நாடகம் எனப் பல்சுவையும் மலேசியத் தமிழ்க் கவிதைகளின் கருப்பொருளாக பரிணமிக்கின்றன.

### சமுதாயம் குறித்தக் கவிதைகள்

மலேசியத் தமிழரின் தொடக்க கால கவிதைகள் தமிழ் மக்கள் சமூகம் பெற்ற இன்னல்களை உலகுக்கு பறைசாற்றுகின்றன. 'மலேசியத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம்' என்னும் கவிதைத் தொகுப்பில் சமுதாயம் பற்றிய தலைப்பில் இருந்து சில துளிகள்

*விடிவதற்கு முன்னாலே காடு சென்று.*
*கடிக்கின்ற அட்டைகட்கும் குருதி தந்து*
*கடமைதனைச் செய்தாலும் கால்வயிற்றுப்*
*'பிடிசோறும் கிடைக்காது' என்ற போதும்*
*பேச்சாளத் தமிழரினம் உள்ளொடுங்கி*
*நடமாடும் பிணயாக ஆனதையா!*
*நாவிருந்தும் ஊமையென நின்றதையா!*

*(தமிழ் நேசன், 1968, மதுராந்தகன்)*

தோட்டப்புறத் தமிழர் அடைந்த துயரை விளக்கும் இக்கவிதை.

ஆசை மொழிகளைக் கூறியே பல பாமர மக்களை மலேசியாவிற்கு உழைப்பதற்காகக் குடியேறச் செய்தனர். 'மலாயா சொர்க்க பூமி' என்ற கனவுகளுடன் வந்த தமிழர்க்கு வாழ்க்கை என்பது பெரும் போராட்டமாக இருந்தது.

### எந்தமிழர் நிலை

*காடு வெட்ட ரோடு வெட்டக் கண்ணீர்விடச் செந்நீர்விட*
*நாடு விட்டு நாடு வந்தார் தமிழர்கள் – அவர்*
*பாடுபட்டுப் பாடுபட்டுப் பத்துநூறாய் வேறுபட்டுப்*
*போடுகிறார் ஆண்டுக்கொரு கூட்டங்கள்!*

*(தமிழ்நேசன், வே. சங்கு சண்முகம்)*

போதிய உணவும், உடையும், இருப்பிடமும் இன்றி துயருற்ற நிலையை ஆரம்பக் காலக் கவிதைகள் பிரதிபலிக்கின்றன.

*நிலைபெயர்ந்த கட்டடத்தின் இடுக்கில், நீரில்,*
*நெடுமரத்தின் விழுதடியில். மண்ணின் கீழே*
*குலைநடுங்கும் தேள்பூரான், பாம்பின் நஞ்சில்*
*குற்றுயிராய்ச் செத்ததற்கு வரலாறுண்டு!*

*(தமிழ் நேசன் 1981, தீ.சி.பொன்னுசாமி)*

*தருவிட்டுத் தருமாறும் குருவி கூடத்*
*தங்குதற்குத் தருவொன்றைத் தனித்தே கொள்ளும்,*
*பெருமையுறு மனிதரிலும் தமிழராகப்*
*பிறந்துற்ற நமக்கென்ன சொந்தம் உண்டு?*
*(கூட்டுறவு கவியரங்கு, 1971, இரா. தமிழ்ச்செல்வம்)*

## பெண் எழுத்தாளர்களின் கவிதைப் படைப்புகள்

**ஜாக்கிரதை**

*தோணுகின்ற கவர்ச்சியெல்லாம் பொம்பளைக்கிட்டே – ஆனா*
*தோற்றுப் போவா வாதம்செய்தா ஆம்பளைக்கிட்டே'*
*போனவாரம் வந்திருந்த வரிகளைப்பார்த்தேன் – ஒரு*
*பொம்பளையா இருப்பதனால் பதில்கவியாத்தேன்!*
*(தமிழ் முரசு, 1968, மாலிக்பேகம்)*

*திருவிளக் கென்பர் பெண்களைத் – தேவை*
*தீர்ந்ததும் ஓடுவர் காளையர்!*
*தெருவிளக் காக்குவர் அவர்களைப் – பின்*
*திட்டுவர் தம் குறை மறந்துமே!*
*காவிய நாயகி ஆக்குவர் – தம்*
*காரியம் முடிந்ததும் ஓடுவர்!*
*ஓவியப் பாவையென் றோதுவர் – பின்*
*உறுத்திடச் செய்துமே தூற்றுவர்!*
*(கமலாலட்சுமி, 1967)*

பெண்களின் அவலநிலைக்குக் காரணமான ஆண்கள் தங்கள் 'தவறுகளை உணர்வதில்லை' என 1967ஆம் ஆண்டு கமலா லட்சுமி எழுதிய கவிதையும், 'ஜாக்கிரதை' என்ற தலைப்பில் மாலிக் பேகம் எழுதிய கவிதையும், மலேசியத் தமிழ்ப் பெண்களின் கல்வி நிலையையும், திட சிந்தனையும், எழுத்து சுதந்திரத்தையும் விளக்கும் சில துளிகளாகத் திகழ்கின்றன.

### தொகுப்புரை

❖ சமுதாயத்தின் பாதிக்கு மேற்பட்டவர்கள் தோட்ட புறத்தில் வாழ்ந்தனர். நகர்ப்புறத்தில் வாழ்ந்தவர்களுக்கும் தோட்ட புறத்தில் வாழ்ந்தவர்களுக்கும் தொடர்பு என்பது மிக அரிதாக இருந்ததால் இலக்கியப்போக்குகள் தனித்தனிப் போக்குகளாக அமைந்திருப்பதை கவிதைகளில் காணமுடிகிறது.

❖ 1946ஆம் ஆண்டு தொடங்கி மலேசியாவில் பிறந்து கல்வி கற்றுப் புதிய எழுத்தாளர்களும் தமிழ் எழுத்துலகிற்கு வந்த இக்காலக் கட்டத்தில் இதழ்களின் வளர்ச்சி அளப்பறியதாக இருந்துள்ளது.

❖ தமிழ்ப்பற்று சமுதாய அவலம். எழுச்சி, பகுத்தறிவுச் சிந்தனை, விடுதலை வேட்கை போன்ற கருத்து பொதிந்த கவிதைகளை பாமர மக்களிடம் கொண்டு சேர்க்கும் அரும் பணியை இதழ்கள் செய்துள்ளன.

❖ விடுதலைக்குப்பின் கவிதைத் துறையில் ஏற்பட்ட எழுச்சி மலேசியத் தமிழ் இலக்கியத் துறை உலகத் தமிழரை வியக்கச் செய்துள்ளது. தமிழ்ப் பற்று தமிழை உயர்த்தியுள்ளது.

## பயன்பட்ட நூல்கள்

❖ மலேசியத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம் (1887-1987), தலைமைத் தொகுப்பாசிரியர் கவிஞர் முரசு.நெடுமாறன், அருள்மதியம் பதிப்பகம், மலேசியா, முதல் பதிப்பு 1997.

❖ மலேசிய நாட்டுப்பறப் பாடல்கள், இரா. தண்டாயுதம், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, முதல் பதிப்பு, 1998.

❖ மலேசியத் தமிழரும் தமிழும். கவிஞர் முரசு.நெடுமாறன், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, முதல் பதிப்பு 2007.

❖ மலேசியத் தமிழ் இலக்கிய வரலாற்றுக் களஞ்சியம், மா.இராமையா, நியூசெஞ்சுரி புக்ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை, முதல் பதிப்பு 2008.

# மலேசியத் தமிழ்க் கவிதைகளில் சமூகம்!

கவிஞர் சுரா
*தமிழாசிரிடர்*
*செட்டிநாடு வித்யாஷ்ரம்*
*சென்னை - 600 028*

## தோற்றுவாய்

இக்கட்டுரை, 1997ஆம் ஆண்டு வெளியான "மலேசியத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம்" என்னும் தொகுப்பு நூலை ஆதாரமாய்க் கொண்டு எழுதப்படுகிறது. 1887 முதல் 1987ஆம் ஆண்டு'ரை வெளிவந்த மலேசியக் கவிதைகள் மலேசியச் சமூகப் பார்வை ஆய்விற்கு எடுத்தாளப்படுகின்றன. மலேசியக் கவிஞர்களின் கவிதைகளோ, கொள்ளை அழகு! சமூக அக்கறை கொண்டவை, இனிமை நிறைந்தவை, உழைப்பையும், காதலையும் பாடுபொருளாகக் கொண்டவை, சமூக மேம்பாட்டிற்குப் புதியதோர் பாதை கண்டவை எனலாம்.

## இயற்கை நோக்கில் சமூகம்

இயற்கை பற்றிய கவிதைகளில் சமூக நிலைப்பாட்டையும், அவலங்களையும் கூற முடியும் என்பதை அறியலாம். கவிஞர் அமலதாசன் 'உடுக்கள்' என்ற கவிதையில் வடித்துள்ள பாங்கு நெஞ்சை நெகிழ வைக்கிறது.

*விழித்ததில் இருந்து செந்நீர் வியர்வையைச் சிந்தி – மண்ணில்*
*உழைத்திடும் ஏழை மக்கள் உண்ணவும் வழியில்லாமல்*
*வழித்தெறி கண்ணீர் மீறி வழித்திடுங் காட்சி கண்டு*
*சுழித்திடும் உள்ளம் போன்று சுழன்றிடும் உடுக்கள் காணீர்!*
*[த.நேசன், 1966, ப. 253]*

இப்பாடலில், நாள்முழுதும் உழைக்கும் ஏழை, உண்ண வழியின்றி, கண்ணீரைத் துடைத்துக் கொண்டே இருக்கும் அவலம் கண்டு முகம் சுழிப்பதுபோல என்பதற்குச் சுழன்றிடும் உடுக்களை உவமைப்படுத்துகிறார்.

## இறைநோக்கில் சமூக உணர்வு

க.முனியாண்டி என்ற கவிஞர், இறைநோக்கைப் பாடும்போது, சமூகம் மேம்பட வேண்டும், நல்லன எல்லாம் நிகழ்ந்திட வேண்டும், தூய்மை ஓங்க வேண்டும், பசியும் நோயும் பறந்தோட வேண்டும், அமைதியும் அன்பும் ஒளிர வேண்டும் என்று 'அருள்மிகு விநாயகர் தோத்திரம்' என்ற பாடலில்

பாடியுள்ளார். எதுகையும் மோனையும் பின்னிப் பிணையக் கவியை வடித்திருக்கிறார்.

*புண்ணியங்கள் பெருகிடவும், வளங்க ளோங்கிப்*
*பூமியெல்லாம் செழிப்புறவும், அறவோர் போற்றக்*
*கண்ணியங்கள் சிறந்திடவும், பத்தி மார்க்கம்*
*கவின்புவியோர் நெஞ்சுறவும், தான தர்மம்*
*பண்ணிடுவோர் நிறைந்திடவும், பசியும் நோயும்*
*பறந்தோடிப் போய்விடவும், அமைதி யன்பு*
*நன்னயத்தோ டொளிர்ந்திடவும், இன்பக் காட்சி*
*நடைபெறவும் அருள்கவிநா யகனே போற்றி!*

[*விநாயக, 1976, ப. 261*]

நீரோட்டம்போலக் கவிதையை வடித்து விநாயகரிடம் சமூகம் நலம்பெறக் கோரிக்கை வைக்கிறார்.

*உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்*
*சேரா தியல்வது நாடு* (*குறள் 734*)

எனும் வள்ளுவத்தின் அடியொற்றி அமைந்த இக்கவிதையில் சொல்லழகும் பொருளழகும் கருத்திற்கு அழகு சேர்ப்பதாய் அமைந்துள்ளன.

## நாடு பற்றிய உணர்வு

நாட்டுப் பற்று ஆணுக்கு மட்டுமா? பெண்ணுக்கும் நாட்டைக் காப்பதில் பங்கு உண்டு; அவர்களும் திரண்டு எழுந்து வரவேண்டும் என்பதனைக் கவிஞர் அமலதாசன் 'தரணியே திரள வேண்டும்' என்ற கவிதையில், கொலைவெறி, குறுகிய எண்ணம் மலைபோல் உயர்ந்து விட்டன. அத்தகையோரை வீழ்த்திட வளையலைத் தாங்கும் பெண்கள் கையால் வாளினை ஏந்தவேண்டும் எனப் புரட்சிக்கு அழைப்பு விடுக்கிறார்.

*கொலைவெறி ஓங்க நெஞ்சில் குறுகிய எண்ணங் கொண்டு*
*மலையென ஓங்கி நிற்கும் மாமலே யாசி யாவைக்*
*குலைப்பதைக் கொள்கை யாக்கிக் குதிப்பவர் வீழ்ச்சி காண*
*வளையலைத் தாங்கும் கையும் வாளினை ஏந்த வேண்டும்!*

[*1965, ப. 300*]

இக்கவிதை பாவேந்தர் பாரதிதாசனின்

*கொலை வாளினை எடடா – மிகு*
*கொடியோர் செயல் அறவே!*

என்ற முழக்கத்தை நினைவுபடுத்துவதாய் எழுந்துள்ளது.

மேலும், ஐ. உலகநாதன் என்ற கவிஞர், தமிழர் ஒற்றுமை, நாட்டுப் பற்று எப்படி இருக்க வேண்டும், எப்படி ஒன்றுபடல் வேண்டும் என்பதை 'இஃது ஆகாது காண்'! என்ற தலைப்பில்...

*வாய்பிளந்து வல்லூறு வட்டமிடும் நேரத்தில்*
*மணிப்புறவுக் கூட்டத்தில் பேதமா?*
*தாய்நாட்டில் பகை மூட்டம் தலைகாட்டும் சூழ்நிலையில்*
*சதிராடும் இனவாதம் ஆகுமா?*
*கண்ணியத்தைக் கடமையினைக் கைகழுவி நமக்குள்ளே*
*களம்காணல் பகைப்புலத்தை வெல்லவா?*
*அந்நியரின் வாலறுக்க அன்னைமக்கள் ஒன்றுபட்டே*
*அமர்க்களத்தில் வெல்லவேண்டும் அல்லவா?*

[1964, ப. 304]

என்று தமிழ்ப்பகை அறுத்திடத் தமிழர் அனைவரும் ஒன்றாதல் வேண்டும் என அறை கூவல் விடுகிறார்.

## இன ஒருமைப்பாடு

தமிழினம் ஒன்றுபட வேண்டும், தனித்தனியே சங்கம் வைத்து, சாதிக்கொரு சங்கம் வைத்துப் பிரிந்து நின்றோம், ஒன்றுபட வேண்டும் எனில் சாதிச் சங்கங்களை ஒழிப்போம். நல்ல தலைவர் வழியினை ஏற்போம் என்று முழங்கும் கவிஞர் கரு.திருவரசு தம் கவிதையில் வலியுறுத்துவதை இங்குக் காணலாம்.

*ஒன்றுபட ஒன்றுபட்டு வென்றுவிட இங்கே*
*ஒவ்வொன்றாய்ச் சங்கங்கள் கண்டுவந்தோம் நன்றே!*
*கொன்றுவிடும் நம்மினத்தைக் குலைத்துவிடும் சாதிக்*
*கொடும்பெயரில் நாமிங்கே சங்கங்கள் கண்டோம்;*
*ஒன்றுபட வேண்டுமெனின் ஒருசாதிக் கொன்றாய்*
*உருவான சங்கங்கள் ஒழித்திடுவோம் என்றே*
*நன்றுபல மேடைகளில் நம் தலைவர் பேச*
*நாமெல்லாம் கைகொட்டி வரவேற்றோம் நன்றே!* (ப. 311)

என்று, நம் தலைவர், நல்ல தலைவர் பேச்சினை வரவேற்க வேண்டும் என்கிறார்.

## பெண்கல்வி

திருமதி உஷாநாயர் என்ற கவிஞர், பெண்கல்வி வேண்டும் என்பதனைத் 'தமிழ் மணக்க' எனும் கவிதை வாயிலாகக் கருத்துகளை

வரிசைப்படுத்தியிருப்பது வரவேற்கத்தக்கதாய் உள்ளது. பெண் கல்வி பெற்றுப் பயன் அடைந்துவிட்ட உணர்வினைக் கவிதைமூலம் காட்டியிருப்பது நம்பிக்கையை ஏற்படுத்துகிறது.

*பெண்கல்வி வேண்டுமென்ற பெரிய உள்ளம்,*
*பெண்மைக்கே மதிப்பளித்த பெருமை வெள்ளம்,*
*எண்கல்வி எழுத்தறிவு ஏற்று யர்ந்தும்*
*இல்வாழ்வே நல்வாழ்வாய் அமைக்க நல்ல*
*கண்கல்வி வேண்டுமென்றே ஆய்ந்தும் ஆய்ந்தும்*
*கணக்கில்லாப் புரட்சி செய்து கனவி லாழ்ந்தும்*
*பெண்கல்வி பெருகிடவே வழிசமைத்தார்,*
*பெண்ணெல்லாம் அறிவுணர்வு பெறவும் செய்தார்*

*(1967, ப. 312)*

## தோட்டத் தொழிலாளர் நிலை

தோட்டம் என்பது மலேசியாவில் அரப்பர் தோட்டத்தைக் குறிக்கிறது. அரப்பர் தோட்டத்தில் உழைக்கும் உழைப்பாளர்களுக்குக் குறைந்த அளவு ஊதியம் கொடுத்து உழைப்பைச் சுரண்டும் கொடுநிலைகண்டு கொதிக்கும் கவிஞரின் பெயர் கிடைக்கவில்லை. கவிதை இதோ!

*பாலுமரம் வெட்டலான்னு பழயகப்பல் ஏறிவந்தேன்*
*நாப்பத்தஞ்சி காசப்போட்டு நட்டெலும்ப முறிக்கிறானே!*
*முப்பத்தஞ்சி காசப்போட்டு மூட்டெலும்ப முறிக்கிறானே!*

*(ப. 336)*

என்று அரப்பர் தோட்டத் தொழிலாளியின் அவலத்தைக் குறிப்பிடுகிறார். இக்கவிதையில் பாலுமரம் என்பது அரப்பர் மரத்தைக் குறிக்கிறது. நட்டெலும்பு என்பது முதுகெலும்பைக் குறிக்கிறது. குறைந்த ஊதியத்திற்குத் தமிழர் எலும்புதேய உழைத்த அவலநிலையைக் கூறுகிறது இக்கவிதை.

இதேபோன்று ஒப்பந்தத் தொழிலாளர் நிலையும் அன்று இருந்தது. அத்தொழிலாளிகளில், குழந்தைத் தொழிலாளர்களும் அடங்குவர். இவர்களின் அவலத்தை விளக்கவந்த கவிஞர் "பிஞ்சியிலே பளுத்தவ! என்று தம் கவிதையில் விளக்கியுள்ளார். இக்கவிஞரின் பெயரும் கிடைக்கவில்லை. கவிதை இதோ!

*மஞ்சிக் குப்பம் கூடலூரரான்*
*சஞ்சியிலே கட்டிப் புட்டான்*
*கஞ்சிக்கும் கந்தைக்கும்*
*பிஞ்சியிலே பளுத்தவ நான்!* *(ப. 339)*

என்று குழந்தைத் தொழிலாளியைப் பாட வைக்கிறார். இப்பாடலில் 'சஞ்சி' என்பது ஒப்பந்தத்தைக் குறித்து வந்துள்ளது. ஒப்பந்தம் என்ற பெயரில் தொழிலாளர்களைக் கட்டிப்போட்டு வேலை வாங்கிய கொடுமை நடந்துள்ளது. இவர்களின் உழைப்பு கஞ்சிக்காகவும், கந்தலுக்காகவும் மட்டுமே, அதற்காகப் பிஞ்சியிலே பழுத்தவ நான், என்று கூறும் இளம்பெண் குழந்தையின் கதறல் நெஞ்சைச் சுடுகிறது.

### கூட்டுத் தொழில் பயிற்சி

இந்த அவலங்களை எல்லாம் ஒழித்து, தமிழர் வளம்பெற வேண்டுமெனில் கூட்டுத்தொழில் பயிற்சி வேண்டும் என்பதைக் கவிஞர் மா.தமிழன்பன் தம் வெண்பாக் கவிதை மூலம் அழைப்பு விடுப்பது தொழிலாளர் ஒற்றுமை ஏற்பட, அவர் வாழ்வு சிறப்படைய வழிவகை செய்வதுபோல் உள்ளது.

*கூட்டுத் தொழிற்பயிற்சி கண்டறிந்து அவ்வழியே*
*ஈட்டும் பொருள் வளத்தால் இன்பமுற – நாட்டமுடன்*
*தீட்டுமொரு திட்டம் வரும் வரைக்கும் தீராது*
*தோட்டத்து மக்கள் துயர்* (து.நேசன், 1972, ப. 363)

என்று பாடி, தொழிலாளர்களைக் கூட்டுத் தொழிற் பயிற்சி காண வழி காட்டுகிறார்.

### குடும்ப அவலம்

இவ்வாறு போராடி உயிர்வாழும் தொழிலாளர் குடும்பத்தில், குடும்ப உறுப்பினர்கள் குணங்கெட்டு, தறிகெட்டுப் போனால், அங்குத் துன்பப்புயல் வீசாதோ! இதனைக் கண்ட கவிஞர் ப. நண்முல்லை, 'போதாதோ வீசும் புயல்' என்ற வெண்பா மூலம் அவலங்களைப் பதிவு செய்கிறார்.

*தந்தை குடிவெறியன்! தாயோ பெருந்தீனி!*
*வந்தெனக்கு வாய்த்தவளோ வன்குரங்கு – எந்நாளும்*
*சூதாடி வம்பு தொடருமகன்! என்னில்லில்*
*போதாதோ வீசும் புயல்!* (து.நேசன் 1972 – பக்.370)

இப்படி பொறுப்பின்றி ஒவ்வொருவரும் இருந்தால் அங்குப் புயல்தானே வீசும்! குடும்பம் எப்படி மலரும்? என வினவுகிறார் கவிஞர்.

### தமிழர் நிலை

தமிழர் நிலை மலேசிய மண்ணில் அறியாமையினால் பீடிழந்து. ஒன்றும் இல்லா நிலைக்கு ஆளாகித் துயருறும் போக்கைத் தகுந்த உவமைகளோடு கூறுகிறார் கவிஞர் இரா. தமிழ்ச்செல்வன்,

*தெருவினிலே அலைகின்ற நாய்க்குக் கூடத்*
*தெருத்திண்ணை யென்றொன்று சொந்தம் உண்டு*
*உருவின்றிப் பரந்துலவும் வளியுங் கூட*
*உடலென்ற கூட்டுக்குள் சொந்தம் காணும்*
*தருவிட்டுத் தடுமாறும் குருவி கூடத்*
*தங்குற்குத் தருவொன்றைத் தனித்தே கொள்ளும்*
*பெருமையுறு மனிதரிலும் தமிழராகப்*
*பிறந்துற்ற நமக்கென்ன சொந்தம் உண்டு?*
(கூட்டுற, 1971, ப. 359)

என்று விரக்தியுடன் பாடும் பாடலில், தமிழரின் அவலநிலை எத்தகையது என்பதைப் புரிய முடிகிறது.

மணமுறிவு

ஒருவனுக்கு ஒருத்தியாய்க் கடைசிவரை வாழ்வது தமிழர் மரபு. இதில், எத்தகு இன்னல் வந்தாலும், ஒருவரை ஒருவர் பிரியாமல் வாழ்தல் வேண்டும். அதற்காகத்தானே அக்கினி சாட்சியாய் அரங்கேற்றுகிறார் திருமணப் பந்தத்தை! ஆனால், சென்ற நூற்றாண்டிலேயே தமிழர் வாழ்வில் மணமுறிவு ஏற்பட்டதைக் கவிஞர் வீ.கே. சுப்பிரமணியம் தம் கவிதையில் வருத்தத்துடன் பதிவு செய்கிறார்.

*நகத்திருந்து சதைபிரிய நேர்ந்தாலும்*
*நறியமல ரோடு வாசம்*
*பகைத்திருந்து பிரிந்தாலும் பசுகன்றைப்*
*பிரிந்தாலும் பாசமிக்க*
*அகத்திருந்து காதலெனும் உரமிட்டு*
*வாழ்க்கை யெனும் பயிரை அன்பாய்ச்*
*செகத்திருந்து வளர்ப்பமென உறுதி கொண்டீர்!*
*மணமுறிவைச் செய்தல் நன்றோ!* (சுடமுரசு, 1968, ப. 379)

என்று சாடுகிறார்.

'வரதட்சணை' எனும் பேர வாழ்க்கை அன்றும் இருந்திருக்கிறது என்பதைவிட அன்று அதிக அளவில் இருந்திருக்கிறது என்பதனைக் கவிஞர் சீ. மோகனேசுவரி கவிதையில் வெளிச்சத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்.

*ஆணினை விலைக்கு வாங்கும் அரிவையர் உள்ள மட்டும்*
*நானிலம் உயர்வதில்லை நலிவுதான் மிச்ச மாகும்*
*வீணிலே நூறு பத்தாய் விலையினைப் பேசிப் பேசிக்*
*காணிகள் வீடு தோட்டம் காளையர்க்(கு) அளித்தல் – நன்றோ!*
*(த.முரசு, 1968, ப. 380)*

என்பதைச் சீதனம் எனத் தலைப்பிட்டுச் சாடுகிறார்.

## காதல் வாழ்வு

அகவாழ்க்கை இல்லாத இலக்கியங்கள் மிகக் குறைவு. தலைவன், தலைவி மனப்போக்கு, பிரிவு, ஊடல், கூடல், போன்ற நிகழ்வுகள் அகம்சார்ந்த கவிதைகளில் அழகாகவும், ஆழமாகவும் கவிஞர்கள் தீட்டியிருப்பது கற்பனை இன்பத்தையும், கனவையும் காட்டுவதாய் அமைந்துள்ளது. 'பயிலாத பாடம்' எனும் தலைப்பில் கவிஞர் ஐ.உலகநாதன் காதல் உணர்வை வெளிப்படுத்தும் போக்கு உணர்விற்கு விருந்தாய் அமைந்துள்ளது. பண்ணோடு தாளம் சேர்ந்தால் பாட்டொன்று பிறக்கும், உன்னோடு நான் சேர்ந்தால் உவகை பிறக்கும் என்று பாடுகிறார்.

*கண்ணுக்குள் கண்படிய நெஞ்சம் தாவிக்*
*கையோடு கைஇணையப் புலன்கள் ஐந்தும்*
*பெண்ணுக்கும் ஆணுக்கும் மயங்கி நிற்கப்*
*பேசாத மொழிபிறக்கும் அதுதான் காதல்;*
*மண்ணுக்கும் விண்ணுக்கும் காதல் என்பார்!*
*மழைதானே அதற்குமொரு தூதாம் என்பார்!*
*பண்ணோடு தாளந்தான் காதல் கொண்டால்*
*பாங்கான பாட்டொன்று பிறக்கும் என்பார்.* *(ப. 472)*

இக்கவிதையில் கவிஞர், காதல் வளரக் கண்களின் நோக்கு, முக்கியம் என வள்ளுவனைப் பின்பற்றிய அழகுநடை போற்றத்தக்கது.

*கண்ணொடு கண்ணினை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்*
*என்ன பயனும் இல* *(குறள் 1100)*

கண்களோடு கண்கள் இணைந்து விட்டால், பின்னர் நெஞ்சம் தானே இணையும், வாய்ச்சொற்கள் பயனற்றுப் போகும் என்ற குறள் கருத்தை மேற்கண்ட கவிதையில் அழகும் பொலிவும் சேரக் கவிஞர் வடித்துள்ள பாங்கு கற்போர்க்கு இன்பமூட்டுவதாய் உள்ளது.

பெ.திருவேங்கடம் எனும் கவிஞர் 'எரிகிறது' என்ற தலைப்பில் காதலின் வேதனையைக் கண்ணீரோடு வடித்திருக்கும் தன்மை மனதில் ஒருவித விரகத்தை உண்டுபண்ணுகிறது. இக்கவிதை, காதலைக் கண்கள் மட்டுமல்ல; கண்ணீர் காவியமாக வரைகிறது என்றும், வேதனையை நெருப்பாக உருவகப்படுத்தி அது விடியவிடிய எரிகிறது என்கிறார்.

*காதலெனும் காவியத்தைக்*
*கண்ணீரே வரைகிறது!*
*வேதனையின் நெருப்பு மட்டும்*
*விடியவிடிய எரிகிறது!* *(த. நேசன், 1976, ப. 481)*

என உருகுகிறார்.

'சோமசன்மா' என்ற கவிஞர் காதலில் உண்டாகும் பிரிவு, ஏக்கம், மனத்துயர் பற்றிக் கூறும்போது, 'உன் அணைப்பில் உயிர் துறப்பேன்' என்று தலைப்பிட்டுப் பாடுகிறார்.

*இட்டமுத்தம் காய்வதற்குள் என்னுயிரே நான்வருவேன்!*
*பட்டுடலைப் பஞ்சணையாய்ப் பார்ப்பதற்குப் பஞ்சமில்லை!*
*தேய்நிலவாய் உடல்குலைந்த சேதிதனைத் தாளிகையை*
*ஆய்கையிலே கண்பதித்தேன் அன்றுமுதல் உறக்கமில்லை!*
*நல்லமலர் தொடுத்தெடுத்தாய்; நறுமணமும் இல்லையென்றாய்,*
*உள்ளமலர் இதயமதில் உன்னுருவம் மணக்குதடி!*
*அன்றாடம் என்நினைப்பு; அதுதானே நம்பிணைப்பு!*
*உன்பிரிவால் உயிர்பிரியும் உணருகிறேன் துயர்அதிகம்!*
*பாவையுடல் வாடுதென்று பனிமலரே தேம்புகின்றாய்,*
*பூவையுடல் புத்தகத்தில் பாவடிக்க நான்வருவேன்!*
*சிலநாள்கள் பிரிந்துவிட்டேன் சேதிதனை வந்துரைப்பேன்*
*பலயுகங்கள் உன்அணைப்பில் படுத்திருந்து உயிர்துறப்பேன்!*
*(த.முரசு, 1968, ப. 801)*

சிலநாள் பிரிவிற்கே தலைவன் மிகவும் துயருற்றுத் தலைவியைத் தேற்றும்போது, பலயுகங்கள் அவளின் அணைப்பில் படுத்திருந்து உயிர் துறக்கும் உயர்காதலை உள்ளத்தின்மூலம் எழுத்தாய், வார்த்தைகளாய் வெளிப்படுத்தி, காதல் ஆழமானது, புனிதமானது, நெஞ்சில் நினைவில் வாழ்வது என அழுத்தம் கொடுத்திருக்கிறார்.

# மலேசியத் தமிழ்ப் புதுக்கவிதைகளில் பெண் படைப்பாளர்களின் ஆளுமை

திரு. வே. சுமதி
*முனைவர் பட்ட ஆய்வாளர்*
*தமிழ்த்துறை, என்.ஜி.எம்.கல்லூரி*
*பொள்ளாச்சி*

புலம்பெயர்ந்து வாழும் அயலகத் தமிழர்கள் உயிர்ப்பின் அடையாளமாகவும், மொழியை முளைவிடச் செய்யும் முயற்சியாகவும் இலக்கியங்களைப் படைத்துப் பாரினில் வலம் வரச் செய்கின்றனர். அவ்வாறு படைக்கப்படும் இலக்கியங்கள் தமிழகத்தில் 'அயலகத் தமிழ் இலக்கியம்' என அழைக்கப்படுகின்றன. அவ்வகை இலக்கியங்களில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பெற்று விளங்குவது 'மலேசியத் தமிழ் இலக்கியமே' ஆகும். மலேசியத்தமிழ் கவிதை, சிறுகதை, நாவல் எனப் பன்முக வளர்ச்சியைப் பெற்று வளர்ந்து வருகின்றது. இங்கு, மலேசியத் தமிழ்ப் பெண் படைப்பாளர்களின் ஆளுமை குறித்தான பதிவுகளை ஆய்வதே மையப் பொருளாக அமைகின்றது.

## புதுக்கவிதை

தமிழ்நாட்டில் மட்டுமல்ல, மலேசியாவிலும் காலத்திற்கேற்பக் கவிதைகள் படைக்கப்படுகின்றன. கவிதையின் வடிவம் மட்டுமல்ல, கவிதையின் பாடுபொருளுமே காலத்திற்குக் காலம் மாறுபட்டுள்ளன. ஒவ்வொரு காலத்திலும் உணர்வுகள் மாறுபடுகின்றன.

காதலும் வீரமும் சங்ககாலப் பாடல்களுக்குத் தளமாக அமைந்தன. சிலம்பும் மேகலையும் பெண்ணின் பெருமையை, அவர்களது வேதனையை, ஆவேசத்தை வெளிப்படுத்தியுள்ளன. இப்படி தமிழ் இலக்கிய வரலாற்றில் காலத்திற்கேற்ப, சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் பண்போடு கவிதை உருப்பெறுகின்றது. அது படைக்கப்படுவதற்கேற்பப் பாடுபொருளும் காலத்திற்குக் காலம் மாற்றம் அடைந்து கொண்டே வருகின்றது.

*"மாற்றம் ஒன்றே மாறாதது"*

என்று கவிதை படைக்கும் அளவுக்கு உலகில் எல்லாவற்றிலும் மாற்றம் ஏற்பட்டுக்கொண்டேயிருக்கின்றது.

சமகால இன்பம், துன்பம், பிரச்சினைகளை முன்வைக்கும் இலக்கியங்களே மக்களால் பெரிதும் விரும்பப்படுகின்றன. அவ்வகையில்

புதுக்கவிதைகள் உலகிலுள்ள எல்லா மக்களுடைய மனதையும் கவர்ந்த, கவரும் தன்மை கொண்டவை என்று கூறும் அளவுக்கு நிகழ்காலத்தை மையமிட்டு, விளையாடியும் மன்றாடியும் புதுக்கருத்துச் சிந்தனைகளுடன் சமுதாயத்தில் பிறந்து கொண்டே இருக்கின்றன.

## பெண் படைப்பாளர்கள்

மலேசியத்தமிழ் இலக்கிய வளர்ச்சியில் பெண்களின் பங்களிப்பு குறிப்பிடத்தக்க ஒன்றாகும். புதுக்கவிதைத் துறையில் இன்று ஆளுமை நிரம்பிய பல பெண் படைப்பாளர்கள் உள்ளனர். அவர்களில், வே. இராஜேஸ்வரி, சு.கமலா, சல்மா (தினேஸ்வரி), இராம. சரஸ்வதி, மு.பிரேமலதா, க. பாக்கியம், பாவை, சாருமுரளி, சத்தியா, கோ.பராசக்தி, தோழி, மாதவி பெருமாள், மோகனவள்ளி, தமிழ்ச்செல்வி, மு.ந.சுடர்மதி, பூங்குழலி, யோகி முதலியோர் குறிப்பிடத்தக்க சிறப்பினைப் பெற்றுள்ளனர்.

## பெண்ணியம்

பெண்ணியம் என்பது இன்று உலகமெங்கும் பேசப்பட்டு வருகின்ற ஒன்றாகும். பெண்ணியம் என்பது பெண்களின் முன்னேற்றத்தை விமர்சிப்பதாகும். பெண்ணியம் என்பதற்கு, பிரிட்டானிக்கக் கலைக்களஞ்சியம்,

> பெண்ணின் தனிப்பட்ட குடும்ப வாழ்க்கையிலும் சமுதாய அரசியல் பொருளாதாரச் சூழ்நிலையில் அவள் ஆண் களுக்குச் சமமானவள் எனும் உயர் நெறியை நிலைநாட்டும் நோக்கத்தை கருவாகக் கொண்டு இயங்குவது

என்று பொருள் தருகின்றது.

பொதுவாக, பெண்ணியம் என்பது ஆணுக்கு அடிமையாகியிருப்பது அல்ல. மாறாக, அவர்களுக்கு நிகராகவும் சமமாகவும் இருப்பதை முதன்மைப்படுத்துவதாகும்.

## மெல்லிய மொழியில் மொழிதல்

வன்மைக்கு வன்மையாய் மென்மைக்கு மென்மையாய் வாழ்பவர்களே பெண்கள். அவ்வகையில், தம் மெல்லிய சொற்களால் தன்னினச்சோகம், அடிமைத்தனம், உரிமைகள் இவற்றையெல்லாம் முன்னிலைப்படுத்தித் தங்களின் ஆளுமையை வளர்த்துக் கொள்பவர்களாகப் பெண் படைப்பாளர்கள் விளங்குகின்றனர்.

மெல்லிய மொழிகளால் மறைக்கப்படும் பெண்ணின், அந்தரங்க சோகம், மெல்லிய விரக்தி, பெண் அடிமை முதலியவற்றை,

*காலையில்*
*துவட்டி வீசிய துண்டு*
*இன்னும்*
*அதே இடத்தில் கிடக்கிறது.*
*சுவராணியில் மாட்டத் தவறிய கால்சட்டை*
*வரவேற்பறையில் சிரித்துக் கொண்டிருக்கிறது*
*தெனாவட்டாய்.*
*புரட்டிப் போட்ட நாளிதழ்*
*மீதிக் கோப்பைத் தேநீர் வழக்கம் போல்*
*இவையாவும் காத்திருக்கின்றன.*
*வேலை முடிந்து வீடு திரும்பியதும்*
*நான் சீர்ப்படுத்தி வைக்க*
*உன்னில் நான் சரிபாதி என்றாய்*
*உனக்கும் சேர்த்து*
*நானே சுவாசிக்க வேண்டுமென்கிறபோது!*
*மனத்தாழி யுடைத்தென் நிலைப்பாட்டை*
*ஆராய முற்பட்ட வேளை*
*தோளில் வந்தமர்ந்த*
*பட்டாம் பூச்சி அதன் இயற்கையை*
*மீண்டும் ஒரு முறை இரவல் தந்தது"*

என்ற கவிதையில், கவிஞர் தோழி அவர்கள் மிகச்சிறப்பாகச் சித்திரித்துள்ளார். இஃது இன்றைய சூழலுக்கேற்ப, சமகாலப் பதிவுகளை முன்வைக்கும் கவிஞரின் ஆளுமைத் திறனையும் எதார்த்தமான சொற்களைப் பயன்படுத்திக் கவிதை படைக்கும் ஆற்றலையும் காட்டுவதாய் அமைந்திருக்கின்றது.

## அடிமை வாழ்க்கை

பெண்ணின் வாழ்க்கை ஆண் என்ற பெட்டிக்குள் மூடி மறைக்கப்பட்ட ஒன்றாகவும் அவர்களைச் சார்ந்து வாழும் அடிமைப் பொருளாகவே காலங்காலமாக இருந்து வருகின்றது. தற்காலத்தில் சிறிது இந்த நிலை மாறிக் கொண்டு வருவதாகயிருந்தாலும் முற்றிலும் பெண் சுதந்திரம் இன்னுமே கிடைக்கவில்லை. அவ்வகையில், மரபு வட்டத்திற்குள் மாட்டிக் கொண்ட ஒரு பெண்ணின் அடிமை வாழ்க்கையைப் பற்றி மிகத் தெளிவாகக் கவிஞர் சல்மா (தினேசுவரி) அவர்கள்,

*என் திருமணம்*
*கற்றுக் கொடுத்தது*
*அம்மாவின்*
*மரணங்களைக்*
*கணக்கிட....*
*அம்மாவின்*
*முதல் மரணத்தை*
*உணர்த்தி*
*உலுக்கியது*
*நான்*
*பங்கிட்டுக் கொண்ட*
*கட்டில்தான்!*
*அம்மாவின்*
*மரணங்கள்*
*மேலும் மேலும்*
*கூடிக் கொண்டே*
*போகிறது*
*என் கணக்கில்.*
*என் இரண்டு*
*பிள்ளைகளாகியும்*
*கூட*
*உணர்வு பிழியப்பட்ட*
*துணியாய் அம்மா*
*வீட்டன்னும் கொடியில்*
*உலந்து போய்*
*கிடந்துள்ளதை*
*இன்னொரு கொடியில்*
*காய்ந்தும்*
*உணர்கின்றேன்*

என்ற கவிதையில் மிகத் தெளிவாகவும் ஆழமாகவும் தம் கருத்துகளைத் தெரியப்படுத்தியுள்ளார். காலங்காலமாக பெண் அடக்கியாளப்பட்ட நிலையையும் காட்சிப்படுத்த முடிகின்றது.

ஒரு பெண் வாழ்வாதாரங்களையும் வாழும் உரிமைகளையும் இழந்து தவிக்கும் நேரங்களில், தன் தாயாரின் வாழ்க்கையைப்போல் தன் வாழ்க்கை அமைந்து விட்ட அவல நிலையை உணர்கிறாள். உணர்வு பிழியப்பட்ட பிறப்புக்களான பெண்களின் வாழ்வை, விளிம்பு நிலையில் உற்று நோக்கி,

உயர்த்தியுள்ள கவிஞரின் வெளிப்பாட்டு உத்தியும் எச்சொல்லை எங்குக் கையாளவேண்மென்ற சொல் ஆளுமையும் அறியமுடிகின்றது.

முதிர்கன்னியர்

திருமண வயதைக் கடந்தும், திருமணமாகாமல் இருக்கும் பெண்களை 'முதிர்கன்னியர்' அல்லது 'முதுகன்னியர்' என்று குறிப்பிடு கின்றனர். அழகு என்னும் அளவுகோலால் பெண்கள் மதிக்கப்படுவதாலும் சாதி,மதம் பார்ப்பதனாலும், வரதட்சணைக் கொடுமைகளாலும், சாதகம் பார்ப்பதாலும் பல பெண்களின் வாழ்வில் திருமணம் என்பது நடக்கயியலாத ஒன்றாகவே இருக்கின்றது. இத்தகைய பெண்களின் வாழ்வைப் பற்றி இராம. சரஸ்வதி அவர்கள்,

*கூடியது*
*வயது மட்டுமல்ல*
*வாழ்க்கையில்*
*விரக்தியும் தான்!*
*முள்ளைப் பார்த்து*
*ரோஜாவை வெறுப்பதா?*
*கருப்புக்குள்ளும்*
*உள்ளமுண்டு*
*கத்திரிக்காய்க்கும்*
*பருவமுண்டு*

என்ற கவித்துளிகளால், முதுகன்னியர்களின் ஏக்க உணர்வுகளைப் படம்பிடித்துக் காட்டியுள்ளார். பெண்கள், கருப்பாகப் பிறந்ததே பெருங்குற்றமென்று தாங்கள் நினைத்து வருந்தும் அளவுக்கு இன்றுள்ள, ஆண்களின் மனப்போக்கு இருப்பதைக் காணமுடிகின்றது.

பெற்றோர்க்கு வரமாய்ப் பிறந்த பெண் குழந்தைகள், தமக்குரிய பருவத்தில் திருமணம் நடக்காததால், அதனை எண்ணி வருத்தமுறும் பெற்றோர்களின் அன்பார்ந்த கவலை, அவல நிலையினையும் அறியமுடிகின்றது. மேலும், பெண்கள் சமூகத்திலுள்ள மக்களின் பேச்சுக்கு ஆளாகித் தன்நிலையை எண்ணி ஏங்கும் மனஉணர்வின் மன அழுத்தமும் வெளிப்படுகின்றது.

தமது மௌன மொழியிலேயே, முதிர்கன்னியின் மனவெளிப்பாட்டின் பதிவுகளைக் கவிஞர் தோழி,

*இருண்ட பள்ளத்தாக்கில் இருப்பதாக*
*உணர்கிறாள்*

*பயத்தால் வெளிறிய முகமும்*
*நீர் சுரக்கும் கண்களோடும் காட்சியளிக்கிறாள்*
*வார்த்தைகள் வெளிப்படுத்த முடியாத*
*வெள்ளை இரவுகளை*
*அவள் நிரந்தரமாக நகர்த்துகிறாள்*

என்ற கவிதையில், மையமிட்டுக் கூறியிருப்பதனையும் அறியமுடிகின்றது. முதிர் கன்னியின் இருப்பு நிலையும் இருண்ட எதிர்காலமும் விடியாத இரவுகளைக் கண்ணிருடன் கடந்து செல்லும் போக்கினையும் கவிஞரின் மன மொழிகளால் பதிவுசெய்யப்பட்டுள்ள ஆளுமைத் திறனையும் காணமுடிகின்றது.

*சமூகச் சிந்தனை*

நிகழ்காலப் பிரச்சினைகளை மையமிட்டே பல புதுக்கவிதைகள் நாள்தோறும் தோன்றி வருகின்றன. படைப்பாளர்கள் சமூக அக்கறையுடனும், புதிய சிந்தனைகளோடும், சமகாலப் பிரச்சினைக்குரிய தீர்வுகளையும் தம் படைப்புக்களில் படைத்து வருகின்றனர். அவ்வகையில் பெண் படைப்பாளர் களின் கவிதைகளில் சமூகச் சிந்தனைகள் மேலோங்கி மிளிர்வதைக் காணமுடிகின்றது. இதனை,

*பரபரப்பான கல்யாண வீடு*
*வாழையிலையிலிருந்து வளையல் வரை*
*எல்லாமே பணம்தான்*
*செலவுக்கு இல்லாதபோது*
*கடனுக்குக் கைப் பிசைந்து நிற்கும்*
*பெற்றோர்கள்....!*
*வாய் நிறைய சிரிப்போடு*
*கைக்காசை*
*உண்டியலுக்குச் சொந்தமாக்கி*
*எதிர்காலத்தின் முதல் சேமிப்பு*
*கடன் வாழ்க்கையின் விதிவிலக்கு*
*சின்னஞ்சிறு சிறுவன்...!*
*கடன் சேர்க்கத் தெரிந்த மனிதனுக்குப்*
*பணம் சேமிக்க மட்டும்*
*வழி தெரியாமல் போனது*
*கையேந்தி வாழாமல் இருக்க*
*நேற்றைய சமுதாயத்தின் தவற்றை*
*நாளைய எதிர்காலம் திருத்த வேண்டும்...!*

என்ற கவிதையில் கவிஞர் மோகனவள்ளி அவர்களின் சேமிப்பு குறித்தான எதிர்காலச் சிந்தனையும் கருத்தோட்டமிக்க கவித்துவத்தின் ஆளுமைக் கூறும் வெளிப்படுவதை உணர முடிகின்றது.

இயல்பான சொற்களில் இறுக்கத்துடன் சொல்லும் கவிஞரின் சொல் ஆளுமையும் கடன் தொல்லையால் அவதியுறும் சமூகச் சிக்கலும் வெளிப்படுகின்றன. மேலும், காலந்தோறும் அடையாள அட்டை, பிறப்புச் சான்றிதழ் போன்றவை சமூகச் சிக்கலாய் இருந்தாலும், தற்காலத்தில் உருமாறி வரும் இப்பிரச்சினைகள் தீர்க்கப்பட்டும் வருகின்றன என்பதும் குறிப்பிடத்தக்க ஒன்றாக இருக்கின்றது.

### தமிழ்ப் பள்ளிகள்

தாய்த்தமிழாம் நம்முடைய தமிழ்மொழியைப் பயிற்றுவிக்கும் கல்விச்சாலைகள் இன்று எத்தகு நிலையில் போய்க் கொண்டிருக்கின்றன என்பது அனைவரும் அறிந்த ஒன்றாகும். தமிழ்மொழி, தமிழ் இனத்தின் வாழ்வு நோக்கி, இன்றைய சமூகத்தை எதிர்க்க வல்ல வல்லமை எழுதுகோலின் முனைக்கு மட்டுமே உண்டு என்பதற்கேற்ப, கவிஞர்கள் தமது படைப்புக்களில் தமிழ்மொழி, தமிழ்ப் பள்ளிகள் குறித்தான தற்கால நிலையையும் கருத்துச் சிந்தனைகளையும் சிறப்பாகப் படைத்து வருகின்றனர். இதனை, கவிஞர் பூங்குழலியின்,

*அடுத்த*
*தலைமுறைக்கான சொர்க்கம்*
*பறிபோய் கொண்டிருக்கிறது*

எனும் கவிதையால் அறியமுடிகின்றது. மேலும்,

*இன்றோ...நாளையோ*
*சரிந்து விழ தலைகுனிந்து தள்ளாடி*
*காத்திருக்கின்றன*
*பல தமிழ்ப்பள்ளிகள்*

என்ற கவிதையில், மு. பிரேமலதா தற்காலத் தமிழ்ப் பள்ளிகளின் நிலை, அவற்றின் எதிர்கால வாழ்வு குறித்தான கருத்துகளைப் பதிவு செய்துள்ளார். இஃது இன்றைய சமூகத்தில் தமிழர்களாய்ப் பிறந்த ஒவ்வொரு மனமும் எண்ணிச் சிந்திக்கத்தக்க ஒன்றாக அமைகின்றது.

மொழி உணர்வோடு, இன உணர்வு கலந்த நிகழ்காலத் தமிழ்ப் பள்ளிகளின் போக்குக் குறித்தும் படைப்பாளர் தன்னை விடவும் தன்

தாயை விடவும் தமது மொழியோடு, நாட்டினையும் பெரிதாகப் போற்றி மதிக்க வேண்டும் என்ற எண்ணமும் வெளிப்படுகின்றது.

## இயற்கை

உலகிலுள்ள மக்கள் அனைவரும் தமது மொழி, இன உணர்வுகளால் வேறுபட்டிருந்தாலும், இயற்கை எனும் பொழுது அனைவரும் ஒன்று படுகின்றனர். உலக உயிர்கள் அனைத்திற்கும் தாயாக 'இயற்கையே' விளங்குகின்றது. சிறப்புமிக்க, நடுவு நிலைமையுடன் எக்காலத்திலும் விளங்கிக்கொண்டிருக்கும் அத்தாயினைப் பற்றி,

*பூத்துக் குலுங்கிய மரமொன்று*
*மிச்சமாய் இருக்கிறது*
*வெற்றுக் கிளைகளுடன்.*
*வெட்ட வெளியில் பறந்த*
*பட்டாம் பூச்சியைக்*
*காணவில்லை?*

எனும் கவிதையில் கவிஞர் தோழி எதிர்காலச் சிந்தனையுடன் இயற்கை பற்றிக் கூறியுள்ள விதம் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். தற்காலத்தில் நகரமயமாதலில் இயற்கை அழிந்து வரும் வேதனையான வருத்தமும் வெளிக் கொணரப்பட்டுள்ளது.

இயற்கையழகை இரசித்து, ருசித்து அதிலே கரைந்து விடும் கவிஞர்களின் மனவோட்டத்தினையும் எதையும் அழகுடன் இனிமையாய் நோக்கும் மனோநிலையும் வெளிப்படுகின்றன.

இன்றைய தலைமுறையினர்க்கு இயற்கையைப் பாதுகாத்தல் குறித்தான விழிப்புணர்வுக்கு இது போன்ற கவிதைகள் மற்றும் புதிய புதிய படைப்புக்கள் வெளிவரும்பொழுதே, சிந்தனையைத் தூண்டும். அப்பொழுது, மக்களினம் முழுமையும் உயிர்வாழ இயற்கையை நேசிப்பதோடு சுவாசிக்கவும் செய்வார்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

## ஈழம்

ஓரினமாய் ஒற்றுமையின்மையால் அழிக்கப்பட்டும், அழிந்தும் வருகின்றது நமது ஈழத் தமிழர்களின் வாழ்வு நிலை. கவிஞர்கள் வேறு வேறு நாடாகயிருந்தாலும் தமிழ் உணர்வால் ஈழத்தமிழர்களின் ஏக்கம், துக்கம், இன்பம், வீரம் முதலியவற்றைத் தம் படைப்புக்களில் படம்பிடித்துக் காட்டியுள்ளனர்.

சங்க காலத்தொட்டே தமிழ்ப் பெண்கள் வீரத்தில் சளைத்தவர்கள் அல்ல என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன. தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தில் பெண்களின் பங்களிப்பு, அவர்தம் தியாகங்களைப் பற்றி மு.ந. சுடர்மதி அவர்கள்,

*மானுடத்தை உயர்த்திக் காட்டும்*
*உன் இராணுவச் சீருடை.*
*என் சேலை*
*என்னை உறுத்தியது.*
*தற்கொலைத் தாக்குதல் பயிற்சியால்*
*அகன்ற உன் மார்பில்*
*தழுவி நின்ற ஏ.கே. 47...*
*மறக்க முடியவில்லை*
*மண்ணின் விடுதலைக்காக*
*மாண்டதாய் மானமிக்க செய்தி.*
*சகோதரியே...*
*கற்பனையில் நீதான்*
*கடந்து சென்றாலே*
*கர்வமடைகிறது நெஞ்சம்*

என்ற கவிதையில் குறிப்பிட்டுள்ள விதமும் வெளிப்படுத்தியுள்ள விதமும் சிந்திக்கத் தக்கதாகவும் கவிஞரின் ஆளுமைத் திறனுக்குச் சான்றாகவும் அமைகின்றன.

திருமணமாகி, சில வருடங்களிலேயே வாழ்ந்து முடிந்து, முகம் தொலைக்கும் பெண்களின் மத்தியில், மண்ணில் விதையாய் விழுந்து, விழுதுகளாய் ஒவ்வொரு தமிழ் மனங்களிலும் விளைந்திருக்கும் வீரப் பெண்களின் வாழ்வானது எண்ணி வியந்து மகிழக்கூடிய ஒன்றாக இருப்பதையும் அறியமுடிகின்றது.

### தமிழ் உணர்வே எண்ணம்

தமிழர்கள் இன்று உலகமெங்கும் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் தங்களின் பண்பாட்டுச் சின்னமாக விளங்கக்கூடிய ஆடை, அணிகலன் அணிவதிலும், மஞ்சள், பூ, பொட்டு வைத்துத் தன்னை அழகுபடுத்து வதிலும் இடத்திற்கு இடம், நாட்டிற்கு நாடு வேறுபட்டுள்ளனர். ஆனால் அடிப்படையில், அவர்கள் அனைவரும் தமிழர்களே என்ற உணர்வு இன்றுமட்டுமல்ல என்றுமே அவர்களுக்கு மாறாது என்பதற்குச் சான்றாக,

*ரோஜா வேண்டுமென்றால்*
*முள் குத்தலை எதிர்கொள்ள வேண்டுமே. . .*
*வளர்ச்சிப்பாதையில். . .*
*பண்பாட்டில் பலவும்*
*கலாச்சாரத்தில் கால்வாசியும்*
*காணாமல் போனது*
*ஆனால்*
*கழுத்துக்கு மேல்*
*நாங்கள் எப்பொழுதும்*
*தமிழச்சிகளே..!*

என்ற கவிதையில் வே. இராஜேஸ்வரி மதம், மொழி, இனத்தால் வேறுபட்டிருந்தாலும் அனைவரும் தமிழர்கள் என்ற கருத்தை ஆழமாகவும் அழுத்தமாகவும் பதிவுசெய்துள்ளார்.

மலேசியா, ஈழம் உள்பட அயல் நாடுகளில் வாழும் தமிழர்கள் வெளித்தோற்றத்தில் மாற்றங்கள் பல இருந்தாலும் மனதளவில் அவர்கள் தமிழர்களாகத் தமிழ் உணர்வோடும் இருப்பதைக் காணமுடிகின்றது. தமிழையே உணர்வாகவும் உயிராகவும் அயல் நாடுகளில் உள்ள தமிழ் மக்கள் நினைத்துக் கொண்டிருக்கின்றனர் என்பதற்கு இது போன்ற படைப்புக்களே சான்றாதாரமாக அமைகின்றன.

இவ்வாறாக, நவீனக் கட்டமைப்புகளுடனும் யாதர்த்த தன்மையுடனும் தம் வாழ்வில் பெற்ற அனுபவங்களுடன் பல கருத்துக்களோடும் புதிய சிந்தனைகளோடும் மலேசியத் தமிழ்ப் பெண் படைப்பாளர்கள் புதுக்கவிதைகளைப் படைத்திருப்பது அழகானதாகவும் ஆழமானதாகவும் ஆற்றலோடும் இருக்கின்றதைத் தெரிந்து கொள்ள முடிகின்றது. மேலும்,

*உலக வாழ்க்கையின் நுட்பங்கள் தேரவும்*
*ஓது பற்பல நூல்வகை கற்கவும்*
*இலகு சீருடை நாற்றிசை நாடுகள்*
*யாவுஞ் சென்று புதுமை கொணர்ந்திங்கே..!*
*திலக வாணுதலார்...*
*விலகி வீட்டிலோர் பொந்தில் வளர்வதை*
*வீரப் பெண்கள் விரைவில் ஒழிப்பராம்*

எனப் பாரதி கண்ட புதுமைப் பெண்களாய் மலேசியப் பெண் படைப்பாளர்கள் தொன்று தொட்டு இருந்து வந்துள்ளனர் என்பதற்குச் சான்றாக, எதனையும் மெல்லிய மொழியில் கூறும் தன்மை, அடிமை வாழ்க்கையில் சுதந்திரம் பெற விளையும் எண்ணம், மனமொழிகளால் பதிவுசெய்துள்ள

முதிர்கன்னியரின் வாழ்வு குறித்தான பதிவுகள், அன்றாடம் சமூகத்தில் நிகழும் பிரச்சினைகள் மற்றும் அவற்றுக்கான தீர்வுகள், தமிழ்ப்பள்ளிகளின் தற்கால, எதிர்காலம் குறித்ததான பதிவுகள், இயற்கையை விரும்பும் விருப்பம், அதனைப் பேணத் துடிக்கும் ஆசை, ஈழத் தமிழர்களின் வாழ்வு, அவர்தம் வீரம் பற்றிய பல பதிவுகள் கவிதைச்சான்றுகளுடன் இக்கட்டுரையின் வாயிலாக வெளிக்கொணரப்பட்டுள்ளன.

## துணை நூல்கள்


1. மலேசியத் தமிழ் இலக்கிய வரலாற்றுக் களஞ்சியம் - மா. இராமையா, புரட்சிப் பண்ணைப் பதிப்பகம், 1996.
2. மலேசியத் தமிழ்க் கவிதைக் கருத்தரங்க மலர் - இந்திய ஆய்வியல் துறை, மலாயாப் பல்கலைக்கழகம், உமா பதிப்பகம், 1988.
3. மலேசியத் தமிழ் இலக்கியம் ஓர் அறிமுகம் - மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கம், செல்வம் பதிப்பகம், 2004.
4. மலேசியத் தமிழ் இலக்கியம் 2007 - மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கம்,மித்ரா ஆர்ட்ஸ் ரூ கிரியேஷன்ஸ், 2007.
5. மலேசிய - தமிழக - புதுவை இலக்கிய உறவுப்பயணம் - மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கம், முதற்பதிப்பு, 2012.
6. பாரதியார் கவிதைகள், லியோ புக் பப்ளிஷர்ஸ், 2012.

# புலம் பெயர் இலக்கியங்கள் பார்வையில் மலேசியக் கவிஞர் கே.எஸ். செண்பகவள்ளி

முனைவர் பா.த. கிங்ஸ்டன்
*இளம் கருத்தாளர்*
*இந்திய தேசியப் பணி*
*இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம், மைசூர்*

*முன்னுரை*

புலம்பெயர்ந்த மக்களின் இலக்கியம் என்பது ஒரே விதமான இனக்குழுப் படைப்புகளாகவும், அது அவர்கள் தம் தாய்நாட்டிற்கும், தம் சமூகத்திற்கும் ஏதோ ஒரு செய்தியினை வெளிக்காட்ட விரும்பக் கூடியதாகவும் அமைகிறது. இன மரபும், பெரும் கலாச்சாரத்தையும், ஒடுக்கு முறைகளையும் தாண்டித் தாம் வாழ்தலை இலக்கியங்கள் மூலமாக வெளிப்படுத்துகிறார்கள். உயிர் வாழ்தல், உயரிய வாழ்க்கை இரண்டும் வேறு வேறாகப் பிரிக்கப்பட்டுத் தம் இருப்பை இலக்கியங்கள் மூலம் வெளிப்படுத்தப்படுவதுதான் புலம்பெயர்ந்தவர்களின் படைப்புகளாக காணப்படுகின்றன.

அயல்நாட்டு வாழ்தல் என்பது உடலுக்கும், மனதுக்கும் உள் நிகழ்த்தப்படும் யுத்தம் போன்றதே. அவ்வகையில் தாம் பார்த்த, கேட்ட, நிகழ்ந்த அனைத்தும் அவர்களுக்குப் படைப்புகளாக வெளிப்படுகின்றன எனலாம். புலம்பெயர்ந்த படைப்புகளில் நம் பண்பாட்டு மாற்றம், நடத்தைகள், பிற இனக்குழுக்கள் மற்றும் அந்நாடு சார்ந்த செய்திகளின் உள்ளடக்கமாக இருக்கும். கலாச்சார மாற்றம், மதம், சடங்குகள், சமூக ஆதரவு, பிற கலாச்சாரத்துடன் கலத்தல் ஆகிய நிகழ்வுகள் நிகழ்த்தப்படுகின்றன. அவ்வாறு நிகழ்த்தப்படும் போது அவர்களது படைப்புகளில் புலம்பெயர்ந்த நிலை, பண்பாட்டுக் கலாச்சார இழப்பு, பண்பாட்டு தனித்துவம், பண்பாட்டு ஒருமைப்பாடு இவற்றுடன் அவர்களின் இயற்கை நிலை, உளவியல் நிலை மற்றும் சூழலை வெளிக்கொண்டு வருவதாக அமையும்.

**புலம்பெயர் இலக்கியக் கட்டமைப்பும் - அதன் புரிதலும்**

தமிழ் மொழி, தமிழ் மரபு, தமிழ் வரலாறு என்னும் அனைத்தும் மொழித் தேசம் மற்றும் மொழியினம் என்னும் கோட்பாடுகளினால் கட்டப்பட்டவை. தமிழ் என்பதே அவ்வகையில் ஒரு பண்பாட்டு அடையாளமாகவும், அதன் தொடர்ச்சியாக ஒரு கோட்பாடாகவும் இருந்து நம்மை இயக்கிக் கொண்டிருக்கிறது. இதனைத் தமிழின் நவீன வடிவம்

என்று நாம் புரிந்து கொள்ளும்போது தான் தமிழ் எழுத்து மற்றும் தமிழ் இலக்கியம் என்பவற்றின் கோட்பாட்டு அரசியலையும் நாம் புரிந்து கொள்ள இயலும். புலம் பெயர்ந்தவர்களது படைப்புகள் என்பன அவர்கள் அறிந்த உலகம் மற்றும் சார்ந்து நிற்கும் நிலம் என்று மையப்படுத்தப்பட்டிருக்கும். நுகர்வோர் அம்மையத்திலிருந்து அவர்களது சொல்லாடல், எடுத்துரைப்பு, நிலவியல் வடிவம் ஆகியவற்றைப் புரிந்து கொள்ள வேண்டும். அவ்வாறு நுகர்வோர் உணர்ந்தால்தான் தமிழாக இருந்து தமிழருடன் பேசும் குரல் என்றும் தமிழாக இருந்து உலக அறிவுடன் பேசும் குரல் என்ற புரிதலுடன் புலம்பெயர்ந்த இலக்கியங்கள் நமக்குப் புலப்படும்.

## புலம்பெயர்ந்த நிலை

புலம்பெயர்வு என்பது வேறு நாட்டிற்கோ, வேறு இடத்திற்கோ இருப்பிட மாற்றம் அடைகின்ற ஒன்றாகும். அது நிரந்தரமாகவோ அல்லது தற்காலிகமாகவோ நிகழக் கூடியதாகும். புலம்பெயர்வோர் கூட்டாகவும், தனியாகவும் புலம்பெயர்வார். இதில் கூட்டாகப் புலம்பெயர்ந்தது என்பது போர்கைதியாக, தோட்டத் தொழிலாளர்களாக நிகழ்ந்த ஒன்றாகும். தனியாள் புலம்பெயர்வு என்பது படிப்பு, வேலை போன்ற நிமித்தமாக நிகழக் கூடியதாகும். அவ்வாறு தமிழர்களின் புலம்பெயர்வுகளை நாம் பல்வேறு கோணங்களில் காணலாம். இலங்கையில் நடந்த போரின் காரணமாக இலங்கைத் தமிழர்கள் உலகின் பல நாடுகளில் அகதிகளாகவும் தன்னிச்சையாகவும் குடியேற ஆரம்பித்தனர்.

ஆங்கிலேயர்கள் 150 ஆண்டுகள் நம்மை ஆண்டதில் அவர்கள் ஏவும் வேலைகளைச் செய்யவும் அடிமைகள் தேவைப்பட்டனர். அதில் திறம்பட வேலை செய்தவர்களைத் தம் நாட்டிலேயே வைத்துக் கொண்டனர். தமிழர்கள் சிங்கப்பூர், மலேசியா, கிழக்கிந்திய ஐரோப்பிய நாடுகளில் அதிகமாகக் குடிபெயர்ந்தனர் எனலாம். இவ்வகையான புலம்பெயர்வு பொருளாதாரம், கல்வி, சமூகம் மற்றும் அரசியல் மாற்றங்களால் நிகழ்த்தப்பட்டவையாகும்.

## பண்பாட்டு இழப்பு

சமூக அமைப்பு மற்றும் பண்பாட்டுக் கூறுகளில் மாற்றங்கள் ஏற்படலாம். சுய அடையாளம், தனித்துவம், இழப்புகள் நேரிடலாம். இழப்பு என்பது சமூகம், பண்பாடு மற்றும் பொருளாதாரத்தில் ஏற்படக்கூடியதாக இருத்தல் கூடும். ஆனால் புலம்பெயர்ந்த தமிழ்க் கவிதைகளை வாசிக்கும் போது அவை தம் அடையாளங்களையோ, கலாச்சாரத்தையோ மாற்றும் எண்ணம் படைப்பாளர்கள் அதிகம் பேரிடம் காணப்படுவதில்லை என்பதைக்

கீழ் வரும் பெண்ணைப் பற்றிய கவிதையை ஒரு பெண் கவிஞர் சித்திரித்துள்ளதிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

*ரோஜா வேண்டுமென்றால்*
*முள் குத்தலை எதிர்கொள்ள வேண்டுமே*
*வளர்ச்சிப் பாதையில்*
*பண்பாட்டில் பலவும்*
*கலாச்சாரத்தில் கால்வாசியும்*
*காணாமல் போனது*
*ஆனால்*
*கழுத்துக்கு மேல்*
*நாங்கள் எப்போதும்*
*தமிழச்சிகளே*

*(மலேசிய – தமிழக – புதுவை இலக்கிய உறவுப்பாலம்–2012)*

பெண்கள் பல துறைகளில் உயர்ந்து வருகிறார்கள். பண்பாட்டில் பெண்கள் மாற்றம் பெறாமல் இருக்கின்றனர். 'பழையன கழிதலும் புதியன புகுதலும்' இருந்தாலும் சமய, இலக்கிய, திருமண நிகழ்வுகளுக்குச் செல்லும் பொழுது பாரம்பரிய ஆடையணிந்தும், வேலைக்குச் செல்லும் போது சிறப்பு உடையிலும், கால்சட்டை அணிந்தும் செல்வர். இருப்பினும் நம் பண்பாட்டுச் சின்னமான மஞ்சள், பொட்டு, பூ, ஒற்றைப்பின்னல் போன்றவற்றை அவர்கள் விட்டுவிடவில்லை என்ற புதுக்கவிதை பண்பாட்டை இழக்காததைச் சொல்கிறது.

**மலேசியக் கவிஞர் கே.எஸ். செண்பகவள்ளி ஓர் அறிமுகம்**

*உலக வாழ்க்கையின் நுட்பங்கள் சேரவும்*
*ஓது பற்பல நூல்வகை கற்கவும்*
*இலகு சீருடை நாற்றிசை நாடுகள்*
*யாவஞ் சென்று புதுமை கொணர்ந்திங்கே?*

என்னும் பாரதியின் வழிவந்த கவிஞர் என்று இவரைச் சொல்லலாம்.

எழுத்துத் துறையில் 25 வருடங்கள் அனுபவங்கள் பெற்ற இவர் 1986ஆம் ஆண்டு முதலாக எழுதி வருகிறார். இவரின் முதல் படைப்பு தம் 13வது வயதில் 1986 ஆம் ஆண்டு (மரம்) தமிழ்நேசனுக்கு எழுதிய கவிதையாகும். 1990 ஆம் ஆண்டு முதல் சிறுகதை (தமிழ்நேசன் 70ஆம் ஆண்டு மலர்), 2004 ஆம் ஆண்டு முதலாவது ஆய்வுக்கட்டுரை (அரசியல் பயணத்தில் டத்தோஸ்ரீ சாமிவேலு).

இவர் தற்சமயம் ஈடுபட்டிருக்கும் இலக்கியப் பணிகள்: மக்கள் ஓசை, தமிழ்நேசன், மலேசிய நண்பன், அன்பு இதயம், தமிழ் ஓவியம் போன்ற நாளிதழ், வார, மாத இதழ்களில் சிறுகதை, கவிதை, கட்டுரைகளைப் படைத்து வருகிறார். மலேசியத் தமிழ் எழுத்துலகம், தங்கமீன், திண்ணை ஆகிய இணையத்தளங்களிலும் படைப்புகளை எழுதி வருகிறார். நாட்டின் தேசத்தலைவர்கள், முக்கியமான நாள்களைக் குறித்து ஆய்வுக் கட்டுரைகளும் எழுதி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

மலேசியத் தேசியப் பழஞ்சுவடிக் காப்பகத்தில் பணியாற்றி வரும் இவர் மலேசிய இந்தியர்கள் பெருமைகொள்ளும் மாமனிதர் துன் வீ.தி. சம்பந்தன், மலேசிய - சீனர் சங்கத்தைத் தோற்றுவித்த துன் டான் செங் லோக் ஆகியோரின் நினைவகப் பணிகளின் பொறுப்பாளராக அரும் பணியாற்றி வருகிறார்.

உழைப்புச் சுரண்டல்

இன்றைய மலேய மக்கள் தொகையில் 10 சதவீதம் பேர் தமிழர்களாக இருந்த போதிலும் அவர்கள் அம்மண்ணில் இறங்கி 188 ஆண்டுகள் கழிந்த நிலையிலும் அந்நாட்டின் மொத்த சொத்து மதிப்பில் 1.5 சதவீதம் மட்டுமே அவர்களுக்குரியதாய் இருக்கிறது. புலம்பெயர் தமிழர் என்றதும் வரலாற்று ரீதியாய் உழைப்புச் சுரண்டலுக்கும் ஒடுக்கு முறைக்கும் ஆளான இம்மக்களின் உணர்வுகளைச் செண்பகவள்ளி அவர்களின் “புதுயுகம்” என்ற கவிதை சுட்டிக் காட்டுகின்றது.

*காடுகள் சூழ்ந்த நாட்டை வளமாக்கி,*
*உருமாற்றியவர்கள்*
*இன்று போக்கிடம் இன்றி*
*வெற்றிடமாய்*

தாய்நாடு

கண்டம் விட்டுக் கண்டம் தாவி வந்து விட்டாலும் தம்நாட்டு நடப்புகளை உன்னிப்பாய்க் கவனித்து, தம் பூர்வீகத் தொடர்பை நிலை நிறுத்திக் கொள்ள விரும்புகின்றனர். தம்நாட்டைப் பற்றிய ஞாபகங்கள் பகிர்ந்துகொள்ளப்படுகின்றன. அந்த ஞாபகங்களையும் முன்னைய அனுபவங்களையும் புதிய தலைமுறையாளருக்கு அறிவிக்கின்றார்கள்.

*அன்று அரசமரத்தடியில்*
*அசையாது அமர்ந்திருந்த*

*எல்லை காக்கும் முனீஸ்வரர்*
*பளிங்கு மண்டபத்தில் பாங்குடன் அமர்ந்து*
*முரட்டு மீசையுடன் மிரட்டிக் கொண்டிருக்கிறார்*

என்ற தம் பூர்வீக நாட்டைப் பற்றியும்,

*எதுவும் கடந்து செல்லும் புது யுகத்தில்*
*செம்மண் சாலைப் புழுதியில் தடம்பதித்து*
*குளித்துச் சென்ற வசந்த காலங்கள்*
*மீண்டும் வருமா?*
*ஏங்கி நிற்கின்றன*
*இன்னும் சில உள்ளங்கள்!*

என்று தம் ஏக்கத்தையும் பதிவு செய்கிறார்.

ஆளுமை

ஆளுமை என்பதற்குப் பரந்த பல பொருள் இருப்பினும் சுருங்கக் கூறின் உடல், உள்ளம், மனவெழுச்சி சார்ந்த மொத்த பண்புகளும், அவரது வாழ்க்கை முறை, நம்பிக்கை பழக்க வழக்கங்கள், ஒழுக்கம், நுண்ணறிவு, அனுபவம் அறிவு மனப்பான்மை போன்ற பல்வேறு கூறுகளின் தொகுப்பும் இணைந்ததே ஆளுமை எனப்படும். கவிஞர் செண்பகவள்ளியின் கவிதைகளிலும் இதை நாம் காணலாம்.

*சுகம் துக்கம் இன்பம் துன்பம்*
*எதற்கும் சஞ்சலப்படா மனம்*
*தெளிந்த நீரோடையாய்*
*இலக்கை நோக்கிப் பாய்கிறது!*
*இனி*
*இது தான் எதிர்காலம்*
*எனக் கடவுள் நிர்ணயிக்கப்*
*போவதில்லை*
*என்னை மிஞ்சி*
*எதுவும் நடக்கப்போவதில்லை!*
*என் வாழ்க்கை என் கையில்*
*என்பதை நிர்ணயிப்பது*
*நான் மட்டுமே...*

என்று நிதர்சனமான நிர்ணயம் என்ற கவிதையில் தம் ஆளுமையை வெளிப்படுத்துகிறார்.

முதிர்கன்னி

திருமணம் பெண்ணின் வாழ்க்கையில் இன்றியமையாத இடத்தைப் பெறுகிறது. சிலருக்குத் திருமணம் விரும்பியபடி நடக்கிறது. பலருக்குப் பலவித பிரச்சினைகளுக்கு அடி கோலுகிறது. அவ்வாறு பல்வேறு பிரச்சினைகளுக்கிடையே திருமணம் ஆகாமல் முதிர்கன்னியாகவே வாழும் பெண்களையும் அவர்களின் கனவுகளையும் சுட்டிக் காட்டியுள்ளார்.

*அன்பான கணவன்*
*அழகான குழந்தை*
*கனவுகளில் – முதிர்கன்னி*

முடிவுரை

மலேசியப் பெண் படைப்பாளர்கள் சிறந்த முறையில் இலக்கியத் துறைக்கு வித்தாக அமைந்து வருகின்றனர் என்பதற்கு ஆதாரமாகக் கே.எஸ். செண்பகவள்ளியின் படைப்புகள் பல பண்பாட்டுப் பதிவுகளுடனும் சிறந்து விளங்குகின்றன.

துணை நூல்

1. மலேசிய - தமிழக - புதுவை இலக்கிய உறவுப்பாலம், மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கம், 2012.
2. http:/ Ksvally@facebook.com
3. <mailto:Ksvally@facebook.com>
4. www.Thinnai.com

# மலேசியத் தமிழ்க் கவிதைகளில் பெண் நிலை

முனைவர் ச. சிவகாமி
*பேராசிரியர் (ப.நி.)*
*உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்*
சென்னை

இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளுக்கு அடுத்தபடியாகத் தமிழர் அதிகமாக வாழும் பெருமை கொண்டது மலேசியா. மலேசியத் தமிழ் இலக்கியத்தில் முதலில் தோன்றியது கவிதை இலக்கியம். தான் எழுந்த சமுதாயத்தை எதிரொலிப்பது இலக்கிய படைப்புகளின் பொதுப் பண்பாகும். அவ்வகையில் மலேசியத் தமிழ்க் கவிதைகளில் வெளிப்படும் தமிழ்ப் பெண்களின் நிலையைக் காண்பதாக இக்கட்டுரை அமைகிறது.

## மலேசியத் தமிழ்க் கவிதை - தோற்றமும் வளர்ச்சியும்

மலேசியாவும், சிங்கப்பூரும் இணைந்திருந்த காலகட்டத்தில் 1886இல் சிங்கப்பூரைச் சார்ந்த நாராயணசாமி நாயகன் என்ற இசைப் புலவரால் இயற்றப்பட்ட 'இருந்தும் பயமென்ன' எனும் இசைப்பாடல் முதல் கவிதையாகக் கருதப்படுகிறது. எனினும் ஆறுமுகப் பதிகம் என்ற கவிதைத் தொகுப்பே மலேசியத் தமிழ்க் கவிதை இலக்கியத்தின் முதற் தொகுப்பு என்ற பெருமைக்கு உரியதாக விளங்குகின்றது. இந்நூலை 1887இல் நாகப்பட்டினம் மரு. வெங்கடாசலம் என்பவர் பினாங்கு தண்ணீர்மலை தண்டபாணி மீது பாடியுள்ளார். தொடர்ந்து கவிதை வளம் கொழிக்கிறது. (வி. சபாபதி, மலேசியத் தமிழ்க்கவிதை, அயலகத் தமிழ்... செல்செறிகள், ப. 258).

மரபு வடிவங்களில் அறம் மற்றும் பக்திக்குச் சிறப்பளித்த தொடக்க கால கவிதை 1930இன் பின் மறுமலர்ச்சி காணத் தொடங்கியது. தமிழ் முரசு, முன்னேற்றம், சீர்திருத்தம், தமிழ்நேசன், வானம்பாடி போன்ற இதழ்கள் அவ்வப்போது நடத்தி வரும் கவிதைப் போட்டிகள், கவியரங்குகள், கவிதைக் களம், மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கம் முதலான இயக்கங்கள், சுவாமி இராமதாசர், ஐ. உலகநாதன் முதலான சான்றோர்கள் எனப் பலவித ஊக்கங்களால் இன்று வெற்றிநடை போடுகிறது. தொடக்கத்தில் புதுக்கவிதைக்கு எதிர்ப்பு பலமாக இருந்தாலும் இன்று அது வலுவிழக்க, புதுக்கவிதைப் படைப்பும் வீறு கொண்டுள்ளது. மலேசியத் தமிழ்க் கவிதையின் இலக்கியக் கொள்கையாக,

*இலக்கியங்கள் மிகச் சரியாய் எழுந்து நின்றால்,*
*எதிர்நிற்கும் படைக்கருவி எதுவும் இல்லை;*
*இலக்கியங்கள் இல்லையெனும் நிலைமை வந்தால்*
*எண்ணங்கள் தெளிவு பெற வழிகள் இல்லை;*
*இலக்கியங்கள் உலகத்தை வழி நடத்தும்*
*இதயத்தைப் பண்புகளால் கனிய வைக்கும்;*
*இலக்கியங்கள் வழிகட்கு வெளிச்ச மாகும்;*
*எழுதுகோல் அதனாலே தெய்வ மாகும்!* (ப. 776)

எனும் பரணனின் கவிதையைச் சுட்டலாம்.

ஒரு சமுதாயத்திலிருந்து அச்சமுதாயத்திற்காக, அதனைப் பிரதிபலிப்பதாக எழுவது இலக்கியமாதலின் குறிப்பிட்ட சமுதாயம் பற்றிய அறிதலுக்கு இலக்கியங்கள் பெரிதும் துணையாகின்றன. அவ்வகையில் மலேசியத் தமிழ்க் கவிதைகளில் பெண் நிலை காண்பது இயல்பாகிறது.

## பெண் நிலை

ஆணும் பெண்ணும் இணைந்த மனித சமூகத்தில் பெண் பற்றிய சிந்தனைகள் பெற்ற மதிப்பீடுகள், பெண்ணின் தகுதிகள், கடமைகள், பங்களிப்புகள் என்பன அவளின் இருப்பினை உணர்த்துகின்றன. இவை இணைந்த நிலையில் உருவாகும் முழுமையே பெண் நிலையாகக் கருதப்படுகிறது. பொதுவாகப் பெண்ணின் வாழ்வியலைப் பெண் நிலையாகக் கொள்ளலாம். 'மலேசியத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம் நூலைக் களமாகக் கொண்டு இக்கட்டுரை அமைகிறது.

## பெண் பற்றிய சிந்தனைகள்

மரபு நிலையிலிருந்து மாறாத பெண்மையே இங்கு மிகுதியாகக் காணப்படுகிறது. 'பெண்ணுக்குப் பெருஞ் சொத்து கணவன் தானே' என்பதில் பெருமை கொள்ளும் பெண்,

*பொருள் வேண்டும்; அது வாழ்வைக் காத்தல் வேண்டும்*
*புகழ் வேண்டும்; அது இன்பம் புரத்தல் வேண்டும்!*
*அருள் வேண்டும்; இத்தனைக்கும் அகத்தில் நல்ல*
*அறிவாளன் துணை வேண்டும்* (ப. 499)

எனப் பொருள்வயின் பிரிந்த கணவனை எண்ணி வாடும் கூற்று கருதற்பாலது. பெண் அறம், பொருள், இன்பம் எனும் முப்பொருளும் பெற ஆண் துணை தேவை என்று அவள் ஆணுக்குள் அடக்கமாவது இங்கு

உணர்த்தப்பட்டுள்ளது. அதனைப் பெண் பெருமையாக ஏற்றுக் கொள்வதும் நோக்கத்தக்கது.

ஏ. நீலகண்டனின் 'இடும்பை தவிர்க்கும் குடும்ப விளக்கு' (பக். 387-389) என்னும் நீண்ட கவிதை ஒரு பெண்ணின் ஓய்வற்ற அன்றாடப் பணிகளை அடுக்குகிறது. இல்லப் பணியையும் பொருள் வரவுக்காகத் தோட்டப் பணியையும் ஒருங்கே நிறைவேற்றி,

*தையல் இருந்திடுவாள் தன்னாளன் வரவெண்ணி!*
*ஆளன் வரவுகண்டே அகமலர்ந்து அணங்கவளும்*
*பாலின் சுவையெனவே பாங்குற மொழி பேசி*
*வட்டிகையில் உணவெடுத்து வகையாகத் தானளித்து*
*இட்டே உவகையுடன் எதிரிருந்து சேவை செய்வாள்*
*செய்யுமிவள் பணிக்குச் செகத்தினில் ஏதுவமை?*
*பொய்யல்ல இதுபோல் குடும்பம் பலவுண்டு*
*மெய்யாகச் சொல்லவெனின் மேதினியில் கண்ணகிகள்*
*ஐய பலருண்டு! யாரறிந்தார் அவர் பெருமை?*
*தோட்டப்புறப் பெண்கள் தொழுகைக்கும் ஏற்றவரே!*
*வீட்டினையே உலகமென வேள்வி செய்கின்றார்கள்*
*பாட்டில் அடங்குவதோ பொன்மகளிர் தம் பெருமை?*
*வீட்டின் சுடர் வாழ்த்துவாம்*

எனும் இக்கவிதை பாரதிதாசனின் குடும்ப விளக்கைச் சுருக்கி யுரைத்துள்ளது.

கணவனுக்குத் தொண்டு செய்து கண்ணகியாய் வாழ்வதே அவளின் பெருமைக்குரிய பண்பாக, 1967இல் எழுந்த இக்கவிதை பேசுகிறது. 'பெருமையெலாம் பேணுபவள் மனைவி தானே' என்று (வரல் வேண்டும் நீ இங்கே, ப. 499) புங்கை புகழேந்தியும் இதனை வழிமொழிந்துள்ளார்.

பெண்ணின் பிறப்பும் வளர்ப்பும் பெரும் சுமையாகக் கருதப்பட்டதை மு.வீ. சுமதி 'சுழன்று வரும் துன்பம்' (பக். 592 - 593) எனும் கவிதையில் காட்டியுள்ளார். 'வறுமையிலும் பெண் கற்புநிலை தவறாது வாழ வேண்டும்' எனப் (ப. 409) பெண்ணின் ஒழுக்க நெறியும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஆடவரின் ஒழுக்கக் கேட்டிற்குப் பெண்ணின் உடையலங்காரத்தைக் காரணமாக்கிக் குறை கூறுவதும் அவளுக்கான உடைக்கும் இலக்கணம் வரைந்துள்ளதும் (மடிதெரியச் சேலை கட்டி.... ப, 378, பொழியாத மேகங்கள், ப. 411, பொன்னாடையின் புலம்பல் 418-419) கூறத்தக்கது.

பெண்ணை ஆணின் போகப் பொருளாகக் காணும் காம உள்ளத்தை மெ. இளமாறனின் 'சீனக் கிளிகாள்' (ப. 506) கவிதை வெளிப்படுத்துகிறது. சா.ஆ. அன்பானந்தன் 'புறப்படு இளைஞனே' எனும் பாடலில் (ப. 433) 'இடைச்சிறு மாதரின் எழில்வலை அறுத்திடு' என நவின்றிருப்பதும் இதனை உணர்த்துகிறது. காரைக்கிழாரின் 'இடைப்பத்தும்' (ப. 478-479) இவண் கூறத்தக்கது.

இதற்கு மாறாகப் பெண்மையின் கைம்மைக்கு இரங்கி மறுமணம் காணத் துடிக்கும் நல்லுள்ளத்தையும் காண முடிகிறது.

*களிக்கின்ற மனமேற்றுச் சிரிக்கின்ற முகமாக்கக்*
*கைமஞ்சள் ஈவாரில்லை! ஒற்றைக்*
*கண்ணாலே வலைவீசிப் பொன்மேனி மேய்கின்ற*
*காளையர்க்கோ பஞ்சமில்லை! தேனை*
*அளிக்கின்ற தளிர்மேனி பெற்றுள்ள கனியின்று*
*அவலமாய்ப் போகும்போது நாளும்*
*அழுகாத நிலைபேணி ஒரு தாலி அவட்குஇட்டே*
*அணைக்கின்ற இளைஞன் இல்லை* (ப. 381)

என உருகும் கோ.தொ. இராவணன் கவிதை 1976இல் எழுதப்பட்டது. இது பிறரையும் சிந்திக்கத் தூண்டி, தொடர்ந்த காலத்தே நற்பயன் விளைவித்திருக்கும் என நம்பலாம்.

## பெண் பெற்ற மதிப்பு

ஆணை உயர்வாக எண்ணும் சமுதாயத்தில் பெண்ணை மதித்தல் என்பது கிடைத்தற்கரிய பெருமையாகும். இது, ஒரு பெண் 'தாய்' என்ற தகுதியைப் பெற்றவுடன் அளிக்கப்படுகிறது. தாய்மையைப் போற்றும் பல பாடல்கள் இங்குக் காணப்படுகின்றன. சான்றாகச் சோம சன்மாவின் 'தாய்க்குலம் வாழ்க' (ப. 590) கவிதையைக் காட்டலாம்.

*கழுத்தினைக் கட்டி இல்லக்கிழத்தியாய் ஆன பின்பு*
*பழுத்தநற் கனிகள் போன்ற பச்சிளம் மக்கள் ஈன்று*
*வளர்த்திடில் பாரில்தாயின் வாட்டமே ஓடும் என்றார்!*
*வளர்த்ததும் மக்கள் தாயை மறந்து எங்கோ மறைதல் ஏனோ?*
*(ஏனோ?, ப. 375)*

என முதுமையில் தாயைப் புறக்கணிக்காது புரத்தல் வேண்டும் என இளையோருக்கு அறிவுறுத்தலும் சுட்டத்தக்கது. வழி தவறிச் செல்லும் மகனைத் திருத்துதற்குரிய உத்தியாகவும் தாய்மை பயன்கொள்ளப் பட்டுள்ளது. இரா. சண்முகத்தின்,

*வாய்ச்சுவைக்கு மது வருந்திக் களிப்ப தன்றி*
*வளர்சுவைக்கும் அதுவருந்திக் கெட்டார்; நம்நல்*
*தாய்மனத்தில் பெரும்பாரம்! தமிழா கெட்ட*
*சம்சுக்காய்ப் பலர் சாதல் சரிதானாமோ?*
*(சம்சுக்காய் – கள்ளச்சாராயம், ப. 455)*

எனும் 'விழித்துக் கொள் கவிதை சான்றாகும்.

சிறு பருவத்தினருக்கான பாடல்கள் பல. ஆண் ,பெண் வேறு பாடின்றிப் பொது நிலையில் அமையினும் ஆண்மகனை முன்னிறுத்து வனவும் விரவிக் கிடக்கின்றன. எறும்புப் பையனும் (ப. 671); பள்ளி வாழ்க்கை (ப. 672); வாழ்ந்து காட்டும் தம்பி (ப. 673); தகுதியை வளர்த்துக் கொள் (ப. 678) என்பன எடுத்துக்காட்டுகள். இவையும் மானுட மதிப்பீட்டில் ஆண் என்னும் பெண் பின்னுமாக உள்ளதை உணர்த்துகின்றன. மற்றும் பிறப்பு முதலே இது தொடங்கி விடுவது மலேசியாவிலும் தொடர்வதில் வியப்பில்லை.

## பெண்ணின் பொறுப்புகள் / கடமைகள்

இல்லப் பொறுப்பே பெண்ணின் கடமையாக அறிய வருகிறது. 'முடிச்சை அவிழ்த்தே மனைவி கொடுத்த முழு ஒரு வெள்ளி இருக்குன்னு' (நாலு நம்பர், ப. 757) என்பதன் வழி இல்லப் பொருளாதாரத்தைச் செயல்படுத்துபவளாகப் பெண் அமைவதைக் காணலாம். இல்லத் தேவைகளை நிறைவு செய்வதற்காகத் தேயிலை மற்றும் ரப்பர் தோட்டங்களுக்குப் பணியாற்றச் செல்வது பெருவழக்காகக் காணப்படுகிறது.

*செங்கதிர் கொண்ட சூரியனும்*
*சோர்வினைத் தந்திடும் முன்பாக*
*மங்கையர் செங்கையால் கொய்தெடுக்க*
*முனைந்திடுவார் பசுங் காட்டுக்குள்ளே*
*தங்கையர் சூழப் பனித்துளிகள்*
*தாவியே பாய்ந்திடும் புல்தரையில்*
*அங்கும் இங்குமாய் இலை பறித்தே*
*அன்புடன் பேசி மகிழ்ந்திடுவார் (ப. 754)*

எனத் தேயிலைத் தோட்டத்தில் பணிபுரியும் பெண்கள் காட்சிப்படுத்தப் பட்டுள்ளனர். இங்ஙனம் தோட்டப் பணிகளில், குறிப்பாக ரப்பர் தோட்டத்தில் பணியாற்றும் பெண்கள் பாலியல் வன்கொடுமைகளுக்கு ஆளாகி அல்லல் உறுவதையும் இக்கவிதைகள் பதிவுச் செய்துள்ளன (மூடிவச்சிக் கழுத்தறுத்தான், ப. 339). அடிமையின் அவல வாழ்வே இப்பணியிடங்களில்

அவர்களுக்கு நிரந்தரமாயிற்று என்பதையும் பல பாடல்கள் புலப்படுத்துகின்றன.

*பாலுமரம் வெட்டலான்னு பழய கப்பல் ஏறிவந்தேன்*
*நாப்பத்தஞ்சி காசப் போட்டு நட்டெலும்ப முறிக்கிறானே!*
*முப்பத்தஞ்சி காசப் போட்டு மூட்டெலும்ப முறிக்கிறானே!*
*(மூட்டெலும்பை முறிக்கிறானே, ப. 336)*

எனக் கண்ட கனவு பொய்யாகப் போக, நிகழ்காலம் நெஞ்சைக் கலக்குவதாய் அமைந்து அச்சமூட்டுகிறது. இங்கே பாரதியாரின் 'கரும்புத் தோட்டத்தினிலே' கவிதையை நினைவு கூரலாம். தற்பொழுது இவ் அவலநிலை பெருமளவு மாறியிருத்தற் கூடும்.

தோட்டத்துப் பணிக்குச் செல்லும் பெண்களின் கைக் குழந்தைகளைப் பாதுகாப்பதற்குத் தோட்டத்து நிருவாகம் மூதாட்டியரைப் பணியில் அமர்ந்திருப்பது சுட்டத்தக்கது. இதனை,

*வெள்ளி முளைக்குமுன் விழிமலர்ந்த தோட்டமகள்*
*வெள்ளை மனத்தழகி வேல்மறவர் குலக்கொழுந்து*
*மெல்லக் குழந்தைகளை மேற்பார்க்கும் அடிமையிடம்*
*துள்ளி எடுத்தேகித் தேர்வு சொல்லி விட்டதற்பின்*
*வாளி உளியுடன் வாய்சிவக்கும் வெற்றிலையும்*
*தோழியர் சூழத் தொழில் செய்யுமிடம் நோக்கி...*
*(இடும்பை தவிர்க்கும் குடும்ப விளக்கு, ப. 387)*

என்பது காட்டுகின்றது. தோட்ட முதலாளிகளின் நன்மையை முதல் இலக்காகக் கொண்ட போதிலும் இவ் ஏற்பாடு பாராட்டத்தக்கதாகும்.

எதிர் குரல்

பெண்மையை இழித்துரைக்கும் கூற்றுகளுக்கும், உயர்விற்குத் தடையாக நிற்பனவற்றிற்கும் எதிரான குரல்களையும் மலேசியத் தமிழ்க்கவிதை பதிவு செய்துள்ளது. "தோணுகின்ற கவர்ச்சி யெல்லாம் பொம்பளக்கிட்டே - ஆனா தோற்றுப் போவா வாதம் செய்தா ஆம்பளைக் கிட்டே" என்ற கவிதையைக் கண்ட மாலிக் பேகம் பொங்கியெழுந்து படைத்த 'ஜாக்கிரதை எனும் கவிதை இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். இது 1968இல் வெளிவந்ததும் அறியத்தக்கது.

*துறவியைப் போல் முடி வளர்த்துக் கொண்டு திரிவதும்*
*துரைகளைப் போல் 'சிகரெட் துண்டை வீசி எறுவதும்*

*நிறையழகு என்று யாரும் சொல்வதே இல்லை – ஏதும்*
*நீணிலத்தில் பெண்ணழகை வெல்வதே இல்லை(ப. 380)*

என்பது அந்த நீண்ட கவிதையின் ஒரு பகுதி சினமாகும்.

கிடைக்கும் தரவுகள் சிலவே ஆயினும் அவை வரதட்சிணைக்கு எதிரானவையாக அமைதல் கூறத்தக்கது. அவற்றுள் சீ. மோகனேசுவரியின் கவிதை குறிப்பிடத்தக்கதாகும்.

*முதுகெலும்பில்லா ஆண்கள் முழுதும் அறிந்திருந்தும்*
*அது இது என்று கேட்டே அரிவையர் தமை மணக்கும்*
*புதுவித உலகம் கண்டோம்; புன்மையே அன்றி ஏதும்*
*இதனிலே சிறப்பும் உண்டோ? இறைவனே இது யார் கூத்து?*
*வாட்டம் நன்முகங்கள் காட்ட வஞ்சியர் துயரத்தோடு*
*வீட்டினில் இருந்து வாடும் விதியினை மாற்றுதற்காய்*
*ஏட்டினில் புரட்சியென்று எழுதிடும் கவிஞர் கூடக்*
*கேட்கிறார் சீதனத்தைக் கேவலம்! இதுவோர் வாழ்வா?*
*(சீதனம், 381)*

வரதட்சணை பெறுவோரை மட்டுமின்றி, இவர் பெறுவோரையும்,

*ஆணினை விலைக்கு வாங்கும் அரிவையர் உள்ள மட்டும்*
*நானிலம் உயர்வதில்லை நலிவுதான் மிச்சமாகும்;*
*வீணிலே நூறுபத்தாய் விலையினைப் பேசிப் பேசிக்*
*காணிகள் வீடு தோட்டம் காளையர்க்கு அளித்தல் நன்ரோ?*
*(ப. 380)*

என இக் கவிதையில் கண்டித்துள்ளது பாராட்டத்தக்கதாம்.

*ஆடவரும் இதற்கு எதிர்ப்புக் காட்டிப் பாடியுள்ளதை,*
*"பெண் கூடச் சந்தைப் பொருளென்றால் – இங்குப்*
*பெண்மைக்கு என்ன பொருள் கண்டார்?"*
*(கனியாத தனியாள், ப. 489)*

எனும் சபா. இராசி கவிதை தருகிறது.

இவ்வரதட்சணை காரணமாகப் பெண்ணின் திருமணம் தடைபடுவதையும், அதன் காரணமாக அவர் வாழ்வு பெருந்துன்பத்திற்கு இடனாவதும் அருண் சோம சன்மா கவிதையில்,

*ஊருக்குள் தினம் நடக்கும் உளமகிழும் திருமணத்தைப்*
*பேருக்கு வாழ்த்தி நாங்கள் பெருமூச்சால் ஏங்குவதை*

*ஆருக்கும் தெரியாமல் அணங்குபலர் கலங்குவதைப்*
*பாருக்குள் ஒரு பயலும் பார்த்ததாய்த் தெரியவில்லை*
*(கன்னியரின் கலக்கம், ப. 494)*

என எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

காதல் திருமணத்திற்கும் (எவனடா யோக்கியன், பக். 394-396); கலப்புத் திருமணத்திற்கும் (தீர்ப்பு, பக். 390-391), ஆதரவளித்தலும், கைம்மைக்கு எதிர்ப்புத் தெரிவித்து மறுமணம் வேண்டுதலும் (கைம்பெண் - 381) இங்கு இணைத்து நோக்கத்தக்கனவாம்.

### பெண்ணியப் பார்வையில்...

ஆணாதிக்கத்திலிருந்து பெண்ணுக்கு விடுதலை; ஆணுக்குச் சமமான உரிமை; தேவையற்ற ஒரு பக்கச் சார்பான கட்டுப்பாடுகளுக்கு எதிர்ப்பு முதலானவற்றின் அடிப்படையில் பெண் முன்னேற்றத்தை வலியுறுத்துவது பெண்ணியச் சிந்தனையாகும். இது பற்றிய விழிப்புணர்வைப் பெண்களிடையே தூண்டுவதும் இதன் அடிப்படை இலக்காகும். இப்பெண்ணியப் பார்வையில் மலேசியத் தமிழர் கவிதைகளை அணுகுவதும் தேவையாகும்.

களமாக ஏற்கப்பட்டுள்ள நூலுள் 256 கவிஞர்களின் 650 கவிதைகள் உள்ளன. இதில் பதினேழு பேர் பெண் கவிஞர்களாக, அவர்களின் பதினெட்டுப் பாடல்கள் மட்டுமே இடம் பெற்றுள்ளன. 7 விழுக்காட்டிற்கும் குறைவான அளவிலேயே பெண் கவிஞர் இருப்பது நோக்கத்தக்கது.

இவர்களுள் ஐ. இலட்சுமி (தோட்டத்து மக்கள் துயர்), உஷா நாயர் (தமிழ் மணக்க), சிங்கை- சாந்தி (ஆணவம் மாளவில்லை), சீ. மலர் மாணிக்கம் (மீண்டும் பல கென்னடிகள் தோன்றட்டும்), மோகனேசுவரி (சீதனம்), விமலா தேவி (கானலைத் தேடி) ஆகியோர் கவிதைகளில் சமூக மேம்பாட்டு அக்கறை இழையோடுவது பாராட்டத்தக்கது. ந. மகேசுவரி (பறவைகள் போல...), மலைமதி சந்திரசேகரன் (பாவந்தீரச் சிரிப்பானா?) ஆகியோர் சிறுவர் இலக்கியப் படைப்பாளராக இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

தமது கவிதையில், பெண் கல்வியை வலியுறுத்தியுள்ள உஷா நாயர்,

*உணவளித்த உள்ளங்கள் நோகவல்ல*
*உப்பற்ற குப்பைகளைக் கன்னி கற்றாள்!*
*கனவளித்த வளவாழ்வு கானல் ஆகக்*
*கன்னியவள் கற்பனையால் மாசு பெற்றாள்*
*நினைவளித்த நெறிபிழையால் நேர்மை இன்றி*
*நினைப்பின் வழிச் சென்றிடவா கல்வி கற்றாள்?*

*தனையளித்த தாய்குலத்துத் தன்மை மீறித்*
*தரமற்றுச் செயல்புரியத் திண்மையுற்றாள்*
*(தமிழ் மணக்க, ப. 312)*

என்று மொழிவதன் பின்னணி புரியவில்லை. 'தமிழ் மணக்க எனும் தலைப்பை நோக்கும் பொழுது ஒருவேளை, கற்ற பெண்கள் மேனாட்டு நாகரிகத்தைப் பின்பற்ற அதனை எதிர்க்கிறாரோ என எண்ணத் தோன்றுகிறது.

சமூக விழிப்புணர்வுக் கவிதைகளில் விமலா தேவியின் 'கானலைத் தேடி' முதன்மைச் சிறப்புறுகிறது. கஞ்சா அருந்துவதைத் தன் மேலேற்றி அதன் விளைவுகளை,

*வலிவை இழந்தது கண்ணொளிதான்*
*வயிற்றை மேய்ந்ததோ பெரும்பசி தான்*
*எலும்புக் கூடாய் ஆகிவிட்டேன்*
*ஏற்ற தண்டனை அடைந்துவிட்டேன்*

எனக் காட்டி இளைஞர் உலகிற்கு, 'அலைக்கும் கானலை நாடாதீர்! அறநெறி போற்றி வாழ்ந்திடுவீர்' (ப. 426) என அறிவுறுத்துகிறார்.

மாலிக் பேகத்தின் 'ஜாக்கிரதை' கவிதை ஆணின் ஆணவத்திற்கு எதிராக எழுந்ததாயினும் போற்றத்தக்கதாயில்லை. அது ஆண் தன்னை அழகுபடுத்துக் கொள்வதை எள்ளுவதாக இருக்கிறதே அன்றி, 'தோற்றுப் போவா வாதம் செய்தா ஆம்பளைக் கிட்டே என்ற ஆணவக் குரலுக்குப் பதிலில்லை. ஆயின் சீ. மோனேசுவரியின் வரதட்சணை கொடுப்பதையும் வாங்குவதையும் எதிர்க்கும் 'சீதனம் சிந்திக்கத்தக்கதாகும்.

பெண்களின் முன்மாதிரியாகக் கண்ணகி சுட்டப்படுவதும் (இடும்பை தவிர்க்கம் குடும்ப விளக்கு) அதைப் பெண்கள் ஏற்றுக் கொள்வதும் (ஜாக்கிரதை) எண்ணற்பாலது. பெண் விடுதலை, பெண் உரிமை குறித்த போதுமான விழிப்புணர்வு மலேசியத் தமிழ்ப் பெண்களிடம் இல்லையோ எனத் தோன்றுகிறது.

இலக்கிய நயம்மிகு கவிதைப் படைப்பில் பெண் கவிஞரில் கல்யாணி வேலுவின், 'உயர்ந்தார் மாட்டே உலகு' (ப. 720) எனும் பத்து விளையாட்டு பற்றிய கவிதை சிறப்பாகும்.

நிறைவுரை

மலேசிய பெண் நிலையைக் கிடைத்த சில கவிதைகள் கொண்டு அணுகும் பொழுது, பெண்ணுரிமை, பெண் விடுதலை, பெண் முன்னேற்றம்

என்பன பற்றிய போதுமான விழிப்புணர்வு காணக் கிடைக்கவில்லை. நூல் தொகுப்பின் காலகட்டம் (1887-1987) கடந்து 25 ஆண்டுகள் கழிந்த நிலையில் இந்நிலை மாறியிருத்தல் கூடும்; மாற வேண்டும் என்பது கட்டுரையாளரின் பேரவா.

## துணை நூல்கள்


1. அயலகத் தமிழ்க்கலை, இலக்கியம் - சமகாலச் செல்நெறிகள், ந. கடிகாசலம், ச. சிவகாமி (பதி); உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை, 2001.
2. மலேசியத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம், முரசு. நெடுமாறன் (தொகு), அருள் மதியம் பதிப்பகம், மலேசியா, 1997.

# மலேசியத் தமிழ்ச் சமுதாயச் சீர்திருத்த நோக்கில் ந. பச்சைபாலன் கவிதைகள்

திரு. மு. சுகந்தி
*முனைவர் பட்ட ஆய்வாளர்*
*தமிழ்த் துறை*
*என்.ஜி.எம். கல்லூரி*
*பொள்ளாச்சி*

மலேசியத் தமிழ் இலக்கியத்தின் முதல் இலக்கிய வடிவம் மரபுக் கவிதை. இக் கவிதைக்கு மாற்று வடிவமாகத் தோன்றியதே புதுக்கவிதை. தமிழ்ப் புதுக்கவிதைகள் வளர்ச்சியடைந்த சூழலில் அதன் தாக்கத்தால் தன் தோற்றத்தை எடுத்தது மலேசியத் தமிழ்ப் புதுக்கவிதை. மரபுக்கவிஞர்களின் எதிர்ப்பைப் போராடி வெற்றி பெற்றது. மரபுக்கவிஞர்கள் சிலரும் புதுக்கவிதையின்பால் ஈர்ப்படைந்து எழுத முன்வருமளவு இலக்கிய உலகில்; தன் புத்திலக்கிய வடிவில் வெற்றியும் வளர்ச்சியும் பெற்றது. இதழ்களில் தொடக்கம் கொண்டு தோன்றி, கவிஞர்களின் ஆதரவுடன் வளர்ந்து, கருத்தரங்குகள் பரிசுப்போட்டிகளின் மூலம் மறுவாழ்வைப் பெற்றது. தற்காலம் சமூகக் கூறுகள், இயற்கை உட்பட பல்வேறு கருப்பொருளை எடுத்துரைக்கும் புதுக்கவிஞர்கள் சுறுசுறுப்பாக இயங்கும் காலகட்டமாகத் தோற்றம் கொண்டுள்ளது. பல்வகை உணர்வுகளையும் வெளிப்படுத்த ஏற்ற வடிவமாக இருப்பதனால் ஒவ்வொரு நாளும் பலப் புதுக்கவிஞர்கள் தோன்றி வளர்ச்சிக்கு வித்திட்டு வருவதனைக் காணமுடிகிறது. இவ்வரிசையில் ந. பச்சை பாலனின் "என் கனவுகளும் கொஞ்சம் கவிதைகளும்" என்ற கவிதைத் தொகுப்பின் வழி மலேசியத் தமிழ்ச் சமுதாயத்தின் சூழலை வெளிப்படுத்தி எத்தகைய சீர்திருத்தங்களைக் காண விரும்புகிறார் என்பதனை ஆய்வதே இக் கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

## தமிழினப் பற்று வெளிப்படல்

இனப்பற்று மக்கள் அனைவருக்கும் இயல்பாய் அமைந்துள்ள உணர்வு. இலக்கியவாதிகள் தம் இனத்தின் நிலையைப் படைப்புகளின் வழி, வெளிப்படுத்தும் கடமையும் ஆற்றலும் உடையவர்கள். இங்கு மலேசியத் தமிழ் இனத்தின் ஒரு நூற்றாண்டுக் கால நிலையை

*எங்கள் போதாத காலங்கள்*
*போய்த் தொலையட்டும்*

*நீ போய் வா!*

.................................

*மறவாமல் உடனழைத்துப் போ!*
*இதோ எங்களின்*
*கல்லாமை*
*அறியாமை*
*இயலாமை*
*முயலாமை*

.................................

*தமிழ்மகன் ஒருவன் பொங்கி வருகிறான்*
*நீ போய் வா!* (போய் வா நூற்றாண்டே, பக். 30,33)

எந்த வெற்றியையும் பெறாமல் சோம்பேறியாக அடிமை எண்ணம் கொண்டு கேளிக்கைகளில் மகிழ்ந்து கெட்டழிந்ததைச் சுட்டிக்காட்டி, இனி வீரம் கொண்டு எழ வேகம் ஊட்டி, தம் இன மக்களின் வளர்ச்சியை விரும்புகிறார்.

*ஒரு நூற்றாண்டாய்*
*நகராமல் நங்கூரமிட்ட*
*அந்த*
*நசிந்த வாழ்க்கைதான்*
*அவ்வப்போது எனக்கு*
*அனுப்பிக் கொண்டே இருக்கிறது*
*கனவுகளையும்.......*
*கற்பனைகளையும்.......* (என் கற்பனையின் கஜானா, ப. 47)

என்று, மகிழ்ச்சியான தோட்டத்து வாழ்வின் இயற்கை, இனம், உறவுகள், பண்பாட்டை எண்ணிப் பார்ப்பதில் மனம் இனிமையான நினைவில் மூழ்கிக் கவிதை முத்தெடுக்கும் மகத்துவம் நிகழ்கிறது. சிறுவயது நினைவுகள் என்றும் நிலைத்து நின்று படைப்பின் வளர்ச்சிக்கு வழிவகுக்கின்றன என்பதை உணர்த்துகிறார்.

*வன்முறைக் கலாச்சாரத்தில்*
*வழுக்கி விழுந்தவர்களுக்கு*

.................................................

*காய்ந்துபோய்க் கிடக்கும்*
*அவர்களின் இதயம் எனும்*
*இறைச்சித் துண்டை*
*இனமான உணர்வால்*
*ஈரமாக்குவோம்!* (ஒரு தீபாவளிப் பிரகடனம், பக். 111, 112)

பண்பாடு மறந்து பயனற்ற கொண்டாட்டங்களில் ஈடுபட்டு, விழாக் கொண்டாடும் உணர்ச்சியற்ற மக்களின் அவல நிலையை மாற்ற, இனமான உணர்வை ஊட்டி நல்லிப்படுத்த எண்ணும் பண்பாட்டு விரும்பியாகக் கவிஞர் ஆதங்கம் கொள்கிறார்.

*எதிர்காலம் தேடும்*
*பொருள் யாத்திரை*

*..................................................*

*தோட்டப்புறத் தோழர்களே!*
*கலையுங்கள்*
*ஒரு நீள நித்திரை*
*தொடங்குங்கள்*
*ஒரு பாத யாத்திரை (விடியலை யாசிக்கும் விழிகளே, பக். 128, 130)*

தம் இனத் தோட்டத் தமிழர்கள் அற்ப வசதிகளைப் பெரிதாக எண்ணும் அறியாமை நீங்கித் தோட்டத்தை விட்டு வெளியேறி எதிர்கால வாழ்வுயர விழிப்புணர்வடைய விரும்புகிறார்.

*மலையளவு தமிழுணர்வு*
*மலையகத்தில் இல்லை*
*துளித்துளியாய்த் தமிழுணர்வு*
*இங்கிருப்ப துண்மை!*

*..........................................*

*தமிழியக்கம் இல்லாமல்*
*தழைப்பதுவும் உண்மை! ( மலைநாட்டில் தமிழுணர்வு, ப. 146)*

என்று சிறிதளவுள்ள தமிழுணர்வு உயர மக்கள் தமிழியக்கம் உட்பட எத்தகைய மாற்றத்தை மேற்கொள்ள வேண்டுமென்பதற்குத் தமிழ்மொழி புறமொதுக்கப்பட்ட சூழலைச் சுட்டிக்காட்டி வேதனை கொள்கிறார்.

### மொழிப்பற்று காண முயலல்

ஒலிகள், சைகைகளின் வழி தம் கருத்துகளை வெளிப்படுத்தி வந்த மனிதன், காலமாற்றத்தில் பேசத்தொடங்கியது முதல் தமக்கெனத் தனி மொழியை உருவாக்கினான். மொழி இனத்திற்குத் தக்கவாறு உருவாக்கப்பட்டுள்ளதால், அதனைப் போற்றிப் பாதுகாக்கும் பொறுப்பு அம்மக்களுக்கே உரியது. அவ்வகையில் படைப்பாளர்களும் மொழி மீது தீராக் காதல் கொண்டு மேம்படுத்த எண்ணுகின்றனர்.

*தங்கத் தமிழுக்கு*
*ஒரு மையம்*

*.......................................* *(இனி...!, ப. 114)*

மலேசியத் தமிழ்ச் சமுதாயம்; தமிழ் மொழியையும், இனத்தையும் உயர்த்த எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனப் பட்டியலிடுவதில் கவிஞரின் மொழிப்பற்று வெளிப்படுகிறது.

*தமிழ்ச்சினிமா நடிகர்களின்*
*தரமான கருத்துக்களைப்*
*பலகாலம் தவமிருந்து*
*பக்குவமாய்ப் பதிவு செய்து*

*வெட்டாமல் குதறாமல்*
*வீண் விரயம் செய்யாமல்;*
*மறத்தமிழர் யாவருக்கும்*
*மறவாமல் கொண்டு வந்தோம் (தமிழ்ச்சேவை செய்கிறோம், ப. 159)*

என்று தமிழ்ச்சேவை என்ற பெயரில் நடக்கும் திரைப்பட மோகத்தை எள்ளி நகையாடி, மொழிச்சேவை சீர்பெற்ற வழியில் செயல்பட விரும்புகிறார்.

## இலக்கியத் தூய்மையை விரும்பல்

இலக்கியம் மக்கள் வாழ்வின் வெளிப்பாடாக அமைகிறது. அறிவுரைகளாக இடம்பெற்றுச் சமுதாயத்திற்கு வழிகாட்டுகிறது. இத்தகைய பொறுப்புமிக்க இலக்கியப் படைப்புகள் படைப்பாளர்களின் நூல்கள் வழி மக்களை அடைந்து தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியவை. அதனால்

*மரபோடு உமக்கிருக்கும்*
*மலைபோன்ற நெருக்கத்தைப்*
*புரியாத புல்லருக்கும்*
*போட்டு*
*ஊடைக்க வாருங்கள்*

.................................................

*ஓராண்டாய் உங்களை*
*உள்நாட்டில் காணவில்லையே*
*நாடு கடத்தப்பட்டீர்களா?*
*நாடு கடத்திக்கொண்டீர்களா?(திருநாள் கவிஞர்களே! பக். 90, 91)*

என்று கவிஞர்கள் சமூக அக்கறையின்றி, மக்களுக்குப் புரிகிறதோ இல்லையோ இலக்கணத் திறனை மட்டுமே வெளிப்படுத்தவும், தொடர் படைப்பும் சமூகச் சிக்கல்களை உணர்ந்து வெளிப்படுத்தாப் போக்கும் கொண்டு, விழாக் காலங்களில் மட்டும் கவிதை படைக்கும் கவிஞர்களை அங்கதவழி குற்றம் சாட்டி, இத்தகைய சூழலைப் புறக்கணிக்க எண்ணுகிறார்.

*அறக்கோலாம் எழுதுகோலைக்*
*காமக் கோலாகக் காணும்*
*காமாலைக்காரர்களே!*
*எழுதுங்கள்!*
*எதைவேண்டுமானாலும்*
*எழுதுங்கள்!* *(எழுதுங்கள் தோழர்களே, ப. 126)*

படைப்பாளிகள் சமூக அக்கறையின்றி உணர்வுகளைத் தூண்டும் வகையில் விதிவிலக்கின்றி எழுதிக்கொண்டுள்ள சூழலைக் கண்டு ஆவேசங்கொண்டு வெளிப்படுத்தி இலக்கிய உலகைத் தூய்மையாக்க விரும்புகிறார்.

*குறிக்கோளுக்காய்*
*நீ அன்று எழுதிய*
*பாட்டுப் படையலை*
*மேடையிலிங்கு*
*மேற்கோளுக்காய்*
*நீட்டி முழக்கிவிட்டு*
*கடன் முடிந்ததாய்*
*நினைந்து*
*கலைந்து போகிறார்கள்!* *(எங்களைப் பார் தாசனே!, ப. 133)*

கவிஞர்களின் கருத்துகளை மேடை வாதவிவாதங்களுக்கு மட்டுமே பயன்படுத்தி அவர்கள் கூறியபடி செயல்படாத தமிழுணர்வற்றவர்களைக் கண்டு ஆவேசம் கொள்கிறார். அவை பின்பற்றப்பட வேண்டிய வாழ்வியல் அறங்கள் என உணர்த்துகிறார்.

**கல்விச்சாலை சீர்பெற எண்ணுதல்**

கல்வி மக்கள் அனைவருக்கும் உயிரையும் உடம்பையும் பாதுகாக்கும் கருவியாகவும், அறிவுத் தேவையை நிறைவு செய்வதாகவும் அமைகிறது. இத்தகைய அறிவு வளர்ச்சி எச்செயலையும் தெளிவுடன் செயல்படத் துணை புரிகிறது. காலந்தோறும் கல்வி முறை மாற்றம் கண்டு வருகிறது. கல்விச் சாலை திண்ணைப்பள்ளியாக இருந்து, தற்காலத்தில் கட்டடப் பள்ளியாக மாற்றம் கண்டுள்ளதுடன், இன்றியமையாததாகவும் உள்ளது.

*ஓர் அலட்சிய சமுதாய*
*அவல நிலையை*
*நெஞ்சில் அறைகிறது!*

.........................................

*ஊயிரை விட விரும்பா*
*பிடிவாத நோயாளியாய்*
*இடி தாங்கிக் கொண்டு*
*இன்னமும் நிற்கிறது*

.................................................

*தனியார் நிலத்தில்*
*துளிர்த்த சாபத்தால்*
*அந்தத் தமிழ்ப்பயிருக்கு*
*அரசாங்க ஆதரவுக்கரம்*
*எப்போதாவது*
*மட்டுமே நீளும்*

..........................................

*போங்கப்பா!*
*வச்சவன் தண்ணி ஊத்துவான்*
*கைகட்டி ஒதுங்கி*
*வேடிக்கைப் பார்த்த கூட்டம்*
*வேதாந்தம் பேசியது*
*ஆக்கப்பணியிலோ*
*ஆர்வம் மறந்தது*

..............................................

*ஆயிரம் பேர் வதியும்*
*அந்த அருமைத் தேட்டத்தில்*
*அரவணைக்க ஆளின்றி*

*ஒரு தமிழ்ப்பள்ளி*
*அநாதையாகிவிட்டது*

*(ஒரு தமிழ்ப்பள்ளியின் தலைவிதி, பக். 70, 71, 73)*

மலேசியத் தமிழ்ப் பள்ளிக்கு அரசாங்கம், மக்கள் ஆதரவு சிறிது மட்டுமே கிடைத்து, பின்பு அவர்களால் மறுக்கப்பட்டுள்ளது. இதனால் தமிழ்ப்பள்ளி ஆதரிப்பாரின்றி ஆசிரியர்கள் மட்டும் பாதுகாத்து வருவதும், மக்கள் விழிப்புணர்வின்றியும், அரசாங்கம் மனமின்றியும் உதவ மறுக்கும் சூழலைச் சுட்டுகிறார். இதனால் தமிழ்ப்பள்ளி உள்ளது என்பது மட்டுமே மகிழ்ச்சியளிக்கக் கூடிய செய்தியாக அமைகிறது. அரசாங்கம் உதவாநிலையில் மக்கள் முன்வந்து பள்ளிகளை உயர்த்த வேண்டும் என்ற தன் எதிர்பார்ப்பைக் கூறி மக்களுக்கு விழிப்புணர்வூட்டுகிறார். இத்தகைய பள்ளிகள் ஆரம்பக் காலத்தில் எளிய மக்களாலேயே தோற்றம் பெற்றதனைத்

"தகரக் கொட்டகைகள் கட்டித் தமிழ்ப் பள்ளியை ஏற்படுத்தியதனால்தான் மலேசியாவில் தமிழ் இன்றும் பயிற்று மொழியாகவும் பழகுமொழியாகவும் இருக்கிறது" (மலேசியத் தமிழிலக்கியம் ஓர் அறிமுகம், ப. 4) என்று பெ.இராஜேந்திரன் கூறியுள்ளதன் வழி அறியமுடிகிறது.

### வாழும் நெறியை அறிவுறுத்தல்

மனிதன் வாழ்க்கையில் பின்பற்ற வேண்டிய ஒழுக்க நெறிகளை நம் இலக்கியங்கள் வகுத்து வைத்துள்ளன. அவற்றிலிருந்து பிறழ்ந்து செயல்படும்போது துன்பத்திற்கு உள்ளாகிறான்.

*விருந்தையே நாடிநாடி*
*விருப்பமாக அலைந்துவிட்டு*
*மருந்து தேடி அலையும்போது தோணும் – எயிட்ஸ்*
*மருந்தில்லா நோயென்ற ஞானம்! (ஞானமோ ஞானம்!, ப. 59)*

இவ்வாறு நோய் உட்பட எத்துன்பமும் வந்த பின்பே வருந்தும் மனிதர்கள், இத்தகைய துன்பங்கள் ஏற்படாமல் வாழ தம் அனுபவத்தின் வழி காலம்கடந்து ஞானம் பெறாமல், மனிதர்கள் அனைவரையும் போதி மரமாக எண்ணிப் பிறர் வாழ்வின் அனுபவத்தின் மூலமும் ஞானம் பெற வேண்டிய காலத்தில் பெற்று வாழ வலியுறுத்துகிறார்.

*அரசியல்வாதி*
*இந்தக் கட்சிமாறி*
*இப்போதுதான்*
*ஒரு நிரந்தரக் கட்சியில்*
*சேர்ந்திருக்கிறான் – மதிமன்னன் (கல்லறை வாசகம், ப. 63)*

என்று தான் ரசித்த கல்லறை வாசகங்களை எடுத்துரைப்பதன் வழி இறப்பின் பின் விமர்சிக்கப்படும் நிலை உள்ளதனை அங்கத நோக்கில் வெளிப்படுத்தி மக்களை நல்வழிப்படுத்துவதாக உள்ளது.

*மேடையில் உதிரும்*
*அடுக்கு மொழிக்கு*
*இனியும்*
*அசைய மாட்டோம்*
*..................................................*
*ஆளை விடுங்களையா!*
*இனிமேல்*
*கை தட்டமாட்டோம்! (கை தட்டமாட்டோம், பக். 102, 103)*

என்பதில் கைதட்டுதல் எத்தகைய தவறான ஊக்குவிப்பாக, சுதந்திர மின்மையான செயல்பாடாக உள்ளதனைச் சுட்டிக்காட்டி, அத்தகைய செயற் பாட்டைச் சமுதாயம் புறக்கணிக்க எண்ணுகிறார்.

*அண்ணலே*
*மக்களின் கணக்கிலோ*
*உங்களின் இறப்பு*
*எப்போதும் இழப்புத்தான்*
*எங்களின் கணக்கிலோ*
*உங்களின்*
*இறப்பும் பிறப்பும்*
*எப்போதும் வரவுதான்*

*(அண்ணலே எங்களை மன்னியுங்கள்!, ப. 108)*

இக் கவிதை வழி தியாகிகளின் பெயரைக் கூறி நிதி வசூல் செய்து, கூறியது மரி மக்களை ஏமாற்றும் ஏமாற்றுக்காரர்கள் உள்ள சமுதாய நிலையைச் சுட்டிக்காட்டி மக்களை விழிப்புணர்வுடன் செயல்பட அறிவுறுத்துகிறார். இரண்டாம் தலைமுறைக் கவிஞர்களான ந.பச்சைபாலன் உட்பட அனைவரும் சமுதாய நிலையை எடுத்துரைப்பவர்கள் என்பதனை "இவர்கள் படைப்பு சொந்த சமூகத்தின் சமகாலப் பிரச்சனையை முன்மொழிவன" ( மலேசியத் தமிழிலக்கியம் ஓர் அறிமுகம், (பக்.90, 91) என்று கோ.புண்ணியவான் கூற்றின் வழி அறியலாகிறது.

## இளையோரை எழுச்சிபெறத் தூண்டல்

இளைஞர்கள் நாட்டின் வளர்ச்சியை நிருணயம் செய்யும் தூண்கள். அவர்களின் ஆற்றல் வீணாகாமல் பயன்படுத்தப்படுதல் அவசியம். அவர்களை வழி நடத்தும் பொறுப்பு சமூகத்தில் அனைவருக்கும் உரியதாகக் கருதலாம். இவ்வகையில் கவிஞர்

*ஆண்டு முழுவதும் கற்றதை*
*மூளைக் கணினிக்குள்*
*முடிந்து வைத்திருந்தால்*
*போர்க்களத்தில் எடுத்து நீ*
*பூரிப்பாய்ப் பாய்ச்சலாமே!*

.........................................................

*எண்ணங்களாலே*
*எதையும் சாதிக்கலாம்*
*எண்ணிய யாவையும்*
*திண்ணமாய் முடிக்கலாம்*

*நம்பிக்கைதான்*
*இதற்கெல்லாம் மாமருந்து!*

*(வாழ்த்து மடலா? இரங்கற்பாவா?, ப.40)*

என்று இளைஞர்களின் தன்னம்பிக்கையின்மை, இலக்கற்ற வீண் பொழுதுபோக்கின் அவலநிலை கண்டு வருந்துகிறார். வெற்றி தோல்வி என்பதனை நீயே உருவாக்குகிறாய், அதனால் எத்தகைய வழிமுறைகளை மேற்கொண்டு நம்பிக்கையுடன் போராட வேண்டும் என்ற உத்வேகத்தைக் கொடுத்து, பதிலைக் கேட்டுப் போராடும் முன்பே தீர்க்கமான சிந்தனையுடன் செயற்படத் தூண்டுகிறார்.

*நம்பிக்கை என்ற நார் மட்டும் இருந்தால்*
*உதிர்கின்ற பூக்கள் ஒவ்வொன்றும் ஒட்டிக்கொள்ளும்*

என்ற தமிழ்ப் புதுக்கவிதையின் கருத்தும் இங்கு ஒப்பிடத்தக்கது.

## பெண்கள் வாழ்வு மேம்பட வழிகாணல்

சங்ககாலம் முதல் இன்றுவரை கல்வி உட்பட பிறதுறைகளில் தங்கள் உரிமைகளை நிலைநாட்டியுள்ளனர். அத்தகைய பெண்கள் ஏமாற்றப்படும் சூழல் காதல் என்ற பெயரால் நிகழ்த்தப்படுவதனை,

*காதல் அலையில் சிக்கி*
*கதி கலங்குபவளே!*
*காலம் இன்னும்*
*கடந்து விடவில்லை*

*அறிவுப்போர் ஒன்றை*
*உன்னுள்*
*அவசியம் நிகழ்த்து!* *(ஞானமீட்சி, ப. 156)*

என்கிறார் கவிஞர். பெண்கள் காதல் என்ற பெயரால் தன் வாழ்வைச் சீரழித்துக் கொள்ளாமல், யதார்த்த வாழ்வைப் புரிந்து கொண்டு வாழ வலியுறுத்துகிறார்.

## இயற்கையைப் பாதுகாக்க விழைதல்

மனிதன் தோன்றியது முதல் இயற்கையுடன் இணைந்து வாழ்பவன். தொடக்கத்தில் அஞ்சி ஒதுங்கியவன், பின்னர்த் தெய்வமாகப் போற்றினான். கால ஓட்டத்தில் இயற்கை வாழ்வு நீங்கிச் செயற்கை வாழ்வில் நாட்டம்

கொண்டான். இதனால் இயற்கையின் மதிப்பை உணராது அதனை அழித்தும், புனிதத் தன்மையை நீக்கியும் வாழத்தொடங்கினான். இதனை

*இந்நாள்வரை*
*பூமியின் பசுங்குடையான*
*மரங்களை வேர் பிடுங்கி*
*விளையாடினோம்*
*விசனப்பட்டாள்*
*வீறு கொண்டாளில்லை!*

*இயந்திரக் கைகளால்*
*அடிக்கடி*
*உடல் குடைந்தோம்*
*"உம்" கொட்டினாள் வெகுண்டெழுந்தாளில்லை!*

*ஜீவ நதிகளைக்*
*குப்பைகளால் அபிசேகித்தோம்*
*அமைதி காத்தாள்*
*ஆர்ப்பரித்தாளில்லை!*
.............................................
*கடைசியில் –*
*தலைகளில் கை வைக்க*
*தலைப்பட்ட போதுதான்*

*சினந்து....... சினந்து*
*பொங்கி எழுந்து*
*தலையை உலுக்கினாள்*
.............................................
*மாண்புறும் மலைகள்*
*பூமியின் தலைகள்*
*மனிதத் தலைகளைக் காக்க*
*அந்தத் தலைகளை*
*மதிப்போம்* *(மலைகளைப் பாடுவேன், பக். 36, 37)*

இயற்கையின் பொறுமைக்கும் ஓர் அளவுண்டு, அந்த அளவையும் தாண்டி சற்று சீற்றம் கொண்டு தனக்குத் துன்பம் ஏற்படுத்தும் வண்ணம் மனிதன் செயற்கை வாழ்வால் இயற்கை ஆதாரங்களுக்குத் தீங்கையும் அழிவையும் மேற்கொண்டான். இத்துன்பம் நீங்க இயற்கையை (மலையை) மதிப்பதனை வழியாகக் கூறித் தன் இயற்கை நேயத்தினை வெளிப்படுத்தி யுள்ளார்.

## உயிரிநேயம் போற்றல்

தொடக்க காலத்தில் இயற்கையுடன் இணைந்து வாழ்ந்த மனிதன், அனைத்து உயிர்களிடமும் நட்பும் இரக்கமும் அன்பும் கொண்டிருந்தான். ஆனால் தகவல் தொழில் நுட்ப யுகத்திலும் உயிரிநேயம் இன்றி மூடநம்பிக்கை மண்டி,

*தீபாவளி வரும்போதெல்லாம்*
*கும்பல் கும்பலாய்*
*நம்மில் பலரிங்குக்*
*குறைந்து போவதுதான்*
*விந்தையிலும் விந்தை*

.................................................

*அப்படியானால் –*
*தீர்மானத்தைத் திருத்தி எழுதுவோம் –*
*நரகாசுரனின் பேரனோ –*
*நரகாசுரனின் ஆவியோ –*
*யார் வரினும்*
*நம்மைக் காக்க வேண்டியவர்*
*மனிதரே! மனிதரே!* (ஆடுகளின் தீர்மானம், பக். 150, 151)

நம்பியவர்களை ஏமாற்றும் மனிதவர்க்கத்தின் உயிர்க்கொலையைச் காணமுடிகிறது. உயிரினங்கள் பலியிடப்படும் சூழலை மாற்ற விரும்பும் உயிரிநேய விரும்பி என்பதனை அறியமுடிகிறது.

## காதல் உணர்வைப் பதிதல்

உயிர்களின் இயல்பான உணர்வுகளில் ஒன்று, இளமைப் பருவத்தில் எதிர்பாலின அன்பாய் வெளிப்படும். இந்த அன்புப் போராட்டத்தில் தன் காதலியைப் பிரிந்து அவன்படும் துயரை

*முதலில்*
*என் ராஜ வீதிக்கு வந்து*
*உயிர்ப்பை ஊட்டு!*

*வெறும் வீதிக்கு*
*விசனப்படுகிறானே என*
*ஊரார் என்னைப்*
*பரிகசிக்கலாம்!* (என் ராஜ வீதி, ப. 56)

என்று காதலனின் மனம் காதலியை எதிர்பார்த்து உயிரற்றவன் போல் உள்ள சூழலையும், அதனைப் பிறர் அறியமுடியாத நிலையும், அதனால்

அவனுக்கு ஏற்படும் அவமானத்தையும் எடுத்துரைப்பதனால் காதலால் மனம் படும் ஆர்ப்பரிப்பைக் காட்சிப்படுத்துகிறார்.

## முடிவுரை

மலையகத் தமிழர்களின் சமூக அவலங்களைக் கண்டு வருந்தி வெளிப்படுத்தி, அவற்றிலிருந்து அவர்கள் வெளிவந்து தமிழ் இனப்பற்று, மொழிப்பற்று, வாழ்வு, இளைஞர்கள், பெண்கள், பிற உயிர், பள்ளிகள், இலக்கியம், இயற்கை போன்றவை நன்நிலை அடைய விருப்பங்கொண்டு, தன்னம்பிக்கையையும் ஆலோசனைகளையும் ஆவேசங்கொண்டும் அங்கதநோக்கிலும் வெளிப்படுத்தியுள்ளமையைக் காணமுடிகிறது. சமுதாய அவல வெளிப்பாடு என்பது புலம்பல் பதிவுகளல்ல, சமுதாயம் வளர்ந்தெழப் படைப்பாளியின் பதைபதைப்பு என்னும் நோக்கில் ந. பச்சைபாலன் கவிதைகள் இடம்பெற்று மலேசியத் தமிழ்ச் சமுதாயம் சீர்பெற எண்ணுவதனை அறியலாகிறது.

## துணை நூல்கள்

1. மலேசியத் தமிழ் இலக்கிய வரலாற்றுக் களஞ்சியம், மா. இராமையா, புரட்சிப் பண்ணைப் பதிப்பகம், 1996.
2. மலேசியத் தமிழ்க் கவிதைக் கருத்தரங்க மலர், இந்திய ஆய்வியல் துறை மலாயாப் பல்கலைக்கழகம், உமா பதிப்பகம், 1988.
3. மலேசியத் தமிழ் இலக்கியம் ஓர் அறிமுகம், மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கம்,செல்வம் பதிப்பகம், 2004.
4. மலேசியத் தமிழ் இலக்கியம் 2007, மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கம்,மித்ரா ஆர்ட்ஸ் - கிரியேஷன்ஸ், 2007.
5. மலேசிய - தமிழக - புதுவை இலக்கிய உறவுப்பயணம், மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கம், முதற்பதிப்பு, 2012.
6. என் கனவுகளும் கொஞ்சம் கவிதைகளும், ந. பச்சை பாலன், செம்மண் பதிப்பகம், 2009.

## மலாயாவின் மூத்த கவிஞர் சிங்கப்பூர்ச் சித்திரக்கவி நாவலர்

# சி.வெ. நாராயணசாமி நாயகர்

முனைவர் கோட்டி திருமுருகானந்தம்
*புளோக் 703 யீசூன் அவின்யூ 5*
*# 07 - 250, சிங்கப்பூர் 760703*

மலாயா, சிங்கப்பூர்த் தமிழ்க்கவிதை உலகின் தொடக்கக் காலக் கவிஞரான சி. வெ. நாராயணசாமி நாயகர் 1860 ஆம் ஆண்டுகளில் சிங்கப்பூரில் வாழ்ந்திருக்கிறார். இவர் தமிழகம் நாகபட்டனத்தைச் சார்ந்தவர். வெள்ளையப்பு நாயகர் இவர் தந்தையாவார். இவர் சிங்கப்பூரில் என்ன பணியாற்றினார் என்பது தெளிவாகத் தெரியவில்லை. இவர் கவிஞர், கவிதையாக்கும் திறனைக் கற்றுக் கொடுத்தல், பதிப்பாசிரியர், நூலைச் சரிபார்த்துக் கொடுத்தல், அகராதிப்பணி எனப் பன்முகங் கொண்ட படைப்பாளராய் விளங்குகிறார். இவரைப் பற்றியும் இவரது ஆக்கங்கள் பற்றியும் நோக்குவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

### *சிங்கப்பூர் அன்றும் இன்றும்*

நூறு ஆண்டுகளுக்கு முன் மீன் பிடிக்கும் கிராமமாய்க் காட்சியளித்த சிங்கப்பூர் காடும் மேடும் மண்டிக் கிடந்த தீவாகும். இத்தீவு மலாயாவின் ஒரு பகுதியாக 1965ஆம் ஆண்டு வரை இருந்தது. அப்போது மலாயா பிரித்தானியரின் காலனியாக விளங்கியது. மாலாயா பிரித்தானியர்களிட மிருந்து 1957ஆம் ஆண்டு விடுதலை பெற்றது. சிங்கப்பூர் 1965ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் மலாயாவிலிருந்து பிரிந்து தனி நாடானது. குடியரசு நாடான சிங்கப்பூர் ஒரு குடியேற்ற நாடாகும். இந்நாடு இன்றைய மலேசியத் தீபகற்பத்தின் தென் பகுதியில் அமைந்துள்ளது. இந்நாடு மேற்கத்திய நாடான ஐரோப்பா மற்றும் தொலை தூரக் கிழக்கு நாடுகளுக்கான கடல்வழி, வான்வழி, வர்த்தகவழியில் அமைந்துள்ளது. உலகின் சிறந்த நகரமாக மாறிக்கொண்டிருக்கும் சிங்கப்பூரில் சீனர், மலாய்க்காரர், இந்தியர், ஐரோப்பியர் மற்றும் பிற இனத்தவர் எனப் பல இன மக்கள் வாழ்கின்றனர்.

### *சிங்கப்பூரில் தமிழ்மொழி வரலாறு*

சிங்கப்பூரில் 1819ஆம் ஆண்டு முதலே தமிழ்மொழி பேசப்பட்டு வருகிறது. 1956ஆம் ஆண்டு முதல் சிங்கப்பூரின் ஆட்சிமொழிகளில் ஒன்றாக இருந்து வருகிறது. எனவே சிங்கப்பூர் வரலாற்றோடு தமிழர்

இரண்டறக் கலந்துள்ளனர் என்பதுண்மை. தொடக்கக் காலத் தமிழர்கள் தங்கள் தாய்மொழியான தமிழில்தான் தங்கள் கருத்துகளைப் பிறரிடம் பரிமாறிக் கொண்டனர். காலவோட்டத்தில் தமிழரின் தொகை பெருகப் பெருகத் தமிழ்மொழியும் வளர்ந்துள்ளது. சீனர் சீனத்தையும், மலாய்க்காரர் மலாயையும் தமிழர் தமிழையும் பேசத் தெரிந்தவர்களாக இருந்தனர். தமிழர் சென்ற நாடுகளுக்கு எல்லாம் மனைவி, மக்களை அழைத்துச் செல்லாமல் தங்கள் தாய்மொழியோடு சென்றனர் என்பது வரலாறு காட்டும் உண்மையாகும். அப்படி சென்றவர்கள் அங்கெல்லாம் தமிழையும் பண்பாட்டையும் வளர்த்துள்ளனர் என்பதும் உண்மையாகும்.

*ஆன்ற தமிழர் அருங்குணத்திலே மிதந்து*
*தோன்றுந் திசையெங்கும் தொழில்புரிந்த காலமுதல்*
*ஈன்ற மனையரசு இல்லத்தாள், பெற்றபிள்ளை*
*யாவும் மறந்து அயலகத்தே தமிழ்வளர்த்தோம்*

*(கண்ணதாசன் கவிதைகள், தொகுதி 3)*

என்ற கண்ணதாசன் பாடல் அடிகள் மேற்கண்ட கருத்திற்கு வலிமை சேர்க்கின்றன. மேலும் தமிழர்கள் கடல்கடந்து சென்ற நாடுகளில் பொருள் தேடியதோடு உள்ளத்தில் கடவுள் பற்றையும் வளர்த்துத் தன்மானத்துடன் வாழ்கின்றனர். தமிழர்கள் குடியேறி வாழும் இடமெல்லாம் தமிழுக்குப் பணிசெய்து வாழ்கின்றனர். இப்பணி மறக்கமுடியாத ஒன்றாக அமைந்துள்ளது. இத்தகைய பணியைத் தமிழர்கள் குடிபெயர்ந்து வாழும் நாடுகளில் தொடக்கக் காலம் முதல் பின்பற்றி வருகின்றனர். இதனால்தான் தமிழ்மொழி உலகின் பல நாடுகளில் வாழ்ந்து வருகிறது; மக்களால் பேசப்படுகிறது.

### சிங்கப்பூர்த் தமிழ்க்கவிதையின் தோற்றம்

குடியேற்ற நாடுகளின் வரலாறு மிகக் குறுகிய காலவரலாற்றைக் கொண்டதாகும். வெள்ளையர் ஆண்ட ஆசிய நாடுகள் விடுதலை அடைந்து சொந்தக் காலில் நிற்க முயன்று வருகின்றன. அத்தகைய நாடுகளில் ஒன்றான சிங்கப்பூர் விடுதலை அடைந்த குறுகிய காலத்தில் வளர்ந்த நாடாக விளங்குகிறது. இந்நாட்டில் 1800ஆம் ஆண்டுகளின் இறுதியிலிருந்து தமிழர்கள் வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் வெள்ளையர் ஆட்சிக் காலத்தில் மலாயாவின் தோட்டங்களில் வேலைசெய்ய அழைத்து வரப்பட்டனர். அவர்களது வழித்தோன்றல்கள் இன்று மலேசியா, சிங்கப்பூர் முதலான நாடுகளில் வாழ்ந்து வருகின்றனர். மேலும் அண்மைக் காலங்களில் கல்வி, பணி காரணமாகச் சிங்கப்பூருக்குப் பலர் குடியேறியுள்ளனர்.

தமிழர்கள் மலாயாவிற்குக் குடியேறியபோது இலக்கியம் பிறக்கும் சூழல் சற்றும் இருக்கவில்லை. ஓர் அடிமை நாட்டிலிருந்து மற்றோர் அடிமை நாட்டிற்குத் தொழிலாளர்களாய் வந்தவர்கள், விடிந்திடும் முன் வேலைக்குச் சென்று அந்திப் பொழுது வரை மிகக் கடுமையாக உழைத்தவர்கள் எங்ஙனம் இலக்கியம் படைக்க முடியும்? பணிச்சுமை, தோட்ட நிர்வாகத்தின் கொடுமைகள், கங்காணிகளின் அடாவடித்தனம், சாதிச்சண்டை, கள்ளச்சாராயம், தோட்டத் துண்டாடல், குறைவான ஊதியம், விலைவாசி ஏற்றம், தொழிற்சங்கப் போராட்டம் எனப் பல்வேறு நெருக்கடிகளை மலாயாவில் வாழ்ந்த தமிழர்கள் அனுபவித்தனர். அச்சூழலிலும் வாய்மொழியாகப் பாட்டிலக்கியம் தோற்றம் கண்டுள்ளதைப் பார்க்கும்போது அவர்களின் கவிதையார்வம் தெற்றென விளங்குகிறது. தொழிலாளர் வருகைக்குப் பின் அரசுப்பணி, வர்த்தகம் காரணமாகக் குடியேறிய தமிழறிஞர்கள் ஏட்டிலக்கியம் படைக்கும் முன்னே தொழிலாளர்கள் வாய்மொழி இலக்கியம் படைத்தனர். அவர்கள் படைத்த இலக்கியங்களில் பல காலவெள்ளத்தால் அழிந்திருக்க வாய்ப்புண்டு.

**மூத்த நூல்**

மலாயா 1965 ஆம் ஆண்டு வரை சிங்கப்பூரை உள்ளடக்கிய நாடாக விளங்கியது. 1965 ஆம் ஆண்டு மலாயாவிலிருந்து சிங்கப்பூர் தனி நாடாகப் பிரிந்த பிறகு அந்நாடு மலேசியா எனப் பெயர் மாற்றம் பெற்றது. மலாயாவில் தோன்றிய முதல் தமிழ்க்கவிதை நூல் எது? என்பது உறுதியாகத் தெரியவில்லை, உறுதியாகக் கிடைக்கின்ற ஆதாரங்களின் படி, முத்துக்கருப்பன் செட்டியார் இயற்றியுள்ள தண்ணிமலை வடிவேலர் பேரில் ஆசிரிய விருத்தம் என்னும் நூலே மூத்த நூலாகும். இந்நூலுக்கு 1863 ஆம் ஆண்டு வந்துள்ளது. இவரே மலாயா - சிங்கப்பூர்த் தமிழ் இலக்கியத்திற்குப் பிள்ளையார் சுழி போட்டவர் எனக் கருதலாம். இந்நூல் 1863, 1869, 1873, 1874 (இரண்டு பதிப்புகள்), 1875, 1878, 1881, 1882 (இரண்டு பதிப்புகள்), 1887, 1889, 1891, 1905, 1917 (ரா∴பிள்ஸ் அச்சுக்கூடம், சிங்கப்பூர்) எனப் பதினைந்து பதிப்புகள் வந்துள்ளன. இந்நூலுக்கு முன் மலாயாவில் தமிழ்க்கவிதை நூல்கள் தோன்றி உள்ளனவா என்பது ஆராய்ச்சிக்குரியது.

சிங்கப்பூர் தனிநாடாக உதயமானதைக் கொண்டு அதன் இலக்கியத்தைப் பார்க்கக் கூடாது. அதன் தொடக்கக்கால இலக்கியத்தை நோக்கும்போது முத்துக்கருப்பன் செட்டியார் இயற்றியுள்ள தண்ணிமலை வடிவேலர் பேரில் ஆசிரிய விருத்தம் என்னும் நூலே சிங்கப்பூர்த் தமிழிலக்கியத்தின் மூத்த நூலாகும். இவரைத் தொடர்ந்து சி. வெ.

நாராயணசாமி நாயகரின் நன்னெறித் தங்கம் பாட்டு(1868), வீரப்பிள்ளை உபாத்தியாயரின் பினாங்கு தண்ணிமலை வடிவேலர் பேரிற்பாடிய இரட்டை ஆசிரிய விருத்தமும் தேவாரப் பதிகமும், பிள்ளைப் புலவரின் ஈழமண்டலச் சதகமும் உரையும்(1869), முகம்மது அப்துல் காதிறுப் புலவரின் முனாஜாத்துத் திரட்டு(1872), சி. வெ. நாராயணசாமி நாயகரின் முதலாவது பிரபந்தத் திரட்டு(1873), ஷாகு முகம்மது அப்துல் காதிறு ஜெயினுத்தீனின் இரத்தினச் சுருக்கம்(1878), முகியித்தீன் அப்துல் காதரின் சந்தக்கும்மி(1879), நெல்லையப்ப செட்டியாரின் சிங்கை வடிவேலர் தோத்திரம், சி. வெ. நாராயணசாமி நாயகரின் மானிடக் கும்மி(1880), வாலசுப்ரமண்ய ஐயரின் மீனாட்சியம்மை பதிகம்(1885), செவத்த மரைக்காயரின் மலாக்காப் பிரவேசத் திரட்டு, மீறா சாயபுவின் பாயா லேபர் பங்கலாவின் அலங்காரச் சிந்து(1886) முதலான நூல்கள் தோன்றியுள்ளன. இந்நூல்களுக்குப் பிறகு 1887 ஆம் ஆண்டு சி. ந. சதாசிவப் பண்டிதர் படைத்த வண்ணையந்தாதி, வண்ணை நகரூஞ்சல், சிங்கைநகர் அந்தாதி, சித்திரக்கவிகள் முதலிய தொகுப்புகள் அடங்கிய நூல்தான் இந்நாட்டில் தோன்றிய முதல் நூல் என்ற கருத்து நிலவுகிறது. இந்நூலுக்கு முன் பதின்மூன்று கவிதை நூல்கள் வெளிவந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும். மேலும் இதே ஆண்டில் ம. ரு. வெங்கடாச்சலம் பிள்ளையின் பினாங்கு தண்ணி மாமலையின் கண்ணிலாகா நிற்கும் தெண்டபாணி யென்னும் சண்முகக் கடவுள் மீது புகழ் பெற்றோங்கிய அறுமுகப் பதிகம், சேகராச சேகரின் தட்சிண கைலாச புராணம், மெய்யப்ப செட்டியாரின் சிங்கப்பூர் பிரபந்தத் திரட்டு முதலான கவிதை நூல்களும் வந்துள்ளதை மலேசிய, சிங்கப்பூர்த் தமிழறிஞர்கள் மனங்கொள்ளுதல் வேண்டும். 1872ஆம் ஆண்டு முகம்மது அப்துல் காதிறுப் புலவர் படைத்த முனாஜாத்துத் திரட்டு என்னும் நூல் சிங்கப்பூரின் முதல் நூல் எனச் சிங்கப்பூர்த் தமிழ் அறிஞர்கள் சில ஆண்டுகளுக்கு முன் கருதினர். இதற்கும் முன்பே மலாயாவில் தமிழ்க் கவிதை நூல்கள் தோன்றியுள்ளன என்பது உறுதி. எனவே, இப்போது கிடைக்கின்ற தரவுகளின்படி முத்துக்கருப்பன் செட்டியார் இயற்றியுள்ள தண்ணிமலை வடிவேலர் பேரில் ஆசிரிய விருத்தம் என்னும் கவிதை நூலே சிங்கப்பூர்த் தமிழிலக்கியத்தின் மூத்த நூலாகும். இந்நூலின் மூலப்படி சென்னை தரமணியிலுள்ள ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தில் (ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக எண்: 004862) பார்வைக்குக் கிடைக்கிறது.

### கவிஞர் படைத்துள்ள நூல்கள்

சி. வெ. நாராயணசாமி நாயகர் அபிராமியம்மன் பேரில் பாதாதி கேசமாயியற்றிய பதிகமும் சில தனிப்பதங்களும், பரமவியல் பேசல்,

பாடற்றிரட்டு, நன்னெறித் தங்கம் பாட்டு, வெறியர் போதக மாலை, அடைக்கலமாலை, பாலியர் யாப்பிலக்கணச் சல்லாபம், நெஞ்சொத்து மாலை, வைராக்கிய தருப்பணக் கீர்த்தனை, முதலாவது பிரபந்தத் திரட்டு, மானிடக்கும்மி, மும்மணி மாலை, அந்தாதி, பதிற்றந்தாதி, போதக மஞ்சரி, அடைக்கல மாலை எனப் பதினாறு கவிதை நூல்களைப் படைத்துள்ளார். மேலும் இவர் இசைப்பாடல்கள், ஓவியப் பாடல்கள் படைத்துள்ளதாகவும் தெரிகிறது. இவற்றுள் நன்னெறித் தங்கம் பாட்டு(1868), முதலாவது பிரபந்தத் திரட்டு(1873), மானிடக் கும்மி(1880) முதலிய நூல்கள் மட்டும் கிடைத்துள்ளன. இந்நூல்களின் மூலமும் நுண்படச்சுருளும் சென்னை தரமணியிலுள்ள ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தில் உள்ளன. இவை தவிர இவர் மலாய்க்குத் தமிழ் வாக்கிய சங்கிரகம் என்ற அகராதியையும் படைத்துள்ளார்.

### கவிஞர் சிறப்பு

சி. வெ. நாராயணசாமி நாயகர் தமிழகம் நாகூர்கண் வாழ்ந்த கா. முகம்மதுப் புலவரிடம் தமிழ் இலக்கண இலக்கியங்களைப் பழுதறக் கற்றார். இவர் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்திலக்கணங்களில் வல்லமை பெற்றவர். சித்திரக் கவிதை யாக்கும் புலமை வாய்ந்தவர். அந்தாதி, மாலை, கீர்த்தனை முதலிய இலக்கியங்களைப் படைக்குந்திறன் உடையவர். அறிஞர்களைப் போற்றும் குணம் படைத்தவர். இவர் தம் ஆசிரியரையும் மாணவரையும் மதிக்கும் மாண்பினர்.

முகம்மது அப்துல் காதிருப்புலவர் தமக்குத் தமிழ்மொழியைக் கற்றுக்கொடுத்த ஆசிரியரை மறவாமல் ஒரு கவிதை எழுதியுள்ளார். அவரது கவிதைக்கு முன் சிங்கப்பூர்ச் சித்திரக்கவி நாவலர் ஸ்ரீ ல ஸ்ரீ சி. வெ. நாராயணசாமி நாயகர் என்ற எமதாசிரியவர்கள் மீது பாடிய 32 சீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம் என்ற வாசகம் காணப்படுகிறது. இதனால் இவரது ஆசிரியர் சித்திரக்கவி எழுதுவதில் வல்லவர் என்பதை உணர முடிகிறது. மேலும் இவரது மாணவரின் நன்றி மறவாப் பண்பையும் காட்டுகிறது.

*சீர்மலியு நவரத்ன மணிமகுட மன்னர்க*
*டினம் பதம் பணியு நாகைச்*
*செய்யிதப்து காதிற்ஸாகபி தொலித்தருகா*
*தேசுலவுவாயற் புலவன்*
*செல்லனைய கல்விக்களஞ்சியமுகம்மதின்*
*சித்த மகிழுற்ற சீடன்*

*செந்தமிழ்க் கடலுண்டு சித்ரகவிமாரியாய்த்*
*தேயமெலாம் பொழியுமுதிர*

*மேர்மலியு தமிழிலெதிர் கூறுவார்க் கிடியேற*
*னிறைகும்ப மினிவன் சொற்ற*
*வினிய புகழ் சௌமியச் சாகரநூற் கையான*
*வெழிலுரைச் சொல்லவல்ல*
*னிடமீது மதியமுடுவுதையமனவிப்பூவி*
*லிணைய யறுவில ஷணபல*
*வியநூற்களாக்கினோன் சித்தாந்த வேதாந்த*
*விருவாரிகரை செல்வங்கம்*

*கார்மலியுஞ் சென்னை முதல் பற்பலவிடங்கள்வாழ்*
*கடிவேத ஸமாஜத்துநற்*
*கனவான்களு மகிழுநடையினன் கலைமகள்*
*காலமுரை திருநாவினன்*
*கவலரிய கலைகள் சுவையாந்தவன் பலசமயங்*
*காரணமறிந்த புலவன்*
*கவிவாணர் சிரகப்பமுற காப்யந்தினமிற்*
*கவலவே கொடுநாட்டுவோன்*

*பேர்மலியுஞ் சிங்கைபடி வெள்ளையப்ப பண்டிதன்*
*பெற்ற தமிழரி குஞ்சரம்*
*பீடுமலி சித்திரகவி நாவனென் றெங்குநற்*
*பெருமையோடிலங்கும் சிம்மம்*
*பின்னலுறா வாணரவை யொவ்வ வேதமியனின்*
*பேதமை யகற்றி யாள்வோன்*
*பெருமைமலி நாராயணச்சாமி நாயனைப்*
*பிரதிபுள மறவா நெஞ்சே*

*(அப்துல் காதிறுப் புலவர், முனாஜாத்துத் திரட்டு, 1872)*

எனக் கவிஞர் தம் ஆசிரியரைப் பற்றியும் அவர் சிங்கப்பூரில் சித்திரகவிதை எழுதுவதில் வல்லவர் என்பது பற்றியும் குறிப்பிட்டு உள்ளார்.

### நன்றி மறவாத மாண்பினர்

இவர் தம் ஆசிரியரையும் மாணவரையும் மதிக்கும் மாண்பினர். இவர் தமக்குத் தமிழைக் கற்றுக்கொடுத்த ஆசிரியருக்கும் தம்மிடம் தமிழைக் கற்ற மாணவருக்கும் கவிதைகள் வழங்கியதன் வழி இதனை உணரலாம். இவர் செய்ந்நன்றி மறவாத பண்பினர் என்பதை இவர் இயற்றியுள்ள பாடல் காட்டுகிறது.

*இலக்கண இலக்கிய வாரியின் னீருண்*
*டிறைந்திடும் காள மேகம்*
*இருநாழி வேளையில் நாகபந் தக்கவி*
*இசைக்கவே வல்ல தீரன்*
*துலக்கமாய்ச் சௌமிய சாகர நூற்குரை*
*சொல்லவே கற்ற தீரன்*
*சுதிர்மிகு முகம்மது நபிபண் பிசைத்திடும்*
*சுத்தகவிப் பிரசங்கமும்*
*விளக்கமாய் முகம்மது கவுதென்னும் காப்பியம்*
*விடங்கமாய்ச் சொன்ன சீலன்*
*வேதாந்த சித்தாந்த நூல்களும் மிக்கவே*
*விளக்கிய ஞான சீலன்*
*கலக்கமாய் என்னெஞ்சம் உழல்கின்ற*
*காரிகை தொன்னூல் முதல்*
*களவமிழ்தம் ஈந்தெனைக் காத்திட்ட முகம்மதின்*
*காலையாம் துதி செய்வோமே*

*(உவைஸ், இஸ்ஸாமியத் தமிழ் இலக்கிய வரலாறு, பாகம் 2)*

எனத் தம் ஆசிரியரைப் பற்றிக் கவிஞர் சி. வெ. நாராயணசாமி நாயகர் மிகத் தெளிவாகப் பாடியுள்ளார். இவரது ஆசிரியர் சித்திரக்கவி புனைவதில் ஆற்றல் மிக்கவராகத் திகழ்ந்துள்ளதைப் பாராட்டிப் பாடியுள்ளார்.

**சாற்று கவிகள்**

இக்காலத்தில் நூலுக்கு வழங்கப்படும் வாழ்த்துரை, அணிந்துரை, ஆய்வுரை, பாராட்டுரை போல அக்காலத்தில் நூலுக்கு வழங்கிய கவிதைகள் சாற்று கவிகள் என அழைக்கப்படுகின்றன. இதனை இவர் படைத்துள்ள நூல்களில் காணலாம். பொதுவாகச் சாற்று கவிகளை ஆசிரியர், மாணவர்கள், நண்பர்கள், சமகாலப் புலவர்கள் தருவது வழக்கமாகும். நூலாசிரியர் சிறப்பு, அவர் பண்புகள், நூல் நுவலும் செய்தி முதலிய தகவல்களை வெளிப்படுத்துவனவாகச் சாற்று கவிகள் இருக்கும். இவர் பலருக்கும் சாற்று கவிகள் அளித்துள்ளார். இவர் தம் மாணவன் முகம்மது அப்துல் காதிறுப் புலவர், முகியித்தீன் அப்துல் காதிறுப் புலவர், செவத்த மரைக்காயர் ஆகியோர்க்குச் சாற்றுகவிகள் அளித்துள்ளார்.

முகம்மது அப்துல் காதிறுப் புலவரின் ஆசிரியராகச் சிங்கப்பூர்ச் சித்திரக்கவி நாவலர் சி.வெ. நாராயணசாமி நாயக்கர் இருந்திருக்கிறார். இவர் தம் மாணவன் எழுதிய முனாஜாத்துத் திரட்டு என்னும் நூலை அச்சாதி நோட்டமிட்டுள்ளார். அதாவது நூலைச் சரி பார்த்து அச்சிடுவதற்குத்

தந்துள்ளார். இவர் அளித்துள்ள அறுபத்திரண்டு அடிகளைக் கொண்ட நேரிசை ஆசிரியப்பாவில் அமைந்துள்ள சாற்றுகவியில் தமிழ் இலக்கண இலக்கியங்களில் ஆழ்ந்த புலமை வாய்க்கப் பெற்றவர், தமிழிலுள்ள நான்கு வகையான கவிதைகளை இயற்றும் திறன் பெற்றவர், நல்ல குணம் படைத்தவர், இவர் தமிழகம் நாகூர்ப் பகுதியைச் சார்ந்தவர், கர்ணனைப் போல் பலருக்கும் கொடுக்கும் கொடைப்பண்பு படைத்தவர், பல கலைகளிலும் வல்லமை பெற்றவர், பல தரப்பட்ட நூல்களைக் கற்றுத் தேர்ந்து அறிவு நிரம்பப் பெற்றவர் எனத் தம் மாணவனின் சிறப்புகளைப் பாராட்டிப் பாடியுள்ளார்.

*சீரார் கதிர்மதி காரா ருடுபுவி*
*பாராருவர் முத னீரா றெழுவகை*
*பிறப்புயி ரமைப்போ னிறப்பெழு விலியோன்*
*மறுப்படாப் புகழோ னுறுப்பிலாத் தகையோன்*
*முத்தொழில் காரண னித்தியாநித்தியன்*
*சித்தமிற் கெட்டாத் தத்துவ முதலோன்*
*பூவினிற் கந்த மேவிய தன்ன*
*யாவினி னின்றோன் கூவிடாவியலோ*
*னொப்பறு விறையொடு செப்பவன் றோழராய்த்*
*துப்புறு முத்தாய்த் தப்பறு மயிலாய்*
*நின்றவர் மஞ்சு துன்று நற்குடையோர்*
*மன்றலர் மெய்யர் வென்றி வெற்கையர்*
*கனமுடை லாஞ்சனை தனியனாற் பெற்றோர்*
*வனமடை மான்பினை மனமுற நின்றோர்*
*சுரத்திற் புனலைக் கரத்தினி லழைத்தோர்*
*கரத்துட லோடு பொருந்திடச் செய்தோ*
*ரீத்தங் குலையை யேத்திட வழைத்தோர்*
*தாத்திரி மீதடிப் பூத்திடா நொடித்தோ*
*ருருவிலாத் தசையைத் திருவுரு மைத்தோர்*
*நபிகளி னாயகஞ் சுபவடி மீதுந்*
*தபசிக ளொலிகள் கபுசினை வேண்டும்*
*வித்தக முடிவறி தத்வ மெய்ஞ்ஞானி*
*குத்துபு முகையதீன் சுத்த நற்றாளொடு*
*தஞ்சை வாழண்ணல் சஞ்சல மறுத்தோர்*
*வஞ்சியினி ருதனந் துஞ்சிடச் செய்தோர்*
*கட்டையா லோடம் மட்டற வமைத்தோர்*
*பட்டதோர் வருக்கை கட்டுறச் செய்தோர்*
*தொலிக்குப் பொன்னைச் சலித்திடா தீந்தோர்*

*மெலித்ததோர் வலைஞன் வலித்திடச் செய்தோர்*
*மோகமை யொழித்த ஸாகுல் ஹமீது*
*யோகரின் மீதுத் தாகப் பிரபந்தத்*
*தனிபற் பாக்களும் நனிபதஞ் சிலதுங்*
*கனிதிரி மதுவொடு தனிகலிய முதஞ்*
*சொக்கிடுஞ் சுவையுற மிக்கவர் வியக்கப்*
*பொக்கற விசைத்த தக்கவன் கோண்மோ*
*விண்ணடை துடவை தண்ணறற் றோற்றா*
*கண்ணிரு கயமின் மண்ணடைக் கமல*
*முகையளி பீறி சுதநறா மாந்தித்*
*தகைபண் ணிரைக்கத் தொகைமயி னடிக்கப்*
*பணிலமுத்துதித்த மணிதனைப் பேடன*
*மணிதன் கருவெனத் துணிவொடு வடைகாத்*
*தோங்கிடு முத்தை பாங்குநன் மதியென*
*தூங்க லற்றாம்ப லாங்குமே சிறக்க*
*மதிதவிழ் நூற்கட் சதுருட னோதுங்*
*துதிமதிழ்ச் சிகரப் பதிகளு மிக்கத்*
*கூட முகாத ராடகச் சாலையு*
*மோடமை நடந்து மாடவ ரில்லும்*
*வறிஞோர்க் கன்னம் பிறிய மோடீயு*
*மறவோர் மாடம் நெறியாயி லிங்கும்*
*நாகையம்பதியோ னீகையிற் கன்னன்*
*வாகையிற் சிறந்தோன் றோகையர் மாரன்*
*முகம்மது மெய்தீன் றகுதவ புத்திர*
*னகம்மதுப் பதமை யகமதி லுடையோ*
*னிலக்கண லிலக்கியஞ் சொலக்கறக்கற்றோன்*
*கலக்கமில் சதுர்கவி குலக்கமா யிசைப்போன்*
*சற்சனர் வாசன் சொற்கெடா போஜன்*
*நற்குண முடையோன் கற்பினைக் கடலன்*
*புல்லர்க்கிடியன் வல்லர்க் கடியன்*
*சொல்லிற் றுடியன் சொல்லு மென்னுள்ளக்*
*காதல் முகம்ம தப்துல்*
*காதிறென் றோதும் மேதகைப் புலவனே*

*(நாராயணசாமி நாயகர், முனாஜாத்துத் திரட்டு, 1872)*

எனக் கவிஞர் நாராயணசாமி நாயகர் தம் மாணவனின் சிறப்பு இயல்புகளைப் பட்டியலிட்டுக் காட்டியுள்ளார்.

இவர் முகியித்தீன் அப்துல் காதிறுப் புலவர் படைத்துள்ள நபியுல்லா பேரில் துவாதசக் கலித்துறை, சந்தக்கும்மி முதலான தொகுப்புகள் அடங்கிய நூலிற்குச் சாற்றுகவி அளித்துள்ளார்.

*வான்றொடு நிவந்த பான்படு துடவை*
*மீன்படு நயமில் தேன்படு கமலம்*
*தருமணித் திரளைத் திருவள ரன்னம்*
*கரெவெனக் காவச் சிரமுறு வாளை*
*பாய வேகமுகின் தோய்வறும் பாளை*
*மாயவே நன்னறா ஆயவே பாயும்*
*நாகையம் பதியோன் வாகையார் மார்பன்*
*ஈகையிற் கன்னன் சாகையினொ ழுக்கன்*
*அகமகிழ் கப்பல் நகுதாவாம் பல்லோர்*
*புகழும் குணாகரன் தகைமைசேர் நிபுணன்*
*ஆக்கின் சாயபின் யோக்கியச் செல்வன்*
*பாக்கிய ரத்னம் தேக்கிடா தயவன்*
*பன்னூல் நிபுணன் முன்னூல் விதியன்*
*என்னிரு விழியன் கன்னியர் மணியன்*
*பானொடு மொழிந்து வானுறு மதியை*
*மானுற வழைத்துத் தானுடுஜுப்பா*
*பார்க்கவே புகர ஆர்க்கவே செய்த*
*காக்கும் நன்மை பூக்கும் நபிபதம்*
*நம்பியே வேண்டி யிம்பர் புகழும்*
*சமமுறு சந்தக் கும்மியும் துவாசத்*
*துறையொடு கற்பனை நிறைபடு முனாஜாத்*
*தறைந்தனன் முறையுற மிறங்கல் சேர்நாவால்*
*நிபுண முகியித்தீன் அப்துல் காதிர்*
*சுபமுறு நிபுணன் தபமுறு மன்னே*

*(நாராயணசாமி நாயகர், சந்தக்கும்மி, 1879)*

எனச் சிங்கப்பூர்ச் சித்திரக்கவி நாவலர் சி. வெ. நாராயணசாமி நாயகர் என்னிரு விழியன் எனக் கவிஞரைப் பாராட்டியுள்ளார். கற்றாரைக் கற்றாரே காமுறுவர் என்பதற்கேற்பக் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கிய முகியித்தீன் அப்துல் காதிறுப் புலவரைச் சிங்கப்பூர்ச் சித்திரக்கவி நாவலர் நாராயணசாமி நாயகர் பாராட்டிப் பாடியுள்ளார்.

செவத்த மரைக்காயரின் மலாக்காப் பிரவேசத் திரட்டு என்னும் நூலிற்கு இவர் தந்துள்ள சாற்றுகவியில் செவத்த மரைக்காயரின் சிறப்பு

இயல்புகளையும் அவர் படைத்துள்ள மலாக்காப் பிரவேசத் திரட்டு என்னும் நூலின் சிறப்பு இயல்புகளையும் பட்டியலிட்டுக் காட்டியுள்ளார்.

*மணிபுரைமந்திரத் தணியுரைசாளரத்*
*தணிவுறாமானினி பணியுறத்தோன்ற*
*கலைமதியெனகடி நிலைசயம்விரிய*
*சிலைமதன்கனியொடு சலியரியூரும்*
*நாகையம்பதியோன் சாகையினெடியோ*
*னீகையின்முகிதினி வாகையையழித்தோன்*
*கண்டுபாற்நனிசுவை யொண்ணுசீர்மொழியோன்*
*பெண்புகளகவலி விண்டிடும்வடிவோன்*
*தரத்தெணின்மாமித் திரத்தினுக்கிசைந்தோன்*
*சுரம்பித்தொடையோ னிரத்தினக்கடையோன்*
*மீராசாய்பெனு மாராவமிர்தன்*
*பேரால்மலாக்க வூரர்வளத்தை*
*யிலக்காயோர்ந்தவை யிலக்கணமிலக்கிய*
*வலத்தரியையுரன் பலத்தாற்கடந்தடற்*
*கேதனமேற்றிநாற் பாதனமனிப்போ*
*னாநன்னெறிப் பூதனமீலோன்*
*வாதவுரைசெய வாதிகநூலோன்*
*நோதறுவப்துல் காதிறுசாயபு*
*மரைக்கான்நவசுதன் றிருக்காண்சிவந்த*
*மரைக்கான்பாவா லுரைக்கவேகும்ப*
*னறிந்துளங்குன்றிச் செறிந்தான்றவநிலை*
*நிறைந்தசீர்ச்சேட னுறைந்தான்கீழ்த்தலந்*
*துதிபெறும் வாணி ததிமுகம் வெளுத்து*
*கதியெனக் கமலந் கதவடைத் தனனே*

*(நாராயணசாமி நாயகர், மலாக்காப் பிரவேசத் திரட்டு, 1886)*

எனச் செவத்த மரைக்காயர் படைத்துள்ள மலாக்காப் பிரவேசத் திரட்டு என்னும் நூலைப் பற்றியும் கவிஞரைப் பற்றியும் மிகச் சிறப்பாகச் சிங்கப்பூர்ச் சித்திரக்கவி நாவலர் சி.வெ. நாராயணசாமி நாயக்கர் அறிமுகப்படுத்தி யுள்ளார்.

## நன்னெறித் தங்கம் பாட்டு

நன்னெறித் தங்கம் பாட்டு என்னும் இந்நூலில் சி. வெ. நாராயாணசாமி நாயகர் மக்களுக்கு வேண்டிய நன்னெறிகளைக் கூறியுள்ளார். தங்கத்தை முன்னிலையாக்கிப் பாடியுள்ளதால் தங்கப் பாட்டு

என்றாயிற்று. இந்நூல் காப்புகள், தங்கத்தை முன்னிலையாக்கல், ஆக்கியோன் சிறப்பு, பரம பொருளைக் குறித்து, தாய்தந்தையைக் குறித்து, கல்வியைக் குறித்து, பணத்தைக் குறித்து, வியாபிசாரத்தைக் குறித்து, பொய்யைக் குறித்து, களவைக் குறித்து, வெறியைக் குறித்து, கொலையைக் குறித்து, குருவைக் குறித்து, நன்றியைக் குறித்து, பொறாமையைக் குறித்து, புறங்கூறலைக் குறித்து, ஊக்கத்தைக் குறித்து, ஒழுக்கத்தைக் குறித்து, வாழி என்னும் பத்தொன்பது தலைப்புகளில் மொத்தம் நூற்று எண்பத்து நான்கு பாடல்களைக் கொண்டுள்ளது. மக்களுக்கு வேண்டிய நன்னெறிகளை இந்நூல் நெடுகிலும் காணமுடிகிறது. இவர் படைத்துள்ள நன்னெறித் தங்கம் பாட்டில் பெங்களூர் ஸ்ரீ ல ஸ்ரீ ஆ. ஐயாசாமி முதலியார், இவரது ஆசிரியர் நாகூர் கல்விக் களஞ்சியம் ஸ்ரீ ல ஸ்ரீ கா. முகம்மதுப் புலவர், இவரது மாணாக்கர் தா. கிருஷ்ணசாமி ஆகியோர் தந்துள்ள சாற்றுகவிகள் உள்ளன. இச்சாற்றுகவிகள் மூலம் சி. வெ. நாராயணசாமி நாயகர் சிறப்பு இயல்புகள் வெளிப்படுகின்றன.

*புன்னெறிக ளெந்நெறியும் போம்போது காண்பனிபோ*
*னன்னெறித் தங்கம்பாட்டை நன்குரைத்தா – னெந்நெறிக்கும்*
*பூராய மாகப் பொருளுரைக்கும் புத்திகற்ற*
*நாராயண சாமி நா*

*(முகம்மதுப் புலவர், நன்னெறித் தங்கம் பாட்டு, 1868)*

என நாகூர் கல்விக் களஞ்சியம் கா. முகம்மதுப் புலவர் தம் மாணவனின் சிறப்புகளைப் பாடியுள்ளார்.

நன்னெறித் தங்கம் பாட்டு என்னும் இந்நூலில் கவிஞர் உலக மக்களுக்கு வேண்டிய நன்னெறிகளையும் அறிவுரைகளையும் திறம்படப் பாடியுள்ளார். தாம் கூறவந்த பொருள் குறித்து முறைப்படி ஒன்றன் பின் ஒன்றாகத் தம் கருத்துகளைக் கவிஞர் சொல்லியுள்ள பாங்கு சிறப்பாக உள்ளது. மாதா பிதா குரு தெய்வம் என்பது நம் முன்னோர் வாக்கு. மாதாவும் பிதாவும் முன்னறி தெய்வங்களாகவும் குருவும் தெய்வமும் பின்னறி தெய்வங்களாகவும் காலங்காலமாகப் போற்றப்பட்டு வருகின்றனர். எனவே பெற்றோர்களைக் காப்பது பிள்ளைகளின் தலையாய கடமை என்பதை இவரும் உணர்த்திச் சென்றுள்ளார்.

*ஈரைந்துமாதம் இணங்கிச் சுமந்து*
*நேரைந்தா யீன்றவளைத் – தங்கம்*
*நேசித்துக் கொள்வாயடி*

*நேரமறிந்து நேரமுதூட்டி*
*வாரமாய்க் காத்தவளை – தங்கம்*
*வைதடியாதே யடி*

*துட்டருடன்கூடித் துன்பமடையாமல்*
*கெட்டியாய்க் காத்தவனைத் – தங்கம்*
*கேடுநினையா யடி*

*கல்வி பயிற்றிக் கனவழிகாட்டி*
*அல்லலற வைத்தவனைத் – தங்கம்*
*அன்பாய்நீ நேசியடி*

*(நாராயணசாமி நாயகர், நன்னெறித் தங்கம் பாட்டு, 1868)*

எனச் சி.வெ. நாராயணசாமி நாயகர் பெற்றோர் இயல்புகளைப் பாடி அவர்களைக் காப்பது பிள்ளைகளின் கடமை என்று கூறியுள்ளார். இவ்வாறு இந்நூல் முழுவதும் மக்களுக்கு வேண்டிய அறிவுரைகளைக் காணமுடிகிறது. இவர் கையாண்டுள்ள சொற்கள் யாவும் படித்தவுடன் புரிந்து கொள்ளும் தன்மையன. தகுந்த இடத்தில் சிறந்த உவமைகளைப் பயன்படுத்தியுள்ளார். தேவையென இடத்தில் தமிழ் இலக்கியங்களைக் கையாண்டு உள்ளார்.

## முதலாவது பிரபந்தத் திரட்டு

முதலாவது பிரபந்தத் திரட்டு என்னும் நூலைச் சி.வெ. நாராயணசாமி நாயகர் 1873 ஆம் ஆண்டு இயற்றியுள்ளார். இந்நூலை ஜே பட்டன் அரசாங்க அச்சகம் வெளியிட்டுள்ளது. சிங்கப்பூரில் கோவில் கொண்டிருக்கும் தொண்டாயுதபாணி மீது பாடிய வடிவேலர் பதிகம், தசத்திருப்புகழ் என இந்நூல் இரு பகுதிகளைக் கொண்டுள்ளது. வடிவேலர் பதிகத்தில் பத்து பாடல்களும் தசத்திருப்புகழில் பத்துப் பாடல்களும் இரண்டு வெண்பாக்களும் ஒரு தனிப்பாடலும் என மொத்தம் 23 பாடல்கள் உள்ளன. இந்நூலின் சிறப்புகள் குறித்தும் இந்நூலை இயற்றிய கவிஞர் குறித்தும் இராமநாதபுர சமஸ்தான வித்துவான் ஸ்ரீ ல ஸ்ரீ முத்து வீரப்ப பிள்ளையவர்கள் பாராட்டிப் பாடியுள்ளார்.

*நற்சிங்கை சித்திரகவி நாரா யணஸாமிச்*
*சொற்சிங்கம் வேலன்மேற் சொற்றதமி ழெற்சிந்தைக்*
*கற்கனிய முக்கனித்தேன் கண்டியற்றிக் திக்குமெனிற்*
*சற்புருடர்க் கெத்தன்மைக் காண்*

*(முத்து வீரப்ப பிள்ளையவர்கள், முதலாவது பிரபந்தத் திரட்டு, 1873)*

என முத்து வீரப்ப பிள்ளையவர்கள் சி. வெ. நாராயணசாமி நாயகர் குறித்தும் அவர் பாடியுள்ள முதலாவது பிரபந்தத் திரட்டு நூல் குறித்தும் பாடியுள்ளார்.

இந்நூல் எழுத நேர்ந்தமைக்கான காரணத்தைச் சி. வெ. நாராயணசாமி நாயகர் பின்வருமாறு உரைத்துள்ளார். சிங்கப்பூரில் வாழுந்தமிழர்கள் கோவிலுக்குச் சென்று இறைவனை வழிபடும்போது

முன்னோர்கள் இயற்றிய பாடல்களைப் பொருள் அறியாமல் சிலர் பாடுகின்றனர். சிலர் அமைதியாக இருந்து இறைவனை வழிபடுகின்றனர். இக்குறைகளைக் களைய இவர் இந்நூலை இயற்றியதாக உரைத்துள்ளார்.

> எம்பிரான் கரிசனைக் கன்போடு ஆலயத்திற்குச் செல்பவர்களிற் பெரும்பாலோர் திருமுருகாற்றுப்படை, திருச்சந்நிதிமுறை, திருவிசைப்பா, திருப்புகழ், கந்தரனுபூதி, கந்தர்சஷ்டி முதல் வல்லோரியற்றிய திருப்பாக்களால் தோஸ்தரியாது சம்பந்தமற்ற பல கவிதைகளைப் பாடுவதாலும் சிலரோ மௌனமாய் நிற்பதாலும் தைப்பூசமாதி காலத்தில் காவடி தூக்குங்காற் பல கவிதைகளைப் பாடுவதாலும் அக்குறையை யொருவாறு நீக்கயரவருமெளிதி லுணரச் சந்தி விகாரங்களை மிக வனுசரியாமல் வெளிப்படை யாயிற்றி யச்சிடுவித்தனம்.
>
> (நாராயணசாமி நாயகர், முதலாவது பிரபந்தத் திரட்டு, 1873)

என நாராயணசாமி நாயகர் நூல் படைத்த நோக்கத்தினை உரைத்துள்ளார். இவர் கூற்றிலிருந்து தைப்பூசத் திருவிழா சிங்கப்பூரில் 1860ஆம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது என்ற தகவலும் கிடைக்கிறது.

சிங்கப்பூரில் வாழும் நாட்டுக்கோட்டையென்ற ஏழு நகரத்தார் வணிகர்கள் தங்கள் கடவுளான தொண்டாயுதபாணிக்குக் கோவில்கட்டி வழிபட்டு வருகின்றனர். அந்தக் கோவிலின் கடவுளான முருகக் கடவுள் பற்றித்தான் இந்நூல் உரைக்கிறது. முருகனின் சிறப்புகள், வணங்குவதன் தேவை, வணங்குவதால் உண்டாகும் பயன்கள் குறித்துக் கவிஞர் பாடியுள்ளார்.

*திரைமேவு முவரியிணை புவிமீதி வந்தகன்*
*சேணா டருள்துதி தனைக்*
*தெரிசித்தே னென்றுபுகல் மடமையன் முனிதந்த*
*திரிதமிழ்ப் பெருவாரியும்*
*நிரைமேவு லக்ஷணமோ பொட்டிலாக் கலைகளி*
*னிலையுமறி மேதை யோரி*
*னீக்கலறு விசை போற் பிதத்திடுஞ் சொற்களி*
*னிறை பிழைகள் கருதாமலே*
*குரைமேவு செம்பொற் சிலம்பனே தள்ளியென்*
*கொள்கையன வாள வேண்டும்*
*கூறேழு நகர்வணிகர் கொண்டாடு தெய்வமே*
*குமரனே மகுட மாறு*

*சிரமேவு கந்தனே நினதடியை நம்பினேன்*
*சிற்குண விலாச பரனே*
*தெங்குமொழி டுலங்கும்லி சிங்கைநகர் தங்குமருள்*
*சிங்கார வடிவேலனே*
*(நாராயணசாமி நாயகர், முதலாவது பிரபந்தத் திரட்டு, 1873)*

என நாராயணசாமி நாயகர் இறைவனின் இயல்புகளைப் பாடியுள்ளார். இக்கோவிலில்தான் தைப்பூசம் ஆண்டாண்டுக் காலமாக நடைபெற்று வருகிறது.

*பதிப்பாசிரியர்*

முன்னோர்கள் இயற்றிய மானிடக்கும்மி என்னும் நூலைச் சி. வெ. நாராயணசாமி நாயகர் 1889 ஆம் ஆண்டு சரிபார்த்துப் பதிப்பித்து உள்ளார். ஏட்டுப்பிரதிகளில் இருந்ததைச் சி. வெ. நாராயணசாமி நாயகர் பிழை திருத்தியபின் திருவெண்காடு ஆறுமுகசாமி பார்வையிட்டு இருக்கிறார். அதன் பிறகு சென்னைத் திருவெற்றியூர் இருசப்ப முதலியாரின் குமாரர் பரசுராம முதலியார் தம் அச்சுக்கூடத்தில் அச்சிட்டுள்ளார். எனவே இவர் நூல்களைப் பதிப்பிக்கும் பணியிலும் ஈடுபாடு காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. முன்னோர்கள் பாடியது என்பதால் சிங்கப்பூரில் வாழ்ந்த முன்னோர்களா அல்லது தாயகத்தில் வாழ்ந்த முன்னோர்களா என்பது ஆராய்ச்சிக்குரிய ஒன்றாகும். கடவுள் வாழ்த்து, கல்வியின் சிறப்பு, குடிப்பதால் ஏற்படும் கேடுகள், சூதாடுவதால் உண்டாகும் இழப்புகள், பொருட்பெண்டிர்களின் ஈடுபாட்டால் உண்டாகும் இன்னல்கள், மக்களுக்கு வேண்டிய அறிவுரைகள் என 185 பாடல்கள் இந்நூலில் உள்ளன. இந்நூல் வாய்மொழி இலக்கிய வகைகளுள் ஒன்றான கும்மிப்பாட்டு வகையைச் சார்ந்ததாகும்.

உலகில் வாழும் மக்கள் அனைவரும் நன்றாகப் படித்துக் கல்விகேள்விகளில் சிறந்து விளங்க வேண்டும். அப்படி சிறந்து விளங்கினால் அறிவின் துணைகொண்டு எச்செயலையும் மிகச் சிறப்பாகச் செய்யமுடியும். எனவே கல்வி மக்களுக்கு அவசியம் என்பதைக் கவிஞர் பாடியுள்ளார்.

*கும்மியடிமாதே குமிமியடி நீங்கள்*
*கூடி மானிடக் கும்மியடி*
*அம்மலர் செந்தமிழ் நாவலர் பாதத்தை*
*அண்டிக் கும்மியடியுங்கடி*
*சின்னவயதினில் கல்விகற்று ஞானம்*
*சிறந்த மேலோரை யண்டி முற்றும்*

*வின்ன மில்லா வுண்மை கண்டு சுகமுற*
*விரைந்து தேடுவாய் மானிடமே*
*செல்வப் பொருளைச் சதமென்றே யெண்ணிச்*
*சீறியொருவரைப் பேசாதே*
*கல்விப் பொருளைச் சதமென்றே நாளும்*
*கற்றறிவாய் நல்ல மானிடமே*

*(நாராயணசாமி நாயகர், பதி, மானிடக்கும்மி, 1880)*

எனக் கவிஞர் படிக்கவேண்டியதன் அவசியத்தை நூலின் தொடக்கத்திலேயே உரைத்துள்ளார்.

இக்காலக் கட்டத்தில் மக்கள் குடிப்பழக்கத்திற்கு அடிமையாகி வாழ்ந்துள்ளனர். அதனால் பல தொல்லைகளையும் அனுபவித்து உள்ளனர். எனவே மக்கள் குடிப்பதை நிறுத்தி மகிழ்ச்சியுடன் வாழவேண்டும் என்ற நல்ல நோக்கத்தில் குடிப்பதால் ஏற்படும் கொடுமைகளைக் கவிஞர் கவிதையாக்கியுள்ளார். குடிப்பழக்கத்திற்கு அடிமையானவர்கள் குடிக்காமல் இருக்கும்போது பித்துபிடித்தவர்கள் போல் காட்சியளிக்கும் தன்மையினைக் காணும் போது மிகவும் வருத்தமாக இருக்கிறது. அந்த அளவிற்கு மக்கள் குடிப்பழக்கத்திற்கு அடிமையாகி உள்ளதும் தெரிகிறது.

*நித்தம் நினைப்பாகவே யிருக்கும் சற்று*
*நேரம் குடியாதிருந்து விட்டால்*
*பித்து பிடித்தவன் போலிருக்கும் கெட்ட*
*பிர்மை யுண்டாகுமே மானிடமே*

*(நாராயணசாமி நாயகர், பதி, மானிடக்கும்மி, 1880))*

எனக் கவிஞர் குடிப்பவர்களின் தன்மைகளைக் காட்டி அதிலிருந்து மனிதகுலம் விடுபட வேண்டும் என தம் ஆவலைத் தெரிவித்துள்ளார்.

அடுத்துப் பொருட்பெண்டிர் குறித்து மிகவும் விரிவாகப் பாடியுள்ளார். இக்காலக் கட்டத்தில் பொருட்பெண்டிர் சமுதாயத்தில் பரவலாக வாழ்ந்துள்ளதைக் காட்டியுள்ளதோடு அவர்கள் புரியும் செயல்கள், அவர்கள் வாழ்க்கைமுறை, அவர்களுடன் உறவு வைத்துக் கொள்பவர் வாழ்க்கை முறை, அவர்களால் வரும் கேடுகள் குறித்து விரிவாகப் பாடியுள்ளார். எனவே இக்காலத்தில் சிங்கப்பூரில் இத்தொழில் செய்தவர்கள் இருந்திருக்கிறார்கள் எனக் கருதலாம். அவர்கள் இல்லை என்றால் அவர்களைப் பற்றிப் பாட வேண்டிய தேவையில்லையே.

*சிரட்டானை சிங்கம் கரடிபுலி நாகம்*
*கள்ளர் குறவரை நம்பிடலாம்*

*பூட்டகமுள்ள விம்மாதரை நம்பினால்*
*போகுமே பாக்கியம் மானிடமே*

*(நாராயணசாமி நாயகர், பதி, மானிடக்கும்மி, 1880)*

என்ற பாடல் பொருட்பெண்டிரைப் படமாக்கியுள்ளது. பொருட்பெண்டிர் எப்படிப்பட்டவர்கள் என்பதைக் கூற இதைவிடச் சிறந்த சான்று தேவையில்லை. இறுதியில் மக்களுக்கு வேண்டிய அறிவுரைகளைக் கவிஞர் பாடியுள்ளார். இவ்வாறு இந்நூல் அக்காலச் சமுதாயத்தைப் பிரதிபலிக்கும் வகையில் அமைந்துள்ளது என்பது உண்மை.

சூதாடுவதன் கேடுகளை விளக்கமாகக் கவிஞர் பாடியுள்ளார். இதிலிருந்து இக்காலக் கட்டத்தில் மக்கள் சூதாடிய செய்தி தெரிகிறது. சூதாடுதல், அதன் கேடுகள், இதனால் வரும் இழப்புகள் குறித்துக் கவிஞர் விளக்கமாகப் பாடியுள்ளதிலிருந்து சமூகப்பற்று வெளிப்படுகிறது. மேலும் கவிஞர் பழைய தமிழ் இலக்கியங்களில் தேர்ச்சி பெற்றவர் என்பதையும் அறியமுடிகிறது. மகாபாரதத்தில் தருமன் சூதாடி நாடுநகர் இழந்ததையும் நளவெண்பாவில் நளன் சூதாடி நாடுநகர் இழந்ததையும் தம் படைப்பில் பாடி மக்களைச் சரியான பாதையில் செல்ல வேண்டுகிறார்.

*நாடாண்ட தர்மன் நளனுமிச் சூதாலே*
*நாடுநகரமுந் தோற்றுவிட்டு*
*காடே கதியாயலைந்த கதைகளைக்*
*காதினால் கேட்டறி மானிடனே*

*(நாராயணசாமி நாயகர், பதி, மானிடக்கும்மி, 1880)*

எனக் கவிஞர் பாடியுள்ளதிலிருந்து அறியமுடிகிறது. ஆனால் கவிஞர் பாடிய காலத்திலிருந்து இச்செயல் முற்றும் ஒழிந்ததாகத் தெரியவில்லை.

## பிற இலக்கியப் பயிற்சி

தமிழ் இலக்கண இலக்கியங்களில் தேர்ந்த பயிற்சி உடையவர். இவர் திருக்குறள், இராமாயணம், மகாபாரதம் முதலான இலக்கியங்களில் தேர்ந்த பயிற்சியுடையவர் என்பது தெரிகிறது. நன்னெறித் தங்கம் பாட்டு நூலின் முதல் பக்கத்திலே திருக்குறள் இடம் பெறுகிறது.

*ஆக்கமுங்கேடு மதனால் வருதலாற் காத்தோம்பல்*
*சொல்லின் கட் சோர்வு*

என்ற திருக்குறள் இடம்பெறுகிறது.

*செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்*
*செல்வத்துள் எல்லாம் தலை*

*கற்றோர் என்போர் கண்ணுடையர் முகத்திரண்டு*
*புண்ணுடையர் கல்லா தவர்*

*வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்*
*உள்ளத் தனைய துயர்வு*

என்னும் குறட்பாக்களைத் தகுந்த இடத்தில் பயன்படுத்தித் தம் கருத்தை ஆழமாகக் கூறியுள்ளார். இவையெல்லாம் உலக மக்களுக்கு அவசியம் என்று அறிவுரையும் கூறியுள்ளார்.

*உவமையாட்சி*

ஒரு கவிஞனின் திறைமையை மதிப்பிடும் கருவியாக உவமை விளங்குகிறது. உவமை கவிஞனின் நுண்மாண் நுழைபுலத்தைக் காட்டுவதாகவும் அமைகிறது. உவமையால் கவிஞன் சொல்லவந்த கருத்து வன்மை பெறுகிறது. பண்டைக்காலம் முதல் கவிஞர்கள் உவமைகளைக் கையாண்டுள்ளனர். தொல்காப்பியர் உவமயியல் என்றோர் தனி இயல் அமைத்துள்ளார். இதனால் அவரது காலம் முதல் உவமையின் பயன்பாடு உள்ளது எனத் தெரிகிறது. இவர் படைத்துள்ள உவமைகளைப் பார்க்கும்போது இவரது அனுபவ அறிவு வெளிப்படுகிறது. தகுந்த இடத்தில் தகுந்த உவமைகளைக் கூறித் தம் கருத்திற்கு மேலும் வலிமை சேர்த்துள்ளார்.

*ஈரேழு நாளில் எழும்பும் மதிபோன்ற*
*சீரான முகமேவிய – தங்கம்*
*செப்புமொழி கேளடிநீ*

*கள்ளைக்குடித்துக் கட்டறுந்த மாடுபோல்*
*அள்ளூரில் வீழ்வதெல்லாம் – தங்கம்*
*அறிவற்றோர் செய்கையடி*

*கல்லாரின் வார்த்தை கழுதைக்குரலுக்குச்*
*சொல்லலா மிணையாகவே*

*ஆமைதன் முட்டை யடிக்கடி நாடும்போல்*
*ஏம்மாய் நாடுங் குருவை – தங்கம்*
*எண்ணாய் விகற்பமடி*

*திங்களைக் கண்டுத் தெளிகின்ற நாய்போல்*
*பங்கமா யெண்ணாயடி – தங்கம்*
*பாவமி வொன்றடிபார்*

*(நாராயணசாமி நாயகர், நன்னெறித் தங்கம் பாட்டு, 1868)*

எனப் பலதரப்பட்ட உவமைகளைக் கவிஞர் கையாண்டுள்ளார். இதிலிருந்து இவர் உவமையைக் கையாளுந்திறன் பெற்றவர் என்பதும் பலதரப்பட்ட அனுபவங்களை உவமையாக்கும் திறன் பெற்றவர் என்பதும் தெரிகிறது.

அகராதிப்பணி

இவர் மலாய்க்குத் 'தமிழ் வாக்கிய சங்கிரகம்' என்னும் மலாய் - தமிழ் அகராதியை 1875 ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளார். இந்த அகராதியைச் சிங்கப்பூர்த் தீனோதயவேந்திர சாலை அச்சிட்டுக் கொடுத்துள்ளது. இதன் மறுபதிப்பைச் சென்னை இட்டா பார்த்தசாரதி நாயுடு அவர்களது ஸ்ரீபத்மநாம அச்சுக்கூடம் அச்சிட்டுள்ளது. இதில் நாராயணசாமி நாயகர் தமிழர்கள் அறிந்து கொள்ள வேண்டிய மலாய்மொழிச் சொற்களுக்குத் தமிழ்மொழியில் பொருள் தந்துள்ளார்.

| *மலாய்* | *தமிழ்* |
|---|---|
| சீலாக் | மின்னல் |
| பிர்கி | கிணறு |
| ஜாலான் | தெரு, வழி, பாட்டை |

*(நாராணசாமி நாயகர், மலாய்க்குத் தமிழ் வாக்கிய சங்கிரகம்,1875)*

என்பன போன்ற மலாய்மொழிச் சொற்களுக்குப் பொருள் எழுதியுள்ளார். இது அக்காலத் தமிழர்களுக்குப் பேருதவியாய் அமைந்ததெனலாம். இந்த அகராதி தமிழர்களுக்கு அதிகம் பயன்படவில்லை என்றால் மறுபதிப்பு வரவேண்டிய அவசியமில்லையே.

தொகுப்புரை

மலாயா, சிங்கப்பூர்த் தமிழ்க்கவிதை உலகின் தொடக்கக் காலக் கவிஞராக விளங்கும் சி.வெ. நாராயணசாமி நாயகர் பன்முகப் படைப்பாளியாவார். கவிஞர், பதிப்புப்பணி, கவிதை எழுதக் கற்றுக் கொடுத்தல், நூலைச் சரிபார்த்துத் தருதல், அகராதிப்பணி எனப் பல பணிகளைச் செய்துள்ளார். இவர் பதினைந்து கவிதை நூல்களைப் படைத்துள்ளார். முன்னோர்கள் பாடிய மானிடக்கும்மி என்னும் நூலைச் சரிபார்த்துப் பதிப்பித்துள்ளார். இவர் சிங்கப்பூரில் வாழ்ந்து படைப்புகளைப் படைத்தபோதும் இவரைப் பற்றி மலாயா, சிங்கப்பூர் அறிஞர்களுக்கு அதிகம் தெரியவில்லை. இவர் படைத்துள்ள நூல்கள் சிங்கப்பூரில் எவரிடமும் இருப்பதாகத் தெரியவில்லை. சிங்கப்பூர்த் தேசிய நூலக வாரியத்திலும் இல்லை.

மலேசியத் தமிழ்க் கவிதைக் களஞ்சியத்தைத் தொகுத்த முனைவர் முரசு நெடுமாறன், சிங்கப்பூர்ச் சித்திரக்கவி நாவலர் சி.வெ. நாராயணசாமி

நாயகர் இசைப்பாடல்கள் இயற்றுவதில் வல்லமை பெற்றவர் என்ற கருத்தைச் சுட்டிக்காட்டி ஒரு பாடலைத் தம் தொகுப்பில் பதியவைத்துளார். சிங்கப்பூர்த் தமிழறிஞர் முனைவர் சுப. திண்ணப்பன் சிங்கப்பூர்ச் சித்திரக் கவிஞர்கள் என்னும் கட்டுரையில் இவர் சித்திரக்கவிதை படைக்கும் திறனுடையவர் எனக் குறிப்பிட்டுள்ளார். இவர்கள் இருவரைத் தவிர வேறு யாரும் இவரைப் பற்றி எந்தக் குறிப்பையும் சுட்டவில்லை; கட்டுரை எதுவும் எழுதவில்லை. இதுவே இவரைப் பற்றிய முதற் கட்டுரையாகும்.

இவர் தம் மாணவர்கள் முகம்மது அப்துல் காதிறுப் புலவர், முகியித்தீன் அப்துல் காதிறுப் புலவர், செவத்த மரைக்காயர் ஆகியோர்க்குச் சாற்றுகவிகள் அளித்துள்ளார். இம்மூன்று கவிதைகளையும் பார்க்கும்போது இவரது நுண்மாண் நுழைபுலம் தெரிகிறது. இந்தக் கவிஞர்களையும் அவர்களது நூல்களின் சிறப்பையும் அறிமுகப்படுத்தியுள்ள பாங்கு போற்றும்படி உள்ளது.

இவர் தமக்குத் தமிழைக் கற்றுக் கொடுத்த நாகை கா. முகம்மது புலவரைப் பற்றி ஒரு பாடல் புனைந்துள்ளார். இப்பாடல் வழி இவரது நன்றி பாராட்டும் மாண்பைக் காணமுடிகிறது.

இவர் படைத்துள்ள நன்னெறித் தங்கப்பாட்டு காலத்தால் மூத்த நூலாகும். இந்நூல் 1868 ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது. இதில் மக்களுக்கு வேண்டிய அறிவுரைகளைக் கவிஞர் படைத்துள்ளார். முதலாவது பிரபந்தத் திரட்டு என்னும் நூல் சிங்கப்பூரில் கோவில் கொண்டிருக்கும் முருகனின் சிறப்பு இயல்புகளை எடுத்துரைக்கும் இனிய பாமாலைகளின் தொகுப்பாகும். மானிடக்கும்மி இவர் பதிப்பித்த நூலாகும். ஏட்டுப் பிரதிகளில் இருந்ததை இவர் சரிபார்த்துப் பதிப்பித்துள்ளார். இவர் படைத்துள்ள பிற தொகுப்புகளைப் பற்றிய குறிப்புகள் ஏதும் கிடைக்கவில்லை.

மலாயா, சிங்கப்பூர்த் தமிழ்க்கவிதை வரலாற்றில் இடம்பெற்றுள்ள சிங்கப்பூர்ச் சித்தரக்கவி நாவலர் சி.வெ. நாராயணசாமி நாயகர் குறித்து அறிய விரும்புவோர்க்கு இக்கட்டுரை அறிமுகக் கட்டுரையாக அமையும் என்பது உறுதி.

### துணை நூல்கள்


1. உவைஸ், இசுலாமியத் தமிழிலக்கிய வரலாறு, இரண்டாம் பாகம், பதிப்புத்துறை, காமராசர் பல்கலைக்கழகம், மதுரை, தமிழ்நாடு.
2. செவத்த மரைக்காயர், மலாக்கா பிரவேசத் திரட்டு, தீனோதய வேந்திரச்சாலை, சிங்கப்பூர், 1886.
3. முகியித்தீன் அப்துல் காதர், சந்தக்கும்மி, தீனோதய வேந்திரச் சாலை, சிங்கப்பூர், 1879.

4. முகம்மது அப்துல் காதிறுப் புலவர், முனாஜாத்துத் திரட்டு, ஜே. பேட்டன் அரசாங்க அச்சகம், சிங்கப்பூர், 1872.

5. நாராணசாமி நாயகர் சி.வெ., நன்னெறித் தங்கப் பாட்டு, The Vurthaman Tharuginee Branch Press, No 8 Venkier Street Near The Mint, Madras, South India, 1868.

6. நாராணசாமி நாயகர் சி, வெ. முதலாவது பிரபந்தத் திரட்டு, ஜே பட்டன் அரசாங்க பிரஸ், சிங்கப்பூர், 1873.

7. நாராணசாமி நாயகர் சி.வெ., மலாய்க்குத் தமிழ் வாக்கிய சங்கிரகம், தீனோதய வேந்திரச் சாலை, சிங்கப்பூர், 1875.

8. நாராணசாமி நாயகர் சி.வெ., மானிடக்கும்மி, பரப்பிரம முத்திராஷரசாலை, இந்தியா, 1880.

# மலேசியத் தமிழ்க் கவிதையுலகில் ஒரு விண்மீன்

முனைவர் முரசு நெடுமாறன்
*மலேசியா*

தமிழ்நாட்டையும் ஈழத்தையும் அடுத்துத் தமிழிலக்கியம் செழித்து வளரும் நாடுகளில் குறிப்பிடத்தக்கது மலேசியா. மேற்படி இருநாடுகளிலிருந்து தமிழர் புலம்பெயரத் தொடங்கிய காலத்திலிருந்தே இங்குத் தமிழிலக்கியம் வாய்மொழியாகவும் எழுத்து வடிவாகவும் கால்கொள்ளத் தொடங்கிற்று. வாய்மொழி இலக்கியம் மூத்தது, எழுத்து இலக்கியம் சற்றுப் பிந்தியது.

இங்கு வெளிவந்த எழுத்து வடிவ இலக்கியங்களின் காலத்தை ஆராயும் பொழுது 1862 இல் வெளிவந்த தண்ணிமலை வடிவேலர் ஆசிரிய விருத்தமே முதல் நூலாகக் கருதத்தக்கது. இதனை இயற்றியவர் முத்துக் கருப்பன் செட்டியார். முதலில் தோன்றிய கவிதையோடுசிறுகதை, புதின நூல்களும் பிறப்பெடுத்தன. இதழ்கள் வழி இலக்கியம் பிறந்தது. இக்கட்டுரையின் நோக்கம், கவிதைத்துறை வளர்ச்சியை ஓரளவுக்குத் தொட்டுக்காட்டி, இங்கு மூத்த மறுமலர்ச்சிக் கவிஞராய் விளங்கிய கவிதைவேள் கா. பெருமாளின் சுருக்கமான வரலாற்றுக் குறிப்பையும் அவர் கவிதைப் பணியையும் எடுத்துரைப்பதாகும்.

மலேசியாவின் மறுமலர்ச்சிக் கவிஞருள் மூத்தவராக மதிக்கப் பெறுபவர் கவிதைவேள் என்னும் அடைமொழியைக் கொண்டவரான கா. பெருமாள் அவர்கள் 1929ஆம் ஆண்டு தமிழ்நாட்டின் நாமக்கல்லில் பிறந்தவர். தந்தையார் பெயர் காளியண்ணன், தாய் பழனியம்மாள். 1938 இல் மலாயாவுக்கு வந்து, கேமரன் மலையில் தம் வாழ்க்கையைத் தொடங்கினார். இவர் ஒரு பல்கலைச் செல்வர். குறிப்பாக, நாட்டுப்புறக் கலைகளில் நல்ல தேர்ச்சியுடையவர். சிலம்பக்கலை, ஓவியக்கலை கைவரப் பெற்றவர். நாடகச் திரைச்சீலைகள் வரைவதிலும் காட்சி அமைப்புகளை வடிவமைப்பதிலும் ஒப்பனை செய்வதிலும் வல்லமைப் பெற்றவர். தச்சுக்கலை, மற்போர் அறிந்தவர். இரண்டாம் உலகப்போரின் போது இந்திய இராணுவத்திலும் பங்குகொண்டு நாயக் பகுதிக்குத் தலைமை ஏற்றுள்ளார்.

மலேசியத் தமிழ்க் கவிதைத் துறையை வளப்படுத்திய முதன்மை யானவர்களில் குறிப்பிடத்தக்க ஒருவரான இவர், இதழ்களில் நிரம்பக் கவிதை எழுதியுள்ளதோடு மலேசிய, சிங்கப்பூர் வானொலியில் நாடகங்கள், இசைப்பாடல்கள், வில்லுப்பாட்டு போன்ற நிகழ்ச்சிகள் படைத்துத் தனிச் சிறப்புப் பெற்றுள்ளார். மேடை நாடகத் துறையிலும் முத்திரை பதித்தார்.

நாடகத்துறையில் இவரின் அருஞ்செயல் எனச் சொல்லத்தக்கது, காட்டினுள் மறைந்து அரசை எதிர்த்து வந்தபோது பொதுமக்களுக்குத் தொல்லைகள் விளைவித்த பொதுவுடைமையாளரை ஒடுக்க அரசு மேற்கொண்ட முயற்சிகளுக்கு உதவத் தோட்டங்கள்தோறும் நாடகங்கள் நடத்தி மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தியதாகும்.

தமிழகத்தில் பிறந்து மலேசியாவில் வாழ்ந்து கலை, இலக்கியத் தொண்டுகள் புரிந்து சிங்கப்பூர் அரசின் அழைப்பை ஏற்றுச் சென்று அங்கு வானொலியில் பணியாற்றியவர், இறுதிவரை அங்கேயே வாழ்ந்தவர். மலேசிய வானொலியில் பல்வகை நாடகங்கள், வில்லுப்பாட்டு போன்ற நிகழ்ச்சிகளைப் படைத்ததற்கு ஒருபடி மேலாகச் சிங்கப்பூரில் தரம் வாய்ந்த நிகழ்ச்சிகளைப் படைத்தார். மேலும் அன்பு என்னும் தத்துவம் இஸ்லாம், சிங்கப்பூர்ப் பாடல்கள் ஆகிய இசை நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து படைத்தார். அப்பாடல்களைத் தொகுத்து நூல்களாகவும் வெளியிட்டார்.

சிங்கப்பூர்த் தமிழ் ஆட்சிமொழிகளில் ஒன்றானதால் இவர் படைத்த தமிழ் நிகழ்ச்சிகள் தேசிய அளவில் மதிக்கப்பெற்றன.

இளமைக் காலத்தில் பொருள் வளமற்றுப் பெருந்துன்பங்களை எதிர்கொண்ட இவர் சிங்கப்பூரில் வளமாக வாழ்ந்தார். இவர் மனைவியும் பிள்ளைகளும் சிங்கப்பூரில் வாழ்ந்து வருகின்றனர்.

*படிப்பதற்கும் பாடுதற்கும் ஏற்ற தன்மையோடு*
*பாப்புனையத் தமிழறிவும் இசையறிவும் வேண்டும்*
*வடுப்படியா வகையினிலே இவையிரண்டும் கற்ற*
*வான்கவிதைவே ளென்பேன் காபெருமாள் தன்னை*

என்று கவிஞர் க.மு. ஷெரிப் கவிஞர் பெருமாளின் கவிதை எழுதும் ஆற்றலுடன் இசையறிவும் உள்ள திறத்தினைக் காட்டியுள்ளார். இவருடைய பாடல்கள் இசைப்பாக்களாகும். கேட்பவர் உள்ளங்களை மகிழவைக்கும் ஆற்றலுடையன.

*கோலமிடும் குயில்பாட்டு*
*கொண்டாடும் ஏர்உழவர்*
*தாளமிடும் வயல்பாட்டு*
*தக்க வில்லுப்பாட்டு*
*தா பெருமாள் தா வென்று*
*தமிழன்னை கேட்கிறாள்*
*கா பெருமாள் கவிதைகளைக்*
*காதாரக் கேட்டு*

என்று கவிஞர் உலகநாதன் இவருடைய கவிதைகளின் தன்மைகளைப் பாராட்டியுள்ளார்.

தொழிலாளர் ஏடான சங்கமணியில் மிகுதியான கவிதைகள் படைத்துள்ளார். பிற ஏடுகளிலும் எழுதியுள்ளார். இவர் படைத்துள்ள சில கவிதைகளைச் சுவைப்போம்.

மலேசியப் பாவலர்களுள் எவர்க்கும் கிட்டாத ஒரு பெரும்பேறு இவருக்குக் கிட்டியது. அதனை இங்குக் குறிப்பிட்டே ஆகவேண்டும். 1957ஆம் ஆண்டு ஆகஸ்ட்டு மாதம் 31ஆம் நாள் மலாயா பிரிட்டீசாரிடமிருந்து விடுதலை பெற்றது. அன்று இரவு 12.00 மணிக்கு பிரிட்டீசார் கொடி ஒரு கம்பத்தின் மேலிருந்து கீழிறங்க மெர்டேக்கா! மெர்டேக்கா! என்ற விடுதலை முழக்கத்தோடு மலேசியக் கொடி எழுச்சி முழக்கத்தோடு மேலே ஏறியது. அந்த நேரத்தில் விடுதலையை வரவேற்கும் வண்ணம் மலாயா வானொலியில் இவர் பாட்டு ஒலிபரப்பானது. இப்பாடல் விடுதலை முழக்கம் என்ற நாடகத்தில் இடம் பெற்றது.விடுதலை பெற்ற தாயகத்தை வாழ்த்திய அம் முதல் பாடலின் சில அடிகள் இவை.

*இருளைக் கிழித்தெழுந்தான் – சுதந்திரம்*
*என்னும் சுடரொளியோன்*
*எண்திசை ஆழிசூழ் ஏற்ற மிகுந்தவள்*
*மண்ணெல்லாம் பொன்னாக மாற்றும் திறன் மிக்காள்*
*கண்கள் திரைபட்டுக் கலங்க விடேனென்று*
*புன்மை அடிமைஎன்னும் பூட்டை உடைத்தெரிந்து இருளைக்*
*கிழித்தெரிந்தான்*

*(ம.த.க. களஞ்சியம், பாடல் எண் 470)*

இங்ஙனம் நாட்டுப்பற்றுக் கொண்டு இவர் பல பாடல்கள் எழுதியுள்ளார். நாட்டு விடுதலை மட்டும் போதாது. ஒருவருக்குத் தனிமனித விடுதலையயும் மிக முதன்மை என்பதனையும் எடுத்துக் கூறியுள்ளார். பிற நாட்டார் கைப்பற்றும்போது ஒரு நாடு அடிமை நாடாவது போல் மனத்தைப் பற்றும் சோம்பல் ஒருவனை அடிமையாக்குகிறது என்று விடுதலைக்குப் புதுவிளக்கம் தருகிறார்.

*பூமி குடைந்து புற்றெடுத்துத் தானியங்கள்*
*சேமித்து வாழும் சிற்றெறும்பு போல் மரின்*
*சோம்பல் அடிமையினைச் சுற்றிப் பிணைந்திருக்கும்*
*தாம்பு அறுந்துவிழத் தங்கும் சுதந்திரமாம்*

*(ம.த.க. களஞ்சியம், பாடல் எண் 71)*

மனிதன் தன்னைப் பற்றியுள்ள சோம்பல் என்னும் அடிமைத் தன்மையை அறுத்து விடுதலைப் பெற்றால்தான் நாட்டு விடுதலையால் கிட்டும் வாழ்வை நுகரமுடியும் என்கிறார்.

கவிதைவேள் கா. பெருமாள் தொழிலாளர் துயர் குறித்து மிகுதியாக எழுதியுள்ளார். மேலும் அவர்கள் கல்வி அறிவற்றவர்களாய் இருப்பது மிகவும் கொடுமை என்கிறார். அக்கருத்தை உள்ளடக்கிய கவிதை இது.

*அண்டத்தை ஒரு நொடியில் அழிக்க ஆக்க*
*அவன் கற்றும் தன்குடும்பம் வறுமைக் காற்றால்*
*துண்டாடிப் போகாமல் வாழ்ந்து காட்டத்*
*தொழிலாளி கல்லாமை கொடுமை யாகும்!*

*(ம.த.க. களஞ்சியம், பாடல் எண் 71)*

ஆக்கத்தை ஏற்படுத்தும் ஆற்றலைப் பெற்றுள்ள தொழிலாளி வறுமைப் பிடியிலிருந்து மீண்டு நல்லபடி வாழ்ந்துய்ய வழிகாட்டும் கல்விச் செல்வத்தைப் பெறாமலிருப்பது கொடுமை என்று குமுறுகிறார்.

கல்வி வாய்ப்பின்றித் தொழிலாளர்கள் உழைத்துழைத்து ஓடான அவலங்களைக் கண்டவரான கவிஞர் அந்தச் சீர்கேட்டைக் கவிதைவழிப் படம்பிடித்துக் காட்டிவிட்டுச் சென்றிருக்கிறார். பல்வேறு பொருள் குறித்தெல்லாம் பாடியுள்ளதோடு இயற்கை குறித்தும் நல்ல கற்பனை வளம்கொண்ட பாடல்களைத் தந்துள்ளார். ஒளியும் வெப்பமும் தந்து உயிர்களைக் காக்கும் கதிரவனை அவர் நோக்கும் அழகு தனியழகாகும்.

கடலிலிருந்து எழும் மேகம் வானத்தையடைந்து மழையாகப் பொழியக் கதிரவனின் பங்கு பெரும்பங்காகும். அதனை ஒரு நாடகப் பாங்கொடு கவிஞர் படம்பிடித்துக் காட்டுவது அருமையான படையலாகும்.

கதிரவனை ஆணாகவும் கடலைப் பெண்ணாகவும் உருவகப்படுத்தி அந்த இரண்டிற்கும் ஏற்பட்ட காதலால் பிறந்த பிள்ளையே மழை என்கிறார். அவர் காட்டும் அரிய நாடகக் காட்சிகளில் சில இதோ.

கதிரவன் கடல்கன்னியைச் சந்தித்துத் தன் விருப்பத்தைக் கூறுகிறது இப்படி

*மின்னும் கடலைப் பொன்னாளை மோகித்து*
*வேட்கை உரைத் தானாம் – வெயிலவன்*
*வேட்கை உரைத் தானாம்*

பின்னர் கதிரவனும் கடலும் கூடிக் கலந்ததால் கருக்கூடுகிறது. அதனை இந்த அடிகளில் கூறுகிறார்.

ஆழியைச் செங்கதிர் கூடிக்கலந்ததால்

*ஆவி உருவடைந்தாள் – வானம்*
*மேவிக் கருவடைந் தாள்*

இந்த நிலைக்குப் பின் ஆவியில் குளிர்காற்றுப் பட்டதும் மழையாகிப் பொழிகிறது.

*சில்லென்ற மென்காற்று பட்டதும் மேகப்பெண்*
*சிந்தை குளிர்ந்தனளாம் – மாரி*
*சிந்திப் பொழிந்தனளாம்* (ம.த.க., பாடல் எண் 1)

இயற்கை நிகழ்வான மழைப்பொழிவை ஓர் இனிய உருவக நாடகமாக்கிப் படைத்திருக்கும் கவிதைவேளின் பாத்திறன் நம் உள்ளத்தைக் கொள்ளை கொள்கிறது. கற்பனை கலக்கக் கூடாத ஓர் அறிவியல் உண்மையைக் கலைக்கு உயிரான கற்பனைத் தேனில் குழைத்துரைத்து நாடகப் பாங்கிலான ஓர் உருவகக் கதையைப் படைத்துள்ள திறன் வியந்து பாராட்டுதற்குரியதாகும்.

இவர் இதழ்களில் எழுதியதோடு நூல்களும் வெளியிட்டுள்ளார் எனினும் வானொலியில் படைத்தவையே மிகுதி. அருமையான கவிதை நாடகங்கள் எழுதி உருவாக்கிப் படைத்துள்ளார். அவற்றுள் மிகவும் புகழ்பெற்ற ஒன்று கட்டைவிரல். அது இன்றளவும் பேசப்பட்டு வருகிறது. ஏகலைவன் கதையான இதன் மூலப்படைப்பில் உள்ள குறைகளை - மூடநம்பிக்கைகளை - ஏற்றத் தாழ்வுகளை இவர் துணிச்சலோடு இந்நாடகத்தில் சாடியுள்ளார். ஊடக வளர்ச்சி மேம்பாடு அடையாத அக்காலத்தில் மிகப் பெரும்பாலோர் செவிமடுத்த வானொலியில் இங்ஙனம் ஒலிபரப்புவதற்கு மிகுந்த துணிச்சல் வேண்டும். அத்துணிச்சல் அவருக்கு இயல்பாகவே இருந்தது. சில எடுத்துக்காட்டுகள் வருமாறு.

ஏகலைவனிடம் வில்லேந்துதலுக்கு மிக முதன்மையான கட்டைவிரலைக் காணிக்கையாகக் கேட்டுப் பெற்றார். அந்த இழுதகைமை புரிந்த துரோணரை இங்ஙனம் சாடுகிறார்.

*மாகொலைக்கும் அஞ்சாத மனம்படைத்த கள்ளனைப்போல்*
*தஞ்ச மடைந்தவரைத் தாங்கும் திருமறைத்து*
*வஞ்சம் உருவெடுத்து வந்ததுபோல் அங்குற்று*
*தீய கருத்தைச் சிரமேற்றுக் கொண்டு, மதி*
*மாய்ந்த வெறுங்கூட்டுத் துரோணர்*
(கட்டைவிரல், ப. 34)

என்பது அவர் சாடலாகும். மேலும் அவர் கொதிப்பு இப்படி வெளிப்படுகிறது.

*ஆசிரியர் எல்லார்க்கும் அழுக்காறு தேடிவைத்த*
*ஓ, சிறியா அந்தணர்கள் ஒழுக்கம் இதுதானா?*
*பூணூல் உனக்கெதற்கு? போடுகழுத் தில்சுருக்கு!*
*நாணமில்லா உன்போன்றோர் நனிவாழ ஞாயமுண்டோ?*
*குருவின் உருவில் வந்த குணக்கேடா! ஆசிரியத்*
*தருமம் இதுதானோ? சதிகாரச் சண்டாளா!*

*(கட்டைவிரல், ப. 36)*

இப்பாக்களில் உள்ள நீரோட்டம் கா. பெருமாள் பாத்திறனுக்கோர் எடுத்துக்காட்டு. இவர் இன்னொரு வகையில் ஆற்றிய தொண்டு இங்கு இசைத்தமிழுக்கு உயிர்கொடுத்தது. அன்பு எனும் தத்துவம் இஸ்லாம், சிங்கப்பூர்ப் பாக்கள் என்ற தலைப்புகளில் அவர் எழுதி பண் ஊட்டி ஒலியேற்றிய பாடல்கள் இசைத் தமிழ் வளர்ச்சிக்கு உதவின. அவை நூலாக்கம் பெற்று வெளிவந்துள்ளன. அன்பு என்னும் தத்துவம் இஸ்லாம் என்ற நூலிலிருந்து எடுத்துக்காட்டாகச் சில அடிகள்.

*துன்பம் துடைப்பது அன்பு – மனத்*
*துயரைத் துடைப்பது அன்பு*
*வன்பகை அற்றது அன்பு – நல்*
*வாழ்வில் சிறந்தது அன்பு*
*இன்பம் என்பது இஸ்லாம் – புவிக்கு*
*ஏற்றம் சேர்ப்பது மார்க்கம்*
*அன்பெனும் அருளை மழையாய் – ஈங்கு*
*ஆக்கினான் அல்லாஹ் அல்லாஹ்*

*(அன்பு எனும் தத்துவம் இஸ்லாம், ப. 46)*

அடுத்து சிங்கப்பூர் பாடல்களிலிருந்து ஓர் எடுத்துக்காட்டு.

*கடலலைகள் தாலாட்டக் கரையொதுங்கும் கப்பல்*
*கண்டுநிதம் பெருமை கொள்ளக் கண்திறவாய் கண்ணே!*
*திடல் அடுத்து நடைபழகும் அண்ணன்களைப் பாராய்*
*சிங்கைநகர் வீதியிலே நடைபழக வாராய்*

*(சிங்கப்பூர் பாடல்கள், ப. 5)*

இங்கு இசைப்பாடல் எழுதிய, எழுதிவரும் ரெ. சண்முகம், கரு. திருவரசு, காரைக்கிழார், தீப்பொறி பொன்னுசாமி, பொன். மகேந்திரன், அ.பு. திருமாலன் போன்றோர்க்கு இவரே முன்னோடி. நாட்டுப்புறக் கலைகளில் தோய்ந்த இவருக்கு இசைப்பாடல்கள் இயல்பாய் பிறந்தன. இசைச் செறிவும் தாளக்கட்டும் கொண்டு மிளிர்ந்தன.

மலேசியத் தமிழிலக்கியம் - கவிதை - இவரால் அழுத்தம் பெற்றது. கவிவாணர் ஐ. உலகநாதனால் அயலகம் மதிக்கும் ஒரு நிலையைப் பெற்றது. கரு. வேலுச்சாமி, ப.மு. அன்வர், கரு. திருவரசு, காரைக்கிழார், இரா.பாண்டியன், எல்லோன், தீப்பொறி பொன்னுசாமி, சி. சீனி நைனா முகம்மது போன்றோரால் நிலைக்கத்தக்க பாக்களினைப் பெற்றது. மலேசிய, சிங்கப்பூர் கவிதையுலகின் ஒரு விண்மீனாகத் திகழ்ந்த இவர் 1979 இல் புகழுடம்புபெய்தினார். இவரின் பாக்கள் மலேசிய தமிழ்க்கவிதையுலகில் என்றென்றும் மாணிக்கங்களாய் நிலைத்திருக்கும்.

# பெருவெளியைச் சுமந்தவாறே பறத்தல் (மலேசிய, சிங்கப்பூர்த் தமிழ்க் கவிதைகள்- சமகாலச் செல்நெறிகள்)

முனைவர் தெ. வெற்றிச்செல்வன்
*அயல்நாட்டுத் தமிழ்க்கல்வித்துறை*
*தமிழ்ப் பல்கலைக் கழகம்*
*தஞ்சாவூர்*

## மலேசியத் தமிழ்க் கவிதை

காலனிய காலத்துக் கூலிகளாய் வந்திறங்கி, குருதிசிந்தி மலேசிய மண்ணில் பச்சைப் பசும் வெளியாய் தேயிலையும் அரப்பரும் கொப்பரையும் செம்பனையும் எனத் தோட்டவளமும் தொழில்வளமும் செழிக்கச் செய்து இன்று மலேசியாவை எழுந்து நிற்கச்செய்தவர் தமிழர். தோட்டத் துண்டாடல் பிரச்சினை போன்ற பல்வேறு இடர்ப்பாடுகளிலிருந்தும் இடிபாடு களிலிருந்தும் மீண்டு வாழ்ந்து வருகிறது, மலேசிய மண்ணில் தமிழினம். மொழியும், பண்பாடும் காக்கும் பெருமுயற்சியில் கடந்த ஆண்டுகள் போராட்டங்களை முன்மொழியவும் வழிமொழியவும் செய்தன. சொந்தமண்ணின் உறவுகளில் நேர்ந்த சாதக பாதகங்கள், நட்புறவு, முரண்கள், மோதல்கள், வந்தமண்ணில் நேர்ந்த வாழ்க்கைப் பாடுகள் இவையாவும் மலேசியத் தமிழ்க் கவிதைக்குள் கருவாகி உயிர்க்கின்றன.

மொழிச்சிதைவும், தேய்வும் படைப்பாளிகளால் மிகுந்த கவலைக்குரியனவாய்க் கருத்தில் கொள்ளப்படுகின்றன.

*தமிழ் வார்த்தை உச்சரிக்கப்படுவதில்லை*
*. . . . . . . .*
*கல்தோன்றி மண்தோன்றிய*
*காலத்திற்கு முன்தோன்றிய*
*மொழி*
*கண்மூடி திறக்கும் முன்னே*
*காணாமல் போகும் அபாயத்தில். . .*

என்று துன்பப்படுகின்றார் சல்மா சலீம் தம்பி .மொழியோடு தமிழர் வாழ்வுத் தடம் குறித்த ஆதங்கமும் சல்மா சலீம் தம்பியின் குரலில் தொனிக்கிறது.

*குனிந்துநட்ட*
*ரப்பர் மரத்துக்கு*

*நீண்ட ஆயுள்*
*நட்ட அப்பாவுக்கோ*
*அல்ப ஆயுள்*
*வெட்டிய ரப்பர் மரப்பால்*
*உறையும் முன்னே*
*அம்மாவின் ரத்தம்*
*உறைந்தது...*
*'வெட்டுக்குக் கூட*
*அடையாளமாய் நம்பர்'*
*எங்கள் அடையாளம்*
*தெரியாமலே ரப்பர் மரங்களில்*
*தேடல்...*
*தோட்டம் கைமாறிவிட*
*வாழ்க்கையும் பறிபோய்விட*
*பசைபோல் ஒட்டிய ரப்பர் உறவு*
*ஒட்டப்படாமலே...*
*"ஐயோ ... அம்மா*
*மொழிப்பிச்சை போடுங்கள்" இது*
*தமிழனின் 21–ம் நூற்றாண்டின் குரல்*

என்று உமாதேவி மாரப்பன் கவிதையில் குறிப்பிடுவது மொழிகாக்கும் போராட்டம் பற்றிய சித்திரிப்பே. இரண்டாம் மொழியினராகப் பல்லின பன்மொழிச் சூழலில் வாழநேரும் போது எதிர்ப்படும் பல்வேறு இடர்களை மலேசியத் தமிழ்ச்சமூகம் முகம் கொடுக்க வேண்டியுள்ளது. எனவே நம்பிக்கையூட்ட வேண்டி, எழுச்சி கொள்ள வேண்டிக் கவிஞர்கள் உந்து சக்தியாக விளங்கும் அடையாளம் மாரிமுத்து நாகரெத்தினம் கவிதையில் தெரிகிறது.

*நாணலல்ல நாம்*
*துவண்டு சாய்வதற்கு*
*நம்பிக்கை ஆலமரமாகத்*
*துணிந்து நில்லுங்கள்*
*தோல்வி நிலையில்லை*
*புறப்படுங்கள்*
*புதிய முகவரியோடு*

சஞ்சிக்கூலிகள் மலேசியா வந்து நூற்றாண்டுகள் கடந்த பின்னும் கூடத் தமிழர் வாழ்வு மலரமறுக்கும் அவலம் குறித்து உதயகுமாரன் கந்தசாமி எழுதுகிறார்.

*கஞ்சிக்கூலிகளாய்*
*சகதியில் புரண்டது போதும்*
*விழுந்த சந்ததி*
*எழுந்து வராததால்*
*எத்தனைத் தொல்லைகள்*
*மாதந்தோறும்*
*மரத்தை எரிந்து*
*என்ன புண்ணியம்*
*மாற்றுடை கிடைக்காமல்*
*தோட்டங்கள் நிர்வாணமாய்...*
*பாட்டாளி உண்ணாவிரதம்*
*முதலாளி மௌனவிரதம்*
*வயிற்றுக்குள்*
*வறுமையின் திருவிழா*

என நீளும் வாழ்வு குறித்த கவலையையும், அக்கறையையும் மலேசியத் தமிழ்க் கவிதை தன்னகத்தே கொண்டுள்ளது.

தோட்டங்கள் தந்த வாழ்க்கை, பின்னர் நகரமயமாக்கலில் தொலைகிற அடையாளம் என மலேசியத் தமிழ்க் கவிதை வரலாற்றில் செறிவும் தேர்ந்த கட்டமைப்பும் கொண்டன பாலமுருகனின் கவிதைகள். தற்செயலாக நகரத்தில் தென்படும் மாமரத்தின் மீதான விசாரணையாய்த் தொடங்கும் பாலமுருகனின் புலம் பெயர்ந்த வேர்களின் சந்திப்பு கவிதையில் மாமரத்துக்கும் கவிஞருக்குமான உரையாடல் இப்படி அமைகிறது.

*என்னைப்பிடுங்கி*
*நகரத்தில் நட்டுவிட்டார்கள்*
*அப்படியென்றால்*
*தோட்டத்திற்கு*
*திரும்பமாட்டியா?*

இது மாமரத்தின் குரல் மட்டுமல்ல : நகரவாசியாகிய பின், தன் வேர் மறந்த தமிழ்த் தலைமுறையின் குரலாகவும் நீட்சிபெறக் காண்கிறோம்.

*காலம் கரையும்*
*பிள்ளை வளருது*
*எங்கயா இன்னும்*
*வரலே*
*பிறந்த சூரா?* *(சூரா – பிறப்புப் பத்திரம்)*

என்னும் கேள்வியில் பிறப்புப் பத்திரம் பெறுவதில் படும் அல்லற்பாடுகளை அலசுகிறது. பத்திரம்பெற முடியாமையால் கல்விக்கூடச் சேர்க்கையிலிருந்து அன்றாட வாழ்வின் அத்தியாவசியத் தேவைகள் வரை திண்டாட்ட மாகிறதைப் படிக்கிறோம். 'பிறப்பைப் பற்றிய கோணங்கியின் செய்தி' எனும் இக்கவிதை பேச்சுவழக்கில் அமைந்த கவிதையாகத் தனித்துவமான அடையாளத்துடன் வெளிப்பட்டுள்ளது. அம்பாங்பாய் குளத்தில் எப்போழுதோ வீசிய முகம் கழன்ற, கால் அறுந்த பொம்மைகளும்... தோட்டப்பத்திகளில் சேமித்துவைக்கப்பட்ட 'டெ பால்வாளிய தூக்கிட்டுவாடா' எனும் அம்மாவின் குரலும், வெற்றிலை வாசம் வீச, 'டெ கண்ணு பாட்டிக்கு வெத்தலை மடிச்சுக் கொடுடா பெரட்டுக்கு மணியாச்சி' எனும் அம்மாச்சிக் கிழவியின் குரலும் நினைவில் தங்கி 'மீதமிருக்கிறது தோட்டம்' கவிதைவழி காலம் அகன்ற சூன்யத்தின் பெருவெளியைச் சுமந்தவாறே பறந்து வருகின்றன.

சிவா பெரியண்ணன் கவிதையும் கூடத் தோட்ட வாழ்க்கை பற்றிய நினைவுகளை அசைபோட்டுப் பார்க்கிறது.

*தாய்சுரந்து அகம் வளர்ந்தது*
*இரப்பர் சுரந்து புறம் வளர்ந்தது*
*மனம் இலயிக்கவில்லை ஏனோ*
*இரப்பர் மனிதர்களைப் புதைத்து*
*துளிர்த்த*
*செம்பனைத் தழுவல்களில்*
*மெல்லிய தூறலின் போது*
*நாசிவழி உணரமுடிந்தது*
*மண்ணும்*
*மனிதன்கொண்டி ருப்பதை!*
*அகோரமாய் ஓலமிட்டு*
*பின் அமைதிகண்டு*
*மீண்டும் இனி நிகழக்கூடும்*
*திவச தினங்களில் மட்டும்*
*தோட்டத்திற்கான என் வருகை*

என்பதாகத் தோட்டத்தை இவர்கள் வளர்த்ததும் தோட்டம் இவர்களை வளர்த்ததும் பின்னிப்பிணைந்திருக்கத் தோட்டத்தைப் பிரிந்த நவீன வாழ்க்கையில் தோட்டம் மலரும் நினைவாகிறது.

கோபாவேசம் கொள்கலனாகிக் கவிதை அட்சய பாத்திரமாகும் இடங்களையும் எண்ணிப்பார்க்கலாம்.

*பிழைக்க வந்த நாட்டில்*
*நீ மட்டும் பிழைத்து விட்டாய்*
*உன்*
*தமிழ் இன்னும்*
*பிச்சையெடுத்துக்*
*கொண்டிருக்கிறது*

என்று வன்மையான கண்டனமாகச் சுமதி சொக்கலிங்கத்தின் கவிதைக்குள் (கரைதேடும் அலைகள், ப. 35) பதிவாகிறது.

தமிழ்மொழி, தமிழ்இனம், தமிழ்ப்பண்பாடு குறித்த கவலைகள் தொடர்ந்து மலேசியத் தமிழ்க் கவிதைகளுக்குள் இடம் பிடிப்பதைப் பார்க்க முடிகிறது.

*நீ வளர்த்த*
*இரப்பர் மரங்களெல்லாம்*
*வீரமாய் நிமிர்ந்து*
*நின்றுகொண்டிருக்க*
*நீ ஏன்*
*வளைந்து வளைந்து*
*கோழையாய்*
*குறுகிப் போகிறாய்?*
*நினைத்த பாதைகளையெல்லாம்*
*புறப்பட்டுப் போய்*
*சேர்ந்துவிட்டன.*
*.........................*
*பயணப்பட்ட உன் கால்கள்*
*நீ மட்டும்*
*செம்மண் சாலைகளைவிட்டு*
*இன்னும்*
*கடந்தபாடில்லை* *(சுவத்துடிக்கும் குயில்கள், பக். 37,38)*

என்று நீள்கிறது சு.நா துளசிதாசன் கவிதை

எழுபது, எண்பது, தொண்ணூறு என நீர்த்துப்போன தட்டையான புதுக்கவிதைகளைச் சுற்றிச்சுழன்று சொற்சிக்கனமின்றியும், ஒரே மாதிரியான போலச்செய்தல்களாலும் திக்கித்திணறிக் கொண்டிருந்த மலேசியத்தமிழ்ப் புதுக்கவிதை நவீனத்துவத்தின் தாக்கம் பெற்று, பன்முகப் பார்வை கொண்டதாக வாசிப்பனுவத்திற்குத் தீனி போடுவதாக, சிந்தனையைக் கிளர்த்துவதாக மாறியதையும் மனம் கொள்ள வேண்டும் நாம்.

புண்ணியவான், பாலமுருகன், நவீன், சிவாபெரியண்ணன் என அந்தப் பட்டியல் நீளக்காணலாம். இவ்வகையில் அடங்குவது ம. நவீனின் இக்கவிதை.

*நீங்கள் நினைப்பதுபோல் சிரமமில்லை*
*தரையிறங்காத*
*காகித விமானம் செய்வது*
*பழைய நோட்டுப் புத்தகத்திலோ*
*பாடப் புத்தகத்திலோ*
*ஏடு தயாரானபின்*
*வழக்கமான மடிப்புகள் வழி*
*விமானம் தயாராக வேண்டும்*
*இறக்கையின் அகலத்தைப் பொறுத்தது*
*அவை செல்லும் வேகமும்*
*வளையும் அழகும்*
*மேல்நோக்கி விட்டவுடன்*
*நாம் செய்யவேண்டியது*
*ஒன்றே ஒன்றுதான்*
*விரக்தியும் இறுக்கமும் நிறைந்து*
*கனமான நமது மனதை*
*தடுத்து நிறுத்த வேண்டும்*
*அதில் பற்றிக் கொண்டு பயணிப்பதை*

என்று எழுதுகிறார், ம. நவீன், போலவே சை. பீர்முகமதுவின் 'கடவுளின் உண்மைப் பெயர்' கவிதையும் இவ்வகையில் குறிப்பிட்டுச்சொல்லப்பட வேண்டியது எனலாம்.

*பூமிக்கு வந்தான்*
*தனக்கான*
*படையல்களை ருசிபார்க்க*
*கடவுள்!*

*மனிதர்கள் வேற்றுமைபோல*
*கறிவகைகள்*
*பலகாரங்கள்*
*ருசிபார்த்தார் அனைத்தையும்*

*கடவுளின் வயிற்றில்*
*மதச்சண்டைகள்*
*வாந்தியாகவும் பேதியாகவும்*

*மருத்துவமனை போனார்*
*ஊழியன்*
*கடைசி வரை கூப்பிடவில்லை*
*வரிசையில் நின்றவரை*
*எந்தப்பட்டியலிலும்*
*அவருக்கான பெயர்*
*இல்லாததால்*
*மயங்கிவிழுந்தார் கடவுள்*

இப்படி பேசாது விடுபட்ட, பேசப்படவேண்டிய நுண்ணுணர்வுப் படிமங்கள் கவிதைக்குள் வருவதென்பது கவிதையைக் கட்டிறுக்கம் கொண்ட அழகியல் மொழியாக்கிக் காட்டுகிறது.

ஆக, மலேசியத் தமிழ்க் கவிதை வரலாறு 1887இல் நாகபட்டினம் மரு. வெங்கடாசலம் பிள்ளை என்பவரால் இயற்றப்பட்டுள்ள ஆறுமுகப் பதிகம் என்ற தொகுப்பிலிருந்து துவங்குகிறது. முகமது சுல்தான் மரைக்காயர் 1900இல் சீறாச் சதகமும் 1901இல் ஆனந்த கீர்த்தனையையும் வெளியிட்டது தொடங்கி இருபதாம் நூற்றாண்டு தொடக்கத்தில் பெரிதும் சமயச் சார்பு கொண்ட கவிதைகள் படைக்கப்பட்டன என்கிறார் வே. சபாபதி. (அயலகத் தமிழ் - சமகாலச் சொல்நெறிகள், ப. 260) சிவராசதாசனின் பங்குனி உத்திரச்சிந்தும், அம்மன்தாசனின் தண்ணீர்மலை, சிவசண்முக நாதனின் பக்தி ரசக்கீர்த்தனை, சுவாமி அருணகிரிநாதனின் பினாங்குத் தண்ணீர் மலை முருகன் ஆடுமயில் பாடல்கள் என எடுத்துக்காட்டுகள் தருகிறார் அவர். பின்னர் விடுதலை வேட்கை - மறுமலர்ச்சி சார்ந்த பொருண்மைகள் கவிதைக்குள் வந்தன. புதியபோக்குகள் பரிணமித்தன. பினாங்கு அயர் ஈத்தாம் வெள்ளச்சேத விபரீதச் சிந்து, வழி நடைச்சிந்து, பினாங்கு ஜெனரல் ஆஸ்பத்திரியில் வீரையா செய்த பரிதாபக்கொலைச் சிந்து, நிப்பானியர் வெற்றிமலை, இந்தியத் தேசிய ராணுவ நினைவு கீதம் ஆகியன இப்புதிய போக்கை அடையாளப்படுத்தின.

பின்னர்ப் பத்துபகாட் கவிதா மண்டலம், தமிழ்நேசன் இதழ் ஆகியன தோட்டப்புறக் கவிதை உருவாக்கம் மற்றும் வளர்ச்சியை முன்னெடுத்ததைப் பார்க்கிறோம்.

தொடர்ந்து இனப்பற்று, நாட்டுப்பற்று, பல இன ஒற்றுமை, சீர்திருத்தம் ஆகியன பொருண்மைகளாகி கவிதைக்குள் இடம்பிடித்தன. தமிழ்க் கவிதை தமிழகச் சூழலிலும், ஈழச் சூழலிலும் போலன்றி மலேசியச் சூழலில் மிகப் பின்தங்கியே, நவீனத்துவத்தை உள்வாங்குவதில் தயக்கத்தோடே நடை பயின்றது எனலாம். இன்று புதியவர்கள் வந்துள்ளனர்; புதிய போக்குகள் வரத்தொடங்கியுள்ளன என்பதையும் பார்க்கிறோம்.

## சிங்கப்பூர்த் தமிழ்க்கவிதை

சிங்கப்பூர்த் தனிக்குடியரசு நாடாக 1965இல் தோற்றம் கண்டதெனினும் 1887இல் சிங்கை நகர் அந்தாதி எழுதப்பட்ட காலந்தொட்டே நூற்றாண்டுக்கு மேற்பட்ட காலவரலாற்றைக் கொண்டது சிங்கப்பூர் இலக்கிய வரலாறு (சுப. திண்ணப்பன், ஏ.ஆர். சிவகுமாரன், சிங்கப்பூர்த் தமிழிலக்கிய வரலாறு - ப. 6) ஆக சிங்கப்பூர் குடியரசு நிலைக்கு முந்தைய பகுதி (1887 - 1965) யிலேயே சிங்கப்பூர்க் கவிதை வரலாறும் தொடங்கிவிடுகிறது எனலாம்.

சதாசிவபண்டிதர் இயற்றிய சிங்கைநகர் அந்தாதியைத் தொடங்கி, சித்திரக்கவிகள் , வண்ணை அந்தாதி , வண்ணை நகர் ஊஞ்சல் ஆகிய நூல்கள் ந.வ. ரங்கசாமிதாசனின் குதிரைப்பந்தய லாவணி (1893) கா. வேலுப்பிள்ளையின் சிங்கை முருகேசர் பதிகம், (1893), முகமது அப்துல் காதரின் கீர்த்தனைத் திரட்டு (1896) போன்றனவும் முன்னோடி முயற்சிகள் என்ற வகையில் குறிக்கத்தக்கன என்று அறிய முடிகிறது.

1966 ஆம் ஆண்டிலிருந்து 1999 வரை 66 மரபுக்கவிதை நூல்கள் சிங்கைக் கவிஞர்கள் மற்றும் பதிப்பாசிரியர்களால் வெளியிடப்பட்டுள்ளன என்று 2002 ஆம் ஆண்டு வெளிவந்துள்ள சிங்கப்பூர்த் தமிழிலக்கிய வரலாறு எனும் நூல் பதிவு செய்துள்ளது.

'தமிழ்முரசு' இதழ் மற்றும் வானொலி வழியாகவும் தொடர்ந்து மரபுக்கவிதைகள் வெளிப்பட்டு வந்துள்ளன. அத்தகைய படைப்புகளை வெளியிட்டவர்களுள் ந. பழநிவேலு முதன்மையானவர். அவரது கவிதைமலர்கள் மற்றும் சிங்கைமுகிலன் எழுதிய மனிதச்சுவடு, நல்ல முடிவு முதலிய கவிதை நூல்கள் க.து.மு. இக்பால் மரபுக்கவிதையைத் தொடர்ந்து புதுக்கவிதை அமைப்பிலும் எழுதிவெளியிட்ட நூல்கள் என, தொடர்ந்து கவிதை முயற்சிகள் தென்பட்டு வருகின்றன.

வே.பழநி, முருகதாசன், ஷம்சுதின் (ஜமீலா), கா.பெருமாள், மெ.இளமாறன், மு.தங்கராசன், பரணன், மணிவண்ணன், பெரி. நீல. பழநிவேலன், பெ.திருவேங்கடம், ஏ.பி.சண்முகம், பார்வதி பூபாலன் எனத் தொடர்ந்து படைப்பாளிகள் மரபுக் கவிதைத் துறையில் இயங்கி வந்துள்ளனர்.

சிங்கைப் புதுக்கவிதைத் துறையின் முன்னோடியாகக் கருதப்படும், க. இளங்கோவன் 'விழிச்சன்னலின் பின்னாலிருந்து' என்ற நூலை 1979லும், 'மௌனவிரதம்' என்ற நூலை 1984லும் Transcreation என்ற ஆங்கிலமொழிபெயர்ப்புடன் கூடிய நூலை 1988லும் வெளியிட்டதைத் தொடர்ந்து புதுக்கவிதை நூல்கள் பலராலும் வெளியிடப்பட்டு வருகின்றன.

பிச்சினிக்காடு இளங்கோ, அமீருத்தின், V.S. தரிதின், முகமது அலி, அழகியபாண்டியன், ராஜசேகர் ரவி, ஞானப்பிரகாசம் மொனிக்கா, சி. மீனாட்சி ஆகியோரது நூல்கள் வெளிவந்துள்ளன.

லதா, ஷாகுல் ஹமீது, மலர்தமிழ், பாலுமணிமாறன், ரெ.பாண்டியன், மாதங்கி எனச் சமகாலப் படைப்பாளிகள் தொடர்ந்து எழுதிவருகின்றனர். வகைமாதிரியாய்ச் சில சமகாலக் கவிதைகள் இங்கு,

*இணையத் தளத்தின் பக்கங்களில்*
*பார்வை ஊர்வலம்*
*மதிய உணவுக்குப்பின்*
*எம்.எம்.எஸ். அனுப்பி அவளோடு*
*பகிர்ந்துகொண்டேன் காதல்*
*தரைவழி ஜோசூர்*
*வான்வழி கூச்சிங்*
*பயணச்சீட்டுக்காய்*
*சிங்போஸ்ட் வாசலில்*
*செலவு சில நிமிடம்*

என நீளும் கவிதை, மார்ச் மாதம் முதல் படுக்கையில் படுத்து தொலைக்காட்சியின் பங்குப்பரிவர்த்தனை குறித்து உத்தேசிக்கவும், ஒருநாள் கடந்து அலுவல் முடிந்து வீதி வருகையில் இன்றாவது டோடோவில் முதல் பரிசு எனக்கென நல்ல சீட்டெடுக்குமா சிராங்கூன் கூண்டுக்கிளி? எனப் பாலுமணிமாறன் கேட்கிற கவிதைக் கேள்வியில் சிங்கப்பூர் நகரின் வேகமும் வணிக வாழ்வும் தந்த மனப்பதிவுகள் உட்பொதிந்துள்ளன. நாகரிக வளர்ச்சிபெற்று இணையம் M.M.S. என உலாவந்தாலும் கூண்டுக் கிளி ஜோதிட மூடநம்பிக்கைகள், மனிதவாழ்வைப் புரட்டிக்கொண்டிருக்கும் அவலமும் இங்கு எண்ணிப் பார்க்கவைத்துள்ளன.

ந.வீ. விசயபாரதியால் வேலைநிமித்தம் புலம்பெயர்தலின் நிரந்தரமின்மை தரும் வலி இப்படி வெளிப்படுத்தப்படுகிறது.
ஊர்சூழலும், சொந்தமண்ணின் நிகழ்வாழ்வும் அங்குத் தன் பொறுப்புகள், செய்யவேண்டிய கடமைகள் சிங்கப்பூரில் பணியாற்றிவரும் தற்காலத்திய வாழ்வு தரும் அனுபவம் இவையாவும் பதிவுசெய்யப்படுகின்றன.

கல்யாணக் கனவுகளுடனிருக்கும் தங்கை, மகனை அயலகம் அனுப்பப் பரம்பரை நிலத்தை விற்ற தந்தை இப்படிப் பல எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் சிங்கப்பூர் வந்துள்ள இளைஞர்களின் கனவு தகர்ந்துவிடுகிறது.

*ஆண்டொன்று*
*முடியும் முன்னரே*
*நொடித்துப் போனதாம்*
*நிறுவனம்*
*ஊர்திரும்ப உத்தரவுதரும்*
*அக்கடித மடல்*
*மீண்டும் ஒருமுறை கனத்த*
*முத்தம் பெற்றது அவனது*
*கனமான கண்ணீரால்* *(நிழல்மடி, பக் 159)*

விடுமுறை நாள்கள்தாம் வாழ்வின் வெம்மையிலிருந்து குளிர்மை நோக்கிப் பயணிக்க வாய்ப்பளிப்பவை. ஊர்ச்செய்திகளைப் பரிமாற - நினைவு அடுக்குகளின் முடிச்சவிழ மெல்ல இயல்பு நிலை திரும்பும் இனிய தருணங்கள் அவை. இளங்கோவடிகளின் ' ஞாயிறுபோற்றுதும்' ஒரு பரிமாணமெனில் இளங்கோவின் (பிச்சினிக்காடு) 'ஞாயிறு போற்றுவோம்' இன்னொரு பரிமாணமாய்க் கவிதைக்குள் சுடர்விடுகிறது. (இரவின்நரை, பக். 98, 99)

*ஞாயிறு அன்றுதான்*
*ஊர்ச்செய்திகளைச்*
*செவி உண்டியலில்*
*போடுகிறோம்*
. . .
*விசாரிப்புகளால்*
*விசாலமடைகிறோம்*
. . .
*கடனழுத்தியும்*
*இடைவெளிவருத்தியும்*
*களைக்கவிடாமல்*
*காத்துவருவதே ஞாயிறுதான்*
*ஞாயிறு போற்றுவோம்*
*ஞாயிறு போற்றுவோம்*

பண்டிகைகள்; கொண்டாட்டங்கள் பிரிவின் மனவெளியைத் தாக்கும் அவலம் கவிதையாகிறது விசய பாரதியின் படைப்பில்,

*எல்லா முகங்களின்*
*மலர்ச்சியையும்*
*தன்முகத்தில் பிரதிபலித்து*

*மாறாத புன்னகையோடு*
*மாலை மங்கி*
*இரவு வந்ததும்*
*கைப்பைக்குள்ளிருந்த*
*பத்துவெள்ளி அட்டையோடு*
*பணிப்பெண் ஓடுகிறாள்*
*தன்*
*தொலைதேச தீபாவளியை*
*தொலைபேசியில்*
*கொண்டாட* *(நிழல்மடி, பக் 76)*

ஞாயிறு இரவுகளில் விரவி வெளிநாட்டு ஊழியர்களின் சங்கமமாய்த் தேக்கா தோட்ட வெளியில் புழங்கும் சொற்கள் எத்தகையவை என்பதை மாதங்கி தம் கவிதையில் படம்பிடிக்கிறார். விடுமுறையிலும் கூடுதல் பணி - கடல்தாண்டி வந்த உடலைச் சுமந்தபடி தேங்கிநிற்கும் குடும்பத்தின் குரல்களைக் கேட்டவாறு அமரும் புல்வெளியில் நண்பர்கள் என, உரையாடல்களில் நிரம்பி வழியும் சொற்களில் பட்டுத்தெரிகிறது வாழ்க்கை.

*ஓவர்ஸ்டே, வர்க்பர்மிட்,*
*எஸ்பாஸ்,சுயபாகம்,*
*முகவர் வாங்கிய முன்பணம்*
*ஏமாந்து போன நண்பன்*
*நெருங்கிய உறவின் மரணம்,*
*அக்காவின் திருமணம்,*
*மனைவியின் பிரசவம்,*
*குழந்தை இப்போது பேசுகிறதாம்*
*எல்லாச் சொற்களும்*
*புல்வெளிதாண்டி*
*சாலைகளிலும்*
*நடக்கும்.* *(மாதங்கி, நாளை பிறந்து இன்று வந்தவள், பக். 26,27)*

நவநாகரிக வாழ்வும், பன்னாட்டவர், பலஇனத்தவர் பன்மொழிச் சூழல் தந்த அனுபவங்களும் இன்றைய சிங்கப்பூர்த் தமிழ்க்கவிதைக்கூடாக வெளிப்படக் காண்கிறோம். தமிழ்ப் பண்பாட்டு அடையாளத்தைத் தக்க வைக்கும் போக்கும் போர்க்குணமில்லா மந்தகதியும் இடம்பெற்றிருப்பினும், நவீனக் கவிதையின் தாக்குறவு போதுமான அளவு இல்லாதிருப்பினும் சிங்கைத் தமிழ்க் கவிதை வளர்ச்சி நோக்கில் நடைபயின்றுவருவதை இனம் காண முடிகிறது.

## துணை நூல்கள்

1. அயலகத்தமிழ் இலக்கியம்- சமகாலச் சொல்நெறிகள்,உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,சென்னை.
2. அலையில் பார்த்த முகம், பாலுமணிமாறன், பதிப்பகம். 683, H - Block, 14 th st, Chennai.
3. நாளைபிறந்து இன்று வந்தவள், மாதங்கி, உயிர்மை, வி. சுப்ரமணிபுரம் தெரு, அபிராமபுரம், சென்னை.
4. நிழல்படி, சத்யபாரதி பதிப்பகம், 60, மன்னை சாலை, முத்துப்பேட்டை- 614 704.
5. சுப. திண்ணப்பன், ஏ.ஆர். சிவகுமாரன், சிங்கப்பூர்த் தமிழிலக்கிய வரலாறு, சிங்கப்பூர்.
6. ஊமைக்காயங்கள், கடையநல்லூர் ஜமீலா. N.M SAMSUDEEN, block 25, BUKIT MERAN VIEW #02 -380 சிங்கப்பூர் 151125 - 62785126.
7. வாழ்ந்தாக வேண்டும், சுப்ரா, naven publisher, Blk 286, Toh Guan Rood, # 13-06 singapore - 604 286.
8. இரவின் நரை, பிச்சினிக்காடு இளங்கோ Blk, # 16 - 4024, Narth Bri dge, Rood, Singapore- 190007.
9. சுமதி சொக்கலிங்கம், கரைதேடும் அலைகள், மலேசியா.
10. சு.நா. துளசிதாசன்,கூவத்துடிக்கும் குயில்கள், மலேசியா.

# சிங்கப்பூர்த் தமிழ்க் கவிதைகளில் ஆளுமை மேம்பாடு

திரு. து. வெங்கடேஸ்வரி
*முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை*
*தேசியக் கல்லூரி, திருச்சி*

## முன்னுரை

தேசியம் பெற்ற கால் நூற்றாண்டுகளிலேயே சிகரம் தொட்ட சிறப்புடையது சிங்கப்பூர். இயற்கை வளம் கொழிக்கும் இன்னெழில் நாடு. உலக வரைபடத்தில் ஒரு புள்ளி - எனினும் உயர்ந்த சிந்தனைகள் தருவதில் பள்ளி. சீமையில் சிறந்தது சிங்காரச் சிங்கப்பூர். செப்பிடு வித்தை செய்யாமல் சிறப்புடன் வாழும் சிங்கப்பூர் - ஒப்பிடுவதற்கு வேறு நாடு உலகில் இல்லாச் சிங்கப்பூர்[1] முயற்சியினால் சிறந்தோங்க முடியுமென்று முத்திரையைச் சரித்திரத்தில் பதித்த நாடு. இத்தகு சிறந்த ஆளுமைகளை உடைய சிங்கப்பூரில் 1887ஆம் ஆண்டு முதல் தமிழ் இலக்கியங்கள் தோன்ற ஆரம்பித்துவிட்டன. அவற்றுள் தமிழ் முரசுக் கவிதைகள் எடுத்தாளப் படுகின்றன.

## ஆளுமை மேம்பாடு

> தற்காலச் சமுதாயத்தில் தனிமனித ஆளுமை மேம்பாடு இன்றியமையாத பங்கு வகுக்கின்றது. 'ஆளுமை மேம்பாடு' என்பது "தனி மனிதனின் கீழ்நிலையில் இருக்கும்போதோ அல்லது சமுதாயத்தில் தனித்திருக்கும் போதோ அவன் தன்னையும் தன்னுடைய வாழ்க்கையையும் மேம்படுத்திக் கொள்ள ஈடுபடும் சுய மேம்பாட்டு முயற்சியே[2]

என்று சுவாமி விவேகானந்தர் கூறுகின்றார்.

தாங்கள் எப்படிபட்டவர் என்பதைத் தங்கள் சிந்தனையிலிருந்தும் உணர்விலிருந்தும் நடத்தையிலிருந்தும் வெளிப்படுத்துவதே ஆளுமை மேம்பாடு என்று விளக்கம் தருகின்றது[3] கேம்பிரிட்ஜ் ஆங்கிலப் பன்னாட்டு அகராதி.

ஆளுமை மேம்பாடு என்பது "தனிமனிதனின் ஒட்டு மொத்த நடத்தை அல்லது அவர்களின் இயல்பான செயற்பாடே"[4] என்கிறது லாங்மேன் சமகாலத்திய ஆங்கில அகராதி.

மேற்கண்ட பல்வேறு கருத்துகளின் அடிப்படையில் நோக்கும் போது ஆளுமை மேம்பாடு என்று கூறுவது நாம் பிறரிடம் பெறப்படும் கொடை ஆகாது. அதே சமயம் தான் வாழும் சமுதாயத்தில் வாழ்க்கை முன்னேற்றம் அடைவதற்காகத் தனிமனிதனால் மேற்கொள்ளப்படும் முயற்சியே ஆகும். இந்தத் தனிமனித முயற்சி, தான் வாழும் சமுதாயத்திற்கும் பயனுள்ளதாக அமைவதும், பயன்படாதவாறு போவதும் அவரவர் இயல்பைப் பொறுத்து அமைவதாகும்.

## ஆளுமை பயன்பாடு

ஆளுமை பல்வேறு கூறுகளை உள்ளடக்கியது. இவற்றுள் உடல், உள்ளம், அறிவு, சமூகம் போன்ற கூறுகளின் தன்மைகள் முக்கிய இடம் வகிக்கின்றன. அவை வீரம், கடின உழைப்பு, பொறுமை, கலைத்திறன், காலம் தவறாமை, விடாமுயற்சி, மன்னிக்கும் மனப்பான்மை, கருணை, விட்டுக் கொடுக்கும் மனப்பாங்கு, பொறுப்புணர்வு, கடமை உணர்வு, நாட்டுப்பற்று, நினைவாற்றல், சூழலுக்கு ஏற்பச் செயல்படும் அறிவுத்திறன், குற்றங்களை இடித்துரைக்கும் பண்பு என்பன போன்ற பல்வேறு பண்புகளும் ஆளுமையின் உட்கூறுகள் ஆகும்.

இவ் உட்கூறுகளைப் பெற்றவர்கள் காலத்தால் அழியாத சிறந்த புகழினைப் பெற்று வாழ்வாங்கு வாழ்வர். ஆளுமை மேம்பாட்டின் பயன்கள் நடைமுறை வாழ்க்கையிலும் சிங்கப்பூர்த் தமிழ் இலக்கியங்களிலும் பயன் மிகுந்து விளங்குகின்றன. இவை எவ்வெவ்வகையில் சிங்கப்பூர்த் தமிழனின் ஆளுமை மேம்பாட்டிற்குப் பயன்படுகின்றன என்பதை ஆராய்வோம்.

## தாய்மொழிப் பற்று

நாட்டுக்காக உயிரைத் தியாகம் செய்த நல்லோர்கள் வாழ்ந்த பூமியில் தோன்றிப் பண்பட்டவர்கள் தமிழர்கள். உயிரை விட வேண்டாம். உயிரினும் அரிய தமிழைப் போற்றி வளர்த்தாலே போதும் என்கிறார்கள் சிங்கப்பூர்க் கவிஞர்கள்.

*தாயை மறப்பதுபோல் தன்மொழியைத் தான்மறந்து*
*தேயும் தமிழனே தேராயோ – தாயிற்*
*சிறந்ததோர் தெய்வ முண்டோ சீர்சால் தமிழிற்*
*சிறந்த மொழியுண்டோ செப்பு*[5]

என்று 'பூபாலன்' தமிழின் அருமையைச் செப்புகின்றார்.

பெற்றோர்கள் பிள்ளையின் மனதில் மொழிப்பற்றினை விதைக்க வேண்டும். விதைக்கா விட்டால் பண்பாட்டுச் சீரழிவிற்குக் காரணமாகி

ஆப்பரிக்கா, மொரிசியசு முதலான நாடுகளில் வாழ்கின்ற தமிழரைப் போல் வாழும் நிலை ஏற்படலாம் என்கிறார்கள்.

*என்றும் இளமை குன்றா திலங்கும்*
*செந்தமிழ் மொழியைச் சிறுமை செய்தீர்*
*தாய்மொழி தழைக்கத் தத்தம் இல்லம்*
*வாய்கூ சாது வழங்கிடில் தமிழை*
*நமது சந்ததிகள் எளிதில் கற்று*
*புகழும் தாய்மொழிப் புலமை பெறுவரே*[6]

என்ற பாடலடிகளில் 'பழநிவேலு' தாய்மொழியில் புலமை பெறுவதால் எதிர்கால ஆளுமை மேம்படும் என்கிறார்.

### அயல்நாட்டினரின் மீதே ஆளுமை செலுத்திய மொழி

அயல்நாட்டிலிருந்து மதத்தைப் பரப்ப வந்தவர்கள் தமிழின் சிறப்பை உணர்ந்து வியந்தனர். தமிழுக்குத் தொண்டுகள் பல புரிந்து சரித்திரமும் படைத்துள்ளனர்.

'தமிழ் மாணவன்' ஜி.யு. போப், வீரமாமுனிவர், கால்டுவெல், எச்.ஏ.கிருஷ்ணப்பிள்ளை முதலிய பலரை உயர்த்திய மொழி என்பதைத் தமிழர்கள் சிந்திக்க வேண்டும்.

தமிழர்கள், பண்பாடு உடையவர்கள்; அறிவுத்திறன் மிக்கவர்கள்; சாதனைபுரியும் சந்ததியினர்; என்றெல்லாம் போற்றும் ஆளுமைகளைத் தமிழர்களிடம் பிற நாட்டினர் கண்டு வியப்பதற்குக் காரணம் தாய்மொழித் தமிழ். நாற்பொருள் கொண்டு பாடப்படும் நற்றமிழ்.

*வள்ளலார் கடைபிடித்த பெருநெறியின் ஆணிவேர் வாழ வைக்கும்*
*தெள்ளமுதம் தெய்வத்தின் அருளாலே சிந்திக்கும் பெரும் பேறாமே*[7]

என்னும் பாடலடிகளில் 'பழநிவேலு' நல்வாழ்வு வாழ இராமலிங்க அடிகளாரின் பாடல்களைப் படியுங்கள் என்கிறார்.

தமிழ்மொழி பயில்வதன் காரணமாகவே தமிழன் தரணியில் தழைத்தோங்குகின்றான். ஆகவே, அயல் நாட்டில் வாழும் தமிழர்கள் தமிழ்மொழியின் சிறப்பைத் தங்கள் குழந்தைகளுக்குப் பிறந்தது முதலே உணர உறுதுணையாக இருத்தல் ஆளுமையைச் சிறுவயதில் இருந்தே மேம்படுத்த உதவும்.

## இறைமைப் பற்று

அயல் நாட்டில் வாழும் தமிழர்கள் இறைபக்தி கொண்டவர்கள் என்பதற்கு அங்குள்ள பல கோயில்களைச் சான்றாகக் காட்டலாம். இறைவனின் சிறப்பை உணர்ந்த சிங்கப்பூர் வாசிகள் காவடி எடுத்தல், அலகு குத்துதல் முதலான பல சமய வழிபாட்டு முறைகளைப் போற்றி வளம் பெறுவதைக் கண்கூடாகவே காண்கிறோம். ஆகவே தமிழர்கள் தம் குழந்தைகளுக்கு இறைவனின் அருளைப்பெற வழிகாட்டுதல் செய்ய வேண்டும். தவறுகள் செய்யின் இறைவன் தண்டிப்பார் என்ற ஆளுமையை வளர்க்க வேண்டும்.

*நாளும் பொழுதும் போவது போல*
*நமது வாழ்வும் அமைவதினாலே*
*வேளை தவறாதே – இறைவனை*
*வேண்டுதல் வேண்டும்8*

என்ற பாடலடிகளில் 'முத்துமாணிக்கம்' இறைவழிபாட்டின் அவசியத்தைப் பாடியுள்ளார்.

மலர் போல வாழ்க்கை மணம் வீச இறைப்பக்தி என்னும் ஆளுமையை மேம்பாடு அடையச் செய்யலாம். பெரிய புராணம், கம்பராமாயணம், மகாபாரதம், கந்தபுராணம், ஆழ்வார்கள் வரலாறு, சீறாப்புராணம், இயேசு காவியம் முதலான இலக்கியங்களின்வழி இறையாளுமையை மேம்படச் செய்யலாம்.

## பெரியோரைத் துணைக் கோடல்

இல்லறத்தில் இணையும் ஆணும், பெண்ணும் தாங்கள் இந்நிலையை அடையக் காரணமான இருவரின் பெற்றோர்களையும் மதிக்க வேண்டும். தங்களை வளர்க்க அவர்தம் பெற்றோர்கள் பட்ட துயரங்களைப் பிள்ளைகளுக்கு எடுத்துரைக்க வேண்டும். தவறான வழியில் செல்லாமல் பேணிக் காத்த பெற்றோரை நேசிக்கக் கற்றுக் கொடுக்க வேண்டும்.

பொருளாதாரத்தை எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் பெற்றோர் களினால் குழந்தைகள் தனிமைப்படுத்தப்படுகிறார்கள். அன்பிற்காக ஏங்குகிறார்கள். ஏக்கத்தை மறக்கத் தவறான பாதையில் சென்று மாட்டிக் கொள்கிறார்கள்.

*படித்திடப் போவது / போலிவர் நடிப்பது*

*பெற்றவர் அறிவதுமில்லை / குடிப்பதும் புகைப்பதும்*
*குழிக்கதைக் கதைப்பதும் / குறைவின்றி நடக்கின்ற தொல்லை*[9]

என 'முருகதாசன்' பிள்ளை வளர்ப்பில் கவனமின்மையே இத்தகு செயல் களுக்குக் காரணமாகின்றன என்கிறார்.

*புகையும் கஞ்சாவும் போதை வில்லையும்*
*உயிரை மட்டுமல்ல உணர்வையும்*
*ஊக்கும் சக்தியை இழந்து*
*உலகையும் உறவையும் வாழ்வையும் கெடுத்துவிடும்*[10]

என்ற பாடலடிகளில் சுதர்மன் தவறான பழக்கங்களினால் உடல் நலம், உணர்வு, சீர்மை, உறவுகள் போன்ற ஆளுமை மேம்பாட்டுக் கூறுகள் சிதைந்து விடும் உன்று எச்சரிக்கையூட்டுகிறார்.

மேலும் காப்பகத்தில் வளரும் குழந்தைகளும் சூழ்நிலைக்கு ஏற்பப் பாதைமாறவே வாய்ப்புகள் அதிகம் உள்ளன. ஆகவே, பெற்றோர்கள் ஆளுமையை மேம்படுத்த அதிகமான நேரத்தைக் குழந்தையோடு செலவு செய்ய ஒதுக்க வேண்டும். மேலும் தவிர்க்க இயலாத நேரத்தில் தாத்தா, பாட்டி போன்றோரிடம் இருக்கச் செய்யும் போது குழந்கைகளின் பாதை நல்வழிப்படும். ஆளுமை சிறப்படையும்.

கல்வி

கல்வி கற்றல் என்பது வெறும் ஏட்டுக் கல்வியாக இருத்தல் கூடாது. அது மனிதனின் நடத்தையில் முழுமையானதொரு மாற்றத்தைக் கொண்டு வருவதாக அமைய வேண்டும். அதோடு அவன் நடத்தையை ஒழுங்குப்படுத்தும் வகையில் கல்வி முக்கியப் பங்கு வகிக்க வேண்டும்.

*கேடில் விழுச்**செல்வம்** கல்வி ஒருவற்கு*
*மாடல்ல மற்றை **யவை*** *(குறள் – 675)*

என்ற குறள் கல்வியின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கின்றது. மேலும் கல்வி அறிவோடு இயற்கை அறிவும் கொண்டவன் சிறந்து விளங்குவான் என்கிறது பழமொழி நானூறு (பாடல் 28).

*எல்லா நலமும் ஈந்திடும் கல்வி*
*இல்லா வீட்டை இருண்ட வீடென்க*[11]

எனப் பாவேந்தர் கல்வியின் சிறப்பைப் பாடியுள்ளார்.

*கல்வி இல்லாத மக்கள் கண்களை இழந்தார் போன்று*
*தொல்புவி மீது வாழ்வார் துச்சமாய் மதித்துப் பாடுவர்*

*பல்வகைப் பொருட்களோடு பணம் மிக இருந்திட்டாலும்*
*செல்வழித் துணைவ னின்றிச் சொல்வதற் கியலா தறிவீர்*[12]

என்று 'சிங்கை முகிலன்' கல்லாதவர் செல்வராய் இருந்தாலும் அதைக் கட்டிக் காப்பதற்கும் கல்வி தேவையான ஒன்றாக இருப்பதைச் சிங்கப்பூர் தமிழர்களுக்கு உணர்த்துகிறார். இதனைத் திருவள்ளுவரும், அறிவுடையவர் வறியவராயினும் எல்லாம் உடையவருக்குச் சமம் (குறள் 430) என்ற கருத்துடன் ஒப்பு நோக்கத் தக்கது. 'இளமையில் கல்' என்ற முதுமொழிக்கேற்ப,

*இளமையில் கல்வி கற்போம் – உலகில் எல்லாமும் நாமறிவோம்*
*வளமையைக் காண்பதற்கே– எது வகை அதை நாம் படிப்போம்*

எனச் 'சத்தியமூர்த்தி' பசுமரத்தாணிபோலப் பதியும் இளம் பருவத்தில் பயிலச் சொல்கிறார். ஆனால் சிங்கப்பூர்த் தமிழர்களோ பள்ளிப் படிப்பைப் பாதியில் விட்டுப் பறவையாய்த் திரிகின்றனர் என்று 'விசாகன்' கவிதைகளில் எடுத்துக் காட்டியுள்ளது இங்கு நோக்கத்தக்கது.

ஓ நிலை (10 வகுப்பு வரை) பெற்று விட்டு ஏதேனும் ஒரு பணியில் சேர்ந்தாலே ஓய்வு பெறும் வரை கவலையில்லை என்று கல்வியைப் பாதியில் விட்ட தமிழர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது.

*விடிவெள்ளி தெரியுது வானில் / துடித்தெழு தமிழனே!*
*துணிவுடன் இம்மண்ணில் / கணக்கியல் அறிவியல்*
*கணினியின் அறிவுடன் / உழைப்பினைச் சேர்த்திடின்*
*மலர்ந்திடும் உன் எதிர்காலம்*[13]

என்னும் பாடலடிகளில் 'சுந்தரம் நடராசு' தமிழர்கள் அனைத்து துறைகளிலும் சிறந்து விளங்க வேண்டும். அதனால் எதிர்காலத்தில் சிங்கப்பூர்த் தமிழனின் ஆளுமை மேம்படும் என்று அறிவுரை கூறுகிறார்.

## இளையரும் காதலும்

இளையஞர்கள் தங்களது உணர்ச்சிகளை ஆக்க முறையில் வெளியிட்டு அதன் மூலம் சமநிலையில் உள்ள ஆளுமை பெறுவதற்குப் பள்ளிக்கூடம் பல வகைகளில் உதவலாம். மாலை நேரத்தில் பிள்ளைகள் எல்லோரும் சேர்ந்து விளையாட்டுகளில் ஈடுபடுவார்கள் என்றால் உணர்ச்சிகள் வெளியீடாகி மனதில் தெளிவு நிலை உண்டாகும்.

*மாலை முழுவதும் விளையாட்டு – என்று*
*வழக்கப் படுத்திக் கொள்ளுப் பாப்பா*

என்னும் பாரதியாரின் வழியைப் பின்பற்றலாம். விளையாட்டுப் போலவோ பள்ளிக் கூடத்தில் இளைஞர்கள் சேர்ந்து கலை நிகழ்ச்சிகளில் ஈடுபடுவது, உல்லாசப் பிரயாணங்கள் செல்வது, வானொலி கேட்பது, சமூகச் சேவைகளில் ஈடுபடுவது, சிரமதானம் செய்வது மற்றும் நல்ல முறையான களியாட்டங்களில் ஈடுபடுவது மூலமாக வேண்டாத உணர்ச்சிகள் உள்ளத்தில் குமைந்திருப்பதைத் தடுக்கலாம். இளைஞர்களிடம் மனநலம் சிறக்கும். இதனையே,

*மனநலம் மன்னுயிர்க்கு ஆக்கம்*

என்றார் திருவள்ளுவர். இளையர் மனநலத்துடன் வளர ஆவன செய்ய வேண்டியது பெற்றோர், ஆசிரியர், மற்றோரது கடமையும் ஆகும்.

இளமைப் பருவத்தில் வரும் காதலானது நிலையற்றது. அப்பருவத்தில் பெறும் தவறான தொடர்பினால் மனஅழுத்தங்கள் ஏற்பட வாய்ப்புண்டு. மேலும், இளம்பருவத்தில் பெறும் அனுபவம் இளமை மாறாது, வருத்திக் கொண்டே இருக்கும். ஆகையால், பெற்றோர்கள் இப்பருவத்தில் தாம்பெற்ற அனுபவங்களைப் பிள்ளைகளுக்குக் கூறி எச்சரிக்கை செய்யலாம். ஏனெனில், குமரப் பருவத்தின் முதிர்ச்சி நிலையில் வரும் காதலே நிலையானது, இன்பம் தரக்கூடியது.

*இம்மைமாறி மறுமை ஆயினும்*
*நீயா கியரென் கணவனை*
*யானா கியர்நின் னெஞ்சுநேர் பவளே* (குறுந்தொகை 49)

என்ற பாடலடிகளில் 'அம்மூவனார்' நம் முன்னோர்கள் நடத்திய இல்லற வாழ்வின் இனிமையை உரைத்துள்ளார்.

*ஆதலினால் காதல் செய்வீர் உலகத்தீரே*
*அஃதொன்றே இவ்வுலகத் தலைமையின்பம்*

என்னும் பாடலடிகளில் 'பாரதியார்' உலக மக்களைக் காதலிக்குமாறு வேண்டுவதும் இவண் சிந்திக்கத் தக்கது. மேலும் சான்றோர்களிடம் ஒரு பெண்ணோ அல்லது ஆணோ தானே சேர விரும்பி அவர்கள் பின்னால் சென்றாலும் அந்த நபரை அடைய மாட்டார் என்பதை,

*பெண் விழைந்து பின்செலினுந் தன்செலவிற் குன்றாமை*
(திரிகடுகம் 29)

என்னும் திரிகடுகப் பாடலைப் பின்பற்றும் தமிழர் ஒழுக்க மேம்பாட்டாளராக விளங்குவர் என்கிறார்.

இதுபோன்ற ஆளுமை மேம்பாட்டை இளையர் மனதில் பதியச் செய்ய இராமாயணக் கதைகளைக் கூறி வழிநடத்தலாம். ஒழுக்கமானது ஒப்புயர்வற்ற தலைவனாக மாற்றும் என்பதைப் புரியச் செய்யலாம்.

*அக்காலக் காதலெல்லாம் அன்புமன உச்சங்கள்*
*இக்காலக் காதலெல்லாம் இழுபறியின் எச்சங்கள்*[14]

என்னும் பாடலடிகளில் 'திருவேங்கடம்' சிங்கப்பூரில் நிலவும் காதலின் தன்மையைக் கூறுகிறார்.

## தமிழர் பண்பாடு

அயல்நாட்டில் தமிழர்கள் என்னதான் நடை, உடை, பாவனை, மொழி மாற்றினாலும் தமிழர் என்றே அழைக்கப்படுவர். மேலும், சில நூற்றாண்டிற்கு முன்னரே நாகரிகம் பெற்ற பிற நாட்டினர் தம் நாட்டிற்கே உரிய அடையாளங்களையும் தாய்மொழியையும் கைவிடாத போது, 'மனித நாகரிகத் தொட்டில்', 'முதன்முதலில் தோன்றிய குடி' என்பது போன்ற தொன்மை பண்பாட்டுச் சிறப்பை உடைய தமிழர்கள் கைவிடலாமா? எந்நாட்டினராலும் தடம் பதிக்கவே இயலாத தமிழர் பண்பாட்டினைப் போற்றுவோம். ஏனெனில் மனிதன் உலக வாழ்வில் எவ்வளவு நாகரிக மாறுதல்களைப் பெற்றிருந்தாலும் அவனுக்கு அடையாளமாக உள்ள, அவனுடைய இனப்பண்பாடுகளை மதிக்காமல் வாழ்ந்தால் அவனுக்கு வாழ்வில்லை என்ற கருத்துடைய பாடல் ஒன்று விவேக சிந்தாமணியில் உள்ளது.

*சங்குவெண்தாம ரைக்குத்தந்தைதாய் இரவிதண்ணீர்*
*அங்கதைக் கொய்து விட்டால் அழுகச் செய்து அந்நீர் கொல்லும்*
*துங்கவன் கரையில் போட்டால் சூரியன் காய்ந்து கொல்வான்*
*தங்களின் நிலைமை கெட்டால் இப்படி தயங்குவாரே*[15]

தாமரைக் கொடிக்குத் தந்தை கதிரவன்; தாய் தண்ணீர். தரையில் காலூன்றியிருக்கும் வரைதான் தாமரைக் கொடியை அவை வாழ்விக்கும். வேரைப் பறித்து விட்டால் தாயாகிய தண்ணீரே அதை அழுகச் செய்து கொல்லும். கரையில் எடுத்துப் போட்டால் தந்தையாகிய கதிரவனே அதைக் காய்ந்து கொல்வான். அதுபோல், ஒருவன் தன் பண்பாடு என்னும் அடித்தளத்தில் கால் ஊன்றியிருக்கும் வரையில்தான் அவன் மதிப்புடன் வாழமுடியும். இல்லாவிட்டால் அவன் அழிவான் என்ற இப்பாடலை ஒவ்வொரு தமிழனும் அவசியம் படித்து மனதில் நிறுத்தினால் ஆளுமையின் ஆலமரமாய் வேரூன்றுவான் என்பது உறுதி.

ஒருவனுக்கு ஒருத்தி

மணக்கும் ஒருவரைத் தேர்ந்தெடுப்பதில் நிதானம் கடைப்பிடிப்பதால் தனிமனித ஆளுமை சிறக்கும்.

*காளையர் வீசும் / மாய வலையில் வீழ்ந்து*
*என் வயிற்றில் / கருவைச் சுமக்க மாட்டேன்*[15]

என்னும் பாடலடிகளில் 'சீனிவாசன்' பெண்களின் எச்சரிக்கை உணர்வு எதிர்காலத்திற்கு உதவும் என்கிறார்.

பிறன்மனை நோக்காமை

*மாளிகை போன்ற வீடு; மல்லிகைப் பூப்போல இல்லாள்*
*சோழிகள் குலுங்கும் ஓசைச் சுகந்தரும் மழலைச் செல்வம்*
*கோழிபோல் துயிலெழுப்பக் கூலியாள் இருந்தும் வேறோர்*
*வேலியைத் தாண்டிச் செல்லும் விருப்பமும் தேவைதானா?*[16]

என்னும் பாடலடிகளில் 'முருகதாசன்' மனதின் அலைபாயும் இயல்பைச் சுட்டுகிறார்.

விருந்தோம்புதல்

*ஒப்புடன் முகமலர்ந்து உபசரித் துண்மைபேசி*
*உப்பிலாக் கூழிட்டாலும் உண்பதே அமிர்தமாகும்*

பதினெட்டு வகையான கூட்டுகளுடன் உபசரிக்கத் தேவையில்லை; வரும் விருந்தினரின் பக்கத்தில் இருந்து இனிய சொற்களைப் பேசுதலே சிறந்த விருந்து என்கிறது 'விவேக சிந்தாமணி'.

*விருந்தெதிர் கொள்ளும் மாண்பை விளக்கியே சொல்லிச் சென்றார்*
*அருந்தமிழ்க் குறளின் ஆசான் அதனை நாம் மறக்க லாமோ?*[17]

என்னும் பாடலடிகளில் 'அனிச்சப்பூ' போன்ற விருந்தினரை வீட்டில் அழைத்து உபசரிக்கும் போது அவ்வீட்டில் வளரும் குழந்தைகளின் ஆளுமை பண்படும் என்கிறார் தங்கராசன்.

ஆடை அணிகள் அணிவதில் மரபு

*பருவ மகளிர் பாவாடை தாவணி*
*பண்புடன் அணிந்தால் வாழ்ந்திடுவேன் – தமிழ்ப்*
*பாவையர் அங்கங்கள் தெரிந்திட ஆடைகள்*
*பற்பல அணிந்தால் வருந்திடுவேன்*[18]

குழந்தைகள் வெள்ளைக் காகிதம் போன்றவர்கள். அவர்களைச் சுற்றியுள்ள பெற்றோரும் மற்றோரும் ஆடை அணி அணிவதில் முன் மாதிரியாய்த் திகழ்தல் அவசியம். மேலும் பள்ளிப் பாடப்பொருள்கள் வெறும் மூளையை வளர்ப்பனவாக மட்டும் இல்லாமல் நெஞ்சையும் பண்படுத்துவனவாக இருக்க வேண்டும். ஏனெனில் ஆடை கோளாறுகள் பல சமுதாயக் கோளாறுகளுக்கு வித்திடும் என்பதை மறந்து விடக்கூடாது.

**கூட்டுக் குடும்பம்**

*நல்லதொரு குடும்பம் பல்கலைக் கழகம்*

எனப் பாரதிதாசன் கூறுவது போல்,

*கூட்டுக் குடும்பத்தைக் கொண்டாடி மகிழ்ந்தால்*
*கோலோச்சும் இன்பத்தைக் குவலயமே பாராட்டும்*
*நாட்டுக்கு இதுபோன்ற குடும்பந்தான் தேவை*
*நன்மகிழ்வு தினம் பெருகும் நற்கூட்டுக் குடும்பந்தான்*[19]

என்ற பாடலடிகளில் 'சத்தியமூர்த்தி' கூட்டுக் குடும்பங்களால் குதூகலம் அதிகரிக்கும் என்கிறார். ஆளுமை மேம்படவே ஆண்டுதோறும் சிங்கப்பூரில் 'குடும்பத்தினம்' கொண்டாடப்படுகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.

**இல்லறம்**

*வள்ளுவரும் வாசுகியும் போல வாழும்*
*வற்றாத ஆறுபோலத் தோன்றும் நாளும்*
*நல்லவர்தம் அறிவுரையை ஏற்று வாழ்ந்தால்*
*நலம் யாவும் குடும்பத்தில் விளங்க லாகும்*[20]

என்னும் பாடலடிகளில் 'பழனி' பெற்றோரின் சொல்படி இல்லறத்தில் கட்டுப்பட்டு வாழ்பவன் சமுதாயத்தின் சொற்களுக்கும் கீழ்ப்படிவான். இதனால் தமிழ்ச் சமுதாயத்தின் ஆளுமை மேம்பட வாய்ப்புண்டு.

**கற்பு நெறி காத்தல்**

*திருமணம் ஆகு முன்னர் / திருவே நீ தீண்டு தற்கே*
*அருள் மனம் இறங்க மாட்டேன் / அமலரே எட்டி நில்லும்*
*வரும்பழி காப்ப தற்கே*[21]

என்னும் பாடலடிகளில் 'பழநிவேலன்' நெருங்கினால் சுடும் தன்மையர் என்னும் ஆளுமையைப் பெண்கள் பேணுதல் அவசியம் என்கிறார்.

இவைபோன்ற பாரம்பரியப் பண்புகளை முற்றிலும் இழந்துவிட்டால் தமிழ்ச்சமுதாயம் அடியற்ற மரம்போல் நிலையாக நிற்க முடியாத நிலையை அடைய நேரிடும். எனவே, இன்றுபோல் என்றும் ஆளுமையில் சிறக்கப் பண்பாட்டினைப் போற்றி வளர்ப்போம் என்கிறார்கள்.

### தமிழரின் ஆளுமையைப் பாதிப்பன

வேற்றுமையில் ஒற்றுமை காணும் நம் நாட்டில் சாதிமதப் பேதங்கள் எங்கும் நிரம்பி வழிகின்றன; பாதுகாப்பற்ற தேசத்தில் முதிர்க்கன்னியரின் எண்ணிக்கை குறைய வாய்ப்பில்லாமல் போயிற்று; பெண்ணுக்குக் கொடை தந்து கொண்ட திருமணங்கள் மறைந்தே போயின.

*கடமையென ஒரு பெண்ணைக் காதலித்துக்*
*கல்யாணம் என்றொருநாள் தாலி கட்டிக்*
*கொடுமைகளை விலைகொடுத்து வாங்கி வந்து*
*கொண்டுவா பலலட்சம் பணத்தை என்றும்*
*அடிதடிகள் பெண்கள்படும் அவலக் காட்சி*
*அவ்வளவா இவ்வளவா அய்யோ பாவம்*[23]

என்ற பாடலடிகளில் 'முத்து மாணிக்கம்' செழிப்பான சிங்கையிலும் பெண்கள் சிக்கும் பிரச்சினைகளைக் கூறுகிறார்.

பெருகிவரும் மணமுறிவு; கணக்கில்லா கருக்கலைப்பு; தமிழனின் முன்னேற்றத்தைத் தமிழனே தடுக்கும் அவலம்; நல்வழிப்படுத்தும் முன்னோரைப் போற்றாமை; குடும்பத்தைப் பிரிந்து ஏங்குதல்;

*வேலை வேலையென*
*வெளியிலேயே குடியிருக்கும்*
*அப்பா அம்மாவின்*
*அன்பினை நான்*
*அவ்வப்போது பெறுவதற்கும்*
*அட்டை ஒன்றிருந்தால்*
*அனுப்பி வைக்கவும்*[23]

இவைபோன்ற சமுதாயப் பிரச்சினைகள் தமிழனின் ஆளுமை மேம்பாட்டைப் பாதிக்கின்றன என்று சிங்கப்பூர்க் கவிஞர் எடுத்துக்காட்டி அவற்றிலிருந்து மீளவும் கவிதைகளின் மூலம் வழிவகை செய்கின்றனர்.

*தமிழ்ப்பண்பு இன்றுநேற்று வந்ததல்ல*
*தமிழ்கூறும் நல்லுலகம் கூறுவதை*
*இமிழ்கடலைக் கடந்தபோதும் கடைப்பிடிக்கும்*
*எல்லோரும் தமிழரென்று முழங்கிடுவோம்*[24]

## முடிவுரை

தாயகத்திலிருந்து புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் தங்களின் பண்பாட்டு அடையாளங்களை இழக்க விரும்புவதில்லை. இவர்கள் எங்கு வாழ்ந்தாலும் தமிழர்களாக வாழ விரும்புகின்றனர். இதை அவர்கள் படைத்துள்ள கவிதைகளில் பரவலாக அறிய முடிகிறது. அவர்கள் கோவில்களை அமைத்து வழிபடுகின்றனர். திருமணம், விருந்தோம்பல், தீமிதி, தைப்பூசம், தீபாவளி, பொங்கல் பண்டிகை முதலிய இந்தியப் பண்பாட்டுக் கூறுகளைப் பின்பற்றி வருகின்றனர். இந்திய ஆடை அணிகளை விரும்பி அணிகின்றனர். தாய்மொழியில் கவிதைகளை எழுதி மொழிப்பற்றை வெளிப்படுத்துகின்றனர். அவர்கள் படைத்துள்ள தமிழ்க் கவிதைகளில் காணப்படும் நெறிமுறைகள் தமிழனின் ஆளுமை முழுமை அடைய உதவுகின்றன.

## குறிப்புகள்

1. ஆண்டியப்பன், தமிழ் முரசு கவிதைகள், 1-9-1996, கவிதை எண் 173.
2. T. Bharathi - Personality Development, P. 1.
3. Cambridge International Dictionary of English, P. 230.
4. லாங்மேன் சமகாலத்திய ஆங்கில அகராதி, ப. 302.
5. பார்வதி பூபாலன், இளவேனிற் பூக்கள், ப. 21.
6. பழநிவேலன், நெருங்கினால் சுடும் நெருப்பு, ப. 82.
7. பழநிவேலு, கவிஞர் ந. பழநிவேலு படைப்புக் களஞ்சியம், தொகுதி 2, ப. 145.
8. முத்துமாணிக்கம், இஸ்லாமியக் கீதங்கள், ப. 25.
9. முருகதாசன், தமிழ் முரசு கவிதைகள், 16-4-1995, கவிதை எண் 71.
10. சுதர்மன் வைரவன், சுழலும் உலகில் சுற்றுகின்ற வாழ்க்கை, ப. 195.
11. பாரதிதாசன், இருண்ட வீடு, பாடல் எண். 46.
12. சத்தியமூர்த்தி, தமிழ் முரசு கவிதைகள், 29-6-1997, கவிதை எண் 183.
13. சுந்தரம் நடராசு, தமிழ் முரசு கவிதைகள், 16-3-1997, கவிதை எண் 51.
14. திருவேங்கடம், சிறகுகள், ப. 43.
15. சீனிவாசன், தமிழ்ச்செல்வம், தொகுப்பு, கீழைநாட்டுக் கவிதை மஞ்சரி, ப. 254.
16. முருகதாசன், முருகதாசனின் நெற்றிக்கண், ப. 46.
17. தங்கராசன், பொய்கை பூக்கள், ப. 40.
18. நன்முல்லை, தமிழ் முரசு கவிதைகள், 2-6-1991, கவிதை எண் 114.
19. சத்யமூர்த்தி, தமிழ் முரசு கவிதைகள், 29-6-1997, கவிதை எண் 183.
20. பழனி, கவிதைப் பூக்கள், ப. 101.
21. பழநிவேலன், நெருங்கினால் சுடும் நெருப்பு, ப. 92.
22. முத்து மாணிக்கம், வணக்கம் சிங்கப்பூர், ப. 148.
23. கண்மணி, தமிழ் முரசு கவிதைகள், 24-1-1999, கவிதை எண் 17.
24. சொக்கலிங்கம், கீழைநாட்டுக் கவிதை மஞ்சரி, ப. 132.

# கனடா நாட்டுக் கவிஞர் புகாரியின் கவிதைகளில் மொழிநடை

திருமதி கு. நாகம்மாள்
*ஆய்வியல் நிறைஞர்*
*உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்*
*தரமணி*, சென்னை

## முன்னுரை

பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் இருபதாம் நூற்றாண்டின் இறுதியிலும் சிறப்புடன் தோன்றிய புதுக்கவிதை அச்சமயத்தில் அன்று மக்களிடம் விடுதலை உணர்வை மேலோங்கச் செய்ய பயன்பட்டது. அதன் வளர்ச்சி படிப்படியாய் வேர் ஊன்றி இன்று விருச்சமாகியுள்ளது. இக்கவிதை படைப்பிற்கென்றும் (அ) வேறுசில படைப்பிற்கென்றும் ஒவ்வொரு எழுத்தாளரும் தம்முடைய ஆற்றலுக்கு ஏற்ப மொழிநடையைக் கையாண்டு சிறப்புடன் திகழ்கின்றனர். இப்படைப்பு இன்னாருடையது என்பதனை நாம் அப்படைப்பாளியின் மொழிநடையை வைத்தே உறுதியுடன் கூறுகிறோம். அவ்வகையில் தஞ்சாவூரில் ஒரத்தநாட்டில் பிறந்து இன்று கணினி வல்லுநராகக் கனடாவில் பணியாற்றும் அயலகத் தமிழ்க் கவிஞராகிய புகாரி அவர்களின் 'வெளிச்ச அழைப்புகள்', 'அன்புடன் இதயம்' ஆகிய கவிதைகளின் மொழிநடை ஆராய்வதாய் இக்கட்டுரை அமைகிறது.

## ஆசிரியர் குறிப்பு

தஞ்சாவூர் அருகே உள்ள ஒரத்தநாட்டில் பிறந்து, 1981இல் இருந்து 18 ஆண்டுகள் சவுதியிலும் 1999 முதல் கனடாவிலும் வாழ்ந்து வருகிறார். இணையத்தில் கவிபாடுபவர். இணைய இதழ்களின் மூலம் அறிமுகமானார். திண்ணை, அம்பலம், நிலாச்சாரல், குவியம், தமிழோவியம், சிங்கை, இணையம், காதல், காம், ராயர் காபி கிளப், சந்தவசந்தம், புத்தகப்புழு, தமிழ் உலகம், குமுதம், கல்வி, எழில்நிலா, அகத்தியர் போன்ற இணைய இதழ்களில் இவரது கவிதைகள் வெளியாகியுள்ளன. இணையக் குழுமம் பலவற்றில் உறுப்பினராகவும் உள்ளார். கவிஞர் புகாரி 'புத்தகப் புழு' இணையக் குழுவில் மட்டுநராக (moderator) இருந்தும், உயிரெழுத்து இணையக் குழுவின் உரிமையாளராகவும் மட்டுநராகவும் இருந்து வருகிறார். 'வெளிச்ச அழைப்புகள், அன்புடன் இதயம், சரணமென்றேன், பச்சை

மிளகாய்', இளவரசி' போன்றன இவரது கவிதைத் தொகுதிகள். 'தமிழ்-உலகம்' பின் குழுமத்தின் ஆஸ்தான கவிஞராகவும் அறிவிக்கப்பட்டுள்ளார். மேலும் புகாரி கனடா உதயனின் தங்கப்பதக்கக் கவிதைத் தேர்வுக்குழுவில் கவிநாயகர் கந்தவனம் அவர்களோடு நடுவராகத் தொடர்ந்து இருந்தும் பாராட்டுப் பெற்றார். தாய்நாட்டை விட்டுவிட்டுக் கனடாவில் சென்று குடியேறிய தமிழர்களில் 'தமிழ்ப் புத்தகம்' வெளியிட்ட முதல் தமிழர் என்ற பெருமையையும் உடையவர்.

### மொழிநடை விளக்கம்

மொழியினைக் குறித்துக் குறிப்பிடும்போது,

> சொற்களையும் சொற்களின் தொடர்களையும் கொண்ட, மனிதர்கள் தங்கள் கருத்தையும் உணர்வையும் வெளிப் படுத்தித் தங்களுக்குள் தொடர்பு கொள்ளப் பயன்படுத்தும் கருவி; பாஷை என்றும் ஆங்கிலத்தில் language"

எனவும் க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி (ப.1171) விளக்குகிறது. நடை பற்றி சொல்லும் போது "(எழுத்தில் பேச்சில்) பிறவற்றிலிருந்து (அ) பிறரிடமிருந்து வேறுபடுத்திக் காணக்கூடிய குறிப்பிட்ட தன்மைகளைக் கொண்ட முறை; பாணி" எனத் தமிழிலும், ஆங்கிலத்தில் Style (in speech, writing, etc.) (ப. 797) என்றும் விளக்குகிறது. இவற்றிலிருந்து ஒருவரின் தனிப்பட்ட முறையே (அ) பாணியே அவரது மொழிநடையென அறிகிறோம்.

ஆகவே புகாரியின் கவிதைகளில் மொழிநடையை இங்கு ஆராய்வோம்.

### மோனை, எதுகை உத்தி

முதல் எழுத்து ஒன்றிவருவது மோனை, இரண்டாம் எழுத்து ஒன்றிவருவது எதுகை எனவும் இலக்கண நூலார் கூறுகின்றனர். இம்மோனை எதுகையினைப் புகாரி பல இடங்களில் எடுத்தாண்டுள்ளார்.

> *உடன்கட்டை தீதென்றோம்*
> *உடனெரிப்பது கொடூரமென்று. . .!*
> *ஆனால் இன்று*
> *அணு அணுவாய் எரிக்கின்றோம். . .* (வெ.அ.ப.32)

என எதுகை மோனை உத்திகளைக் கொண்டு பழங்காலத்தில் நிகழ்ந்த உடன்கட்டை ஏறுதலையும், இன்று சமூகத்தில் நிகழும் அவலங்களையும் அருமையாகப் படம் பிடித்துக் காட்டியுள்ளார். இதுமட்டுமின்றி,

*என்னருகில் நீ வந்தால்*
*என்னென்ன செய்வதென்று*
*எண்ணியவென் எண்ணங்களை*
*எப்போதோ மறத்துவிட்டு* (வெ.அ.ப. 39)

இக்கவிதையிலும் இதே எதுகை மோனையுள்ள சிறந்த உணர்வுடன் கூடிய கவிதையைப் பார்க்க முடிகிறது.

மேலும் இரண்டாவது கவிதை தொகுதியிலும் இந்நிலையினை

*உன்னில் தோன்றி*
*உன்னில் தவழ்ந்து*
*உன்னில் வாழ்ந்து உனக்குள் மாயும்*
*ஊனும் உயிரும்*
*உன்றன் பிள்ளை*
*உயர்கள் இன்றி ஒன்றும் இல்லை....* (அ.இ.ப. 60)

என இதே எதுகை மோனை உத்திகள் பயின்று வந்துள்ளன.

**பேச்சு வழக்குச் சொற்கள்**

எந்தவொரு படைப்பும் இயல்பான பேச்சு வழக்கில் அமையும் போதுதான் அதனைப் பாமர மனிதனும் எளிதில் உள்வாங்கிக்கொள்ள முடிகிறது. அதனை நன்குணர்ந்த புகாரி,

*நெத்தியெங்கும் பூப்பூக்க*
*நெஞ்சமெங்கும் தேன் வடிய.....* (வெ.அ.ப. 38)

எனவும்,

*நேத்திவர எம்மனச*
*நெலப்படுத்தி நானிருந்தேன்ஞ்...*
*பாத்துவச்ச தாய்தம்பி*
*பருசமென்று சொன்னாங்க...!* (வெ.அ.ப. 89)

என்ற கவிதை அடிகள் நடைமுறைப் பேச்சு வழக்கிலேயே பதிவு செய்துள்ளமை நம் மனதில் நிற்குமாறு நிலைத்த கவிதையாக உள்ளது.

**உவமை**

உலகில் எந்தக் குழந்தைக்கும் தலையானவள் தாய் - இதேபோல் எவ்வணிக்கும் தாயணி உவமை அணியாகும். தெரியாத பொருளைத் தெரிந்த பொருள் கொண்டு விளக்கப் பெறுமிடத்தில் இவ்வணி தோன்றுகிறது. இதனை,

*இங்கு வந்ததும்*
*நானும் ஒரு நிலவுதான்*
*என்று ...*
*மஞ்சள் பூசிய*
*மணப்பெண்ணைப் போல*
*அழகு காட்டிச் சிரிக்கிறது*
*மயிலிறகு ஒத்தடம் போல்*
*நம் மேனியில் பதிக்கிறது*
*தன் முத்து முத்தங்களை* (அ.இ.ப.35)

எனக் கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தில் அமைந்துள்ள வேங்கூவர் பற்றிக் கவிஞர் 2002இல் மே மாதம் டொரான்டோவிலிருந்து முதன் முதலாகப் பணி நிமித்தம் காரணமாகச் சென்று அதன் அழகில் மயங்கினேன் என உவமை சொல் உதவியால் விளக்குகிறார். 'நிறுத்து மனிதா நிறுத்து யுத்தத்தை!' என்ற கவிதை தலைப்பில்,

*முகிலைப் போலே*
........................ (அ.இ.ப. 48)

எனவும் உவமையை மேற்கொள்கிறார்.

### வியங்கோள் வினைமுற்று

க, ய என்னும் உயிர்மெய்களையும் ர் என்னும் மெய்யையும் ஈற்றில் உடைய சொற்கள் வியங்கோள் வினைமுற்றுகளாகும். இதனை,

*கயவொடு ரவ்வொற்று ஈற்ற வியங்கோள்*
*இயலும் இடம்பால் எங்கும் என்ப* (நன்னூல், பா. 338)

எனப் பவணந்தி முனிவர் கூறியுள்ளார். இதனை, புகாரி மிகக் குறைந்த இடங்களில் மட்டும்தான் பயன்படுத்தி உள்ளார். அதற்கு,

*மகோன்னதமே நீ வாழ்க...!* (ப. 44),
*உன்புகழ் வாழ்க* (வெ.அ.பக்.100)

என்பதை எடுத்துக்காட்டலாம்.

### இனிமை

சொல்லும் அதன் பொருளும் சிறக்குமாறு அதனை ஏற்ற இடத்தில் அமைக்க வேண்டும். அப்போதுதான் அக்கவிதை சிறந்த தரத்தையும் இனிமையும் பெறுகிறது. அந்நுட்பத்தை,

*பசி தாமதித்தால்*
*நோய் ..!*

*இதயம் தாமதித்தால்*
*மரணம்...!* *(வெ.அ.ப. 35)*

என்ற கவிதையினைக் கொண்டு விளக்குகிறார். இங்குப் 'பசித்து ருசி' என முன்னோர்கள் கூறியுள்ளனர். அவ்வாறின்றி அப்பசி நேரம் தவறும் போது அதுவே நோயாக மாறிவிடும் அபாய நிலையினைத் தகுந்த சொல் இனிமையுடன் கூடிய மொழி நடையால் விளக்கியுள்ள தன்மை சிறப்புக்குரியது.

### விளித் தொடர்கள்

எட்டு வேற்றுமை உருபுகளையும் விளக்கிய தொல்காப்பியர் முதல் வேற்றுமைக்கும், எட்டாம் வேற்றுமைக்கும் வேற்றுமை உருபுகள் இல்லை எனவும் கூறி எட்டாம் வேற்றுமைக்கு மட்டும் தனியியல் அமைத்திருப்பதிலி ருந்து இதன் முக்கியத்துவம் நமக்கு விளங்குகிறது. நாமும் நம் அன்றாட வாழ்வில் நம்மை அறியாமலேயே விளித்தொடர்களைப் பயன்படுத்துகிறோம். இது கவிதையில் அமையும்போது நம் சிந்தனையைத் திசை திருப்புகிறது. இந்நிலைக்கு,

'அன்புத் தாயா நீ...!' (பக்.43), 'நண்பனே' (பக்.21), என்பன 'அன்புடன் இதயம்' எனும் நூலில் உள்ளன.

போன்ற விளிச்சொற்களைச் சான்றாகக் கூறலாம்.

### அடுக்குத் தொடர்கள்

சொல் அடுக்கி வரும்போது அசைநிலைக்கு இரண்டும் பொருள் நிலைக்கு இரண்டும் மூன்றும் இசை நிறைக்கு இரண்டும் மூன்றும் நான்கும் அடுக்கி வரும் என நன்னூல் சுட்டும் நிலையினை,

*அசைநிலை பொருள்நிலை இசைநிறைக்கு ஒருசொல்*
*இரண்டு மூன்று நான்கு எல்லைமுறை அடுக்கும்*
*(நன்னூல், பா. 395)*

என்ற சூத்திரத்தால் அறியலாம்.

இவ்வாறு இச்சொற்கள் இரண்டு முறை பயின்று வருவதால் அச் சொற்களின் முக்கியத்துவம் நமக்கு விளங்குகிறது. கவிஞர் புகாரி அவர்கள் இவ்வடுக்குத் தொடர்களைப் பல இடங்களில் கையாண்டுள்ளார். அதாவது தேவையான (அ) தேவையைக் கருதி மட்டுமே அச்சொற்கள் இடம் பெறுகின்றன. உதாரணமாக,

*காலங்காலமாய்*
*யுகம் யுகமாய்...* *(பக்.28)*

என்பதைக் கூறலாம். இன்னும் பல இடங்களைத் தொட்டுக்காட்டலாம். 'எழுது ...எழுது...' (ப. 74), 'தேடித் தேடி', 'வாடி வாடி' (ப. 75), 'வேறு வேறு தானே...!' (ப. 81), 'மீண்டும் மீண்டும்', 'மேலும் மேலும்' (ப. 94), 'பூத்துப் பூத்துக் குலுங்கிய', 'ஆடி... ஆடி...', 'மாறி .... மாறி.....' (ப. 103) இவை யாவும் வெளிச்ச அழைப்புகள் என்ற தமது முதலாவது கவிதை நூலில் உள்ளன. இதுபோன்று புகாரியின் இரண்டாவது கவிதைத் தொகுதி யிலும் அடுக்குத் தொடர்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதை, 'சரி... சரி...' (ப. 23) 'மின்னல்கள் கொளுத்தி, மின்னல்கள் கொளுத்தி' (ப. 34), 'உயிரே உயிரே' (ப. 78), 'கோடி கோடியாய'; (ப. 90), 'எத்தனையோ எத்தனையோ', 'எப்படி எப்படியோ' 'அப்படி அப்படியே' (ப. 95) என்பன அன்புடன் இதயம் என்ற இரண்டாவது கவிதைத் தொகுதியில் உள்ளன.

### இரட்டைக் கிளவி

இரட்டைக் கிளவியும் இரண்டு சொற்களாய் அடுக்கி வரும். ஆனால் அடுக்குத் தொடர்கள் போல் பிரித்தால் பொருள் தரா. இதனை,

*இரட்டைக் கிளவி இரட்டிற் பிரிந் திசையா*
*(தொல். சொல். நூ. 48)*

எனத் தொல்காப்பியர் விளக்கியுள்ளார். இச்செய்தியை நன்குணர்ந்த புகாரி,

'ஆராரோ ஆரிரரோ', 'ராரோ ரிரரோ' (ப. 65), 'துடிதுடிக்க' (ப. 39), 'திமு திமுவென' (ப. 103) இதுபோன்ற சொற்கள் வெளிச்ச அழைப்புகளில் உள்ளன. 'சலசலப்பு' (ப. 71), 'சுக்கல் சுக்கலாய்' (ப. 112) என்ற சொற்கள் அன்புடன் இதயம் எனும் கவிதை நூலால் அறியப்படுகின்றன.

### வினாத் தொடர்கள்

எந்த வினாவும் கேட்பவர்க்கு முதலில் புரிய வேண்டும். அதன் பின் அவ்வினாவைத் தெளிவான முறையில் பிறரிடம் கேட்க வேண்டும். வினாவை எழுப்புவார்க்கும் மிகுந்த அறிவு நுட்பம் இருக்க வேண்டும். அவ்வினா வெற்றெனத் தொடுத்தலாக இருக்கக் கூடாது. மேலும் நம் மூளைக்கு வேலைக்கொடுத்து அதன் வழியாக நாமும் பிறரும் பயனடையும் வகையில் அமைய வேண்டும். என்றெல்லாம் வினாவைப் பற்றி நாம் சொல்லிக் கொண்டே போகலாம். இவ்வினாச்சொற்களை மிகச் சிறந்த முறையில் கையாண்டுள்ளார் புகாரி என்பதனை,

*அடியே...*
*உன் மௌனமென்ன*
*என் உயிரைக் கிள்ளிவிடும்*
*பவள நகங்களா?..............*
*என்*
*உறக்கத்தைத்*
*தின்று தீர்க்கும் பசிப் பற்களா?* (வெ.அ.ப. 19)

என ஒரு பெண்ணின் மௌனத்தை மிக அழகாக அவரின் தனித்தன்மை மிக்க மொழிநடையால் சுட்டுகிறார். ஒரு சில இடங்களில் வினாவை யெழுப்பும் புகாரி,

*தாமதிப்போம்...!*
*கைமீறும் காரணங்களில்*
*நாம்*
*தாமதிப்போம்...*
*ஆனால்*
*தாமதமே சம்மதம்*
*என்று*
*தரங் குறையலாமோ* (வெ.அ.ப. 36)

இவ்வினாவிற்கான விடையினை இச்சமூகத்திடம் ஒப்படைப்பது போல இருந்தாலும் அதற்கு ஒரு விடையாக அவரே நம்மால் கைமீறும் காரணங்களில் மட்டும் தாமதிப்போம்...! எல்லா நேரங்களிலும் வேண்டாம் என்ற விடையையும் கூறியுள்ளதை எடுத்துக் காட்டலாம். இதுபோன்றே, 'வேதனைதானா?, சுகமான வேதனைதானே? உன்னையே உச்சரித்தால்? உன்னையே தொட்டால்...? காதலா?, அந்த அழகா...?' (பக். 72-73), 'நாடு காடு என்றா பார்த்தன...?' (ப. 82) என்பதனையும் வெளிச்ச அழைப்புகளில் பயன்படுத்தியுள்ளார். 'அன்புடன் இதயத்தில் மதிப்பென்ன' (ப. 23), 'உனக்கொரு விரல்தானே..? உனக்குத் தெரியுமா...? என்ன செய்தாய்...? அழுதாயா...? வெளிக்கொண்டு வருமா...?' (பக். 97-99) இவ்வாறான சொற்கள் உள்ளன.

**மேற்கோள் காட்டியமை**

உலகம் முழுவதுமே பாராட்டும் ஓர் உன்னத படைப்பாளியாக இருந்தாலும், அப்படைப்பாளி வேறொரு படைப்பாளி பயன்படுத்திய சொற்களையோ தொடர்களையோ மேற்கோளாகப் பயன்படுத்தி அதனை இவர் கூறினார் என நாகரிகத்துடன் சுட்டும் நிலையினை நாம் காண்கிறோம்.

இது ஓர் ஆய்வாளருக்கான முக்கியப் பண்பாகவும் விளங்குகிறது. அவ் வகையில் புகாரியும்,

*தனியொருவனுக்கு உணவில்லையெனில்*
*ஜகத்தினை அழித்திடுவோம்...!*
*என்ற*
*பாரதியின் பாரதத்தில்*
*இவர்கள்*
*பட்டினி போடப்படுகிறார்கள்* (வெ.அ.ப. 32)

என வருத்தத்துடன் கூறுவது நம் கண்களில் கண்ணீரைப் பெருக்குகின்றது.

### எண்ணுமை

உம் வெளிப்படையாக வருவது எண்ணும்மை என்பர். இவ்வெண்ணு மையும் புகாரியின் கவிதையில் 'நீரும் நிலமும் காற்றும் நெருப்பும்' (ப. 63), 'மழையோடும் கருவியோடும்'; (ப. 54), 'வெளியும் தின்னும் காற்றும் தின்னும்'(ப. 57), 'எழாமலும் விழாமலும்', 'மண்ணும் விண்ணும்' (பக். 80-81) என்ற எண்ணுமைகளை அன்புடன் இதயத்தில் விளக்கியுள்ளார்.

### பிறமொழிச்சொற்கள்

தமிழ் மொழிக்கே உரிய சிறப்பு என்னவென்றால் அதனது தனித்தியங்கும் தன்மையென ஒரே அடியில் விளக்கலாம். இம்மொழியைப் பிறமொழிகளுடன் ஒப்பிட்டுக் கூறிய பெருமை கால்டுவெல், எல்லிஸ் போன்ற அறிஞர் பெருமக்களையே சாரும், கவிஞர் புகாரி அவர்கள் தம்முடைய கவிதை முழுவதும் தூய தமிழிலேயே கவிதை எழுதியுள்ளார். இருப்பினும் மிகக் குறைந்த இடத்தில் தான் பிறமொழிச் சொற்களை மொழிந்துள்ளார். இதனை 'ஐ லவ் யூ' சொல்ல (அ.இ.ப. 66), 'டமில்' (ப. 75), 'வேலையும் விசாவும் தயார்' (ப. 76), 'எவர்சில்வர்' (ப. 106) இதுபோன்ற ஆங்கிலச் சொற்களும்

'சந்தோஷம்', 'சம்மதம்' (ப. 72), 'சர்க்கரையை' (ப. 70), 'உஷ்ணமாய்' (ப.78), 'நிஜமா தோழா' (ப. 67), 'நிஜமாய்க் கிசுகிசுக்கும்' (ப. 87), 'ஒவ்வோர் ஜீவனும்' (ப. 62) போன்ற வடமொழிச் சொற்களும் அன்புடன் இதயத்தில் பதிவாகியுள்ளன.

### முடிவுரை

1. புகாரியின் கவிதைகளில் மொழிநடை தேவையான அளவுடனும் அழகுடனும் அமைந்து கருத்தைச் செறிவாக வெளிப்படுத்தியுள்ளன.

2. அவருடைய படைப்பிற்கு ஒரு சிறந்த அச்சாணியாக அமைவது அவர் கையாண்ட மொழி நடை எனக் கூறும் வகையில் அவரது கவிதைப் படைப்புகள் தெள்ள தெளிவாகச் சித்திரிக்கப்பட்டுள்ளன.

3. எதுகை, மோனை, அடுக்குத்தொடர், இரட்டைக் கிளவி, வியங்கோள் வினைமுற்று, எளிமை, இனிமை, பேச்சு வழக்குச் சொற்கள், வினாச் சொற்கள், விளித்தொடர்கள், உவமைகள், பிறமொழிச் சொற்கள் எண்ணுமை போன்ற மொழிநடைகள் நன்கு வெளிப்படுகின்றன.

4. காதல், அரசியல், இல்லற வாழ்வில் பிரிவுகள், நட்பு, இயற்கை, தீவிரவாதக் கண்டிப்பு, மனம், பாசம், தமிழ், தமிழ்ப் புத்தாண்டுகள் எனப் பல பொருண்மைகளைத் தகுந்த மொழிநடையுடன் விளக்கும் பாங்குடன் திகழ்கிறார்.

5. கனடாவில் இருந்தாலும் தம் வாழ்ந்த மண்ணை மறவாதும் தாம் கற்ற கல்வியின் திறனையும் கொண்டு, ஒவ்வொரு கவிதையும், அக்கவிதையின் பொருளையும், ஆழ்ந்த அறிவு நுட்பத்துடன் கூடிய மொழிநடையைப் புகாரிக்கே உரிய கவித்துவத்துடன் எடுத்தாளப் பட்டு இச்சமூகத்திற்கு இன்றும் இனிய பயன் உள்ளதாய் இருந்தும் இனி இருக்கவும் செய்யும் என்பதில் துளியும் ஐயமில்லை.

6. இலக்கிய உலகில் தமக்கென ஒரு தனிப் பாணியினை உண்டாக்கிக் கொண்டு ஓர் உன்னத அயலக கவிஞராக விளங்கி, கருத்துகளைக் கூறி நம் சிந்தனையைத் தூண்டியவராகப் புகாரி உள்ளார்.

### துணை நூல்கள்

1. அண்ணாமலை இ., க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, (தமிழ்-தமிழ்-ஆங்கிலம்) மறு பதிப்பு ஆகஸ்டு 2011, க்ரியா-A, சென்னை - 20.
2. புகாரி, வெளிச்ச அமைப்புகள், முதல் பதிப்பு 2002, மணிமேகலை பிரசுரம், சென்னை - 17.
3. புகாரி, அன்புடன் இதயம், முதல் பதிப்பு ஏப்ரல் 2003, சபரி பப்ளிகேஷன்ஸ், சென்னை - 34 .
4. சந்திரன் ஜெ., நன்னூல் (காண்டிகையுரை), முதற்பதிப்பு-2002, வர்த்தமானன் பதிப்பகம், சென்னை- 17.
5. சேனாவரையர், தொல்காப்பியம் சொல்லதிகாரம், சேனாவரையர் விளக்கவுரை யுடன், மறுபதிப்பு ஜூலை 1974, கழக வெளியீடு, சென்னை-1.

# சிறுகதை

# இலங்கை : மலையகச் சிறுகதைகளின் தோற்றமும் வளர்ச்சியும்

திரு. பெருமாள் சரவணகுமார்
*தமிழ்த்துறை*
*பேராதனைப் பல்கலைக்கழகம்*
*இலங்கை*

இலங்கைத் தமிழ்ச் சிறுகதை வரலாறு எனும் பெருந்தொகுதிக்குள் மலையகச் சிறுகதை வரலாறு ஓர் உபபண்பாடாக வளர்ந்து வருகிறது. அவ்வாறு அமைவுபெறுவதற்கு அது தனக்கெனத் தனித்துவமான பண்புகளைக் கொண்டதாகவும், குறிப்பிடத்தக்க அளவு இலக்கியத் தொகுதியை உடையதாகவும் விளங்குகின்றமை முக்கியமான காரணமாகும். பெருந்தோட்டப் பயிர் செய்கையைக் களமாகக் கொண்டு மலையகச் சிறுகதைகள் அமையப்பெறுவதும் அவற்றின் தனித்துவத்தை இனங்காட்டு கின்றது. அத்தோடு, இலங்கைத் தமிழ்ச் சிறுகதையின் பொருட்பரப்பை விரிவாக்கம் செய்ததிலும், தமிழ்ச் சிறுகதையின் அனுபவ வெளிப்பாட்டை விசாலித்ததிலும் மலையகச் சிறுகதைகளுக்கு முக்கியமான இடம் உண்டு. இது பற்றிய பேராசிரியர் க. கைலாசபதியின் கருத்தும் இங்குச் சுட்டிக் காட்டத்தக்கது.

> இலங்கையிலே கடந்த மூன்று தசாப்தங்களாகத் தேசிய இலக்கியக் கோட்பாடு இயக்க வடிவம் பெற்றதும், அவ்வுணர்வின் விளைவாகவும் நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் அவ்வப்பகுதி மண்வாசனை கமழும் ஆற்றல் மிக்க ஆக்கங்கள் உருவாகி வளர்ந்துள்ளதையும், இவற்றின் உடனிகழ்ச்சியாக மொழிநடை, இலக்கிய உத்திகள் முதலியவற்றிலே குறிப்பிடத்தக்க வளர்ச்சி ஏற்பட்டு வந்தமையும் இப்பொழுது இலக்கிய வரலாறாகி விட்டது. பிரதேச வாழ்க்கையைப் பொருளாய்க் கொண்டு எழுதப்பட்டு வந்துள்ள படைப்புகளில் பெருந்தோட்டப் பயிர்செய்கைக்குக் களமாக உள்ள மலைநாட்டை மையமாகக் கொண்டு எழுதப்பட்டிருப்பனவற்றிற்குத் தனியிடமுண்டு. கவிதை, சிறுகதை, நாவல், நாடகம் என்ற இலக்கியப் பிரிவுகளில் சிறுகதையே மலைப் பிரதேசம் பற்றிய படைப்புகளில் முதலிடம் பெற்றுள்ளது எனலாம்.[1]

அவ்வகையில், இக்கட்டுரையின் நோக்கம் கருதி மலையகத் தமிழ்ச் சிறுகதையின் வளர்ச்சிக் கட்டங்களைப் பின்வருமாறு பகுத்து நோக்கலாம்.

1. மலையகத்தின் ஆரம்பகாலச் சிறுகதை முயற்சிகள்
2. 1960 - 1990களுக்கு இடைப்பட்ட காலச் சிறுகதை முயற்சிகள்
3. 1990களுக்குப் பின்னரான சிறுகதை முயற்சிகள்

## மலையகத்தின் ஆரம்பகாலச் சிறுகதை முயற்சிகள்

இலங்கையின் ஆரம்ப காலச் சிறுகதை முன்னோடிகளாக இலங்கையர்கோன், சி. வைத்தியலிங்கம், சம்பந்தன் முதலானவர்களைக் கொள்வது போலவே மலையகச் சிறுகதை வரலாற்றிலும் மூவருடைய பங்களிப்புகள் குறிப்பிடத்தக்கன. அவ்வகையில், கோ. நடேசய்யர், சி.வி. வேலுப்பிள்ளை, கே. கணேஸ் ஆகியோரின் சிறுகதை முயற்சிகளே மலையகச் சிறுகதை இலக்கியம் என்ற தனிப் பகுப்புத் தோன்றுவற்கு வழிகோலின. மலையகச் சமூகப் பின்புலத்தில் இம்மூவருடைய பங்களிப்புகள் பல்வேறு தளங்களிலும் செல்வாக்குச் செலுத்தின. மலையகச் சூழலில் புதிய கருத்துநிலைகளை விதைத்து, அவற்றினூடாகச் சமூக மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கிலேயே இவர்கள் தங்களது வாழ்க்கையையும், எழுத்து முயற்சிகளையும் வடிவமைத்துக் கொண்டனர். இம்மூவருக்கும் கிடைத்த ஆங்கில இலக்கியப் பரிச்சயமும் ஆங்கில மொழியுடனான ஊடாட்டமும் அவர்களது பன்முகப்பட்ட செயற்பாடுகளுக்கு அடிப்படையாயின.

மலையகச் சிறுகதை வரலாற்றைப் பொறுத்தமட்டில், முதலாவது முயற்சியாக விளங்குவது கோ. நடேசய்யரின் திரு. ராமசாமி சோர்வையின் சரிதம் என்ற கதையாகும். இக்கதையே இலங்கையின் தமிழ்ச் சிறுகதையின் தொடக்கப் புள்ளி எனலாம். ஆயினும், இக்கதையின் அமைப்பும், உள்ளடக்கமும் சிறுகதையின் பொருண்மை நிலைகளைக் கொண்டதாக அமையவில்லை என்றே சொல்லுதல் வேண்டும். இது பற்றிப் பேராசிரியர் துரை. மனோகரன் பின்வருமாறு சுட்டிக்காட்டுவது இங்கு மனங்கொள்ளத்தக்கது.

> கோ. நடேசய்யர் 1931இல் திரு. ராமசாமி சேர்வையின் சரிதம் என்ற சிறுகதையை எழுதினார். எனவே, இலங்கைச் சிறுகதையின் தோற்றத்தை முப்பதுகளின் முற்பகுதியிலிருந்து வரன்முறையாகத் தொடங்கும் வாய்ப்பும் இருக்கிறது. நடேசைய்யரின் ஒரு சிறுகதையே பார்வைக்குக்

> கிடைப்பதால், சிறுகதைத் துறையில் அவரது பங்களிப்புகள் குறித்து மதிப்பிட முடியாதுள்ளது. அவரின் திரு. ராமசாமி சேர்வையின் சரிதம் சிறுகதைக்குரிய உருவச் செம்மையைப் பெறமுடியவில்லை எனினும், பொதுவாக இலங்கைச் சிறுகதையினதும், சிறப்பாக மலையகச் சிறுகதையினதும் தோற்றத்தை அது இனங்காட்டுகின்றது எனலாம்.[2]

கோ. நடேசய்யர் போலவே மலையகச் சமூக விடுதலைக்காகவும் மலையக இலக்கிய வரலாற்றின் உருவாக்கத்திற்காகவும் அயராது உழைத்தவர் சி. வி. வேலுப்பிள்ளை ஆவார். மலையக இலக்கியப் பரப்பில் கவிதை, நாவல், நாட்டாரியல் முதலான துறைகளின் காத்திரமான பங்களிப்பினைச் செய்தவர். சி.வி. வேலுப்பிள்ளையின் பெரும்பாலான எழுத்துக்கள் ஆங்கில மொழியிலேயே வெளிவந்தன. சிறுகதை இலக்கிய வடிவத்தைப் பொறுத்தமட்டில், சி.வி. வேலுப்பிள்ளை தமிழில் எதுவும் எழுதவில்லை. எனினும், அவரால், ஆங்கிலத்தில் எழுதி வெளியிடப்பட்ட Born to Labour என்ற உரைநடைச் சித்திரம் சிறுகதைக்குரிய பண்புகளோடு திகழ்கின்றது என அதன் மொழிபெயர்ப்பாளர் மு. சிவலிங்கம் பதிவு செய்துள்ளார். (தேயிலை தேசம் - 2003) பெருந்தோட்ட மக்களின் கலாச்சாரத்தையும், பண்பாட்டு மரபுகளையும் பாத்திரங்களின் துணைக் கொண்டு சித்திரிப்பனவாக இத்தொகுப்பிலுள்ள பெரும்பாலான கதைகள் விளங்குகின்றன. சி.வி. வேலுப்பிள்ளையின் Born to Labourஇல் உள்ள கதைகளுள் ஒரு சில கதைகளே சிறுகதைக்கான சாத்தியப் பாடுகளோடு அமைந்துள்ளன. அவ்வகையில், ஒரு புதிய ஆயுதம் (The New Weapon) நிலவும் அவளும் (Mother of the creche) என்பன சிறப்பிடம் பெறுகின்றன.

மலையகத்தின் ஆரம்பகாலச் சிறுகதை முயற்சிகளுக்குப் பங்களிப்புச் செய்தவர்களுள் கே. கணேஸ் முக்கியமானவர். கே. கணேஸ் என்ற ஆளுமையின் சிந்தனை வீச்சு மலையகம் என்ற எல்லையையும் தாண்டி, இலங்கைத் தமிழ் இலக்கியத்தின் அனைத்துத் துறைகளிலும் செல்வாக்குப் பெற்றது. இவர் நடத்திய 'பாரதி' சஞ்சிகை இலங்கையின் முற்போக்கு இலக்கியச் செயற்பாட்டை வடிவமைப்பதாக அமைந்தது. அத்தோடு, கே. கணேஸின் இலக்கியப் பங்களிப்புகள் பல்பரிமாணத் தன்மை கொண்டன. இவர் மொழிபெயர்ப்பாளர், சிறுகதையாசிரியர், இதழாசிரியர் முதலான தளங்களில் இயங்கியவர்.

கே. கணேஸின் சிறுகதைகள் என்றவகையில், மகாசக்தி, ஆசார நாசம், பால்காரப்பழனி, சட்டமும் சந்தர்ப்பமும், சக்திய போதி மரம், ஆகஸ் தியாகி ஆறுமுகம் என்பன குறிப்பிடத்தக்கன. இக்கதைகள் 1930 -

1950களுக்கு இடைப்பட்டவை. கே. கணேஸின் கருத்துநிலையை அவரது கதைகளூடாகக் காணலாம். அக்கதைகள் இடதுசாரி சித்தாந்தக் கருத்துகளை வெளிப்படுத்துகின்றன. இலங்கைத் தமிழ்ச் சிறுகதைகள் முற்போக்குச் சட்டகத்தை அணிந்துகொள்வதற்குக் கணேஸின் கதைகளும் வழிசமைத்தன. இவரது கதைகள் இன்னும் தொகுப்பு வடிவம் பெறவில்லை என்பது கவலைக்குரியது. கே. கணேஸின் கதைகள் தொகுப்பு வடிவம் பெறும் போது இலங்கைத் தமிழ்ச் சிறுகதையின் வரலாறு மேலும் விரிவும் ஆழமும் பெறும்.

ஆரம்ப கால மலையகச் சிறுகதை வளர்ச்சிக்கு அடிகோலிய இலக்கிய இதழ் என்றவகையில், 'நவஜீவன்' (1940 - 1950) இதழுக்குத் தனியிடம் உண்டு. இதனுடைய ஆசிரியராகக் காளிமுத்து பணியாற்றினார். மலையக இலக்கியத்துக்கும் அதிலும் குறிப்பாகச் சிறுகதை இலக்கியத்துக்கும் அத்திபாரம் இட்ட இதழாகவே 'நவஜீவன்' திகழ்கின்றது. இவ்விதழில் வெளிவந்த எச். எம். மொகிதீனின் ஏழ்மையின் கண்ணீர், நடைப்பயணம், சத்தியாக்கிரகி தேவேந்திரா முதலான கதைகளும், டீயெம்பியின் கொலைக்காரி, திடீர்த்திருமணம், பருவத்தின் கோளாறு, வள்ளி திருமணம், ஏமாந்தவன் ஆகிய கதைகளும், எஸ். வடிவேலனின் கோதையின் கண்கள், வண்ணத்தி மகள் என்பனவும் மலையகச் சிறுகதையின் ஆரம்ப முயற்சிகள் என்ற நிலையில் தனித்துவம் மிக்கவை. இக்காலப்பகுதியில் எழுதப்பட்ட பெரும்பாலான கதைகள் சத்தியாக்கிரகப் போராட்டம், குடியுரிமைப் பிரச்சினைகள் என்பவற்றையே அடிப்படையாகக் கொண்டன.

### 1960 - 1990களுக்கு இடைப்பட்ட காலச் சிறுகதை முயற்சிகள்

இலங்கைத் தமிழ்ச் சிறுகதை வளர்ச்சியிலும், மலையகத் தமிழ்ச் சிறுகதை வளர்ச்சியிலும் சிறப்பாக அடையாளப்படுத்தப்பட வேண்டிய காலமாக 1960களுக்குப் பின்னரான காலப்பகுதியைக் கூற முடியும். இலங்கைப் புனைகதை வரலாற்றில் பிராந்தியங்களை மையப்படுத்திய கதைசொல்லல் மரபு 1960களிலேயே செழுமைபெறத் தொடங்கியது எனலாம். ஒவ்வொரு பிராந்தியத்துக்கும் உரிய சமூக, பொருளாதார உற்பத்தி உறவு நிலைகளை அடிப்படையாகக் கொண்டு படைப்பிலக் கியங்கள் முகிழத்தொடங்கின. இதனால், பிராந்தியம் சார்ந்த தொழில் முறைகள், அதிகாரப் படிநிலைகள், வழிபாட்டு முறைகள், பேச்சு வழக்கு முறைகள், சாதியக் கட்டுமானங்கள் என்பன பதிவுசெய்யப்பட்டன. தேசிய ரீதியில் முனைப்புப் பெற்ற இக்கருத்துநிலைகள் மலையகச் சிறுகதை வளர்ச்சிக்கும் வழிசமைத்தன.

இலங்கைத் தமிழ் இலக்கியத்தில் அரசியல் சார்ந்த உள்ளடக்கம் காலவோட்டத்தோடு பின்னிப்பிணைந்தது. குறிப்பாக, பின்காலனித்துவ காலப்பகுதியில் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட சிறுபான்மை சமூகங்களுக்கு எதிரான சட்டவாக்கங்கள் புதிய இலக்கிய அலையைத் தோற்றுவித்தன. அதன்விளைவாய் இலக்கியப் படைப்பின் சமூகப் பெறுமதியும் உணரப்படத்தொடங்கியது. தனிச்சிங்களச் சட்டம், பிரஜா உரிமைச் சட்டம், இலங்கை இந்திய ஒப்பந்தம் என்பன சமூகங்களுக் கிடையிலான இடைவெளியை அதிகரித்தன. மலையகத்தைப் பொறுத்தமட்டில், தனிச்சிங்களச் சட்டம் ஏற்படுத்திய தாக்கத்தைவிட ஏனைய இரண்டு சட்டங்களும் அதிகளவான பாதிப்புகளை ஏற்படுத்தின. இக்காலப்பகுதியிலேயே இந்தியத் தொழிலாளர்களின் குடியுரிமை பறிக்கப்பட்டது. பிரஜா உரிமைச் சட்டத்தின் மூலமும், இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் மூலமும் அதிகளவான மலையக மக்கள் நாடு கடத்தப்பட்ட வரலாறு மிகவும் துயர்தோய்ந்தது. எவ்வித முன் அறிவிப்புகளும் இன்றிப் பெருந்தொகையான மக்கள் பலாத்காரமாக நாடுகடத்தப்பட்டனர். இவ்வகையான பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டு பல சிறுகதைகள் எழுந்தன.

மலையகத்தில் 1960களில் ஏற்பட்ட விழிப்புணர்வுச் சிந்தனைகள் இலக்கியப் படைப்பாளிகளின் உருவாக்கத்திற்கு அடிப்படையாயின. குறிப்பாக, இரா. சிவலிங்கம், திருச்செந்தூரன், இளஞ்செழியன் போன்றோர் களின் சமூக முன்னெடுப்புகள் மலையக இலக்கிய உருவாக்கத்திலும் செல்வாக்குச் செலுத்தின. இக்காலப்பகுதியில் எழுந்த சிறுகதைகளே மலையகப் பிராந்தியத்துக்குரிய மண்மணத்தோடு வெளிவரத்தொடங்கின. மலையகச் சிறுகதைகளுக்கான முழு அர்த்தத்தையும் தம் கதைகளில் பதிவு செய்தவர்கள் என்ற வகையில், தெளிவத்தை எம்.ஜோசப், என்.எஸ். ராமையா, சாரல்நாடன் ஆகியோர் விளங்குகின்றனர். மலையக மக்களது வாழ்வியல் அசைவியக்கத்தையும் அதன் போராட்ட நெறிமுறைகளையும் தம் கதைசொல்லல் முறைகளூடாகப் பதிவுசெய்த பெருமை இவர்களைச் சாரும். புதிய தொழில்கள், புதிய களங்கள், புதிய அனுபவங்கள், பேச்சு வழக்கு முறைகள் என்பன இலங்கைத் தமிழ்ச் சிறுகதைப் பரப்பில் தனித்துவமான முகங்களைக் காட்டத்தொடங்கின. அவ்வகையில், தெளிவத்தை ஜோசப்பின் நாமிருக்கும் நாடே, என்.எஸ்.எம். ராமையாவின் ஒரு கூடைக் கொழுந்து, சாரல்நாடனின் மலைக்கொழுந்தி முதலான சிறுகதைத் தொகுப்புகள் சிறப்பிடம் பெறுகின்றன.

இலங்கையின் பெருந்தோட்டத் தொழில் முறைக்குள் நிகழும் அதிகாரப் படிநிலைகளையும், பொருளாதாரச் சுரண்டல் தந்திரங்களையும்,

பெண்களின் அவல வாழ்வுச் சுமைகளையும், லய வாழ்வின் கொடுமை களையும், கங்காணிமார்களின் முரண்பட்ட செயற்பாடுகளையும் வெளிக் கொணரும் வகையில் பல சிறுகதைகள் படைக்கப்பட்டன. அவற்றுள் தெளிவத்தையின் பாட்டிசொன்ன கதை, கூனல், சோதனை, பழம் விழுந்தது முதலான கதைகளும், என். எஸ். எம். ராமையாவின் ஒரு கூடைக்கொழுந்து, வேட்கை, நிறைவு முதலான கதைகளும், சாரல்நாடனின் எவளோ ஒருத்தி, அழுது கழித்த இரவுகள் முதலான கதைகளும் ஒவ்வொரு படைப்பாளியினதும் சிறுகதை முகத்தை வெளிப் படுத்துகின்றன எனலாம். இம்மூவருடைய கதைகள் மலையகப் பிராந்தியத்தின் வாழ்வையும் அவ்வாழ்வுப் புலத்துக்குரிய இயங்கு தன்மைகளையும் மிகச் சிறப்பாகவே பதிவுசெய்துள்ளன. உதாரணமாக சில எடுத்துக்காட்டுகள்:

> கிரிக்கெட் மட்டைபோன்ற கைமட்டையால், படங்குத் தட்டுக்களின் இடைவெளியில் கைநீண்ட மட்டும் உள்நீண்டு கொழுந்து பரப்பும் வேலையில் மும்முரமாக ஈடுபட்டிருக் கின்றனர் மெத்தையாட்கள். குவியல் குவியலாய்க் கிடக்கும் தேயிலைத் தளிர்களை அவர்கள் தட்டிவிடும் வேகமும் இலை மேல் இலை கிடக்காமலும் இடைவெளியும் விழாமலும் பரப்பிவிடும் லாவகமும் மூக்கின்மேல் விரல் வைக்கத் தோன்றும்.[3]

> அந்தி கதிரவன் சிந்த மறைந்த செவ்வொளிக் குழம்பில் மூழ்கித் திளைத்தன, வானத்தை எட்டித் தொட்டுக் கொண்டிருந்த தூரத்து மலைகள்.

> வழு வழுவென்று வான் முட்ட நின்ற கருப்பந்தலை மரங் களினூடே கருஞ்சாரையாய் ஒளித்தும் மறைத்தும் ஓடிக் கொண்டிருக்கின்றது அந்தத் தார் றோட்டு[4]

> செக்ரோல் புத்தகத்தில் ஏதோ கணக்குப் பார்த்துக் கொண்டிருந்த கணக்கப்பிள்ளை ஐயா நிமிர்ந்து 'லேபர்' கூட்டத்தைப் பார்த்தார். எல்லோரும் வரிசையாகக் கூடையை வைத்துக்கொண்டு நின்றார்கள். விரிக்கப்பட்டுக் கிடந்த படங்குச் சாக்கு முன்னால் போய் நின்றுகொண்டார். தராசுமரம் வந்தது. தட்டுக்கூடை வந்தது. நாலு பெண்களும் வந்தார்கள். தராசுமரம் பிடிக்கவும் தட்டுக் கொட்டவும் ஆயிற்று. நிறுக்க வேண்டியதுதான். அப்போதுதான் ஏதோ ஞாபகம் வந்ததுபோல் 'ஐயா' ஒதுங்கி ஆட்களுக்கு முன்னால் வந்து நின்றார்.[5]

> சின்னதொரு தகரலாம்பு மினுக் மினுக் கென்று எரிந்து கொண்டிருந்தது. அடுப்பில் சாம்பல் பூத்துக் கிடந்த

> நெருப்பைக் குனிந்து ஊதிவிட்டான் ஆறுமுகம். பக்கத்தில் கட்டிக்கிடந்த தேயிலை மிலாருக் குவியலில் இரண்டொரு குச்சியை இழுத்து 'படக் படக்' கென்று ஒடித்து, அடுப்பில் வைத்து மீண்டும் ஊதினான். குப்பென்று தீப்பிடித்தது. குளிருக்கு அடக்கமாகக் கைகளை நெருப்பருகே காட்டியவாறு ஏறிட்டு லெட்சுமியைப் பார்த்தான்.[6]

இதேகாலப்பகுதியில் மலையகத்தைப் பிறப்பிடமாகக் கொள்ளாத இலங்கையின் படைப்பாளிகள் பலர் பெருந்தோட்ட மக்களது வாழ்வியலைப் புனைவுகளாக்கினர். அவ்வகையில் செ. கணேசலிங்கத்தின் முந்தி விட்டன், மரக்கட்டை, சாயம், கே. டானியலின் அசுர பரம்பரை, வ.அ. இராச ரத்தினத்தின் வீடு, அன்னை, அ. ந. கந்தசாமியின் நாயிலுங் கடையர், பெனடிக்ற் பாலனின் ஒரே லயக் காம்பராவில், செ. யோகநாதனின் ஆறுமுகம், எஸ். அகஸ்தியரின் பிரசாதம், என். கே. ரகுநாதனின் இரட்டை சல்யூட், முருகானந்தத்தின் காளிமுத்துவின் பிரஜா உரிமை, இ. நாக ராஜனின் சுமை, நந்தியின் ஊர் நம்புமா, தி. ஞானசேகரனின் சீட்டரசி, திருப்புமுனைத் தரிப்புகள், இப்படியும் ஓர் இரவு, பிறந்த மண் முதலான கதைகள் குறிப்பிடத்தக்கன.

மேற்குறிப்பிட்ட கதைகள் மலையக மக்களின் துயர்தோய்ந்த வாழ்க்கை முறையைப் பதிவுசெய்துள்ள அதேவேளை, புதிய சமூக அமைப் பினைக் கட்டமைக்கும் கருத்துநிலையையும் வெளிக்காட்டுகின்றன. குறிப்பாக செ. கணேசலிங்கத்தின் கதைகள் தனித்துவம் மிக்கவை. இது பற்றிய பேராசிரியர் க. அருணாசலத்தின் கருத்து இங்குச் சுட்டிக்காட்டத் தக்கது.

> கணேசலிங்கனின் கதைகளில் ஏனையோரின் கதைகளிலும் பார்க்க இந்தியத் தமிழர், சிங்களவர் என்ற வேறுபாடு காட்டாது தோட்டத் தொழிலாளர்கள் என்ற ரீதியில் ஒரே கொடியில் ஒற்றுமைப்பட்டுப் போராட வேண்டும் என்னும் உணர்வு மேலோங்கி நிற்கிறது. கணேசலிங்கன் காட்டும் இராமசாமி, சோமாவதி, பண்டா, தங்கப்பன், கண்ணுச்சாமி ஆகிய பாத்திரங்களும் வ. அ. இராசரத்தினம் காட்டும் தொழிலாளி யின் சிறுவனும் மலையகத்தில் இன்று உருவாகி வரும் புதிய இயக்கத்தின் முன்னோடிகள் எனலாம்.[7]

இதனைத் தொடர்ந்து இரா. சிவலிங்கம், திருச்செந்தூரன் ஆகியோரது அரசியற் செற்பாடுகளால் கவரப்பட்டு, சமூக அக்கறையோடு

படைப்பு முயற்சிகளில் பலர் செயற்படத் தொடங்கினர். அப்படைப்பாளிகளுள் சி. பன்னீர்ச்செல்வம், மல்லிகை சி. குமார், நூரளை சண்முகநாதன், அந்தனி ஜீவா, மொழிவரதன், பரீபூரணம், மு. நித்தியானந்தன் ஆகியோரது சிறுகதை முயற்சிகளும் மலையகச் சிறுகதை வளர்ச்சிக்கு வளம்சேர்த்தன. 1960 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட இனத்துவ ரீதியிலான சட்டவாக்கங்கள், தொழிற்சங்கப் பிரச்சினைகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு இவர்கள் சிறுகதைகளைப் படைத்தனர். அவ்வகையில், திருச்செந்தூரனின் உரிமை எங்கே, பரிபூரணின் பிரசவக்காசு, பன்னீர்ச்செல்வத்தின் இவர்கள் பிரசவிக்கிறார்கள், மொழிவரதனின் மேகலையின் ராகங்கள், நூரளை சண்முகநாதனின் கவ்வாத்து, அந்தனி ஜீவாவின் புரூட் செலட் முதலான சிறுகதைகள் சமூகப் பிரச்சினைகளை வெளிக்காட்டும் அதேவேளை, அவற்றைத் தீர்ப்பதற்கான மார்க்கங்களையும் கோடிட்டுக் காட்டுகின்றன.

மலையகச் சிறுகதை வரலாற்றில் தனித்து நோக்கப்பட வேண்டிய ஒரு படைப்பாளியாக மு. சிவலிங்கம் விளங்குகின்றார். மலையகப் பண்பாட்டுச் சூழலில் தொழிற்சங்கங்கள் முனைப்புப் பெறத் தொடங்கிய போது ஏற்பட்ட பிரச்சினைகளை வெளிக்காட்டும் வகையில் அவரது சிறுகதைகள் திகழ்கின்றன. மலையகச் சமூகப் பண்பாட்டு அம்சங்களில் தொழிற்சங்க உருவாக்கம் எவ்வாறான செல்வாக்கைப் பெற்றிருந்தது என்பதை மு. சிவலிங்கத்தின் கதைகள் மிகச் சிறப்பாகவே பதிவு செய்துள்ளன. இதுவரையில் அவரது சிறுகதைத் தொகுப்புகளாக மலைகளின் மக்கள், ஒரு விதை நெல், ஒப்பாரிக்கோச்சி ஆகியன வெளிவந்துள்ளன. இம்மூன்று தொகுப்புகளும் மு. சிவலிங்கத்தின் தனித்துவமான சிறுகதை முகத்தையும் உழைக்கும் மக்கள் சார்ந்த அவரது கருத்துநிலையையும் புலப்படுத்தி நிற்கின்றன.

மலையகச் சிறுகதை வளர்ச்சிக்கு மாத்தளைப் பிராந்தியத்திலிருந்து முகிழ்ந்த சிறுகதை ஆசிரியர்களின் பங்களிப்பும் கணிசமானது. குறிப்பாக மாத்தளை சோமு, மலரன்பன், மாத்தளை வடிவேலன் ஆகியோரது சிறுகதைகள் சிறப்பிடம் பெறுகின்றன. மாத்தளை எழுத்தாளர் ஒன்றியம் 1979இல் இம்மூவரின் ஒன்பது கதைகளைத் தொகுத்து 'தோட்டக் காட்டினிலே' என்ற தொகுப்பை வெளியிட்டது. இத்தொகுப்புக்கு முன்னுரை வழங்கியுள்ள பேராசிரியர் க. கைலாசபதி இத்தொகுப்பின் முக்கியத்துவத்தைப் பின்வருமாறு பதிவுசெய்துள்ளார்.

> மாத்தளைச் சோமு தொகுத்தளித்திருக்கும் இந்நூலிலுள்ள
> கதைகளைப் படிக்கையில், மலையக வாழ்க்கையை உள்நின்று

> சித்திரிக்கும் எழுத்தாளர்களின் உள்ளங்களையும் ஆற்றலையும் உணர்ந்துகொள்ள முடிந்தது. மலையக மக்களைத் தூரநின்று பார்த்து எழுதுபவர்களும் இருக்கின்றார்கள். இத்தொகுதியில் இடம்பெறும் கதைகளின் ஆசிரியர் மூவரும் இயன்றவரை நடப்பியலைப் புரிந்து கொண்டு, நியாயத்தின் பக்கம் நின்று எழுத முயன்றிருக் கின்றனர். நன்மைக்கும் தீமைக்கும் வேறுபாடு காணத் தெரிந்தவர்களாயிருக்கின்றனர். பூசிமெழுக முற்படாதவர் களாய் இருக்கின்றனர். இதனால் இக்கதை களைப் படிக்கும்பொழுது திருப்தியும் தெளிவும் ஏற்பட்டன.[8]

அதனைத் தொடர்ந்து மாத்தளை சோமுவின் நமக்கென்றொரு பூமி, (1984) அவன் ஒருவனல்ல, மலரன்பனின் கோடிச்சேலை (1989), ஏ.வி.எம். கோமசின் வாழ்க்கையே ஒரு புதிர் முதலான சிறுகதைத் தொகுப்புகள் மலையகச் சிறுகதைத் துறைக்கு வளம் சேர்ப்பனவாகத் திகழ்கின்றன.

1980 களில் மலையகத்தில் முனைப்புப் பெற்ற சிற்றிதழ் கலாசாரம் மலையகத் தமிழ்ச் சிறுகதை வளர்ச்சியை இன்னொரு தளத்துக்குக் கொண்டு சென்றது. கருத்துநிலை அடிப்படையில் படைப்பாளிகளும், சிற்றிதழ்களும் எழத்தொடங்கின. அவ்வகையில், குன்றின் குரல், தீர்த்தக்கரை, நந்தலாலா முதலான இதழ்கள் சிறப்பாக நோக்கத்தக்கவை. தேசிய ரீதியில் முன்னெடுக்கப்பட்ட இடதுசாரி சித்தாந்தக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு சிறுகதைகளைப் பலர் எழுதத்தொடங்கினர். தீர்த்தக்கரை, நந்தலாலா முதலான இதழ்கள் இயக்க நிலைப்பட்ட இலக்கியச் செயற்பாட்டை மலையகத்தில் உருவாக்கின. தீர்த்தக்கரை இதழில் வெளிவந்த கதைகள் 'தீர்த்தக்கரைக் கதைகள்' என்ற பெயரில் வெளிவந்துள்ளன. வாமதேவன், மரியதாஸ், கேகாலை கைலைநாதன், ஏ. எஸ். சந்திரபோஸ், ஆனந்தராகவன், பிரான்சிஸ் சேவியர் முதலானவர்கள் தீர்த்தக்கரை இதழ் மூலமாகவே சிறுகதை உலகுக்கு அறிமுகமானவர்கள்.

முற்போக்கு இலக்கியக் கருத்துநிலைகளை வெளிப்படுத்தும் கதைகள் என்ற வகையிலும், சிறுகதையின் வடிவச்செழுமை என்றவகையிலும் மலையகச் சிறுகதை வரலாற்றில் தீர்த்தக்கரைக் கதைகளுக்குத் தனிப்பெருமதி உண்டு. தீர்த்தக்கரை இதழ் மூலம் அறிமுகமான நல்ல பல சிறுகதை ஆசிரியர்கள் (ஆனந்தராகவன், கேகாலை கைலாசநாதன், மரியதாஸ்) அவ்விதழின் மறைவோடு, இலக்கிய முயற்சிகளைத் துறந்தமையும் கவலைக்குரியது.

1930 தொடக்கம் 1990 ஆம் ஆண்டு வரை மலையகத்தில் தோற்றம் பெற்ற சிறுகதைகளை உள்ளடக்கிய தொகுப்பு முயற்சிகள் என்றவகையில் கதைக்கனிகள் (1971), மலையகப் பரிசு கதைகள் (1994), மலையகச் சிறுகதைகள் (1997), உழைக்கப்பிறந்தவர்கள் (1997) என்பன முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றன.

### 1990களுக்குப் பின்னரான சிறுகதை முயற்சிகள்

மலையகச் சிறுகதை வரலாற்றில் 1990 களுக்குப் பின்னரான சிறுகதை முயற்சிகள் தனித்து நோக்கத்தக்கவை. இலங்கையில் தமிழ்ச் சமூகத்தின் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட இனக்கலவரங்கள், இனங்களுக்கிடையிலான ஆயுதப் போராட்டத்தின் தீவிரத்தன்மை என்பன மலையக மக்களையும் பாதித்தன. இனக்கலவரங்கள் காரணமாக நாட்டின் வெவ்வேறு பிரதேசங்களுக்கு மலையக மக்கள் இடம்பெயர்ந்தனர். குறிப்பாக, வவுனியா, புத்தளம் முதலான பிரதேசங்களுக்கு இடம்பெயர்ந்தனர். சந்தேகத்தின் பெயரில் பெரும் எண்ணிக்கையான மலையக இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டார்கள். எவ்வித விசாரணையும் இன்றிப் பல ஆண்டுகளாகச் சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டு, சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டனர். இவ்வகையான அரசியற் பிரச்சினைகளைக் கருவாகக் கொண்டு பல சிறுகதைகள் உருவாகியுள்ளன. அவ்வகையில், கோவிந்தராஜின் பசியாவரம் என்ற தொகுப்பும், மு. சிவலிங்கத்தின் வடதிசை காற்று, நுவரெலியாவில் இருந்து சுன்னாகம் வரை, பதுளை சேனாதிராஜாவின் கதைகள் என்பன முக்கியமானவை. பதுளை சேனாதிராஜாவின் பெரும்பாலான கதைகள், 1990களுக்குப் பின்னரான மலையகச் சமூகத்தின் அரசியல் இயங்கு தன்மையை மிகச் சிறப்பாகப் பதிவுசெய்துள்ளன.

1990களில் தமிழ்ச் சூழலில் முக்கியத்துவம் பெறத்தொடங்கிய பெண்ணியம் சார்ந்த கருத்துநிலைகளும் மலையகச் சிறுகதைகளில் பேசுபொருளாக அமைந்தன. பெருந்தோட்ட மலையகப் பெண்களின் வாழ்வியலைப் பெண்ணியக் கருத்துநிலையினூடாகப் பார்க்கும் முறைமையும் உருவானது. மலையகப் பெண்களின் பிரச்சினைகளைப் பெண் படைப்பாளிகளே சிறுகதைகளாகப் படைத்தனர். அவ்வகையில், ரூபராணி ஜோசப்பின் ஒரு வித்தியாசமான விளம்பரம், நளாயினி சுப்பையாவின் அவள் தனி மரமல்ல முதலான சிறுகதைத் தொகுப்புகள் சிறப்பிடம் பெறுகின்றன. இவற்றோடு, அந்தனி ஜீவா தொகுத்து வெளியீட்ட குறிஞ்சி மலர்கள் (2000) என்ற சிறுகதைத் தொகுப்பும் முக்கியமானது. பெருந்தோட்டப் பகுதிக்குள் இருந்து முகிழ்ந்த பெண் படைப்பாளிகளின்

பன்னிரண்டு சிறுகதைகளைக் கொண்டமைந்ததாக இத்தொகுப்பு விளங்குகின்றது.

1990களுக்குப் பின்னரான மலையகச் சிறுகதை வளர்ச்சிக்கு முஸ்லிம் படைப்பாளிகளின் பங்களிப்பும் கணிசமானது. பெருந்தோட்ட மக்களின் வாழ்வுச் சுமைகளை ஏக்கம் கலந்த பார்வையோடு அவர்கள் சிறுகதைகளாக்கியுள்ளனர். அவ்வகையில், நயிமா சித்திக், அல் அஸீமத், ஸய்யத் முஹம்மத் பாரூக், மாவனல்ல உயன்வத்தை ரம்ஜான் முதலானவர்களின் சிறுகதை முயற்சிகள் தனித்து நோக்கத்தக்கவை. நயிமா சித்திக்கின் சிறுகதை முயற்சிகள் தனித்துவம் பெற்றுள்ளன. இதுவரைக்கும் அவரது மூன்று சிறுகதைத் தொகுப்புகள் வெளிவந்துள்ளன. வாழ்க்கைச் சுவடுகள், வாழ்க்கை வண்ணங்கள், வாழ்க்கை வளைவுகள் என்பன மலையகச் சிறுகதை வரலாற்றிலும், இலங்கைத் தமிழ்ச் சிறுகதை வரலாற்றிலும் தனித்து நோக்கத்தக்கவை. மாவனல்ல உயன்வத்தை ரம்ஜானின் ஓர் இதயம் அழுகிறது (1996), நிறைவேறாத ஆசைகள் (1998), ஆப்டீனின் இரவின் ராகங்கள், அல் அஸீமத்தின் வெள்ளை மரம் முதலான சிறுகதைத் தொகுப்புகள் மலையகச் சிறுகதைகளின் பன்முகப்பாட்டைக் காட்டவல்லன.

அண்மைக்கால மலையகச் சிறுகதைகள் புதிய கதைக் களங்களோடும், புதுவகையான புனைவாக்க உத்திகளோடும் வெளிவந்து கொண்டிருக்கின்றன. புதிய தலைமுறையினரின் கதையாக்க முறைமை தனித்துவம் மிக்கது. ரா. நித்தியானந்தனின் நான்காவது பரிமாணம், சிவனு மனோகரனின் ஒரு மணல் வீடும் சில எருமை மாடுகளும், கோடாங்கி, பிரமிளா செல்வராஜின் பீலிக்கரை, பாக்குப்பட்டை முதலான சிறுகதைத் தொகுப்புகள் சிறப்பாக நோக்கத்தக்கவை. இக்காலப் பகுதியிலிருந்து தொடர்ந்து நல்ல பல சிறுகதைகளை எழுதிவரும் ஒரு படைப்பாளியாகச் சுதர்ம மகாராஜன் விளங்குகின்றார். இவரது கதைக்களமும், கதையை நகர்த்திச் செல்லும் முறையும் ஒட்டுமொத்தமான தமிழ்ச் சிறுகதை உலகுக்கு புதிய அனுபவமாக அமைகின்றன. சிறுகதையின் உருவ அமைப்பிலும், மொழிக்கையாளுகையிலும் தம் சிறுகதை முகத்தைக் காட்டும் ஒரு படைப்பாளியாகவே அவர் விளங்குகின்றார். இவரது சிறுகதைகள் தொகுப்பு வடிவம் பெறும்போது மலையகச் சிறுகதையின் தளமும், இலங்கைத் தமிழ்ச் சிறுகதையின் தளம் மேலும் செழுமையும் விரிவும் பெறும் எனலாம்.

**குறிப்புகள்**

1. கைலாசபதி, க., (1980), தோட்டக்காட்டினிலே (முன்னுரை), மாத்தளை: மாத்தளை எழுத்தாளர் ஒன்றியம், ப. 1.

2. மனோகரன், துரை, (1997), இலங்கையில் தமிழ் இலக்கிய வளர்ச்சி கண்டி, கலைவாணி புத்தக நிலையம். ப. 157.
3. தெளிவத்தை ஜோசப், (1979), நாமிருக்கும் நாடே, வைகறை வெளியீடு. பக். 13 - 14.
4. மேலது ப. 17.
5. ராமையா, என்.எஸ்.எம்., (1979), ஒரு கூடைக்கொழுந்து, வைகறை வெளியீடு. ப. 71.
6. மேலது, ப. 75.
7. அருணாசலம், க., (2012), ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகள், கொழும்பு - சென்னை, குமரன் புத்தக இல்லம், ப. 83.
8. கைலாசபதி, க., (1980), மு. கு. நூல், ப. 11.

## துணை நூல்கள்

1. அருணாசலம், க., (1994), மலையகத் தமிழ் இலக்கியம், கொழும்பு, தென்றல் பப்ளிகேஷன்.
2. சாரல்நாடன், (2003), மலையக இலக்கியம் தோற்றமும் வளர்ச்சியும், கொட்டகலை, சாரல் வெளியீட்டகம்.
3. தெளிவத்தை ஜோசப், (2000), மலையகச் சிறுகதை வரலாறு, துரைவி வெளியீட்டகம்.

# புலம்பெயர்ந்தோர் தமிழ்ச் சிறுகதைகளில் மொழி, இன, பண்பாட்டு அடையாள இழப்பு

முனைவர் இரா. சந்திரசேகரன்
*தமிழ் உதவிப்பேராசிரியர்*
*அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி*
*நாமக்கல் - **637 002***

ஆங்கிலக் கல்வியின் வழியாகக் கிடைத்த மேனாட்டு இலக்கிய அறிமுகமும் தமிழ்ச் சிறுகதைகளின் தாக்கமும் ஈழத்தில் தமிழ்ச் சிறுகதை இலக்கியம் தோன்றுவதற்குக் காரணங்களாக அமைந்ததால், 1931ஆம் ஆண்டில் ஈழத் தமிழ்ச் சிறுகதையின் முதல் தொகுப்பு வெளிவந்தது. ஈழத் தமிழ்ச் சிறுகதை வரலாற்றை நான்கு காலப் பகுதிகளாகப் பகுக்கலாம். ஈழத் தமிழ்ச் சிறுகதைப் படைப்பாளர்களுள் மூன்றாம் தலைமுறையைச் சார்ந்த படைப்பாளர்களால் புலம்பெயர்ந்தோர்தம் சிறுகதைகளைத் தொகுக்கும் முயற்சியும் ஏற்பட்டது. அதன் விளைவாக 1985ஆம் ஆண்டில் புலம்பெயர்ந்தோரின் முதல் சிறுகதைத் தொகுப்பு வெளிவந்தது. அதனைத் தொடர்ந்து பல தொகுப்புகள் வெளிவந்தன.

புலம்பெயர்ந்தோர் புகலிடத்தில் எதிர்கொள்ளும் மொழி, இன, பண்பாடு சார்ந்த நுட்பமான சிக்கல்களை எடுத்துக்காட்டி அவற்றிலிருந்து தங்களின் அடையாளத்தைப் பாதுகாத்துக்கொள்ள அவர்கள் மேற்கொள்ளும் கருத்தியல் அடிப்படையிலான போராட்டத்தைச் சுட்டிக்காட்டும் வகையில் அமைந்துள்ளது.

புலம்பெயர்ந்தோர் படைப்புகள் இலங்கை நாட்டு மக்களிடையே பெரும் அதிர்வை ஏற்படுத்திய சாதி ஒடுக்குமுறை, சிங்கள இனவெறி, யாழ்ப்பாண வெள்ளாள சமூகத்தின் மன ஓட்டம், போராளி குழுக்களின் அதிகார நிலைப்பாடு ஆகியவற்றை உணர்த்துவதோடு, புலம்பெயர்ந்த வாழ்வில் ஏற்படும் நெருக்கடிகள், மேலைக் கலாச்சாரத்தின் தாக்கம், அடையாளச் சிதைவுகள், புனிதங்களின் கட்டுடைப்பு என மாறுபட்ட களங்கள் சார்ந்த அனுபவங்களை விவரிக்கின்றன. அப்படைப்புகளை நுணுகி ஆய்வதன் வழியாகப் புலம்பெயர்ந்தோர் உற்ற மொழி, இன, பண்பாட்டு அடையாள இழப்பு குறித்து அறிய இயலும். அவ்வகையில் இக்கட்டுரை அமைகின்றது.

## மொழி, இன அடையாள இழப்புகள்

புலம்பெயர் இலக்கியங்கள் மேலைநாடுகளின் கலாச்சாரக் கூறுகள், தமிழின் அடையாச் சிதைவுகள் எனப் பல களங்கள் சார்ந்த நிகழ்வுகள்

பற்றிப் பேசுகின்றன. எனினும், இவற்றுள் சரிபாதி படைப்புகளில் தாய் மண்ணில் அவர்கள் அனுபவித்த இனப்பிரச்சினைக்கு முந்தைய மற்றும் பிந்திய அனுபவங்கள், சாதிய ஒடுக்குமுறை, இராணுவ மற்றும் தமிழீழப் போராளிக் குழுக்களின் பாசிச செயல்பாடுகள், அமைதிப்படையினரின் பாலியல் வன்புணர்வுகள், சிதறிப்போன உறவுகள், பேரிழப்புகள் போன்ற பதிவுகள் முதன்மை பெறுகின்றன.

அவ்வகையில் சக்கரவர்த்தியின் 'யுத்தத்தின் இரண்டாம் பாகம்' என்ற கதையை இரு கூறுகளாக்கி 'யுத்தம்' என்பதை முதல் பகுதியாகவும், 'இரண்டாம் பாகம்' என்பதை இறுதிப் பகுதியாகவும் கொள்ளலாம். இவ் அமைப்புமுறை இலங்கையின் சமூக அமைப்பைப் பெரும் அதிர்வுக் குள்ளாக்கிக் கொண்டிருக்கும் சாதி மற்றும் இனப்பிரச்சினை சார்ந்த ஒரு வரலாற்றின் நீட்சியினைப் பதிவு செய்துள்ளது.

'யுத்தம்' என்ற முதல் பகுதி, நல்லூர் இராசதானிக்கு வருகை புரிந்த பங்கரச்சாரியாரின் உரைவீச்சால் வைரவன் கோயில்சாமி தலித் மக்களின் சாமியாக அறிவிக்கப்பட்டு அதனால் தொழில் இழந்த பூசாரியின் மகனை மையமாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. பின்னர் பூசாரியின் மகன் மன்னன் உதவியால் படையில் சேர்த்துக் கொள்ளப்படுகிறான். இந்நிலைப்பாட்டில் நாட்டின் படைத்தளபதி சுய உணர்வுடன் செயல்பட்டு நாட்டை எதிரிகளிடம் ஒப்படைக்க முயற்சிக்கும் தருவாயில் படையில் அங்கம் வகிக்கும் பூசாரியின் மகன் தன் கூரிய அறிவுத் திறத்தாலும் - வீரத்தாலும் சதித்திட்டத்தை முறியடிப்பதன் மூலம் மன்னனின் பாராட்டைப் பெறுவதோடு அடுத்த படைத்தளபதியாக உயர்வு பெறுகின்றான்.

இந்நிகழ்வு நிறுவனமயமாக்கப்பட்டுவரும் இந்து சமூகத்தில் தொடரும் சாதிய ஒடுக்கு முறையின் தன்மையை அடையாளப் படுத்துவதோடு, தலித்துகளின் மரபுசார் உயர்வரலாற்றுப் பின்புலத்தை வெளிக்கொணர்ந்துள்ளன. மேலும், தலித்துகள் ஆட்சியாளர்களின் உதவியோடு ஒதுக்குப்புறத்திற்கு விரட்டியடிக்கப்படுவதும், அவர்களைக் கத்தோலிக்க மத குருமார்கள், கிறிஸ்தவ மதத்திற்கு மதமாற்றம் செய்வதும், பங்கரச்சாரியாரின் ஆலோசனையின் பெயரில் மன்னன் மதம் மாறிய தலித்துகளைக் கிறிஸ்துமஸ் அன்று ஒரே இடத்தில் கொலை செய்யப் படைத்தளபதிக்கு உத்தரவு பிறப்பிப்பதும் எனத் தொடரும் நிகழ்வுகள் வாயிலாக மதமாற்றத்திற்கான முதன்மைக் காரணியைப் படைப்பாளர் புலப்படுத்தியுள்ளார்.

அத்துடன், இன்றைய தமிழக அரசியல், பண்பாட்டுச் சூழலில் தீவிர வாதத்திற்குள்ளாகியிருக்கும் மதமாற்றத் தடைச் சட்டமும் அதன்

பின்னணியாகக் கருதப்படும் இந்துமதப் பிரமுகர்களை அடையாளப்படுத்தி அவர்களின் காலம் தொடங்கி இன்று வரையிலும் ஆட்சியாளர்களை எளிதாகத் தன்வயப்படுத்திக் கொள்ளும் அந்தணர் சாதியின் மனஓட்டத்தையும் படைப்பாளர் வாசகர்களுக்குத் தெளிவுபடுத்தியுள்ளார்.

இச்சிறுகதையின் இரண்டாம் பகுதியான 'இரண்டாம் பாகம்' பாசிசம், வன்முறை சார்ந்து கருத்துக்களை மிகத் தீவிரமாக விவாதிப்பதோடு தமிழினப் போராளிகளின் உருவாக்கத்திற்குக் காரணமான ஒடுக்குமுறையின் செயல்பாட்டைப் புலப்படுத்தியுள்ளது. இதனை, அசுரர்கள் மலிந்து மனிதத்தை நசுக்க முற்படும் பொழுதுகளில் மனித உரிமை அமைப்புகள் நசியும் மனிதத்தைக் காக்கத் தவறும் பட்டசத்தில் கடவுள்கள் ஆயுதங்களுடன் அவதரிப்பர். அங்கும், இங்கும், முக்கிலும் மூலையிலும், சந்திலும், பொந்திலும், தூணிலும், துரும்பிலும், குடிசையிலும் கூரையிலும், அங்கும், எங்கும் ஆயுதம் தரித்த கடவுள்கள் ஏகமாய் அவதரித்தனர்" என்ற போராளிகளின் சூழலைப்பதிவு செய்துள்ளதோடு தர்மத்தின் அடையாளமாக நியாயப்படுத்துவதும் கருத்தில் கொள்ளத்தக்கதே.

ஷோபாசக்தி, 'எலிவேட்டை' என்ற கதையில் இனப் போராட்டத்தின் உக்கிரத்தில் தாய், தந்தை, உறவினர் என்ற வேரிலிருந்து அந்நியப் பகுதிக்குப் பிடுங்கி எறியப்பட்டு ஒற்றை இலையாகிப்போன தேவன் என்ற சிறுவனை மையப்படுத்தியுள்ளார். பின்பு தேவன் முதலாளி போலீஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு விருந்து வைத்த காரணத்தால் மாட்டிறைச்சியும், ஈரப்பலாக்காயும், சாராயமும் படைத்து பொறுப்பதிகாரியின் வாந்தியை அள்ளிப் போட்டான். சாயங்காலமும் விடியற்காலையுமாகி நாலாம் நாளாயிற்று என்ற பகுதியின் வழியாக அச்சிறுவனின் மனத்துயரத்தைப் படைப்பாளர் வெளிப்படுத்தியுள்ளார்.

வறுமை, வாழ்க்கைப் போராட்டம், பண்பாட்டு மதிப்பு வேறுபாடுகளில் ஏற்படும் புதிய வாழ்வியல் சிக்கல்கள், பாலியல் சிக்கல்கள் எனப் புதிய ஒரு மண்ணில் வேர் பதிக்க அல்லாடும் சூழலில் புலம்பெயர்ந்த வாழ்வின் வேதனைகளையும் வாழ்வியல் போராட்டங்களையும் ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் கூர்மையாகத் தன் சிறுகதைகளில் வெளிப்படுத்தியுள்ளார்.

'ரவுண்ட்ஸ் அப்' என்ற சிறுகதையில் இனவாத வன்முறைகளை விவரித்துள்ளார் படைப்பாளர். "எங்கள் தமிழ்ப் பெண்களின் வயது பத்தோ இல்லை எட்டோ என்பது பிரச்சினை இல்லை. இவர்கள் இரைக்குச் சரியானபடி இருந்தால் சரி. இவர்கள் மிருகங்கள். இவர்களின் பசி - நரமாமிசம் தேடுவது தமிழர்களை. பலியாடுகள் நாங்கள். ஒருத்தன் என்

நீண்ட தலை மயிரினைத் தடவினான். ஆச்சி, அவனைக் காறித்துப்பினாள். தாத்தா தன் தலையைத்தான் பிடித்த பெரியவனின் காலடியில் முட்டிக் கொண்டார். குருதி படிந்த தகப்பன், குற்றுயிராய்க் கிடக்கும் தமயன், உணர்வற்ற தாய், ஓலமிடும் ஆச்சி, உருக்கமாய்க் கெஞ்சும் தாத்தா. தமிழ்ப்பெண் என்ன செய்யும்" என்ற இனவாத வன்முறைக்கு எதிராக ஏதும் செய்ய இயலாத நிலையைப் படைப்பாளர் காட்டியுள்ளார்.

'ஓநாய்கள்' என்ற கதையிலும், "டேவிட்டை ஒரு சிப்பாய் அடித்தான். டேவிட் அலறினான். ஆயிரக்கணக்கான பார்வையாளர்கள் மத்தியில் ஆயுதம் வைத்திருக்கும் சிங்கள இராணுவம் ஆயுதமற்ற தமிழனைச் சித்திரவதை செய்தது. டேவிட்டின் கைகளை ஒன்றிரண்டு சிப்பாய்கள் பயங்கரமாகத் தாக்கினார்கள். 'இந்தக் கைகளிற்றானா எங்களைப் பற்றி எழுதியது?' எனக்கேட்டு சிங்களச் சிப்பாய்கள் மாறிமாறி அடித்தார்கள். டேவிட்டின் கைகள் இதில் மறைந்தன. நிணநீரும் செங்குருதியும் டேவிட்டின் உடலிலிருந்து பீறி அடித்தன. குமாருக்குத் தலை சுற்றியது" என இனவாத வன்முறையினைப் படைப்பாளர் சுட்டிக் காட்டியுள்ளார்.

மாத்தாளை சோமுவின் 'அன்னையும் பிதாவும்' என்ற சிறுகதையில் இடம்பெற்றுள்ள 'சம்பந்தர்' இனப்பற்றும், மொழிப்பற்றும் மிகுந்த மாந்தராகப் படைக்கப்பட்டுள்ளார்.

ஆஸ்திரேலியா போன்ற பிற நாடுகளுக்குச் சென்று தம் இனம், மொழி, பண்பாடுகளை மறந்து அயல்நாட்டு மோகத்தில் வாழத் துடிக்கும் தமிழர்களுக்குத் தாய்மொழியின் சிறப்பினை எடுத்துக்கூறும் மாந்தராகச் 'சம்பந்தர்' காட்டப்பட்டுள்ளார்.

வெளிநாடுகளில் வாழும் நம் எதிர்காலச் சந்ததியினருக்கு ஆங்கிலமே தாய்மொழிபோல் ஆகிவிட்டது. தமிழர்கள் தமிழைப் புறக்கணிப்பதனால் அவர்களின் குழந்தைகளுக்கும் தமிழ் ஒரு வேற்று மொழிபோல் ஆகிவிட்டது என்று உணர்ந்த சம்பந்தர் தன் பேரனுக்குத் தமிழ்க் கற்றக் கொடுத்தார். பல மொழிகள் பேசும் ஆஸ்திரேலியாவில் தமிழ்மொழி பேசுபவர்கள் மட்டும் பார்க்க முடியவில்லை என்பதனை எண்ணி மனம் வருந்தும் கதைமாந்தராக விளங்குகின்றார்.

தன் பேரனை நேரில் பார்க்கச் சென்ற சம்பந்தர் மருமகளின் மாற்றங்களைக் கண்டு வருந்துகிறார். அவரை வேலைக்காரன்போல் நடத்தும் கொடுமையும் நடக்கிறது. இதனை அறிந்த அவர் பிறநாட்டுப் பண்பாட்டுக் கூறுகளை வெறுக்கும் மாந்தராக மாறிவிடுகின்றார்.

மலேசியாவில் தமிழர்கள், சீனர்கள், மலாய் இனத்தவர்கள் ஒன்றாகக் கூடி வாழ்கின்றனர். பொதுவாக, அந்நாட்டில் இனஉணர்வு சுமூகமாகவே அமைந்துள்ளது. இக்கதைகளின் வழியாக இனங்களுக்கிடையே நிலவும் உறவுகளை அறிந்துகொள்ளும் வாய்ப்பிருக்கிறது.

'சின்னருணா' அ. பழனியாண்டி எழுதிய 'பாவக்கறை' என்னும் சிறுகதையில் வரும் காமாட்சிக்கும் முத்தையாவுக்கும் இடையே வரும் உரையாடலில் காமாட்சி, "நானென்னங்க செய்வேன். அந்த சீனத்தீவுக்கேதான் நீங்க ஒண்ணும் கவலைப் படவேணாம். ஒண்ணும் ஆகாது. நான் பார்த்துக்கிறேன். நீங்க எவ்வளவு கஷ்டப்பட்டாலும் இதுல கிடைக்கிற மாதிரி நாலுகாசு எப்பவுமே பார்க்க முடியாதுன்னு ஆச காட்டினான் அவன் பேச்சை உண்மைனு நம்பித்தான் உங்கல சம்மதிக்க வச்சேன்" என்கிறாள். தமிழர்களைச் சீனர்கள் தீய செயலில் அகப்பட வைக்கும் செயல் பற்றிய குறிப்பும் இக்கதையில் பதிவாகியுள்ளது.

இங்கும் மற்ற இனத்தவர்கள் தமிழர்களோடு ஒப்பிட்டுக்காட்டப் படுகின்றனர். மேலும் இக்கதை சீனர்களை நம்பி ஏமாற்றமடைந்த தமிழனை மையமாக வைத்தே எழுதப்பட்டது.

## பண்பாட்டு அடையாளமிழப்புகள்

புலம்பெயர்ந்தோர் கவிதைகளை விடவும் சிறுகதைகளில் தமிழர்தம் பண்பாட்டுப் பொறுமானத்தை எளிதில் அறிந்துகொள்ள இயலுகின்றது. வழிவழியாக மூத்த தலைமுறைகள் மண்ணில் கைக்கொண்ட மரபுகள், பழக்க வழக்கங்களைக் கைவிட முடியாத நிலையையும், அந்நிய கலாச்சாரத்திற்குள் தம்மை உடனடியாக மாற்றிக் கொள்ள முடியாத நிலையையும் சில சிறுகதைகளில் காணமுடிகின்றது.

புகலிடச் சூழலில் தம் புதிய தலைமுறையினரிடம் வாழும் புலம்பெயர்ந்த தமிழர்கள் தம் தாய்நாட்டுப் பண்பாட்டை இழக்க விரும்பாதவராக உள்ளனர். ஆனால், அவர்களின் பிள்ளைகள் புகலிட நாட்டின் பண்பாட்டைப் பேணுபவர்களாக உள்ளனர். அவர்களின் பழக்க வழக்கங்களும் அந்நாட்டுக்கு உட்பட்டதாகவே அமைந்து விடுகின்றன.

மொழி புரியாமை முதன்மைச் சிக்கலாக உள்ளது. உடையில் இருந்து உறவுமுறைகள் வரை வேறுபாடான வாழ்வுச் சூழலாக உள்ளபோது பண்பாட்டு நெருக்கடிகளும் தமிழரை முரண்பட வைக்கின்றன. இதற்குச் சான்றாக, சக்கரவர்த்தியின் 'மனசு', அ. முத்துலிங்கத்தின் 'கொம்புளானா', அளவெட்டி சிறிசுக் காந்தராசாவின் 'மரபுகளும் உறவுகளும்', கலைச் செல்வனின் 'கூடுகள்', ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தின்

'அரங்கேற்றங்கள்', ரதியின் 'நிறமில்லை', ஷோபாசக்தியின் 'பகுத்தறிவு பெற்ற நாள்', கோவிலூர் செல்வராஜனின் 'புதிய தலைமுறை', ஆசி. கந்தராஜாவின் 'ஒட்டுக்கன்றுகளின் காலம்' ஆகிய கதைகளைக் குறிப்பிடலாம்.

பொ. கருணாகரமூர்த்தியின் 'வண்ணத்துபூச்சியுடன் வாழ முற்படுதல்' என்ற சிறுகதை, ஜெர்மனியில் வாழும் ஒரு தமிழ் இளைஞன் தாய்லாந்து நாட்டைச் சார்ந்த பெண்ணுடன் வாழமுற்படும்போது அவனுக்குள் ஏற்படும் முரண்பாடுகளை வெளிப்படுத்தியுள்ளது.

கலாமோகனின் பல கதைகள் பண்பாட்டு குறுக்கீட்டை ஐரோப்பிய கலாச்சாரப் பின்னணியில் சித்திரித்துள்ளன. இவர்தம் கதைகளில் தமிழ்ப்பண்பாட்டு ஒழுக்கவியலில் மரபின் தகர்வைக் காண முடிகின்றது.

தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகளைப் புலம்பெயர்ந்தோர் தங்களின் புகலிடச் சூழல்களில் இழந்து வருகின்றனர். அது குறித்துப் புகலிடச் சிறுகதைகளின் வழிக் காண்போம்.

ஷோபாசக்தியின் 'தேவதை சொன்ன கதை' சடங்கு, சம்பிரதாயங் களோடு ஈழத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்த திருமணத்தைப் போரும், புலம்பெயர்வும் எவ்வாறு சர்வதேச அளவிற்கு எடுத்துச் சென்றுள்ளன என்பதை எடுத்தியம்புகின்றது. குறிப்பாகப் புலம்பெயர்வு, மனிதனை எவ்வாறு நாலா திசைகளிலும் வீசி எறிந்துள்ளது என்பதையும், திருமணம் குறித்தத் தமிழர்களின் மனநிலையினையும், அவை மனிதனிடம் ஏற்படுத்துகின்ற சிக்கல்களையும் மிக இயல்பாக ஒருவித எள்ளல் தன்மையோடும் பதிவு செய்துள்ளது.

"பாரிசில்தான் உண்டு, தன்வேலையுண்டு, தங்கையின் லண்டன் மாப்பிள்ளைக்குக் கொடுத்த சீதனத்துக்குப்பட்ட கடனுக்கு வட்டியுண்டு என்று எட்டடிக்குப் பத்தடி அறையில் வாழ்ந்து கொண்டிருந்தவனுக்கு லண்டன் தங்கைதான் முதல் வெடி வைத்தாள். பாரீஸ் அண்ணைக்கும் முப்பது வயசாப் போச்சுது. நான் லண்டனில், பெரிய அண்ணை ஜெர்மனியில் தம்பி சுவிஸில், பாரூஸ் அண்ணை தனியாளா கிடந்து போறதுக்குக்கான 'சான்று' வெளிநாடுகளில் கூடுதலா இருக்கு அதால பாரீஸ் அண்ணைக்குக் கெதியா ஒரு கலியாணம் செய்து வைக்க வேணும் என்று தங்கை தொலைபேசியில் ஜெர்மனிக்கு வெடிக்க ஜெர்மனி ஊடாக கொழும்பு என்று இவனது திருமணப் பிரச்சினை சர்வதேச அளவில் வெடித்தது" என்று படைப்பாளர் குறிப்பிட்டுள்ளார்.

இப்பகுதி, 'ஒருவனுக்கு ஒருத்தி' என்ற பண்பாட்டு விழுமியத்தைப் புலம்பெயர்வுச் சூழல் அழித்துவிடக்கூடாது என்ற முனைப்பினை வெளிப்படுத்தியுள்ளது.

பொ. கருணாகரமூர்த்தியின் 'போதிமரம்' என்ற கதை, புகலிடத்தில் பிராமணச் சிறுவன் ஒருவன் கோழி சமைப்பதும், முட்டை சாப்பிடுவதும் எனப் புலம்பெயர் வாழ்வு தமிழன்மீது எதையெல்லாம் திணித்துள்ளது என்பதனைப் வெளிப்படுத்தியுள்ளது. "ஒருமுறை சில நண்பர்களுடன் ஹம்பேர்க்கில் வெளிநாட்டவர் குடியிருப்பு ஒன்றிற்கு இலங்கைத் தமிழர்களும் நிறைய பேர் இருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டு போனோம். எதேச்சையாக அவர்கள் குசினிக்குள் நுழைந்த எனக்குப் பேரதிர்ச்சி ! எங்களூர்ப் பள்ளிக்கூடத்தில் என்னைவிட 2 வகுப்புகள் ஜூனியராகப் படித்த பிராமணச் சிறுவன் ஒருவன் பெரிய கோழியொன்றை மல்லாக்கப் போட்டு வகிர்ந்து கொண்டிருந்தான். என்னைக் கண்டதும் அசடு வழிந்து கொண்டே சொன்னான்'! என்ன செய்யிறது இஞ்சவந்து எல்லாத்தையும் மாத்த வேண்டியதாய்ப் போச்சு" எனக் கூறுவது புலம்பெயர்வு அவனை அந்நிலைக்குத் தள்ளியுள்ளமையை அறிவிக்கின்றது.

இப்பகுதி, தமிழர்களின் குறிப்பாகச் சைவர்களின் உணவுப் பண்பாட்டைத் தகர்த்துள்ளமையை உணர்த்தியுள்ளது.

'விண்ணின்று மீளினும்' கதை புகலிடத்தில் இருந்து கடிதம் எழுதும் சங்கரநாரயண சாஸ்திரியின் மகன் தன் கடிதத்தில் தான் ஒரு பெண்ணைத் தேர்வு செய்வதும், அதற்கான எதிர்வினையுமாக அமைகின்றது. "பொண்ணு பார்த்திருக்கானாம். கூசாமல் எழுதியிருக்காண்டி, அபச்சாரம்' அபச்சாரம் என்ன சொல்றேள். வெள்ளைக்காரிய கட்டிக்கபோறானாமா. இதுதான் ஐஞ்சு வருஷமின்னயே அடிச்சுண்டேன். அவனுக்கொரு கால்கட்ட போட்டிடலாம்னு கேட்டேளா. இனி, அடிக் கழுவாதவள ஆத்துல வைச்சு யாரு மாரடிக்கிறது" என்று புலம்பும் தாய் உள்ளத்தின் வழியாக இனம் மீறிய திருமண உறவை ஏற்க இயலாத சூழலையும் புலம்பெயர்வு வாழ்க்கை திருமண உறவு சார்ந்த தமிழர் பண்பாட்டைச் சிதைப்பதையும் அறிய முடிகின்றது. மேலும், அந்த வெளிநாட்டு மணப்பெண் குறித்தப் பதிவையும் கதையில் படைப்பாளர் சுட்டியுள்ளார். அதுதொடர்பாகவும் ஏற்படும் பண்பாட்டு அடையாளமிழப்பை நாம் அறிய முடிகின்றது. இக்கதையில், சங்கரநாரயண சாஸ்திரியும், அதைவிட அழுத்தமாகவே தம்மை வெளிப்படுத்தும் சாஸ்திரியின் மனைவியின் கூற்றும், ஈழத்து உயர்ச் சாதிப் பாவனைகளுக்கும், புகலிட வாழ்வுக்குமான ஒரு விரிசலை மையப்படுத்துகின்றன. தொடர்ந்து மகள் மைதிலியின் மூலம் கடிதம்

வாசிக்கப்படுகின்றபோது 'பெண்' இந்தியாவைச் சேர்ந்த ஒரு தமிழ்ப்பெண் என்பதும், அவள் ஸ்பேஸ் அட்மினி ஸ்டிரேஷன் துறையில் விஞ்ஞானி என்பதும் தெரிய வருகின்றது. இத்தகைய உயர்ப் படிப்பும் பதிவியுறும் இருந்தும் கூட அவளை ஏற்றுக் கொள்ள மறுக்கும் சங்கரநாரயண சாஸ்திரியின் மனநிலையையும், திருமணம் செய்வதுபற்றி மகன் தெரிவிக்கின்றபோது அவர்களின் எதிர்வினையும், யதார்த்த நிலையில் இருந்து அவர்கள் எவ்வளவு ஒதுங்கியிருக்கின்றனர் என்பதனைத் தெரிவிக்கின்றன. மேலும், "நானும் பேப்பர்ல படிச்சதுதான் மூன்று வேத்து ஆம்படையோட விண்வெளியில் மூன்று மாசம் சஞ்சாரம் பண்ணிட்டு வந்த பெண்ணை இந்த ஆத்தில மருமகளாக்கிறதா?" எனக் கூறி மறுக்கும் விதமும், மேற்சுட்டிய சில நிகழ்வுகளும் அடையாளப்படுத்துவதோடு, போரும், புலம்பெயர்வும் உயர்ச்சாதியக் கட்டமைப்பில் ஏற்படுத்துகின்ற சிதைவினையும் புலப்படுத்துகின்றது.

இக்கதையினைப் போலவே, 'வண்ணத்துப்பூச்சியுடன் வாழ முற்படுதல்' என்னும் கதையில், சித்தார்த்தனுக்கு முப்பத்திரண்டு வயதாகிய போதும் அவன் திருமணம் குறித்துக் கண்டுகொள்ளாத உறவும், நட்பும், சமூகமும் அவன் ஒரு தாய்லாந்து பெண்ணைக் கூட்டி வந்தவுடன் பண்பாடு, கலாச்சாரம் எல்லாம் சீரழிந்துவிட்டதாகக் கூச்சல் போடுவதையும் தமது எதிர்ப்பினைத் தெரிவிப்பதையும் பதிவு செய்துள்ளது. இப்பதிவு புலம்பெயர்ச் சூழல் தமிழ்ச் சமூகத்தில் எற்படுத்தியுள்ள பண்பாட்டு அசைவினைச் சுட்டுகின்றது. அத்துடன், "ச்சாய், தோட்டக் காட்டிலை இருந்தொண்டாலும் ஒரு தமிழ்ப் பொட்டையாய்ப் பார்த்துக் கூட்டி வராதை" என்ற வரிகள் இந்தச் சமூக அசைவினை, இடைவெளியினை பொறுத்துக் கொள்ள இயலாத தமிழ்மனநிலையினை எடுத்துரைக்கின்றது. இங்குப் போரும், புலம்பெயர்வு தமிழ்ச் சமூக மரபில் ஏற்படுத்தியுள்ள பண்பாட்டு விரிசல்களை முதன்மைப்படுத்தியுள்ளமை கவனத்தில் கொள்ளத்தக்கனவாகும்.

மேற்சுட்டப்பெற்றவற்றால், ஈழத்துக் கல்யாணியின் வரதட்சணை எதிர்ப்பு, ஐயர் சிறுவன் அசைவம் சாப்பிடுவது, சங்கரநாரயண சாஸ்திரியின் மகன் விண்வெளிக்குப் போன பெண்ணைத் திருமணம் செய்ய விரும்புவது, சித்தார்த்தின் திருமணம் கண்டு கூச்சல் போடும் தமிழ்ச் சமூகம் போன்ற நிகழ்வுகள், ஈழத்துப்போரும், புலம்பெயர்வுமாகத் திணித்துவிட்ட சமூக விரிசல்களாக அடையாளம் காணத்தக்கனவாகும்.

சக்கரவர்த்தியின் கதைகள் புலம்பெயர்ந்த தமிழன் தனக்கான உறவும், வாழ்வியல் துணையும் இல்லாத நிலையில் மனம்சார்ந்து சிக்கலுக்குள்ளாவதையும் அவனது பாலியல் சார்ந்த எண்ணங்கள் தம்மைக்

கட்டுப்படுத்தியிருந்த பண்பாட்டைத் தாண்டிப் பயணிப்பதையும் பதிவு செய்துள்ளன. குறிப்பாக மேலைநாட்டு வாழ்வின்மீது கொண்ட மோகத்தினால் அவ்வாழ்வு மூழ்கித் திளைப்பதும், அனுபவ அடிப்படையில் ஒத்து வரக்கூடியதல்ல. அவ்வாழ்வு குறித்து விமர்சிப்பது பற்றி 'மனசு' என்ற கதை புலப்படுத்தியுள்ளது.

"ஈழத்தமிழர்கள் தாம் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் அந்த நாடுகளின் வாழ்க்கை முறைக்குள் - நாட்டின் சூழ்நிலைக்குள் தவிர்க்க இயலாதவாறு எல்லோரும் உள்வாங்கப் படுகின்றார்கள். புலம்பெயர்ந்து சென்றவர்களின் இளைய சந்ததியின் மத்தியில் இம்மாற்றம் தவிர்க்க இயலாதவாறு மிகவிரைவாக நிகழ்ந்து கொண்டிருக்கின்றது" என்ற தொனியின் கூறியுள்ளமை இங்குச் சிந்திக்கத்தக்கது. மேலும், 'மனசு' என்ற கதையில் இடம் பெற்றுள்ள சீதாராமன், க்ளவ்டி பாத்திரங்கள் மேலை வாழ்வியல் முறையை எதிர்கொள்ளவியலாத தமிழ்மனநிலையை எடுத்துரைப்பதோடு, மேலைநாட்டு வாழ்வியல் முறையினையும் தெளிவுறச் சித்திரித்துக் காட்டுகின்றன.

"என்னட்ட சிகரெட் இல்லாட்டி க்ளவடியாட்ட கேட்டால் தருவாள். ஆனால் திரும்பக் குடுத்திட வேண்டும் இல்லாட்டித் திட்டுவாள். வாழ்க்கை பண்டமாற்று என்றது என்ர வாழ்க்கைத்தான். கட்டில் ஒண்டைத் தவிர மற்ற எல்லாமே வேறவேறதான். பிள்ளையைக்கூட அவள் ஒருநாள், நான் ஒருநாள் பார்த்துக் கொள்ள வேணும். என்ரணேல் பிள்ளைக்குச் சுகம் இல்லண்டால் கூட கிட்ட வரமாட்டாள். அவலட்ஷணமாகப் படுத்துக் கிடப்பாள். என்ன வாழ்க்கை சொல்லு. தனியா சம்பாதிச்சு, தனியச் சாப்பிட ஒரு குடும்பம் வேணுமா? நித்திரையைக் கூட தனித் தனியாகக் கொள்ளலாம். ஆனால், ஒரு தேவைக்காக மட்டும் ஒரே கட்டில்ல படுக்க வேண்டியிருக்கு. அதும்மட்டும்தான் வாழ்க்கையா? அதுக்கு மட்டுந்தானா குடும்பம்? எனக்கு வெறுத்துப் போச்சு ரொம்பவும் அடிப்பட்டு நொந்து விட்டன்"[23] என்ற பகுதியின் வழியாக மேலைநாட்டு வாழ்வியலில் நடைமுறையில் இருக்கும் ஒரு நெகிழ்ச்சியற்ற வாழ்வைக் குடும்ப அமைப்பைச் சுட்டிக் காட்டுவதும், விரக்தியை வெளிப்படுத்திக் கொள்வதும், மேலைவாழ்வு என்பது தமிழ்மன இயங்கியலுக்கும், பண்பாட்டுக்கும் ஒத்துவராது என்பதையும் அடையாளப்படுத்துகின்றார்.

'ரூபம்' என்ற கதையும் இத்தகு வாழ்வின் பல்வேறு வரையறைகளை மரபுகளைக் கேள்விக்குள்ளாக்கியுள்ளது. குறிப்பாக, மனிதன் தன் வாழ்வில் யதார்த்தத்தை ஒரு நிலையிலும் சமூக திருப்திக்காகப் போலித்தன வாழ்வை இன்னொரு நிலையிலும் வாழ முயற்சிப்பதை, "கல்ச்சர் என்றது ஒவ்வொரு

மனுசனுக்கு உணர்வோடை இயல்புலையே இருக்க வேண்டிய விசயம். நம்மளோட கல்ச்சர் அப்படியா? அங்க வஸ்திரத்த பட்டுல பளபளப்பா போட்டுத்து உள்ளாடையை ஊத்தையாய் போடுகிற மாதிரி. நீ இப்ப ரகுவத்தானே லவ் பண்றா? சின்சியராத்தான் லவ் பன்றதாய் சொல்ற ஆனா, ஒரு காலத்தில் என்னோட நீ உரசி உரசி நடக்கல்லையா? ஐ வோன்ட பிஸிக்கல் யூனிய்ன எண்டு என்ட்ட கேக்கல்லையா? இப்ப கூட உன்ர மனதுக்குள்ள இன்னொரு எதிர்ப்பால் உடம்பு மேல விகாரமான எண்ணம் இல்ல எண்டு சொல்லு பாப்பம்? ஆனா, நீ ரகுவத்தான் கலியாணம் முடிக்க போறா ரகுவ முடிக்க ஏலாட்டி வேற யாரையாவது முடிப்பாய். நான் பத்தினி என்னில கணபேர் சுத்தினவைய. ஆனா, தான் கண்கெடுக்கிறதே இல்லை எண்டு தான் சொல்லுவாய், அவன் நம்புவான் உன்னை தலையில தூக்கி வைச்சு பெருமையா கதைப்பான் ஆனா நீ எவ்வளவு சுத்துமாத்துப் பண்ணியிருக்காய் எண்டு எனக்குத்தான் தெரியும். நாம எல்லோரும் போல். நம்மளோட கல்ச்சர் போல். இது எல்லோருக்கும் தெரியும். ஆனா, நடிக்கிறம்" எனத் தொடரும் வரிகள் நிஜவாழ்வில் இருந்து அப்புறப்பட்டு நிற்பதையும் அதனைச் சமூகத்தின் மீது கொண்டுள்ள ஓர் அச்சத்தின் காரணமாக அல்லது சமூகத்தின் திருப்திக்காகவே ஒவ்வொரு மனிதனும் சுமந்து திரிகின்ற போலித்தனங்களும் இங்குச் சுட்டப்பெற்றுள்ளன.

## தொகுப்புரை

புகலிடச் சூழலில் தமிழர்கள் இழக்கும் பல்வகையான பொருள் இழப்புகளுக்கு மத்தியில் கருத்தியல் சார்ந்து இழந்துவரும் மொழி அடையாளம், இனஅடையாளம், பண்பாட்டு அடையாளம் போன்றவற்றையும் புலம்பெயர்ந்தோர் சிறுகதைகள் பதிவுசெய்துள்ளன.

புகலிடத்தில் தாய்மொழியைப் பயன்படுத்த இயலாத அவலநிலையைப் பல சிறுகதைகள் முன் வைத்துள்ளன. இனம், நிறம் சார்ந்து புகலிடத் தமிழர்கள் ஒதுக்கப்படுவதைப் பல சிறுகதைகள் எடுத்துக்கூறியுள்ளன.

மனிதவாழ்விற்கு ஆதாரமாக விளங்கும் பண்பாட்டுக் கூறுகளைப் புகலிடத் தமிழர்கள் சிறிது சிறிதாக இழந்துவரும் நிலையையும் புலம்பெயர்ந்தோர் சிறுகதைகள் கோடிட்டுக்காட்டியுள்ளன.

## துணை நூல்கள்

ஆய்வுக்குட்படுத்தப்பெற்ற சிறுகதைகளின் தலைப்புகள், அவற்றின் ஆசிரியர்கள் பெயர்கள் வருமாறு:

1. அன்னை அழைக்கின்றாள், நீர்வை. பொன்னையன்
2. அன்னையும் பிதாவும், மாத்தாளை சோமு

3. அகதி, விமல் குழந்தைவேல்
4. அரங்கேற்றங்கள், ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்
5. அவர்களின் தேசம், மாத்தாளை சோமு
6. அவர்களுக்கென்று ஒரு குடில், பொ.கருணாகரமூர்த்தி
7. அவன் ஒருவனல்ல, மாத்தாளை சோமு
8. அழியாச் செல்வம், 'சின்னருணா' அ. பழனியாண்டி
9. அமெரிக்கா, வ.ந. கிரிதரன்
10. அலையும் தொலைவு, கார்த்தி நல்லையா
11. அடைக்கலம், சுதாராஜ்
12. ஆண்டபரம்பரை, டொமினிக் ஜீவா
13. ஆகாயம், மாத்தாளை சோமு
14. இறகுகள், சக்கரவர்த்தி
15. இடம் மாறிப் போன, லதா உதயன்
16. இழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம், பார்த்திபன்
17. உபசாரம், பொ.கருணாகரமூர்த்தி
18. உருக்கம், கலாமோகன்
19. உழைப்பே உயர்வு, 'சின்னருணா' அ. பழனியாண்டி
20. எய்தவர் யார், ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்
21. என்னதான் செய்து விடப்போகிறார்கள், செ. கணேசலிங்கன்
22. எலிவேட்டை, ஷோபாசக்தி
23. ஐந்தடியில் ஓர் உலகம், ப.கு.சண்முகம்
24. ஒட்டுக்ன்றுகளின் காலம், ஆசி. கந்தராஜா
25. ஒகஸ்டினாவும் ஒரு பந்தையக் குதிரையும், சக்கரவர்த்தி
26. ஒளிகொடுத்த தெய்வம், 'சின்னருணா' அ. பழனியாண்டி
27. ஒருநாள் கழிந்தது, செ. கணேசலிங்கன்
28. ஒரு சிறு பொறி, செ. கணேசலிங்கன்
29. ஒரு ஸ்கூல் கோயிலாகிறது, மாத்தாளை சோமு
30. ஓர் அன்னையின் எதிர்பார்ப்பு, 'சின்னருணா' அ. பழனியாண்டி
31. ஓநாய்கள், ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்
32. கண்ணீர் சிந்தும் நேரம், பாலமனோகரன்
33. கம்பத்து மக்கள், ஆ.இ. முகம்மது இப்ராகிம்
34. கல்யாணப் பந்தலில், ந. பழனிவேல்
35. கடன், அ. முத்துலிங்கம்
36. கடவுளும் காஞ்சனாவும், பாலகணேசன்
37. கழுகுகள், மு. பஷீர்
38. காற்றில் நின்ற கல், முரளி
39. காலம் ஆகிவந்த கதை, அ. இரவி

40. கிரகணம், அ. முத்துலிங்கம்
41. குதம்பேயின் தந்தம், அ. முத்துலிங்கம்
42. குருவணக்கம், ஷோபாசக்தி
43. குறுக்குச் சுவர்கள், மா. இராமையா
44. கூடுகள், கலைச்செல்வன்
45. கொம்புளானா, அ. முத்துலிங்கம்
46. கெரித்தாடுபிடிப்பேன், அ.முத்துலிங்கம்
47. சிவப்பு விளக்கு, சை.பீர்முகம்மது
48. சுண்டெலி, பொ.கருணாகரமூர்த்தி
49. சுதந்திர அடிமைகள், பாலகணேசன்
50. சுணைக்கிது, நிருபா
51. தகர்ப்பு, நீர்வை. பொன்னையன்
52. திகடச்சக்கரம், அ. முத்துலிங்கம்
53. தீர்க்கதரிசி, டொமினிக் ஜீவா
54. துரி, அ. முத்துலிங்கம்
55. தூண்டில், பூ. அருணாசலம்
56. தெரியாத பக்கங்கள், சுதாராஜ்
57. தெளிவு,மு. பஷீர்

# அயல் சிறுகதைகளின் செல்நெறி

முனைவர் ப. சரவணன்
*தமிழ் விரிவுரையாளர்*
*கே.எஸ்.ரங்கசாமி கலை அறிவியல் கல்லூரி*
*திருச்செங்கோடு*
*நாமக்கல் மாவட்டம்*

இலக்கியப் படைப்பு உணர்வுப் பூர்வமான உள்ளத்தின் வெளிப்பாடு. படைப்பாளனின் வாழ்க்கைக்கும் அவன் படைப்புகளுக்கும் நெருக்கமான உறவு உள்ளது. ஒரு படைப்பாளியால் உருவாக்கப்படும் எத்தகு படைப்பும் அவன் வாழ்க்கை முறையோடு தொடர்புடையது.

மக்கள், ஏதேனும் ஒரு காரணத்துக்காகத் தம் தாய்நாட்டைவிட்டு மொழியாலும் இனத்தாலும் பண்பாட்டாலும் பழக்க, வழக்கங்களாலும் முற்றிலும் மாறுபட்ட வேறொரு நாட்டுக்குக் குடிபெயர்வதே 'புலம்பெயர்வு'. அவ்வாறு புலம்பெயர்ந்த மக்களைப் 'புலம்பெயர்ந்தோர்' என்று அழைக்கின்றனர். இவர்களுடைய படைப்புகள் புலம்பெயர்ந்தோர் இலக்கியம் என்று அழைக்கப்படுகின்றன.

இலங்கையிலிருந்து 1960களில் இருந்தே ஈழத் தமிழர்களின் புலம்பெயர்வு தொடங்கிவிட்டது. அவர்கள் படைத்த இலக்கியங்களைவிட 1983இல் இலங்கையில் ஏற்பட்ட கலவரத்தின் காரணமாகப் புலம்பெயர்ந்தோரால் படைக்கப்படும் இலக்கியங்களே புலம்பெயர்ந்தோர் இலக்கியத்தில் முதன்மையானதாகக் கருதப்படுகின்றன.

அவர்களுடைய படைப்புகளில் கவிதை, சிறுகதை, நாவல் ஆகிய இலக்கியப் புனைவுகள் முதன்மையாகக் கருதப்பட்டபோதிலும், கலைகள் சார்ந்த வெளிப்பாடுகள், சிற்றிதழ்கள், ஓவியம், குறும்படம், கூத்துக்கலை, தெருநாடகம், ஒலி மற்றும் ஒளிச் செயல்பாடுகள் அனைத்தையும் கவனத்தில் கொள்ளவேண்டும். இவை போக, இப்படைப்பாளிகள் பல்வேறுபட்ட இலக்கிய அமைப்புகளை ஏற்படுத்தி இலக்கிய அரங்குகளை நடத்துவதும் படைப்புகள்மீது விவாதத்தை ஏற்படுத்துவதும் குறிப்பிடத்தக்கன. மொழி, நிறம், பண்பாட்டுச் சிக்கல் பற்றியதாக இப் படைப்புகளின் மையங்களை அமைத்துக் கொள்கின்றனர். படைப்புகளை இதழ்கள், இணையத்தளம், வலைப்பூக்கள், நூல்கள், தொகுப்பு நூல்கள் வழியாக உடனுக்குடன் வெளிப்படுத்துகின்றனர்.

புலம்பெயர்ந்தோர் படைப்புகள் அவர்களின் தாய்நாடு குறித்த ஏக்கத்தையும், குடியேறிய நாடு அவர்களுக்கு அளித்துள்ள புதுவாழ்வில்

சந்திக்கும் இடர்ப்பாடுகளையும் விளக்கமாகக் கூறுகின்றன. இப்படைப்புகள் தாயகத்தின் உறவுகள், நினைவுகள் சார்ந்தும் புலம்பெயர்ந்தோர் பயணம், புகலிட அனுபவம், புகலிட மனிதனின் வாழ்வு குறித்த தேடலையும் முன் வைக்கின்றன. புனைகதையில் குறிப்பாகச் சிறுகதைகளில் புகலிடவாழ்வு தரும் துயர் கணிசமாகப் பதிவாகியுள்ளது. அப்புனைகதைகளின் பெரும்பகுதி நிஜமும் சிறுபகுதி புனைவுமாக அமைந்துள்ளன. புனைவினை நீக்கிவிட்டால் அவை உண்மைச் சம்பவக் கட்டுரைகளாக அமையக்கூடும்.

ஷோபா சக்தியின் 'தேவதை சொன்ன கதை' சடங்கு, சம்பிரதாயங்களோடு ஈழத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்த திருமணத்தைப் போரும் அதனால் நிகழ்ந்த புலம்பெயர்வும் எவ்வாறு சர்வதேச அளவுக்குக் கொண்டு சென்றன என்பதைக் காட்டியுள்ளது. "பாரிசில் தான் உண்டு, தன் வேலை உண்டு, தங்கையின் லண்டன் மாப்பிள்ளைக்குக் கொடுத்த சீதனத்துக்குட்பட்ட கடனுக்கு வட்டியுண்டு என்று எட்டடிக்குப் பத்தடி அறையில் வாழ்ந்து கொண்டிருந்தவனுக்கு லண்டன் தங்கைதான் முதல் வெடி வைத்தாள். பாரிஸ் அண்ணைக்கும் முப்பது வயசாப் போச்சுது. நான் லண்டனில், பெரிய அண்ணை ஜெர்மனியில், தம்பி சுவிஸில். பாரிஸ் அண்ணை தனியாளா கிடந்து போறதுக்குக்கான 'சான்று' வெளிநாடுகளில் கூடுதலா இருக்கு. அதால பாரிஸ் அண்ணைக்குக் கெதியா ஒரு கலியாணம் செய்து வைக்க வேணும் என்று தங்கை தொலைபேசியில் ஜெர்மனிக்கு வெடிக்க ஜெர்மனி ஊடாக கொழும்பு என்று இவனது திருமணம் பிரச்சினை சர்வதேச அளவில் வெடித்தது." புலம்பெயர்வு, மனிதனை எவ்வாறு நாலா திசைகளிலும் வீசி எறிந்துள்ளது என்பதையும், திருமணம் குறித்த தமிழர்களின் மனநிலை யினையும், அவை மனிதனிடம் ஏற்படுத்துகின்ற சிக்கல்களையும் இயல்பாக, எள்ளலோடு பதிவு செய்துள்ளது.

பொ. கருணாமூர்த்தியின் 'போதிமரம்' என்ற கதை புலம்பெயர் வாழ்வு தமிழர் மீது திணித்துள்ள பண்பாட்டுச் சிதைவினைக் குறிப்பிட்டுள்ளது. "ஒருமுறை சில நண்பர்களுடன் ஹம்போக்கில் வெளிநாட்டவர் குடியிருப்பு ஒன்றிற்கு இலங்கைத் தமிழர்களும் நிறையப் பேர் இருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டு போனோம். எதேச்சையாக அவர்கள் குசினிக்குள் நுழைந்த எனக்குப் பேரதிர்ச்சி. எங்கள் பள்ளிக்கூடத்தில் என்னைவிட 2 வகுப்புகள் ஜூனியராகப் படித்த ஐயர் பொடியன் ஒருவன் பெரிய கோழியொன்றை மல்லாக்கப் போட்டு வகிர்ந்து கொண்டிருந்தான். என்னைக் கண்டதும் அசடு வழிந்து கொண்டே சொன்னான் 'என்ன செய்யிறது இங்க வந்து எல்லாத்தையும் மாத்த வேண்டியதாய்ப் போச்சு'" என்ற பகுதி அந்தணர்குலத்துப் பையன் கோழி சமைப்பது, முட்டை சாப்பிடுவது எனப்

புலம்பெயர்வு அவனை அந்த நிலைக்குத் தள்ளியுள்ளமையைச் சுட்டிக்காட்டுகின்றது.

புகல்சூழலில் யாசித்துப் பிழைக்கும் காளிமுத்து என்ற தமிழரைச் சை. பீர்முகம்மது 'சிவப்பு விளக்கு' என்ற சிறுகதையில் "காலையில் பெரிய மார்க்கெட்டில் கையேந்திக் கொண்டு நிற்பான். மத்தியான வேளையில் ஏதாவதொரு கடையின் பின்புறமாக இருக்கும் குப்பைத் தொட்டியில் தலையை நுழைத்துக் கொண்டு எதையாவது பொறுக்கிக் கொண் டிருப்பான். எது எப்படி இருந்தாலும் மாலை நாலரை மணிக்கு சௌக்கிட்ரோட் வெள்ளை மாளிகையில் ஒரு பயிண்ட் அடிக்க வந்து விடுவான். பிறகு நேரே மேம்பால மாளிகைக்குத் தூங்க வந்துவிடுவான். மீண்டும் மறுநாள் காலையில் பெரிய மார்க்கெட, குப்பைத்தொட்டி, கள்ளுக்கடை" என்று அடையாளப்படுத்தியுள்ளார். புலம்பெயர்ந்த மக்களுள் உடல் வலிமையோடு இருக்கும் ஒருவன் உழைத்து முன்னேற விருப்பமில்லாமல் சோம்பேறியாய், பிச்சையெடுத்து உண்பதைப் பெரிதாக எண்ணி வாழ்ந்து அழியும் விதத்தினைக் காட்டியுள்ளார்.

லெ. முருகபூபதி 'மழை' என்ற சிறுகதையில் மனைவி, பிள்ளைகளை ஈழத்தில் விட்டுவிட்டு வந்திருக்கும் ஒருவர். அந்நியநாட்டுப் பெண்ணுடன் நட்புக்கொண்டு பாலியல் உறவுவரை செல்வதனைக் குறிப்பிட்டுள்ளார். "வாயை மூடு அங்ஜோலா, நான்காண்டுகளுக்கு மேலாக என் ஸ்பரிசம் இன்றி எனது உடல் சுகம் கிட்டாமல் துப்பாக்கி வேட்டுக்களுக்கும் செல்அடிகளுக்கும் பயந்துகொண்டு என் மனைவி என் செல்வங்களுடன் உயிரைப் பாதுகாக்க அங்கே போராடிக் கொண்டிருக்கிறாள். உனது வாதம் வேண்டுகோள் நியாயமாகப் பட்டால் என் மனைவியும் அங்கே இந்த சுகத்திற்காக உன்னைப் போல் ஒருவனைத் தேடிப் போயிருக்கலாம்" என்ற குறிப்பு, புலம்பெயர்ந்த மண்ணில் வாய்க்கும் பாலியல் தவறுகளைச் சுயநேர்மையுடன் வெளிப்படுத்தியுள்ளது.

'அன்னையும் பிதாவும்' என்ற கதையில், ரோகிணி வழியாகத் தம் மொழி, இனம், பண்பாடு போன்றவற்றை மறந்து அயல்நாட்டவர்களாக வாழத்துடிக்கும் தமிழ்ப்பெண்ணின் மனநிலையை மாத்தளை சோமு காட்டியுள்ளார். ரோகிணியின் தோற்ற வர்ணனை "தோள்பட்டை வரை தொங்குகிற முடியைக் குலுக்கிக் கொண்டு போனாள். அவள் இங்கு வருவதற்குமுன் இடுப்புவரை தொங்கியும் குறுகிவிட்டது. வெள்ளைக் காரர்களைப் போல் முடி வெட்டியதற்குச் சொன்ன காரணம், குளித்து விட்டுத் தலைமுடி காய டைம் எடுக்குது. அடிக்கடி தலைவலி வருது என்பதுதான். ஆனால், வெள்ளைக்காரிகளின் ஹெர்ஸ்டைலில் அவள்

மயங்கியதே உண்மையான காரணம்" என்று உண்மையோடு குறிப்பிடப் பட்டுள்ளது.

அ. முத்துலிங்கம் 'கடன்' என்ற கதையில் தன் தந்தையின் வயோதிக காலத்தில் அவரை முறையாகப் பராமரிக்காமல், மரணமடைய விட்டுவிடும் ஒரு மகனின் மனிதநேயமற்ற, சுயநலப்போக்கினைக் காட்டியுள்ளார். மகனும் மருமகளும் பணிக்குச்செல்வதால் பெரியவரைச் சரிவரக் கவனித்துக் கொள்ள இயலவில்லை. அவருக்கு அன்றாடம் உணவு பரிமாற நேரமில்லாத காரணத்தால் தனித்தனிப் பாத்திரத்தில் உணவினை வைத்து அப்பாத்திரத்தின் மேல்பகுதியில் கிழமைகளின் பெயர்களை எழுதிக் குளிர்சாதனப் பெட்டியில் வைத்துவிடுகின்றனர். அப்பெரியவர் கிழமைகளின் அடிப்படையில் உணவுப் பாத்திரத்தைத் தானே தனக்குப் பரிமாறிக்கொண்டு உண்கிறார். அவசர உலகத்தில் முதியவர்கள் தனிமைப் படுத்தப்படுவதனை இக்கதை சுட்டிக்காட்டுகின்றது. அது மட்டும் இக்கதையின் மையம் அல்ல. அப்பெரியவரின் மகன், கிழமையின் பெயர் குறித்து வைக்கப்பட்ட உணவுப் பாத்திரங்கள் இரண்டு பயன்படுத்தப் படாததைக் கண்டு குழப்பமடைகிறான். தனிமையிலேயே வசித்த தன் தந்தையைப் பார்க்க அவரது நிலவறைக்குச் செல்கிறான். இரண்டு நாள்களாக உடல் விறைத்த நிலையில் உள்ள தன் தந்தையின் சடலத்தை மகன் காண்கிறான். பெற்றோரைக் கூடப் பேணிக்காக்க இயலாத அளவுக்கு நேரமின்மையும் பணிச்சுமையும் புலம்பெயர்ந்த மக்களின் தலைமுறைக்கு நேர்ந்துவிட்ட கொடுமையை அ. முத்துலிங்கம் காட்டியுள்ளார்.

புலம்பெயந்தோர் இலக்கியத்தைப் 'புலம்பல் இலக்கியம்' என்று எள்ளிநகையாடும் போக்கு தமிழ்ச்சூழலில் உள்ளது. புலம்பல் அற்ற வாழ்க்கை எத்தமிழனுக்கு வாய்த்தது? சங்கத்தமிழனின் வறுமை குறித்த புலம்பல்தானே பெரும்பான்மையான செவ்விலக்கியங்களின் மையமாக உள்ளது! புலம்பல்களில் புனைவின் வண்ணம் கலந்து புலம்பெயர்ந்தோர் இலக்கியம் உருக்கொள்கின்றது. துயருராத மனிதனுக்கு இவை 'புலம்பல் இலக்கியம்'. சராசரி மனிதனுக்கு இவை தீவிர இலக்கியம்தாம். தன் வாழ்விலிருந்து இலக்கியம் படைக்கும் எப்படைப்பாளரும் வணங்கத் தக்கவரே.

# இலங்கை டோமினிக் ஜீவா அவர்களின் "தண்ணீரும் கண்ணீரும்" சிறுகதைத் தொகுதி - ஓர் அனுபவ ஆய்வு

முனைவர் நயம்பு அறிவுடைநம்பி
*நயம்பாடி*
*செஞ்சி - 604 151*

அறிமுகவுரை

உலகச் செம்மொழிகளுள் தமிழ்மொழி பழமையான இலக்கியவளம் மிக்கது. அதைப் போலவே புதுமையான இலக்கிய வளமும் உடையது. சங்கப்பாக்கள் ஆசிரியத்தால் பெரும்பாலும் அமைந்தவை. திருக்குறள் குறள் வெண்பாவில் அமைந்தது புதுமை. தனித்தனிப்பாடல்கள் பாடப்பெற்ற காலத்திற்குச் சற்றுப் பின் தொடர்நிலைச்செய்யுள் எனச் சிலப்பதிகாரம் பாடப்பெற்றது புரட்சியாகும். அதனுடன் பெருங்காப்பியங்களும், சிறுகாப்பியங்களும் தோன்றின. பின்னர் பக்திப்பனுவல்கள் பரவின. அதற்குப்பின் பரணி, உலா, தூது எனச் சிற்றிலக்கியங்கள் முளைத்தன. பிறகு சித்திரக்கவி, நாகபந்தம் என்ற சொல்லணிகள் கொண்ட கவிகள் தோன்றி, தோன்றிய அளவிலேயே மாய்ந்தன. சிலம்பில் உரைபெறு கட்டுரையும், இறையனார்களவியல் உரையும், திருக்குறள் மற்றும் தொல்காப்பிய உரைகளும் தமிழின் உரைநடையின் பான்மை மேன்மைகளை விளக்குகின்றன.

ஆங்கிலேயர் வருகையினால் ஏற்பட்ட மாற்றங்கள் பற்பல. அவற்றுள் உரைநடை வளர்ச்சி ஒன்றாகும். மாயூரம் வேதநாயகம் பிள்ளையின் பிரதாபமுதலியார் சரித்திரம் என்ற புதினமும், வீரமாமுனிவரின் பரமார்த்தகுரு கதைகள் என்ற சிறுகதைகளும் உரைநடையின் முன்னோடியாக அமைந்தன. அதன்பின்னர் உரைநடையில் ஏராளமான புதினங்களும், சிறுகதைகளும் தோன்றி வளர்ந்தன.

முன்னைக்கு முன்னைப் பழமையாய்ப் பின்னைக்குப் பின்னைப் புதுமையாய்த் தமிழ்நாளும் வளர்ந்தது. பழையன கழிதல் என்பதற்கிணங்க காவியங்கள் புதினங்களாய் புதுமை பெற்றன. தனிப்பாடல்கள் சிறுகதைகள் என வடிவம் பெற்றன. மரபுக் கவிதைகள் ஹைக்கூ கவிதைகளாயின. கவிதை வடிவம் குறைந்து உரைநடையின் வேகமும், போக்கும், நோக்கும் பரந்து விரிந்தன.

உரைநடையின் புதுமைகளுள் சிறுகதையே மக்களிடையே பெரும் வரவேற்புப் பெற்றது. காரணம் காலத்தின் வேகமும் அருமையுமாகும். அது மட்டுமின்றி, குழந்தைகள் கேட்கும் முதல் இலக்கியப் படைப்பே சிறுகதையாகும். தொட்டில் பழக்கம் தற்போது தொடந்து தொடர்வண்டி முடிய தொடர்கிறது. குறைந்தநேரத்தில் படிக்கவும், ஓர் அனுபவத்தைத் தன் அனுபவத்துடன் அணுகவும் எல்லோர்க்கும் உரிய படைப்பாக சிறுகதையே இன்று இலக்கியக் கருவியாக உள்ளது. வாரஏடுகளும், மாத ஏடுகளும் அவற்றை வாசகர்க்கு அள்ளிக் கொடுக்கின்றன. காலம் கனிவித்த இன்சுவைக் கனியாக இன்று சிறுகதையே தலைசிறந்த இலக்கியப் படைப்பாக விளங்குகிறது.

உலக மொழிகளுள் தமிழில்தான் எல்லாச் சமய இலக்கியங்களைக் காணமுடியும். அதைப்போல உலகில் தமிழ் இனம்தான் உலகில் நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளில் வாழ்ந்து கொண்டுள்ளது. தமிழகத் தமிழரும், அவரைப்போலவே அயலகத் தமிழரும் தமிழுக்குப் படைத்த இலக்கியக் கொடைகள் ஏராளம். ஏராளம். தமிழின் இலக்கியக் கொடைக்கு அயலகத் தமிழரின் பங்கும் அளவிடற்கரியது. அவர்களின் தமிழ்ப்படைப்புத் தொண்டு உலக அளவில் பாராட்டப்படுகிறது. அவ்வகையில் அயலகத் தமிழர் வாழும் நாடுகளாகிய இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் மற்றும் பிற அயலகத் தமிழர்களின் படைப்புகள் ஏராளமாக வந்தவண்ணம் உள்ளன. இக்கட்டுரை அயலகத் தமிழ்நாடாகிய இலங்கைவாழ் எழுத்தாளர் டோமினிக் ஜீவா அவர்களின் "தண்ணீரும் கண்ணீரும்" என்ற கதைத்தொகுதியில் கற்ற, உற்ற அனுபவங்களைச் சுருக்கமாகத் தெளிவாக எடுத்துரைக்கிறது.

### *சிறுகதை என்பது யாது?*

ஒரே ஒரு கருத்தை அடிப்படையாகக் கொண்டு, அக்கருவிற்கு வடிவம் தந்து, படைப்பாளி தன் அனுபவத்தைப் பாத்திரத்தின் உணர்வுகளுடன் குழைத்து, வாசிப்போர் மனம் ஈர்க்கும் வண்ணம் நடைஅமைத்து குறுகிய காலத்திற்குள் படித்து முடிக்கப்பெறும் இலக்கியப் படைப்பைச் சிறுகதை என்கிறோம். வாழ்க்கையின் யதார்த்தம், குடும்பச் சிக்கல்கள், சமூகக் கண்ணோட்டம், ஒரு தத்துவம், முரண்பாடாகத் தோன்றும் ஒரு செயற்பாடு, மனப்போராட்டம், சாதி சமய வழக்குகள், பொருளாதாரச் சிக்கல், நாட்டு நடப்பு, தொழிலாளர் அவலம், மொழிப் பிரச்சனை, இனப் பிரச்சனை, சமுதாய ஏற்றத்தாழ்வு முதலியவற்றில் ஏதேனும் ஒருமையக்கருத்தை அனுபவப்பூர்வமாக எழுத்தில் வடிப்பது சிறுகதையாகும்.

### சிறுகதையின் தோற்றம்

காலத்திற்கேற்ப இலக்கியம் மாறிக்கொண்டே வருவது. சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய காப்பியங்களிலும், இதிகாசங் களிலும் பல்வேறு கதைகள் கூறப்பெற்றுள்ளன. தாத்தா பாட்டி எப்போது கதை சொல்ல ஆரம்பித்தார்கள் என்று எந்த வரலாற்று அறிஞராலும் கூறமுடியாத பழமையானது சிறுகதை. ஆங்கிலேயர் வருகைக்குப் பின்னர் அது விரிந்து பரந்தது. தமிழில் வீரமாமுனிவர் எழுதிய பரமார்த்தகுரு கதைகள் முன்னோடியானவை. தற்காலத்தில் தமிழகத்தில் மட்டும் ஐம்பதிற்கும் மேற்பட்ட சிறுகதை எழுத்தாளர்களைக் காணமுடியும். ஈழத்தில் நடேசய்யரின் "திரு. இராமசாமி சேர்வையின் சரிதம்" என்ற சிறுகதை முதன்மையானது. அங்கு ஆங்கிலக் கல்வி வாயிலாக ஏற்பட்ட சமூகப் பொருளாதார மாற்றத்தின் காரணமாக எழுத்தாளர் பலர் மறுமலர்ச்சிப் பாதையில் சிறுகதைகள் எழுதினர். அவர்களுள் இலங்கையர்கோன், டேனியல், டோமினிக் ஜீவா, எஸ் பொன்னுத்துரை, மு.தளயலிங்கம், இராசரத்தினம், சட்டநாதன், கணேசலிங்கன், யோகநாதன், சாந்தன், மாத்தளைசோமு, உமா வரதராசன், ராஜேஸ்வரி பாலசுப்ரமணியம் முதலியோர் குறிப்பிடத் தகுந்தவர்.

### சிறுகதையின் சிறப்பு

பாடலிபுத்திரத்தைத் தலைநகராகக் கொண்டு சுதரிசன் என்ற அரசன் சீரும் சிறப்புடன் ஆட்சிபுரிந்தான். ஆனால் அவன் பிள்ளைகள் நன்கு கல்வி கற்காமல் இருப்பது கண்டு வருந்தினான். "பால் சுரக்காத பசுவால் என்ன பயன்? அதைப்போல கல்வியறிவில்லாத அரசனால் என்ன பயன்? இப்பிள்ளைகளைத் திருத்திக் கல்வி கற்பித்து நல்வழிப்படுத்துவர் யார் உளர்?" என ஒருநாள் அரசவையில் மனம் வருந்தித் தெரிவித்தான். அப்போது சோமசன்மா என்பவர். "இவர்களை என்னிடம் ஒப்படையுங்கள். ஆறு மாதத்திற்குள் கல்வி கற்பித்து நல்லவர்களாக மாற்றிக் காட்டுகிறேன்" என்றார். அரசன் பிள்ளைகளை அவரிடம் ஒப்படைத்தார். அவர் அவர்களுக்கு பிற கலைகளைக் கற்பிக்காமல் கதைகளைக் கூறலானார். அப்போது அவர்களுக்கு அவர் கூறிய கதைகளே பஞ்சதந்திரக் கதைகளாகும். கதைகள் கேட்டு நல்லவராயினர். பின் வேதங்கள், போர்ப்பயிற்சிகள் கற்றுத்தந்து அவர்களை மேதைகளாக்கினார். இதனால் சிறுகதைகளின் சிறப்பும், பயனும் புலப்படும். உலகில் எந்த மனிதனும் சிறுவயதில் கதை கேட்காமல் வளர்ந்திருக்க முடியாது. அன்னை சோறு ஊட்டுவது போல, தாத்தா பாட்டியர் பெயரப் பிள்ளைகளுக்குக் கதை சொல்வது எந்தநாட்டிலும் உண்டு.

இக்கட்டுரை ஆசிரியர் தமது இரண்டு அகவை உடைய பெயர்த்திக்கு நாளும் இரவில் கதை சொல்வதுண்டு. ஒரு நாளிரவில் "பாட்டி, வடை, காகம், நரி" கதை கூறினார். காகம் ஏன் வடையைத் திருடிச் சென்றது எனக் கேட்டார். அதற்கு அச்சிறுமி "காக்கையிடம் பணமில்லை. அதனால் திருடியது" என்றாள். இப்படியொரு விடையை அவர் தம் அறுபதாண்டு அகவையில் கேட்டதேயில்லை. ஆகவே கதை கூறும்போது, பிள்ளைகள் எப்படியெல்லாம் சிந்திக்கிறார்கள் என்பதற்கு இஃதோர் எடுத்துக்காட்டாகும். இதிலிருந்து கதையைக் கேட்போர் பலகோணங்களில் சிந்திக்கும் ஆற்றல் பெறுகின்றனர் என்பதறிகிறோம்.

## டோமினிக் ஜீவாவின் சிறுகதைகள்

ஜீவா அவர்கள் இலங்கையின் சமுதாய மறுமலர்ச்சி எழுத்தாளர்களுள் ஒருவர். இவரது முதல் கதைத்தொகுதி 'தண்ணீரும் கண்ணீருமாகும்.' இம்முதல் தொகுதி சென்னை சரஸ்வதி வெளியீடாக 1960இல் வெளிவந்தது. இது தற்போது பல பதிப்புக்களாக வெளிவந்த சிறப்புடையது. 1961ஆம் ஆண்டில் இலங்கை சாகித்திய மண்டல விருது இந்நூலுக்காக இவருக்குக் கிடைத்தது. அதன்பின்னர் பாதுகை, சாலையின் திருப்பங்கள், வாழ்வின் தரிசனங்கள் என்ற தலைப்புக்களில் இவரது சிறுகதைத் தொகுப்புக்கள் வெளியாயின. இலங்கையிலிருந்து வெளிவரும் மல்லிகை இதழின் ஆசிரியர். இவ்விதழ் முப்பது ஆண்டுகளுக்கு மேலாகத் தொடர்ந்து வருவது குறிப்பிடத்தக்கது. 1987ஆம் ஆண்டு சோவியத் ருஷியா சென்று வந்தவர். இவரது "தண்ணீரும், கண்ணீரும்" என்ற தொகுதியில் பதினொன்று சிறுகதைகள் உள்ளன. இவற்றுள் "வெண்புறா" தவிர மற்றவை ஈழத்து ஈரமண்ணுடன் தொடர்புடையவை. இக்கதைகளுள் தண்ணீரும் கண்ணீரும், வெண்புறா, இவர்களும் அவர்களும், கொச்சிக்கடையும் கறுவாக்காடும் ஆகிய கதைகள் சுதந்திரன் இதழிலும்; செய்திவேட்டை ஈழகேசரியிலும்; காலத்தால் சாகாதது, தீர்க்கதரிசி, சிலுவை, முற்றுவெளி ஆகிய கதைகள் சரஸ்வதியிலும், ஞானம் கலைமதி ஆண்டு மலரிலும் வெளிவந்தன. "(ப. 11) என்று ஜீவா அவர்கள் தம் கதைகள் எந்தெந்த இதழ்களில் வெளிவந்துள்ளன என்பதை முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார். இந்த தொகுதிக்காகவே எழுதிச் சேர்க்கப்பட்ட கதை "கரும்பலகை" என்பதாகும்.

இவரது கதைகள் வெறும் வறட்டுக் கற்பனைகள் அல்ல. மாடிவீட்டுச்சீமான்களைப் பற்றியவையல்ல. மண்வாசனை, யதார்த்தம், அனுபவங்கள் இவற்றை அடிப்படையாகக் கொண்டவை. குறிப்பாக ஈழத்து தொழிலாளர்களின் பிரச்சனை பற்றியும், சாதிக்கொடுமைகள் பற்றியும் உள்ளார்ந்த உணர்வை வெளிப்படுத்துவன.

"என் கதைகளில் வரும் பாத்திரங்கள் இன்றைய மனிதர்கள். வாழ்வுக்காக வாழ்வுப் போராட்டம் நடத்துபவர்கள். நாளைய மனிதர்களை உருவாக்கும் இன்றைய மனிதர்கள், இவை என்கதைகளல்ல. மாட்டுக்காரன், ஓடக்காரன், ரிக்ஷாக்காரன், தபால்காரன், காரோட்டி, பத்திரிக்கை நிருபர், துறைமுகத் தொழிலாளி ஆகியோரின் கதைகள் தாம் இவை" (ப. 10) என்று தம் கதைகளின் இயல்பைப் பற்றித் தெளிவாக முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார்.

"டானியல், டோமினிக் ஜீவா ஆகியோர் சமுதாயத்தில் நிலவும் சாதிக்கட்டுப்பாட்டால் ஏற்படும் துன்ப நிலையினைக் காட்டும் அழகிய கதைகள் எழுதினர்" (தமிழில் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும், 1967, ப.145) என்று கா. சிவத்தம்பி அவர்கள் குறிப்பிட்டுள்ளார். இலங்கை எழுத்தாளர்களுள் ஜீவா அவர்கள்தாம் சாதிக்கொடுமைகள் பற்றியும், பாட்டாளி மக்களின் அவலங்கள் பற்றியும் கற்போர் கண்ணீர் சிந்துமளவும், சிந்தித்து உணரவும் உணர்வுப்பூர்வமான அனுபவங்களைக் குழைத்து எழுதியவராவார்.

இலங்கைச் சிறுகதைகள் பெரும்பாலும் முற்போக்குச் சிந்தனைகள், தேசியம், மண்வாசனை, யதார்த்தம் ஆகியவற்றை உணர்த்தும் வண்ணம் எழுதப் பெற்றவை.

> அறுபதுகளில் இலங்கையில் இடம்பெற்ற இலக்கியச் சர்ச்சைகளும் குறிப்பாக சிறுகதைகளைப் பற்றிப் பலரது எண்ணங்களும் கருத்திற் கொள்ளத்தக்கன. "அறுபதுகளின் ஆரம்பக்கட்டங்களில் பழமைவாதிகள் சிறுகதையை இழிசனர் வழக்கு இலக்கியமாகக் கண்டனர். சிறுகதை தமிழுக்கு உரிய இலக்கியவகை அன்று என்றும், பேச்சு வழக்கு இடம்பெறுவது மொழியை மலினப்படுத்துகிறது எனவும் அவர்கள் தமது கடும் எதிர்ப்பினைத் தெரிவித்தனர். முற்போக்கு சிந்தனை கொண்ட இலக்கிய வாதிகளும், விமர்சகர்களும் பழமைவாதி களின் நவீன இலக்கியங்கள் பற்றிய கருத்துக்களை மறுதலித்து சிறுகதை வளர்ச்சிக்கு மேலும் உரமிட்டனர்"
>
> (உலகத் தமிழ் இலக்கிய வரலாறு, 2005, பக். 247, 248)

என்று இலங்கையின் இலக்கிய வகையின் கருத்து முரண்பாடு பற்றி துரை மனோகரன் அவர்கள் குறிப்பிட்டுள்ளார். இக்கருத்து முரண்பாடு பற்றி ஜீவா அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

> பொழுதுபோக்கத் தெரிந்த ஒரு சிலர் இக்கதைகளில் சிலவற்றைப் படித்துவிட்டு மூக்கைப் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். முகத்தைச் சுளித்தும் இருக்கிறார்கள். 'சீ வாசிக்க அருவருப்பாக இருக்கிறது. படிக்கக்கூடச் சகிக்கவில்லை என்று வாய்விட்டுச் சொல்லித் தங்கள் மனவெறுப்பை வெளிக்காட்டியவர்களும் உண்டு. 'சாதாரண இதுகள்' குறிப்பாக ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட, உரிமை பறிக்கப்பட்ட மக்கள், தமிழ் மரபுப்படி எப்படி இலக்கியப் புருஷர்களாகலாம்? என்பது இவர்களது வாதம். இது ஈழத்து இலக்கியப் பண்புக்கு முழுவதும் முரணானதே என்பது இவர்களது குற்றச்சாட்டு. என்மேல் அருவருப்படையாமல், என் பாத்திரங்களின் மேல் அருவருப்படைகிறார்களே நான் பாக்கியசாலிதான்" (பக். 8, 9)

என்று தம் நூலின் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார். 'பழையன கழிதலும், புதியன புகுதலும்', 'உலகத்து இயற்கை' என்பதை பழமைவாதிகள் உணர வேண்டும்.

### பாத்திரங்களை அறிமுகம் செய்தல்

ஒரு படைப்பாளி, தன்படைப்பில் வரும் பாத்திரத்தை அறிமுகம் செய்வதிலிருந்தே அப்பாத்திரத்தின் பான்மை, மேன்மைகளை அறியலாம். இளங்கோவடிகள்,

> *போதிலார் திருவினாள் புகழுடை வடிவு இவள் வடிவு*
> *தீதிலா வடமீனின் திறம் இவள்திறம்*

என்று கண்ணகியை அறிமுகப்படுத்துகிறார். கண்ணகி புறஅழகில் திருமகளுக்கும், அகஅழகாகிய கற்பில் அருந்ததிக்கும் நிகரானவள் என அறிமுகப்படுத்துகிறார். இதனால் கண்ணகியின் பெண்ணின் பெருமை காப்பியத் தொடக்கத்திலேயே அமைந்துவிடுகிறது. டோமினிக் ஜீவா அவர்களும் தம் பாத்திரங்களை அறிமுகப்படுத்தும் அறிமுகக் கலையில் கைதேர்ந்தவராக விளங்குகிறார். செய்தி வேட்டையில்,

> நித்தியலிங்கத்தை நீங்கள் பார்த்திருப்பீர்கள். ஆனால் இவர்தான் நிருபர் நித்தியலிங்கம் என்பதை நீங்கள் அறியத் தவறியிருக்கலாம். கையில் தொங்கிக் கொண்டிருக்கும் மான்மார்க்குடை. இடதுதோளில் ஏகாவடம் விட்டிருக்கும் பரமாஸ் சால்வை. அதே பக்கத்து கமக்கட்டில் குந்தியிருக்கும் ஒரு பைல். அது நிறைமாதப் பிள்ளைத்தாய்ச்சியாக்கும். காகிதக் கட்டுகள். நெஞ்சப்பையில் கொலுவீற்றிருக்கும்.

> உலக்கை மாடல் பார்க்கர் பேனா. கால்களில் கிறீச் கிறீச் என்று ஓசையிடும் செருப்புகள். இப்படியான அலங்காரங் களுடன் ஒருவரை நீங்கள் வீதியில் பார்த்து விடுவீர்களே யானால் அவர்தான் நித்தியலிங்கம் என்பதை ஊகித்துக் கொள்ளுங்கள். உங்களுடைய ஊகம் நூற்றுக்கு நூறு சரியானதாகத் தானிருக்கும்" (ப. 62)

என நிருபா் நித்தியானந்தாவை அறிமுகப்படுத்துகிறார். இங்ஙனம் ஒருவரின் தோற்றத்தை நேரில் காண்பதுபோல காட்சிப்படுத்தும் இவரது சொற்கலை வியக்கத்தக்கது.

காலத்தால் சாகாதது என்ற கதையில் விதானையாரை அறிமுகப்படுத்தும் அழகே அழகு.

> இந்திய நாட்டிலிருந்து முதன்முதல் வந்து யாழ்ப்பாண குடா நாட்டில் இறங்கிக் கால்வைத்த சிங்கமாப்பாணர் பரம்பரைதான் அவருடைய வம்சம். சாயம்போன சரிகை வேட்டி, நீண்டு துடைப்பத்தின் முனையை ஞாபகப்படுத்தும் மீசை, பரந்த நெற்றி, அதன் கரைகளுக்கு எல்லையிட்டவனவாகத் திகழும் விபூதிப்பூச்சு, அதிற்றுலங்கும் குங்கமத் திலகம், திடகாத்திரமான ஆகிருதி, நன்றாகப் பழுத்த செம்பாட்டு மாம்பழத்தைப் போன்ற தேகக்காந்தி, உயர்சாதி என்ற இறுமாப்பினை வெளிப்படுத்தும் பார்வை, ஏகவசனத்தில் பேசும் பேச்சு இவற்றின் மொத்த உருவம்தான் நமது "விதானையார் அவர்கள்" (பக்:70-71).

இக்கதையை வாசிப்போர் அவரது சாதிப் பெருமை, சாதிச் செருக்கு ஆகியவற்றை அறியலாம். இதனை முன்கூட்டியே அவரது அறிமுகத்தில் கூறியிருப்பது கதையின் போக்கையும், நோக்கையும் உணர்த்துகிறது. இங்ஙனம் இவரது படைப்புக்களில் பாத்திர அறிமுகம் தனிச் சிறப்புடையதாக விளங்குகிறது. படைப்பு உத்தியில் இது ஒரு கைவந்த கலையாகும்.

### உவமையென்னும் அருமையான உத்தி

படைப்பாளிகள் தம் கருத்தை விளக்கப் பல்வேறு உத்திகளைக் கையாள்வர். அணி, வினாவிடை, பழமொழிகள் என்பன அவற்றுள் சில. அணிகள் கருத்தை எளிதில் விளங்கிக்கொள்ள துணைபுரிகின்றன. அணிகளுள் உவமையணி தலைசிறந்தது. எழுத்தாளர் டொமினிக் ஜீவா அவர்கள் உவமையணி என்ற உத்தியை மிக அருமையாகப், பொருத்தமாகப்

பல்வேறு இடங்களில் கையாண்டு கற்போரை மகிழ்ந்து கற்கவும், உணர்ந்து கற்கவும் செய்யும் உத்தி பாராட்டத்தக்கது.

செய்தி வேட்டையில், நிருபர் நிந்தியலிங்கம் பற்றிக் குறிப்பிடுகையில் அவர் பொறுமையில் சகாராப்பாலைவனத்தில் பிரயாணம் செய்யும் ஒட்டகத்தை உவமையாகக் கூறியுள்ளார். நித்தியானந்தர் செய்தியைத் தேடுவதில் கண்ணும், காதும் இவற்றை நுட்பமாகப் பயன்படுத்திக் கொள்வார். பேருந்தில் இருவர் பேசிக் கொண்டபோது,

> கடலின் மேற்பரப்பைக் கொண்டு அனுபவம் மிக்க மாலுமி அதன் ஆழத்தை அறிந்து கொள்வதுபோல, இந்தச் சிறுசெய்தியைக் கேட்டதும் நிருபரின் கவனம் இதன் முக்கியத்துவத்தை உணர்ந்து அவர்கள் பால் திரும்பியது" (ப. 64)

என்கிறார். அவருக்கு உணவு, தண்ணீர் இவை முக்கியமில்லை. செய்தி தேடுவதுதான் மிகமிக முக்கியம் என்பதை "பிஜப்பீர் வட்டக்கோபுரத்தில் சிக்கிக்கொண்ட ஒலியைப் போன்று, "ஒரேயொரு செய்தி" என்பது எதிரொலித்துக் கொண்டேயிருந்தது. ஆங்கில நாடகமன்னன் ஷேக்ஸ்பியர் சிருஷ்டித்த நாடகப் பாத்திரமொன்று,

> ஒரு குதிரை, ஒரு சாம்ராஜ்யத்திற்காக ஒரேயொரு குதிரை என்று கதறியதாமே, அதேபோல நித்தியலிங்கம் நடுத்தெருவில் நடந்தபடி மனக்குரலில் முணுமுணுத்தார் 'ஒருசெய்தி, ஒரு செய்தி, ஒரேயொரு செய்தி (ப. 66)

என்று ஆசிரியர் நிருபரின் செய்தி வேட்டையை இவ்வுவமையின் வாயிலாகப் படம்பிடித்துக் காட்டியுள்ளார்.

காலத்தால் சாகாதது என்ற கதையில் விதானையார் மகள், கால் தவறிக் கிணற்றில் விழுந்துவிட, அங்கிருந்தோர் கூச்சலிட்டதைக் "கிராமங்களில் வீடுகள் தீப்பற்றிக்கொண்டால் பலர் சேர்ந்து கூக்குரலிடுவார்களே, அதைப்போன்ற அலறல்" (ப. 75) என்கிறார். கிராமங்களில் மக்கள் ஏதேனும் இப்படி நடந்து விட்டால் உணர்ச்சியை வெளிப்படுத்துவர் என்பது இயற்கை. ஆனால் நகரங்களில் எது நடந்தாலும் உணர்ச்சியற்றுச் செல்லும் மக்களைத்தான் பார்க்கமுடியும்.

> கூடிநின்ற ஆண்களுள் சில வீரத்தமிழர்கள் அரசியல்வாதிகளைப் போல சும்மா 'ஆய் ஊய்' என்றார்களே தவிர ஒருவரும் கிணற்றினுள் இறங்க முயற்சிக்கவில்லை (ப. 76)

என்று அரசியல்வாதிகளின் உண்மைநிலையைக் கதையோட்டத்தில் உவமையாகக் கையாண்டு எள்ளி நகையாடுகிறார்.

முற்றவெளிக் கதையில் வரும் சின்னக்குட்டையன் மாறுப்பட்ட கால்களை, உடையவன். அவனது நடையை,

> தராசுத்தட்டில் நிலுவைப் பொருட்களைப் போட்டுக் கொண்டு,
> திடீரெனப் படிக்கல்லை மற்றொரு தட்டில் தூக்கிப் போட
> உயர்ந்து தாழ்ந்து எப்படி ஒரு நிலையற்று ஆடுமோ அதை
> நினைவூட்டியது அப்போதைய அவனுடைய நடை (ப. 97)

என்கிறார். நடுவுநிலைமைக்குச் சமன்செய்யும் சீர்கோல் எனக் காட்டுவார் வள்ளுவர். நடையின் நடுநிலையின்மைக்கு அதே தராசை உவமைகாட்டியது புதுமை.

"தனிமையில் விரகதாபத்துடன் தவிக்கும் பெண்ணைப்போன்று காட்சி தரும் முனிசிபல் மின்சாரக்கம்பம்" (ப. 112) என்றும் "வைசாகப் பௌர்ணமியிலேதான் சித்தார்த்தனுக்கு ஞானோதயம் பிறந்ததாம். அதைப்போல கந்தையாவுக்கு இந்தக் காலங்களிலே தான் (கள் உண்ணும்போது) ஞானம் பிறக்கும்" (ப. 112) என்றும் ஞானம் என்றும் கதையில் உவமைகூறிச் செல்கிறார்.

இராஜகுமாரனை மணந்த செம்படப்பெண் "இறால் எப்படிச் சுருண்டிருக்கும்? என்று கேட்டாளாம். அதைப்போன்று அவன் குலத்தொழிலை (கள்ளிறக்குவது) மறந்தவனல்ல" (ப. 96) என்று தற்போது ரிக்ஷா இழுக்கும் பண்டாரியின் இயல்பை விளக்குகிறார். "வட மாகாண மக்களுக்குப் பயனின்றிக் கடலிலே சங்கமமாகும் மகாவலி நதியைப் போலவே (மாதாகோவில்) அந்த நல்ல கிணறு இரவில் பயன்படாது. கோயில் நிர்வாகிகள் இரவில் அதன் படலை பூட்டிவிடுவார்கள்" (ப. 51) என்று தண்ணீரும், கண்ணீரும் கதையில் குடிதண்ணீருக்காகத் தொழிலாளர்கள் படும்பாட்டை நம்கண்முன்னே நிறுத்துகிறார். "அம்மன்கோயில் கிணறு உபயோகக் குறைவினால், ஜாதி வெறியர்களின் நெஞ்சங்களை போலவே இருண்டு பாசிபடர்ந்து கிடந்தது "(ப. 51) என்கிறதுபோது இருட்டறையில் உள்ளதடா உலகம் இன்னும் சாதி இருக்கிறதென்பானும் இருக்கின்றானே! என்று வேதனைபட வேண்டியுள்ளது.

இங்ஙனம் நாளும் நாம் காணும், கேட்கும், அனுபவிக்கும் பொருட்களைக் காட்சிகளை உவமையாக வைத்து விளக்கிச் செல்லும் உத்தி கற்போரைக் களிப்படைய வைக்கிறது. இல்பொருளணி, ரிது மொழிதலணி என அலையாமல், கற்பனைக் கெட்டாதவற்றைக் கூறாமல்

நடைமுறை வாழ்க்கையுடன் ஒத்துள்ளவற்றைக் காட்டிச் செல்லும் பாங்கு இவரது கதைகளுக்கு மேன்மேலும் மெருகூட்டுகின்றன.

**காலத்தால் சாகாதது எது?**

இளமை, செல்வம், யாக்கை நிலையாமை பற்றி திருக்குறள், சிலப்பதிகாரம் முதலிய நூல்கள் பேசுகின்றன. நிலையில்லா உலகில் நிலைத்து நிற்பது புகழ் என்றார் வள்ளுவர். ஆனால் டொமினிக் ஜீவா அவர்கள் நிலையில்லாத உலகில் நிலைத்திருப்பதும், காலத்தால் சாகாதிருப்பதும் சாதி எனக் கூறுகிறார்.

"தண்ணீரும் கண்ணீரும்" என்னும் கதையில் கடற்கரையில் வாழும் தொழிலாளர் குடும்பங்களுள் பண்டாரி ஒருவன். இவன் ஒரு ரிக்ஷா தொழிலாளி. ஒருநாள் இரவு உண்டபின் குடிக்க நீரின்றி தாகத்தால் துடிக்கிறான். அப்பகுதியில் மாதாகோயில்கிணறு இரவில் படல் சாத்தப்படும். மாரியம்மன் கோயில் கிணற்றில் பண்டாரி போன்ற குடும்பத்தார் நீர் சேந்தமுடியாது. அன்றிரவு தண்ணீர் வேட்கையால் மாரியம்மன் கோயில் கிணற்றில் குடிக்க நீர் இறைக்க பஸ்கண்டக்டரான சாமிநாதன் கண்டு வெகுண்டு, கத்த ஊரே கூடி உதைக்கிறது. "உயர்சாதியின் பெருமையும் மேன்மையும் இரவுக்கிரவே காப்பாற்றப்பட்டன. கிணற்றில் ஏற்பட்ட துடக்கு துடைக்கப்பட்டது" (ப. 55) என்று உயர்சாதியரின் சாதிச் செருக்கை ஏளனம் செய்கிறார். காலம் செல்கிறது. உயர்சாதி நாதன் பேருந்திலிருந்து விழுந்து சாகக்கிடக்கிறான். அவ்வழியே வந்த பண்டாரி, அவனை மருத்துவமனையில் சேர்த்து, இரத்தம் தந்து காப்பாற்றுகிறான். உண்மை உணர்ந்து சாமிநாதன் கண்ணீர் விட்டுக் கதறி, "உன்னை அடித்தேன். உன்வீட்டைக் கொளுத்தினேன். ஏன் இந்த நாய்க்கு உதவினாய்" (ப. 60) என்று பண்டாரி கைகளைப் பிடித்துக் கதறுகிறான். அப்போது பண்டாரி "நானும் மனிதன், நீயும் மனிதன், நாமிருவரும் தொழிலாளிகள்" (ப. 60) என்று கூறுவது செவிலியின் கண்களில் மட்டுமல்ல கற்போர் கண்களிலும் கண்ணீர் மல்குகிறது.

விதானையார் மேட்டுக்குடியினர். அவர்மகள் கால்தவறி கிணற்றில் விழுந்து விடுகிறாள். வேடிக்கை பார்த்த ஒருவரும் காப்பாற்றவில்லை. அவ்வழியே வந்த தாழ்ந்தகுலத்து பொன்னுத்துரை, கிணற்றில் குதித்து அவளைக் காப்பாற்றிவிட்டு, ஒன்றும் பேசாமல் புறப்பட்டுச் செல்கிறான். யாரும் அவனுக்கு நன்றி கூறவில்லை. "அடுத்தநாள் விதானையார் வீட்டுக்கிணறு இறைக்கப்பட்டது" (ப. 77) என்று ஆசிரியர் கதையை முடிக்கிறார். பொன்னுத்துரை எல்லாத் தகுதியும் பெற்றிருந்தும், அவனைப்பற்றி விதானையார் ஒரு நாவன் இன்ஸ்பெக்டர் ஆவதா என

மனம்குமைந்து சில மாதங்களுக்கு முன் அவனைப் பற்றிக் காவல்துறைக்கு களங்கம் கற்பித்தவர். அப்படியிருந்தும் பொன்னுத்துரை மனிதநேயத்துடன், "இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால் என்ன பயத்ததோ சால்பு" என்பதற்கிணங்க அவர் மகளைக் காப்பாற்றினான். இந்நிலையில், நன்றியோ, பாராட்டோ தெரிவிக்காத அவர்கள், அதாவது உயர்குலத்தார் என்ற செருக்குடைய அவர்கள் தங்கள் கிணறு அவனால் தீட்டுப்பட்டுவிட்டது என்று மறுநாள் இறைத்தார்களே, அவர்கள் தண்ணீரை மட்டும் இறைக்கவில்லை, சமத்துவம், மனிதநேயம் ஆகியவற்றையும் சேர்த்தே இறைத்துக்கீழே கொட்டிவிட்டனர்.

இங்ஙனம் சாதியின் பேயாட்டத்தை ஞானம், தண்ணீரும் கண்ணீரும், காலத்தால் சாகாதது என்ற கதைகள் வாயிலாக நேரிடையாக ஆசிரியர் நம் கண்முன் நிறுத்துகிறார். உலகத்தில் மலை கூட நிலைகுலைந்து போகிறது. கடலும் கொந்தளிக்கிறது. பூமியும் வெடிக்கிறது. பிளாஸ்டிக் கூட ஒரு காலத்தில் மக்கலாம். ஆனால் காலத்தால் அழியாதது எது! அது சாதி என்கிறார் ஆசிரியர். சாதி பற்றிப் பாடிய எவரும் இதுவரை இப்படியொரு தலைப்பிட்டு எழுதியதில்லை. தலைப்பில் புதுமையும், புரட்சியும் இணைந்துள்ளது. "சாதியெனும் சழக்கை விட்டேன்" என்ற வள்ளலார் வாக்கு நனவாவது எக்காலம்?

### *சிந்திக்கத் தூண்டும் அனுபவ முத்துக்கள்*

"சமூகத்தின் விளைபொருளான இலக்கியம் சமூகத்திலிருந்தே தோன்றுகிறது. சமூகத்தைப் பிரதிபலிக்கின்றது. சமூகத்தை அலசுகின்றது. சமூகத்தைப் புரிந்துகொள்ள உதவுகிறது. வாழ்க்கைப் பற்றினையும், நம்பிக்கையையும் ஊட்டுகின்றது" என்று இலக்கியம் பற்றி மேனாட்டறிஞர் மேத்யூ அர்லான்டு கூறிய விளக்கம் பன்முறை சிந்தித்து உணரத்தக்கது. அவர் கூறியுள்ள அத்தனைத் தகுதிகளும் உடையதாக ஜீவா அவர்களின் சிந்திக்கத்தூண்டும் முத்துக்களை அள்ளிஎடுத்து அணியாக்கி மகிழ்வதே வாசகர் கடமையாகும். "நான் கற்பனை உலகத்தைப் படைப்பவனல்ல. நான் வாழ்வை, வாழ்வின் உண்மையை நேர்நின்று நோக்கினேன். கண்களைக் கூசிக் குறுக்காமல் பார்த்தேன். கண்களால் கண்டதைக், காதுகளால் கேட்டதை, மனத்தால் உணர்ந்து புரிந்து கொண்டவைகளை, அச்சம்பவங்களைக் கதைகளாக்கி உங்கள் மத்தியில் பாத்திர உருக்கொடுத்து நடமாடவிட்டிருக்கின்றேன். நான் வாழாத, நான் பார்க்காத உலகத்தைக் கருப் பொருளாக்கி கதை செய்து உங்கள் முன்னால் உலவவிட்டு வேடிக்கைக்காட்டவில்லை. இதில் எனக்கு நம்பிக்கையுமில்லை"

(ப. 10) என்று தம் முன்னுரையில் தம் கதைகளின் போக்கும், நோக்கும் குறித்து மிக வெளிப்படையாகக் கூறியுள்ளார்.

'கொச்சிச்கடையும், கறுவாக்காடும்' கதையில் தன்மகனைக் காப்பாற்ற வேண்டி அப்புசாமி டாக்டர் இராஜநாயகத்திடம் வேண்ட, அவர் உழைக்கும் போது ஒரு பகுதி சேமிக்காமல், பணமின்றி வந்தவனை வைகிறார். அவர் கூறியது "நீரில் அமுங்கிப் போனவனுக்கு நீந்தக் கற்றுக் கொள்வனைப் பற்றி ஆற்றப்படும் பிரசங்கம்" (ப. 29) என்று இடத்திற்கேற்ற பழமொழியைக் கையாண்டுள்ளார். பாரிஸ்டர் பரந்தாமன் தன் தாயின் நோயைக் குணப்படுத்த பணம் தர, அதை வாங்க மறுத்து டாக்டர் வெளியேறுகிறார். அப்புசாமி மகனைக் காப்பாற்றிவிட்டு "அப்புசாமி! பணத்தினால் சிலவற்றை மட்டுமே வாங்கமுடியும்" (ப. 36) என்கிறார். அன்பு, கருணை, தொண்டு ஆகியவற்றைப் பணத்தால் வாங்க முடியாது என்பதைக் குறிப்பால் ஆசிரியர் உணர்த்தியுள்ளார்.

வெண்புறாவில் விமானப்பணிப்பெண் குளோரியா பயணிகளிடம் உங்களுக்கு என்ன வேண்டுமெனக் கேட்கிறாள். "உதட்டில் நெளியும் சிரிப்புடன் குழைந்து வெளிவரும் சொற்களின் ஓசை அந்நியமாயிருப்பினும், அவை மனிதகுலத்தை இணைக்கும் சங்கிலி" (ப. 26) என்று மொழியின் தன்மையை உணர்த்துகிறார். விமானத்தில் தமிழ்ப்பெண்ணான இவள் "இந்தி சீனி பாய் பாய்" என இந்தியில் கூற, பயணிகளான சீனர்களும் மகிழ்ந்து இதனையே கூறுகின்றனர். "அதில் மொழிச் சுவர்கள் எழுப்பியிருக்கும் பிரிவினையைக் கிழித்துப் பரந்திருக்கும் மனிதனின் மானசீக உணர்ச்சிகள் மண்டிக்கிடக்கின்றன" "(ப. 38) என மனித மனங்களைச் சுட்டிக்காட்டுகிறார். தண்ணீரும் கண்ணீரும் கதையில் வரும் பண்டாரியின்குலத்தொழில் கள்ளிறக்குவது. கால மாற்றத்தால் கள்ளுக்கடைகள் மூடப்பெற்றன. அதனால் அவன் தீயவழிகளில் சென்று பொருளீட்டவில்லை. "அவன் நேர்மையான உழைப்பாளி. மனம் தளராத் தொழிலாளி. ஆகவே அவன் மனிதனாகவே, மனிதப்பண்புகளுடன் வாழத் தீர்மானித்தான். இப்பொழுது பட்டினத்து ரிக்ஷாகாரனாக நடமாடுகிறான்". (ப. 47) என்று உழைப்பின் பெருமையை உயர்த்திக் காட்டுகிறார். "பண்டாரியின் இரத்தத்தைப் பரிசோதித்த டாக்டர் மகிழ்வுற்றார். "இரண்டு இரத்தங்களும் ஒரே ரகமாம். ஒத்துப்போகுமாம். என்ன விசித்திரம்? ஜாதிக்கு ஜாதி இரத்தம் மாறுவதில்லை" (ப. 58) என்று சாதிவேறுபாடு காட்டும் சமுதாயத்தை எள்ளி நகையாடுகிறார்.

இங்ஙனம் ஆசிரியர் தம் அனுபவங்களை, பாத்திரங்களின் அனுபவங்களை இழைத்து உலகோர்க்கு பலஉண்மைகளை உணர்த்திய பாங்கு பாராட்டத்தக்கது.

## தொகுப்புரை

உலகஅயலகத் தமிழர் வாழும் நாடுகளுள் இலங்கை தமிழகத்துடன் சங்க காலம் முதற்கொண்டே தொடர்புடையதும், தொப்புள்கொடி உறவுடையது. இலங்கைத் தமிழரின் இலக்கியப்பணி அளவற்றது. ஆறுமுக நாவலர், தமோதரம்பிள்ளை, ஆனந்த குமாரசாமி, விபுலானந்த அடிகள், தனிநாயக அடிகள் முதலியோரும் மற்றும் எழுத்தாளர்கள், கவிஞர்களின் படைப்புகள் ஏராளம். இலங்கைவாழ் தமிழர்களுள் கத்தோலிக்கர், இசுலாமியர், மலையகத் தமிழர் என இவர்களின் தமிழ்ப்படைப்புகளும், தமிழ்ப்பணிகள் பலவகையின. இலங்கையில் 1945 இல் தொடங்கப்பெற்ற முற்போக்கு இலக்கிய இயக்கம் "ஈழத்து இலக்கியம், தேசிய இலக்கியம், மண்வாசனை என்ற மூன்றை முன்வைத்த புதிய இலக்கியக்கொள்கைக்குப் போராடியது" (உலகத் தமிழ் இலக்கிய வரலாறு, 2005, ப. 46) என்று பேரா.கா. சிவத்தம்பி அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

சிறுகதை வளர்ச்சியில் தமிழகத்தைப்போலவே அயகலத்தமிழர்வாழும் நாடுகளுள் இலங்கை முன்னணியில் விளங்கியது. இன்னும் சொல்லப் போனால் இலங்கையின் சிறுகதை தேசியம், மண்வாசனை, முற்போக்கு சிந்தனை என்ற முப்பரிமாண வளர்ச்சியில் நடைபோடத் தொடங்கியது. தமிழ்நாட்டைவிட இலங்கையில் அறுபதுகளில் இலங்கைப் பல்கலைக் கழகங்கள் சிறுகதைத் துறையில் ஆர்வம் செலுத்தின. அவற்றை அங்கீகரித்தன. "பல்கலைக் கழகத்தின் உள்ளும், வெளியிலும் பலர் சிறுகதைத் துறையில் ஈடுபட்டு தங்கள் உள்ளங்களை வருடிய, நெருடிய சமுதாய அவலங்களையும், மன அவலங்களையும் சிறுகதை மூலம் வெளிப்படுத்தும் ஆர்வம் மிக்கவர்களாக விளங்கினர். அறுபதுகளில் எழுதத் தொடங்கிய இவர்கள் எழுபதுகளில் மேலும் செழுமையுடன் எழுதினர்" (உலகத் தமிழிலக்கிய வரலாறு, 2005, ப. 247) என்ற நூலில் துரை.மனோகரன் இலங்கை சிறுகதை வளர்ச்சி பற்றிக் கூறியுள்ளார்.

"சிறுகதை ஆசிரியர் எங்ஙனம் நிகழ்ச்சிகளையும், உண்மைகளையும் தேர்ந்தெடுத்து ஆற்றலோடு வெளிப்படுத்துகிறார் என்பதே சிறுகதையை அளந்து பார்ப்பதற்கான முதற்சோதனை" என்ற இ.ஜே. ஒபிரியன் அவர்களின் கூற்றுக்குப் பொருத்தமாக ஜீவா அவர்களின் சிறுகதைகள் இயல்பாகவே அமைந்துள்ளன. "சிறுகதையில் வரும் பாத்திரங்கள் வளர்க்கப்படுவதில்லை வார்க்கப்படுகின்றன" என்பதற்கிணங்க இவரின் கதைகளிலுள்ள பாத்திரங்கள் விளக்குகின்றன.

"ஜீவாவின் கதைகளில் சமூக அநீதியால் உண்டாகும் உணர்வுத் தாக்கம் சிறப்புற எடுத்துக்கூறப்பட்டுள்ளது" (தமிழில் சிறுகதையின்

தோற்றமும் வளர்ச்சியும், ப. 150) என்று கா.சிவத்தம்பி அவர்கள் கூறியுள்ளார். "சிறுகதை அமுக்கப்பட்ட மனிதனின் அல்லது மக்களின் குரல்" என்ற பிராங்க் ஓகொனர் கூற்றின் உண்மையை ஜீவா அவர்களின் சிறுகதைகளை வாசித்தவர் நன்கறிவர்.

"மண்ணும் வானமும் தவிர நான் பார்க்கவும், படிக்கவும் எனக்கு நூல்களில்லை. இவையிரண்டும் எல்லோருக்கும் கிடைக்கும் நூல்களாகும்" (வாழும் வள்ளுவம், மேற்கோள்: ப.45) என்ற பிரஞ்சு அறிஞர் பாலிசி என்பாரின் கருத்திற்கிணங்க டோமனிக் ஜீவா அந்த இரு நூல்களின் காட்சிகளையே எழுத்தில் வடித்துள்ளார்.

"எழுத்தாளர்கள் ஏகலைவன் மாதரி, அவர்கள் எந்த வாத்தியாரையும் வைத்துக்கொண்டு, தங்கள் தொழிலைக் கற்றுக் கொண்டதில்லை. அதேபோல எந்த ஒருவனுக்கு அவர்கள் வாத்தியாராக இருந்து கொண்டு கற்றுக்கொடுக்க விரும்புவதுமில்லை" (கி.ரா.வின் கதைகள்) என்று தம் நூலின் முன்னுரையில் ராஜ்நாராயணன் அவர்கள் எழுத்தாளர்களைக் குறிப்பிடுகிறார்கள். எழுத்தாளர்கள் இயற்கைப் பள்ளியிலும், அனுபவக் கல்லூரியிலும் பயின்றவர்கள். இது முற்றிலும் டோமினிக் ஜீவா அவர்களுக்குப் பொருந்தும்.

டோமினிக் ஜீவா அவர்கள் அனுபவப் பள்ளியில் படித்தவர். உலகைக் கண்ணாடி கொண்டு நோக்காமல் தம் கண்களால் நேரடியாகப் பார்த்தவர். இயற்கைப் பள்ளியில் மனிதர்களுடன் மனிதனாய் வாழ்ந்தவர் 'மனிதர்' என்றும் அச்சொல்லின் உன்னதமான உண்மையின் உள்ளடகத்தைப் புலப்படுத்தியவர். மாந்த நேயத்தை விண்ணளவு உயர்த்தியவர். எழுதுவது அவரது தொழிலன்று. தொழில் செய்வதுதான் அவரது தொழில். அதுதான் அவரது வாழ்க்கை. ஏன் சகலமும் அதுவேதான். இலக்கியம் ஒரு காலத்தில் மெத்தப்படித்த ஒரு சிலரின் செல்லப்பிள்ளையாய் சவலைப்பிள்ளையாய் இருந்தது. பிறகு தமிழ்ச் சட்டமார்களின் தோளில் அமர்ந்தது. தொழிற் புரட்சியும், பொருளாதார மாற்றமும் அது தொழிலாளர்களின் கரங்களில் குடிபுகுந்தது. அப்போது அது வளமுடன், தெம்புடன், செழிப்புடன் வளர்ந்தது. "அதே வளர்ச்சிக் கட்டத்தில் நான் எழுத்தாளன் ஆனேன்" (ப. 8) என்று அவர் எப்படி எழுத்தாளர் ஆனார் என்பதைக் கூறியுள்ளார். "ஒரு தேசத்தின் தொன்மையை நாகரிகத்தை, கலாசாரத்தைப் பண்பாட்டைப் பூரணமாகத் தெரிந்து கொள்வதற்குச் சில சாசனங்களையோ, செப்பேடுகளையோ, தேடிச் தோண்டி ஆராய்ச்சி செய்து கண்டு பிடிப்பார்கள் புதைபொருள் ஆராய்ச்சி வல்லுநர்கள். வாழும் மக்களின் சரித்திரத்தைப் புரிந்து கொள்வதற்கு, அறிந்து கொள்வதற்கு உதவி செய்வன இலக்கியங்களே. அதுவும்

சிறுகதைகள் இந்த அவசரயுகத்தில் தங்கள் வேலையைச் சீக்கிரமாகவும், திறம்படவும் செய்து முடித்துவிடுவதில் அசகாய சூரத்தனம்கொண்டு மிளிர்கின்றன" (ப. 11) என்று தம் நூலின் முன்னுரையில் சிறுகதைகளின் சிறப்பை உணர்த்தியுள்ளார்.

"எந்த ஒரு காலக்கட்டத்தில் எழுதப்படும் படைப்பிலும், அந்தக் காலத்தின் சூழல்களின் நிறம் பதிந்துதான் இருக்கும். மனிதாபிமான உணர்வுதான் படைப்பிலக்கியத்தைக் காலங்கடந்து நிற்கும்படியாகச் செய்கிறது என்பது மட்டுமல்ல. தனது காலத்திற்கு அக்காட்சியாகவும் உள்ளது "(இந்தியச் சிறுகதைத் தொகுப்பு, பக்.12 மற்றும் 14) என்று எழுத்தாளர் பீஷ்ம சகானி குறிப்பிடுவது சிந்திக்கத்தக்கது. ஆகவேதான் இலக்கியத்தைக் காலம்காட்டும் கண்ணாடி என்கிறோம். ஜீவா அவர்களின் படைப்புகளில் அவர்கால தொழிலாளர் அவலங்களும், மனிதாபிமான உணர்வுடைய மனிதர்களும் இடம்பெற்றிருப்பதைக் கற்றவர் நன்கறிவர்.

'தண்ணீரும், கண்ணீரும்' காலத்தால் சாகாதது; ஞானம் முதலிய கதைகளில் சாதியின் கொடுமையும், அதன் பேயாட்டமும் உணர்த்தப் பட்டுள்ளன. 'தண்ணீரும் கண்ணீரும்' காலத்தால் சாகாதது; 'கொச்சிக் கடையும் கறுவாக்காடும்' என்ற கதைகளில் மனிதநேயம் எதிரொலிக்கிறது. வெண்புறா கதையில் ஒரு விமானப்பணிப்பெண்ணின் நாட்டுப்பற்றும், ஈகைப்பண்பும் வெளிப்படுகின்றன. இவர்களும், அவர்களும் என்ற கதையில் பணக்காரர்களிடம் எவ்வளவு உழைத்தாலும் தொழிலாளர்களைக் கேவலமாகவே நடத்துவார்கள் என்பது உணர்த்தப்பெற்றது. செய்தி நிருபர்கள் ஒன்றுமில்லாத ஒரு செய்திக்குக்கூட தலையும் காலும் வைத்து எப்படியெல்லாம் கயிறு திரிப்பார்கள் என்பதைப் படம்பிடித்துக் காட்டப்பட்டுள்ளது. தீர்க்கதரிசி கதையில் வெள்ளையர்கள் இந்தியர் போன்ற பிறநாட்டவரை எவ்வளவு கேவலமாக நடத்தினர் என்பதை "நாய்களும் கறுத்தவர்களும் இந்த ஹோட்டலுக்குள் அனுமதிக்கமாட்டார்கள்" என்ற வாசகத்தின் வாயிலாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. ஓர் எழுத்தாளன், தபால்காரர்க்கு எழுதிய கடிதத்தில் மனச் சுமைகள் எங்ஙனம் மனித வாழ்வைப் பாதிக்கின்றன என்பதைச் சிலுவை கதையால் அறிகிறோம். முற்றவெளியில் ஒரு மாடு மேய்ப்பவனின் எண்ணங்களை வெளிப் படுத்துவதாக அமைந்துள்ளது. குடியின் தீமையை ஞானம் என்ற கதை கூறுகிறது. உறுப்பு ஊனம் மனிதனை எங்ஙனம் பாதிப்படையச் செய்கிறது என்பதை கரும்பலகை வெளிப்படுத்துகிறது.

பெரும்பாலும் எல்லாக் கதைகளுமே தொழிலாளர், உழைப்பாளர் இவர்களை மையமிட்டே பின்னப்பட்டுள்ளன. வாழ்க்கை அவலங்கள்,

உணர்ச்சிக் கொந்தளிப்பு, சமுதாய ஏற்றத்தாழ்வு, பொருளாதாரவேறுபாடு ஆகியவற்றைப் படம்பிடித்துக்காட்டுகின்றன. சுருங்கச்சொன்னால் டேனியல் ஜீவா அவர்களின் சிறுகதைப் படைப்புக்கள் சமுதாய மறுமலர்ச்சியை உண்டாக்கும் திசை நோக்கி நம்மை அழைத்துச் செல்கின்றன. அவரது கதைகளே வாசகர்களோடு நேரில் பேசும் போது இடையே ஆய்வாளர் எதற்கு!

# இலங்கைத் தமிழ்ப் புதினங்களும் சிறுகதைகளும்

முனைவர் இரத்தின புகழேந்தி
*பட்டதாரி ஆசிரியர்*
*அரசு உயர்நிலைப் பள்ளி*
*மன்னம்பாடி*
*விருத்தாசலம்*

## முன்னுரை

இலங்கைத் தமிழர்களிடமிருந்து குறிப்பிடத் தகுந்த தமிழ்ப் படைப்புகள் அண்மைக் காலமாக மிகுதியாக வெளிவந்து கொண்டிருக் கின்றன. அவர்களின் படைப்புகள் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு எத்தகைய பங்களிப்புச் செய்துள்ளன என்பதனை இக்கட்டுரை பதிவு செய்கிறது. புதினங்கள், சிறுகதைகள், கவிதைகள் ஆகிய மூன்று தளங்களிலும் இலங்கைத் தமிழ்ப் படைப்பாளிகள் பங்களிப்புச் செய்துள்ளனர். அவற்றுள் புதினங்களும், சிறுகதைகளும் மட்டுமே இக்கட்டுரைக்காக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. குறிப்பாக அண்மைக்காலப் புதினங்களில் டானியல், ஷோபாசக்தி, உமா வரதராசன், விமல் குழந்தைவேல் ஆகியோரின் புதினங்களும், சக்கரவர்த்தி, இரவி அருணாசலம், த. அகிலன், முத்து லிங்கம் ஆகியோரின் சிறுகதைகளும் இந்த ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பட்டுள்ளன.

இலங்கைத் தமிழர்கள் என்று ஒட்டுமொத்தமாகக் குறிப்பிட்டாலும் அங்குள்ள வட்டார அடிப்படையிலும், சாதி, மத அடிப்படையிலும் நுட்பமான வேறுபாடுகள் மேற்கண்ட எழுத்தாளர்களின் படைப்புகளில் காணப்படு கின்றன. எனவே அனைத்துத் தரப்புப் படைப்புகளிலிருந்தும் பிரதிநிதித்துவம் வழங்க வேண்டி மேற்கண்ட எழுத்தாளர்களின் படைப்புகள் தேர்வு செய்யப் பட்டுள்ளன.

## புதினங்கள்

இலங்கைத் தமிழ்ப் புதின வரலாற்றில் முக்கிய இடத்தை வகிப்பவர் கே.டானியல். அவரின் 'கானல்' என்னும் புதினம் இக்காலத்துப் பெறு பேறுகளில் ஒன்று எனக் கார்த்திகேசு சிவத்தம்பி குறிப்பிடுகிறார். இவரது பஞ்சமர் என்னும் புதினம் 1972இல் இலங்கையில் வெளியிடப்பட்டது. பஞ்சமர்களின் நிரந்தர விடுதலைக்காக உழைத்த இவரைக் கைது செய்யச்

சிங்கள அரசு முயல்கையில் பலமுறை தலைமறைவாக வாழ வேண்டிய சூழல். அப்படித் தலைமறைவாக வாழ்ந்த காலத்தில் கிராமங்களில் மக்கள் இவர் மீது செலுத்திய அன்பும் ஆதரவுமே இந்தப் புதினத்திற்கு அடித்தளமிட்டுள்ளன என்பதனை ஆசிரியர் குறிப்பிடுகிறார். இப்போது பஞ்சமர் இரண்டாம் பாகமும் சேர்த்து முழு வடிவில் வெளியிடப்பட்டுள்ளது.

நளவர், பள்ளர், பறையர், வண்ணார், அம்பட்டர் என்ற ஐந்து சாதியினரையும் இலங்கையில் பஞ்சமர் என்று குறிப்பிடுகின்றனர். இவர்கள் தமிழர்களாக இருப்பினும் உயர்சாதித் தமிழர்களுக்கு அடிமை வேலை செய்பவர்களாகவே நடத்தப்பட்டுள்ளனர் என்பதனை இந்தப் புதினம் நுட்பமாகப் பதிவு செய்கிறது. அவர்கள் தங்களின் விடுதலைக்காகப் போராடும் நிகழ்வுகளும் புதினத்தில் இடம்பெறுகின்றன. விவசாயம் செய்வதற்கு நிலங்களில்லாத பஞ்சமர்கள் தரிசு நில ஆக்கிரமிப்புச் செய்ய முயல்வதும் பெருந்தெய்வக் கோயில்களில் நுழைவதற்கு அனுமதி மறுக்கப்படுகிற போது ஆலயப் பிரவேசப் போராட்ட முயற்சியும் அவர்களுக்கான விடுதலைப் போராட்ட வரலாற்றில் குறிப்பிடத்தக்க அம்சங்களாகப் புதினம் பேசுகிறது. வேளாள நில உடைமையாளர்கள் தங்களின் இறப்புச் சடங்குகளுக்குப் பஞ்சமர்களை நம்பியிருந்த சூழலில் ஒரு பெருநிலக்கிழாரின் இறப்புச் சடங்கிற்கு இவர்கள் வர மறுத்துக் கலகம் செய்ததால் 3 நாள்கள் அந்தப் பிணம் வீட்டிலேயே கிடத்தப்பட்டு அழுகி நாற்றமெடுக்கிறது. இது சமுதாயத்தில் புரையோடிக் கிடக்கும் சாதி அடுக்குகளின் நாற்றமாகவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. இந்தப் புதினத்தின்வழி இலங்கைத் தமிழ்ச் சமூகத்திலும் சமத்துவமின்மை நிலவுவதனையும் இவர்கள் சிங்கள ஆதிக்கத்தை எதிர்த்துப் போரிடுவதனையும் பகடி செய்கிறது. அடிமைகள் சடங்கு செய்ய ஏன் வரவில்லை என வெளியூர்க்காரர் ஒருவர் கேட்க அதற்கு இறந்துபோனவரின் உறவினர் கூறும் பதில் இதனை நமக்கு உணர்த்துகிறது. காலையில் சிங்கள ஆள்கள் விசாரிக்க வருவார்கள்; அப்போது நாம் அடிமைகளை வைத்து நடத்துவதனைப் பார்த்தால் ,"உங்களின்ற தமிழர்களுக்குச் சமத்துவம் குடுக்காத உங்களுக்கு நாங்கள் சம உரிமை எப்படி குடுக்குறதெண்டு பாலிமெண்டிலை கேட்டாலும் கேட்டுப் போடுவாங்கள்."

'கொரில்லா', 'ம்' ஆகிய இரண்டு புதினங்களின் வழியாக இலக்கியப் பரப்பில் பயணம் செய்தவர் ஷோபாசக்தி. இவரது படைப்புகள் பல்வேறு விமர்சனங்களுக்கு உட்படுத்தப்பட்டன. இவரைத் துரோகியாகக் குறிப்பிடும் தமிழர்களும் உண்டு. பேசக்கூடாத இடத்தில் உரக்கப் பேசுவதும், உண்மையைப் பேசுவதும் துரோகமாகவே பார்க்கப்படுகின்றன. அதிகார

நிறுவனங்களாலும், பேரினவாதக் கொடுமைகளாலும் இயக்க நடவடிக்கைகளாலும் அகதியாகி ஐரோப்பாவில் வாழும் ஒருவனின் வரலாற்றைத்தான் இந்தப் புதினம் மையப்படுத்துகிறது. மேலும் தமிழ்ச் சிறுவர்களுக்கு விடுதலை இயக்கங்கள் கட்டாயப் பயிற்சி கொடுத்துப் போரில் பயன்படுத்தியதால் அக்குடும்பங்கள் அடைந்த துயரங்களையும், இயக்கங்களுக்குள் நடைபெற்ற போட்டிகள், ஒரே இயக்கத்தில் பொறுப்பாளர்களிடையே ஏற்பட்ட பொறாமைகள், அவற்றால் ஏற்பட்ட படுகொலைகள், அகதிவாழ்வின் அவலங்களையும் இந்தப் புதினத்தின் பக்கங்கள்தோறும் காணமுடிகிறது.

'ம்' என்ற புதினத்தில் இலங்கையில் நடைபெற்ற சிறை உடைப்பு, சிறைப் படுகொலைகள், போர்ச்சூழல் மனித மனங்களில் ஏற்படுத்திய வடுக்கள், மனச்சிதைவுகள், விடுதலை என்னும் இலட்சியப் பற்று இளைஞர்களிடம் உருவாக்கிய ஈரமற்ற மனத்திரட்சியை இந்தப் புதினம் சித்திரிக்கிறது.

மனித வாழ்க்கை என்பது தொன்மைக் காலத்திலிருந்தே நிலம் சார்ந்த ஒன்றாகவே அமைந்து வந்திருக்கிறது. நிலம் சார்ந்த மனித வாழ்க்கையில்தான் எத்தனை விதமான ஏற்றத் தாழ்வுகள். இந்த எல்லா ஏற்றத் தாழ்வுகளையும் ஒளிவு மறைவின்றித் தம் 'வெள்ளாவி' என்னும் புதினத்தில் படைத்துக்காட்டிய விமல் குழந்தைவேலின் இரண்டாவது படைப்பு 'கசகறணம்'. புதினத்தின் தலைப்பிற்கு முடிவுறா இன்னல்கள் என்று பொருளென்பதனைப் பின்னிணைப்பில் காணமுடிகிறது. இலங்கையின் தென்கிழக்கில் அமைந்துள்ள பெருநிலப் பகுதியான அக்கரைப்பற்றுப் பகுதியில் இணைந்து வாழ்ந்த தமிழர்களும் இசுலாமியர்களும் 1985-90 காலப் பகுதியில் சந்தித்த சோதனைகள், படுகொலைகள், சூறையாடல்கள், இடப்பெயர்வுகள், கட்டாய வெளியேற்றங்கள், காணாமல் போதல் என இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதிகள் முழுவதும் ஏற்படுத்திய பெரும் இழப்பு அப் பகுதிகளின் மக்களுக்கு இருண்ட காலமாகவே இந்தப் புதினத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

அக்கரைப்பற்றுச் சந்தை குறித்த விவரிப்புகளைப் படைக்கும்போது அது பொருள்களை விற்கவும் வாங்கவும் மட்டுமேயான ஒரு சந்தையல்ல; அதற்கு மேலும் அப்பகுதிவாழ் மக்களின் உணர்வுகளையும் , உறவுகளையும் பகிர்ந்துகொள்வதற்கான ஒரு பண்பாட்டுத்தளமாகவும் விளங்கி யிருக்கிறது என்பதனை அறியலாம். அதனால்தான் அது பகைவர்களால் எரியூட்டப்பட்டுள்ளது. யாழ் நூலகம் எப்படி அறிவுசார் தளமோ அப்படித்தான் அக்கரைப்பற்றுச் சந்தை ஒரு பண்பாட்டுத்தளம் என்பது இரண்டின் எரியூட்டு

நிகழ்வுகள் வாயிலாக நாம் அறியலாம். அவை இரண்டுமே தமிழர்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்திய நிகழ்வுகள்.

கிழக்கிலங்கையின் கரையோரக் கிராமமான பாண்டிருப்பில் பிறந்தவரான உமாவரதராசனின் (உடையப்பா மாணிக்கம் வரதராசன்) முதல் புதினம் மூன்றாம் சிலுவை. இலங்கைத் தமிழ்ப் புதினங்கள் போரின் விளைவுகளையும், இடம் பெயர்தலின் வலியையும் பேசும் புற இலக்கியங்கள் என்றால் மூன்றாம் சிலுவை காதலைப் பேசும் அக இலக்கியமாகத் திகழ்கிறது. அதிலும் ஒரு மாறுபட்ட காதல் கதையாக.

வறுமை என்றால் என்னவென்று தெரியாத 52 வயது ஆணுக்கும் தினம்தோறும் வறுமையோடே வாழும் இளம்பெண்ணுக்கும் ஏற்படும் காதல் கதையாக இப்புதினம் படைக்கப்பட்டுள்ளது. பிரபஞ்சன் கூறுவதுபோல், நிகழ்காலத்தை நித்தியப்படுத்தும் ஆவலுக்கும் எதிர்காலக் கனவுகளைத் தேடிப் பறக்கும் விழைவுக்குமான முரண்பாடே இந்தப் புதினம்.

*சிறுகதைகள்*

இலங்கைத் தமிழ்ச் சிறுகதை வெளியில் ஒரு மாற்றுக்குரலாகச் சக்கரவர்த்தியின் கதைகள் ஒலிக்கின்றன.சிறுபான்மையரான சோனகர்கள் (இசுலாமியர்கள்) பற்றியும் படுவான்கரை மக்களின் வாழ்வுகுறித்தும் இவர் கதைகள் பேசுகின்றன. போர் என்பது வீரத்தின் குறியீடு என்று தூரத்தில் நிற்பவர்கள் வேண்டுமானால் கூறிக்கொள்ளலாம். தினமும் அதில் வாழ்பவனுக்குத்தான் தெரியும் அதன் வேதனைகள். அதனால்தான் சக்கரவர்த்தியின் படைப்புகள் போர் எதிர்ப்பை இலக்காகக் கொண்டுள்ளன.

மற்றவர்கள் புனிதம் என்று கருதுவதனைச் சக்கரவர்த்தி தம் படைப்பின் வழி நிராகரிக்கிறார். கற்பு என்பது வெறும் கதை. உடலும் காமமும்தாம் உண்மை. போலியான பண்பாட்டு வாதங்களை அவரது கதாப்பாத்திரங்கள் வழி அடித்து நொறுக்குகிறார். போலி ஒழுக்கவாதிகளை நேரடியாகவே விமர்சிக்கிறார். ஒவ்வொரு கதையின் தொடக்கத்திலும் தத்துவார்த்தமான கவிதை வரிகளை மேற்கோள்காட்டுகிறார். ஒரு மேற்கோளில் ,"உனக்கு நாடு இல்லை என்றவனை விட 'நமக்கு நாடே இல்லை' என்று தூபமிட்டவன் எவனோ அவனே என்னை விரட்டியடித்தவன் என்பேன்.

கிழக்கிலங்கை மக்களில் பலருக்கே அந்நியமாகக் கருதப்படும் படுவான்கரை மக்களின் பேச்சு மொழியை எழுத்தாக்கியதில் இவர் குறிப்பிடத்தக்கவர் என்று பதிப்பாளர் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

1995ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியில் இலங்கை இராணுவத்தால் தேடப்பட்டு உக்ரெய்ன், ஜெர்மனி, இங்கிலாந்து எனப் பல்வேறு நாடுகளுக்கு இடம்பெயர்ந்த இரவி அருணாசலத்தின் முதல் சிறுகதைத் தொகுதி காலம் ஆகி வந்த கதை அண்மையில் வெளிவந்திருக்கிறது இவரின் இரண்டாவது தொகுதியான பாலைகள் நூறு என்பதில் யாழ்ப்பாணத்துக் கிராமம் ஒன்றின் சராசரிக் குடும்பத்து ஆண் குழந்தையின் பயங்களை நேர்மையாகப் பதிவு செய்திருக்கிறார். "யாழ்ப்பாணத்து எழுத்துகளில் இரவியைப்போல் பதின் வயது சிறுவனைச் சித்திரித்துள்ளவர்கள் நானறிய யாருமே இல்லை" என்கிறார் பேராசிரியர் கா.சிவத்தம்பி. கால் நூற்றாண்டுக் கால வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள மரபு மாற்றங்களை நுட்பமாகப் பதிவு செய்யும் இக்கதைகள், இராணுவ நடவடிக்கைகள் ஏற்படுத்திய சமூக அதிர்வுகளை அறிந்து கொள்ளும் கருவியாக அமைந்துள்ளன.

இரண்டாவது தொகுதியான பாலைகள் நூறு அண்மைக்கால இராணுவ நடவடிக்கைகளைப் படம்பிடித்துக் காட்டுவதோடு புலம்பெயர் வாழ்வில் ஏற்படும் ஏமாற்றங்கள் ஏக்கங்களையும் சொல்கிறது. 80களில் இலங்கைக் கிராமங்களில் இளைஞர்கள் விடுதலைப் போராட்ட இயக்கங்களில் பங்கேற்று இந்தியாவில் பயிற்சி பெற்ற அனுபவங்களும் கதைகளூடாகக் காணக்கிடக்கின்றன.

மரணத்தின் வாசனை என்ற தம் முதல் சிறுகதைத் தொகுதியின் மூலம் இலங்கைத் தமிழ் இலக்கித்தில் தடம் பதித்துள்ளார் த.அகிலன். 1983 இல் பிறந்த அகிலன் தாம் சந்தித்த மரணங்களின் வாயிலாக இக் கதைகளைப் படைத்துள்ளார். அம்மரணங்கள் அவருக்குள் ஏற்படுத்திய தாக்கங்கள் அவரது எழுத்திற்கு வலிமை சேர்க்கின்றன.

தந்தையைப் பாம்பு கடித்தபோது மருத்துவ மனைக்கு அழைத்துச் செல்ல இந்திய இராணுவம் சொத்தையான விதிமுறைகளைக் கூறித் தடுத்து விடுகிறது. அவர் மரணமடைகிறார். இவ்வாறு கதையாசிரியர் சந்திக்கும் ஒவ்வொரு மரணத்தின் பின்னாலும் இராணுவ ஆக்கிரமிப்பின் கொடிய கரங்கள் நீள்வதனைக் கதைகள் நெடுகக் காணலாம்.

முத்துலிங்கம் கதைகள் முற்றிலும் புலம்பெயர் வாழ்வு குறித்துப் பேசுவன. அக்கா, திகடசக்கரம், வம்சவிருத்தி, வடக்கு வீதி, மகாராஜாவின் இரயில்வண்டி ஆகிய சிறுகதைத் தொகுப்புகளை வெளியிட்டிருக்கும் முத்துலிங்கம் இருபது ஆண்டுகள் ஐக்கியநாடுகள் சபையில் பணியாற்றி ஓய்வுபெற்ற பிறகு தற்போது கனடாவில் வசித்து வருகிறார். இவர் கதைக் களங்கள் இலங்கை மட்டுமன்றிப் பல்வேறு நாடுகளைக் களமாகக் கொண்டவை. வெவ்வேறு நாடுகளில் வாழும் வெவ்வேறு வகையான

மனிதர்கள், அவர்களின் பண்பாடுகள் ஆகியவற்றை இவரின் கதைகளின் வாயிலாக நாம் அறிந்துகொள்ளலாம். ஆனாலும் அந்த வாழ்க்கை நமக்கு அந்நியப்படாமலிருப்பதுதான் இவரது கதைகளின் பலம். இவரின் எழுத்து வாசகர்களை மயக்கிக் கதையினுள் அழைத்துச் செல்லும் நுட்பமுடையவை.

## முடிவுரை

இலங்கைத் தமிழ் இலக்கியத்தை 1. போர்க்கால இலக்கியம், 2. பெண்ணிலைவாத இலக்கியம், 3. புலம்பெயர் இலக்கியம் என வகைப் படுத்தியுள்ளார் பேராசிரியர் கா. சிவத்தம்பி. மேற்கண்ட எழுத்தாளர்களின் படைப்புகளும் இம்மூன்று வகைப்பாடுகளுள் இடம்பெறுவதாகவே அமைகின்றன. மேலும் இப்படைப்புகள் வழியாகக் கீழ்க்காணும் முடிவு களுக்கு இக்கட்டுரை நம்மை அழைத்துச் செல்கிறது.

1. இலங்கைத் தமிழ்ப் புனைகதைகள், அரசின் பயங்கரவாதம் அப்பாவி மக்களின் மீது நிகழ்த்திய அதிர்வுகளை அறிந்துகொள்வதற்கான கருவிகளாக அமைகின்றன.
2. இலங்கையில் தமிழ்த் தேசியம் கடந்து வந்த உண்மைகளை இப் படைப்புகள்வழி அறிந்துகொள்ளலாம்.
3. இலங்கைத் தமிழர்களிடம் நிலவும் சமத்துவமின்மைகளை இப் படைப்புகள் உணர்த்துகின்றன.
4. இத்தனை நெருக்கடிகளுக்கிடையேயும் காதல் உணர்வுகள் மனித குலத்தை உயிர்ப்புடன் வைத்திருக்கின்றன என்பதனைச் சக்கரவர்த்தி போன்றவர்களின் கதைகளின் வாயிலாக அறியலாம்.
5. போர் என்பது உயிரிழப்பு மட்டுமன்று. மனித மனங்களைச் சிதைவு படுத்தும் கொடிய நோய் என்பதனை இக்கதைகள் நமக்கு உணர்த்துகின்றன.
6. இளைஞர்களிடம் ஏற்படுகின்ற விடுதலை வேட்கை அவர்களின் மனங்களில் எவ்வித மாற்றங்களை ஏற்படுத்துகின்றன என்பதனையும் இப்படைப்புகள்வழி அறியலாம்.
7. இலங்கைத் தமிழ் இலக்கியப் படைப்புகள் தமிழ் நாட்டு இலக்கிய வெளிக்குப் புதிய சாளரங்களைத் திறந்து வைத்திருக்கின்றன.

## துணை நூல்கள்

1. அகிலன், த., 2009, மரணத்தின் வாசனை, விடலி, சென்னை.
2. இரவி, அ., 2003, காலம் ஆகி வந்த கதை, விடியல், கோயம்புத்தூர்.
3. இரவி, அ., 2011, பாலைகள் நூறு, காலச்சுவடு, நாகர்கோவில்.

4. இராசரத்தினம், சு., 1995, தமிழீழம் நாடும் அரசும், தமிழ்க்கலைப் பண்பாட்டுக் கழகம், கனடா.
5. உமாவரதராசன், 2009, மூன்றாம் சிலுவை, காலச்சுவடு, நாகர்கோவில்.
5. கார்த்திகேசு சிவத்தம்பி, 2000, ஈழத்துத் தமிழ் இலக்கியத் தடம், மூன்றாவது மனிதன், கொழும்பு.
6. சக்கரவர்த்தி, 2000, யுத்தத்தின் இரண்டாம் பாகம், எக்ஸில், பிரான்ஸ்.
7. டானியல், கே., 2008, பஞ்சமர், அடையாளம், புத்தாநத்தம்.
8. முத்துலிங்கம், அ., 2004, மகாராஜாவின் ரயில்வண்டி, காலச்சுவடு, நாகர்கோவில்.
9. விமல் குழந்தைவேல், 2011, கசகறணம், காலச்சுவடு, நாகர்கோவில்.
10. ஷோபாசக்தி, 2002, கொரில்லா, அடையாளம், புத்தநத்தம்.
11. ஷோபாசக்தி, 2004, கருப்புப் பிரதிகள், சென்னை.

# மலேசியச் சிறுகதையின் மனமும் மணமும்

திரு. சே. கண்மணி
*சோகா இகெதா கலை மற்றும்*
*அறிவியல் மகளிர் கல்லூரி*
*சென்னை - 99*

*'யாதும் ஊரே யாவரும் கேளிர்'*

என்ற சங்க இலக்கியப் புலவனின் பரந்த மனப்பான்மையே, இன்று தமிழர்கள் கடல்கடந்து தமிழ் மணம் பரப்பிக் கொண்டிருக்கிறார்கள். அந்த வகையில்

*'இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்*
*வல்லரணும் நாட்டிற்கு உறுப்பு'* *குறள் 737*

என்ற வள்ளுவனின் வாக்கிற்கிணங்க நில வளமும், நீர் வளமும், மலை வளமும், கடல் வளமும், கானக வளமும் செழித்த நாடாகத் திகழ்வது மலேசிய மண்ணாகும். வளமும் , நலமும் கொண்ட மலேசிய மண்ணையும் தமிழ் மண்ணையும் இணைக்கும் பாலமாக விளங்குவது இலக்கியங்களே ஆகும்.

தமிழ் மனங்களோடு வாழும் மலேசியத் தமிழர்களின் நெஞ்சங்களில் பதிந்துள்ள உணர்வுகளை, உரங்களை வெளிப்படுத்தும் இலக்கியப் பதிவுகளை ஆவணப்படுத்துவது இன்றியமையாதது ஆகும். இந்நாட்டில் உரைநடை இலக்கியம் 1910ஆம் ஆண்டில் தொடங்கியதாக 'மலேசியத் தமிழரும் தமிழும்' என்ற நூலில் முரசு நெடுமாறன் அவர்கள் குறிப்பிடுகிறார். கவிதை, சிறுகதை, புதினம் என்ற இலக்கிய வரிசையில் மலேசிய விடுதலைக்கு முன்பே தொடங்கிய துறை சிறுகதைத்துறை ஆகும். சிறந்த சிறுகதைப் படைப்பாளராகவும், சிறுகதைத் தொகுப்பாளராகவும், கவிஞராகவும், கட்டுரையாளராகவும் திகழும் திரு.சை.பீர்முகமது அவர்களால் மலேசிய மண்ணில் படைக்கப்பட்ட சிறுகதைகளில் முகிழ்த்த மனங்களையும், மணங்களையும் வெளிப்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

### களமும் கதையும்

சை.பீர்முகமது அவர்களால் எழுதப்பெற்ற 'வெண்மணல்' மற்றும் 'பயாஸ்கோப்காரனும் வான்கோழியும்' என்ற சிறுகதைத் தொகுப்பு நூல்களை முதன்மைத் தரவாகக் கொண்டு இக்கட்டுரை அமைகிறது. இச்சிறுகதைத் தொகுப்பில் மொத்தம் 25 கதைகள் இடம்பெற்றுள்ளன. மனித நேயம், வறுமை, ஜப்பானியர்களால் ஏற்பட்ட துயரங்கள், மதுவினால் ஏற்படும்

தீமைகள், பெண்களின் நிலை, தியாகம், மனித மனத்தின் அழுக்குகள், நேர்மை போன்ற பல்வேறு சிக்கல்கள் கதைகளில் வெளிப்படுகின்றன.

மேலும் கம்யூனிஸ்டுகளின் பயமுறுத்தல்கள், பயங்கரவாதிகளை ஒழித்தல், உழைப்பின் மேன்மை, மூவினப் பாகுபாடு போன்றவைகளும் பேசப்படுகின்றன.

### படைப்பாளர் அறிமுகம்

மலேசிய மண்ணின் மனமானது உலகெங்கும் மணம் வீசவேண்டும் என்ற முனைப்போடு இலக்கியப் பணியாற்றி வரும் எழுத்தாளர் சை.பீர்முகமது அவர்கள் 1942ஆம் ஆண்டு கோலாலம்பூரில் பிறந்தார். 1959 முதல் இலக்கிய உலகில் பயணிக்கிறார். 1961இல் இவரது முதல் சிறுகதை சிங்கப்பூர் 'மாணவன்' இதழில் வெளிவந்தது. மலேசிய இராணுவத் துறையிலும், அரசாங்கத் துறையிலும் பணியாற்றிய இவர் தற்பொழுது தன் சொந்த நிறுவனத்தில் நிர்வாக இயக்குநராக பணியாற்றுகிறார். ஐம்பதாண்டுகால மலேசியத் தமிழ் எழுத்தாளர்களின் சிறுகதைகளைத் தொகுத்து 'வேரும் வாழ்வும்' என்ற தலைப்பில் மூன்று தொகுதிகளாக வெளியிட்டுள்ளார். மலேசியத் தமிழ்மணி மன்றத்தின் தலைவராகவும், மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் செயலராகவும் திகழ்ந்தவர். சிறந்த பேச்சாளராகவும் பன்முகத் தன்மை பெற்றவர்.

### கதைகளில் விதைக்கப்பட்டவை

தமிழ்ப் பணியில் தன்னை முழுமையாக இணைத்துக் கொண்ட பீர்முகமது அவர்களின் 'வெண்மணல்' தொகுப்பில் இடம்பெற்ற முதல் கதை சிவப்பு விளக்கு. இக்கதை மூவினப் பாகுபாட்டை உணர்த்துவதாக அமைந்துள்ளது. ஏழை பிச்சைக்காரர்களாக படைக்கப் பெற்ற மூவரில் சீனர் உழைப்பில் முன்னேறுவதாகவும், தமிழன் சோம்பலால் அனாதையாகவும், மலாய்க்காரர் ஏதோ அரசாங்க உதவி பெறுபவராய் படைக்கப்பட்டுள்ள பாங்கு தமிழனின் உண்மை நிலையை உணர்த்துவதாக உள்ளது. உதவும் உள்ளம் கொண்ட தமிழன் தான் செல்ல வேண்டிய வழி தெரிந்தும் கவனம் செலுத்தாத நிலையை " அனைவருக்கும் பச்சை விளக்கைக் காட்டிய அந்தக் கைகாட்டி அவனுக்கு மட்டும் சிவப்பு விளக்கைக் காட்டிக் கொண்டிருந்தது. காளிமுத்து பச்சை விளக்கு எரியும் பொழுது கவனப் பிசகாக இருந்துவிடுகிறான். அதனால் ஒரு நாளாவது அவன் கண்ணில் அந்தப் பச்சை விளக்கு தெரியவில்லை"(வெண்மணல், ப. 25) என்கிறார்.

சிவப்பு விளக்கு கதைபோலவே 'உண்டியல்' மற்றும் 'நெஞ்சின் நிறம்' ஆகிய கதைகளிலும் பிச்சைக்காரர்களைப் படைத்துள்ளார். இரண்டு கதைகளிலுமே பிச்சைக்காரர்களுக்கும் மனித நேயம் மிகுந்த உணர்வுகள் உள்ளதாகக் காட்டுகிறார்.

'அதனால் என்ன ?' என்ற கதையின் வழியாக தமிழன் ஒருவன் மயங்கிய நிலையில் சாலையில் கிடக்கிறான். அதனைப் பார்த்து, அங்கிருப்போர் கள்ளுண்டு தடுமாறுகிறான் என தாழ்த்திப் பேசுவதை நினைத்து, ஏன் நம் தமிழன் இப்படி பிழைப்புத் தேடி வந்த இடத்தில் நடந்து கொள்கிறான்? என்று நம்முள்ளும் ஒரு சிந்தனையைப் பிறக்க வைக்கிறார் ஆசிரியர். ஆனால் அவன் பசி மயக்கத்தில் இருக்கிறான். அவனைத் தவறாகப் புரிந்து கொண்டு, பிற நாட்டினர் நம் தமிழ் இனத்தையே குறை கூறுகிறார்கள். தமிழன் மானம் இழக்கும் நிலை வரும்போது தன் வறுமையை விட தன் இனத்தைக் காக்க வேண்டும் என்ற எண்ணமே, ஒரு தமிழனுக்கு மேலோங்கி நிற்பதாக படைத்துள்ளமை அவரின் தமிழ் உள்ளத்தைக் காட்டுகிறது.

ஆண்டவனுக்கு ஆண்டவன் : என்ற இக்கதை ஜப்பானியர்களின் ஆதிக்கத்தில் இருந்த மலேசியத் தமிழர்களின் துயரங்களை வெளிப்படுத்துவதாகவே உள்ளது. இக்கதை (Varlaarru Nhikazvukalai) வரலாற்று நிகழ்வுகளை படம்பிடித்துக் காட்டுவதாகவே உள்ளது. இரண்டாம் உலகப் போருக்கு பிந்தைய மலேசியா, ஜப்பானியர்களின் பிடியில் இருந்தது. சிறுசிறு குற்றங்களுக்குக் கூட தலையை சீவும் கொடுமைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த காலம். ஜப்பானியர்களின் 'மரணம்' என்ற அடைமொழியோடு கூறப்படும் 'மரண இரயில் பாதை' அமைப்பதில் மக்கள் பட்ட இன்னல்கள் ஏராளம் என்பதை வரலாற்று ஆய்வாளர்களின் வழி அறியலாம். ஜப்பானியர்கள் சயாம் வழியாக மலாயாவுடன் இணைக்கும் 'மரண இரயில் பாதை'(Death Railway) என்று சொல்லப்படும் தொடர்வண்டிப்பாதை அமைக்கும் திட்டத்தில் தமிழர்களை வலிய இழுத்துச் சென்றுள்ளனர். அவ்வாறு கொண்டு செல்லப்படுபவர்கள் மிகுந்த கொடுமைகளுக்குப் பின் கொல்லப்படுவார்கள் என்பது நிச்சயம்.

"வயிரம் பாய்ந்த உடல் கொண்ட இளைஞர்கள் 60 ஆயிரம் பேர் (இஃது ஒரு தோராயமான எண்ணிக்கைதான்) மாண்டனர் எனில் சமுதாயம் உற்ற இழப்பு கொஞ்சமா? பல்லாயிரம் குடும்ப மகளிர் கைம்பெண்டிர் ஆயினர்; பல்லாயிரம் கன்னியர் எதிர்காலக் கணவரை இழந்தனர். சமுதாயத்தின் முதுகெலும்பே உடைந்து போனது போன்ற - இமயம் மீறிய

**துயரத்**தை, இக்காலகட்டம் ஏற்படுத்திற்று." இவ்வாறு முரசு நெடுமாறன் **அவர்கள்** தன் 'மலேசியத் தமிழரும் தமிழும்' என்ற நூலில் குறிப்பிடுகிறார்.

இவ்வாறான மரண இரயில் பாதை அமைக்கும் பணிக்காக ஜப்பானியர்களால் இழத்துச் செல்லப்படுகிறான் சந்தானம். அவ்வாறு இழுத்துச் செல்லப்படுபவர்கள் மீண்டும் வருவதில்லை என்பதை நன்கு உணர்ந்தவன். தனக்குப் பிறந்த குழந்தை ஆணா? பெண்ணா? என்பதைக் கூட அறிய இயலாமல் அவர்களின் பிடியில் சிக்குகிறான். அவர்களிடமிருந்து தப்பிக்க முயலும் வேலையில் பசியாலும், சோர்வாலும் மயங்கிய அவன் அவர்களிடம் பிடிபடுகிறான். கர்னல் இம்மாசகி என்ற இராணுவ அதிகாரி கொடுக்கும் தண்டனைகள் மரணத்தில்தான் முடியும். மிகவும் கொடூரமான முறையில் அவனது தண்டனைகள் இருக்கும். இவற்றையெல்லாம் தன் கதையின் வழியாக உணர்த்திச் செல்லுகிறார் ஆசிரியர். கடைசியில் அந்த கொடூரமான விலங்கு போன்ற இம்மாசகியே அவனைத் தப்பிக்க வைப்பதாக கதையினை கொண்டு செல்லும் பாங்கு படிப்போர் உள்ளத்தை நெகிழ்விப்பதாக உள்ளது. இக்கதை போன்றே மற்றுமொரு கதை 'வெடித்த துப்பாக்கிகள்'. கம்யூனிஸ்டுகளை வேட்டையாடப் புறப்படும் இராணுவப் படையில் மூன்று பேர் சேர்ந்து ஒரு அதிகாரியைக் கொல்ல முற்பட அந்த அதிகாரியே அவர்களை கம்யூனிஸ்டுகளிடம் இருந்து காப்பாற்றுவதாக அமைத்துள்ளார். இக்கதைகள் அனைத்தும், மலேசியாவின் வரலாற்றை பிரதிபலிப்பவையாக உள்ளன.

மரணம் என்ற இரண்டு பக்க சிறுகதை மரணத்தைக் கண்டு அஞ்சாதவர்கள் எவரும் இல்லை. இராணுவத்தில் மரணத்தின் எல்லையில் நின்று போராடியவர்கள் கூட நிஜ வாழ்க்கையில் மரண பயம் என்பது உண்டு என்பதை உணர்த்துகிறார்.

'அசுணப் பறவை' என்ற கதை மிகவும் வித்தியாசமான ஒரு படைப்பு. இசையின் அருமையை அதில் வெளிப்படும் ஆன்மீக உணர்வினை கதை உணர்த்திச் செல்லும் பான்மை கதை படிப்போரையும், இசை அறியாதோரையும் இசையின் மேல் ஒரு ஈர்ப்பினை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

> "சாமி அசுணமுன்னு ஒரு பறவை இருந்துச்சு! அபசுரங்களைக் கேட்டா மேலே பறந்து போய் அப்படியே கீழே விழுந்து இறந்து விடுமாம்! ஒரு பறவை இனத்துக்கு இருக்கும் இசையறிவு கூட மனிதனுக்கு இல்லையா சாமி?"
>
> (பயாஸ்கோப்காரனும் வான்கோழிகளும்,பக்-110).

'எலும்புக்கூடு' எனும் கதை தாழ்ந்த சாதிக்காரர்கள் என்று சொல்லி ஒடுக்கபட்ட சமூகத்தின் அவலங்களை விளக்குகிறார் ஆசிரியர். தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர் தொழிற்சங்கத் தலைவராக வந்ததை விரும்பாதவர்கள் கொன்றுவிடுகிறார்கள். அந்த ஆவி பேசுவதாகவே கதையினை அமைத்துள்ளார். ஆவியின் வரிகளாக ஆசிரியர் " நூற்றாண்டு காலமாக நாங்கள் உரத்துப் பேச அனுமதிக்கப்பட்டதில்லை! அதான் பழக்க தோசம்! இறந்து ஆவியானாலும் இன்னும் அந்த அடிமைத்தனம் எங்களை விட்டுப் போய்விடவில்லை!" என்றும் அடுத்த ஒரு பத்தியில் "அங்கே நடக்கும் அடக்குமுறைகளும் வேலைக்கேற்ற கூலி கிடைக்காததும் எனக்குள் ஆத்திரத்தை வரவழைத்தது. கோபம் மனிதனின் எதிரி என்று என் வாத்தியார் அடிக்கடி சொல்லுவார். ஆனால் கோபம் கொள்ளாத-எதிர்த்துக் கேள்வி கேட்காத சமூகம் எப்பொழுதுமே முதுகில் பிறரின் சுமைகளைச் சுமந்தே வாழ வேண்டும். என் முதுகைப் பார்த்தாயா? கூன் விழுந்தது போல் இருக்கிறது. எனது மூதாதையர் சுமந்த சுமையின் அடையாளம் அது! பரம்பரையாகச் சில நோய்கள் தொடர்ந்து வருவது போல இந்த அடிமைச் சுமைகளும் தொடர்கின்றன" என்று அவர்களின் நிலையை விளக்கி ஆழ்ந்து சிந்திக்க வைக்கிறார்.

'ஆண்மை' என்ற கதையின் வழி திருநங்கையின் மன உணர்வுகளையும் வெளிப்படுத்துகிறார். ரௌடிகள் திருந்தி வாழ நினைத்தாலும் இச்சமூகம் அவர்களை திருந்தவிடாமல் தடுப்பதிலேயே குறியாக இருக்கிறது என்பதையும் திருந்த வேண்டும் என்ற எண்ணம் உறுதியாக இருந்தால் திருந்தலாம் என்பதை 'வாலி வதை' என்ற கதையின் வழி விளக்குகிறார்.

## பெண்பாத்திரப் படைப்புகள்

'மாம்பழத்து வண்டு' என்ற கதை விதவை மறுமணத்தில் உள்ள சிக்கலை உணர்த்துகிறது. ஆண்கள் பெண்களை ஒரு போகப் பொருளாகவே பார்க்கிறார்கள். பெண்களின் உணர்வுகளை மதிப்பதே இல்லை. திருமணமான ஒரே நாளில் விதவையான பெண்ணை சீர்திருத்தவாதியாக தன்னை காட்டிக் கொள்ளும் ஒருவன், விதவையைத்தான் நான் மணம் புரிவேன் என்று கூறி அவள் மனதில் ஆசையை வளர்த்துப் பின் வேறு ஒரு பெண்ணோடு தொடர்பு கொண்டுள்ளான். இதனை அறிந்த அவள் அவனை விட்டுப் பிரிந்து செல்கிறாள். 'பெண் என்ற செடிக்கு நிச்சயம் வேலி தேவை!' அந்த வேலி

இரும்பால் ஆனதாக இல்லாவிட்டாலும் சாதாரணக் குச்சிகளால் ஆனதாய் இருந்தாலும் போதுமானது.'

(வெண்மணல்,கதை-மாம்பழத்து வண்டு பக்;75)

என்ற வரிகள் பெண்களின் நிலைமையை உணர்த்துகிறது. 'உக்கிரப் பாம்பு' என்ற கதையில் பெண்களிடம் உள்ள பொறாமையைச் சுட்டிக் காட்டிப் பின் பொறாமை கொண்ட பெண் தன் அறியாமையை நினைத்து திருந்துவதாகப் படைத்துள்ளார். அதில் பொறாமையைப் பாம்பாகவே காட்டுகிறார். பெண் தன் கல்விக்காக எவ்வளவு போராடுகிறாள் என்பதை உணர்த்துவது 'பாதுகை' என்ற கதை. பள்ளிக்குச் செல்வதற்கு தேவையான ஒரு செருப்பினை வாங்குவதற்குப் போராடும் சிறுமியின் நிலை. செருப்பு வேண்டும் என்று அடம்பிடித்தால் படிக்கவே வேண்டாம் என்று தடை போடும் தந்தை மற்றும் அவளது அண்ணன் அவர்களுக்குத் தேவையான சினிமா படத்தை காசு வாங்கிக் கொண்டு வந்து தொலைக்காட்சியில் பார்க்கிறார்கள். பெண்கள் எப்பொழுதுமே எல்லா இடங்களிலும் அடிமையாகவே காணப்படுகிறார்கள். தங்களது அடிப்படைத் தேவைகளுக்குக் கூட அவர்கள் ஆண்களின் அனுமதியைப் பெற வேண்டிய நிலையே உள்ளது என்பதை வெளிப்படுத்தியுள்ளார். 'மருமகன்' என்ற கதையில், கண்டிராக்டர் கண்ணப்பனின் கீழ்க்குணம் அறியாமல் தன் மகளுக்கு மணமகனாக வந்தால் நன்றாக இருக்கும் என்று என்னும் தாய்மை உள்ளம் அவர்கள் இருவரும் ஒரே காரில் வருவதைப் பார்த்து பிறர் புறம் கூறும் பொழுது 'உலகத்தில் உள்ள சுவைகள் ஆறுதான். ஆனால் மனிதன் ஒரு சுவையை அதிகமாக்கி ஏழாக்கிக் கொண்டான். அந்த ஒரு சுவைதான் பிறரைப் பற்றி புறங்கூறும் ஏழாவது சுவை. என்று யாரோ ஒருவர் எப்பொழுதோ கூறிய வார்த்தைகள் கிழவியின் நினைவிற்கு வந்தது,' -(வெண்மணல் பக்;94) என்று ஆசிரியர் உரைப்பது தாய் தன் மகள் நன்றாக வாழவேண்டும் என்பதை மட்டுமே எண்ணுகிறாள். மகளிடம் தவறாக நடக்க முயற்சிக்கும் போது அவன் தங்கள் வறுமையைப் பயன்படுத்தும் நிலையை எண்ணி "சீ உயர்ந்த இடம்; தாழ்ந்த உள்ளம்" என்று அவள் கூறுவது ஆண்களின் உள்ளப் போக்கைக் காட்டுகிறது. 'நிறங்கள்'எனும் கதை பாட்டியின் உழைப்பில் வளர்ந்த பேரனின் அலட்சியம், தன்னை அனாதையாக்கி விடாமல் வளர்த்த பாட்டியை அனாதையாக்கி அவளைத் தன் வீட்டில் வைத்துக் கொள்ள மறுப்பது, ஒரு பெண் எவ்வளவுதான் அன்பு வைத்து, தன் உழைப்பை எல்லாம் கொட்டி வளர்த்தாலும், கடைசி காலத்தில் அவளது உதவி மட்டுமே தேவைப்படுகிறது. அவள் தேவைப்படவில்லை என்பதைத் தன் வரிகளாலும் அதில் தன் ஆதங்கத்தையும் காட்டுகிறார் ஆசிரியர்.

'மாம்பழத்து வண்டு' என்ற கதையைப் போன்றதே 'அக்கினி ஸ்தம்பனம்!'- இக்கதை தாய்மையின் மேன்மையை விளக்குகிறது. பிள்ளைகளால் கைவிடப்பட்ட ஒரு தாய் அனாதை இல்லத்தில் இருந்து கொண்டு தன்மகனையே நினைத்து உருகுகிறாள். தன்னைக் காண வரவில்லை என்ற வெறுப்பில் அக்கினி ஸ்தம்பனம்! அக்கினி ஸ்தம்பனம்! என்று முணுமுணுத்துக் கொண்டு இருக்கிறாள். அது என்ன வார்த்தை விளங்கவில்லையே என்றபோது,

> அக்கினி ஸ்தம்பனமுன்னு சொன்னா நெருப்பு சுடாமல் இருக்கச் செய்யும் வித்தைன்னு சொல்லுகிறாள்.அந்த வார்த்தையை ஏன் சொல்லிக்கிட்டிருக்கீங்க என்ற போது 'நான் செத்தபிறகு என் மவன் எனக்குக் கொள்ளி வைக்கக் கூடாது. அப்படியே அவன் வைச்சாலும் அந்த நெருப்பு என்னைச் சுட்டெரிக்கக் கூடாது'
>
> (பயாஸ்கோப்காரனும் வான்கோழியும்' கதை,
> அக்கினி ஸ்தம்பனம் ப.103)

என்ற வரிகளும், மேலும் அக்கதையில் 'கொள்ளி வைக்க மட்டுமா நமக்குப் புள்ளே.. கொண்டாடுறதுக்கும் மவன் இருக்கணுமுன்னு நாமெ நினைக்கிறதில என்ன தப்பு?' என்பதும், அடுத்ததாக 'முன்னமேயே நெஞ்சுல்லெ நெருப்பை வைச்ச பாவி மவனுங்க பிறகெ உடம்பிலெயுமா நெருப்பை வைக்கனும்?' என்ற வரிகளில் எல்லாம் பெண்களின் வலியும், வலிமையும் தெரிகிறது. 'அந்த மரங்களும் பூப்பதுண்டு' என்ற கதை யாரும் தொட்டுப் பார்க்காத ஒரு படைப்பாக உள்ளது. பல வருடங்களாக வயதிற்கு வராத ஒரு பெண்ணை பற்றிய கதையாக வடித்துள்ளார். அப் பெண்ணை சில சிறுவர்கள் தங்களுடன் விளையாட அழைத்துச் செல்லும் பொழுது ஒருவர் அவர்களிடம், "எங்கடா கிளம்பீட்டீங்க. இந்த காய்க்காத மரத்தை ஏண்டா கூட்டிக்கிட்டுப் போறீங்க? இது கவைக்கி உதவாதடா?" -என்ற சொற்கள் அப்படிப்பட்ட பெண்களின் உள்ளங்களை எப்படி காயப்படுத்தும் என்பதை அறிய முடிகிறது.

**உவமைகள்**

1. 'மரத்திலிருந்து உதிர்ந்த ரப்பர் இலைகள் வெய்யிலில் காய்ந்து சருகாகிக் கிடந்தன. அரப்பர் மரங்கள் எல்லாம் ஆசைகளைத் துறந்த ஞானிகளைப்போல் தங்கள் இலைகளைத் துறந்து மொட்டையாக

நின்று கொண்டிருந்தன. சில மரங்களில் 'துறவிகளுக்கும் ஆசை 'துளிர்' விடுவதைப்போல் ஆங்காங்கே துளிர்விட்டிருந்தன!' (வெண்மணல்,கதை-மாம்பழத்து வண்டு, ப. 62).

2. "தோட்டத்தில் வேப்பிலைகள் பறிக்கப்பட்டு அவை முற்றும் துறந்த முனிவர்கள் போல் வானத்தில் கிளைகளைப் பரப்பி மோனத் தவத்தில் எதையோ தேடிக் கொண்டிருந்தன. (பயாஸ்கோப்காரனும் வான்கோழியும்', ப.172)

மனம் கொள்ளும் வரிகள்

3. 'எதிலும் அவசரத்தைக் கடைப்பிடிப்பவர்கள் தங்களுக்கு முன்னே உள்ள நல்லது கெட்டதுகளைப் பார்ப்பதே இல்லை' -(வெண்மணல் ப. 85).

4. 'ஒன்று என்னும் எண் எப்படி காலம் காலமாகத் தோன்றியதிலிருந்து தனியாக பிரமச்சாரியாக இருக்கிறதோ அதே போல பிரமச்சாரியாகவே பெருமாள் கிழவன் காலத்தைக் கடத்திவிட்டான்.' (வெண்மணல் ப. 105).

5. 'உதைபடத்தான் பந்துக்கு உரிமை; உதைக்க உரிமையில்லை.' (வெண்மணல், ப. 74).

6. 'செத்தாடு கால் பணம்; சுமைகூலி முக்கால் பணம்' (பயாஸ்கோப்காரனும் வான்கோழியும்' கதை - ஆண்மை, ப. 89).

7. 'கோயிலுக்குக் கோட்டுசூட்டு போட்டுக்கொண்டு வருகிற வனெல்லாம் உத்தமனுமல்ல, அழுக்குச் சட்டையோடு வருபவ னெல்லாம் கெட்டவனுமல்ல.' (பயாஸ்கோப்காரனும் வான்கோழியும்'- கதை - வாலி வதை, ப. 92).

8. 'இருக்கும் எல்லாவற்றையும் இழந்தால்தான் புதியதாக அதைவிட மேலானதாகக் கிடைக்கும்.' (பயாஸ்கோப்காரனும் வான்கோழியும்'- கதை - தேவத் தேர், ப.146).

9. "விடுபடு சகலவற்றிலிருந்தும் விடுபடு. பாரங்கள் குறைந்தால்தான் பயணம் சுலபமானதாக இருக்கும். உன் சுமைகளை நீயே தூக்க வேண்டும்.கூலிக்கு ஆளமர்த்த முடியாது. அவனவன் பாரங்களே அவனவனைத் தடுமாறச் செய்துகொண்டிருக்கும் பொழுது உன் பாரங்களை எவன் சுமப்பான்?" (பயாஸ்கோப்காரனும் வான்கோழியும்', கதை - தேவத் தேர், ப. 148).

**மலேசிய மொழி மணம்**

"மாலை நாலரை மணிக்கு 'சௌக்கிட் ரோட்' வெள்ளை மாளிகையில் ஒரு 'பயிண்ட்' அடிக்க வந்து விடுவான்." (வெண்மணல், ப. 18).

"என்னண்ணே மீ போடவா?" மீ வண்டிக்காரன் கரண்டியை இரண்டு முறை இரும்புச் சட்டியில் வேகமாகத் தட்டி ஓசை எழுப்பியவாறு என்னை அமர்க்களமாகப் பார்க்கிறான்.(வெண்மணல், ப. 80)

"கில்லிங் மீனோம்; சிக்கிப்போன் மாபோலா!" (வெண்மணல், ப. 81).

"கில்லிங் மீனோம்; கொக்கோகோலாபுன் மாபோலா!" (வெண்மணல், ப. 81).

"இப்பொழுது 'நாசிகண்டா' விற்கும் காதர் பாட்சா கடையில் எடுபிடி வேலை செய்கிறான்." (பயாஸ்கோப்காரனும் வான்கோழியும்', ப. 84).

"ரிமூவ் கிளாஸ் மாணவியான தனக்கு இந்த அவமானம் வந்திருக்கக் கூடாது." (பயாஸ்கோப்காரனும் வான்கோழியும்', ப. 69).

நிறைவுரை

ஆய்வின் சுருக்கம் கருதி மேலோட்டமான பார்வையாகவே ஆய்வுக் இக்கட்டுரை படைக்கப்பட்டுள்ளது.

மலேசியச் சிறுகதை உலகில் மிகச் சிறந்த கலைப் படைப்புகளை வெளியிட்டுள்ள சை. பீர்முகமது அவர்கள் நாடு, இனம், மொழி,சமயம், மதம் கடந்து தன் கதைகளை எழுதியுள்ளார். அவரது படைப்புகளான பிறவற்றையும் விரிவாக ஆராய்தல் மிக இன்றியமையாதது.

கருவி நூல்கள்

1. வெண்மணல், சை. பீர்முகமது, (சிறுகதை தொகுப்பு), அன்னம் பிரைவேட் லிமிடெட்,1984, சிவகங்கை அச்சாக்கம், அகரம், சிவகங்கை.
2. பயாஸ்கோப்காரனும் வான்கோழியும், சை. பீர்முகமது (சிறுகதை தொகுப்பு) தங்கமீன் பதிப்பகம், 2008, சென்னை.
3. மலைசியத் தமிழரும் தமிழும், முரசு நெடுமாறன், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் 2007, சென்னை.

# மலேசியத் தமிழ்ச் சிறுகதைகளும் கருப்பொருளும்

முனைவர் அருள்செல்வன் இராஜு
*மலேசிய சபா பல்கலைக்கழகம்*
*கோத்தா கினபாலு*

*முன்னுரை*

மலாயாவிற்கும் இந்தியாவிற்கும் இடையிலான தொடர்பு ஆங்கிலேயர் இந்தியக் குடிமக்களை இங்குக் குடியேற்ற முயற்சித்தக் காலகட்டத்தில் தொடங்கியது. 1786 ஆம் ஆண்டு பினாங்கைத் தங்களின் ஆட்சிக்குட் படுத்திய பிறகு, பெரிய அளவிலான குடியேற்றங்கள் தொடங்கின (ஸ்டெசன், 1980:16). இவ்வாறு வந்தவர்களில் பெரும்பாலோர் தோட்டத் தொழிலாளர்கள் ஆவர். இவர்கள் அனைவரும் உடல் உழைப்புத் தொழிலாளிகள். ஆக, இவர்களின் வாழ்க்கைச் சூழலில் உழைப்பு மட்டுமே முக்கியத்துவம் பெற்றது. இவர்களை நிரந்தரமாக மலாயா தோட்டத் தொழிலாளிகளாக்க, இங்குத் தமிழ்க் கல்வி தொடங்கப்பட்டது. அப்படி வந்த தமிழர்களில் ஓரளவு கல்வியறிவு பெற்றிருந்த ஒரு சிலர், வாழ்க்கையோடு தாங்கள் சார்ந்த சமயம், மொழி ஆகியவற்றின் மேம்பாட்டுக்குத் தம்மால் முடிந்தவரை பங்காற்றினர். சிலர் பத்திரிகைகளும் நடத்தினர். இது தமிழ் இலக்கியத்தின் தோற்றத்திற்கும் அடித்தளம் அமைத்துத் தந்தது.

மலேசியத் தமிழ் இலக்கியம் ஏறக்குறைய நூற்று இருபது ஆண்டு கால வரலாற்றைக் கொண்டது. கவிதை, நாவல், சிறுகதை, நாடகம் முதலியவை அதன் வடிவங்களாகும். இவற்றுள் முதலில் தோன்றியது கவிதையாகும். தொடக்கக் கால மலேசியத் தமிழ் இலக்கியம் வடிவங்கள் தமிழகம், இலங்கை இலக்கியங்களின் தொடர்ச்சியாகவே விளங்கின. இதனைப் பற்றிக் கருத்துரைக்கும் போது,

> ஒரு ரோஜாச் செடியிலிருந்து வெட்டி எடுக்கப்பட்ட கிளையொன்றை வேறு ஓர் இடத்தில் பதியமிட்டு ஒரு புதிய செடியாக அது பூத்துக் குலுங்குவதைப் போன்றது

என்றும்,

> மணமுடித்துப் புதிதாகத் தங்களுடைய வாழ்க்கையைத் தொடங்கும் புது மணமக்களின் வாழ்க்கையைப் போல
>
> (தண்டாயுதம், 1983 : 111)

என்று முனைவர் தண்டாயுதம் குறிப்பிடுகின்றார்.

மலேசியத் தமிழ் இலக்கியத்தில் முதலில் தோன்றியது கவிதையாக இருந்தாலும், இன்று முன்னணி வகிப்பது சிறுகதையாகும். அவ்வகையில் இக்கட்டுரையின் நோக்கம் மலேசியத் தமிழ்ச் சிறுகதைகளின் கருப்பொருளின் வளர்ச்சியைக் காண்பதாகும்.

## மலேசியத் தமிழ்ச் சிறுகதை இலக்கியம் - ஒரு கண்ணோட்டம்

மலேசியத் தமிழ்ச் சிறுகதை இலக்கியம் என்பது ஏறக்குறைய எண்பத்து மூன்று ஆண்டுக் கால வரலாற்றைத் தன்னகத்தே கொண்டது. இதன் தோற்றம் 1930 என்று குறிக்கப்படுகின்றது. இவ்வாண்டில்தான் முதல் சிறுகதைத் தொகுப்பான 'நவரச கதாமஞ்சரி; இது இனிய கற்பிதக் கதைகள் என்னும் தொகுப்பில் வெளியிடப்பட்டது (ந. சுப்பிரமணியம், 1980:4). இத்தொகுப்பில் ஐந்து சிறுகதைகள் அடங்கியிருந்தன.

மலேசியத் தமிழ்ச் சிறுகதை இலக்கியம் தொடங்கப்பட்ட காலத்திலிருந்து பல கால கட்டங்களைக் கடந்து வந்துள்ளது. மலேசியத் தமிழ்ச் சிறுகதைகளை ஆய்வு செய்த ந.பாலபாஸ்கரன் இக்கால கட்டங்களைத் தொடக்கக் காலம் (1930 - 1941), ஜப்பானியர் காலம் (1942 - 1945), கதை வகுப்பு முடியும் காலம் (1946 - 1952), முற்சுதந்திர காலம் (1953 - 1957), பிற்சுதந்திர காலம் (1958 - 1969), மறுமலர்ச்சிக் காலம் (1970 - 1978) எனப் பிரித்துள்ளார். அன்னாரின் ஆய்வு 1980 வரையிலான சிறுகதைகளை மட்டுமே உள்ளடக்கியது.

இக்கட்டுரையோ மலேசியத் தமிழ்ச் சிறுகதைகளின் காலத்தைத் தொடக்கக் காலம் (1930 - 1941), ஜப்பானியர் காலம் (1942 - 1945), சுதந்திரத்திற்கு முன் (1946 - 1957), சுதந்திரத்திற்குப் பின் (1958 - 1969) எனப் பிரிக்கிறது. சுதந்திரத்திற்குப் பிந்திய காலப் பகுதியை மேலும் 1970 முதல் 1980, 1981 முதல் 2000 மற்றும் 21 நூற்றாண்டு தொடக்கம் எனப் பகுக்கலாம். இக்கால கட்டங்களில் மலேசியத் தமிழ்ச் சிறுகதையின் கருப்பொருள்கள் வளர்ச்சி அல்லது மாற்றங்களைக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## 3.0 சிறுகதைகளின் கருப்பொருள்கள்

### 3.1 தொடக்கக் காலம் (1930 - 1940)

தொடக்கக் காலச் சிறுகதைகளில் தமிழக, இலங்கைப் படைப்புகளின் தாக்கங்கள் அதிகம் இருந்தன. இக்கால எழுத்தாளர்களுள் பெரும்பாலோர் தமிழகத்தில் கல்வி கற்றவர்களாக இருந்ததால், இத்தாக்கம் இயற்கையாக அமைந்துவிட்டது. கதைகள் பெரும்பாலும் இரட்டை தலைப்புகளைக்

கொண்டிருந்த வேளையில், பின்புலமும் தமிழகத்தை ஒட்டியே இருந்தது. இது இக்காலகட்டப் படைப்புகளின் சிறப்பு இயல்பாக அமைந்தது.

இச்சிறுகதைகள் பெரும்பாலும் அறவுரை பகரும் பாணியிலேயே இருந்தன. இதன் கருப்பொருள்களாகச் சாதி ஒழிப்பு, விதவை மறுமணம், வரதட்சணை, மதுவிலக்கு, சமயப் பற்றுப் போன்றவை பிரதானமாக இருந்தன. இக்கால எழுத்தாளர்களைப் பற்றிக் குறிப்பிடும் டாக்டர் தண்டாயுதம், அவர்களுக்கிடையே 'மணிக்கொடி' இதழின் தாக்கம் இருந்தது என்கின்றார் (தண்டாயுதம், 1972/73: 47). அதே தருணத்தில் மலேசியச் சூழலைக் கொண்டும் சில படைப்புகள் வெளிவந்தன. அவை அன்றைய மலாயாவைக் களமாக்கி சமூகவியலையும் தினசரி வாழ்க்கை சம்பவங்களையும் அடிப்படையாக கொண்டிருந்தன. எடுத்துக்காட்டாக 'மோல் மீன் அல்லது மோசக்கார டாக்டர்', 'கண்ணிழந்த கபோதி', 'கோலாலம்பூர் கோகுல விலாஸ்', 'பாத்திமாவின் தளுக்கு' (கிருஷ்ணன் மணியம் , 1993: 52) போன்ற சிறுகதைகளைக் குறிப்பிடலாம். இவற்றுள் சில கதைகளில் மலாயாவின் பிற இனத்தவர்களும் பாத்திரங்களாக வலம் வந்தனர்.

இருபதாம் நூற்றாண்டின் முதல் முப்பது ஆண்டுகள் தமிழ்ப் படைப்பிலக்கியத்தின் இருண்டக் காலம் எனக் கருத்துரைக்கப்படுகிறது. டாக்டர் தண்டாயுதம் 'தமிழ் நாவல்களைப் பொறுத்த வரையில் திசை தவறிப் போன காலம்' (டாக்டர் தண்டாயுதம் ,1975: 58) என்கின்றார். இது துப்பறியும் நாவல்களின் தாக்கத்திற்கு உட்பட்டிருந்த காலமாகும். இத்தாக்கம் மலேசியச் சிறுகதையையும் தாக்கியது. உதாரணமாக, மோல் மீன் அல்லது மோசக்கார டாக்டர் கதையைக் குறிப்பிடலாம் (கிருஷ்ணன் மணியம் , 1993 : 52).

## ஜப்பானியர் காலம் (1940 - 1945)

1940 ஆம் ஆண்டு தொடக்கம் உலகம் இரண்டாம் உலக யுத்தத்தின் தாக்கத்தில் சிக்குண்டிருந்த காலமாகும். மலாயா ஜப்பானியர் ஆட்சிக்குட்பட்டிருந்த காலம். மலேசியத் தமிழ் இலக்கியமும், குறிப்பாகச் சிறுகதை உலகமும் தேக்கநிலையைக் கொண்டிருந்த காலம். மக்களின் வாழ்க்கை போராட்டங்களுக்குட்பட்ட வேளையில், பசி, பட்டினி, வன்முறை, நோய்கள் என்ற துன்பக் கடலில் சிக்கி அல்லற்பட்டுக் கொண்டிருந்தனர். ஆனால், இதற்கு மத்தியிலும் தமிழுக்குக் கிடைத்த சுதந்திரமான சூழல், சிறுகதை வளர்ச்சிக்கும் சிறிது வாய்ப்பு வழங்கியது. இதற்கு இந்தியாவில் சுபாஸ் சந்திரபோஸ் மேற்கொண்ட ஆங்கிலேயர் எதிர்ப்புப் போராட்டம் காரணமாக அமைந்தது.

ஜப்பானியர்கள் தங்கள் கருத்துகளை மக்களிடையே பரப்ப தமிழ்ப் பத்திரிகைகளை நடத்த அனுமதி அளித்தனர். இச்சூழலில் வெளி வந்த யுவபாரதம் (வார இதழ்), சுதந்திர இந்தியா (தின இதழ்), சுதந்திர உதயம் (வார இதழ்) முதலிய இதழ்கள் செய்திகளை வெளியிட்டதுடன் படைப்புகளையும் வெளியிட்டன. அவை சுமார் ஐம்பது சிறுகதைகளை வெளியிட்டன (ந. சுப்பிரமணியம், 1981:11-31). இக்காலத்திய சிறுகதைகளில் நேதாஜியின் கொள்கையும் விடுதலை வேட்கையும் முக்கிய இடம் பெற்றன. அந்த வகையில் இந்திய சுதந்திரத் தாகம் முக்கியக் கருப்பொருளாக அமைந்தது. இதைத் தவிர காதல், மதுவிலக்கு, வறுமை, வேலையின்மை, பிச்சை எடுத்தல், கற்பு, ஏனைய சமூகப் பிரச்சினைகளையும் கருப்பொருள்களாகக் கொண்டு சிறுகதைகள் படைக்கப்பட்டன. ஆனால், பெரும்பாலான படைப்புகளில் தமிழ்நாடே பின்னணியாக இருந்தது.

தீபாவளி பரிசு (ராஜகோபாலன்), எப்பொழுது காண்பேன் (அமுதன்), வீரக்கட்டழகர் (சிவன்), மறதியால் இறுதி (பாசமாணிக்கம்), கனகவல்லியின் தியாகச் சேவை (சிங்காரம்), வீரையாவின் தியாகம் (பிச்சை முத்து), குடியின் கோரம் (கவி), பிச்சைக்காரன் (கதி), கன்னியின் கண்ணீர் (சக்தி மோகன்) முதலிய சிறுகதைகள் இக்காலகட்டத்தில் வெளிவந்தவை (கிருஷ்ணன் மணியம் , 1993: 54). இக்காலப் படைப்புகளைப் பற்றிக் குறிப்பிடும் கிருஷ்ணன் மணியம், அவை கருப்பொருளுக்கு மட்டுமே முக்கியத்துவம் தந்தன என்கிறார்.

### சுதந்திரத்திற்கு முன் (1946 - 1957)

இந்தக் கால கட்டம் இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் தொடங்கி, மலாயா விடுதலை வரையிலான ஏறக்குறைய பதினொரு ஆண்டுகளை உள்ளடக்கியது. இதில் ஜப்பானியர் மலாயாத் தமிழர்களின் வாழ்க்கையில் ஏற்படுத்திய அவலங்களையும் வடுகளையும் காணலாம். போரின் காரணமாகச் சிதறிப் போன குடும்பங்களும் உறவுகளும் ஏற்படுத்திய காயங்கள் பெரிய பிரச்சினையாக உருவெடுத்தது. போர்க் காலப் பாதிப்புகளைக் காட்டும் படைப்புகளாக உருவெடுத்த சிறுகதைகள், தங்களுக்கென்று ஓர் அடையாளத்தை உருவாக்கிக் கொள்ள முனைந்தது. ஆக, இது மலாயா எழுத்தாளர்கள் தங்கள் வாழ்க்கையைப் படைப்புகளில் காட்ட முற்பட்ட காலகட்டம் எனலாம்.

1950களின் தொடக்கம் மலேசியச் சிறுகதை வரலாற்றில் முக்கியக் காலமாகும். இந்தக் காலகட்டத்தில் கதை வகுப்பு (தமிழ் நேசன் 1950,1951),

ரசனை வகுப்பு, எழுத்தாளர் பேரவை (தமிழ் முரசு), இலக்கிய வட்டம் (கு.அழகிரிசாமி), தமிழ் முரசு மாணவர் மணி மன்றம் போன்றவை புதிய படைப்பாளிகள் உருவாகவும் படைப்புகளில் மாற்றங்கள் ஏற்படவும் காரணங்களாக அமைந்தன.

இந்த வளர்ச்சி கருப்பொருள்களின் பெரும் மாற்றங்களுக்கு வித்திட்டது. காதல், வறுமை, சந்தேகம், நேர்மை, குடித் துயரம், ஜப்பானியர் கொடுமை, வேலை நிறுத்தம், கம்யூனிஸ்டுகளின் பயமுறுத்தல், உழைப்பின் மேன்மை, மனிதாபிமனம், சங்கம் அமைத்தல் போன்றவை சிறுகதைகளின் கருப்பொருள்களாயின.

மலாய்ச் சிறுவருக்கு மருந்தும் உணவும் கொண்டு செல்லும் முயற்சியில் உயிரை இழந்த இந்தியரைப் பற்றிய பழநிவேலின் மனிதாபிமனம், ஜப்பானியர் ஆட்சியின் போது ஒரு குடும்பத்தின் தியாகத்தை வெளிபடுத்தும் காலச் சக்கரம் போன்றவை இக்காலகட்ட சிறுகதைகளுக்கு உதாரணமாகும்.

### சுதந்திரத்திற்குப் பின்

இக்காலச் சிறுகதைகள் ஐம்பதுகளின் வளர்ச்சியின் தொடர்ச்சியாக அமைகிறது. இக்கால கட்டத்தில் வரலாற்று ரீதியில் பல சம்பவங்கள் நடைபெற்றன. மலாயா சிங்கப்பூர், சபா, சரவாக்குடன் இணைந்து சுதந்திரம் பெற்றது. இருப்பினும், ஜப்பானியர் ஆட்சியில் தலை தூக்கிய கம்யூனிஸ்டு பயங்கரவாதம் பெரும் சவாலாக அமைந்தது. இதன் காரணமாக அமல்படுத்தப்பட்ட 'அவசரகாலப் பிரகடனம்' நிலையில் அறுபதுகளின் தொடக்கம் அமைந்தது. இது மக்களின் அன்றாட வாழ்க்கையிலும் தாக்கத்தைப் பதிவு செய்ய, இலக்கியங்களும் அதைப் பிரதிபலிக்கும் வகையில் அமைந்தன. 1969 ஆம் ஆண்டு நாட்டின் பொது தேர்தலும், அதைத் தொடர்ந்த இனக் கலவரமும் நாட்டின் பல மாற்றங்களுக்கு வித்திட்டது. இதன் அடிப்படையில் இக்கால கட்டத்தை 1970 முதல் 1985 என்றும், 1985களுக்குப் பிறகு என்றும் பிரிக்கலாம்.

### 1970 முதல் 1980 வரை

எழுபதுகள் மலேசிய வரலாற்றிலும் வளர்ச்சியிலும் பல மாற்றங்களுக்கு வித்திட்ட காலப் பகுதியாகும். 1969 இனக் கலவரம் காரணமாக அரசாங்கம் பல திட்டங்களைச் செயல்படுத்த முனைந்தது. இனங்களுக்கிடையே இருந்த பொருளாதார ஏற்றத் தாழ்வு, ஒற்றுமை யின்மையைக் களைய திட்டங்களை வகுத்தது. இதன் அடிப்படையில் புதிய

பொருளாதாரத் திட்டத்தை (New Economic Policy) அறிமுகப்படுத்தி, இனங்களுக்கிடையிலான பொருளாதார ஏற்றத் தாழ்வுகளைக் களைய முற்பட்டது. அதே தருணத்தில் இனங்களுக்கிடையே ஒற்றுமையை வளர்க்கவும் நிலைநிறுத்தவும் 'ருக்குன் நெகாரா' என்ற கோட்பாட்டையும் அறிமுகப்படுத்தியது.

அரசாங்கத்தின் இம்முயற்சிகளுக்கு ஏற்ப, இக்கால கட்டத்தில் எழுந்த சிறுகதைகள் சமக்காலச் சிக்கல்களைக் கருப்பொருளாகக் கொண்டிருந்தன. இதற்கேற்ப பல்லின மக்களைக் கொண்ட பாத்திரங்களைத் தங்கள் படைப்புகளில் காட்டினர். எடுத்துக்காட்டாக, ஆர்.சண்முகத்தின் 'மூன்றில் ஒன்று', சி.வடிவேலுவின் 'சீனக் கிழவன்', பாரியின் 'சத்து ரிங்கிட்' போன்ற கதைகளைக் (கிருஷ்ணன் மணியம் , 1993 : 63) குறிப்பிடலாம் .

இக்கால கட்டத்தில் கம்யூனிஸ்டு பயங்கரவாதிகளுக்கு எதிரான போராட்டம், இந்தோனேசியாவின் மலேசிய எதிர்ப்புக் கொள்கைப் போராட்டம் என நாடு சில பிரச்சினைகளையும் எதிர் கொண்டது. இதுவும் இக்கால கட்டத்தில் சிறுகதைகளின் கருப்பொருள்களாகக் கையாளப்பட்டன. உதாரணமாகச் சி. வடிவேலின் 'தியாகப் பரிசு', சை.பீர்முகம்மதுவின் 'வெடித்த துப்பாக்கிகள்', கு.கிருஷ்ணனின் 'எங்கே நிம்மதி' கதைகளைக் குறிப்பிடலாம். இவற்றுள் முதல் இரண்டு கதைகளும் இராணுவ வீரர்களின் கம்யூனிஸ்டு பயங்கரவாதிகளுக்கு எதிரான வீரப் போராட்டத்தைக் கருவாகக் கொண்டிருந்தன. மூன்றாவது கதையோ இந்தோனிசியாவின் மலேசிய எதிர்ப்புக் கொள்கையைக் கருவாகக் கொண்டதாகும்.

இவை பொதுவாக மலேசிய எதிர் கொண்ட சூழல். அதே வேளையில் இந்திய சமூகமும் தனிப்பட்ட நிலையில் சில சிக்கல்களை எதிர் கொண்டது. 1960களின் இரண்டாம் காலகட்டத்தில் ஐரோப்பியர்கள் தாயகம் திரும்பும் நோக்கத்தில் தங்களின் அரப்பர் தோட்டங்களை விற்க முற்பட்டனர். பெரிய தோட்டங்களான அவற்றை விற்க முடியாத சூழலில், துண்டு போட்டு விற்க முற்பட்டனர். இதுகாறும் தோட்டத்தையே நம்பியிருந்த தமிழ்ச் சமூகத்திற்குப் இது பேரிடியானது. இப்பிரச்சினைக்குத் தேசிய நிலநிதிக் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் தீர்வு காண துன் சம்பந்தன் மூலம் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இப்புதிய சவால்களை எழுத்தாளர்கள் தங்கள் படைப்புகளில் கருப்பொருளாக்கினர். பூ. அருணாசலத்தின் 'கண்கள் கண்ட காட்சி', 'பட்ட காலிலே படும்', 'விடிவு' , (கிருஷ்ணன் மணியம் , 1993 : 142) சா.ஆ.அன்பானந்தனின் 'காலத்தின் விளக்கு' போன்ற கதைகள் இச்சிக்கல்களைக் கருப்பொருள்களாகக் கொண்டிருந்ததைக் காணலாம்.

இக்காலகட்டத்தில் தமிழ்ச் சமூகம் சிவப்பு அடையாளக் கார்டு பிரச்சினையாலும் பாதிக்கப்பட்டது. சிவப்பு அடையாளக் கார்டு உள்ளவர்கள் நாட்டின் குடியுரிமை பெற்ற மக்கள் அல்லர். ஆக, இவர்கள் இங்கு வேலை செய்ய 'வேலை பெர்மிட்' பெற வேண்டும் என்ற புதிய சட்டம் அரசாங்கத்தால் முன் வைக்கப்பட்டது. இதனால் பாதிக்கப்பட்ட தமிழ்ச் சமூகம் எதிர் நோக்கிய பிரச்சினைகள், அதை ஓர் ஆயுதமாகப் பயன்படுத்திச் சமூகத்தைச் சீரழித்த அதிகார வர்க்கத்தினரின் செயல்கள் முதலியவையும் இக்கால கட்டத்தில் சிறுகதைகளின் முக்கியக் கருப்பொருள்களாக அமைந்தன. இதைப் பிரதிபலிக்கும் வகையில் சி.வடிவேலின் 'திருவாளர் சின்னக்கண்ணு', ரெ.கார்த்திகேசுவின் 'முனுசாமி தலைகுனிந்து நிற்கிறான்' என்ற கதைகள் அமைகின்றன.

இதற்கிடையில் இதைத் துருப்புச் சீட்டாகப் பயன்படுத்திப் பெண்களின் கற்புக்கு விலை பேசிய சம்பவங்களும் அரங்கேறின. இது ஆ.நாகப்பனின் 'இதுதான் வாழ்க்கை', சா.ஆ. அன்பானந்தனின் 'இருட்டுக்குள் இருக்கிறார்கள்', சீ.முத்தசாமியின் 'இரைகள்' என்ற கதைகளின் கருப்பொருளாக அமைந்தது. இவற்றுள் 'இரைகள்' என்ற கதை, குமுதம் இதழ் நடத்திய சிறுகதைப் போட்டியில் முதல் பரிசு பெற்றது என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

இதைத் தவிர, கல்வியும் சிறுகதையின் கருவாகியது. குறிப்பாக 1970 களில் அப்போதைய கல்வி இயக்குநர் 'மூராட்டின்' பாதியிலேயே பள்ளியை விட்டு விலகும் மாணவர்களுள் தமிழ் மாணவர்களே அதிகம் என்ற அறிவிப்பு (கிருஷ்ணன் மணியம் , 1993 : 150) , எழுத்தாளர்களின் கவனத்தை ஈர்த்தது. இதன் அடிப்படையில் அமைந்த கதைகளாக ரெ.கார்த்திகேசுவின் 'பிள்ளையார் பந்து', சி.வடிவேலின் 'கண்ணன் ரிமூவ் வகுப்புப் படிக்கிறான்' போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

ஆக, மலேசியச் சிறுகதைத் துறையில் பெரும் மாற்றத்தைக் கண்ட இக்காலகட்டத்தில் வறுமை, குடியுரிமை, சிவப்பு அடையாளக் கார்டு, வேலை பெர்மிட், தோட்டத் துண்டாடல், வேலையில்லாத் திண்டாட்டம் போன்ற சமகாலப் பிரச்சினைகளைத் தவிர்த்து, சமுதாயச் சீர்கேடுகள், தமிழ்ப் பள்ளிகள், சுயநலம், பொருளாதாரம், அரசியல் ஆகியவையும் கருப் பொருள்களாயின.

### 1980களுக்குப் பிறகு

எண்பதுகளில் மலேசியச் சிறுகதை இலக்கியம் என்பது எழுபதுகளின் தொடர்ச்சியே எனலாம். தமிழகத் தாக்கத்திலிருந்து விடுபட்டு, மலேசிய

வடிவத்தைக் கொண்ட மண்ணின் மணங்கமழும் படைப்புகள் அதிகம் வெளிவரலாயின. இக்காலகட்டத்தில் படைப்பாளர்களை ஊக்குவிக்கும் வகையில் பல்வேறு இலக்கியப் போட்டிகளும் இருந்தன. அவற்றுள் குறிப்பாக மலாயாப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரவை கடந்த இருபது ஆண்டுகளாக நடத்தி வரும் சிறுகதைப் போட்டியைக் கட்டாயம் குறிப்பிட வேண்டும்.

இக்காலகட்டச் சிறுகதைகள் சமக்காலப் பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டு அதிகம் எழுதப்பட்டன. கல்வி, தற்காலிக ஆசிரியர் பிரச்சினை, நாட்டுப் பற்று, போதை பொருள் பிரச்சினை, அந்நியத் தொழிலாளர், மாணவன் மாணவி உறவு, அரசியல், உயர்கல்வி மாணவர்களின் போக்கு, தலைமுறைகளுக்கு இடையிலான வேறுபாடுகள், மொழி உணர்வின்மை, குடிப்பழக்கம், காதல், சாதி போன்றவை சிறுகதைகளில் கருப்பொருள்களாக அமைந்தன.

இன்றைய நிலையில் மலேசிய இந்தியர்கள் கல்வி என்ற அடிப்படையில் பல போராட்டங்களையும் சிக்கல்களையும் எதிர் கொள்கின்றனர். மைதீ சுல்தானின் 'ஒரே மண்ணில்' இந்தியர்களின் கல்வித் தாகத்தையும், ஒவ்வோர் ஆண்டும் அதற்கு ஏற்படும் புதிய இடையூறுகளையும் காட்டும் படைப்பாகும். இவரின் மற்றொரு படைப்பு 'நூறு மீட்டரில்' என்பதாகும். ஏறக்குறைய எண்பதுகளின் மத்தியில் இங்கு நடந்த கால்பந்து போட்டியில் கலந்து கொண்ட இந்தியக் குழுவிற்கு மலேசிய இந்தியர்கள் தங்கள் ஆதரவை வழங்கினர். இது அவர்களின் நாட்டுப் பற்றைக் கேள்விக்குறியாக்கியது. அத்தருணத்தில் நாட்டின் மதிப்பை உயர்த்துவதில் இந்தியர்களுக்கும் கணிசமான பங்குண்டு என்பதைக் கருவாகக் கொண்டு உருவாக்கப்பட்ட இச்சிறுகதை, 1988ஆம் ஆண்டு பேரவைக் கதைகள் போட்டியில் முதல் பரிசைப் பெற்றது.

தொடர்ந்து மாணவர்களை மையமாகக் கொண்ட கதைகளும் உண்டு. ஒரு மாணவனும் மாணவியும் பழகும் பழக்கம் சிறந்த முறையிலும் அமையலாம் என்ற பொன்முத்துவின் 'அவன் அவள் உலகம்' ஆண் பெண் உறவை வேறு கோணத்தில் சிந்தித்த கருவாகும். அதே வேளையில் பல்கலைக்கழக மாணவர்களும் சிறுகதைகளில் கருப்பொருளாக வலம் வந்தனர். உதாரணமாக ஒரு சில பல்கலைக்கழக மாணவர்களின் குறிக்கோளற்ற போக்கினைச் சுட்டும் சா.அன்பழகனின் 'வேடம் வெளிச்சத்திற்கு வருமா?', சமுதாயத்தின் எதிர்பார்ப்பைத் தரைமட்டமாக்கிய பல்கலைக்கழக மாணவனைச் சுட்டும் காசிதாசனின் 'சரித்திரம் சறுக்குகிறது', கல்வி கற்ற சில இளைஞர்களின் மனநிலையையும்

வாழ்வியலையும் சுட்டும் தியாகராஜனின் 'செம்மண் சாலைகளில்' போன்ற கதைகளைக் குறிப்பிடலாம். தொடர்ந்து தலைமுறைக்கு இடையிலுள்ள வேறுபாடுகளும் கதையின் கருவானது. எடுத்துக்காட்டாகப் பொன் சசிதரனின் 'வாசல் தாண்டும் வானம்' கதையைக் குறிப்பிடலாம்.

இன்றைய நிலையில் தோட்டப்புற மக்களின் அறியாமை, அதிகாரவர்க்கத்தின் அடாவடித்தனம், வயது முதிர்ந்த பெற்றோரைப் பேணாத பிள்ளைகள், பொருளாதார வீழ்ச்சி, வன்முறைக் கலாச்சாரம், இடைநிலைப்பள்ளி மாணவர்களின் தவறான நடத்தைகள், பள்ளித் தேர்வுகள் ஏற்படுத்தும் அச்சம், தாய்மொழி வகுப்புகளைப் புறக்கணிக்கும் தமிழ் மாணவர்கள், தமிழ்ப் பள்ளிகளின் பிரச்சினைகள், ஆசிரியர் மாணவர் உறவு, பிற இனத்தவரை மணப்பதால் ஏற்படும் சிக்கல்கள், அந்நியத் தொழிலாளர்களுடன் உறவு கொள்ளும் தமிழ்ப் பெண்களின் பிரச்சினைகள், திருந்திய போதைப் பித்தர்களை ஏற்க மறுக்கும் குமுகாயம், சொந்த தொழில், அரசியல் ஆகிய கருப்பொருள்கள் சிறுகதைகளில் முதன்மை இடத்தைப் பெறுகின்றன.

## முடிவுரை

ஏறக்குறைய எண்பத்து மூன்று ஆண்டுகள் வரலாற்றை உடைய மலேசியச் சிறுகதைகளின் கருப்பொருள்களைப் பார்க்கும் போது, அந்தந்தக் காலகட்டத்திற்கேற்ற கருப்பொருள்கள் முக்கியத்துவம் பெற்றன என்பதை மறுக்க முடியாது. உதாரணமாகத் தமிழ்ச் சமுதாயத்தின் சமக்காலப் பிரச்சினைகளாகத் தோட்டத் துண்டாடல், வேலை பெர்மிட், சிவப்பு அடையாளக் கார்டு போன்றவை இருந்த காலத்தில், அதிகமான சிறுகதைகள் அவற்றைப் பிரதிபலித்தன. எனினும், காதல், சாதி, கற்பு, கல்வி, தோட்டப்புற வாழ்க்கை போன்றவை மலேசியச் சிறுகதைகளில் நிரந்தரமான இடத்தை இன்று வரை பிடித்துள்ளன என்பதை மறுப்பதற்கில்லை. எதிர்காலத்தில் புதிய எழுத்தாளர்கள் அறிவியல், மருத்துவம், குழந்தை உளவியல் முதலிய கூறுகளைக் கருப்பொருளாகக் கொண்டு சிறுகதைகளைப் படைக்க முற்படவேண்டும். இக்கூறுகளை மலேசியச் சிறுகதைகளில் காண முடியவில்லை.

## துணை நூல்கள்

Dhandayutham. 1972/1973. The Development of Tamil Short Stories in Malaysia, Tamil Oli, Tamil Language Society, University of Malaya.

**தண்டாயுதம்**. இரா. 1983. தற்காலத் தமிழ் இலக்கியம். சென்னை. **தமிழ்ப்புத்**தகாலயம்.

————————. 1975. நாவல் வளம். சென்னை. தமிழ்ப்புத்தகாலயம்.

Krishnan Maniam.1993. Cerpen Tamil dan Melayu (1957 - 1970) Perbandingan Tema dan Struktur. Kuala Lumpur. Dewan Bahasa dan Pustaka.

பேரவைக் கதைகள் 1, 2, 3, 4, 5, 6, 10.

Stenson, Michaes. 1980. 'Class, Race and Colonialism in West Malaysia. The Indian Case. St. Lucia. University of Queensland Press.

Subramanian. N. 1980. A Critical Study of Malaysian Tamil Short Stories (1930 - 1970). M.A. Thesis, University of Malaya.

Subramanian. N. 1981. Tamil-Short Stories in Malaya during Japanese Occupation (1942 - 1945) - Proceedings of the 5th International Conference Seminar on Tamil Studies. Vol.2. Madurai.

# சிங்கப்பூர்த் தமிழ் இலக்கியம் - மரபும் தனித்துவமும்

முனைவர் கா. செல்லப்பன்
*ஆங்கிலப் பேராசிரியர்*
*நெ. 27, பாரதியார் தெரு*
*அம்பத்தூர் தொழிற்பேட்டை*
சென்னை

'சிங்களம், புட்பகம், சாவகம் - ஆகிய தீவுகள் யாவினும் சென்றேறி - அங்குத் தங்கள் புலிக்கொடியும் மீன்கொடியும் - நின்று சால்புறக் கண்டவர்கள் தமிழ்க்குடியை நிலைநிறுத்திய அளவுக்குத் தமிழ் மொழியை நிலை நிறுத்தினார்களா என்பது ஐயமே. மாறாக, ஆங்கிலேயர்களின் பேரரசு மறைந்துவிட்டாலும் ஆங்கில மொழியின் பேரரசு நிலைத்துத் தழைத்திருப்பதனைக் காண்கிறோம். தமிழ் மொழியும் இலக்கியமும் அந்த அளவுக்கு அயலகங்களில் தழைத்தோங்காததற்கு, அங்கெல்லாம் அரசியல், பொருளாதாரத் துறைகளில் தமிழர்களின் செல்வாக்குக் குறைந்தது ஒரு காரணமாக இருப்பினும் அங்கு வாழ்ந்தவர்கள் அக்கறை காட்டாததும் ஒரு முக்கியக் காரணமே.

புலம் பெயர்ந்து வாழ்பவர்களின் பண்பாட்டுக் கருவூலமாக விளங்குவது மொழியே. Language is the cultural memory bank of a people's experience in history என்பார் பிரபல கென்ய எழுத்தாளர் நகுகி. வழிவழியாய் வாழ்ந்து வளரும் பண்பாட்டுப் பாரம்பரியத்தை, மொழி, இலக்கியம் வழியாகவே கட்டிக் காக்க முடியும். அதற்கு அந்த மொழி புதிய புலத்திலும் வாழ்வோடு இணைந்த மொழியாக இருக்க வேண்டும். சிங்கப்பூர் போன்ற பன்முகப் பண்பாட்டு (multicultural) நாடுகளில் தமிழர்கள் தமிழகச் சடங்குகளைப் பேணுமளவுக்குத் தமிழ்மொழியைப் பேணவில்லை. கனேடிய இஸ்ரேலியர்களைப் பற்றிய 'Ethnicity and Judasim' என்ற கட்டுரையில், ரிச்சார்டு ஷெர்லின் ஜுடாயிசம், ஹீப்ரு மொழியோடு பின்னிப் பிணைந்திருந்தாலும், அதன் பண்பாட்டு மீட்சிக்குச் சடங்குகளும் முக்கியமானவை எனக் குறிப்பிடுகிறார். புலம் பெயர்ந்த தமிழர்களும் மொழியையும் சமயச் சடங்குகளையும் இணைத்தே பார்த்திருக்கிறார்கள். இலங்கையில் யாழ்ப்பாணத்தில் சைவத்தையும் தமிழையும் இணைத்திருக்கிறார்கள். மொரிஷியசில், தமிழை வாசிக்கத் தெரியாத நிலையில் தேவாரப் பாடல்களை ஒலிபெயர்ப்பு மூலமாகவும், வாய்மொழியாகவும் கற்று உணர்வோடு பாடுகின்றனர். ஆனால், அவர்கள் தமிழையும் கற்றிருந்தால் தேவாரம்

இவர்களின் ஆழ்மனத்தையும் தொட்டு வெளிவந்திருக்கும் லக்கான் என்பவரின் கருத்தப்படி, நனவிலிமனம் ஒரு மொழியாகத்தான் கட்டமைக்கப்பட்டுள்ளது. சிங்கப்பூரில் சமயச் சடங்குகளொடு தமிழ் இணைக்கப்பட்டு, சமயம் சார்ந்த இலக்கியங்கள்தாம் முதலில் படைக்கப்பட்டன.

சிங்கப்பூர்த் தமிழ் இலக்கியம் 1887ஆம் ஆண்டில் தோன்றியதாகக் குறிப்பிடும் முனைவர் சிவகுமாரன் வண்ணையந்தாதி, வண்ணை நகரூஞ்சல், சிங்கை நகரந்தாதி, சித்திரக் கவிகள் என்னும் நான்கு கவிதைத் தொகுதிகள் அடங்கிய புலமை சான்ற நூலாக வெளிவந்ததாகக் கூறுவார். 1965லிருந்து 99 வரையான காலகட்டத்தில் ஐ. உலகநாதன் போன்றோரால் 67 கவிதை நூல்கள் வெளியிடப்பட்டதாகவும் கூறுகிறார். இவற்றுள் 12 நூல்கள் இறையுணர்வைப் பாடுபொருளாகக் கொண்டவை என்பதும் குறிப்பிடத்தக்கது.

சிங்கப்பூரில் இலக்கியப் படைப்பாளர்களுள் கவிஞர்களே மிகுதி என்றும் இவர்களுள் முருகதாசனும் முத்து மாணிக்கமும் மிகுதியாக வெளியிட்டனர் என்றும் கூறுகிறார் அவர். புதுக்கவிதைக்கு வரவேற்பில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. சிங்கப்பூரில் கவிதை விழாவில் கவிதைகள் பல எழுதப்பட்டுள்ளன. முருகதாசனின் 'அழகோவியம்', ஐ. உலகநாதனின் 'கண்ணம்மா' கதை தழுவிய தனி நூல்கள். 'அழகோவியம்' சிங்கப்பூர் வரலாறு தழுவியது.

சிறுகதை, சிங்கப்பூரில் மலேசியாவுக்கு முன்பே தோன்றிவிட்டது. சிங்கப்பூரின் துரித வாழ்க்கைக்கேற்ப, இவ்வடிவம் அங்குப் பிரபலமாகியது. மு.க. குருசாமியால் 1976இல் முதல் சிறுகதை நூல் வெளியிடப்பட்டது. அதற்குப் பிறகு 2000 வரை நாற்பதுக்கும் மேற்பட்ட நூல்கள் வெளியாகின.

மு.க. குருசாமி, 'காகிதப் பூ' என்ற புதினத்தையும் 1970இல் வெளியிட்டுள்ளார். சென்னை நூற்றாண்டின் இறுதியில் 22 புதினங்கள் வெளியிடப்பட்டன. அவற்றுள் மிக அதிகமாக 4 நூல்கள் ஜே.எம். சாலி வெளியிட்டுள்ளார்.

சிங்கப்பூரில் தமிழில் நாடக இலக்கியம் முக்கிய இடம்பெறுகிறது. ஏ.பி. சண்முகம் எழுதிய 'பயணம்' 1972இல் முதலில் வெளிவந்தது. எண்பது களில் பத்து நாடகங்களும் 90களில் பத்து நாடகங்களும் வெளிவந்தன. வானொலி நாடகங்களும் பெரும் பங்காற்றியுள்ளன. ஆ. முருகையன் சிங்கை வானொலியில் 'போகும் இடம்' (1968) என்ற தொடர் நாடகத்தையும், 'இலட்சியக் குடும்பம்' (1970) என்ற தொடர் நாடகத்தையும் எழுதி ஒலி

பரப்பினார். எம்.கே. நாராயணன் 'நமக்குள் இருக்கட்டும்' என்ற வானொலி நாடகத்தையும், 'நம் குடும்பம்' என்ற மேடை நாடகத்தையும் இக் காலகட்டத்தில் எழுதினார். பி. கிருஷ்ணன் 'அடுத்த வீட்டு அண்ணாச்சாமி' என்னும் நகைச்சுவை நாடகத்தை எழுதி 32 வாரங்கள் ஒலிபரப்பினார். இவையெல்லாம் குடும்ப வாழ்க்கையை ஒட்டியிருப்பது, சிங்கப்பூர்ச் சமூகத்தில் குடும்ப மரபுகள் மாற்றமடைவதன் விளைவாகக் கருதலாம்.

1959ஆம் ஆண்டு எம்.கே. நாராயணன் தான் எழுதி இயக்கிய 'அன்பின் ஜோதி' அரு. இராமநாதனின் 'அசோகனின் காதலி'யைத் தழுவி 'அசோகன்' ஓரங்க நாடகத்தையும் படைத்தவர். 'அசோகனின் மன மாற்றம்' என்ற அரைமணி நேர வானொலி நாடகத்தையும் எழுதித் தயாரித்தவர். எம்.கே. நாராயணன் முருகையன் அகிலனின் சிநேகிதியை வானொலியை நாடகமாக்கியபோது 'சித்திரப்பாவை'யை நாராயணன் வானொலி நாடகமாக்கினார். இவற்றைத் தவிர சுந்தரம் பிள்ளையின் 'மனோன்மணிய'த்தைத் தழுவி மேடையில் நடிப்பதற்கேற்ற முறையில் மேடை நாடகமாகவும் அவர் படைத்துள்ளார்.

சிங்கப்பூர்த் தமிழ் இலக்கியத்தில் மகாபாரதத் தழுவல்கள் முக்கிய இடம் வகிக்கின்றன. கலையரசு எஸ்.எஸ். சர்மா 'பாஞ்சாலி சபதம்' என்ற மேடை நாடகத்தை எழுதி 1965இல் அரங்கேற்றினார். கர்ணனின் கதையைத் 'தேரோட்டியின் மகன்' என்று மேடை நாடகமாக பி.எஸ். இராமையா படைத்தார். மலேசியாவின் முன்னணிக் கவிஞரான கா. பெருமாள் சிங்கப்பூர் வானொலியில் பணியாற்றியபோது ஏகலைவன் கதையை, 'கட்டை விரல்' என்ற தலைப்பில் கவிதை நாடகமாக வானொலியில் படைத்தார்.

எம்.கே. நாராயணன் மகாபாரதம் முழுவதையும் 60 பாகங்களாக ஓராண்டுக்கு வானொலியில் வளமான தமிழில் நாடகப் பண்போடு படைத்துள்ளார். இந்நாடகத்தில் நன்மை - தீமையின் மோதல், சகோதரச் சண்டையாகக் காட்டப்பட்டிருந்ததால் நாடகத் தன்மை நன்கு தெரிகிறது. அறக் கருத்துகளும் முக்கியத்துவம் பெறுகின்றன. மனிதனுக்குள்ளேயே நன்மை தீமைப் போராட்டம் இருப்பதைப் பிதாமகன் பீஷ்மர் வாயிலாகக் காட்டுகிறது.

இந்நாடகத்தின் முடிவில் வைசம்பாயன் 'பாரதக் கதையை வியாசர் சொல்ல விரும்பியதாகவும் அப்போது பிரம்மன் விநாயகர் துணை வேண்டும் என்றதும் வியாசர் விக்னேஸ்வரனைத் தியானிக்க கணபதியும் தோன்றினார். வியாச பகவான் கூறக் கூற யானை முகத்தான் எழுதினார். அப்பெருங்கதையினை வியாச முனிவர் எங்களுக்குக் கூறினார். அதனை இப்போது உங்களுக்குக் கூறுகிறேன்' என்று சொல்லிவிட்டுக் கதையைச்

சொல்லும்போது நாடகத்தின் முதற்பாகத்தில் ஒரு பகுதி காட்டப்படுகிறது. முடிவே, தொடக்கமாகிறது. ஆசிரியர், 'பாரதக் கதை' தொடரும் என முடிப்பது பாரதத்தின் முடிவற்ற தன்மையைக் காட்டுகிறது.

ந. பழனிவேலு, ஜி.ஆர். மணி, எஸ்.ஜெ. சந்திரன் ஆகியோரும் பல வானொலி நாடகங்களைப் படைத்துள்ளனர். இவற்றுள் ஜி.ஆர். மணி இன்பத்துப் பால் குறட்பாக்களுக்குக் காட்சிகள் அமைத்துக் குறுநாடகங் களாக ஒலி பரப்பியது குறிப்பிடத்தக்கது. இந்திய மரபுத் தளத்தில் சிங்கப்பூர்த் தமிழ் இலக்கியம் விளங்கியதற்கு இதுவும் ஒரு எடுத்துக்காட்டு.

புதுமைதாசன் என்ற புனைபெயரில் பி. கிருஷ்ணன், ஜோர்ஜ் ஆர். வெல்லின, 'விலங்குப் பண்ணை', ஷேக்ஸ்பியரின் 'மாக்பெத்' ஒதெல்லோ நாடகங்களையும் சிறப்பாக மொழிபெயர்த்துள்ளார். மொழிபெயர்ப்பின் நடை தமிழ் மரபை ஒட்டியுள்ளது. எடுத்துக்காட்டாக, மாக்பெத் மொழிபெயர்ப்பில் அனைத்திற்கும் மேலாக, upon this bank and shoal of time என்பதனைத் தமிழ் மரபிற்கேற்ப, 'பிறவிப் பெருங்கடலின் மறுகரை மருங்கில்' என உருவகத்தின் உயிர் நாடியொடு சிறப்பாகத் தரப்படுகிறது.

இவரது முக்கியமான பங்களிப்பு நகைச்சுவை நாடகங்களே. 'மாடி வீட்டு மங்களம்', 'அடுக்குமாடி அண்ணாசாமி', 'ஐடியா ஐயாக்கண்ணு' ஆகிய வானொலி நாடகங்கள் குறிப்பிடத்தக்கவை. 'ஐடியா ஐயாக்கண்ணு' சிங்கப்பூர்க் குடும்ப வாழ்வைப் படம் பிடிக்கிறது. அதில் வயது முதிர்ந்த ஜம்புலிங்கம், அடிக்கடி அறிவுரைகள் வழங்குகிறார். குறிப்பாகப் பழைய பாரம்பரியப் பழக்கங்கள் மறைந்து வருவது பற்றி அவர் பேசுவது சிங்கப்பூர்க் குடும்ப வாழ்வினைப் பிரதிபலிக்கிறது. சிந்தா என்ற சிங்கப்பூர்ச் சொல்லுக்கு ரப்பர் மரப்பால் என விளக்குவதோடு, அந்த நாள்களில் ஹாரதனுக்குப் பதிலாகக் கார்களில் கிந்தாவில் குண்டாக இருப்பதை 'பாம்பாமி' அடிப்பார்கள் என்றும் பழைய சிங்கை வாழ்க்கை முறையை நினைவுபடுத்துகிறார். இங்குப் பழைய கால நாடகப் பாடல்களும் நினைவுபடுத்தப்படுகின்றன. மலாய் மசாலாச் சொற்களும் சிங்கப்பூரின் பன்முகப் பண்பாட்டு வாழ்வினைப் படம் பிடித்துக் காட்டுகின்ற 'நல்ல வீடு' என்ற நகைச்சுவை நாடகமும் சிங்கப்பூர் வாழ்வை மையமாகக் கொண்டதே.

புதுமைத் தாசனின் சிறுகதைகளும் சிங்கப்பூர் வாழ்வை மையமாகக் கொண்டு, ஆனால், தூய தமிழ் இலக்கியம் மற்றும் டால்ஸ்டாய், ஓ ஹென்றியின் பண்புகளுடன் படைக்கப்பட்டுள்ளன. அவருடைய 'பரோபகாரி' என்ற கதை புரட்சிகரமானது. அதில் அடுக்குக் கட்டடத்தில் வாழும் ஒரு ஒழுக்கமற்ற பெண் பரோபகாரியாகப் படைக்கப்பட்டுள்ளாள். கதையின் தொடக்கத்தில் காண்டேகரின் நூல்கள் பற்றிப் பேசி, 'கற்பு

என்பது இலக்கியத்தில் மட்டும்தானா?' என்ற கேள்வியுடன் கதை முடிகிறது. 'உதிரிகள்' என்ற கதையில் சிங்கப்பூரில் பொருளாதாரச் செழிப்புடன் கலாச்சாரக் கும்பல்களுமிருப்பதைக் காட்டுகிறார். 'வாழ முடியாதவள்' என்ற கதையில் ஒரு மலாய்ப் பெண்ணை வாழ முடியாதவளாகக் காட்டுகிறார். 'தெளிவு' என்ற கதையில் ஒரு சீனப் பெண்ணை மணந்தவன், அவர் மற்ற ஆண்களுடன் கூச்சமின்றிப் பழகுவதைச் சந்தேகித்து, அவள் மீது ஒரு கட்டையை வீசுகிறான். அது அவள் மீது படவில்லை. ஆனால் அவள் வீசிய கிளாசால் மண்டை உடைகிறது. மருத்துவமனையில் சீனர்களின் பழகும் பண்பை உணர்ந்து அவன் தலைக்கட்டில் ஞானம் உதயமாவதாகக் கதை முடிகிறது.

தொலைக்காட்சியிலும் எம்.கே. நாராயணன் போன்றவர்கள் மரபோடு சிங்கப்பூர் வாழ்வை இணைத்து, 'நல்லார் யார்?', 'எண்ணங்களும் உறவுகளும்', 'சங்கமம்' போன்ற நாடகங்களைப் படைத்துள்ளனர். மேல் நாட்டு இலக்கியங்களைத் தழுவியும் சிங்கப்பூரில் தமிழ் இலக்கியம் படைக்கப்பட்டுள்ளது.

ஆனால், தற்காலச் சிங்கப்பூர்த் தமிழ் இலக்கியம் தமிழ் மரபில் வேரூன்றி, சிங்கை வாழ்வோடு இரண்டறக் கலந்து, உயர்ந்த இலக்கியங்களாக உருவாகியுள்ளனவா என்பது ஆராய்வதற்குரியது. சிங்கைத் தமிழர்களின் வாழ்வில் தமிழ் ஆணிவேராகத் திகழ்ந்தால்தான் உயர் இலக்கியங்களை உருவாக்க முடியும். தமிழ், அங்கு வாழ்வு மொழியாக வேண்டும். அதே சமயத்தில் அதன் நீண்ட பாரம்பரியத்தை மறக்காமல், புதிய உலகத்தின் கூறுகளையும் சுவீகரித்துக்கொண்டு இலக்கியம் உருவானால்தான் முன்னைப் பழைமைக்குப் பழைமையான தமிழ், பின்னைப் புதுமைக்குப் புதுமையான புது உலகப் பொலிவொடு சிறக்க முடியும். மரபு காக்கப்படுவதொடு வளர்க்கப்பட வேண்டும்.

### துணை நூல்கள்


1. டாக்டர் சுப. திண்ணப்பன், சிங்கப்பூரில் தமிழ்மொழியும் இலக்கியமும், (1995).
2. டாக்டர் ஏ.ஆர்.ஆர். சிவக்குமார், திருமதி சீதாலட்சுமி, டாக்டர் சுப. திண்ணப்பன், சிங்கப்பூர்த் தமிழ் இலக்கியம்: சாதனைகளும் எதிர்காலத் திட்டங்களும், (2001).
3. சுந்தரி பால சுப்ரமணியம், யசோதா தேவி நடராஜன், பி. கிருஷ்ணன் (புதுமைத் தாசன்), இலக்கியப் படைப்புகள் ஓர் ஆய்வு, (2012).
4. எம்.கே. நாராயணன், எழுத்தாளர்களுக்கு ஒரு கையேடு, (2009).

# சிங்கப்பூர் ஜே.எம். சாலி, கமலாதேவி அரவிந்தன் சிறுகதைப் படைப்புகள் - ஓர் அறிமுகம்

முனைவர் எச். முஹம்மது சலீம்
*சிங்கப்பூர்*

சீனர், மலாயர், இந்திய வம்சாவழியினர், யுரேஷியர் மற்றும் இதரர் என்னும் பல்வேறு இனம் மற்றும் மொழிபேசுகின்ற குடிமக்களையும் நிரந்தரமாய்த் தங்கி வாழ்வோரையும் கொண்ட சிங்கப்பூரின் இன்றைய மக்கள் தொகை 53 லட்சம். இவர்களுள் இந்திய வம்சாவழியினர் மட்டும் சுமார் 9 விழுக்காடு. இவர்களுள் தமிழ் பேசுவோர் 3.2 விழுக்காட்டினர். இவ்வாறு குறுகிய எண்ணிக்கையில் தமிழரும் தமிழ் பேசுவோரும் வாழ்கின்ற நாடாக வளமிக்க சிங்கப்பூர் இருந்தாலும் மலாயாவிலிருந்து பிரிந்து சுதந்திரக் குடியரசாக 1965ஆம் ஆண்டு பிரகடனப்படுத்தப்பட்டதிலிருந்து கீழ்த்திசை நாடுகளின் வளர்ச்சிச் சுடரொளியாய் பரிணமிக்கும் இந்நாடு தமிழ் மொழிக்குத் தந்திருக்கும் தகுதி உயர்வானதும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததுமாகும்.

சிங்கப்பூர் அரசின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரத்துவ மொழிகளுள் தமிழும் ஒன்று . ஆங்கிலம், சீனம், மலாய் என்பன பிற அதிகாரத்துவ மொழிகள். கல்வித்துறையில் இங்குள்ள பாலர் பள்ளிகள் முதல் பல்கலைக் கழகம் வரை தமிழைப் பாடமாகப் பயில முடியும். பொது ஊடகங்களில் சிங்கை வானொலியின் ஒலி 96.8 அல்லும் பகலும் தமிழை ஏந்தி வருகிறது. தொலைக்காட்சியின் வசந்தம் சென்ட்ரல் தமிழ் நிகழ்ச்சிகளை நள்ளிரவு வரை நல்கிடக் காண்கிறோம். அச்சு ஊடகங்களில் தமிழவேள் கோ. சாரங்க பாணியவர்களால் 1935ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்ட 'தமிழ் முரசு' நாளேடு இன்றும் தொடர்ந்து வெளிவரும் ஒரே தமிழ் நாளிதழாக இங்குள்ள தமிழ்ச் சமூகத்தின் அடையாளமாகத் திகழக் காண்கிறோம்.

கலை, சமயம் மற்றும் சமூகப் பண்பாட்டு வளர்ச்சித் தளத்தில் 70க்கும் மேற்பட்ட சிங்கப்பூர் தமிழர் அமைப்புக்கள் தனித்தும் இணைந்தும் செயல் படுகின்றன. ஆண்டுதோறும் தமிழ்மொழி வளர்ச்சிக்கு ஊக்கம்தரும் வகையில் நிகழ்வுறும் தமிழ் மொழி விழா ஒரு மாத நிகழ்வாக உயர்கல்வி நிலையங்கள் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகள் இணைந்து தமிழ் வளர்ச்சி முயற்சியின் கூறாக இந்நாட்டில் நடத்தப்பட்டு வருகிறது.

இத்தகு பின்புலத்தில் தமிழர் பண்பாடு , கலை, சமூகம் மற்றும் தனி மனித ஒழுக்கம் சார்புடைய விழுமியங்கள் குறித்த புரிதல்களைத்

தெளிவுபடுத்தலும், நினைவூட்டுவதும், அவற்றைக் கட்டிக்காத்து வளர்த்தெடுப்பதும் சமகால மற்றும் எதிர்காலத் தமிழ்ச் சமூகத்திற்கு இலக்கியப்படைப்பாளர்கள் ஆற்றவேண்டிய கடமைகளுள் தலையாயதாகும். இப்பணியை முன்னெடுத்துச் செல்வதில் அச்சு ஊடகங்களில் தங்களின் தரமான ஆக்கங்களைப் பதிவுசெய்யும் எழுத்தாளர்கள் முன்னணியில் நிற்கின்றார்கள். இவர்களுள் புகழ்பெற்ற இரண்டு தமிழ்ச் சிறுகதை மற்றும் புதினப் படைப்பாளர்கள் ஜே. எம். சாலி , கமலாதேவி அரவிந்தன் ஆகியோர் சிங்கப்பூர் தமிழிலக்கியத் தளத்தில் தமக்கெனத் தனி முத்திரைப் பதித்துள்ளார்கள். தேர்ந்த கல்வி ஞானமும் , நிறைந்த அனுபவமும், தமிழ் மீதும் தமிழர் மீதும் மாளாத பற்றும் பாசமும் கொண்டுள்ள இவர்கள் தமது கருத்தாழமிக்கப் படைப்புகளால் தமிழ்ப் பண்பாட்டு விழுமியங்களை இங்குள்ள தமிழர் இல்லங்கள் தோறும் கொண்டு செல்லத் துணை நிற்கின்றார்கள்.இவ்விருபெரும் படைப்பாளிகளின் சிறுகதைகளில் மிளிரும் தமிழர் பண்பாட்டு விழுமியங்கள் குறித்த மதிப்பீடு இந்த ஆய்வுரையின் நோக்கம்.

### ஜே.எம். *சாலி*

அரை நூற்றாண்டுக்கும் மேலாகத் தமிழிலக்கிய வானில் இலங்கிடும் நட்சத்திர எழுத்தாளர் ஜே. எம். சாலி. இவரது எழுத்துலகப் பயணம் தமிழ் மண்ணில் தொடங்கி சிங்கப்பூரில் இன்றும் தொடர்கிறது. 1959இல் கண்ணன் இதழின் தொடர்கதைப் போட்டிக்கு இவர் எழுதிய முதற்கதை 'இரு கண்கள்'. இலக்கிய வெளியில் இவர் பயணிக்கவிருக்கும் தூரங்களை தொலை நோக்குடன் முன்னுரைக்கும் பொருத்தமானத் தலைப்பாக சாலியின் முதற்கதைக்கு இவர் தந்துள்ள தலைப்பே அமைந்துவிட்டது.

சிங்கப்பூர் மற்றும் மலேசிய நாளேடுகளில் வெளிவந்த சாலின் நெடுங்கதைகள் மற்றும் சிறு கதைகளான ' அலைகள் பேசுகின்றன (1971), அழகே ஆர்கிட் மலரே (1979), கவிதை தேடும் ராகம் (1981), நெஞ்சத்தைக் கொஞ்சம் தா (1982), நெருப்பு மலர் (1983), கனவுக் கன்னி (1983), ஆவிகள் அழைக்கின்றன ( 1985), தீண்டாதத் தென்றல் (1986), தேனிலவு ( 1987),வானம் தேடும் வெண்ணிலா (1987), புன்னகை மன்னன் (1987), மின்னல் பூ (1988), அழகிய முகங்கள் (1989), முகத்திரை (1994) போன்றவை இவருடைய பேசப்படும் படைப்புகளாகும்.

குடும்பச் சீர்மை, பெண்மை நலம், சமயம் மற்றும் ஆன்மீகத்தினை அடிநாதமாகக் கொண்டு அறம் வலியுறுத்தல், ஒழுக்கத்தின் விழுப்பம் பேசுதல், சமூகக் கட்டொழுங்கு குறித்தத் தீர்மானமானப் பார்வை,

நிலைபேறுடைய தமிழர் பண்பாட்டு விழுமியங்களை வலியுறுத்தல், பழியஞ்சப் பரிந்திடல், ஒப்புரவுடன் உயர் நோக்கில் வாழ்க்கைக் குறிக்கோள்களை எட்டிட விழைதல், போன்ற தமிழர் பண்பாட்டு விழுமியங்கள் சாலியின் ஆக்கங்களில் இழையோடக் காண்கிறோம்.

தமிழர் பண்பாடு, கலை மற்றும் சமூகச் சூழலிலிருந்து விட்டு நீங்கி இன அடையாளங்கள் மட்டுமே பெரும்பாலும் தாங்கி வாழும் புலம்பெயர் தமிழ் இளையர்கள் மற்றும் குடும்பத்தினர் தமிழர்தம் இனம், மொழி மற்றும் பண்பாட்டு அடையாளங்களை இனங்கண்டு அவற்றை அவர்களோடு இணைத்துவிடும் பண்பாட்டுப் பாலமாய் ஜே.எம். சாலின் படைப்புகள் அச்சு மற்றும் ஒலி/ஒளி ஊடகங்களில் மிளிர்கின்றன.

> சாலி சமூகத்தில் நிகழும் பிரச்சினைகளைத் தம் உலகளாவிய பார்வையால் பரிசீலித்துத் தீர்வுகளும் சொல்கின்றார். மதம் வேறாக இருந்தாலும் மனிதத்துவம் என்னும் பரந்த நோக்கில் இவர் கதைசொல்லும் செய்திகளும் நேர்த்தியும் இதயத்தைத் தொடும் வல்லமையுடன் அமைந்து கிடக்கக் காண்கின்றோம்

என்னும் இலக்கிய வீதி இனியவனின் கூற்றினை இவரது ஒட்டுமொத்த படைப்பாக்கங்களுக்கும் வழங்கப்பட்ட பொது மதிப்பீடாகக் கொள்ளலாம்.

### கமலாதேவி அரவிந்தன்

தனது 15ஆம் வயதில் சங்க இலக்கியம் குறித்த கட்டுரைப் போட்டியில் கலந்துகொண்டதிலிருந்து தொடங்கியது கமலா தேவியின் இலக்கியப் பயணம். இன்று சிங்கப்பூர், மலேசியா , தமிழகம் மற்றும் கேரளத்தில் அறியப்படும் தரமான இலக்கியப் படைப்பாளர் கமலா தேவி பிறப்பால் மலையாளி. சிறுகதைகள் மற்றும் புதினங்களில் மட்டுமின்றி வானொலி, தொலைகாட்சி, மேடை நாடகங்களென்று பல்வேறு நிகழ்த்துக் கலைத்துறைகளில் ஆழக்கால் பதித்துள்ள கமலாதேவி தமிழ்ச் சிறுகதை மற்றும் புதினப் புனைவுலகின் திறனாய்வு பிரம்மாக்களான கடலோடி நரசையா வெங்கட் சுவாமிநாதன் போன்றவர்களின் பாராட்டுதல்களைப் பெற்ற திறன்மிக்க படைப்பாளி.

எழுத்துக் கலையின் நுட்பங்கள் கைவரப்பெற்ற கமலாதேவியின் சிறுகதைப் படைப்புக்களில் கதை சொல்லும் திறன், நவரச பாவங்களை எழுத்தில் கொண்டுவரும் ரசவாதம், கதைகளில் ஊடாடும் உயர் நோக்கு போல்வன தரமான வாசகர்களைக் கவனிக்க வைக்கின்றன. ஒரு தேர்ந்த உணவுப் படைப்பாளியின் நேர்த்தியும் திறனும் அவர் படைத்திடும்

உணவிலும், நாவின் நுனிமுதல் அடிவரை தங்கி நிற்கும் அதன் சுவையிலும், உணவை பக்குவமாய் அவர் பரிமாறும் பக்குவத்தில் உண்போன் காணும் நிறைவிலும் வெளிப்படுவதுபோல் கமலாதேவி தம் கதைகளில் சொல்லும் கருத்துகளும், அவர் கதைவிரிக்கும் களங்களும், கதைமாந்தரும் அவர்கள் வெளிப்படுத்தும் உணர்வுகளும் எவ்விதப் பாசாங்குகளுமில்லாமல் உயர்தரத்தில் மிளிரக் காண்கிறோம். இவரது கதைகள் வாசித்து மறக்கப்படும் சராசரி படைப்புகளல்ல. படித்து உள்வாங்கி இதயத்தில் தக்க வைத்துக்கொள்ளும் தகுதியுள்ள படைப்புகள்.

கமலாதேவியின் அத்தனை சிறுகதைகளிலும் மையக் கருத்தாக மனித நேயம் ஊடாடக் காண்கிறோம். நுளம்பு, மாம்பழப் புளிசேரி , சூரிய கிரஹணத் தெரு, விரல், தாகம், சிதகு, புரை, சார் !சார்! ஒரு கதை கேளுங்க சார்!, ஒரு நாள் ஒரு பொழுது, என்பன 2012-ல் சிங்கப்பூர் மலேசிய ஏடுகளில் வெளிவந்த கமலா தேவியின் முத்தான பத்து முத்திரைக் கதைகள்.. இவற்றுள் பல இலக்கிய அமைப்புக்களாலும் வாசகர்களாலும் பாராட்டும் பரிசுகளும் பெற்றவை.

தமிழர் பண்பாட்டு விழுமியங்களாக இவரது சிறுகதைகளில் விருந்தோம்பல் (மாம்பழப் புளிசேரி, ஒரு நாள் ஒரு பொழுது ), முதுமையை மதித்தல் (சார் சார் ஒரு கதை கேளுங்க சார், புரை), ஒழுக்கக் கட்டொழுங்கு வலியுறுத்தல் (சிதகு, சூரிய கிரஹணத் தெரு ), புலம் பெயர் சமூகம் சந்திக்கின்ற சவால்களைத் தியாகம் மற்றும் திறன் வளர்த்துக் கொள்வதன் மூலம் எதிர்கொள்ளல் (நுளம்பு, விரல்), பொது ஒழுக்க முரண்களை நேர் செய்தல் (இட்டிலி), பெண்மை பற்றிய புரிதல்கள் (தாகம்) என்பவற்றை அவர் தமது ஆக்கங்களில் வலியுறுத்துகின்றார்.

கமலா தேவியின் படைப்புகள் பொழுது போக்கு எழுத்துக்களாக இல்லாமல் சமூக நடப்பியல் நிதர்சனங்களை வெளிச்சம் போட்டுக் காட்டும் பாங்கில் அமைந்துள்ளவை. இதற்காக அவர் தேர்ந்தெடுக்கும் கதைக்களங்கள், வாழ்புலம், பண்பாட்டு வழக்காறுகள் கற்பிதங்கள் சார்ந்த புனைவுகளாய் இல்லாமல் தமிழ்ச்சமூகம் உணர்ந்து தனதாக்கிக் கொள்ள வேண்டிய நிலைபேறுடைய பண்பாட்டு விழுமியங்களைப் பதிவு செய்கின்றன.

## முடிவுரை

சிங்கப்பூர் அரசாங்கத்தின் உன்னத விருதாகிய கலாச்சாரப் பதக்கத்தினை சிங்கப்பூர் அதிபர் டாக்டர் டோனி டான் அவர்களிடமிருந்து சென்ற ஆண்டு பெற்று தமிழ்ச் சமூகத்தைப் பெருமை கொள்ள செய்த

எழுத்தாளர், இதழாளர் ஜே. எம். சாலியும் பல்கலைக்கழகங்கள் மற்றும் பல்வேறு இலக்கிய அமைப்புக்களின் பரிசுகளும் பாராட்டுதல்களும் பெற்று வரும் பெருமைக்குரிய எழுத்தாளர் கமலாதேவி அரவிந்தனும் சிங்கப்பூர் தமிழிலக்கிய வெளியில் தனித்துவமிக்க படைப்பாளர்கள். நம் பண்பாட்டு அடையாளங்களை முன்னெடுத்துச் செல்லும் எழுத்துச் சிற்பிகள்.

## துணை நூல்கள்


1. முனைவர் க. மோகன், சிங்கப்பூர் சிறுகதைகள்- திறனாய்வு, நிதீஷ் பிரபா பதிப்பகம் காரைக்குடி, 2009.
2. சிங்கப்பூர் தமிழிலக்கியம் - ஒரு நூற்றாண்டு, சிங்கப்பூர் தமிழ் எழுத்தாளர் கழகம் சிங்கப்பூர்.

# சிங்கப்பூர்த் தமிழ் இலக்கியமும் சமூகமும்

முனைவர் சே. மோகனசுந்தரி
*கௌரவ விரிவுரையாளர்*
*பச்சையப்பன் மகளிர் கல்லூரி*
*காஞ்சிபுரம்*

தமிழ்நாட்டில் பிறந்து சிங்கப்பூருக்குப் புலம் பெயர்ந்து சென்றவர்கள், அங்கு வாழும் தமிழ் மக்களின் வாழ்க்கை நிலையினையையும் எதிர் கொள்ளும் சிக்கல்களையும் இலக்கியங்களின் வாயிலாக வெளிப்படுத்தியுள்ளனர். சிங்கப்பூர்த் தமிழ்ச் சிறுகதைகளில் படைப்பாளர்களின் இலக்கிய ஆர்வம், வாழ்க்கை ஈடுபாடு, படைப்பு சக்தி ஆகியவை ஓர் அங்கமாகக் காணப்படுகின்றது. மனித வாழ்க்கையில் நடைமுறை வாழ்க்கைக்கு அப்பால் மனித மனம் சார்ந்த வாழ்க்கையில் கடல் போலப் பல செய்திகள் இருக்கின்றன என்பதனை மையமாகக் கொண்டு பல சிறுகதைகள் உருவாக்கியுள்ளார்.

மனித குலத்தின் ஆசைகளையும், கோபதாபங்களையும் வெளிப்படையாகச் சொல்லும் சக்தியாக சிறுகதை இலக்கியம் இருந்து வருகின்றது. பேச்சு மொழியும், சூழ்நிலைகளும், சம்பவங்களும் சிறுகதையின் வாயிலாக வெளிக்கொணரப்படுகின்றது. குடும்பம், குடும்ப உறவு, மொழி, கலாச்சாரம் இவற்றின் அடிப்படையில் சிறுகதைகள் எழுதப்பட்டுள்ளன. சிங்கப்பூருக்கு இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு தமிழர்கள் குடியேறியுள்ளனர். அம்மக்களின் வாழ்க்கையில் தமிழ்நாடும், தமிழ் மொழியும் ஒரு முக்கிய அம்சமாகவே இருந்து வருவதை சிறுகதைகள் உணர்த்துகின்றன. சமூகச் சீர்திருத்தக் கருத்துகளை முன்னெடுத்துச் செல்வதற்குச் சிறுகதைகள் பெரிதும் துணை புரிகின்றன. கீழ்க்காணும் சிங்கப்பூர்த் தமிழ் இலக்கியமும் சமூகமும் என்றும் ஆய்வுக்கட்டுரைக்குச் கீழ்க்காணும் ஆசிரியரின் சிறுகதைகள் களமாக அமைகின்றன. மற்றொன்று - சே.வெ. சண்முகம், உதிரிகள் - புதுமைதாசன், 'நாடோடிகள்;' - இராம கண்ணபிரான், மதிப்பீடுகள் - நா.கோவிந்தசாமி, அகதி-உதுமான் கனி, சுற்றிப்பார்க்க வந்தவர் - மா.இளங்கண்ணன், இச்சிறுகதையில் சமூகம் சார்ந்த கருத்துகளை வெளிப்படுத்தப்பட்டுள்ள தன்மையினை இக்கட்டுரை விளக்குகிறது.

"மற்றொன்று" என்ற சிறுகதையின் ஆசிரியர் சே.வெ. சண்முகம். 1933ஆம் ஆண்டில் தமிழ் நாட்டில் பிறந்து சிங்கப்பூரில் வசிக்கும் இவர்

ஐம்பது ஆண்டுகளாகச் சிறுகதைகள், நாடகங்கள் எழுதி வருகிறார். வானொலி நாடகங்கள், மேடை நாடகங்கள் பல இயற்றியுள்ளார். இச்சிறுகதையின் ஆசிரியர் சமூகத்தில் பெண்களுக்கு ஏற்படுகின்ற இன்னல்களைச் சுட்டிக் காட்டியுள்ளார். கதையில் இடம் பெறும் அம்மா என்னும் கதாப்பாத்திரம் திருமண வாழ்க்கையில் பட்ட துயரத்தை ஒரு கடிதம் மூலம் கதை சொல்லிச் செல்வதுபோலக் கதை அமைந்துள்ளது.

தமிழ்நாட்டில் ஒரு சிற்றூரில் பிறந்த பெண், சிங்கப்பூர் மாப்பிள்ளைக்குத் திருமணம் செய்து வைக்கப்படுகிறாள். ஆயிரம் கனவுகளோடு இல்லற வாழ்க்கைக்குள் நுழைந்த பெண்ணுக்கு வேதனையும், சோதனையும் நிறைந்த வாழ்க்கையாக அமைந்துவிடுகிறது. சிங்கப்பூர் மாப்பிள்ளை என்றவுடன் அந்தப் பெண்ணின் தந்தை, தாய் இருவருக்கும் மகிழ்ச்சி ஏற்படுகிறது மகிழ்கின்றனர். உள்ளம் மகிழ்ந்து அறிவுரைகளைக் கூறுகின்றனர். உள்ளம் மாமியார் மெச்சுற மருமகளா நடக்கனும்! மாமனாரை மதிக்கணும்! மற்றவங்ககிட்டேயும் நல்லபேர் வாங்கனும்! எப்பவும் பொறுமையாக இருக்கணும்! எல்லாரையும் அனுசரிச்சுக்கணும்! கணவன் மனசறிஞ்சு கடமையைச் செய்யணும்! என்று அறிவுரைகளைக் கூறுகின்றனர். அறிவுரைகளை வேதவாக்காக நினைத்து வாழ்க்கையில் அடி எடுத்து வைத்த பெண்ணுக்குத் திருமணமென்னும் பூந்தோட்டம் புழுதி மேடாகிப் போகிறது.

*பெண்ணடிமை*

திருமணம் ஆன மறுநாளே வெளியே போகக் கூடாது. அக்கம் பக்கத்தில் உள்ளவர்களுடன் பேசக்கூடாது என்ற கட்டுப்பாடுகள்! இந்தக் கட்டுபாடுகளை மீறாமல் இருக்கின்றாளா என்பதனைக் கண்காணிக்க ஒரு கூட்டம் இருப்பதாகக் குறிப்பிடுகிறாள். இதன்மூலம் அந்தப் பெண்ணின் நடமாடும் உரிமை சுதந்திரமான பேச்சுரிமையெல்லாம் பறிபோன நிலை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தந்தை சொல்லே மந்திரம் என்று வாழும் கணவன், குடும்ப உறவுகளில் சிக்குண்டு மனைவியின் மீது அன்பு காட்டாதவனாய் வாழ்கிறான். இவன் திருமணம் செய்துகொண்டது வீட்டிற்கு ஒரு ‘வேலைக்காரி’ தேவை என்ற நிலையில் சம்பளமில்லாத வேலைக்காரியாக மனைவியைக் கருதுகின்றான். இச் செயல்கள் அவனின் ஆணாதிக்கப் போக்கினை வெளிப்படுத்துகின்றது. குடும்பநிலையில் மாமனார், மாமியார், நாத்தனார், கணவர், அனைவரும் சேர்ந்து திட்டுவதும், அடிப்பதுமாகச் செயலைச் செய்கின்றனர். பெரும் சித்திரவதைக்கு அப்பெண் ஆளாகிறாள்.

படித்து ஆசிரியராக வேலை பார்த்தவள் திருமணத்திற்குப் பிறகு கணவன் வீட்டில் அடக்கப்படுவது கண்டு மனம் குமுறுகிறாள். இதற்கெல்லாம் காரணம் முன்வினை பயனாக இருக்கக்கூடும் என்று நம்பிக்கை கொள்கிறாள். இதிகாசங்கள், புராணங்கள், காப்பியங்கள், திருக்குறள் இவையெல்லாம் ஊழ்வினையின் பயனை அழுத்தமாகச் சொல்கிறது. ஆகையால் நான் அனுபவித்தது எல்லாம், 'ஊழ்வினைப் பயனே' என்று குறிப்பிடுகிறாள். இதன் மூலம் ஒவ்வொருவரின் வாழ்க்கைக்கு ஊழ்வினைப் பயனே காரணம் என்ற கருத்தை ஆசிரியர் உணர்த்தியுள்ளார்.

அண்ணி, நாத்தனாருக்குத் தேநீர் கொடுக்கும்போது தேநீர் சுவையில்லை என்று தேநீரைத் தலையில் கொட்டி அண்ணியை நாத்தனார் துன்பப்படுத்துகிறாள். இதனைத் தாங்க முடியாதவளாய் நாத்தனாரைக் கீழே தள்ளுகிறாள். ஆனால் அவளைக் குடும்பமே ஓடி வந்து தாக்குகிறது. 'இவ்வளவு திமிரா உனக்கு' என்று 'அத்தனை பேய்களும் கூடி என்னை அடித்து நொறுக்கின' என்று பட்ட துயரத்தை எடுத்துக் கூறுகிறாள். இந்த நிலையில் கூட கணவன் மனைவி பக்கம் பேசவில்லை. வீட்டில் யாரையாவது எதிர்த்துப் பேசினால் 'உன்னை விவாகரத்துப் பண்ணிவிடுவேன்' என்று மிரட்டுகிறான். வீட்டைவிட்டு நான்கு மாதக் கருவை வயிற்றில் சுமந்து வெளியேறுகிறாள். அவளுக்குப் பிறந்த பெண்குழந்தை பூங்கொடியை வளர்த்துப் படிக்க வைக்கிறாள். திருமணத்திற்கு முன்பு அவளுக்கு உடல் நலம் சரியில்லாத காரணத்தால் பூங்கொடிக்கு ஒரு மடல் எழுதுகிறாள். உனக்குத் திருமணம் உறுதியாகும் நிலையில் இதனைப் படி என்று கூறுகிறாள். கடிதத்தில் அவள் தன் வாழ்க்கையில் பட்ட துயரத்தையெல்லாம் சுட்டிக்காட்டுகிறாள். இதன் வாயிலாகத் தனக்கு ஏற்பட்ட நிலை தன் மகளுக்கும் வரக்கூடாது என்பது அவளது எண்ணமாக அமைகிறது. மகளிடம் துணிச்சலையும், தன்னம்பிக்கையையும் வளர்க்கும்படியான வைர வரிகள் மதிப்போடும், மானத்தோடும் கௌரவத்தோடும், 'தலைநிமிர்ந்து வாழ வேண்டுமானால் உன் கைகளை மட்டுமே நம்பு' என்று குறிப்பிட்டு இது உனக்கு மட்டுமல்ல, பெண்குலத்துக்கே ஒரு பாடம்' என்று கடிதத்தில் குறிப்பிடுகிறாள்.

பூங்கொடி காதலித்த ராஜா நல்லவனா, கெட்டவனா என்பதனை அம்மாவின் கடிதம் மூலம் அறிந்துகொள்ள முற்படுகிறாள். ராஜா ஆணாதிக்கப் போக்கிலேயே பூங்கொடியிடம் பேசுகிறான். வேலைக்குப் போகக் கூடாது, திருமணத்திற்குப் பிறகு உன் வீட்டை விற்று விடு, என் குடும்பத்தார் மீது எனக்குப் பாசம் அதிகம் என்று கூறுகிறான். பூங்கொடி உடனே 'மற்றொன்று' இருப்பதை நினைவுக் கொள்கிறாள். அம்மாவின்

அறிவுரைப்படி அந்த வெளிச்சத்தில் நிற்கத் துணிகிறாள். பெண்கள் பெருமையோடு வாழ அவரவர் கைகளே அவர்களுக்கு உதவி என்பதனைப் பூங்கொடி உணர்ந்து செயற்பட்ட விதத்தினை இச்சிறுகதையின் மூலம் அறிய முடிகிறது. சமூக அமைப்பில் பெண்கள் முன்னேற்றம் அடைய வேண்டும். பெண்கள் மதிக்கப்படுதல் வேண்டும் என்பதனை இச்சிறுகதையின் மூலம் ஆசிரியர் உணர்த்துகிறார்.

**உதிரிகள் என்னும் சிறுகதையின் ஆசிரியர் புதுமைதாசன்.** இவரது இயற்பெயர் பி. கிருஷ்ணன். 1932ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் பிறந்தவர். சாமிநாதன் என்ற கதாப்பாத்திரம் பொது நல நோக்குடையவராகக் காணப்படுகிறார். பெண்களைக் கிண்டல் செய்யும் மனிதர்களை எதிர்க்கின்றார். பெண்களின் உரிமையைப் பறிக்கின்ற ஆணாதிக்கச் சமுதாயம் ஒழிக்கப்பட வேண்டும் என்பது ஆசிரியரின் கருத்தாக விளங்குகிறது. சமூக நிலையத்தில் நடைபெற்ற கலைநிகழ்ச்சியில் ஒரு பெண் பாடிக்கொண்டு இருக்கிறாள். அந்தப் பெண்ணைப் பற்றிய தனிப்பட்ட கருத்துகளை விமர்சனம் செய்கின்ற கும்பலைக் கண்டு கோபப்படுகிறார் சாமிநாதன். மேலும், அந்த வன்முறைக் கும்பலிடம் 'ஏண்டா வேலையத்த பசங்களா! மரம் மாதிரி உடம்பை வளத்து வச்சுக்கிட்டு இப்படிக் காலித்தனமா நடக்கிறீங்களே, உங்களுக்கு வெட்கமா இல்லை? மரம் முத்துனா வைரம், மனுசன் முத்துனா புத்திங்கிறது தெரியுமாடா உங்களுக்கு? ஏன்டா உங்களுக்குக் கொஞ்சம் கூடப் புத்தியில்லே? என்று கேள்வி கேட்கிறார். அந்த வன்முறைக் கும்பல் வேறு யாருமில்லை. அவர்களும் தமிழ் இனம் என்பதுதான் வேதனைக்குரிய செய்தியாகிறது.

தமிழ் இனத்தைச் சார்ந்தவர்களின் நடவடிக்கைகளை இச் சிறுகதையின் வாயிலாக ஆசிரியர் சுட்டிக்காட்டியுள்ளார். தமிழனாய் இருந்து தமிழ்ப் பற்றற்றுப் போய்க் கொச்சை மலாய் பேசும் தமிழனின் நிலை வெளிப்படுத்தப்பட்டுள்ளது. சாமிநாதனைப் பார்த்து அந்த உதிரிகளின் தலைவன் 'ஏய் நீ எங்க பஸால்லே மாஸோ பண்ணாதே! நீ ஓராங்துவா, நீ எங்ககிட்ட தஹான் பண்ணமாட்டே, ஜாகபாய் பாய்' என்று மிரட்டுகிறான்.

இதன் பொருள் (எங்கள் விஷயத்தில் தலையிடாதே, நீ கிழவன், நீ எங்களிடம் தாக்குப் பிடிக்க மாட்டாய் எச்சரிக்கையாக இரு) பொருளாதாரத்திலும், கல்வியிலும் பின் தங்கிய தமிழ்க் குடும்பங்களில், தமிழ் மொழி பேசாமல் மலாய் மொழிப் பேசும் மக்கள் இருப்பதனைக் கண்டு சாமிநாதன் வருத்தப்படுகிறார். கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்த குடியின் தமிழ்க்குடியின் நிலை இவ்வாறாகி விட்டது என்று சாமிநாதன் கவலையடைகிறார்.

சாமிநாதன் அந்த உதிரிகளிடம் விமர்சனத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்ததன் காரணம் சாமிநாதன் மகள் வயது பதினைந்து, சமூக நிகழ்ச்சியின்போது நடைபெற்ற கலை நிகழ்ச்சியில் இழிவாகப் பேசிய கும்பலால் ஏற்பட்ட அவமானத்தைத் தாங்கிக் கொள்ள முடியாமல் பதினைந்தாவது மாடியிலிருந்து கீழே விழுந்து சாமிநாதன் மகள் உயிரைப் போக்கிக் கொள்கிறாள். சமூக அமைப்பில் பெண்கள், ஆண்களின் கிண்டல் பேச்சுகளால் உயிரை விடும் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர் என்ற செய்தியை இச்சிறுகதையின் மூலம் உணர முடிகின்றது.

**'நாடோடிகள்' என்னும் கதையில் இராம கண்ணபிரான்** 1943இல் பிறந்தவர். சிறுகதைகள், நாவல்கள் பல எழுதியவர். நாடோடிகள் சிறுகதையில் சமூகத்தின் மீது பற்று உடையவராகப் பார்த்தீபன் காணப்படுகிறார். பார்த்தீபன் அக்கா மகள் சாந்தாவைத் திருமணம் செய்து கொண்டு வாழ்கிறார். எளிய வாழ்வு, இனப்பற்று, மொழிப்பற்று உடையவராகக் காணப்படுகிறார். இவருடைய நண்பர் தனபால், மனைவி பத்மினி, மகள் ரூபா இவர்கள் ஆடம்பர வாழ்க்கை வாழ்ந்து இறுதியில் குடும்பம் சிதைவுற்ற நிலையினை இச்சிறுகதை எடுத்துக்காட்டுகிறது.

***தமிழ்ச் சங்கம்***

தமிழ்ச் சமூகத்திற்குப் பாடுபடக் கூடியவராகப் பார்த்தீபன் காணப்படுகிறார். தமிழ் முன்னேற்ற மன்றம் என்ற அமைப்பைத் தோற்றுவித்து மொழி, இலக்கியம், கல்வி, தொழில் எனப் பல உட்பிரிவுகளை உள்ளடக்கிய அமைப்பு இயங்குவதற்குத் துணை நிற்கின்றார். இரண்டாம் நிலைத் தமிழ் மக்களின் வாழ்க்கை முன்னேற்றம் குறித்த சிந்தனையே பார்த்தீபனிடத்தில் மேலோங்கிக் காணப்படுகிறது. தன் சொந்த முன்னேற்றம் என்பதோடு வாழாமல் நம் இன முன்னேற்றமும் வேண்டும் என்று பார்த்தீபன் ஆசைப்படுகிறார்.

பார்த்தீபன் ஒரே கம்பெனியில் தொடர்ந்து வேலை பார்க்கிறார். தலைமை வழக்கறிஞர்களுக்கு அந்தரங்கக் காரியதரிசியாகப் பதவி உயர்வு பெற்று அதன் மூலம் கிடைக்கும் பணத்தைத் தன் இன மக்களுக்காகச் செலவழிக்கும் எண்ணம் உடையவராகக் காணப்படுகிறார்.

மனிதப் பிறவியின் பயன் தொண்டு செய்வதே என்ற சமூகக் கடமையுணர்வுடன் தன்னை அர்ப்பணித்துக் கொள்கிறார். (ஒரு இனம் அழிந்து போவதற்கு அம்மொழி பேசும் மக்களே காரணமாக இருக்கக் கூடாது என்பதனை இச்சிறுகதை எடுத்துக் கூறுகிறது. மேல்தட்டு தமிழ் மக்கள் தமிழ்மொழியைப் புறக்கணிக்கும்போது அம்மொழி இறந்து விடுமோ

என்ற அச்சம் பார்த்தீபனிடையே காணப்படுகிறது. நாட்டுப்பற்றை உதறி விட்டு, வேறு நாடுகளுக்குச் செல்லும் தமிழர்களைக் கண்டு கலக்கம் கொள்கிறார். ஆப்பிரிக்க யூனியனைச் சேர்ந்த தமிழர்கள் தாய் மொழியைப் பிரஞ்சு மொழி மூலம் கற்க நேர்ந்த அவல நிலையை எண்ணிப் பார்த்தீபன் வேதனைப்படுகிறார். தனபால் அலுவலகத்தில் வேலை பார்க்கும் ஒருவரிடம் காலணியால் அடி வாங்கியச் செய்தி செய்தித் தாள்களில் வெளிவந்ததைக் கண்டு வருத்தப்படுகிறார். தனபாலின் அதிகாரமும், ஆதிக்கத் தன்மையும் இந்த இழிநிலைக்குத் தள்ளியிருக்கக் கூடும் என்று மனம் வருந்துகிறார். இதனை தாங்கிக் கொள்ளாத தனபால் சிங்கப்பூரை விட்டு வெளியேறி ஆஸ்திரேலியாவிற்கு செல்கிறார். தன் மகள் அமெரிக்கர் ஒருவருடன் காதல் கொண்டு ஓடி விடுகிறாள். இதனை எண்ணி வருந்தி தனபாலின் மனைவி இறந்து விடுகிறாள்.

தனிநபராக வசித்து வந்த தனபாலுக்கு புத்தி வந்து பார்த்தீபனுக்கு ஒரு கடிதம் எழுதுகிறார். அதில் தன் இன மக்களுக்கு ரூ.30,000 (ரூபாய் முப்பதாயிரம்) வெள்ளி அனுப்புகிறேன். அதை நீ தமிழ் முன்னேற்ற கழகத்திற்கு தான் தரும் தொகையாக வைத்துக்கொள். நாட்டுப்பற்று, மொழிப்பற்று, இனப்பற்று இவற்றையெல்லாம் மறந்த நிலையில் வாழ்ந்ததை எண்ணி வருந்துகிறேன். நீ ரூபாவிற்கு வழங்கிய பிறந்த நாள் பரிசான திருக்குறள் எனக்குத்தான் உதவியது. தனிமை என்னை வள்ளுவனிடம் அழைத்துச் சென்றது. இவ்வாறு கூறி ஆறுதல் அடைகிறாள்.

### தனபாலின் கடமை உணர்வு

தனபால் தன் நிலையை மடலின் மூலம் கூறும்போது எங்கள் குடும்பமே நாடோடிகளைக் கொண்ட கும்பலாக ஆகிவிட்டது. நல்லதோ, கெட்டதோ குடியேறிய நாட்டிலேயே நிலையாகத் தங்கி வாழ்க்கையின் உண்மை மதிப்புகளை மதித்து, தம் தாய்மொழி, தமிழ் பண்பாடுகளுடன் உறுதியுடன் வாழ்ந்து, பிற இனத்தாரோடும் ஒன்றிப்பழகி தேச முன்னேற்றத்திற்குத் தொண்டு புரிவதே தமிழரின் தலையாய கடமையாக இருத்தல் வேண்டும். நாடோடித் தமிழர்களால் நிரந்தரப் பயன் ஏதும் இல்லை என்று மடலில் கூறுவது அவன் மனமாற்றம் அடைந்ததை உணர்த்துகிறது. இறுதியில் தமிழ்த் தொண்டு புரிவதில் ஈடுபாடு உடையவராக மாறுகிறார்.

மதிப்பீடுகள் நா.கோவிந்தசாமி சிறுகதை ஆசிரியரின் முன்னோடி எனலாம். இலக்கியத்திற்காக விருது பல பெற்றவர். நாகப்பட்டினத்திலிருந்து பிரிட்டிஷ்காரன் மூலம் குற்றக் கைதியாக சிங்கப்பூர் வந்த நாகை சிவகாம சுந்தரர் பற்றிய செய்தியை இச்சிறுகதை விளக்குகிறது. (சிவகாமசுந்தரர்

சிங்கப்பூரில் மலாக்காச் செட்டிச் சமூகத்தைச் சார்ந்த பெண்ணை திருமணம் செய்து கொண்டு சிங்கப்பூரில் தங்கி விடுகிறார். இவரின் நிலையைப் பேரன் கார்த்திகேயன் அவனின் நண்பன் மூலம் மதிப்பீடு செய்வது போல் கதையமைந்துள்ளது.

கார்த்திகேயன் தாத்தாவின் கையெழுத்துப் பிரதியில் குறிப்பிடப் பட்டிருந்த செய்திகள் மூலம் சிவகாமசுந்தரரின் வாழ்க்கை பற்றிய செய்திகளைப் புரிந்து கொள்ள முடிகிறது. சிங்கப்பூருக்குக் குற்றக் கைதிகளாக வந்தவர்களை 1873ஆம் ஆண்டு இந்த நாட்டுக்கு ஆபத்தானவர்கள் இல்லையென்று தெரிந்த பின்பு விடுவிக்கப்படுகிறார்கள். அதில் சிவகாம சுந்தரர் நண்பர் லத்திப் இருவரும் தொழில் செய்ய ஆரம்பித்தனர். ஆனாலும், மக்கள் அவர்களை அடிமைகளைப்போல் கேவலமாகப் பார்க்கும் நிலை காணப்படுகிறது. விடுதலையாகி வெளியே வந்த பிறகும் 'கிள்ளிங் கிள்ளிங்' என்று அழைப்பது சிவகாமசுந்தரருக்கு மன வேதனையைத் தருகிறது. மலாய் மக்களும் சீனர்களும் கிள்ளிங் என்று அழைத்தால் கூட பரவாயில்லை, தமிழ் பேசும் தமிழர் இனமும் எங்களைக் 'கிள்ளிங்' என்று அழைப்பது கண்டு வருத்தப்படுகிறேன் என்று குறிப்பிடுகிறார்.

சிவகாமசுந்தரரின் நண்பர் லத்தீப் குடும்ப வாழ்க்கையில் ஈடுபடத் தொடங்கிக் கடும் உழைப்பால் பணக்காரர் ஆகிவிடுகிறார். சிவகாமசுந்தரர் கவிதைகளிலும், கனவுகளிலும் மயக்கம் கொண்ட இவர் செல்வந்தர் ஆக முடியவில்லை. ஓர் இந்தியத் பெண்ணைக்கூட திருமணம் செய்ய இயலவில்லை என்பது அவருக்குத் துன்பத்தைத் தருகிறது. பிரிட்டிஷ் குற்றக் கைதி என்ற அடையாளத்தை நீக்கிய பிறகு சமூகம் அவருக்கு ஒரு மதிப்பை அளிக்கிறது. அதன்பிறகு அவர் மலாக்காச் செட்டிக் குடும்பத்துப் பெண்ணைத் திருமணம் செய்து கொள்கிறார்.

1888ஆம் ஆண்டிற்குப் பிறகு பலரோடு பழகும் வாய்ப்புக் கிட்டுகிறது. 'துபாஸ்' சதாசிவப்பண்டிதரோடும், சிங்கை நேசன் ஆசிரியர் மகதும் சாய்ப்போடும் பழக்கம் ஏற்பட்டது. அவர்களிடம் பிரிட்டிஷ் குற்றக் கைதி என்று சொல்வதனை அவர் விரும்பவில்லை. ஏனெனில் இவர்களும் சமூகத்தில் குற்றம் புரிந்த மனிதனைப் பார்ப்பது போல் பார்க்கத் தொடங்கி விடக்கூடாது என்பது சிவகாமசுந்தரரின் எண்ணமாக விளங்குகிறது. சிங்கப்பூரில் உள்ள கட்டட வளர்ச்சிக்கு இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்ட குற்றக் கைதிகள் பலரும் பெரும் பங்காற்றியுள்ளனர் என்பதனை நினைவுபடுத்திப் பார்க்கிறார்.

எம்பிரஸ் பிளேசில் இருக்கும் அரசாங்க அலுவலகம் ஆண்ரூஸ் தேவாலயம் அதிபர் மாளிகை, சிங்கப்பூர்க் கட்டட வளர்ச்சிக்குத் தங்கள் உழைப்பையும், உயிரையும் கொடுத்த கைதிகளின் நிலையை எண்ணி சிவகாமசுந்தரர் வருத்தப்படுகிறார். சிங்கப்பூரின் வளர்ச்சிக்குத் தன் உடலையும், உயிரையும் கொடுத்த குற்றக் கைதிகள் சமூகத்தில் பலரால் புறக்கணிக்கப்பட்ட விதத்தை இக்கதை உணர்த்துகிறது.

அகதி - எஸ். உதுமான்கனி 1957ஆம் ஆண்டில் பிறந்த இவர் இளையவன், என்ற பெயரில் புனைகதைகள் எழுதி வருகிறார். 'அகதி' சிறுகதை சிங்கப்பூர்த் தமிழ்ச் சிறுகதைத் தொகுப்பில் இடம் பெற்றுள்ளது. வழக்கறிஞராகப் பணியாற்றுகிறார். அகதி என்னும் சிறுகதையில் கிறிஸ்தபர் என்பவன் பொது இடத்தில் ஒரு பெண்ணிடம் ரோஜாவைக் கொடுத்து நீ மிகவும் அழகாய் இருக்கிற உன்னை எனக்கு மிகவும் பிடிச்சிருக்கு என்று தன் அன்பை வெளிப்படுத்துகிறான். அந்தப் பெண் அவனை பைத்தியம் என்று கூறி எல்லோரையும் கூட்டி கிறிஸ்தபரை அவமானப்படுத்துகிறாள். அந்தக் கூட்டத்தில் ஒருவன் கிறிஸ்தபரை அடிக்கிறான். அதற்காக கத்தரிகோலால் அவனைக் கிறிஸ்தபர் குத்துகிறான். அத்தனை பேரும் கிருஸ்தபரை பைத்தியம் என்று கூறுகிறார்கள். பைத்தியம் என்று அழைத்தவுடன் கடையில் உள்ள சாமான்களையும், கண்ணாடிகளையும் கிறிஸ்தபர் போட்டு உடைத்துவிடுகிறான். அதற்காக ஒன்பது மாதம் சிறைத் தண்டனை அனுபவிக்கிறான்.

சுய கௌரவம் பாதிக்கக் கூடாது என்று வாழ்பவனாகக் கிறிஸ்தபர் விளங்குகிறான். சிகரெட், மது, சூதாடுவது என்று எந்தக் கெட்ட பழக்கமும் அவனிடம் கிடையாது. கிறிஸ்தபர் சிறையிலிருந்து விடுவிக்குமாறு அம்மாவிடம் கெஞ்சுகிறான். அம்மா வழக்கறிஞர் லிம் என்பவரைத் தன் மகனுக்காக நியமிக்கிறாள். ஆனால் நீதிபதி போலீஸ் காவலர்கள் எல்லோரும் மனநிலை சரியில்லாதவன் என்று கிறிஸ்தபரைக் கூறுகின்றார்கள். வாழ்க்கை அடிக்கடி தள்ளிப் போகும்போது, எப்போது நமக்கு விடுதலை கிடைக்கும் என்ற ஏக்கம் அவனிடையே காணப்படுகிறது.

நீதிமன்றத்தில் பலர் மத்தியில் இவரை மனம் நலம் பாதித்தவராகக் கருதி மனநோய் சோதனைக்காக மருத்துவரிடம் காண்பிக்க வேண்டும் என்று நீதிபதி கூறுகிறார். வழக்குத் தள்ளிப் போடப்படுகிறது. அவனின் விடுதலை, கனவு ஆகப் போகிறது. இதனைக் கண்டு நெஞ்சம் குமுறுகிறான். 32 வயதில் திருமணமாகாத ஒருவன் தனக்கு ஏற்பட்ட காதல் உணர்ச்சியை வெளிப்படுத்துகிறான். இதனையறியாத சமூகம்

அவனைப் பைத்தியக்காரன் என்று முத்திரையிடுகிறது. இதனைக் கண்ட கிறிஸ்தபர் மனம் வேதனைப்படுகிறான். உறவுகள்கூட உதவவில்லை.

போலிஸ் வேனில் ஏறிய கைதிகள் அனைவரும் விடுதலை செய், விடுதலை செய் என்று கத்துகிறார்கள். போலிஸார் ஆத்திரமடைந்து வேனை நிறுத்தி கிறிஸ்தபரை இந்தப் பைத்தியத்தை அடித்தால் மற்றவர்கள் தானா அடங்குவார்கள் என்று கூறி வேனை நிறுத்துகிறார். வேனின் பின்பக்கக் கதவு திறக்கப்படுகிறது. எல்லாக் கைதிகளும் ஓடினார்கள். கிறிஸ்தபரும் புது வாழ்வைத் தேடி ஓடுகிறான். புது மனிதர்களைத் தேடி, புது வாழ்க்கையைத் தேடி ஓடுகிறான். புதிய எண்ணங்கள், புதிய மனிதர்கள். தனிமனிதனின் உணர்வுக்கு முதலிடம் அளிக்கும் வகையில் கிருஸ்தபருக்குப் புதுவாழ்வு கொடுக்க ஆசிரியர் முற்படுகிறார்.

**சுற்றிப் பார்க்க வந்தவர்** என்னும் சிறுகதையின் ஆசிரியர் மா. இளங்கண்ணன். இயற்பெயர் பால கிருஷ்ணன் தனித்தமிழ் ஆர்வலர், ஆசியான் விருது பெற்ற எழுத்தாளர் ஆவார்.

இக்கதாசிரியர் நடுத்தர மக்களின் வாழ்க்கையினைக் கதைக் கருவாக அமைத்துள்ளார். தமிழ் நாட்டிலிருந்து சிங்கப்பூருக்குச் சென்ற ஊர்த் தலைவர், ஓர் ஏழைக் குடும்பத்துக்கு வருகை புரிகிறார். அவர்களின் குடும்பப் பின்னணியை இவர் அறியவில்லை. குழந்தைக்குப் பால் வாங்க முடியாத நிலையிலும், கோழிக்கறி சமைத்து விருந்து உபசரிப்பு செய்கின்றனர்.

இதற்கிடையில் அந்தப் பெண்ணும், ஊர்த்தலைவரும் இவருடன் வந்த மற்றொருவரும் ஊரில் நடந்த நிகழ்வுகளையெல்லாம் பேசி, செய்திகளை பரிமாறிக் கொள்கின்றனர்.

ஊருக்குப் புறப்படும்போது கணவன் மனைவி இருவரும் ஓர் உறையில் பத்து வெள்ளிப் பணத்தைப் போட்டுக் கொடுக்கின்றனர். வேண்டாதவர் போல் காட்டிக் கொண்ட ஊராட்சித் தலைவரின் கை மட்டும் உறையை நோக்கி வந்து பணத்தைப் பெற்று கொள்கிறது. பலர் வேட்டி, சட்டை, மோதிரம், பணம் ஐம்பது, அறுபது வெள்ளி கொடுத்ததாகக் குறிப்பிடுகிறார். எதிர்பார்ப்போடு சிங்கை வந்தவர் என்பதனை அறியமுடிகிறது

சிங்கையில் அன்பாகப் பேசிய ஊர்த் தலைவர் அந்தப் பெண்ணின் அம்மாவிடம் உன் மருமகனும், மகளும் கோழிக்கறி சமைத்து விருந்தளித்து, பத்து வெள்ளிப் பணம் கொடுத்தது ஒன்றும் பெரிதல்ல என்று குறைப்பட்டுக் கொள்கிறார். ஊரில் பிறரின் சொத்துக்கு ஆசைப்படும் மனிதர்கள் இருக்கின்றனர் என்பதனை உணர்த்துகிறது.

சிங்கப்பூருக்கு ஊரைச் சுற்றிப் பார்க்க வரவில்லை. வசூல் வேட்டைக்கு வந்தவர் 'சுற்றிப் பார்க்க வந்தவர்' போல் வேடம் அணிந்து கொண்டதை இச்சிறுகதை உணர்த்துகிறது.

பணம் பந்தியிலே குணம் குப்பையிலே என்ற கருத்து இச் சிறுகதைக்குப் பொருத்தமாகிறது. அன்போடும், கனிவோடும் உபசரித்த குடும்பத்தைத் தரக்குறைவாக விமர்சித்துவிட்டு மோதிரம் பணம் கொடுத்தவர்கள் பெரியவர்கள் என்ற எண்ணம் ஊராட்சித் தலைவரிடம் காணப்படுகிறது. இச்சமூகத்தில் பலதரப்பட்ட மனிதாபிமானம் இல்லாதவர்களாக இருப்பதனை ஆசிரியர் சுட்டிக் காட்டியுள்ளார்.

# இளங்கண்ணனின் தமிழ்ச் சிறுகதைகளில் மொழிநடை

முனைவர் ம. சரளாதேவி
*உதவிப் பேராசிரியர்*
*தமிழ்த்துறை*
*தூய நெஞ்சக் கல்லூரி*
*திருப்பத்தூர்*
*வேலூர் - 635 601*

தமிழர்கள் வாழ்கின்ற அயல்நாடுகளுள் சிங்கப்பூரும், மலேசியாவும் குறிப்பிடத் தக்கவையாகும். இங்கு வாழும் தமிழர்கள் பிற நாடுகளில் வாழும் தமிழர்களைவிட மிகச் சிறப்பாக வாழ்கின்றனர். இந்நாடுகளில் வாழும் அரசியல் சார்ந்தவர்கள் தமிழ் மக்கள் நலனில் அக்கறை கொண்டிருப்பதோடு தமிழ் மொழி வளர்ச்சிக்கு வேண்டிய வழி வகைகளையும் ஏற்படுத்தித் தந்துள்ளனர். சிங்கப்பூரின் ஆட்சி மொழிகளுள் ஒன்றாகத் தமிழ் மொழியும் விளங்குகின்றது. சிங்கப்பூரில் உள்ள நாளேடுகளும், தமிழர் சங்கங்களும், வானொலி, தொலைக்காட்சி நிலையங்களும், இணையத்தளங்களும் தமிழ் மொழி வளர்ச்சியில் அதிக முக்கியத்துவம் செலுத்தி வருகின்றன. அந்த வகையில் அயலகத் தமிழரான சிங்கை மா.இளங்கண்ணன் அவர்கள் தமிழ் மொழியின் முன்னேற்றத்திற்குப் பெரும்பங்காற்றி வருகின்றார். அவர் சிறுகதைத் தொகுப்புகளில் ஒன்றான 'வழி பிறந்தது' என்ற சிறுகதைத் தொகுப்பில் பயன்படுத்தப்பட்டுள்ள மொழிநடையில், தமிழ்மொழியின் சிறப்பு வெளிப்படுவதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

### ஆசிரியரின் சிறப்பு

மா. இளங்கண்ணன்(மா.பாலகிருஷ்ணன்) 1938ஆம் ஆண்டு சிங்கப்பூரில் பிறந்தவர். அறுபதுகளின் நடுவிலிருந்து எழுதிவருகிறார். இதுவரை பதிப்பித்துள்ள ஆறு நூல்களில் வழி பிறந்தது(1975), குங்குமக் கன்னத்தில்(1977), கோடுகள் ஓவியங்கள் ஆகின்றன(1978), தூண்டில் மீன்(2001) முதலிய நான்கும் சிறுகதைத் தொகுப்புகள். அலைகள்(1976), வைகறைப் பூக்கள்(1990), நினைவுகளின் கோலங்கள்(1993) இவை நாவல்கள். இளங்கண்ணனின் சிறுகதைகளும் நாவல்களும் பல்வேறு இதழ்களில் வெளிவந்துள்ளன. சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழகத்தின்

கலைகள் மன்ற வெளியீடான 'சிங்கா' இதழிலும் வெளிவந்துள்ளன. சிங்கப்பூர்த் தமிழ் வானொலியிலும் தொலைக்காட்சியிலும் இவருடைய படைப்புகள் இடம் பெற்றுள்ளன. சிங்கப்பூர், தமிழ் நாடுகளிலுள்ள பள்ளிகள் மற்றும் உயர்கல்வி நிலையங்களிலுள்ள பாடத்திட்டத்தில் இவருடைய படைப்புகள் இடம்பிடித்துள்ளன.

இளங்கண்ணன் சிங்கப்பூர் அளவிலும் அனைத்துலக அளவிலும் ஏராளமான சிறுகதைப் போட்டிகளில் பரிசுகளை வென்றவர். தென்கிழக்காசிய வட்டாரத்தின் மதிப்புமிக்க தென்கிழக்கு ஆசிய எழுத்து விருதை 1982இல் பெற்ற முதல் தமிழ் எழுத்தாளர் என்ற பெருமைக் குரியவர். சிங்கப்பூர்த் தமிழ் எழுத்தாளர் கழகம் 1999இல் 'தமிழவேள்' விருந்தளித்துக் கௌரவித்துள்ளது. சிங்கப்பூர் தேசிய புத்தக மேம்பாட்டு மன்றத்தின் சிங்கப்பூர் இலக்கிய விருது 2004இல் இவரதுத் 'தூண்டில் மீன்' என்ற சிறுகதைத் தொகுப்பிற்கு வழங்கப்பட்டுள்ளது. சிங்கப்பூரின் உயரிய இலக்கிய விருதான 'கலாச்சாரப் பதக்க விருது' பெற்ற சிறந்த எழுத்தாளர்.

"இந்தியா மலேசியாவுடனும், சிங்கப்பூருடனும் பல நூற்றாண்டுகளாக நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தபோதிலும், அத்தொடர்பு பத்தொன்பதாம் நூற்றாண்டிலேயே மிகவும் வலுப்பெற்றது. அந்நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்தே பல இந்தியர்கள், குறிப்பாகத் தமிழர்கள், வியாபாரத்தின் பொருட்டும் வேலை வாய்ப்புகளைத் தேடியும் இந்நாடுகளுக்கு வர ஆரம்பித்தனர்." (ஈ.ச.விசுவநாதன், அயல்நாடுகளில் தமிழர்கள், ப.11)

சமூகத்தில் உள்ள பிரச்சனைகளையும், மக்களின் நிலையையும், மாற்றங்களையும், நம்பிக்கைகளையும் கதைகள் வாயிலாக வெளிப்படுத்தி மக்களின் நலனில் முன்னேற்றம் காண முடியும் என்பதை அறிந்த இளங்கண்ணன் தன் கதைகள் வாயிலாக சிங்கப்பூரில் தமிழ் மொழி முன்னேற்றம் அடைவதற்கு வழிவகுத்துள்ளார் என்பது முற்றிலும் உண்மை.

## மொழிநடையின் சிறப்பு

ஒரு மொழியில் ஒலிக்கு அடையாளம் தரும்பொழுது எழுத்து உருவாகிறது. எழுத்துகள் சேர்ந்து சொற்களை உண்டாக்குகின்றன. சொற்கள் இலக்கண உறவுடன் இணையும் பொழுது தொடர் உண்டாகிறது. தொடர்களின் கூட்டமைப்பால் தொடரமைப்பு உருவாக்கப்படுகிறது. ஒலி, எழுத்து, சொல், தொடர் என்பதன் அடிப்படையில் மொழிநடை சிறப்பு பெறுகிறது.

இளங்கண்ணன், சிறுகதையில் பயன்படுத்தியுள்ள ஒலிகள், எழுத்துகள், சொற்கள், தொடர்கள் சாதாரண பாமர மக்களும் படித்துப் பயன்பெறும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன. எளிய நடையில் இனிமையான கதை கூறும் போக்கினைக் கையாண்டுள்ளார். தமிழ் மக்களின் முன்னேற்றத்திற்காக பாடுபடக்கூடியவர். தன் கதைகளின் வாயிலாக அதை வெளிப்படுத்தியுள்ளார்.

'தமிழர்கள் பல தொழில்களையும் படித்து முன்னேறினால்தான் நல்லது. எதிர்வரும் நம் தலைமுறைகள் எல்லாத்துறைகளிலும் சிறந்து விளங்க வேண்டுமானால் நாம் பல தொழில்கள் கற்றுத்தேற வேண்டும்' என்றார் (விட்டில், ப. 21).

தன் கதைக் கூறும் போக்கிற்கு இடையிலும் தமிழ் மக்களின் தரத்தை மேம்படுத்த வேண்டும் என்ற கருத்துச் சிந்தனையை வெளிப் படுத்தியுள்ளார்.

*ஒலியின் சிறப்பு*

ஒவ்வொரு உயிரினங்களின் பிறப்பு முதல் இறப்பு வரை ஒலிகள் முக்கியத்துவம் பெறுகின்றன. அத்தகைய ஒலிகள் மனிதனுடைய வாழ்க்கையோடு ஒன்றிவிட்ட ஒன்று என்று கூறலாம். ஒலிகள் இசை வடிவிலோ, சத்தம் வாயிலாகவோ வெளிப்படுகின்றன. இத்தகைய ஒலிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையில் இளங்கண்ணன் ஒலி எழுத்துகளை அதிகம் பயன்படுத்தியுள்ளார்.

"மனிதன் பேசும் மொழிகள் அனைத்தும் மொழி ஒலிகளால் ஆக்கப்படுவன. ஒவ்வொரு மொழிக்கும் அவற்றுக்குரிய ஒலிகளும் அவற்றால் ஆன ஒலியன்களும் உண்டு. இதற்குத் தமிழ் மொழியும் விதிவிலக்கில்லை."(ச.அகத்தியலிங்கம், தமிழ்மொழி அமைப்பியல், ப.29)

1.'அவன் புதுசா கடை திறக்கப்போறானாம். பாருடி காலத்தை, கோல் எடுத்தவன் எல்லாம் கோனாகிற காலமாவுல இருக்குது. ம் காலம் மரிப்போச்சு.

ம்... அப்படியா?'(சாமர்த்தியம், ப.56)

பாமர மக்களுக்கு எளிதில் புரியும்படி கதை எழுதப்பட்டிருப்பினும் இலக்கண விதிமுறைகளுக்கு உட்பட்டே கதையின் போக்கினை எடுத்துச்செல்கின்றார். ம் என்பது ஈரிதழ் ஒலிப்புடைய மூக்கொலியன். ஒலியைப் பற்றிய போக்கு குறைந்து வரும் காலகட்டத்தில் ஒலிக்கு முக்கியத்துவம் கொடுத்து மொழிக்கு சிறப்புச் சேர்த்துள்ளார்.

"மொழி (Language) என்பது பொருளைத் தருகின்ற (Significant) பேச்சொலிகளால் உருவானதே எனலாம். இவ்வாறு பொருளைத் தருகின்ற பலவகையான பேச்சொலிகளே (Speech sounds) பலவகையான எழுத்துக் களாக உருவாகுகின்றன. எனவே எல்லா எழுத்துகளும் உண்மையில் வாயொலிகள் (Oral sounds or vocal sounds) எனப்படுகிறது." (இரா.சுப்பையா, மொழியியல், ப.37).

1. 'டக் டக் வெங்காயம் வெட்டும் வேகந்தான் இது.'(மீ கோரேங், ப.30)
2. 'இரவு மணி எட்டாகிவிட்டது. மணிவண்ணன் நெஞ்சம் 'டிக் டிக்' என்று கடிகாரத்தைப் போல் அடித்துக்கொண்டிருந்தது.'(மயக்கம், ப.77)
3. நெஞ்சம் 'பட் பட்' என்று அடித்துக்கொண்டது.'(மயக்கம், ப.78)
4. 'காய் முய் என்று காக்காய்க் கூட்டத்தைப் போல் சிறார்களின் இரைச்சல்.'(கொள்கை + செயல் = 0, ப. 98)

'வழி பிறந்தது' என்ற சிறுகதைத் தொகுப்பில் 'ம்' 'டக் டக்' 'டிக் டிக்' 'பட் பட்' 'காய் முய்' போன்ற பேச்சொலிகளை வெளிப்படுத்தி மக்களின் மனதில் பதியக் கூடிய வகையில் கருத்துகளை எடுத்தாண்டுள்ளார்.

### எழுத்தின் சிறப்பு

நெஞ்சிலிருந்து எழும் காற்று, காற்றறைகளில் இருந்து வெளியில் வரும்பொழுது எந்தவிதமான தங்கு தடையுமின்றி வாய் வழியாக வெளியேறும்போது உண்டாகும் ஒலிகள் உயிர் ஒலிகளாகும். இவை உயிரெழுத்துகள் எனப்படும். காற்று ஏதாவது ஓரிடத்தில் தடைபட்டுப் பின்னர் வாய் வழியாக வெளியேறும் போது உண்டாகும் ஒலிகள் மெய்யொலிகளாகும். இவை மெய்யெழுத்துகள் எனப்படும்.

"முதலில் ஒலியெழுத்தினைக் குறிக்கும் சொல்லாகிய 'எழு' என்னும் சொல்லடியாக எழுத்துத் தோன்றியது. அந்த ஒலி வரிவடிவில் வரைந்து காட்டப்பட்டபோது அந்த வரைவினைக் குறிக்கும் சொல்லாகவும் எழுது, எழுத்து என்னும் சொற்கள் கையாளப்பட்டன. ஆகவே எழுத்து என்ற பெயர் முதலில் எழுப்பப்படுவதால் வந்த காரணப் பெயராகவும், பின்னர் எழுதப்படுவதால் வந்த காரணப் பெயராகவும் ஆயிற்று."(ஆ.சிவலிங்கனார், தொல்காப்பியம், சிறப்புப் பாயிரம், ப.66)

இளங்கண்ணன் எளிமையானச் சொற்களின் அடிப்படையில் எழுத்துகளைப் பயன்படுத்தி, மக்களின் நிலைமையைத் தன்னுடைய

கருத்துகளின் வாயிலாக வெளிப்படுத்தி அதிக மக்களின் கவனத்தை ஈர்த்துள்ளார்.

1. 'ஆ... கடவுளே! வலி தாங்க முடியலேயே என அவர் மனைவியின் குரல் அறைக்கதவுகளையும் தாண்டிக்கொண்டு வந்து காதுகளில் விழுந்தது.'(சாதிகள் இல்லையடி பாப்பா, ப.18)

2. 'ஓ அதுவா... அதுக்கென்ன அடுத்த வாரம் வாங்கி விடுவோம் என்றான்.' (வரம்பு மீறினா(ள்)ன், ப.60)

3. 'விலையைச் சொன்னதும், "ஆ..." என்று அஞ்சப்பன் அசந்தே விட்டான்.'(வரம்பு மீறினா(ள்)ன், ப.61)

'ஆ' 'ஓ' என்ற எழுத்துகள் ஒரு சொல்லின் பொருளை மேலும் ஆவலுடன் படிப்பதற்கு வழிவகுக்கின்றன. அதனால் அத்தகைய எழுத்துகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து இளங்கண்ணன் தன் கதைகளில் பயன்படுத்தியுள்ளார்.

ஒலியும் எழுத்தும் ஒரு மொழியின் முக்கியத் தேவையாகும். ஒலி, எழுத்து வாயிலாகச் சொற்கள் உருவாகி ஒரு மொழியின் சிறப்பு வெளிப்படுத்துவதற்குத் துணை நிற்கின்றன.

"எழுத்து என்பது மொழியினை நாம் விளங்கிக் கொள்வதற்கு உதவும் ஒரு வகை மூலமாகும். ஒருவர் எம்முடன் பேசும்போது, அவருடைய பேச்சின் பொருளை அவரால் எழுப்பப்படும் ஒலிகள் மூலமாக விளங்கிக் கொள்கிறோம். ஒரு நூலை வாசிக்கும்போது, அந்நூற்பொருளை, அதில் இடம் பெறும் எழுத்துகள் மூலமாக விளங்கிக்கொள்கிறோம். ஆகவே மொழியினை நாம் விளங்கிக்கொள்ள 'பேச்சொலி' 'எழுத்து' ஆகிய இரண்டுமே மூலங்களாக அமைகின்றன."(அ.சண்முகதாஸ், தமிழ் மொழி இலக்கண இயல்புகள், ப.67)

ஒரு மொழியில் ஒலியும், எழுத்தும் ஒன்றுடன் ஒன்று கலந்து செயல்படுகின்றன. எழுத்துகளைச் சிறப்பாகக் கையாளும்பொழுது கதைக்கு ஒரு புத்துணர்ச்சியினை ஊட்டுகின்றது. படிக்க வேண்டும் என்ற ஆவலைத் தூண்டுகின்றது. ஒலி, எழுத்து இரண்டும் ஒரு மொழியின் மிக முக்கியத் தேவைகளாகும்.

### சொற்களின் சிறப்பு

ஓர் எழுத்து தனித்து வந்தும், இரண்டு மூன்று எழுத்துகள் தொடர்ந்து வந்தும் பொருள் தருவது சொல் எனப்படும். சொல் பெயர், வினை, இடை, உரி என நான்கு வகைப்படும்.

"ஒன்றோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட ஒலியனோ ஒரு மொழியின் ஒலியன் அமைப்புக்கேற்றவாறு இணைந்து நின்று ஒரு பொருளை - அது சொற்பொருளாக இருக்கலாம், அல்லது இலக்கணப் பொருளாக இருக்கலாம் - குறிக்கும் நிலையில் அது உருபன் என்றும் அவ்வுருபன் ஒன்றோ அல்லது ஒன்றுக்கு மேலோ இணையும் நிலையில் இணைந்து ஒரு பொருளைத் தருமானால் அது சொல் என்றும் அழைக்கப்படும்." (ச.அகத்தியலிங்கம், தமிழ்மொழி அமைப்பியல், ப.69).

1. 'தெரியாதப்பு.'(சுற்றிப் பார்க்க வந்தவர்,ப.44)
2. 'காலை நேரம்' (சாமர்த்தியம்,ப.52)
3. 'ஒண்ணுமில்லை' (மயக்கம்,ப.69)
4. 'மறுநாள்' (ம(லி)னம்,ப.105)

போன்ற சொற்களை தனித்து அமைத்து கதைக்கு முக்கியத்துவம் சேர்த்துள்ளார். தனித்த சொற்களின் மூலம் கதையைக் கூறும்பொழுது விரைந்து படித்து முடிக்க வேண்டும் என்ற ஆவலைத் தோற்றுவிக்கின்றது. எளிதில் புரியும் தன்மையும் ஏற்படுகின்றது. இக்கருத்துகள் தமிழ் மக்களுக்கு மட்டுமல்லாமல், தாம் வாழும் நாட்டில் உள்ள மக்களும் தமிழ் கற்று இது போன்ற நம் நாட்டுக் கதைகளைப் பிறமொழியில் படித்து அறிய வேண்டும் என்ற ஆவலை உண்டாக்குகின்றது. இதனால் பிற மொழி பேசும் மக்களும் ஆவலுடன் கதைகளைப் படிக்க விரும்புகின்றனர். அந்த அளவுக்கு ஆசிரியர் பயன்படுத்தும் மொழிநடையில் உள்ள சொற்கள் அந்நாட்டு மக்களைக் கவர்கின்றன என்று கூறலாம்.

### தொடரின் சிறப்பு

தொடர் என்பது தொடரியல் கூறுகளுள் மிக முக்கியமான ஒன்றாக விளங்குகின்றது.

தொல்காப்பியர் தொடரியல் என்ற சொல்லை ஓர் இடத்தில் (எழுத்து.356) மட்டுமே பயன்படுத்தியுள்ளார்.

தொடர் என்பது ஒரு முழுக்கருத்தைத் தெரிவிக்கும் சொற்களின் கூட்டமைப்பாகும். ஒரு தொடரில் இரு வேறுபட்ட கருத்துகள் இருத்தல் கூடாது. பொருள் மயக்கம் இன்றி, கருத்தைத் தெளிவாகக் கூறுவதே தொடரின் சிறப்பாகும் என்பதைத் தொல்காப்பியர்(சொல்.11) தெளிவு படுத்தியுள்ளார்.

*வினையில் தோன்றும் பாலறி கிளவியும்*
*பெயரில் தோன்றும் பாலறி கிளவியும்*
*மயங்கல் கூடா தம்மர பினவே* (சொல்.11)

என்று எடுத்துரைத்துள்ளார்.

ஒரு தொடர் என்பது பொருள் மயக்கம் இன்றிப் பெயரும், வினையும் ஒத்த பாலில் முடிய வேண்டும் என்ற தொடர் மரபினைக் கிளவியாக்கத்தில் குறிப்பிட்டுள்ளதுடன், "கிளவியாக்கத்தில் சொற்களின் பாகுபாடு, வினைச்சொல்லில் தோன்றும் பாலறி கிளவிகள், பெயருக்கும் வினைக்கும் உள்ள இயைபு செப்பு - வினா வாக்கிய அமைப்புகள், இயற்பெயர், சிறப்புப் பெயர், சுட்டுப் பெயர் ஆகியன தொடர்களில் அமையும் முறை பெயர்த்தொடர் அடையுடன் அமையும் முறை வினாச்சொற்களின் வழக்கு. பலபொருள் ஒரு சொல்; வழக்கு வேறுபாடுகள் போன்ற செய்திகள் பேசப்படுகின்றன." என்ற தொடர் பற்றிய பல செய்திகளைத் தொல்காப்பியர் கிளவியாக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.(கோ.கிருட்டிணமூர்த்தி, தொல்காப்பிய ஆய்வின் வரலாறு, ப. 264)

"மொழியின் அமைப்பில் சொல்லும், சொற்றொடரும் முக்கியப் பங்கு வகிக்கின்றன. சொற்களின் அடுக்குகளால் சொற்றொடர் உருவாகும். மொழியின் இலக்கணப் பகுதிகளாக இவைகள் அமைகின்றன. இவ்விரண்டின் இயல்புகளையும் தொடர்பினையும் நன்கறிந்த தொல்காப்பியர் சொல்லதிகாரத்தை இவ்விலக்கணங்கள் கூறும் பகுதியாக்கியுள்ளார். கிளவியாக்கம், வேற்றுமை இயல், வேற்றுமை மயங்கியல், விளிமரபு என்ற நான்கு இயல்களிலும் தமிழ் இலக்கணத்தில் அமைந்துள்ள அன்மொழித்தொடர், வேற்றுமைத்தொடர் அமைப்புகளை விளக்கியுள்ளார். பெயரியல், வினையியல், இடையியல், உரியியல் பகுதிகளில் நான்கு சொற்களின் அமைப்புக்களைக் கூறியுள்ளார். எச்சவியலில் தொடரிலக்கணப் பகுதியின் எச்சங்களைக் கூறியுள்ளார். இப்பகுதியில் தமிழில் அமையும் தொகைநிலைத்தொடர், தொகாநிலைத்தொடர்கள் பற்றி விளக்கியுள்ளார். இலக்கண ஆசிரியர்களும், மொழியியல் அறிஞர்களும் சொல்லாய்விற்கு தந்த முக்கியத்துவத்தைத் தொடரியல் ஆய்விற்குத் தரவில்லை. தற்போது தொடரியல் பற்றிய சிந்தனை பெருகி வளர்ந்து வருகின்றது."(சண்முக செல்வகணபதி, மொழியியல் நோக்கில் தமிழிலக்கணம், ப. 115)

காலத்தின் மாற்றத்திற்கு ஏற்ப மக்கள் விரும்பிப் படிக்கக் கூடியத் தொடர்களைக் கையாண்டுள்ளார். முற்காலத்தில் வடமொழியின் ஆதிக்கம் அதிகமாக இருந்தது. அதன் பின்னர் தூய தமிழ் நடையில் நீண்ட தொடர்களைக் கையாண்டனர். இக்காலத்தில் ஆங்கிலச் சொற்களின் கலப்பு

அதிகமாகக் காணப்படுகின்றன. பேச்சு வழக்குச் சொற்களைக் கொண்ட தொடர்களையும் கதைகளில் பயன்படுத்துகின்றனர். ஆனால் இளங்கண்ணன் அவர்கள் பேச்சு வழக்கைக் கலந்து எழுதினாலும் அதிக முக்கியத்துவம் எழுத்து நடைக்கே கொடுத்துள்ளார் என்பது பெருமைக்குரியதாகும்.

தனித்தொடர்

ஒரே ஒரு கருத்தை மட்டும் முன்வைத்து எழுவாய், செயப்படு பொருள், பயனிலை என்று தொடருக்குரிய இலக்கண அமைப்பினைப் பெற்று அமைந்து வருவது தனித் தொடராகும்.

1. 'நேரம் அமைதியாக ஓடிக்கொண்டிருந்தது.'(சாதிகள் இல்லையடி பாப்பா, ப.20)
2. 'நான் சிரித்தபடி நின்றேன்.' (விட்டில், ப. 21)
3. 'நண்பகல் வியாபாரம் முடிகிறது.' (மீ கோரேங், ப.32)
4. 'அன்பழகன் பேசாமல் இருந்தான்.' (கறை நிலா, ப.123)
5. 'கலையரசியின் மெய் சிலிர்த்தது.' (பொற்சிலையானார், ப.161)

ஓரளவு தமிழில் புலமையுடையவர்களையும் தங்களது படைப்புகளைப் படிக்கத்தூண்டும் வகையில் தனித்தொடர்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளார். இதனால் கதையை வாசிக்கும் தன்மை விரைவாகவும் எளிதாகவும் அமைய வழிவகுக்கின்றன.

வினாத் தொடர்

தாம் அறிந்திராத ஒரு செய்தியை அறிந்து கொள்ளும் பொருட்டுக் கேட்கப்படுவதற்கு உதவுவது வினாத்தொடராகும்.

"வினா வாக்கியம் என்பது தெரியாத ஒன்றை மற்றொருவரிடம் கேட்டுத் தெரிந்து கொள்வதற்காகப் பயன்படுத்தப்படும் வாக்கியம் ஆகும்."(ச.அகத்தியலிங்கம், தமிழ்மொழி அமைப்பியல், ப. 295)

1. 'ஐயா, எனக்குத் தமிழ்ப் படிக்க வேண்டும் என்று ஒரே ஆசையாக இருக்கிறது. படித்துக்கொண்டால் பக்திப் பாடல்களை நானே படித்துக்கொள்ளலாம் அல்லவா? என்றான் கூன் சான்.'(வழி பிறந்தது, ப. 9)
2. 'உலகம் என்றால் என்ன?'(கறை நிலா, ப. 129)

3. 'மாலை ஐந்து மணிக்கெல்லாம் கிளம்பி இரவு பதினொரு மணிக்குத் தன்னந்தனியாக வீடு திரும்புவாளா?'(அவன்/அவள், ப. 152)
4. 'அம்பலவாணர் மகள் கலையரசியா, இங்கேயா வேலை செய்கிறாய்?'(பொற்சிலையார், ப. 161)
5. 'அப்படி என்றால் சம்பளம் வாங்காமலாகிலும் பாடம் நடத்தலாமா?' (பிரிவு, ப. 169)

வினாத் தொடரின் ஊடாக நாம் கதைப் படிக்கும்போது நமக்கு உண்டாகும் வினாக்களை கேட்பது போன்ற ஒரு தன்மையை உண்டாக்குகின்றன. இதனால் கதையை வினா, விடைத் தன்மையில் படிக்கும்பொழுது பல்வேறு வினாக்களுக்கு நமக்கு விடை கிடைக்கின்றன.

அடுக்குத்தொடர்

ஒரு சொல் இரண்டு, மூன்று முறை அடுக்கி வந்து, வினைகளைச் சிறப்பித்து வராமல் விரைவு, அச்சம் முதலிய பல பொருள்களை உணர்த்தி, தனித்தனியாகப் பிரித்தாலும் பொருள் தரக்கூடியது அடுக்குத் தொடராகும்.

"விரைவு, மகிழ்ச்சி, அச்சம், சினம், துன்பம், அசைநிலை, இசைநிறை இவற்றை உணர்த்த ஒரு சொல்லே அடுக்கடுக்காகத் தொடர்ந்து வரும். அதனை அடுக்குத் தொடர் என்பர்." (கவி.யோகி.சுத்தானந்த பாரதியார், நல்ல தமிழ் எழுதுவது எப்படி?, ப. 199)

1. 'சரி சரி என்னிடம் பத்து வெள்ளிதான் இருக்கு; வேணும்னா அஞ்சு வெள்ளி வச்சுக் கொடு என்றேன்.'(சுற்றிப் பார்க்க வந்தவர், ப.48)
2. 'ஆமா ஆமா நான் எடுக்கிற சம்பளத்தில் உங்க கடனை எப்படிங்க கட்டுறது.'(வரம்பு மீறினா(ள்)ன், ப. 65)
3. 'காதலன் முகத்தைப் பார்த்ததும் அவள் என்ன என்ன என்று பரபரப்போடு வினவினாள்.'(தண்டனை, ப. 116)
4. 'அன்பழகன், குமணா குமணா என்று கூப்பிட்டபடி அவனைப் பின் தொடர்ந்தான்.'(கறை நிலா, ப. 126)
5. 'அவன் உடம்பு இருக்க இருக்க மெலிந்துகொண்டே வருகிறது.' (வாழை, ப. 175)

மொழிநடையில் கருத்திற்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் ஒரு சொல்லை இரண்டுமுறை பயன்படுத்தியுள்ளார். அடுக்குத்தொடரைப் பயன்படுத்துவதன் மூலம் கருத்துத் தெளிவு உண்டாகின்றது.

## முடிவாக

மொழிநடையில் ஒலியும், எழுத்தும், சொற்களும், தொடர்களும் முக்கியப் பங்கு வகிக்கின்றன. ஒருவருடைய மொழிநடை சிறப்பாக அமைந்தால்தான் அவருடைய படைப்புகள் வெற்றிபெறும். அந்த வகையில் இளங்கண்ணன் அவர்கள் தமிழ்மொழியின் முன்னேற்றத்திற்கு உதவும் வகையிலும், பாமர மக்களும் உலக நடப்புகளை அறியும் வகையிலும் தன்னுடைய கதைகளை அமைத்துள்ளார். அக்கதைகளில் பயன்படுத்தி யுள்ள மொழிநடை படிப்பவர் அனைவரையும் கவரும் வகையில் அமைந்துள்ளது. எளிய நடையில் மக்களின் வாழ்க்கை முறையைப் படம் பிடித்துக் காட்டியுள்ளார் என்று கூறலாம். இளங்கண்ணனின் கதைகளில் பயன்படுத்தப்பட்டுள்ள மொழிநடை தமிழ் மொழியையும், தமிழ் மக்களையும் முன்னேற்றும் வகையில் அமைந்துள்ளது என்பது மறுக்க முடியாத உண்மை.

# தமிழ்ச் சூழலில் அயலகச் சிறுகதைகளின் நோக்கும் போக்கும்

முனைவர் த. பூவை சுப்பிரமணியன்
*முதுநிலை ஆய்வு வளமையர்*
*செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்*
**சென்னை**

ஐரோப்பியர்களின் வருகையானது இந்தியாவில் கல்வி, மொழிச் சூழல்களில் மாற்றத்தை ஏற்படுத்தியது. அதுவும் அச்சுக்கலையின் தோற்றம் ஐரோப்பியர் மத்தியில் பெரும் நன்மையை ஏற்படுத்தியது. இந்தியாவிற்கு வந்த ஐரோப்பிய கிறித்தவ மிஷனரிகள் அச்சுக் கருவியின் மூலம் சமயத்தைப் பரப்புவதற்குப் பெரும் உதவியாக அமைந்தது. அச்சுக் கருவிகள்தான் மக்களின் மொழியில் சொல்வதற்கும், எழுதுவதற்கும் மிகப்பெரியத் தொடர்ப் பாலமாக இருந்தது. அச்சுக்கூடம் அமைக்கப்பட்ட தரங்கம்பாடித் தொடங்கி தமிழகத்தின் கடற்கரையோர மக்களிடம் கிறித்தவச் சமயத்தினையும் கல்வியினையும் போதிப்பதற்கு அச்சுப் பண்பாடே பயன்பட்டது எனலாம். இந்த அச்சுக் கலையின் வரவு தமிழ்ச் சூழலில் நவீன இலக்கியங்களின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தது. வாசிப்புத்தன்மை மிகுதி கொண்ட ஐரோப்பியர்களின் இலக்கியங்கள் தமிழிலும் வரலாயின. புதினம், சிறுகதை, கவிதை, நாடகம், உரைநடை, வசன நடை என ஒவ்வொன்றும் தனித்தனியான வடிவங்களில் ஆலமரமாகத் தோன்றி விழுதுகளாகப் பல்வேறு ஆக்கங்களைத் தமிழ் வாசகர்களுக்குப் பெற்றுத்தந்தன.

உலகெங்கிலும் புனைகதையாளர்கள் தங்கள் படைப்புகளைத் தாம் சார்ந்த மண்ணிடம் மக்களிடம் இருந்து கருவாகப் பெற்று, படைத்து வாசகர்களுக்கு அளிக்கின்றனர். புனைகதையாகப் படைக்கப்பட்டிருப்பினும் அதில் யதார்த்தச் சூழலும் கதைக்கள இயங்குத் தளத்தில் நிலவி வருவதையும் மறுக்க இயலாது. இந்தப் புரிதல்களுடன் தமிழ்ச் சூழலில் 'அயலகச் சிறுகதைகளின் நோக்கும் போக்கும்' பற்றி இவ்வரைவு ஆராய்கின்றது.

### *சிறுகதைகள் பொதுமைப்பார்வை*

தமிழ்ப் புனைகதை உருவாக்கம் 19ஆம் நூற்றாண்டின் இறுதி காலங்களில் முகிழ்த்தது. ஐரோப்பியர்களின் கொடையாக இருப்பினும் அவர்களை விமர்ச்சிப்பதற்கும் துணைபுரிந்தது எனலாம். விடுதலை உணர்வை நிகழ்கலைகளின் மூலம் மக்களுக்குத் தெரியப்படுத்தியக்

காலத்தில் இத்தகைய நவீன இலக்கியங்களின் வரவு மூலம் கதைகள், கதைப்பாடல்கள் உணர்ச்சியைத் தூண்டும் வசனங்கள் எனப் பல்வேறு வடிவிலும் மொழி நடைகள் உருவாக்கப்பட்டு வெளியாயின. மகாகவி பாரதியார், பாரதிதாசன், நாமக்கல் கவிஞர் போன்றோரின் படைப்புகள் விடுதலையுணர்வை ஏற்படுத்தியதில் முக்கியப்பங்கு வகித்தன.

தமிழில் சிறுகதைகள் 1853களில் (ஈசாப் நீதிக்கதைகள்) வெளிவர ஆரம்பித்தன. அதனைத் தொடர்ந்து மாயக்கதைகள் (வேதாளம், குட்டிச் சாத்தான்) அறக்கதைகள் என சிறுகதையின் போக்கு வளரலாயிற்று; மேலும் சில கதைகள் நகர மக்களின் மனநிலையை பிரதிபலிக்கும்படி உருவாயின. 'சிறுகதை உருவாக்க வரலாறு குறித்து எழுதுவோர், கதை சொல்லல், சிறிய கதை சொல்லல் ஆகிய வடிவத்திலிருந்து சிறுகதை வடிவத்தைப் புரிந்துகொள்ள முயலுகிறார்கள். இதனால்தான் சங்க காலத்துச் சிறுகதைகள் (மு. அருணாசலம்) எனும் நூற்பெயரும் உருவாகிவிட்டது. இம்மரபை முற்றிலும் மறுபரிசீலனை செய்யும் தேவை இருப்பதாகக் கருதுகிறேன். தமிழ்ச் சூழலில் சிறுகதை வடிவத்தைக் கண்டெடுத்தவரும் அதனை இதழியல் மரபு சார்ந்து நிலைபேறு கொள்ளச் செய்தவரும் புதுமைப்பித்தன் தான். அதற்கு முன் தமிழில் எழுதப்பட்ட சிறுகதைகளாகக் கூறப்படுபவை அனைத்தும் சமய மரபு சார்ந்த - நாட்டார் மரபுசார்ந்த போதனைக் கூறுகளைக் கொண்ட கதைத் தன்மைகளை உள்வாங்கியவை'[1] என வீ. அரசு குறிப்பிடுகிறார். தமிழ்ச் சிறுகதையின் முழுமையான உருவம் உள்ளடக்க வடிவத்தைக் கொண்டதாகப் புதுமைப்பித்தன் கதைகளே உள்ளன என்பதை நவீன இலக்கிய ஆய்வாளர்கள் ஏற்றுக்கொள்கின்றனர். புதுமைப்பித்தன் மரபிலிருந்தே சிறுகதையின் வீச்சும் பரப்பும் விரியத் தொடங்கின. இதில் பல்வேறு புனைகதையாளர்களின் காலகட்டம் வரிசைப்படுத்தப்பட்டது. ஜி. நாகராஜன், பூமணி, கோணங்கி என எழுத்துத் தலைமுறைகள் உருவெடுத்தன. புதுமைப்பித்தன் காலகட்ட எழுத்தாளர்களில் பலர் ஆங்கில அறிவு கொண்டிருந்ததனால் அயல்நாட்டுப் படைப்புகளின் மொழிபெயர்ப்புக் கதைகள் தமிழ் வாசகர்கள் வாசிக்கும் சூழல் ஏற்பட்டது. அமெரிக்கா, ரஷ்யா, சீனா, பிரான்சு, இங்கிலாந்து ஆகிய வளர்ந்த நாடுகளில் உள்ள கம்யூனிசம், இயக்கம், தொன்மம் சார்ந்த செய்திகளைப் படைப்பின் வழித் தமிழ் வாசகர்களும் அறிந்து கொள்ள உதவின.

1959இல் 'எழுத்து' இதழ் புனைகதைக்கு மிகுந்த பங்களிப்பினைச் செய்தது எனலாம். இக்காலக் கட்டம் விடுதலை உணர்வை ஊட்டிய எழுத்தாளர்கள், அவர்களின் படைப்புகள் மங்கியச் சூழலில் தமிழுக்குப் புதிய புனைகதை வடிவங்கள் உருவாயின. நகர மக்களின் வாழ்க்கை

முறைகளையும் டிப்டாப் மனிதர்களின் ஆடம்பரச் செயல்களையும் கதைக்களமாக இயங்கி வந்த சூழலில் 1965க்குப் பிறகு மண்ணையும் மக்களையும் எழுதுவதற்கு எழுத்தாளர்கள் தயாரானார்கள். இங்குதான் புதுமைப்பித்தன் வட்டார எழுத்தாளர் என்ற அடையாளத்தைக் கொண்டவராக வெளிப்படுகிறார். வட்டார எழுத்துக்கள் சில வரையறைகளுடன் உருவாகின.

- வட்டார எழுத்துக்களில் வட்டாரத்தின் வரலாறு அவர்களைப் பாதிக்கும் பிரச்சினைகள், தீர்வுகள் ஆகியவற்றைக் கதையுடன் பின்னிப்பிணைத்துத் தெளிவாக உணரவைக்கும் ஆற்றல் பெற்றதாக இருக்கவேண்டும்.
- வட்டார மக்கள் நாவில் உலாவரும் பேச்சு மொழியே எழுத்திலும் உலா வரவேண்டும்.
- படைக்க எடுத்துக்கொண்ட களம் அந்த இலக்கியம் முழுவதும் வெளிப்பட வேண்டும்'[2]

இவ்வட்டார இலக்கியங்களில் கி.ராஜநாராயணன், பா. செயப் பிரகாசம், பூமணி, சி.சு. செல்லப்பா, நாஞ்சில் நாடன், சூர்ய காந்தன், டி. செல்வராஜ், தொ.மு.சி. ரகுநாதன் என ஒவ்வொருவரும் தம் மண்ணையும் மக்களையும் படைப்புலகில் பதிவு செய்தனர். தமிழகத்தில் மிகுதியான எழுத்தாளர்களை இவ்வட்டார இலக்கியம் உருவாக்கியது எனில் மிகையில்லை.

1980களுக்குப் பின்னர்த் தமிழ்ச் சிறுகதை உலகமானது மறுமலர்ச்சியடைந்தது என்று கூறலாம். மேற்குலகில் இருந்தும் கீழைத் தேயத்திலிருந்தும் கதை வடிவங்கள் தமிழ்ச் சூழலுக்குள் புகுந்தன.

80களின் தொடக்கத்தில் பெண்ணிய எழுத்துகள் வீரியம் கொள்ள ஆரம்பித்துவிட்டன. அங்கொன்றும் இங்கொன்றுமாக எழுதப்பட்ட பெண் எழுத்துகள் இக்கால கட்டத்தில் தன் பரப்பை வலிமையாக ஊன்றியது எனலாம். ஆணாதிக்க வர்க்கத்திடம் காலம் காலமாகக் கட்டுண்டு கிடந்த பெண்கள் தங்களின் சுயம், வலி, மீட்சி, பாலியல் அறம், குடும்ப வன்முறை இவற்றிலிருந்து விடுபடும் பொருட்டு பெண் எழுத்துகள் அவதாரம் எடுத்தன. கற்பு, புனிதம் சார்ந்த கருத்து நிலைகள் கட்டுடைப்பு செய்யப்பட வேண்டும் எனும் தாக்கம் பெண்ணிய எழுத்துகளில் மிகுந்திருந்தன. தீவிரவாதப் பெண்ணியம், சமூகவியல் பெண்ணியம், யதார்த்தப் பெண்ணியம், தலித் பெண்ணியம் என ஒவ்வொன்றும் தனித் தனியே படைப்புகளில் வெளிப்பட்டன. பெண்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வாகவும், சமூக மதிப்பு நிலையையும் இவ்வெழுத்துக்கள் பெற்றுத் தந்தன.

உமா மகேஸ்வரி, தமயந்தி தமிழ்ச்செல்வி, பாமா, சல்மா, சுகிர்தராணி, குட்டி ரேவதி, மாலதி மைத்ரி என பெண் படைப்பாளிகள் தங்கள் சார்ந்திருந்த சமயம், சாதி போன்றவற்றினை எதிர்கொண்டு அதற்கேற்றவாறு படைப்புகளில் எதிர்வினை புரிந்தனர்.

பெண்ணிய இலக்கியத்தைப் போன்றே மிகுந்த ஆவேசத்துடன் வெளிப்பட்ட இலக்கியமாகத் தலித் இலக்கியத்தைக் குறிப்பிடலாம். ஆதிக்கச் சாதிகளிடமிருந்தும், பெரு முதலாளிகளிடமிருந்தும் அடிமைப்பட்டுக் கிடந்த தலித் மக்களின் துயரங்களையும் துன்ப வாழ்வினையும் படைப்பின் வழியாக வெளிப்படுத்தும் கருக்களமாகத் தலித் இலக்கியம் உள்ளது. ஒடுக்கப்பட்டோர் இலக்கியம், ஓரத்து மக்களின் இலக்கியம், விளிம்பு நிலை இலக்கியம் என பல்வேறு சொல்லாடல்கள் இவ்விலக்கியத்திற்கு உள்ளது. தலித் இலக்கியத்தைத் தலித் எழுத்தாளர்களும் தலித் தரவு எழுத்தாளர்களும் தங்கள் படைப்புகளில் வெளிப்படுத்துகின்றனர். அபிமானி, அழகிய பெரியவன், அன்பாதவன், விழிபா. இதயவேந்தன், ப. சிவகாமி, பாமா, தர்மன், தவன் தீட்சண்யா, ஜே.பி. சாணக்யை, சிறீதரகணேசன், அன்பழகன் போன்றோர் குறிப்பிடத்தக்க தலித் எழுத்தாளர்கள் ஆவர். இவர்களுடைய படைப்பு மொழியும் தலித் மக்களின் நடையிலேயே பதிவு செய்யப்பட்டுள்ளது. தலித் இலக்கியம் தற்காலத்தில் அரசியல் காரணங்களால் வீரியம் குறைந்து வருகிறது.

2000ஆம் ஆண்டுகளுக்குப் பின்னர் சமயம் சார்ந்த புனைவிலக்கியங்கள் வெளிப்பட ஆரம்பித்தன. சிறுபான்மை இன மக்களின் வாழ்வியல் கூறுகளைப் பேசும் இலக்கியங்கள் முகிழ்த்தன. இசுலாம், கிறித்தவ, சமயச் சிறுகதைகள் வாசகரைச் சென்றடைந்தன. இஸ்லாமியச் சிறுகதைகள் 1920களில் தோற்றம் கண்டிருப்பினும் அவை பரவலான வாசகரிடத்தை அடையாமல் இருந்தது எனலாம். கடுமையான சட்ட வரன்முறைகளைக் உடைய சமயம் என்பதால் தங்கள் எழுத்தினையும் செயல்பாடுகளையும் சிரத்தையுடன் படைப்பாளர்கள் கையாண்டனர். இருப்பினும் எச்.ஜி. ரசூல் போன்றவர்களின் படைப்புகள் இஸ்லாமிய மக்களிடம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய நிலையும் தமிழ்ச் சூழலில் நிகழ்ந்தது. இசுலாமிய ஆண் படைப்பாளர்களைப் போல பெண் படைப்பாளிகள் தங்கள் சமயத்தில், பெண்கள் நடத்தப்பெறும் விதம், வாழ்க்கை முறை, தலாக் போன்ற நடைமுறைகளை படைப்புகளில் சித்திரித்தனர். இசுலாமியச் சிறுகதைகள் மட்டுமின்றி இயக்கம் சார்ந்த கதைகளும் படைக்கப்பட்டன. தோப்பில் முகமது மீரான், இன்குலாப்,

ஜாகீர்ராஜா, சல்மா போன்ற குறிப்பிடத்தக்க படைப்பாளிகள் தீவிர இசுலாமியப் படைப்புக்களத்தில் உள்ளவர்களாக அறியப்படுகிறார்கள்.

இஸ்லாமியப் படைப்பாளிகளைப் போல் கிறித்துவப் படைப்பாளிகள் அதிகமான கவனத்திற்கு உட்படவில்லை என்றே கூறலாம். கிறித்தவ அறம் சார்ந்த மிகுதி கதைகள் உள்ளன. இக்கதைகள் சமயப் பரப்புதலுக்கு மட்டுமே பயன்பட்டன எனலாம். பொதுநிலை வாசகரை மிகச் சில படைப்பாளிகளே சென்றடைந்தனர். எப்சிபா ஜேசுதாசன், எட்வர்ட், ஜீவகாருண்யன், எக்பர்ட் சச்சிதானந்தம், கே.என். செந்தில் போன்றோர் கிறித்தவப் படைப்பாளிகளாக வலம் வருகின்றனர்.

தற்காலத்தில் சிறுகதைகளின் நோக்கும் போக்கும் மாறி வருகின்றன. கால வளர்ச்சியினூடே கதைகளின் வடிவமும் சுருங்கிவிட்டன. மாய, புனைவு, தொன்மம், போன்ற நிகழ்வுகளுக்குத் தற்காலத்தில் இடமளிக்காமல் யதார்த்த இயல்புடைய கதைகள் படைப்பாளிகளால் படைக்கப்படுகின்றன. படைப்பாளிகள் பலரும் இன்று உலக இலக்கியப் போக்கினை ஓரளவு உணர்ந்தவர்களாகவே இருப்பதால் படைப்பும் மேலிடுகிறது. தமிழில் வெளிவரும் அனைத்து சிறு பத்திரிகைகளும் புதிய கதை வடிவங்களுக்கு இடந்தருகின்றன. சிறு கதைகள் வளர்ச்சியில் தமிழ்ச் சிறுபத்திரிகைகள் அளப்பரிய பங்கினை வகிக்கின்றன. ஆகையினால் தான் அயலகச் சிறுகதைகளும் இச்சிறு பத்திரிகைகளில் வெளிவந்து தமக்கெனத் தனிவாசகரைப் பிடித்துள்ளன.

### *அயலகச் சிறுகதைகள்*

பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் வரலாறு கொண்டத் தமிழன் உலகெங்கிலும் பல்வேறு நாடுகளில் வாழ்ந்து வருகிறான். சுமார் 42 நாடுகளில் தமிழர்கள் வாழ்வதாகக் குறிப்பு உள்ளது. அவ்வவ்நாட்டில் வாழும் தமிழர்கள் அந்நாட்டுப் பூர்வகுடிகளின் சமயம், கல்வி, பண்பாடு ஆகியனவற்றைப் பிறருக்குத் தெரிவிக்கும் முகமாக ஏதாவது ஒரு இலக்கிய வடிவில் படைப்புகளில் படைத்துக் காண்பிக்கின்றனர். அயலகப் படைப்புகளில் பூர்வீகப் படைப்பாளிகளும், புலம்பெயர் படைப்பாளிகளும் இடம்பெறுகின்றனர். மேலைத்தேய, கீழைத்தேய படைப்புகள், பெருவாரியாக மண்ணையும் மக்களையும் அவர்களின் ஏக்கங்களும் பதிவு செய்யப்பட்ட படைப்புகளாக உள்ளதை அறியமுடிகிறது. ஆகையினால்தான் அப்படைப்புகள் நாடு கடந்து கடல் கடந்து வாசகர்களால் வாசித்தறியப் படுகின்றன. இங்கு ஆய்வுக்கு ஏழு சிறுகதைகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. இக்கதைகள் வெளிப்படுத்தும் நாடுகளின் மக்கள் வாழ்க்கைமுறை பண்பாடு பிற நிகழ்வுகள் என கதைநோக்குடனும் போக்குடனும் பின்வருமாறு

ஆராயப்படுகின்றன. கதைகளில் வரும் மூல ஆசிரியன் பற்றிய குறிப்புகள் பின்னிணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன. சில கதைகளுக்குக் குறிப்புகள் தேடியும் கிடைக்கவில்லை. வாசிப்பவர் தெரிந்திருப்பினும் அதுபற்றி இங்கு ஆராயப்படும் கருத்துக்கள் கூடுதல் செய்தியை அளிக்கும் என நம்பப்படுகிறது.

## *ஜப்பான்: ஹிரோமிகவாகாமி*

'கடவுள் ஆசிர்வதிப்பார்'(காமிசாமா) எனும் சிறுகதையானது ஜப்பான் நாட்டின் படைப்பாகும். ஜப்பான் நாட்டில் 2011ஆம் ஆண்டு ஃபுகுஷிமா எனும் அணு உலையானது சுனாமியால் வெடித்துச் சிதறியதை உலக நாடுகள் அனைத்தும் அறிந்ததே. அந்த அணு உலை வெடிப்பின் தாக்கத்தினால் உலக நாடுகளில் நிறுவப்பட்டுள்ள அணு உலைகளின் பாதுகாப்பு குறித்த அச்சம் மக்களிடம் பரவியுள்ளது. தமிழகத்தில் கூடங்குளம் அணு உலையின் எதிர்ப்பானது ஜப்பான் அணு உலையானது வெடித்துச் சிதறியதன் பின்னரே போராட்டம் தீவிரம் கண்டது. இக்கதையானது அணு உலை வெடித்த சுற்றுப் பகுதிகளில் வசித்த மக்களின் வாழ்வியல் செயல்பாடுகளை வெளிப்படுத்தும் விதமாக அமைந்துள்ளது.

அணு உலைக்கு அருகாமையில் இருந்த மக்கள் தங்களுக்குப் பிடித்த உடையினையும் உணவினையும் அனுபவிக்க முடியாதவர்களாகவே இருந்தனர்.

> என்னுடைய மதிய உணவை முழங்கால் வரையான பூட்ஸீக்குள் போட்டு எடுத்து வந்தேன். (ப. 50)

என்று குறிப்பிடுவதன் மூலம் உணவில் கதிரியக்க அணுத்துகள் புகுந்து தன்னை மரணத்திற்குள் தள்ளிவிடும் என அச்சம் கொண்டே பாதுகாப்பு உணர்வுடன் உண்டனர் என்பதை படைப்பாசிரியர் சுட்டுகிறார். படைப்பாளி கரடியை முதன்மைப் பாத்திரமாகக் கொண்டு அணு உலை பற்றிய செய்திகளைப் பேசவைத்துள்ளார்.

சூழலியல் வளங்களை அழிப்பதில் ஒவ்வொரு நாடும் போட்டி போடுகின்றன. வளர்ந்த நாடுகளின் பங்கு இதில் மிகுதியானது. ஒவ்வொரு தொழிற்சாலைகளும் மிரட்டும் குடியிருப்புகளும் முழுமையான இயற்கையின் மரணத்தில் உதித்தவைகளே ஆகும்.

> ஒரு காலத்தில் வயல்வெளிகளாக இருந்த நிலத்தின் ஊடாக ஆற்றுக்குச் செல்லும் சாலை இருந்தது. கதிரியக்க நச்சு அகற்றுதலுக்காக வந்தவர்கள் தாம் அங்கு விளைந்திருந்த அனைத்து நெற்பயிர்களையும் தற்செயலாகப் பார்த்தனர். (ப. 52)

ஃபுகுஷிமா அணு உலையும் நன்கு விளைச்சல் மிகுந்த நிலத்திற்கு அருகில் நிறுவப்பட்டிருந்ததை படைப்பாளி குறிப்பிடுகிறார். கார்ப்பரேட் நிறுவனங்களின் வியாபார உத்திகளால் மலை நிலங்களில் வாழும் பூர்வீகக் குடிகள் வெளியேற்றப்படுவதையும் அங்குள்ள பசுமைக் காடுகளை அழித்துச் சுற்றுச்சூழலுக்கு பேராபத்தினை விளைவிப்பதையும் செய்தித் தொடர்புச் சாதனங்கள் தினமும் வெளியிடுகின்றன.

அணு உலை வெடிப்பினால் அருகில் வசிக்கும் மக்கள் சுதந்திரமாக நடமாட முடியவில்லை. ஒவ்வொரு மனிதரும் கவச உடைக்குள் சிறைப்பட்டுள்ளதை படைப்பு வெளிப்படுத்துகிறது.

> இந்த வருசத்தின் (2011) ஆரம்பத்திலிருந்தே அதிக அளவிலான கதிரியக்கத்திலிருந்து தப்பித்துக் கொள் வதற்கான சிறப்புக் கவனங்களை மேற்கொண்டு வருகிறேன். எனது உடலில் இதுவரை சேர்ந்துள்ள கதிரியக்க அளவைப் பார்த்தால் இன்னும் கொஞ்ச கதிரியக்கத்தை என்னால் (கரடி) தாங்கிக்கொள்ள முடியும். மேலும் இப்பகுதியில் நாம் அதிகக் காற்றை எதிர்பார்க்க இயலாது என்று ஸ்பீடி(தெ சிஸ்டம் ஃபர் பிரிடிக்சன் ஆஃப் என்விரோமெண்டல் டோஸ் இன்பஃபர்மேஷன்) கணித்திருக்கிறது. (ப. 53)

அணு உலைப் பகுதியில் தினமும் சுற்றுச்சூழல் அதிகாரிகள் கதிர்வீச்சின் அளவைக் கணக்கிட்டு மக்களுக்குத் தெரியப்படுத்துகின்றனர். இவை வளர்ந்த நாடுகளுக்குச் சாத்தியப்படுகின்றன. இந்தியா போன்ற வளரும் நாடுகளின் நிலை கேள்விக்குரியதாகவே உள்ளது. அணு உலை வெடிப்பானது மக்களின் வாழ்க்கை முறைகளையும் வாழ்வாதாரத்தினையும் புரட்டிப் போட்டதைப் படைப்பாளி தம் படைப்பில் கவனப்படுத்தியுள்ளார். மரபு நிலையாகத் தொழில் புரிந்த மக்கள், அவர்களின் சடங்குமுறைகள், பழக்கவழக்கங்கள் என அனைத்திற்கும் இழப்பு ஏற்பட்டு நிராயுதபாணியாக இருப்பதைக் கதை வெளிப்படுத்துகிறது.

> சம்பவம் (அணு உலை வெடிப்பு) நடப்பதற்கு முன்பு என்றால் இந்த இடம் மிகவும் ரம்மியமானதாக இருக்கும். மக்கள் நீந்திக் கொண்டும் மீன் பிடித்துக்கொண்டும் இருப்பார்கள். குடும்பங்கள் தங்கள் குழந்தைகளையும் அழைத்துக்கொண்டு வந்துவிடுவார்கள். ஆனால் இப்போதெல்லாம் இந்தப்பகுதி முழுவதுமே ஒரு குழந்தையைக் கூட காணமுடியவில்லை. (ப. 53)

என மக்களின் இயல்புநிலை முழுமையாகத் தடைபட்டதை மனம் வெதும்பி படைப்பாளி படைத்துள்ளார். உலகத்தில் உள்ள அணு உலைகள் அனைத்தும் மூடப்பட வேண்டும். அணு உலைகளால் கிடைக்கப்பெறும் பயன்பாடு மிகச் சொற்பமே. தீமைதான் நிரம்பியுள்ளது. இந்தியாவில் செர்னோபில் அணு உலை விபத்து ஏற்பட்டதன் பாதிப்பு இன்று வரைத் தொடர்வதை சமூக ஆர்வலர்கள் சுட்டிக் காண்பிக்கின்றனர். மென்மேலும் அணு உலைகளை நிறுவுவதன்முலம் இந்திய நாட்டை மரணத்தின் அழைப்பாளனாகவே பிற நாடுகள் பார்க்கும் நிலை ஏற்பட்டுவிடும்.

> ஒவ்வொரு இரவும்போல அன்று நான்பெற்ற கதிரியக்கத்தின் அளவு குறித்த என் மதிப்பீட்டைப் பதிவு செய்தேன். வெளி உடல் மீது முப்பது மைக்ரோ சீவெர்டுகள், உடலின் உள் பாகங்கள் கிரகித்தது பத்தொன்பது. ஆண்டு முழுவதும் இதுவரை மொத்தமாக வெளி உடலுக்கு 2.900 மைக்ரோ சீவெர்ட்டுகள்; உள் பாகங்கள் 1.780 மைக்ரோ சீவெர்ட்டுகள் (ப. 55)

என அணு உலைக்கு அருகில் இருந்த மக்கள் தங்கள் உடலின் மீது கதிரியக்கத்தின் அளவினைக் கணக்கிடுவதன் மூலம் அவர்களே தங்கள் வாழும் காலத்தைத் தீர்மானிக்கின்றவர்களாக உள்ளதைக் கதை புலப்படுத்துகிறது. படைப்பாளி ஹிரோமிகவாகாமி தன் நாட்டின் மீதும் மக்களின் மீதும் கொண்டுள்ள ஆழ்ந்த பற்றினை முழுமையாக வெளிப் படுத்தி யதார்த்த நோக்கில் உயிரோட்டமுடையதாக இக்கதையினைப் படைத்தளித்துள்ளார்.

பிரான்சு: ஆன்ரித்துரோயா

உலக நாடுகளைத் தன் ஆளுகைக்குள் உட்படுத்திய நாடுகளுள் பிரான்சும் ஒன்று. இந்தியாவின் பாண்டிச்சேரி, காரைக்கால், மாஹி, ஏனம் பகுதிகளைத் தனது ஆட்சிப் பரப்பினுள் கொண்டுவந்து ஆண்டனர். ஆகையினால்தான் தற்காலத்திலும் பூர்விக மக்கள் பிரெஞ்சு ஆட்சி நிர்வாகத்திற்குத் தனது வாக்கினை அளித்து வருகின்றனர். இக் கதையாசிரியர் மாஸ்கோவில் பிறந்திருப்பினும் படைப்புகள் பிரான்சை மையப்படுத்தியே படைக்கப்பட்டுள்ளன. 'கைகள்' எனும் தலைப்பிலான இச்சிறுகதையானது பிரான்சு நகரில் உள்ள நகம் சீரமைக்கும் அழகு நிலையத்தில் பணிபுரியும் முதிர்க்கன்னியன் வாழ்வினை மையப்படுத்தி பின்னப்பட்டுள்ளது. பிரான்சு நாட்டில் உள்ள மசாக் சென்டர், கிளப்புகள் பற்றிய குறிப்புகளும் கதையில் உள்ளது. கதையில் முதிர்கன்னிக்கு திருமணம் நடைபெறும்போது நிமித்தங்கள் நிகழுகின்றன.

மெழுகுவர்த்திகள் அடிக்கடி அணைந்து போயின. வாத்தியங்கள் சரியாக ஒலிக்காமல் பழுதாகிவிட்டன. கோரஸ்பாடும் சிறுவன் ஒருவனுக்குத் தொடர்ந்து விக்கல் எடுத்துக்கொண்டிருந்தது. (ப. 55).

நிமித்தங்களை எல்லா நாட்டு மக்களும் தங்கள் நம்பிக்கை சார்ந்த ஒன்றாகவே கருதுகின்றனர். நிமித்தம் பற்றிய நம்பிக்கையானது மனிதன் தோற்றகால வயப்பட்டதாக உள்ளதை அறியமுடிகிறது.

முதிர்க் கன்னிக்குத் திருமணம் முடிந்திருப்பினும் அவளுடைய மனதில் ஏதோ ஒரு குறைகள் நிழலாடிக்கொண்டே இருந்தன. அவளுக்கு வாய்க்கப்பெற்ற கணவனும் நீண்ட நகங்களைக் கொண்ட குறையுடைய வனாக இருந்தது அவளின் மனக்குறையின் ஒரு கூறாக அமைந்தது.

தொழிலைப் பற்றி எவ்வித குறையும் அவர் சொல்வதில்லை. மனைவிக்கு (முதிர்க் கன்னி) என்றும் கைச் செலவுக்கு பணம் தர மறுத்ததும் இல்லை. இது போன்று அமைந்த ஒழுங்கான, பாதுகாப்பான சூழலில் வளர்ச்சியும் செல்வர் களுக்கான மிடுக்கும் தமக்கு உண்டாவதை உணர்ந்தாள். இப்படியாக மகிழ்ச்சியாக வாழ்ந்த அவர்களுக்கு நிறையக் குழந்தைகள், உறுதியான நகங்களுடன் பிளந்த கால்களுடனும் பிறந்தனர் (ப. 56).

முதிர்க்கன்னிக்குப் பிறந்தக் குழந்தைகளும் குறையுடனே பிறந்ததினாலும் அவள் வாழ்க்கையில் குறை என்பது நிரந்தரமாகி விட்டதை இப்பிரஞ்சுக் கதை சுட்டுகிறது.

## ஸ்பெயின்: இசபல் அலண்டே

ஸ்பானிஷ் மொழிச் சிறுகதையான 'இரண்டு வார்தைகள்' எனும் கதையானது பெலிஸாக்ரெடிஸ்குலேயா என்ற பெண்ணின் கவிதை வரிகள் அந்நாட்டு மக்களை எழுச்சியுறச்செய்கிறது. மேலும் இப்பெண்ணானவள் ஒவ்வொரு நகரத்திற்கும் சென்று அவ்வவ் நகரத்துச் செய்திகளைக் கூறும் தொடர்பாளர் பணியினையும் மேற்கொள்கிறாள். உள்நாட்டுப் போரில் ஏற்படும் துயரங்களைப் பற்றி இக்கதை குறிப்பிடுகிறது. போரினால் மக்கள் தங்கள் அன்றாடப் பணிகளில் ஈடுபடமுடியாமல் வருந்துவதைப் படைப்பு வெளிப்படுத்துகிறது.

யாருமே அதைப் போன்றதொரு விஷயத்தை எப்போதுமே கண்டதில்லை. உள்நாட்டுப் போரின் விளைவாகத் தோன்றிய ஓர் மனிதர் காயத்தழும்புகளோடு ஒரு பேராசிரியரைப் போல

> பேசியதும் அவரது புகழ் நாட்டின் மூலை முடுக்கெல்லாம் பரவி தேசத்தின் உள்ளத்தைக் கவர்ந்தது. (ப. 49)

உள்நாட்டுப் போரை நிறுத்துவதற்காக பலர்படும் துயரங்களையும் இக்கதை விளக்கிச் செல்கிறது.

*துருக்கி: ஸ்டெபாணிஅடெஸ்*

'மிகயீலின் இதயம் நின்றுவிட்டது' எனும் துருக்கி நாட்டுச் சிறுகதையானது அந்நாட்டில் உள்ள கிராமப்புற மக்களின் வாழ்வியல் முறையை எடுத்தியம்புகிறது. அந்நாட்டில் உள்ள முதலாளிவர்க்கம் ஏழைகளைச் சுரண்டி வேலை வாங்குவதைக் கதை வெளிப்படுத்துகிறது.

> இளைத்தவர்கள் மீது வலுவானவர்கள் காட்டும் வன்முறையின் எதிரொலியையோ உணரமுடியவில்லை. வன்முறையும் தீவினையும் நிரம்பிய இரவு வாழ்க்கையிலிருந்து நகரம் சிறிய ஓய்வெடுத்துக் கொண்டது (ப. 34).

துருக்கி நாட்டில் உள்ள தீவிரவாத அமைப்புகள் தொடர்ந்து தாக்குதலை மேற்கொண்டு மக்களை நிம்மதி இழக்கச் செய்தன. துருக்கியப் பெண்கள் மிகுந்த அழகுடையவர்களாக இருந்ததினால் படைப்பாளி ரோமாபுரிப் பெண்களுக்கு இணையாகக் குறிப்பிடுகிறார்.

படைப்பாளி, கதைகளின் பல்வேறு இடங்களில் வாழ்வியல் உண்மைகளைப் பறைசாற்றியுள்ளார். 'அகந்தை என்பது ஒரு வேளை ஆன்மாவை முற்றிலும் இழந்த பின்னர் தோன்றும் ஆழமான வெறுமையில் ஒருவன் அனுபவிக்கும் கடைசி உணர்வாக இருக்கலாம்' (ப. 35) என தன் கருத்தைப் பதிவு செய்கிறார். துருக்கி நாடு பெரும்பான்மை இசுலாமிய சமய மக்களைக் கொண்டிருப்பதால் சட்டதிட்டங்கள் கடுமையாக உள்ளதை மிகயீல் எனும் பாத்திரம் மூலம் வெளிப்படுகிறது.

> கெடுபிடியான ஒழுக்க விதிகள் ஆட்சி செய்யும் இந்த உலகில் வரையறுக்கப்பட்ட பழைய உணர்ச்சிகளுடனும் புதிரான சடங்குகளுடனும் ஊடாகவும் வாழ்க்கை வாழப்படும் இந்த உலகில், சின்னக் கால் இடறல் கூட ஒருவரின் கௌவரவத்தை நொடியில் தரைமட்டமாக்கிவிடும். (ப. 36)

மிகயீல் எனும் பாத்திரத்தின் மென்மையான காதல் உணர்வுகளை இக்கதை எடுத்தியம்புகிறது. இக்காதல் கதையினை மையமிட்டே துருக்கி நகரத்தில் வாழும் ஏழை கிராம மக்கள், பிச்சைக்காரர்கள், தெருவில் வசிப்போர், கோடைகாலம், குளிர்காலம் என மக்களின் வாழ்க்கை முறையினைப் படைப்பாளி படம் பிடிக்கின்றார்.

*நைஜீரியா: சினுவா அச்சிபி*

'விஷம்' எனும் நைஜீரியா சிறுகதையானது குழந்தைக் கல்வி பற்றி பேசுகிறது. படைப்பாளி தற்போது அமெரிக்காவில் வசிக்கிறார். நைஜீரியா, குழந்தைக் கல்வியில் பின்தங்கிய நாடாக இருப்பதினால் அதனை வலியுறுத்தி இப்படைப்பாளி தம் படைப்பினுள் பதிவு செய்கிறார்.

> பையன்கள் எல்லாம் எங்கே? என்று அவஸ்தையுடன் கேட்ட அந்தப்பெண், 'ஸாரி மேடம்' எங்களிடம் வேலைபார்த்த பல பையன்கள் இந்த இலவச ஆரம்பக் கல்வித்திட்டத்தால் வேலையைவிட்டுப் போய் விட்டார்கள். (ப. 53)

உலகின் பல்வேறு நாடுகளில் ஆரம்பக் கல்வி மறுக்கப்படுவதை புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. இதில் ஏழைநாடுகள்தான் (ருவாண்டா, உகாண்டா) மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளன. குழந்தைகளைக் கல்வி பயிலச் செய்ய வேண்டுமென பெற்றோர்களைப் படைப்பாளி கட்டாயப்படுத்துகிறார்.

> குழந்தைகளுக்குக் கல்விக் கட்டணத்தைச் செலுத்த அவர்கள் என்ன தியாகத்தை வேண்டுமானாலும் செய்வார்கள். (ப. 55)

நைஜீரியாவானது இலஞ்ச நாடுகளின் பட்டியலில் உள்ளதைப் படைப்பு வெளிப்படுத்துகிறது. இலஞ்சமானது வளர்ந்த நாடுகள், வளரும் நாடுகள், ஏழை நாடுகள் என எதனையும் விட்டுவைக்காமல் இந்நோய் பீடித்துள்ளது.

> எங்கள் கிராமத்தைச் சேர்ந்த ஒருவனுக்கு என் தந்தையை விட வயது அதிகம். அவன் பதிவு செய்து எல்லாவற்றையும் முடித்துவிட்டான். மாஜிஸ்ட்டிரேட் நீதி மன்றத்திற்குப் போய் அங்கே ஐந்து ஷில்லிங் (இலஞ்சப்பணம்) கொடுத்தான். அவனுக்கே வயதைக் குறைத்துச் சான்றளித்து விட்டார்கள். (ப. 56)

கல்வி, வேலைவாய்ப்புகளில் இலஞ்சமானது நாடுகளில் முக்கிய இடத்தினை வகிக்கிறது. ஆப்பிரிக்க நாடுகள் பொருளாதாரத்தில் பின் தங்கியவையாக இருப்பதினால் இங்கு நடைபெரும் பல்வேறு முறைகேடுகளைப் படைப்பாளி பதிவு செய்துள்ளார். பல்வேறு செய்திகளை இச் சிறுகதையில் வெளிப்படுத்தியிருப்பினும் படைப்பாளியின் உள்ளம் குழந்தைக் கல்வி மீதே உள்ளது.

*சிறு சத்தம் போடும் மோட்டார் காரே*
*நீ பள்ளிக்கூடம் போனால்*

*என்னையும் கூட்டிப் போ*
*பீ... பீ.... பீ... பவ்– பவ்– பவ்–* *(ப. 61)*

கதையின் இறுதியில் குழந்தைகளை வேலைக்கு அமர்த்திய பெண்ணொருத்தி தன் விஷமத் தவற்றினை உணர்ந்து திருந்தி பள்ளிக்கு அனுப்புவதாகக் கதை முடிகிறது.

**கனடா மணிவேலுப்பிள்ளை**

'உத்தியோகம்' எனும் சிறுகதையானது அண்டை நாடான இலங்கையில் இருந்து புலம்பெயர்ந்து கனடாவில் வாழ்ந்துவரும் ஒரு அகதியின் வாழ்வியல் பற்றி பேசுகிறது. உள்நாட்டுப் போரினால் மிகுதியாகப் பாதிக்கப்பட்ட நாடாக இலங்கை உள்ளது. கனடா, ஆஸ்திரேலியா, நார்வே, இந்தியா, சிங்கப்பூர் என இந்நாடுகளில் மிகுதியானத் தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழ்கின்றனர். இவர்கள் சில நாடுகளில் மரியாதையுடனும் சில நாடுகளில் மிகுந்தத் தாழ் நிலையிலும் நடத்தப்படுகின்றனர்.

கதையாசிரியர் தற்போது கனடாவில் வசிக்கிறார். அவரே கதை கூறுவதுபோல ஒருமைத்தன்மையுடன் கதைத் துவங்குகிறது. கனடாவில் இயற்கை வளங்கள் அழிக்கப்பட்டுக் குடியிருப்புகளாக மாற்றப்படும் அவலத்தினைப் படைப்பாளி பதிவு செய்துள்ளார். படைப்பாளி அந்நாட்டில் காவலாளியாகப் பணிபுரிகின்றார். தன் சொந்தநாட்டில் (இலங்கை) அரசுப் பணியில் இருந்தவர் தற்போது கூலியாளாய் கனாடவில் வாழ்கிறார்.

*அது ஒரு காடு காட்டைக் குடைந்து, வீடுகட்டத் தளம் எடுத்தார்கள். (ப. 18)*

கனடாவின் கலாச்சாரப் பண்பாடுகளைப் பார்த்து படைப்பாளி எரிச்சலடைவதை படைப்பு பதிவு செய்கிறது.

> படுபாவிகளே நான் வாசிக்கவும், எழுதவும், படுக்கவும் முடியாமல் திண்டாடுகிறேன். நீங்கள் பியர் குடிச்சபடி படம் பார்க்கிறீர்களோ? (ப. 19)

என கனடர்களின் செய்கைகள் இவரைக் கோபமூட்டின. தன் நாட்டில் இருக்கும் மனைவி குழந்தைக்கு மடல் எழுதும்போது கூட இங்குள்ள உண்மை நிலையை மறைத்து அவர்களின் மகிழ்ச்சி முகங்கள் பிரதிபலிகிகும்படி எழுதுகிறார். இவருடைய கடினமான பணியின் மூலம் கிடைத்தப் பணத்தை அனுப்பும்போது, அதனையறிந்த பக்கத்துவீட்டுக், காரர்கள் வேறுவிதமான நிலைப்பாடுகளில் உள்ளதாகப் படைப்பாளி சுட்டுகிறார்.

> உங்களுக்கென்ன, கனடாவிலிருந்து காசு வருது. ஆசைதீரச் செலவழிக்க முடியுது. (ப. 20)

கடுமையான இன அழிப்பின் தாக்குறவால் தாக்குப்பிடிக்க முடியாமல் கனடாவுக்குப் புலம்பெயர்ந்த இப்படைப்பாளி தன் மகளின் கடிதம் மூலம் இலங்கையின் போர்ச் சூழலைத் தெரிந்துகொள்கிறார்.

> உருப்பிட்டி தரகர் தம்பையா வீட்டில் குண்டு விழுந்து, உள்ளே படுத்துக் கிடந்த ஆறுபேரும் உடல் சிதறிச் செத்துப் போனார்களாம். (ப. 20)

இலங்கை உள்நாட்டுப் போரில் சிங்களப்படைகள் ஏற்படுத்திய தீவிரத்தையும் கொடிய விளைவினையும் படைப்பு சுட்டிக்காட்டுகிறது. இது பற்றி அடுத்து வரும் கதையில் ஆராயலாம்.

இலங்கை: ஷோபாசக்தி

'குண்டு டயானா(1992:2007)' கதையின் படைப்பாளி ஷோபாசக்தி இவருடைய 'ம்' எனும் புதினம் உள்நாடு மற்றும் அயலகத் தமிழர்களிடம் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. இயக்கம் சார்ந்த செய்திகளோடு இலங்கைத் தமிழர்களின் பரிதாபகரமான வாழ்வியல் நிலைப்பாடுகளையும் இவருடைய படைப்புகளில் காணக்கிடக்கிறது. இக்கதையில வரும் டயானா என்னும் குண்டுப் பெண்ணினை மையப்படுத்தி இலங்கையின் போர்த் தீவிரத்தை படைப்பாளி வெளிக்காட்டியுள்ளார்.

ஒரு இன மக்களை அழித்தொழிக்க வேண்டுமானால் முதலில் அவர்களுக்கு அறிவு தரக்கூடிய கல்வி நிலையங்களைத் தகர்த்தலின் மூலமாக எதிரியின் எண்ணம் ஈடேறுகிறது. மேலும் மருத்துவமனைகள் வழிபாட்டுத் தலங்கள் என கல்வி சுகாதாரம் பண்பாடு, சமயம் ஆகியன எதிரிகளின் முதன்மை அழித்தொழிப்பு இலக்காகின்றது.

> மூன்று குண்டுகள் வீசப்பட்டன. முதலாவது குண்டு கிராமத்தின் பாடசாலை மீதும், இரண்டாவது குண்டு அங்கிருந்து அரை கிலோமீட்டர் தூரத்திலிருந்த ஒரு குடியிருப்புப் பகுதியிலும், மூன்றாவது குண்டு டயனாவின் வீட்டின் மீதும் போடப்பட்டன. (ப. 17)

தமிழ் மக்கள் திரளாகக் குழுமி இருக்கும் இடங்கள் பார்த்து இலங்கை சிங்கள ராணுவம் ஏவுகனைத் தாக்குதல்களை மேற்கொண்டது. உடல் உறுப்பினை முழுமையாக உடைய தமிழர்கள் குறைந்தனர். ஏதாவது ஒரு உறுப்பு சிதைக்கப்பட்டிருந்தது. கைகளைப் பின்னால் கட்டி பறவை

இனத்தைச் சுடுவதுபோல் தமிழர்கள் சுடப்பட்டனர். இலங்கைத் தமிழர்களின் போர் பாதிப்பு, அவலநிலை பல்வேறு நாடுகளுக்கு ஊடகம் வழியாகச் சென்றது. மக்கள் தங்கள் பாதுகாப்புக்காக வெட்டிய பதுங்கு குழிகளில் குண்டடிப்பட்டு அங்கேயே சமாதியானார்கள்.

> பதுங்கு குழி வெட்டும் வேலைகள் மூன்று நாட்களாக நடந்தன. டானாப் பட ஆறடி ஆழத்திற்கு வெட்டிய குழிக்குள் இறங்குவதற்குத் திருத்தமான படிக்கட்டுக்களை மரத் துண்டங்களைக் கொண்டு அமைந்திருந்தான். அந்த பதுங்குகுழி அவன் (காதலன்) டயனாவுக்காகக் கட்டிய தாஜ்மகால் (ப. 21).

பதுங்கு குழிகள் சிங்கள இராணுவத்தின் பார்வைகளுக்குத் தப்பவில்லை. உலகின் இயற்கை வளங்கள் சூழ்ந்த நாடாக அதிலும் தமிழர் வாழும் பகுதி இருந்தது. இப்போது சூழலியல் முற்றாக அழிக்கப்பட்டு இலங்கையில் இயற்கைக்கும் சமாதி கட்டப்பட்டது. கடந்த பத்தாண்டுகளில் படைப்பாளர்களால் எழுதப்படும் படைப்புகளில் இலங்கைத் தமிழர்களின் போர்முறை வாழ்வனுபவமே மிகுந்திருக்கிறது. நேச நாடுகளின் வஞ்சிப்பு மூலம் இலங்கைத் தமிழர்கள் நிராயுதபாணியாகி உள்நாட்டில் அயலர்களாகவும் தஞ்சம்புகுந்த நாட்டில் அடிமைகளாகவும் தங்கள் வாழ்வினை நகர்த்துகின்றனர். அம்மக்களின் துயரில் பங்கெடுக்காத மனிதர்கள் அனைவருமே கறைபடிந்த வரலாற்றிற்குச் சொந்தக்காரர்கள் ஆவர்.

## தொகுப்புரை

- ❖ ஜப்பான் சிறுகதையானது அணுஉலை வெடிப்பினால் மக்களின் வாழ்வாதார நிலை பறிபோய்விட்டதையும் அணுக்கதிர் வீச்சின் தீவிரத்தையும் இவ்வாய்வின் மூலம் வெளிப்பட்டது. ஆகையினால் கடவுள் ஆசீர்வதிக்கட்டும் எனும் தலைப்பு பொருத்தப்பாடுடைய தானது.
- ❖ பிரான்சின் தொழிலாளர் வாழ்க்கையினைக் குறிக்கும் கைகள் கதையானது அம்மக்களின் நம்பிக்கை, வாழ்க்கை முறையினை உணர்த்தின.
- ❖ ஸ்பானிஷ் மொழியில் அமைந்த 'இரண்டு வார்த்தைகள்' கதையானது உள்நாட்டுப் போரின் சூழலை வெளிக்காட்டியது.

- துருக்கியின் 'மிகயீலின் இதயம் நின்றுவிட்டது' எனும் கதையானது அந்நாட்டு மக்களின் வாழ்க்கை, ஓரத்து மக்களின் நிலை இவற்றுடன் மென்மையான காதலையும் எடுத்தியம்பியது.
- 'விஷம்' எனும் நைஜீரியா கதையானது குழந்தைக் கல்வியின் அவசியத்தை எடுத்துரைப்பதாக அமைந்தது.

| கதை | படைப்பாளி | நாடு | ஆண்டு - இதழ் | மொழி பெயர்ப்பு பிறமொழி | தமிழ் |
|---|---|---|---|---|---|
| கடவுள் ஆசீர்வதிப்பார் 2011 | ஹிரோமிகவாகாமி | ஜப்பான் | ஏப்ரல் 2012 தீராநதி | ஆங்கிலம் | அப்பணசாமி |
| கைகள் | ஆன்ரித்துரோயா | பிரான்ஸ் | பிப்ரவரி 2010 தீராநதி | | சு.ஆ. வெங்கட சுப்புராயநாயகர் |
| இரண்டு வார்த்தைகள் | இசபல் அலயண்டே | ஸ்பெயின் | நவம்பர் 2012 தீராநதி | | அருணன் |
| குண்டு டயனா - 1992-2007 | ஷோபாசக்தி | இலங்கை | ஜனவரி 2009 தீராநதி | தமிழ் | ஷோபா சக்தி |
| உத்தியோகம் பிள்ளை | மணிவேலுப் | கனடா | பிப்ரவரி 2012 தீராநதி | தமிழ் | மணிவேலுப் பிள்ளை |
| மிகயீலின் இதயம் நின்றுவிட்டது | அய்ஃபர் டுன்ஷ் | துருக்கி | ஜீலை - 2011, காலச்சுவடு | ஆங்கிலம் - ஸ்டேபானி அடெஸ் | சுகுமாறன் |
| விஷம் | சினுவா அச்சிபி காலச்சுவடு | நைஜீரியா | மார்ச் 2010, | ஆங்கிலம் - சினுவா அச்சிபி | கே. முரளிதரன் |

❖ 'உத்தியோகம்' எனும் கனடா சிறுகதை அயல்நாடுகளில் வாழும் அகதிகள் வாழ்வினைப் பறைசாற்றியது.

❖ 'குண்டு டயனா' எனும் சிறுகதை இலங்கையில் உள்நாட்டுப் போர் இன அழித்தொழிப்பு நிகழ்வுகளை எடுத்துக்காட்டியது.

## துணை நூல்கள்


1. அரசு, வீ., ஜூன் 2012, தமிழ்ச் சிறுகதை: போக்குகள் - ஆளுமைகள் - விவரணங்கள் - உரையாடல், மாற்றுவெளி, சென்னை, ப. 11.
2. பூவைசுப்பிரமணியன், த., 2007, பா. செயப்பிரகாசம் சிறுகதைகள் காட்டும் கரிசல்காட்டு மக்களின் வாழ்வியல், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி (அச்சிடப் பெறாத முனைவர் பட்ட ஆய்வேடு), ப.8.


## பின்னிணைப்பு

### கடவுள் ஆசீர்வதிப்பார், ஜப்பான்

ஹிரோமி கவாகாமி, தற்காலத்தின் முக்கிய ஜப்பான் மொழி எழுத்தாளர். கடவுள் ஆசீர்வதிப்பார் (காமிசாமா) 2011 அண்மையில் எழுதப்பட்ட சிறுகதை, இது ஜப்பான் ஃபுகுஷிமா அணுஉலை விபத்தைத் தொடர்ந்து எழுதப்பட்டது. உண்மையில் கவாகாமி 'கடவுள் ஆசீர்வதிப்பார் (காமிசாமா)' என்ற தலைப்பில் 1993-லேயே ஒரு சிறுகதை எழுதினார். விபத்துக்குப்பிறகு காமிசாமா 2011 என திருத்தி எழுதினார். அணு உலை விபத்தால் துயருற்றிருந்த ஜப்பான் மக்களுக்கு இது ஆறுதலாயிருந்தது. அதன் ஆங்கில மொழிபெயர்ப்பு அண்மையில் வெளிவந்துள்ளது. ஜப்பான் மொழியில் இருந்து ஆங்கில மொழிபெயர்ப்பு; டெட் கூஸென் மற்றும் மோடாயுகி ஷிபாடா.

### கைகள், பிரான்ஸ்

மாஸ்கோவில் 1911 ஆம் ஆண்டு நவம்பர் முதல் தேதி பிறந்தவர் ஆன்ரித்து ரோயா (1911-2007). 1917 அக்டோபர் புரட்சியின் போது பிறந்த நாட்டை விட்டு குடும்பத்துடன் வெளியேற நேர்ந்த அவரது பெற்றோர் பாரீசில் குடியேறினார். சட்டக்கல்வியில் பட்டம் பெற்ற பின்பு தன்னை முழுதுமாக இலக்கியத்திற்கு அர்ப்பணித்துக் கொண்டார். புதினம், சிறுகதைத் தொகுப்பு, நாடகம் என நூற்றுக்கும் மேற்பட்ட நூல்களை வெளியிட்ட ஆன்ரித்துரோயாவின் இலக்கியச் சேவையை அங்கீகரிக்கும் விதமாக ப்ரிக்ஸ் கோன்கோர்ட் எனும் பிரான்சின் உயரிய இலக்கிய விருது வழங்கப்பட்டது. 2007ம் ஆண்டின் தனது 95ஆம் வயதில் மறையும் வரை எழுதிக்கொண்டே இருந்தார். அவரது மறைவுக்குப் பின்னும் அவரது இரண்டு நூல்கள் இந்த ஆண்டு வெளியிடப்பட்டன. ரஷ்யாவில் பிறந்திருந்தாலும் பிரான்சின் இலக்கிய உலகிற்கு நல்ல வரவாக அமைந்தவர் ஆன்ரித்துரோயா.

### மிகயீலின் இதயம் நின்றுவிட்டது, துருக்கி

அய்ஃபர்டுன்ஷ் சமகாலத் துருக்கி இலக்கியத்தின் முதன்மையான ஆளுமைகளில் ஒருவர். அடாபஸாரியில் பிறந்தார். இஸ்தான்புல் பல்கலைக்கழகத்தின்

அரசியல் துறையில் பயின்று பட்டம் பெற்றார். பல்கலைக்கழக நாட்களிலிருந்தே கலை, இலக்கிய, கலாச்சார இதழ்களில் எழுதத் தொடங்கினார். கும்ஹூரியத் நாளிதழ் நடத்திய சிறுகதைப் போட்டியில் பெற்ற முதல் பரிசு அய்ஃபர்டுன்ஷுக்கு இலக்கிய மதிப்பை ஏற்படுத்தியது. யாவிக்ரெதி பதிப்பகத்தின் தலைமைப் பதிப்பாசிரியராகச் சில ஆண்டுகள் பணி புரிந்தார். இரண்டு நாவல்கள், ஐந்து சிறுகதைகள், இரண்டு வாழ்க்கைக் குறிப்புகள், ஓர் ஆய்வு நூல் - ஆகியவை வெளிவந்துள்ளன. தனது சிறுகதையை அடிப்படையாகக் கொண்ட படத்துக்குத் திரைக்கதையும் எழுதியிருக்கிறார்.

## விஷம், நைஜீரியா

சினுவா அச்சிபி நைஜீரியாவில் 1930இல் பிறந்தார். இபடான் பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்றவர். நாவல்கள், சிறுகதைகள், கட்டுரைகள், குழந்தைகள் கதைகள் என சினுவா அச்சிபியின் படைப்புலகம் விரிவானது. நோபல் பரிசுக்கு ஐந்துமுறை பரிந்துரைக்கப்பட்ட அச்சிபி, நைஜீரியாவில் அறிவுசார் சாதனைக்கு வழங்கப்படும் உயரிய விருதான நைஜீரியன் நேஷனல் மெரிட் விருதைப் பெற்றவர். இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, அமெரிக்கா, கனடா, நைஜீரியா நாடுகளிலுள்ள பல்வேறு பல்கலைக்கழகங்களிலிருந்து 12 கௌரவ டாக்டர் பட்டங்களைப் பெற்றவர். 1958இல் வெளிவந்த Things Fall Apart இவரது மிகவும் புகழ்பெற்ற படைப்பு.

நைஜீரியாவின் அலுவல் மொழி ஆங்கிலம். மக்கள் ஹூசா, ஈபோ, யொருபா ஆகிய மொழிகளைப் பேசுகிறார்கள். அச்சிபி தனது படைப்புகளை ஆங்கிலத்தில் எழுதினார். இந்தச் சிறுகதை Vengeful Creditor என்ற கதையின் தமிழாக்கம். இக்கதை 1971இல் Okike இதழில் வெளிவந்தது.

# உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

சென்னை - 600 113

## அண்மை வெளியீடுகள்

| | |
|---|---|
| அறிஞர்கள் பார்வையில் பேரறிஞர் அண்ணா | 145.00 |
| அறிஞர் அண்ணா - மொபசான் சிறுகதைகள் - ஒப்பாய்வு | 160.00 |
| இராசேந்திர சோழன் வெளியிட்ட எசாலம் செப்பேடுகள் | 55.00 |
| கடலடியில் தமிழர் நாகரிகம் | 55.00 |
| படைப்பு நெறிமுறைகள் | 150.00 |
| Comparative Studies in Literary Cultures | 100.00 |
| Sangam Classics : New Perspectives | 105.00 |
| கடற்பொறியியற் கலைச்சொற்கள் (குறுங்கலைக்களஞ்சியம்) | 150.00 |
| அரங்கியல் நோக்கில் கபிலர் பாடல்களில் காணலாகும் கதைமாந்தர்கள் | 100.00 |
| சங்க இலக்கியத்தில் சமூக ஆய்வுகள் | 55.00 |
| தமிழ் வாழ்க்கை வரலாற்றியலக்கியம் | 170.00 |
| கவிஞர் குலோத்துங்கனின் மானுடயாத்திரை காவிய வானில் புதிய தாரகை | 45.00 |
| தமிழ் நாடக வகையும் வரலாறும் | 110.00 |
| வா.செ.கு.என்ற ஆளுமையாளர் | 50.00 |
| உ.வே.சா.வின் குறுந்தொகை உரைத்திறன் | 45.00 |
| மருதத்தில் மக்கள் வாழ்வியல் | 40.00 |
| நன்னூல் உரைவளம் - தொகுதி - 1 பாயிரம் - 1 | 85.00 |
| நன்னூல் உரைவளம் - தொகுதி - 4 எழுத்தியல் - 2 | 140.00 |
| நன்னூல் உரைவளம் - தொகுதி - 2 பாயிரம் - 2 | 75.00 |
| நன்னூல் உரைவளம் - தொகுதி - 6 உயிரீற்றுப்புணரியல் - 1 | 125.00 |
| நன்னூல் உரைவளம் - தொகுதி - 7 உயிரீற்றுப்புணரியல் - 2 | 160.00 |
| நன்னூல் உரைவளம் - தொகுதி - 8 மெய்யீற்றுப்புணரியல் | 160.00 |
| நன்னூல் உரைவளம் - தொகுதி - 9 உருப்புணரியல் | 95.00 |
| நன்னூல் உரைவளம் - தொகுதி - 12 வினையியல் | 190.00 |
| நன்னூல் உரைவளம் - தொகுதி - 13 பொதுவியல் - 1 | 140.00 |
| நன்னூல் உரைவளம் - தொகுதி - 16 இடைச்சொல்லியல் | 90.00 |
| நன்னூல் உரைவளம் - தொகுதி - 17 உரிச்சொல்லியல் | 55.00 |
| நன்னூல் உரைவளம் - தொகுதி - 18 தொல். நன்னூல் | 120.00 |
| பண்டைத் தமிழ் எழுத்துக்கள் (ம.ப.) | 65.00 |
| வல்லம் புராணம் | 200.00 |
| இதழியல் உலகம் | 120.00 |
| தமிழும் தமிழ்க் கற்பித்தலும் | 60.00 |
| படைப்பிலக்கியம் - விளம்புநிலை மக்கள் ஆய்வுநோக்கு | 100.00 |
| பழந்தமிழும் கிளைமொழிகளும் | 65.00 |
| உலக மொழிகளில் தமிழ்ச்சொற்களும் இலக்கணச்கூறுகளும் | 85.00 |
| அரசகுலச் சான்றோர் வரலாறும் மதுரைக்காஞ்சியும் | 115.00 |
| பெயரியல் | 55.00 |
| தமிழ் இகலாம் உருவாக்கமும் திருக்குர் ஆன் தமிழ் வாசிப்பும் ஆய்வியல் சிந்தனை | 45.00 |
| தலித் அறம் | 45.00 |
| பொதுவுடைமை இயக்க இதழ்கள் | 115.00 |
| தமிழில் இதழியல் | 270.00 |

743 அயல்நாட்டுத் தமிழ் இலக்கியங்கள் (தொகுதி - 1) 175.00